
**Om Shanti**

# *Avyakt Vani - Year 1979 Tamil*



01.01.1979 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" புது வருடத்திற்காக தந்தை மூலமாக செய்விக்கப்பட்ட திட எண்ணம் "

இன்று பாப்தாதா அனைத்து குழந்தைகளின் புதிய ஊக்கங்கள், புதிய திட எண்ணங்கள், புது உலகை அருகில் கொண்டு வருவதற்கான மங்களமான எண்ணங்களைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்து கொண்டிருந்தார். ஒவ்வொரு குழந்தையின் மனதில் தன்னை சம்பன்னமாக (முழுமையாக) ஆக்கி உலகிற்கு நன்மை செய்வதற்கான விசேஷ ஊக்கம் இருக்கிறது. இன்று தனக்குள் இன்னும் இருக்கும் பலஹீனங்களுக்கு நிரந்தரமாக விடை கொடுப்பதற்காக எடுக்கப்பட்ட திட எண்ணத்தின் மேல் பாப்தாதாவும் வாழ்த்துக்கள் கூறுகிறார். இந்த விடை கொடுப்பதற்கான பாராட்டை ஒவ்வொரு நாளும் அமிர்தவேளையில் நினைவு மூலமாக சக்திசாலியாக ஆக்கிக் கொண்டே இருங்கள். இந்த வருடம் தன்னுடைய சக்திசாலியான சொரூபத்தின் கூடவே சேவையிலும் சக்திசாலியான சொரூபத்தை கொண்டு வர வேண்டும். எப்படி விநாஷம் செய்யும் கூட்டம் மிக அதிவேகமாக தன்னுடைய காரியத்தை முன்னேற்றி எடுத்துச் சென்று கொண்டே இருக்கிறார்கள். மிகவும் துல்லியமாக்கப்பட்ட, ஒரு நொடியில் உடல் பந்தனத்திலிருந்து விடுபடுவதற்காக அதாவது உடல் துக்கத்திலிருந்து சுலபமாக விடுபடுவதற்காக, அனேக ஆத்மாக்களை காப்பாற்றுவதற்காக சகஜ சாதனத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். எதன் ஆதாரத்தினால் உருவாக்கிறார்கள்? அறிவியலின் அதிகாரத்தினால். அதேபோல் ஸ்தாபனையின் காரியத்தில் பொறுப்பாளர் ஆகியிருக்கும் மாஸ்டர் அனைத்து சக்திகளின் அதிகாரம் நிறைந்த குரூப், ஆத்மாக்களை பல ஜென்மங்களுக்காக மாயாவின் பந்தனத்திலிருந்து, மாயா மூலமாக கிடைத்திருக்கும் அனேக விதமான துக்கங்களிலிருந்து, ஒரு நொடியில் முக்தி ஆக்க மற்றும் நிரந்தரமாக சுகம், சாந்தியின் வரதானம் கொடுப்பதற்காக, ஒவ்வொரு ஆத்மாவையும் புகலிடத்தில் கொண்டு சேர்ப்பதற்காக தயாராக இருக்கிறார்களா? விநாஷம் செய்யும் குரூப் இப்பொழுது கூட எவரெடியாக இருக்கிறது. கட்டளை பெறுவதற்கான நேரம் மட்டும் தான் இன்னும் பாக்கி இருக்கிறது. அந்த மாதிரி ஸ்தாபனைக்கு பொறுப்பாளர் ஆகியிருக்கும் குரூப் எவரெடியாக இருக்கிறதா? ஏனென்றால் ஸ்தாபனையின் காரியம் நிறைவேறுவது என்றால் விநாஷம் செய்பவர்களுக்கு கட்டளை கிடைப்பது. எப்படி நேரம் அருகில் அதாவது முடிவடையும் தருணத்திற்கு முள் வந்திருக்கிறது என்றால், மணி ஓசை இயல்பாகவே எழும். அந்த

மாதிரி எல்லைக்கப்பாற்பட்ட கடிகாரத்தில் ஸ்தாபனையின் காரியம் நிறைவேறுவது என்றால் சரியான நேரத்திற்கு முன் வருவது மற்றும் விநாஷத்தின் மணி ஓசை எழுவது. அப்படியானால் சம்பன்ன நிலையில் எவரெடியாக இருக்கிறீர்களா என்று கூறுங்கள்.

இன்று அமிர்தவேளையிலிருந்து புது வருடத்தில் குழந்தைகளின் புதிய ஊக்கத்தைக் கேட்டு பாப்தாதா இருவர் இடையிலும் ஒரு புது தலைப்பின் மேல் ஆன்மீக உரையாடல் நடந்தது.

பிரம்மா கூறினார் - முக்தியின் கதவு எப்பொழுது திறக்கும். எதுவரை முக்தியின் கதவை பிரம்மா திறக்க வில்லையோ அதுவரை மற்ற ஆத்மாக்களும் முக்தியில் செல்ல முடியாது. பிரம்மா கூறினார் - இப்பொழுது சாவியைப் போடவா? தந்தை கூறினார் - திறப்பு விழாவை தனியாக செய்ய வேண்டுமா? அல்லது குழந்தைகளுடன் செய்ய வேண்டுமா?

பிரம்மா கூறினார் - நேரடி மற்றும் மாற்றான் தாய் குழந்தைகளின் துக்கம் நிறைந்த ஓசை துடிப்பதின் ஒலியைக் கேட்டு கேட்டு இப்பொழுது இரக்கம் வருகிறது.

தந்தை கூறினார் - குழந்தைகளில் அனைவரையும் விட வெற்றி இரத்தினமாக யார் இருக்கிறார்களோ அவர்கள் விதவிதமான சம்மந்தம் மற்றும் சொரூபத்தில் பிரம்மா - ஆத்மாவின் கூடவே துணைவர்களாக ஆகுபவர்கள். அந்த மாதிரி துணையாக இருக்கும் வெற்றி இரத்தினங்களின் மாலை தயாராகிவிட்டதா? யாருக்கு தொடக்கத்திலிருந்தே உடன் வாழ்வோம், உடன் இறப்போம் என்ற இதே எண்ணம் இருந்ததோ... ஏதாவது வேறு ரூபத்தில் மற்றும் சம்மந்தத்தில் உடன் இருப்போம் என்று அவர்களுக்கும் கொடுத்த உறுதிமொழிக்கு ஏற்றபடி துணைவர்கள் இன்றி எப்படி சாவியைப் போடுவீர்கள்?

அப்படி புது வருடத்திற்கான பிரம்மாவின் புதிய எண்ணத்தைக் கேட்டீர்களா? தந்தையின் இந்த எண்ணத்தை நடைமுறையில் கொண்டு வரக்கூடிய வெற்றியாளர்களின் குரூப் இப்பொழுது என்ன செய்வீர்கள்? உயர்ந்த வெற்றி இரத்தினம் தான் தந்தையின் இந்த எண்ணத்தை நிறைவேற்றுபவர்கள். எனவே இந்த வருடத்தில் விசேஷ ரூபத்தில் மாஸ்டர் அனைத்து சக்திகளின் அதிகாரத்தின் சொரூபத்தினால் ஒரு நொடியில் விடுபடச்

செய்வதற்கான இயந்திரத்தை தீவிரமாக ஆக்குங்கள். இப்பொழுது பெரும்பான்மையான ஆத்மாக்கள் இயற்கையின் அற்பகாலத்தின் சாதனங்களின் மூலம் மற்றும் ஆத்மீக அமைதியைப் பெறுவதற்காக உருவாகியிருக்கும் அற்ப இடங்களிலிருந்து அதாவது பரமாத்மாவை சந்திக்க வைக்கும் ஒப்பந்தக்காரர்கள் மேல் இப்பொழுது களைப்படைந்து விட்டார்கள். நம்பிக்கை இழந்து விட்டார்கள். சத்தியம் வேறு எதுவோ என்று நினைக்கிறார்கள். சத்தியத்தின் இலக்கைத் தேடுவதில் இருக்கிறார்கள். பிராப்தியின் தாகம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். அந்த மாதிரி தாகம் உள்ள ஆத்மாக்களுக்கு ஆத்மாவின் அறிமுகம், பரமாத்மாவின் அறிமுகத்தின் யதார்த்த துளி கூட திருப்தியான ஆத்மாவாக ஆக்கிவிடும், எனவே ஞான கலசத்தை தலையில் வைத்து தாகம் உள்ளவர்களின் தாகத்தைத் தீர்த்து வையுங்கள். அமிர்த கலசம் எப்பொழுதும் உடன் இருக்கட்டும். நாள் முழுவதும் காரியங்கள் செய்து கொண்டே எப்பொழுதும் அமிர்தம் மூலமாக அமரர் ஆக்கிக் கொண்டே இருங்கள், அப்பொழுது தான் பிரம்மா பாபாவின் கூடவே முக்தியின் கதவுகளின் திறப்பு விழாவை செய்ய முடியும். இப்பொழுதோ பவனங்களின் திறப்பு விழா செய்து கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுது விசாலமான கதவின் திறப்பு விழா செய்ய வேண்டும். அதற்காக எப்பொழுதும் அமரர் ஆகுங்கள் மேலும் அமரராக ஆக்குங்கள். அமர் பவ என்பதின் வரம் பெற்றவராக ஆகுங்கள். இப்பொழுது முயற்சி செய்யக்கூடிய ஆத்மாக்கள் யார் இறுதி மிக பலஹீனமான ஆத்மாக்களோ, அந்த மாதிரி பலஹீனமான ஆத்மாக்களுக்கு முயற்சி செய்வதற்கான சக்தி கூட இல்லை, அந்த மாதிரி ஆத்மாக்களுக்கு தன்னுடைய சக்திகள் மூலமாக சக்தி நிறைந்தவர்களாக ஆக்கி பிராப்தியை செய்வியுங்கள். எனவே ஞானம் நிறைந்தவரை விட அதிகமாக இப்பொழுது வரம் அளிப்பவரின் பங்கைச் செய்ய வேண்டும். கேட்பதற்கான சக்தி கூட இல்லை. இந்த மார்க்கத்தில் செல்வதற்கான சக்தியும் இல்லை. ஏதாவது கிடைத்து விட வேண்டும் என்ற தியாகம் உள்ளவர்களாக மட்டும் இருக்கிறார்கள் - அந்த மாதிரி அனேக ஆத்மாக்கள் உலகில் அலைந்து கொண்டிருக்கிறார்கள், நடப்பதற்கான கால் அதாவது தைரியத்தையும் நீங்கள் கொடுக்க வேண்டும். அப்படியானால் தைரியத்தின் கையிருப்பு சேமிப்பில் இருக்கிறதா? அமிர்த கலசம் நிரம்பியிருக்கிறதா? குறைவில்லாமல் இருக்கிறதா? இடைவிடாது இருக்கிறதா? வரிசையை (க்யூ) நிறுத்தலாமா? தன்னுடைய கியூவை முடித்து விட்டீர்களா? ஒருவேளை தன்னுடைய க்யூவில் பிஸியாக இருந்தீர்கள் என்றால் மற்ற ஆத்மாக்களை சம்பன்னமாக எப்படி ஆக்குவீர்கள்? எனவே இந்த வருடத்தில் தன்னுடைய க்யூவை முடித்து விடுங்கள். என்ன?, ஏன்? என்ற வார்த்தைகளை மாற்றுங்கள். ஒரே ஒரு வார்த்தை இருக்கட்டும், அனைவருக்காகவும் எண்ணம் மூலம், வார்த்தைகள் மூலம் வரமளிக்கும் வார்த்தை இருக்கட்டும், வரம் அளிப்பவராக இருங்கள், வரதானங்களின்

மழையின் சொற்பொழிவு இருக்கட்டும். யார் கேட்டாலும் இது சொற்பொழிவு அல்ல, ஆனால் வரதானங்களின் மலர்களின் மழை பொழிந்து கொண்டிருக்கிறது என்று அனுபவம் செய்யட்டும். அப்பொழுது தான் திறப்பு விழா செய்வோம். புது வருடத்தில் இந்தப் புதுமையைத் தான் செய்ய வேண்டும். நல்லது.

அப்படி எப்பொழுதும் அமிர்த கலசம் தரித்தவர், ஒவ்வொரு எண்ணத்தினால் வரமளிப்பவராகி அனேக ஆத்மாக்களின் தைரியத்தை அதிகரிக்கக்கூடிய, தைரியம் வைப்பது குழந்தைகளுடையது உதவி செய்வது தந்தையினுடையது, என்று அந்த மாதிரி எவரெடியாக இருக்கும் பிரம்மா பாபாவுடன் எப்பொழுதும் தன்னுடைய பங்கை சேர்த்தே செய்யக்கூடிய அந்த மாதிரி வெற்றி இரத்தினங்களுக்கு, சம்பன்ன ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

தாதிகளுடன் - பிரம்மாவிற்கு இந்த எண்ணம் ஏன் எழுந்தது? இதனுடைய இரகசியத்தைப் புரிந்து கொண்டீர்களா? பிரம்மாவின் எண்ணத்தின் மூலம் படைப்பு படைக்கப்பட்டது. மேலும் பிரம்மாவின் எண்ணத்தின் மூலம் தான் கதவு திறக்கும். இப்பொழுது சங்கராக யார் ஆனார்? இதுவும் ஆழமான இரகசியம் ஆகும். எப்பொழுது பிரம்மா தான் விஷ்ணு என்றால் சங்கர் யார்? இதன் மேலும் உங்களுக்குள் ஆன்மீக உரையாடல் செய்யுங்கள். இப்பொழுதோ வரம் அளிப்பவர்களின் குரூப், யாருடைய கைகளில், இந்த ஸ்தூல கைகளில் இல்லை, ஆனால் எப்பொழுதும் நினைவில், சக்தி நிறைந்த சொரூபத்தில் வெற்றிக் கொடி இருக்கட்டும் - அந்த மாதிரி வெற்றிக் கொடியை பறக்க விடும் குரூப் ஆக இருக்கட்டும். அவர்களைத் தான் ஆன்மீக சமூக சேவகர்களின் குரூப் என்று கூறுவது. அந்த மாதிரியான குரூப் இப்பொழுது மேடையில் தேவையாக இருக்கிறது. மேடையில் வருபவர்களின் மேல் அனைவரது பார்வையும் இயல்பாகவே செல்லும் - இப்பொழுது திரைச்சீலைக்கு உள்ளே இருக்கிறீர்கள், தன்னுடைய முயற்சி செய்யும் காலம் திரைச்சீலையின் பின்புறம் ஆகும். இப்பொழுது இதே திரைச்சீலையிலிருந்து விடுபட்டு சேவையின் மேடையில் வந்தீர்கள் என்றால் உலகின் ஆத்மாக்கள் அந்த மாதிரி கதாநாயக பாத்திரம் ஏற்று செய்பவர்களைப் பார்த்து பார்வையாலேயே நன்மை அடைந்து விடுவார்கள். அந்த மாதிரி திட்டத்தை உருவாக்குங்கள், அந்த மாதிரி குரூப்பின் வாய் மூலம் சத்தியத்தின் அதிகாரம் இயல்பாகவே தந்தையின் பிரத்யக்ஷத்தை செய்யும். இப்பொழுதோ குட்டி குழந்தைகளாய் குண்டுகளை வீசுகிறீர்கள், இப்பொழுது பரமாத்மா குண்டு மூலமாக பூமியை மாற்றம் செய்யுங்கள். இதற்கான சுலபமான வழி எப்பொழுதும்

வாயில் மற்றும் எண்ணத்தில் பாப்தாதா - பாப்தாதா என்று மாலையை ஜபிப்பது போல் நிரந்தரமாக நினைவு இருக்கட்டும். அனைவரிடமும் பாப்தாதா என்ற ஒரே எண்ணம் மட்டும் இருக்கட்டும். எண்ணம், சொல், செயலில் இடைவிடாத இந்த ஒலி ஒலிக்கட்டும். இது தான் இடைவிடாது தொடர்ந்து ஜபிப்பதாகும். எப்பொழுது இந்த இடைவிடாத ஜபிப்பது ஏற்பட்டு விடுமோ மற்ற அனைத்து விஷயங்களும் தானாகவே முடிவடைந்து விடும். ஏனென்றால் இதிலேயே பிஸியாக இருப்பீர்கள். ஓய்வே கிடைக்காது என்றால் வீணானவை தானாகவே முடிவடைந்து விடும். அப்படி இந்த வருடத்தில் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டீர்களா? இன்றைய எண்ணத்தின் மூலம் நேரத்தைத் தெரிந்து கொண்டீர்கள், நேரத்தைக் காட்டும் முள்ளோ பிரம்மா தான் இல்லையா? அப்படி முள் எதுவரை வந்தடைந்திருக்கிறது? சூட்சும வதனத்திலிருந்து மேலேயும் செல்லும் இல்லையா? நல்லது.

வெளிநாட்டு சகோதர சகோதரிகளுடன் - வெளிநாட்டு குழந்தைகளின் தீவிர முயற்சியின் வேகத்தைப் பார்த்து பாப்தாதாவும் மகிழ்ச்சி அடைகிறார். வெளிநாட்டு குழந்தைகள் தன்னுடைய உண்மையான தந்தையை, தன்னுடைய உண்மையான தேசத்தை, தன்னுடைய உண்மையான தர்மத்தை மிக நல்ல முறையில் தெரிந்து கொண்டார்கள். எப்படி சென்ற கல்பத்தில் உருவாகிய பூமியில் தந்தையின் அறிமுகம் என்ற விதை மட்டும் போடுவதினால் பழ (பலன்) சொரூபம் வெளிப்பட்டு விட்டது. இந்த குரூப்பில் சிலர் பாப்தாதாவின் கழுத்தின் மாலையின் மணிகளாக ஆகும் இரத்தினங்களும் இருக்கிறார்கள் என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார். அந்த மாதிரி மணிகளை தந்தையும் எப்பொழுதும் உலகின் எதிரில் பிரத்யக்ஷம் செய்வதற்காக (வெளிப்படுத்த) மற்றும் உலகின் எதிரில் குழந்தைகள் மூலமாக தந்தை பிரத்யக்ஷம் ஆவதற்கான பல காட்சிகளைப் பார்த்துக் கொண்டும் இருக்கிறார். இப்பொழுது பிரத்யக்ஷம் ஆகிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இன்னும் வரும் நாட்களிலும் ஆகிவிடுவார்கள் என்று பார்த்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் அனைவரும் உங்களை அந்த மாதிரி விலை மதிக்க முடியாத இரத்தினம் என்று நினைக்கிறீர்களா? யார் அனைவரையும் விட விலைமதிக்க முடியாத இரத்தினமோ அவருடைய நிவாச ஸ்தானம் எங்கே இருக்கிறது? விலைமதிக்க முடியாத இரத்தினங்களின் ஸ்தானமே இதயத்தின் பெட்டகம் தான். எப்பொழுதும் இதயத்தில் இருப்பவர்கள் அதாவது எப்பொழுதும் தந்தையின் நினைவில் இருக்கும் அனைவரும் தன்னை தீவிரமாக முயற்சி செய்பவர் என்று அனுபவம் செய்கிறீர்களா? எந்த வரிசையில் நின்று கொண்டிருக்கிறீர்கள்? ஹை ஜம்ப் செய்பவர்கள் (உயரம் தாண்டுபவர்கள்) தான் நீங்கள் இல்லையா? டபுள் லைட் ஆக இருப்பவர்கள் எப்பொழுதும் ஹை ஜம்ப்

செய்வார்கள். ஒருவேளை ஏதாவது விதமான சுமை இருக்கிறது என்றால் ஹை ஜம்ப் செய்ய முடியாது. அனைவரும் காணாமல் போய் கண்டெடுக்கப்பட்டவர்கள். ஏனென்றால் தந்தையின் அறிமுகம் கிடைத்தவுடனேயே சகஜயோகா மூலமாக தந்தையை சுலபமாகவே தெரிந்து கொண்டீர்கள். கடினத்திற்கான அனுபவம் ஆகவில்லை. கடினத்தை சுலபமாக ஆக்குவதற்கான வழி - தந்தையின் எதிரில் அமர்ந்து விட்டீர்கள் என்றால் எப்பொழுதும் தன் மேல் வரதான கை இருப்பதாக அனுபவம் செய்வீர்கள். ஒரு நொடியில் அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு கிடைத்து விடும். ஆனால் தந்தையின் எதிரில் யாரால் அமர முடியும்? யார் தந்தையை என்னவாக இருக்கிறார், எப்படி இருக்கிறார், அப்படியே தெய்வீக கண் மூலமாக, புத்தி மூலமாக தெரிந்து விட்டாரோ மற்றும் பார்த்து விட்டாரோ அவர் தான். இந்த ஆத்மாக்கள் உலகின் எதிரில் ஒரு உதாரணமாகி அனேக ஆத்மாக்களின் நன்மைக்காக ஒரு நல்ல அடி எடுத்து வைத்திருக்கிறார்கள் என்று தந்தை தெரிந்திருக்கிறார். உலகம் உங்களைப் பின்பற்றி நடக்கும். நல்லது.

## அவ்யக்த பாப்தாதாவுடன் தனிப்பட்ட சந்திப்பு

### 1. இறுதி லட்சியத்தின் அருகாமையின் அடையாளம் - அனைவரிலிருந்தும் விலகியிருப்பது -

எப்பொழுதும் தன்னுடைய லட்சியத்தின் இலக்கு மிக அருகில் இருப்பதாக அனுபவம் செய்கிறீர்களா? என்னுடைய இறுதி பரிஷ்தா வாழ்க்கையின் லட்சியத்திற்கு இப்பொழுது வந்து சேரப்போகிறேன் என்று நினைக்கிறீர்களா? எவ்வளவிற்கு எவ்வளவு இந்த இறுதி லட்சியத்தின் அருகாமையில் வந்து கொண்டே இருப்பீர்களோ அந்த அளவு அனைத்து பக்கங்களிலிருந்து விலகியவராகி மேலும் தந்தையின் பிரியமானவராக ஆகிக் கொண்டே இருப்பீர்கள். எப்படி ஏதாவது ஒரு உணவு பதார்த்தை தயாரிக்கிறீர்கள் என்றால் எப்பொழுது அது தயாராகி விடுகிறதோ அது பாத்திரத்தை விட்டு விலகி விடும் இல்லையா? எந்த அளவு முழுமை நிலையின் அருகில் வந்து கொண்டே இருப்பீர்களோ அந்த அளவு அனைவரிடமிருந்தும் விலகிக் கொண்டே இருப்பீர்கள். ஃபரிஷ்தா என்றால் ஒருவருடன் அனைத்து ரிஷ்தா (உறவுகள்). விலகிக் கொண்டிருக்கிறேன் என்று அப்படி அனுபவம் செய்கிறீர்களா? எப்பொழுது ஏதாவது பொருள் முழுமையாகத் தயாராகவில்லை என்றால் பாத்திரத்தில் ஒட்டிக்கொண்டே இருக்கும், எப்பொழுது தயாராகி விடுகிறது என்றால் பாத்திரத்திலிருந்து விலகி விடும், விலகவில்லை என்றால் இன்னும்

தயாராகவில்லை என்பதாகும். அப்படி அனைத்து பந்தனங்களிலிருந்தும், அனைத்து பக்கங்களிலிருந்தும் உள்உணர்வு மூலமாக விலகிக் கொண்டே இருக்கிறீர்களா அல்லது இன்னும் பற்றுதல் காரணமாக ஒட்டிக் கொண்டே இருக்கிறீர்களா? ஒருவேளை வேகம் மிதமாக இருக்கிறது என்றால் நேரத்தில் வந்து சேர முடியாது. நேரத்திற்குப் பிறகு வந்து சேர்ந்தீர்கள் என்றால் பிராப்தியின் பட்டியலில் வர முடியாது. எனவே நாலாபுறங்களின் பந்தனத்திலிருந்து விடுபட்டுக் கொண்டே இருக்கிறேனா என்று சோதனைசெய்யுங்கள். ஒருவேளை விடுபடவில்லை என்றால் ஃபரிஷ்தா வாழ்க்கையின் அருகில் இல்லை என்பது நிரூபணம் ஆகிறது. எப்பொழுது ஒரு பக்கத்தின் சம்மந்தத்தில் சுகம் பிராப்தி ஆக முடியும் என்றால் அலைவதற்கு என்ன அவசியம் இருக்கிறது. அந்த புகலிடத்திலேயே அமர்ந்து விட வேண்டும். ஒருவருடன் அனைத்து உறவுகளை வைத்துக் கொள்வது என்பது தான் புகலிடம் ஆகும். எப்பொழுதும் தன்னுடைய இறுதி ஃபரிஷ்தா சொரூபத்தை நினைவில் வைத்தீர்கள் என்றால் எப்படி நினைவிருக்குமோ அப்படி மனநிலை உருவாகிவிடும்.

### 2. ஆஹா நாடகமே! ஆஹா! என்ற இந்த நினைவு மூலம் அனேகர்களுக்கு சேவை :

அனைவரும் எப்பொழுதும் ஆஹா நாடகமே ஆஹா என்ற இந்த நினைவினால் நாடகத்தை பார்த்துக் கொண்டே இருக்கிறீர்களா? ஏதாவது ஒரு காட்சியைப் பார்த்து பயப்படவோ இல்லையே? எப்பொழுது நாடகத்தின் ஞானம் கிடைத்து விட்டது என்றால் தற்சமயம் நடக்கும் யுகம் நன்மை பயக்கும் யுகம் ஆகும், எந்தவொரு காட்சி எதிரில் வந்தாலும் அதில் நன்மை அடங்கியிருக்கிறது. தற்சமயத்தில் தெரிந்து கொள்ள முடியாவிட்டாலும் எதிர் காலத்தில் உள்ளடங்கியிருக்கும் நன்மை பிரத்யக்ஷம் ஆகிவிடும். ஆஹா நாடகமே! ஆஹா என்பது நினைவில் இருந்தது என்றால் எப்பொழுதும் குஷியாக இருப்பீர்கள், முயற்சி செய்வதில் ஒருபொழுதும் சோர்வு அடைய மாட்டீர்கள், இயற்கையாகவே உங்கள் மூலமாக அனேகர்களின் சேவை நடந்து விடும்.

### 3. சகயோகி ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் சம்பன்னமாக இருப்பதற்கான வரதானம்:

எந்த ஆத்மாக்கள் உள்ளப்பூர்வமாக, உயிருக்கு உயிராக மற்றும் அன்போடு யக்ஞ காரியத்தை நிறைவேற்றி வைக்கிறார்களோ, யாரெல்லாம் நேரத்திற்கு தகுந்தாற்போல் சகயோகத்தின் விரலைக் கொடுத்தார்களோ அவர்களுக்கு ஒன்றிலிருந்து அனேக மடங்கு

உருவாகிவிட்டது. நேரத்திற்கும் மகத்துவம் இருக்கிறது. தொடக்கத்தில் அவசியமான நேரத்தில் எந்த ஆத்மாக்களின் விலைமதிக்க முடியாத சகயோகம் ஸ்தாபனைக் காரியத்தில் கிடைத்ததோ அவர்களுக்கு பிரதிபலனாக எப்பொழுதும் சம்பன்னமாக இருப்பதற்கான வரதானம் பிராப்தி ஆகிவிட்டது. அவர்கள் எப்பொழுதும் நிரம்பியவர்களாக இருந்தே வந்திருக்கிறார்கள் மற்றும் இருப்பார்கள். நல்லது - ஓம் சாந்தி.

வரதானம் :

நிலம், நாடி மற்றும் நேரத்தைப் பார்த்து சத்திய ஞானத்தை வெளிப்படுத்தக்கூடிய ஞானம் நிறைந்தவர் ஆகுக.

தந்தையின் இந்த புதிய ஞானம், சத்திய ஞானம் ஆகும். இந்த புதிய ஞானத்தின் மூலமாகத் தான் புதிய உலகம் ஸ்தாபனை ஆகிறது. இந்த அதிகாரம் மற்றும் போதை சொரூபத்தில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கட்டும். ஆனால் யாராவது வந்தவுடனேயே புதிய ஞானத்தின் புதிய விஷயங்களைக் கூறி குழப்பம் அடையச் செய்து விடுங்கள் என்று அர்த்தமில்லை. நிலம், நாடி மற்றும் நேரம் அனைத்தையும் பார்த்து ஞானம் கொடுப்பது என்பது தான் ஞானம் நிறைந்த நிலையின் அடையாளம் ஆகும். ஆத்மாவின் விருப்பத்தை பாருங்கள், நாடி பிடித்துப் பாருங்கள், நிலத்தை தயார் செய்யுங்கள், ஆனால் உள் மனதில் சத்தியத்தின் பயமற்ற நிலையின் சக்தி அவசியம் இருக்க வேண்டும். அப்பொழுது தான் சத்திய ஞானத்தை வெளிப்படுத்த முடியும்.

சுலோகன் -

என்னுடையது என்று கூறுவது என்றால் சிறிய விஷயத்தைப் பெரியதாக ஆக்குவது, உன்னுடையது என்று கூறுவது என்றால் மலை போன்ற விஷயத்தையும் பஞ்சாக ஆக்கிவிடுவது.

ஓம் சாந்தி

"சம்பூர்ண நிலையின் அருகாமை தான் உலக மாற்ற நேரத்தின் அருகாமை ஆகும்"

இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் தொடக்கத்திலிருந்து இதுவரைக்குமான சங்கமயுக ஆன்மீகப் பிறவியின் ஜாதகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு குழந்தையும் தெய்வீக ஜென்மத்தை எடுத்து பாப்தாதாவுடன் மற்றும் தன்னுடன் என்னென்ன உறுதிமொழிகள் செய்திருக்கிறார்கள், மேலும் இதுவரையிலும் எந்த உறுதிமொழியை மற்றும் எவ்வளவு சதவிகிதத்தில் நிறைவேற்றி இருக்கிறார்கள், உறுதிமொழி எடுப்பது மற்றும் அதை நிறைவேற்றுவதில் எவ்வளவு வித்தியாசம் இருந்தது மற்றும் உறுதிமொழி எடுப்பது மற்றும் அதை நிறைவேற்றுவது சமமாக இருந்ததா என்று பார்த்துக் கொண்டிருந்தார். முடிவாக என்ன பார்த்தோம்? உறுதிமொழி செய்யும் நேரத்தில் மிகவும் ஊக்கம் உற்சாகத்தோடு தைரியத்துடன் எண்ணம் வைக்கிறார்கள் - கொஞ்ச காலம் எண்ணத்தை நடைமுறையில் கொண்டு வருவதற்கு, பிரச்சனைகளை சந்திப்பதற்கான சுப பாவனையுடன் நன்மை பயக்கும் மனவிருப்பங்களுடன் தொடர்பில் வந்து வெற்றி அடைபவர்களாக ஆகிறார்கள். ஆனால் நடைமுறையில் சென்று கொண்டிருக்கும்போதே கொஞ்ச காலத்திற்குப் பிறகு முழு கவனத்திற்குப் பதிலாக கவனம் மட்டும் இருந்து விடுகிறது. மேலும் கவனத்தின் (அடென்ஷனின்) இடையிடையே கவனம் மாறி மன அழுத்தத்தின் (டென்ஷனின்) ரூபமும் ஆகிவிடுகிறது. வெற்றி எனது பிறப்புரிமை ஆகும் - என்ற இந்த சக்திசாலியான எண்ணம் மெது மெதுவாக ரூபம் மாறிக் கொண்டே இருக்கிறது - பிறப்புரிமை என்பதற்குப் பதிலாக சில நேரம் பாப்தாதாவின் எதிரில் அதிகாரம் கொடுங்கள், சக்தி கொடுங்கள் என்ற வார்த்தைகள் வெளியாகின்றன. ஒரு வார்த்தை, இரண்டு வார்த்தையில் மாறி விடுகிறது. மாஸ்டர் வள்ளல், வரமளிக்கும் வள்ளல், வள்ளலுக்குப் பதிலாக யாசிப்பவர் ஆகிவிடுகிறார். அப்படி முயற்சி செய்வதின் நிலை சில நேரம் தீவிர முயற்சி, சில நேரம் முயற்சி, சில நேரம் மேலே கீழே செல்வது, சில நேரம் ஆடாத அசையாத நிலை. இதில் சென்று கொண்டிருக்கிறார்கள், மேலும் சென்று கொண்டே நின்று விடுகிறார்கள். இதுவரையிலுமான ரிசல்ட்டில் பாதையில் தென்பட்ட காட்சிகளை லட்சியத்தை நோக்கி செல்வதிலிருந்து வேறு பக்கம் சென்று விடுகிறார்கள். இன்று வரையிலும் கூட அந்த மாதிரியான விளையாட்டைக் காண்பித்துக்

கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதுவும் எதுவரை?

பாப்தாதாவும் இப்பொழுது புதிய விளையாட்டைக் காண விரும்புகிறார். அப்படி இந்த புது வருடத்தில் அந்த மாதிரி புதிய விளையாட்டைக் காண்பியுங்கள், அந்த விளையாட்டில் ஒவ்வொரு காட்சியின் லட்சியமாக வெற்றி இருக்கட்டும். நான் வெற்றி அடைந்தவன், வெற்றி அடைபவனாக இருப்பேன் என்ற எண்ணம் எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்தில் பிரத்யக்ஷமாக தென்படட்டும். எப்படி ஒவ்வொரு சக்தி சேனையின் கையில் வெற்றிக்கொடியானது பறந்து கொண்டிருந்தது என்று சென்ற கல்பத்தின் படம் இருக்கிறது. இன்று வரையில் கூட உயர்ந்த ஆத்மாக்கள் உங்களை வெற்றி இரத்தினத்தின் ரூபத்தில் உலகத்தினர் நினைவு செய்கிறார்கள் மற்றும் பூஜை செய்கிறார்கள். முயற்சி செய்வதற்கான காலமும் மிகவும் கிடைத்திருந்தது. வரிசைக்கிரமமாக அவரவர்களின் சக்திக்கு ஏற்றபடி முயற்சியும் செய்தார்கள். இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? இப்பொழுது முயற்சி செய்வதின் பிரத்யக்ஷ பலன் சொரூபம் அதாவது வெற்றி சொரூபமாகி தானும் ஒவ்வொரு காரியத்திலும் வெற்றி அடைந்தவராக இருங்கள். மேலும் அனைத்து ஆத்மாக்களையும் பிரத்யக்ஷ (வெளிப்படையான) பலனின் அதிகாரி ஆக்குங்கள். இப்பொழுது மொழியையும் மாற்றம் செய்யுங்கள். எப்படி உலகமாற்றத்தின் நேரம் அருகில் ஓடி வந்து கொண்டிருக்கிறது. சம்பூர்ண நிலையின் அருகாமை தான் உலக மாற்றத்தின் நேரத்தின் அருகாமை ஆகும். எனவே இப்பொழுது கடந்ததை கடந்ததாக்கி வீணான கணக்கிற்கு முடிவு கட்டுங்கள். எப்பொழுதும் சக்தி நிறைந்த கணக்கை ஒவ்வொரு எண்ணத்தில் சேமிப்பு செய்யுங்கள். இப்பொழுதிலிருந்தே நிரந்தரமாக தன்னை கிரீடம், திலகம் மற்றும் சிம்மாசனதாரியாக அனுபவம் செய்யுங்கள். திலகம் அழிந்து விடுவது என்றால் நினைவிலிருந்து கீழே வருவது. இப்பொழுது இந்த விஷயங்களை கனவிலிருந்தும் அகற்றி விடுங்கள். அந்த மாதிரி நிறைவு விழாவைக் கொண்டாடுங்கள். உலக சேவையில் எண்ணம், சொல், செயல் மூலம் இரவு பகலாக உண்மையான சேவாதாரியாகி குழுவாக எப்பொழுதும் முன்னுக்கு இருந்தீர்கள் என்றால் உலக சேவையில் தன்னுடைய ஏறும் கலை தானாக ஆகிவிடும். புண்ணிய ஆத்மாவாகி, புண்ணியத்தின் பலனை பிராப்தி செய்து கொண்டிருக்கிறோம் என்று அந்த மாதிரி எப்பொழுதும் அனுபவம் செய்வீர்கள். ஏனென்றால் நேரத்தின் அருகாமைக்கு ஏற்றபடி ஒவ்வொரு உயர்ந்த காரியத்தின் பலன் எப்பொழுதும் திருப்தியின் ரூபத்தில் தற்சமயம் மற்றும் எதிர்காலம் இரண்டிலுமே பிராப்தி ஆகும். இப்பொழுது பிராப்தி செய்யும் இயந்திரத்தை அதிவேகத்தில் அனுபவம் செய்வீர்கள். வீணானதின் மற்றும் பயனுள்ளதின்

அப்படி இரண்டு காரியத்தின் பலன் லட்சம் மடங்கு பிராப்தியாக என்ன ஆகிறது என்ற இதை அனைத்தையும் அனுபவம் செய்வீர்கள். எனவே லட்சம் மடங்கு சேமிப்பு செய்வதற்கான நேரம் இப்பொழுது மிகக்குறைவாகத் தான் உள்ளது. இப்பொழுது சேமிப்பு ஆவது பல பிறவிகளுக்காக பிராப்தியை உருவாக்குவது. இதற்காக விசேஷமாக என்ன செய்ய வேண்டும்? இரண்டு விஷயங்களை மட்டும் நினைவு வையுங்கள் - ஒன்று எப்பொழுதும் தன்னை விசேஷ ஆத்மா என்று புரிந்து கொண்டு, எண்ணங்களை எண்ணுங்கள் மற்றும் காரியம் செய்யுங்கள். இரண்டாவது விஷயம், எப்பொழுதும் பிறரது விசேஷங்களையே பாருங்கள். ஒவ்வொரு ஆத்மாவின் மீதும் விசேஷ ஆத்மா என்னும் பாவனை வையுங்கள். கூடவே விசேஷமாக ஆக்குவதற்காக நன்மை பயக்கும் நல்ல விருப்பங்களை வையுங்கள். எப்பொழுதும் ஒரு விஷயத்தின் கவனம் வையுங்கள் - எந்த அவகுணம் மற்றும் பலஹீனத்தை ஒவ்வொரு ஆத்மாவும் விடுவதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறதோ, அந்த மாதிரி இன்னொருவர் மூலமாக விடப்பட்ட பலஹீனத்தை ஒருபொழுதும் தனக்குள் தாரணை செய்யாதீர்கள். இன்னொருவர் வீசி எறிந்த பொருளை எடுப்பது இதை ஈஸ்வரிய இராயல் (மேன்மை) தன்மை என்று சொல்ல மாட்டோம். இராயல் ஆத்மாக்கள் மற்றவர்களால் வீசப்பட்ட நல்ல பொருட்களைக் கூட எடுக்க மாட்டார்கள். இதுவோ அருவருப்பான அவகுணம் ஆகும். அதை எண்ணத்தில் நினைப்பது கூட மகா பாவம் ஆகும். எனவே இந்த விஷயத்தில் கவனம் வையுங்கள். பிறருடைய பலஹீனம் மற்றும் அவகுணத்தைப் பார்க்கும் கண்ணை எப்பொழுதும் மூடி வையுங்கள். தாரணையும் செய்யாதீர்கள், வர்ணனையும் செய்யாதீர்கள். எப்பொழுது உங்களுடைய விக்ரகங்களையும் பக்தர்கள் மகிமை செய்கிறார்கள், ஒவ்வொரு அங்கத்தையும் மகிமை செய்கிறார்கள், கீர்த்தியை அதாவது நீங்கள் செய்த காரியத்தை மகிமை பாடுவதற்காக கீர்த்தனை செய்கிறார்கள். நீங்கள் சைத்தன்ய ரூபத்தில் ஒவ்வொருவரையும் பாராட்டுங்கள். விசேஷங்களை வர்ணனை செய்யுங்கள். ஒவ்வொருவருடன் சகயோகம் மற்றும் அன்பின் மலர்களை பரிமாறிக் கொள்ளுங்கள். ஒவ்வொரு காரியத்தில் சரி என்று கூறி, முதலில் நீங்கள் என்ற கையை நீட்டுங்கள். எப்பொழுதும் ஒவ்வொரு விசேஷ ஆத்மாவின் எதிரில் ஆன்மீக உள்உணர்வு, ஆன்மீக எண்ண அலைகளின் அகர்பத்தியை ஏற்றுங்கள். எந்த ஆத்மா நெருக்கத்தில் வந்தாலும் அவர்களுக்கு எப்பொழுதும் தன்னுடைய பொக்கிஷங்களினால் வகை வகையான பிரசாதத்தைப் படையுங்கள் அதாவது பொக்கிஷத்தை அளியுங்கள். எப்பொழுது நடைமுறையில் இப்பொழுதிலிருந்தே இந்த ஆன்மீக பழக்கத்தை தொடங்குவீர்களோ அப்பொழுது தான் பக்தியில் இந்தப் பழக்கம் நடந்து கொண்டே இருக்கும். இந்த வருடம் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டீர்களா? இன்று உங்களுடைய மாற்றம் பற்றிய விஷயத்தைக் கூறினோம். பின்பு

சேவைக் களத்தில் என்ன செய்ய வேண்டும் என்று சேவையின் விஷயங்களைக் கூறுவோம். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் நிரம்பிய மூர்த்திகள் இராயல்தன்மையின் இயற்கையான சம்ஸ்காரம் உள்ள ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் திலகம், கிரீடம், ஆசனதாரி ஆத்மாக்களுக்கு, ஒவ்வொரு காரியத்தின் பிரத்யக்ஷ பலனை அடையக்கூடிய ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் சந்திப்பு:

1) மாயாஜால மந்திரத்தின் நினைவின் மூலம் வெற்றி சொரூபம் -

மாயாஜால மந்திரம் எப்பொழுதும் நினைவிருக்கிறதா? மாயாஜாலத்தின் மந்திரம் என்றால் எது? தந்தையின் நினைவு தான் மாயாஜால மந்திரம் ஆகும். இந்த மாயாஜால மந்திரம் மூலமாகத் தான் என்ன சித்தியை விரும்புகிறீர்களோ அதை அடைய முடியும். எப்படி ஸ்தூலத்திலும் கூட ஏதாவது ஒரு காரியத்தின் வெற்றிக்காக (சித்திக்காக) மந்திரத்தை ஜபிப்பார்கள். அப்படி இங்கேயும் ஒருவேளை ஏதாவதொரு காரியத்தில் விதிமுறையை விரும்புகிறீர்கள் என்றால், இந்த மகாமந்திரம் தான் விதி சொரூபம் ஆகும். இது அந்த மாதிரியான மாயாஜால மந்திரம். ஒரு நொடியில் மாயாஜால வித்தை செய்து விட முடியும் அதாவது மாற்றம் செய்துவிடும். அப்படியானால் அந்த மாதிரியான மாயாஜால மந்திரம் எப்பொழுதும் நினைவிருக்கிறதா அல்லது சில நேரம் மறந்து விடுகிறதா? எப்பொழுதும் நினைவிருக்கிறது என்றால், எப்பொழுதும் சித்தி. சில நேரம் நினைவிருக்கிறது என்றால் வெற்றி இருக்காது, சில நேரம் மட்டுமே இருக்கும். அப்படி இந்த வருடம் எப்பொழுதும் என்ற வார்த்தையை கீழ்க் கோடிடுவதற்கான விஷயம் ஆகும். நினைவிருப்பது பெரிய விஷயமில்லை. ஆனால் எப்பொழுதும் நினைவிருப்பது இது தான் பெரிய விஷயமாகும். இப்பொழுது எப்பொழுதும் என்பதற்கான நேரம் வந்திருக்கிறது. எப்பொழுதும் என்பதை சேர்த்துக் கொண்டீர்கள் என்றால் எப்பொழுதும் வெற்றி அடைபவராக ஆவீர்கள்.

2) மாயாவின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான வழி - உலகிலிருந்து விலகியவராக மற்றும் தந்தையின் அன்பிற்குரியவராக மாறுங்கள்.

ஒவ்வொருவரும் தன்னை தந்தையின் அன்பிற்குரிய மற்றும் உலகிலிருந்து விலகியவராக நினைக்கிறீர்களா? யார் தந்தையின் அன்பிற்குரியவராக ஆகிறாரோ அவர் உலகிலிருந்து விலகியவராக ஆகிவிடுகிறார். அப்படி எவ்வளவு விலகிய நிலை இருக்குமோ அந்த அளவே அன்பிற்குரிய நிலையும் இருக்கும். ஒருவேளை விலகிய நிலை இல்லை என்றால், அன்பிற்குரிய நிலையும் இல்லை. யார் தந்தையின் அன்பில் ஐக்கியமாகியிருக்கிறாரோ தன்னையே மறந்திருக்கிறாரோ அவரை மாயா கவர்ந்திழுக்க முடியாது. எப்படி தண்ணீரால் பாதிக்கப்படாத (வாட்டர் ப்ரூஃப்) துணி இருக்கிறது என்றால் அதன் மேல் ஒரு துளி கூட நிற்காது. அதே போல் யார் தந்தையின் முழு ஈடுபாட்டில், அன்பிலேயே ஐக்கியமாகி இருக்கிறார்களோ அவர் மாயாவால் தாக்க முடியாத (மாயா ப்ரூஃப்) ஆகிவிடுகிறார். மாயாவின் எந்தவொரு தாக்குதலும் ஒன்றும் செய்ய முடியாது. தந்தையின் அன்பு அழியாதது மற்றும் சுயநலமற்றது. இதன் அனுபவியாகவும் இருக்கிறீர்கள் மற்றும் அற்ப காலத்து அன்பின் அனுபவியாகவும் இருக்கிறீர்கள். அந்த (அற்பகாலத்து) அன்பு இந்த (அழியாத) அன்பின் எதிரில் ஒன்றுமே இல்லை. தந்தை மற்றும் நான், மூன்றாமவர் யாருமில்லை என்று அந்த மாதிரி நிலை இருக்கிறதா? மூன்றாமவர் இடையில் வருவது என்றால் தந்தையிடமிருந்து பிரிப்பது. மூன்றாமவர் வரவேயில்லை என்றால் பிரியவே முடியாது. யார் தந்தையின் நினைவில் மூழ்கியிருக்கிறாரோ அவர் சித்தியை அடைந்து விடுகிறார்.

3) ஈஸ்வரிய போதையின் மகிழ்ச்சி மூலம் கர்மாதீத் நிலையின் இலக்கு மிக அருகாமையில் இருக்கும்.

உயர்ந்த ஆத்மாக்கள் நீங்கள் ஞானக்கடல் தந்தை மூலமாக நேரடியாக அனைத்து பிராப்திகளையும் செய்பவர்கள் மேலும் மற்ற ஆத்மாக்கள் யாரெல்லாம் இருக்கிறார்களோ அவர்கள் உயர்ந்த ஆத்மாக்கள் உங்கள் மூலமாக ஏதாவது பிராப்தி அடைகிறார்கள். ஆனால் நீங்கள் நேரடியாக தந்தை மூலமாக அனைத்து பிராப்திகளையும் அடைபவர்கள், அந்த மாதிரி உயர்ந்த போதைஇருக்கிறதா? எந்த அளவு போதைஇருக்குமோ அந்த அளவு தன்னுடைய கர்மாதீத் நிலையின் இலக்கு அருகில் தென்படும். ஒருவேளை போதை

குறைவாக இருக்கிறது என்றால் இலக்கும் தூரமாகத் தென்படும். இந்த ஈஸ்வரிய போதையில் இருப்பதினால் துக்கமான உலகத்தை சுலபமாகவே மறந்து விடுவீர்கள், அந்த போதையிலும் கூட அனைத்தும் மறந்து விடுகிறது இல்லையா? அப்படி இந்த ஈஸ்வரிய போதையில் இருப்பதினால் நிரந்தரமாக பழைய உலகம் மறந்து விடுகிறது. இந்த போதையில் எந்த நஷ்டமும் இல்லை எவ்வளவு போதையைஏற்றுவீர்களோ அவ்வளவு நல்லது. அந்த போதையைஅதிகமாக குடித்தார்கள் என்றால், இறந்து விடுவார்கள். இங்கே இந்த போதை மூலம் அழியாதவர் ஆகிவிடுகிறார். யார் போதையில் இருக்கிறாரோ அவரைப் பார்ப்பவரும் இவர் போதையில் இருக்கிறார் என்று அனுபவம் செய்வார்கள். அதே போல் உங்களையும் பார்த்து இவர் போதையில் இருக்கிறார் என்று அனுபவம் செய்யட்டும். இந்த நேரம் போதைஏறியது, அடுத்த நேரம் இறங்கியது என்றால் என்ன மகிழ்ச்சி வர வேண்டுமோ அது வராது. எனவே எப்பொழுதும் போதையில் இருங்கள். இந்த போதையில் அனைத்து பிராப்திகளும் இருக்கிறது. ஒரு தந்தையைத் தவிர இன்னொருவர் யாரும் இல்லை என்ற இந்த நினைவு தான் போதையைஏற்றுகிறது. இந்த நினைவு மூலம் சக்திசாலியான நிலை வந்து விடுகிறது.

அப்படி அதிகமாகக் கேட்டிருக்கிறீர்கள். அதனுடைய சொரூபமாகி பிறரையும் அப்படியே ஆக்குங்கள். பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் சைத்தன்ய சாட்சாத்காரம் செய்விக்கும் சாட்சாத் மூர்த்திகளாகப் பார்க்க விரும்புகிறார். எப்பொழுது சைத்தன்ய மூர்த்திகள் தயாராகி விடுவரோ அப்பொழுது இந்த ஜட மூர்த்திகள் முடிவுக்கு வந்துவிடும். மேலும் இதே பாரதம் எல்லைக்கப்பாற்பட்ட கோயில் ஆகிவிடும். அனேகம் அழிந்து ஒரே ஒரு பெரிய கோவில் ஆகிவிடும். நல்லது.

4) சங்கமயுகத்தின் நேரத்திற்கு ஒவ்வொரு அடியில் பல மடங்கு வருமானம் செய்வதற்கான வரதானம் இருக்கிறது.

எப்பொழுதும் தன்னை ஒரு அடியில் பல மடங்கு சேமிப்பு செய்யும் பல மடங்கு பாக்கியம் நிறைந்த ஆத்மா என்று நினைக்கிறீர்களா? ஒவ்வொரு அடியிலும் சேமிப்பு ஆகிக் கொண்டிருக்கிறதா என்று சோதனைசெய்கிறீர்களா? சங்கமயுகத்திற்கு ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு சேமிப்பு ஆகும் என்ற இந்த வரதானம் தான் கிடைத்திருக்கிறது. அப்படியானால் ஒரு நொடி கூட மற்றும் ஒரு அடி கூட சேமிப்பு ஆகவில்லை என்றால்

எவ்வளவு நஷ்டமாகிவிட்டது. உலகில் கூட ஒருவேளை ஒரு நாளில் சம்பாத்தியம் இல்லை என்றால் கவலை ஏற்பட்டு விடும். அதுவோ எல்லைக்குட்பட்ட சம்பாத்தியம், இதுவோ எல்லைக்கப்பாற்பட்ட சம்பாத்தியம். இப்பொழுதைய ஒரு அடி பல மடங்கின் சம்பாத்தியத்தை சேமிக்கக்கூடியது என்றால் பின்பு எவ்வளவு கவனம் வேண்டும். சாதாரணம் அல்ல. யார் ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு சம்பாத்தியத்தை சேமிப்பவராக இருப்பாரோ, அவருடைய அடையாளமாக என்ன தென்படும்? அவருடைய முகத்தில் எப்பொழுதும் பிராப்தியின் பொலிவு தென்படும், எப்படி ஸ்தூலமான ஏதாவது ஒரு பொருளின் ஜொலிப்பு தென்படுகிறது தான் இல்லையா? அதே போல் பிராப்தியின் ஜொலிப்பு முகம் மூலம் தென்படும்.

தொடர்பில் வருபவர்களும் இவருக்கு ஏதோ பிராப்தி ஆகியிருக்கிறது என்று புரிந்து கொள்வார்கள். அவர்கள் தானாகவே ஈர்க்கப்பட்டு உங்கள் எதிரில் வருவார்கள். அப்படி உங்களுடைய நிரம்பிய முகம் சேவையின் கருவியாக ஆகிவிடும். அனைவரும் எப்பொழுதும் குஷியாக இருக்கிறீர்களா அல்லது சில நேரம் குஷியின் பொக்கிஷத்தை மாயா பறித்து விடுகிறதா? மாயாவின் கதவுகள் மூடியிருக்கிறதா அல்லது திறந்திருக்கிறதா? இப்பொழுது கதவை மிக நல்ல முறையில் இரட்டைப் பூட்டைப் பூட்டுங்கள். ஒரு பூட்டு போட்டிருந்தால் கூட மாயா திறந்துவிட்டு உள்ளே வந்து விடும். இரட்டைப் பூட்டு என்றால் நினைவு மற்றும் சேவையில் பிஸியாக இருங்கள். ஒருவேளை நினைவில் மட்டும் இருக்கிறீர்கள், சேவையில் இல்லை என்றாலும் மாயா வந்து விடும். இரட்டைப் பூட்டில் மாயா உள்ளே வர முடியாது. தட்டும், ஆனால் உள்ளே வராது. அதாவது தாக்குதல் செய்யாது. மனதால் செய்யும் சேவையும் அதிகமாக இருக்கிறது. தன்னுடைய உள்உணர்வு மூலமாக தன்னைச் சுற்றிய சூழலை சக்தி நிறைந்ததாக ஆக்குங்கள். முழு உலகத்தின் மாற்றம் இல்லையா? அந்த உள்உணர்வினால் சுற்றுப்புறச்சூழல் மாற்றம் அடையும். நல்லது.

வரதானம்:

மனம், புத்தியின் ஒருமித்த நிலை மூலமாக அனைத்து சித்திகளை அடையக்கூடிய எப்பொழுதும் சக்திசாலியான ஆத்மா ஆகுக!

அனைத்து சித்திகளை (நினைத்தது நடப்பது) அடைவதற்காக ஒருமித்த நிலையின் சக்தியை அதிகரியுங்கள். இந்த ஒருமித்த நிலையின் சக்தி சுலபமாகவே தடையற்றதாக ஆக்கிவிடும். கஷ்டப்படுவதற்கான அவசியம் இருக்காது. ஒரு தந்தையைத் தவிர இன்னொருவர் யாரும் இல்லை என்பது சுலபமாக அனுபவம் ஆகிறது என்றால், சுலபமாக ஒரே சீரான நிலை உருவாகிவிடும். அனைவருக்காகவும் நன்மை பயக்கும் உள்உணர்வு சகோதரன்-சகோதரன் என்ற பார்வை இருக்கும். ஆனால் ஒருமுகப்பட்ட நிலை உள்ளவராக ஆவதற்காக மனமும் புத்தியும் எப்பொழுதும் உங்களுடைய கட்டளைப்படி நடக்கும் அளவிற்கு அதை சக்தி நிறைந்ததாக ஆக்குங்கள். கனவில் கூட ஒரு நொடி கூட மேலே கீழே செல்ல வேண்டாம்.

சுலோகன்:

தாமரை மலருக்குச் சமமாக விலகியிருப்பவராக இருந்தீர்கள் என்றால் பிரபுவின் அன்பிற்கு பாத்திரமானவர் ஆகிவிடுவீர்கள்.

ஓம் சாந்தி

04.01.1979 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" சம்பூர்ண நிலை என்ற கண்ணாடியில் தன்னுடைய சொரூபத்தை பாருங்கள் "

இன்று பாப்தாதா பிராமண குழந்தைகளின் ஆரம்பத்திலிருந்து இதுவரையிலுமான வாழ்க்கையில், பிராமணர்களின் விசேஷ கடமையாக விநாசம் மற்றும் ஸ்தாபனைக்காக என்ன இருக்கிறதோ, அந்த கடமையையாற்றுவதில் ஒவ்வொருவரும் எவ்வளவு வேகமாகச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்று அந்த கடமையின் நிலையைப் பார்த்துக் கொண்டிருந்தனர். எதுவரையிலும் தன்னுடைய கடமையின் பொறுப்பை நிறைவேற்றினார்கள், மேலும் வரும் காலத்திற்காக இன்னும் எவ்வளவு செய்ய வேண்டியதிருக்கிறது? பிராமணர்களின் கடமை செய்வதற்கான ஆதாரத்தினால் விசேஷ பட்டமாக உலகிற்கு நன்மை செய்பவர், உலகிற்கு ஆதாரமானவர், உலகிற்கு முன்னேற்றம் செய்பவர், உலகை மாற்றம் செய்பவர் என்பது இருக்கிறது. அப்படி எப்படி பட்டம் இருக்கிறதோ அதற்கு ஏற்றபடி கடமையின் நடைமுறை ரூபம் எந்த அளவு ஆகியிருக்கிறது? மேலும் எந்த அளவு ஆக வேண்டும்? ஒவ்வொருவரும் தன்னுடைய கடமையின் சதவிகிதத்தைப் பாருங்கள். நேரத்திற்கு ஏற்றபடி வேகம் அதிகமாக இருக்கிறதா அல்லது இன்னும் அதிகமாக வேண்டுமா? சம்பூர்ண விநாஷம் செய்தாகிவிட்டதா? அல்லது அரைகுறையாக செய்திருக்கிறீர்களா? எவ்வளவு பழையதை விநாஷம் செய்திருப்பீர்களோ அந்த அளவு புதிய சம்ஸ்காரம் மற்றும் சுபாவம் தாரணை ஆகும். எனவே எந்த வேகத்தோடு இந்தக் காரியத்தை செய்து கொண்டிருக்கிறோம் என்பதை சோதனைசெய்யுங்கள்.

இன்னொரு விஷயம், தன்னுடைய தொடர்பில் வரக்கூடிய ஆத்மாக்கள் மற்றும் சம்மந்தத்தில் இருக்கக்கூடிய ஆத்மாக்களின் பழைய சம்ஸ்காரம் சுபாவத்தைப் பார்த்தும் பார்க்காமல் அதாவது தன்னுடைய கடமையின் நினைவு மூலம் மற்றும் தன்னுடைய பட்டத்தின் சக்தி நிரம்பிய நிலை மூலம் அந்த ஆத்மாக்களையும் பரிவர்த்தனை (மாற்றம்) செய்யும் காரியத்தின் வேகம் எந்த அளவு இருக்கிறது? தானம் செய்யும் காரியங்கள் முதலில் தன் வீட்டில் தொடங்கும் என்பதை செய்தீர்களா? எவ்வளவு தான் தாழ்ந்த

ஆத்மாவாக இருந்தாலும் பிராமணர்களின் கடமைக்கு ஏற்றபடி எப்பொழுதும் அந்த ஆத்மாக்களுக்காகவும் நன்மை பயக்கும் பாவனை இருக்கிறதா? அல்லது வெறுப்பான பாவனை இருக்கிறதா? இரக்கம் வருகிறதா? அல்லது ஆவேசத்தில் வருகிறீர்களா? ஆவேசத்தில் வந்து தந்தையின் எதிரில் மற்றும் பொறுப்பில் இருக்கும் ஆத்மாக்களின் எதிரில் அடிக்கடி அந்த ஆத்மாக்களுக்காக இவர் இதைச் செய்கிறார், இவர் இப்படிக்கூறுகிறார். இப்படி, அப்படி ஏன்? புகார்கள் கூறி நிரூபித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

மூன்றாவது விஷயம், உலகில் உள்ள அனைத்து ஆத்மாக்களுக்கும் நன்மை செய்ய வேண்டும் என்ற நினைவு எப்பொழுதும் இருக்கிறதா? எல்லைக்கப்பாற்பட்ட சேவை அதாவது உலக சேவையின் பொறுப்பாளர் என்று புரிந்து கொண்டு நடக்கிறீர்களா? மன சக்தி மூலமாகவும் உலகிற்காக தன்னுடைய சக்திகளின் பொக்கிஷம் மற்றும் ஞானம், குணங்களின் பொக்கிஷங்களை மகாதானியாகி, தானம் செய்து கொண்டே இருக்கிறீர்களா? தன்னை உலகின் எதிரில் அத்தாரிட்டி (அதிகாரம் உள்ளவர்) என்று நினைக்கிறீர்களா? அல்லது எங்கே இருக்கிறீர்களோ அந்த தேசம் மற்றும் கிராமத்தின் அத்தாரிட்டி என்று நினைக்கிறீர்களா? நடைமுறை நினைவில் என்ன சேவை இருக்கிறது? எதிரில் எல்லைக்குட்பட்டது வருகிறதா? அல்லது எல்லைக்கப்பாற்பட்டது வருகிறதா? உலகின் ஆத்மாக்களுக்காகவும் சக்திசாலியான எண்ணங்களின் மூலமாக சேவை செய்ய முடியும் அளவிற்கு எண்ணத்தில் அந்த அளவு சக்தி இருக்கிறதா? உள்ளுணர்வின் தூய்மையின் அனுசாரம் வாயு மண்டலத்தை சுத்தம் செய்ய முடிய வேண்டும். உள்ளுணர்வின் சக்தி என்பது சுத்தம் அதாவது தூய்மை. தூய்மைக்கான ஆதாரம் சகோதரன், சகோதரன் என்ற உணர்வு. அப்படி இந்த உணர்வு எதுவரை உருவாகியிருக்கிறது? இந்த விதத்தில் தன்னுடைய கடமையின் நிலை மற்றும் விதியை சோதனைசெய்யுங்கள். எதுவரையிலும் தன்னில் விநாஷம் மற்றும் ஸ்தாபனையின் நடைமுறை ரூபத்தை கொண்டு வரவில்லையோ அதுவரை உலகில் உங்களது கடமையின் வெளிப்பாடு ஆவதும் உங்களின் நிலைக்கேற்றபடி தான் இருக்கும். ஏனென்றால், இன்று உலகிலுள்ள ஆத்மாக்கள் பார்த்து செய்பவர்கள் அல்ல. கேட்டு மட்டும் ஏற்றுக் கொள்பவர்களும் அல்ல. தன்னுடைய யதார்த்த நம்பிக்கைகளை, ஏற்றுக் கொள்வதற்காக முதலில் சுயம் அவர் அந்த நம்பிக்கைகளின் சொரூபம் ஆகவேண்டியதாக இருக்கும். சொரூபத்தின் எடுத்துக்காட்டு மூலமாக அந்த மாதிரி நடந்து கொள்வது சுலபம் என்று புரிய வரும். இல்லையென்றால் இன்று வரை அனேக ஒரு மதிப்புமில்லாத உண்மையற்ற பிற நம்பிக்கைகள் மூலமாக பெரும்பான்மையான ஆத்மாக்கள் உலக மாற்றம் மற்றும்

தன்னுடைய மாற்றம் மிகக் கடினம் மற்றும் அசம்பவம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக மனமுடைந்து போகும் நோய் அதிகமாக இருக்கிறது. எப்படி இன்றைய நாட்களில் உடல் நோயில் மாரடைப்பு அதிகமாக இருக்கிறது, அதே போல் ஆத்மீக முன்னேற்றத்தில் மனமுடைந்து போதல் என்ற நோய் அதிகமாக இருக்கிறது. அந்த மாதிரி மனமுடைந்த ஆத்மாக்களுக்கு நடைமுறை மாற்றம் மூலமாகத் தான் அதாவது கண்களால் பார்த்த ஒன்று மூலமாகத் தான் தைரியம் மற்றும் சக்தி வர முடியும். கேட்டதோ அதிகமாக கேட்டிருக்கிறார்கள், இப்பொழுது பார்க்க விரும்புகிறார்கள். எடுத்துக்காட்டு மூலமாக மாற்றம் விரும்புகிறார்கள். அப்படி உலக மாற்றத்திற்காக மற்றும் உலக நன்மைக்காக எப்பொழுதும் முதலில் சுயத்தின் நன்மையை எடுத்துக்காட்டு முகமாகக் காண்பியுங்கள். செய்யும் காரியத்தில் என்ன சோதனைசெய்ய வேண்டும் என்று இப்பொழுது புரிந்ததா? உலக நன்மை சேவையின் க்ஷேத்திரத்தில் சுலபமான வெற்றி அடைவதற்கான வழி நடைமுறை எடுத்துக் காட்டு உதாரணம் மூலமாக தந்தையின் பிரத்யக்ஷம். என்ன கூறுகிறீர்களோ அதை உங்களிடம் பார்க்கட்டும். நாங்கள் பிராமணர்கள் அனைத்து சக்திகளின் அதிகாரம் நிறைந்தவர்கள், மாஸ்டர் சர்வ சக்திவான், மாயாவை வென்றவர்கள், இரக்க மனம் உடையவர்கள், ஆன்மீக சேவாதாரிகள் என்று கூறுகிறீர்கள். அப்படி என்ன கூறுகிறீர்களோ அதை நடைமுறையில் பார்க்க விரும்புகிறார்கள். பெயர் மாஸ்டர் சர்வ சக்திவான், ஆனால் தன்னுடைய வீணான எண்ணத்தைக்கூட முடிக்க முடியவில்லை என்றால், உலகிற்கு நன்மை செய்பவர் என்று யார் ஏற்றுக் கொள்வார்கள்? நடைமுறையில் தன்னுடைய சுபாவம், சம்ஸ்காரத்தை மாற்றம் செய்வதில் மனமுடைந்து போகுபவரை உலக மாற்றம் செய்பவர் என்று யார் ஏற்றுக் கொள்வார்கள். அவரே பிறரது உதவியை நாடுபவராக இருக்கிறார் என்றால், அவரை வரதானி என்று யார் ஏற்றுக் கொள்வார்கள். எனவே சம்பூர்ண நிலை என்ற கண்ணாடியில் தன்னுடைய சொரூபத்தைப் பாருங்கள். தன்னை சம்பன்னம் ஆக்கி உதாரணம் ஆகுங்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? இந்த வருடம் தன்னை சம்பன்னம் ஆக்கி உலகிற்கு நன்மை செய்பவராக ஆகுங்கள். சோதனையும் செய்யுங்கள் கூடவே மாறவும் செய்யுங்கள்.

முதலில் குஜராத் தொடங்கட்டும். எப்பொழுது கேட்பதில் இவ்வளவு குஷி ஏற்படுகிறது என்றால் அப்படி ஆவதில் எவ்வளவு குஷி இருக்கும். குஜராத்தின் பூமி பொதுவாக சாத்வீகமானது. எனவே குஜராத்திற்கு எடுத்துக்காட்டை தயார் செய்ய வேண்டும். யாரைப் பார்த்தாலும் அவர் முன்மாதிரி எடுத்துக்காட்டாகத் தென்பட வேண்டும். குஜராத்

விஸ்தாரமாக நன்கு வளர்ந்திருக்கிறார்கள். வளர்ச்சியும் நன்றாக இருக்கிறது. இப்பொழுது இன்னும் என்ன செய்ய வேண்டும்? அந்த மாதிரி விதி செய்யுங்கள். அதன் மூலம் சுற்றுப்புறச் சூழலும் சக்திசாலியாகி அதனால் தடைகளும் அழிந்து விடட்டும் மற்றும் உலகின் ஆத்மாக்களுக்கும் அந்த மாதிரி ஆன்மீகச் சூழலின் பக்கம் ஈர்ப்பு ஏற்படட்டும். குஜராத்தை லைட் ஹவுஸ் ஆக்குங்கள். குஜராத் மட்டும் லைட் ஹவுஸாக இருக்க வேண்டாம். மாறாக உலகமே லைட் ஹவுஸாக ஆகட்டும் அதன் மூலமாக உலகின் ஆத்மாக்களுக்கு தன்னுடைய மற்றும் தந்தையின் அறிமுகம் என்ற ஒளி கிடைக்கட்டும். பரமாத்மாவின் வெடிகுண்டு போடஆரம்பியுங்கள். அந்த மாதிரி வெடிகுண்டை வீசுங்கள், அது வெடித்தவுடனேயே ஆத்மாக்கள் ஓடி வந்து தன்னுடைய புகலிடத்தை வந்தடையட்டும். முதலில் குஜராத் அபுவிலிருந்து க்யூ வரிசையை தொடங்கட்டும். பிறகு முதலில் செய்வது நான் அர்ச்சுனன் என்றாகி விடட்டும். அர்ச்சுனன் என்றால் முதல் எண். நல்லது.

அந்த மாதிரி சேவாதாரியாக எப்பொழுதும் ஒரு விநாடி மற்றும் எண்ணம் கூட சேவையில்லாது நிம்மதியிராத, நிரந்தர யோகி - நிரந்தர சேவாதாரி. அனைத்து விதமான சேவையிலும் பிரத்யக்ஷ பலனைக் காண்பிக்கக்கூடிய அந்த மாதிரி எடுத்துக் காட்டு உதாரணமாகி உலகிற்கு நன்மை செய்யக்கூடிய ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

## பார்ட்டிகளுடன் சந்திப்பு

1) சங்கமயுக காலத்தில் ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு வருமானம் செய்வதற்கான வாய்ப்பு: எப்பொழுதும் தந்தையின் நினைவிலிருந்தே ஒவ்வொரு அடியையும் எடுத்து வைத்து பல மடங்கு வருமானத்தின் சேமிப்பை செய்து கொண்டே இருக்கிறீர்களா? ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு என்ற வர்ணனை இருக்கிறது, அது யாருடையது? உங்கள் அனைவரினுடையது தான் இல்லையா. இந்த சங்கமயுகத்தில் தான் பல மடங்கின் வருமானத்தின் சுரங்கம் கிடைக்கிறது. பின்பு முழுக் கல்பத்திலும் இந்த வாய்ப்பு கிடைக்காது. சங்கமயுகம் சேமிப்பதற்கான யுகம், சத்யுகத்தையும் பிராப்தியை அனுபவம் செய்யும் யுகம் என்று சொல்வோம். சேமிப்பு செய்வதற்கான யுகம் இல்லை. இப்பொழுது சேமிப்பதற்கான யுகம் ஆகும், எவ்வளவு விரும்புகிறீர்களோ அந்த அளவு சேமிப்பு செய்ய முடியும். அப்படியானால் எவ்வளவு சேமித்திருக்கிறீர்கள் மற்றும் செய்து கொண்டே

இருக்கிறீர்கள். எவ்வளவு செய்ய விரும்புகிறீர்களோ அந்த அளவு செய்து கொண்டிருக்கிறீர்களா அல்லது எவ்வளவு மற்றும் அவ்வளவில் வேற்றுமை இருக்கிறதா? ஒரு அடி என்றால் ஒரு விநாடி கூட சேமிப்பு இல்லாமல் இருக்க வேண்டாம் அதாவது வீணானதாக ஆக வேண்டாம். அந்த அளவு கவனம் இருக்கிறதா?

சத்யுகத்தில் கூட உலக மகாராஜா அல்லது இராஜா ஆவதற்கான ஆதாரம் இந்த நேரத்தில் சேமிப்பு செய்வதின் ஆதாரத்தில் இருக்கிறது. அப்படியானால் என்ன ஆவீர்கள், பெரிய மகாராஜவா அல்லது சின்ன இராஜாவா? பெரிய இராஜாவாக யார் இருப்பாரோ அவர்களிடம் எண்ணிலடங்காத செல்வம் இருக்கும், அப்படியானால் இந்த அளவு எண்ண முடியாத வருமானத்தை சேமித்திருக்கிறீர்களா? எப்பொழுதும் பெட்டகம் நிரம்பியிருக்கிறதா? இல்லை என்ற பொருள் ஒன்றும் இல்லை .... அந்த மாதிரியான சம்ஸ்காரம் இப்பொழுது இருக்கிறதா? எப்பொழுதும் திருப்தியான ஆத்மா பிராப்தியில்லாதது ஒன்றுமில்லை என்று அப்படி இருக்கிறதா? இப்பொழுது அனைத்து பந்தனங்களையும் துண்டியுங்கள். கொஞ்சம் உதவி செய்யுங்கள் என்று கேட்குமளவு அப்படியோ இல்லையே? உதவி கிடைத்தால், முன்னேற வைத்தால் முன்னேறுவேன் என்றிருந்தால், இன்னும் சம்பன்னம் (முழுமை) ஆகவில்லை என்று நிரூபணம் ஆகிறது. தன்னுடைய சக்தியில் குறை இருக்கிறது. அதனால் தான் மற்றவர்கள் சக்தி மூலம் என்னை முன்னேறச் செய்வித்தால் முன்னேறுவேன் என்ற நிலை இருக்கிறது. அப்படியானால் இவரை திருப்தியான மற்றும் சம்பன்ன ஆத்மா என்று கூறுவோமா? பாப்தாதாவோ இயல்பாகவே வள்ளலாக இருக்கிறார், கொடுத்துக் கொண்டே இருப்பார். அவரிடம் கேட்பதற்கும் அவசியம் இல்லை. அந்த மாதிரி திருப்தியான ஆத்மா எதிர்காலத்தில் குறைவில்லா பொக்கிஷங்களின் அதிபதியாக இருப்பார், இப்பொழுதிலிருந்தே அந்த சம்ஸ்காரத்தை நிரப்பினால் தான் எதிர்காலத்தில் அப்படி ஆவீர்கள். நல்லது.

2) முதல் ஜென்மத்தின் சம்பன்ன நிலை வரை சென்றடைவதற்கான வழி - ஹைஜம்ப் (உயரம் தாண்டுதல்) இப்பொழுது முயற்சி செய்வதற்கான நேரம் சென்று விட்டது, ஏனென்றால் நேரத்தின் வேகம் மிக அதிகமாக உள்ளது, பிற்காலத்தில் வருபவர்கள் சிறிது காலத்திலேயே அனைத்து படிப்பையும் முடிக்க வேண்டும். எனவே தீவிர முயற்சி செய்து ஹைஜம்ப் (உயரே தாண்டுதல்) செய்யுங்கள். தீவிர முயற்சி செய்வதற்காக ஒரு விஷயத்தின் கவனம் மட்டும் வையுங்கள் - தன்னுடைய சம்பூர்ண நிலையை எதிரில்

வைத்து, தற்சமயத்து கணக்கை சோதனைசெய்யுங்கள். அதில் சம்பூர்ண நிலை 16 கலைகளாகும். அப்படியானால் 16 கலைகளில் எத்தனை கலைகளை நான் தாரணை செய்திருக்கிறேன் என்று அப்படி சோதனைசெய்து கொண்டே இருங்கள், என்ன குறைவாக இருக்கிறதோ அதை நிரப்பிக் கொண்டே செல்லுங்கள். இதைத் தான் முயற்சி செய்வது என்று கூறுவது. நல்லது.

விடை பெறும் நேரத்தில் - எப்படி தந்தை குழந்தைகளைப் பார்த்து குஷி அடைகிறார். அதே போல் ஒவ்வொரு குழந்தையும் எப்பொழுதும் குஷியில் நடனமாடிக் கொண்டே இருக்கட்டும். அந்த குஷி நிறைந்த முகம் வாய்மொழியை விட அதிகமாகச் சேவை செய்யும். முகம், சைத்தன்யமான நடமாடும் கண்காட்சியாக இருக்க வேண்டும். எப்படி கண்காட்சியில் விதவிதமான படங்களை வைக்கிறீர்கள். அதே போல் முகத்தில் தந்தையின் அனைத்து குணங்களும் தென்படட்டும். வாய் மூலம் செய்யும் சேவையிலோ அங்கு சென்று சொல்ல வேண்டியதாக இருக்கிறது, முகம் மூலமாக அழைக்காவிட்டாலும் அவர்களாகவே வருவார்கள். எனவே இப்பொழுது அனைவரும் தன்னை சைத்தன்ய கண்காட்சியாக ஆக்குங்கள். அம்மாதிரி அனைவரும் கண்காட்சி ஆகிவிட்டீர்கள் என்றால், அப்பொழுது சொர்க்கத்தின் திறப்பு விழா நடக்கும். பிரம்மா பாபா இந்த திறப்பு விழாவிற்காகத் தான் காத்துக் கொண்டிருக்கிறார். எனவே விரைவில் தயாராகி விட்டீர்கள் என்றால் விரைவில் திறப்பு விழா ஆகிவிடும். எப்பொழுது திறப்பு விழா செய்வீர்கள்? தேதியை நிச்சயம் செய்ய முடியுமா அல்லது திடீரென்று ஆகுமா, என்ன ஆகும்?

சங்கமயுகமோ நல்லது தான். ஆனால் அனைவருக்கும் சுகம் மற்றும் அமைதியைக் கொடுப்பதற்கான எண்ணமும் இருக்க வேண்டும், மற்றவர்களை துக்கமானவர்களாகப் பார்த்து, துடித்துக் கொண்டிருப்பவர்களைப் பார்த்து இரக்கமும் வர வேண்டும் இல்லையா? நல்லது - ஓம் சாந்தி.

வரதானம் -

அழியாத போதையில் இருந்து ஆன்மீக சந்தோஷம் மற்றும் ஆனந்தத்தை அனுபவம் செய்யக்கூடிய பிராமணனிலிருந்து பரிஷ்தா ஆகுபவர் ஆகுக.

பிராமணனிலிருந்து பரிஷ்தாவாக ஆகும் நீங்கள் தேவதைகளை விடவும் உயர்ந்தவர்கள். தேவதைகளின் வாழ்க்கையில் தந்தையின் ஞானம் வெளிப்படும் ரூபத்தில் இருக்காது. பரமாத்மா சந்திப்பின் அனுபவமும் இருக்காது. எனவே இப்பொழுது நான் தேவதைகளை விடவும் உயர்ந்த பிராமணனிலிருந்து பரிஷ்தா ஆகக்கூடியவன் என்ற இந்த போதை எப்பொழுதும் இருக்கட்டும். இந்த அழியாத போதைதான் ஆன்மீக சந்தோஷம் மற்றும் ஆனந்தத்தை அனுபவம் செய்விக்கக்கூடியது. ஒருவேளை போதைநிரந்தரமாக இல்லை என்றால், சில நேரம் சந்தோஷத்தில் இருப்பீர்கள், சில நேரம் குழப்பத்தில் இருப்பீர்கள்.

சுலோகன் -

தன்னுடைய சேவையையும் தந்தையின் எதிரில் அர்ப்பணம் செய்து விடுங்கள், அப்பொழுது தான் சமர்ப்பண ஆத்மா என்று கூறுவோம்.

ஓம் சாந்தி

"சூரிய வம்சம் மற்றும் சந்திர வம்ச ஆத்மாக்களின் நடைமுறை வாழ்க்கையின் தாரணைகளின் (நடைமுறை) அடையாளம்"

இன்று பாப்தாதா சூட்சுமவதனத்தில் குழந்தைகள் முன்னேறும் கலைக்கான முயற்சி செய்யும் விஷயத்தின் மீது ஆன்மீக உரையாடல் செய்து கொண்டிருந்தனர். அதில் இரண்டு விதமான குழந்தைகளைப் பார்த்தனர். ஒன்று, முதல் தரமான முயற்சியானது சூரிய வம்சத்து தேவதா ரூபத்தில், அடுத்து, இரண்டாவது தரமான சந்திர வம்ச சத்திரிய ரூபத்தில் இருவர்களின் நிலை மற்றும் வேகம் இரண்டிலுமே வித்தியாசம் இருந்தது. இருவர்களின் எண்ணமும் சம்பூர்ண நிலையின் இலக்கை சென்றடைவதற்காகத் தான் இருந்தது. மேலும் இப்பொழுதும் இருக்கிறது, ஆனால் முதல் நம்பர் அதாவது சூரிய வம்சத்தினரின் எண்ணம் மற்றும் சொரூபத்தில் (நடைமுறை) அதிக வித்தியாசம் இருக்கவில்லை, இரண்டாம் நம்பர் சந்திரவம்சிகளின் எண்ணம் மற்றும் சொரூபத்தினிடையே அதிக வித்தியாசம் இருந்தது. எண்ணம் 100 சதவிகிதம் சக்திசாலியானதாக இருக்கும் பொழுது, சொரூபம் சில நேரம் 75 சதவிகிதம், சில நேரம் 50 சதவிகிதம் என்று இந்த அளவு வித்தியாசம் இருந்தது.

சூரிய வம்சத்தினர் எப்பொழுதும் மாஸ்டர் ஞான சூரியனாக அதாவது சக்திசாலியான நிலை அதாவது விதை ரூபத்தில் இருக்கிறார்கள். மேலும் இரண்டாம் நிலை அவ்யக்த பரிஷ்தா (பிரகாசம் நிறைந்த தேவதை) நிலையில் அதிகமான நேரம் நிலைத்திருந்தார்கள். சந்திர வம்சத்தினர் ஞான சூரியனுக்கு சமமான விதை ரூப நிலையில் குறைவாகவே நிலைத்திருக்க முடிந்தது. பரிஷ்தா சொரூபத்தில் அனேக விதமான மாயாவின் தடைகளோடு யுத்தம் செய்து வெற்றி அடையும் நிலையில் தான் அதிகமாக இருந்தார்கள். சில நேரம் வீணான எண்ணங்களில், சில நேரம் பிரச்சனையின் ரூபத்தில், மாயாவின் மீது வெற்றி அடைவதற்கான கடின உழைப்பில் அதிகமான நேரம் இருந்து கொண்டு ஒரு மணி நேரத்து கடின உழைப்பிலிருந்து (முயற்சி) அரை மணி நேரமோ அல்லது 15 நிமிடமோ தான் வெற்றியின் அனுபவம் செய்கிறார்கள். எனவே முயற்சி செய்யும் கடின

உழைப்பை செய்து செய்து சில நேரம் களைப்படைந்து விடுகிறார்கள். சில நேரம் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்கள். சில நேரம் ஓடுகிறார்கள், சில நேரம் ஓடுபவர்களைப் பார்த்து ஓட விரும்புகிறார்கள், ஆனால் ஓட முடியவில்லை. தந்தையின் ஒவ்வொரு குணத்தையும் அனுபவம் செய்வதில் அரைகுறையான நிலை வரை சென்றடைந்து, அதாவது 50-50 நிலையில் இருக்கின்றனர். எப்படி தந்தை சுகக்கடலாக இருக்கிறாரோ, அப்படி நான் சுகசொரூபமானவன் என்று வர்ணனை என்னமோ செய்கிறார்கள். ஆனால் எப்பொழுதும் சுகத்தின் அனுபவம் ஏற்படுவதில்லை. சம்பூர்ண சுகத்தின் அனுபவம் சில நேரம் இருக்கும், சில நேரம் இருப்பதில்லை. எப்படி சந்திரனில் பிறை வளர்ந்து கொண்டும் மற்றும் தேய்ந்து கொண்டும் இருக்கிறதோ அதே போல் சந்திர வம்சத்தினர் சில நேரம் மிகுந்த ஊக்கம், உற்சாகத்தில் சம்பூர்ண நிலையின் அனுபவம் செய்கிறார்கள். சில நேரம் தன்னை சம்பூர்ண நிலையிலிருந்து வெகு தொலைவில் இருப்பதாக அனுபவம் செய்வார்கள். சில நேரம் துணையைப் பெறுவதற்காக நினைவின் நிலையிலிருந்து முறையிடும் நிலையில் வந்து விடுவார்கள்.

சூரிய வம்சத்தினர் எப்பொழுதும் தந்தையின் துணை மற்றும் அனைத்து உறவுகளின் அனுபவங்களில் நிறைந்து மூழ்கியிருப்பார்கள். 2) சூரியவம்சத்தினர் ஏறும் மற்றும் இறங்கும் கலையி மாறி மாறி வர மாட்டார்கள். எப்பொழுதும் ஏறும் கலையையே அனுபவம் செய்வார்கள். எப்படி சூரியன் எப்பொழுதும் பிரகாச சொரூபத்தில் அனுபவம் ஆவது போன்றிருப்பார்கள். கலைகளின் ஏற்றம்-இறக்கம் என்ற இந்த குழப்பத்தில் வரமாட்டார்கள். சில நேரம் 14 கலைகள் நிறைந்த நிலை, சில நேரம் 8 கலைகள் நிரம்பிய நிலை. அப்படி இந்த அளவு வித்தியாசம் இருக்காது. 3) சூரிய வம்சத்தினரின் எதிரில் மாயா மேகம் மாதிரி அவசியம் எதிரில் வருகிறது ஆனால் மேகம் வருகிறது மற்றும் சென்று விடுகிறது. 4) சூரியவம்சத்தினர் தன்னுடைய சொரூபத்தை எப்பொழுதும் சமமாக வைத்துக் கொண்டு மேகத்தைப் பார்த்து பிரகாசம் குறைவதில்லை. எப்பொழுதும் தன்னுடைய தந்தையின் குணத்தினால் சாகார ரூபத்தில் குணங்களின் அனுபவிகளாக இருக்கிறார்கள். மேலும் மற்றவர்களின் எதிரிலும் பிரத்யக்ஷம் (வெளிப்படையாகத் தெரிய) ஆகிறார்கள். 5) சூரியவம்சத்தினர் எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட சேவாதாரியாக தன்னை லைட் ஹவுஸ் மைட் ஹவுஸாக அனுபவம் செய்வார்கள். 6) சூரிய வம்சத்தினரின் ஒவ்வொரு அடியும் சாகார பிரம்மா பாபாவின் காரியம் என்ற ஒவ்வொரு அடிக்கு பின்னால் அடியெடுத்து வைப்பவராகி அதாவது செய்யும் காரியம் மற்றும் முயற்சி செய்வதின் வேகத்தில் சாகார பிரம்மா பாபாவிற்குச் சமமாக இருப்பார்கள். 7)

சூரியவம்சத்தினரின் முதல் அடி பின்பற்றுவதாக இருக்கும் - மனம், புத்தி, சம்ஸ்காரத்தில் எப்பொழுதும் தந்தையின் எதிரில் சமர்ப்பணம் ஆவார்கள். எப்படி பிரம்மா பாபாவிடம் விசேஷத்தைப் பார்த்தீர்கள் - இதே மகா தியாகத்தினால் அவருக்கு மகான் பாக்கியம் கிடைத்தது, நம்பர் ஒன் சம்பூர்ண பரிஷ்தா ரூபம் மற்றும் நம்பர் ஒன் உலக மகாராஜன் ஆகிறார். 8) சூரிய வம்சத்தினர் எப்பொழுதும் நிச்சயபுத்திக்கான பிரத்யக்ஷ (வெளிப்படை) நிலையாகிய எப்பொழுதும் கவலையற்று மேலும் தன்னை ஒவ்வொரு கல்பத்திலும் அவசியம் வெற்றி அடைபவராக அனுபவம் செய்வார்கள். 9) சூரியவம்சத்தினர் எப்பொழுதும் உலகிற்கு நன்மை செய்யும் பொறுப்பை செய்து கொண்டே, எவ்வளவு பெரிய பொறுப்போ அந்த அளவு டபுள் லைட் நிலையிலும் இருப்பார்கள். 10) சூரிய வம்சத்தினர் தமது உள்உணர்வு மற்றும் அதிர்வலைகளின் கிரணங்கள் மூலமாக அனேக ஆத்மாக்களுக்கு சுயநினைவில் நிலைத்திருப்பதற்கான அனுபவத்தை செய்விப்பார்கள். 11) சூரியவம்சத்தினர் எப்பொழுதும் தனக்குக் கிடைத்திருக்கும் அனைத்து பொக்கிஷங்களையும் சுயநலமாக அதாவது தனக்காக அன்றி, அனைவருக்கும் வழங்கும் மகாதானி மற்றும் வரதானியாக இருப்பார்கள். 12) சூரிய வம்சத்தினருக்கு விசேஷமாக இரண்டு அடையாளங்களின் அனுபவம் இருக்கும் - ஒன்று எப்பொழுதும் சப்தத்திலிருந்து (பேச்சு) விலகிய நிலையில் நிலைத்திருந்து வாணியில் (பேச்சில்) வருவார்கள், இரண்டாவது தன்னுடைய மனநிலையில் எப்பொழுதும் சுயமரியாதை, பேச்சு மற்றும் சேவையில் பணிவு இருக்கும். அதாவது பணிவு மற்றும் சப்தத்திலிருந்து விலகிய நிலை (நிர்வாண்) ஆகிய இரண்டு அடையாளங்களின் அனுபவம் ஆகும்.

அதே போலவேசந்திரவம்சத்தினரின் அனைத்து விஷயங்களும் சில நேரம் அப்படியும், சில நேரம் வேறு மாதிரியும், 50-50 ஆக இருக்கும். சில நேரம் 100 மணிகளுக்குச் சமமாக பிரகாசமாக இருக்கும். சில நேரம் தன்னுடைய பலஹீனங்களின் மாலையை தந்தையின் எதிரில் அடிக்கடி ஜபித்துக் கொண்டே இருப்பார். சில நேரம் சக்தி நிறைந்தவராக, சில நேரம் வீணான நிலையில் இருப்பார். சில நேரம் மகான், சில நேரம் சாதாரணம். சில நேரம் தன்னை அதிகாரம் நிறைந்தவர்களாக அதாவது மகாவீரர்களாக அனுபவம் செய்வார்கள், சில நேரம் ஆதாரம் ஏதாவது கிடைத்தால், உதவி கிடைத்தது என்றால் முன்னேறிச் செல்லலாம் என்று கூறுவார்கள். இப்படியாக நொண்டி நொண்டி நடந்து செல்பவர்களாக இருப்பார்கள். இப்பொழுது நான் எதுவரை வந்து சேர்ந்திருக்கிறேன் என்று தன்னைத்தானே கேளுங்கள். சூரியவம்சத்தினராக இருக்கிறேனா அல்லது சந்திரவம்சத்தின் நிலையைக் கடந்து சூரியவம்சத்தின் மதில் சுவர் வரை வந்து சேர்ந்திருக்கிறேனா

அல்லது சந்திரவம்சத்திலேயே இருக்கிறேனா? மதில் சுவர் வரை வந்து சேர்ந்திருப்பவர்கள் சில நேரம் சூரிய வம்சத்தின் நிலையில் உயரம் தாண்டி வந்து விடுவார்கள், சில நேரம் சந்திரவம்சத்தில் இருக்கிறார்கள். மேலும் இப்பொழுது நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்று சோதனை செய்யுங்கள். மதில்சுவரை தாண்டி சூரியவம்சத்தினராக ஆகுங்கள். புரிந்ததா என்ன செய்ய வேண்டும் என்று? நல்லது.

அந்த மாதிரி தன்னை எப்பொழுதும் சூரியவம்சத்தின் அதிகார உரிமையுள்ளவராக ஆக்கக்கூடிய தந்தையின் ஒவ்வொரு அடி மேல் அடி எடுத்து வைக்கக்கூடிய, தந்தையைப் போன்று எப்பொழுதும் பரிஷ்தா ரூபத்தில் இருக்கக்கூடிய, மாஸ்டர் ஞான சூரியனாகி உலகிற்கு தன்னுடைய பிராப்திகளின் கிரணங்கள் மூலமாக இருளில் இருந்து ஒளிமயமாக ஆக்கக்கூடிய அந்த மாதிரி மாஸ்டர் ஞான சூரிய குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

குஜராத்திற்கு சகஜயோகி என்ற வரதானம் கிடைத்திருக்கிறது. குஜராத்தின் பூமி சாத்வீகமானதாக இருக்கும் காரணத்தினால் ஏற்கனவே தயாராகியுள்ள பூமியாக இருக்கிறது. ஏற்கனவே தயாராக உள்ள பூமியில் விதை விதைப்பதினால் எளிதாக பழம் கொடுக்கிறது. சகஜயோகிக்கான வரதானம் நாடகத்தின் அனுசாரம் கிடைத்திருக்கிறது, இதே வரதானத்தை நினைவில் வைத்துக் கொண்டே தானும் சகஜயோகி ஆகி, பிறரையும் சகஜயோகி ஆக்குங்கள். எப்பொழுதும் வெற்றிக் கொடி கையில் இருக்கட்டும். இப்பொழுது அந்த மாதிரி விசேஷ ஆத்மாக்களை தொடர்பில் கொண்டு வாருங்கள், அவர்கள் மூலமாக சேவையின் ஒலி வெகு தூரம் பரவட்டும். ஞானத்தின் கணக்குப்படி விசேஷ நபர் இல்லை, ஆனால் உலகின் கணக்குப்படி யார் விசேஷ நபராக இருக்கிறாரோ அவருக்கு சேவை செய்யுங்கள், இதன் மூலம் செய்தித்தாள், வானொலி மற்றும் தொலைக்காட்சியைச் சேர்ந்தவர்கள் அவர்களாகவே நாலாபுறங்களிலும் இந்தச் செய்தியைப் பரப்புவார்கள். அந்த மாதிரி யாராவது விசேஷ ஆத்மாக்களை உருவாக்குங்கள், அவருடைய வார்த்தைகள் மூலம் அனேக ஆத்மாக்களுக்கு நன்மை ஏற்படட்டும். பாப்தாதா எப்பொழுதுமே இதை எதிர்பார்க்கிறார். அந்த எதிர்பார்ப்பிற்கு நடைமுறையில் பதில் அளிக்க வேண்டும். நேரம் மிகக்குறைவாக இருக்கிறது. மேலும் சேவை செய்ய வேண்டியது அதிகமாக உள்ளது. இப்பொழுது சேவை செய்யும் முறை அந்த மாதிரி இருக்கட்டும். ஒரு முறை சுற்றி வருவதினால் அனேகர்களுக்கு நன்மை ஏற்படட்டும். இப்பொழுது அந்த மாதிரி வேகம் வேண்டும். இராஜ்ய அதிகாரியோ தன்னுடைய பாக்கியத்தை எடுத்துக் கொண்டே

இருப்பார். ஆனால் செய்தியை அனைவருக்கும் கொடுத்துக் கொண்டே இருங்கள். எந்த ஒரு புகாரும் தீர்வு தரப்படாமல் இருந்து விட வேண்டாம். நல்லது.

பார்ட்டிகளுடன் சந்திப்பு

1) விதை ரூப நிலை மூலமாக முழு உலகத்திற்கும் சேவை -

விதை ரூப நிலை அனைத்தையும் விட சக்தி நிறைந்த நிலை ஆகும், அதற்குப் பிறகு அனைத்தும் வரிசைக்கிரமமான நிலை ஆகும், இந்த நிலை லைட் ஹவுஸின் காரியம் செய்கிறது. முழு உலகத்திற்கும் லைட்டை (ஒளியை) பரப்புவதற்குப் பொறுப்பாகிறது. எப்படி விதை மூலமாக இயல்பாகவே முழு மரத்திற்கும் தண்ணீர் கிடைத்து விடுகிறதோ, அதே போன்று எப்பொழுது விதை ரூப நிலையில் நிலைத்திருக்கிறீர்களோ அப்பொழுது தானாகவே உலகத்திற்கு லைட் என்ற தண்ணீர் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. எப்படி லைட் ஹவுஸ் ஒரு ஸ்தானத்தில் இருந்து கொண்டே நாலாபுறங்களிலும் தன்னுடைய லைட்டை பரப்புகிறதோ அதே போன்று லைட் ஹவுஸ் ஆகி உலகிற்கு நன்மை செய்யக்கூடிய, முழு உலகத்திற்கும் தன்னுடைய லைட்டைப் (ஒளி) பரப்புகின்ற சக்திசாலியான நிலை வேண்டும். எப்படி ஸ்தூலமான லைட்டின் பல்ப் அதிக வாட்ஸ் உள்ளதாக இல்லை என்றால், நாலாபுறங்களிலும் அதன் மூலம் லைட் பரவ முடியாது. ஜீரோ வாட்ஸ் கொஞ்ச தூரம் குறிப்பிட்ட இடம் வரை செல்லும். அப்படி இப்பொழுது வெறும் பல்ப் ஆகாமல் லைட் ஹவுஸ் ஆகுங்கள். எல்லைக்கப்பாற்பட்ட தந்தையின் குழந்தைகள் எல்லைக்கப்பாற்பட்ட சேவாதாரி. தற்சமயம் எல்லைக்கப்பாற்பட்ட சேவையின் தேவை உள்ளது. ஏனென்றால், எல்லைக்கப்பாற்பட்ட உலகத்தின் பரிவர்த்தனை (மாற்றம்) ஏற்பட வேண்டும். உலக பரிவர்த்தனை செய்வதற்காக முதலில் தன்னுடைய பரிவர்த்தனையை செய்ய வேண்டும். ஒவ்வொரு எண்ணத்திலும் உலகிற்கு நன்மை ஏற்படட்டும் என்ற நினைவு இருக்க வேண்டும்.

2) எப்பொழுதும் சம்பன்னமாக (நிறைவாக) இருக்கும் ஆத்மாக்களின் அடையாளங்கள் -

யார் எப்பொழுதும் அனைத்து பொக்கிஷங்களினாலும் நிறைந்து இருப்பாரோ அவர் எப்பொழுதும் திருப்தியாக இருப்பார். திருப்தியின்மைக்கான காரணம் பிராப்தியின்மை. யார் நிரம்பிய ஆத்மாக்களோ அவர்களால் தான் பிற ஆத்மாக்களுக்கும் கொடுக்க முடியும். ஒருவேளை தன்னிடம் குறைவு இருக்கிறது என்றால், பிறருக்கும் வழங்க முடியாது. திருப்தி என்றால் சம்பன்ன நிலை. எப்படி தந்தை சம்பன்னமாக இருக்கிறார்! எனவே தந்தையின் மகிமையில் கடல் என்ற வார்த்தையைக் கூறுகிறார்கள், இது சம்பன்ன நிலையை உறுதி செய்கிறது. அப்படி தந்தைக்குச் சமமாக மாஸ்டர் கடல் ஆகுங்கள். நதியோஇருந்தும் வற்றி விடும். சம்பன்ன ஆத்மாக்கள் எப்பொழுதும் குஷியில் நடனம் ஆடிக் கொண்டே இருப்பார்கள். குஷியைத் தவிர வேறு எதுவும் மனதில் வர முடியாது. திருப்தியான ஆத்மாக்கள் சம்பன்னமாக இருக்கும் காரணத்தினால் யார் மூலமாகவும் தொந்தரவு அடைய மாட்டார்கள். சம்மந்தத்தில் கூட எந்தப் பிரச்சனையும் இருக்காது. ஒருவேளை இருந்தால் கூட அதனுடைய பாதிப்பு இருக்காது. எந்த வித உளைச்சலும், தடையும் ஒரு விளையாட்டாகவே அனுபவம் ஆகும். பிரச்சனையும் மனமகிழ்ச்சிக்கான சாதனம் ஆகிவிடும். ஏனென்றால் ஞானம் நிறைந்தவராகி பார்ப்பார். அவர் எப்பொழுதும் நிச்சயபுத்தியுடன் இருக்கும் காரணத்தினால் நிச்சயத்தின் ஆதாரத்தினால் வெற்றி அடைபவராக இருப்பார். எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்தவராக இருப்பார்.

3) உலக சேவகன் என்று புரிந்து கொள்வதினால் ஒரே ஒரு (வரின்) ரசனையின் அனுபவம் -

பாப்தாதாவிற்கு எப்பொழுதும் சேவாதாரி குழந்தைகள் நினைவிலிருக்கிறார்கள், ஏனென்றால் தந்தையின் வேலையும் உலக சேவகனுக்கானது. எப்படி தந்தை உலக சேவகனோ அப்படியே குழந்தைகளும் இருக்கிறார்கள். சேவகனுக்கு எப்பொழுதும் சேவை மற்றும் எஜமானன் நினைவிருக்கும். அப்படி அந்த மாதிரி சேவாதாரி குழந்தைகளுக்கும் தந்தை மற்றும் சேவையைத் தவிர வேறு எந்த நினைவும் இல்லை. இதன் மூலமாகத் தான் ஒரே சீரான நிலையில் இருப்பதற்கான அனுபவம் ஆகிறது. அவர்களுக்கு ஒரு தந்தையின் ரசனையைத் தவிர மற்ற ரசனைகள் சுவையின்றி அனுபவம் ஆகும். ஒரு தந்தையின் ரசனை அனுபவம் ஆகும் காரணத்தினால் எங்கேயும் மன ஈர்ப்பு செல்ல முடியாது, இதுவே செய்ய வேண்டிய முயற்சி ஆகும் மற்றும் இது தான் லட்சியமும் ஆகும். பாப்தாதா அனைவரையும் தீவிரமாக முயற்சி செய்பவர்களின் பார்வையோடு

பார்க்கிறார். முயற்சி செய்பவராக இருந்தால் கூட லட்சியம் வரை சென்றடைய முடியாது.

4) அனைத்து சம்மந்தங்களின் ரசனையை ஒரு தந்தையிடமிருந்து பெறுபவர் தான் பற்றுதலை வென்றவர் -

தந்தையை அனைத்து சம்மந்தங்களினால் தன்னுடையவராக ஆக்கிவிட்டீர்களா? தந்தையின் சம்மந்தத்தில் மட்டுமில்லை. ஆனால் அனைத்து சம்மந்தமும் தந்தையோடு ஆகிவிட்டது, தன்னுடையவராக ஆக்கியது என்றால் தந்தையினுடையவராக அவரே ஆவது. அப்படி அனைத்து சம்மந்தங்களினால் ஒரு தந்தையைத்தவிர வேறு யாரும் இல்லை என்பதாகும். யாருடைய அனைத்து சம்மந்தமும் தந்தையுடன் ஆகி விட்டதோ அவரிடம் விசேஷமாக என்ன குணம் தென்படும்? அவர் எப்பொழுதும் பற்றுதலற்றவராக இருப்பார். எந்த பக்கத்திலும் பற்றுதல் அதாவது ஈர்ப்பு இல்லை என்றால் மாயாவிடம் தோல்வியும் ஏற்பட முடியாது. அந்த மாதிரி பற்றுதலை வென்றவர் ஆக வேண்டும் அதாவது எப்பொழுதும் தந்தையின் நினைவு சொரூபத்தில் நிலைத்திட வேண்டும். அமிர்தவேளையில் அனைத்து சம்மந்தங்களின் சுகத்தை ஒவ்வொரு நாளும் பாப்தாதாவிடமிருந்து பெற்று மற்றவர்களுக்கும் தானம் கொடுப்பேன் என்ற இந்த நிற்சிந்தனையை நினைவில் கொண்டு வாருங்கள். ஒவ்வொரு சம்மந்தத்தின் சுகத்தையும் பெறுங்கள். அனைத்து சுகங்களின் அதிகாரியாகி பிறரையும் ஆக்குங்கள். அந்த மாதிரி அதிகாரி என்று தன்னை புரிந்து கொள்பவர்கள் எப்பொழுதும் தந்தையை தன்னுடைய துணைவனாக்கி நடந்து கொள்வார்கள். என்ன வேலை இருந்தாலும் ஸ்தூலமான துணைவன் நினைவு வராமல் முதலில் தந்தையின் நினைவு வர வேண்டும். உண்மையான நண்பன் கூட தந்தை தான் இல்லையா? அந்த மாதிரி உண்மையான துணைவனின் துணையை பெற்றீர்கள் என்றால் சுலபமாகவே அனைவரிடமிருந்தும் விலகிய, அதே சமயம் தந்தைக்குப் பிரியமானவர் ஆகிவிடுவீர்கள். ஒரு தந்தை மேல் பற்றுதல் இருக்கிறது என்றால், மற்றவர்களிடமிருந்து பற்றுதலை வென்றவர் ஆகிவிடுவீர்கள்.

டீச்சர்களுடன் சந்திப்பு -

யார் அன்பில் (பாபாவின்) எப்பொழுதும் இருக்கக்கூடிய அன்பான ஆத்மாக்கள் என்றால், அந்த மாதிரி அன்பான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவும் எப்பொழுதும் அந்த அன்பிற்கான பிரதிபலனைக் கொடுக்கிறார். எந்த நேரம் கொடுக்கிறார்? முக்கியமாக அமிர்தவேளையில்! அமிர்தவேளையில் சுலபமாக வரதானம் கிடைக்கிறது. பார்க்கப் போனால் நாள் முழுவதும் பெறுவதற்கு அதிகாரம் இருக்கிறது. இருந்தாலும் அது பிரத்யேகமான நேரம் ஆகும். எப்படி பிரத்யேகமான பருவ காலம் இருக்கிறது இல்லையா? இந்த நேரத்தில் இந்த பொருள் மலிவாக கிடைக்கும் அப்படி சீசன் இருக்கிறது இல்லையா? அப்படி அமிர்தவேளை விசேஷ சீசன் ஆகும், எனவே சுலபமாக பிராப்தி ஆகிறது. அனைத்து டீச்சர்களும் தடையற்றவர்களாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? யோகாவின் கோட்டையை உறுதியாக ஆக்குங்கள். விசேஷமாக எப்பொழுது ஏதாவது தடை எங்கிருந்தாவது வருகிறது என்றால் எப்படி உலகளவில் யோகா வைக்கிறீர்கள். அதே போல் ஒவ்வொரு மாதமும் குழு ரூபத்தில் நாலாபுறங்களிலும் குறிப்பிட்ட நேரத்தில் அனைவரும் ஒன்றாக யோகா செய்யுங்கள். முழு மண்டலமும் யோக தானம் கொடுக்கட்டும். அதன் மூலம் கோட்டை உறுதியாகி விடும். ஏதாவது காரியம் தொடங்குகிறார்கள் என்றால், சுத்தப்படுத்துவதற்கான விதியைக் கடைப்பிடிப்பார்கள். அதே போல் அனைத்து உயர்ந்த ஆத்மாக்களுக்கும் வெற்றி அடைபவன் என்ற ஒரே சுத்தமான எண்ணம் இருக்கட்டும். அப்படி இது சுத்தீகரனம் செய்வதற்கான விதி ஆகிவிட்டது. நாலாபுறங்களிலும் ஒன்றாகக் கூடி கோட்டையை உறுதியாக்குங்கள் பிறகு வெற்றி அடைபவர் ஆகிவிடுவீர்கள். நல்லது.

வரதானம் :

எந்தவொரு சூழ்நிலையிலும் முற்றுப்புள்ளி வைத்து தன்னை மாற்றம் செய்யக்கூடிய அனைவரது ஆசீர்வாதங்களுக்கும் பாத்திரமானவர் ஆகுக.

எந்தவொரு பாதக சூழ்நிலையிலும் புள்ளி சொரூப தந்தை மற்றும் புள்ளி சொரூப ஆத்மா இரண்டின் நினைவிருக்கிறதோ அப்பொழுது தான் முற்றுப்புள்ளி வைக்க முடியும். எந்தக் குழந்தைகள் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் தன்னை மாற்றம் செய்து முற்றுப்புள்ளி வைப்பதில் முதலில் தன்னை முன்னுக்கு வைக்கிறாரோ அவர் ஆசீர்வாதங்களுக்குப் பாத்திரமானவர் ஆகிவிடுகிறார். அவருக்கு தனக்கு தானே ஆசீர்வாதங்கள் அதாவது குஷி

கிடைக்கிறது, தந்தை மூலமாக மற்றும் பிராமண பரிவாரம் மூலமாகவும் ஆசீர்வாதம் கிடைக்கிறது.

சுலோகன் :

எந்த எண்ணத்தை உருவாக்குகிறீர்களோ அதில் இடையிடையே திடத்தன்மையின் முத்திரையை இட்டீர்கள் என்றால் வெற்றியாளர் ஆகிவிடுவீர்கள்.

ஓம் சாந்தி

10.01.1979 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## இப்பொழுது வீணானது மற்றும் சுமையை முடித்து விடுங்கள்

பாப்தாதா இன்று குழந்தைகளின் ஆர்வம் மற்றும் அன்பைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து கொண்டே யிருக்கின்றார். விட்டில் பூச்சிகள் ஆர்வத்துடன் விளக்கில் அர்ப்பணமாவது போன்று வந்திருக்கின்றார்கள். அனைத்து விட்டில் பூச்சிகளுக்கும் சந்திக்க வேண்டுமென்ற ஒரே ஆர்வம் இருக்கின்றது. எனவே பாபா கூட சந்திப்பதற்காக சாகார கூட்டத்தின் நடுவே வர வேண்டியதாக இருக்கின்றது. ஒவ்வொருவரும் அவரவர் சக்தியின் அனுசாரமாக இலக்கை அடைய நம்பர்வார் முயற்சி செய்து சங்கல்பம் செய்து கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொருவருடைய முயற்சியின் வேகத்தையும் பாப்தாதா அறிந்திருக்கின்றார். எண்ணம் ஒன்றுதான், முயற்சியும் ஒன்று தான், வழிக்காட்டியும் ஒன்றுதான். ஸ்ரீமத் ஒன்றுதான் பிறகு ஏன் வரிசைக்கிராமமாக முயற்சி ஏற்படுகின்றது. சகஜமான வழிதான், நிகழ்கால சொரூபம் கூட சகயோகியின் சொரூபம்தான், பிறகு ஏன் வேகத்தில் வித்தியாசம் ஏற்படுகின்றது. சிலர் நம்பர் ஒன், சிலர் பிறகு 16 ஆயிரம் மாலையில் கடைசி மணியாக வருவது ஏன்? இருவருடைய முயற்சிக்கான துணைவன், முயற்சிக்கான நேரம், படிப்பிற்கான இடம் கூட கடைசியில் வந்தாலும் முதலில் வருவதுதான், கல்வி கூட அனைவருக்கும் ஒன்றுதான், முதலில் வருபவருக்கு பிரத்யேக தனி வகுப்பு (ட்யூஷன்) கூட எதுவும் கிடையாது. பிறகு ஏன் இவ்வளவு வேறுபாடு? காரணம் என்ன? சங்கம யுகத்தின் பட்டம் கூட மிகப்பெரியது. முதல் மற்றும் கடைசி இரண்டிற்கும் டைட்டில் கூட ஒன்றுதான். மாஸ்டர் சர்வசக்திவான், மாஸ்டர் ஞானம் நிறைந்தவர், மூன்று காலத்தையும் உணர்ந்தவர், மாஸ்டர் எல்லாமே தெரிந்தவர் என்பது தான், பிறகும் கூட கடைசி என்பது ஏன்? குலமும் ஒரே பிராமண குலம், ஒரே பிரம்மாவின் வம்சம் தான், காரியமும் ஒன்றுதான் உலக நன்மைக்கான காரியம், எல்லையற்ற தந்தையிடமிருந்து ஆஸ்தி கூட ஒவ்வொருவருக்கும் எல்லையற்றது கிடைக்கின்றது. அதாவது முக்தி ஜீவன் முக்திக்கான ஆஸ்தியும் அனைவருக்கும் சமமாகத்தான் கிடைக்கின்றது. பிறகும் இவ்வளவு வேறுபாடுகள் ஏன்? காரணம் என்ன?

பாப்தாதா அனைத்து குழந்தைகளின் முயற்சியைப்பார்த்து முக்கியான இரண்டு காரணங்களைப் பார்த்தார். ஒன்று வீணாண அதாவது நேரத்தை வீணாக்குவது, இரண்டாவது சுமை அதாவது எடை அதிகமாக இருப்பது. எப்படி இன்றைய நாட்களில் உலகில் சரீர நோயின் காரணத்தால் எடை அதிகமாகின்றது. அனைத்து நோய்களுக்கும் நிவாரணம் எடையை குறைப்பது. அப்படி முயற்சியின் வேகத்தில் முதல், கடைசி வருவதற்கான காரணம் சுமையை குறைக்காமல் இருப்பது. எப்படி சரீர எடை அதிகரிப்பதால் நோய் தானாக ஏற்கடுகின்றது. அதுபோல ஆத்மாவினுடைய சுமையினால் ஆத்ம நோய் தானாக ஏற்படுகின்றது. சரீரத்தில் கூட அதிகமாக எடை ஏறுவதற்கான காரணம் காய்ந்த பொருள்கள் (எண்ணெயில் பொறித்த) என்று கூறுகின்றார்கள். அதுபோல இங்கு காய்ந்த பொருட்கள் அதாவது நடந்து முடிந்த விஷயங்களை சிந்திப்பதால் அதாவது சாப்பிடுவதால் நடந்து முடிந்த விஷயங்களை புத்தியில் சுவீகாரம் (ஏற்று) செய்வதால், பிற ஆத்மாக்களின் குறைகளை, அவகுணங்களை தனக்குள் தாரணை செய்வது. இதனைத் தான் காய்ந்த பொருள் என்று சொல்லப்படுகின்றது. பொரித்த பொருள் சாப்பிடுவதற்கு மிக நன்றாக இருக்கும், மனமும் அதனை விரும்புகின்றது, தன் பக்கம் அதிகமாக கவர்ந்திழுக்கின்றது. மனமில்லையென்றாலும் சிறிது சாப்பிட்டுவிடுகின்றோம். எவ்வளவு கவர்ச்சிகரமானதாக இருக்கின்றதோ அவ்வளவு நஷ்டத்தை ஏற்படுத்துவதாகவும் இருக்கின்றது. அப்படி இங்கு கவர்ந்திழுக்கக்கூடியது ஒருவருக்கொருவர் வீணான செய்தியை சொல்வது, கேட்பதாகும். காட்சி ஆன்மீக உரையாடல் போல் இருக்கும், கொடுக்கல் வாங்கலுக்கானதாக இருக்கும். ஆனால் அதனுடைய ரிசல்ட் ஒருவர் மற்றொருவரின் மீது வெறுப்பான பார்வையாக இருக்கும். மன விருப்பமான நிகழ்ச்சி என்று நினைக்கின்றார்கள் ஆனால் மனதைப் புண்படுத்தக் கூடியதாக ஆகிவிடுகின்றது. வெளி ரூபம் கவர்ச்சிகரமானதாக இருக்கும். ஆனால் ரிசல்ட் கீழே விழ வைக்கக்கூடியதாக இருக்கும். இப்படிப்பட்ட விஷயங்களை புத்தியில் தாரணை செய்வது அதாவது சுவீகாரம் செய்வது இதன் காரணத்தால் சுமை அதிகமாகிவிடுகின்றது. எப்படி சரீர எடை அதிகனாவதால் ஓட முடியாதோ, ஏற முடியாதோ, அப்படி இங்கும் கூட தீவிர முயற்சியை பிராப்தியாக அடைய முடியாது. ஒவ்வொரு அடியிலும் முன்னேறும் கலையை அனுபவம் செய்ய முடியாது. சுமை அதிகமாக உள்ளவர்கள் எந்தவொரு இடத்திலும் செட்டாக முடியாதோ எடை அதிகமுளளவர்கள் ஒன்று நாள் செல்ல செல்ல தடைப்பட்டு நின்றுவிடுவார்கள். இரண்டாவது, மற்றவருடைய உதவியை வாங்க வேண்டியதாகிவிடும். இப்படி முயற்சி செய்கையில்போகப்போக களைப்பு அடைந்து விடுகின்றார்கள். அதாவது ததடைகளின் வசமாகிவிடுகின்றார்கள். கடந்து செல்ல முடிவதில்லை. அதுபோல ஏதாவது ஒரு ஆத்மாவை துணையாக ஆக்கிக்

கொண்டு செல்ல வேண்டியுள்ளது. ஒரு பாபாவின் துணை கிடைத்துள்ளது, ஆனாலும் இவர்கள் ஆத்மாக்களின் துணையில் செல்லக் கூடியவர்களாக இருப்பார்கள். ஒருவேளை சிறிது ஆத்மாக்களின் உதவி கிடைக்கவில்லையென்றாலும் அவர்களால் செல்லமுடியாது.

உதவி கிடைத்தால் முன்னேறிச்செல்லலாம், வாய்ப்புக் கிடைத்தால், முன்னேற்றினால் முன்னேறலாம் என்று கூறுவார்கள். ஏனென்றால் சுமை அதிகமாக இருப்பதால் பிறரது உதவி மூலம் தன்னுடைய சுமையை இலோசாக்க விரும்புவார்கள். எனவே சுமையின் எடையைக் குறையுங்கள் என்று பாப்தாதா கூறுகின்றார். எப்படி உடலின் எடையை குறைக்க உடற்பயிற்சி அவசியமானது. அப்படி ஆன்மீகப் பயிற்சி மூலம் யோகத்தின் மூலம், அவ்வப்பொழுது சூட்சம பரிஸ்தாவாகி ஆகார வதனவாசி பரிஸ்தா ரூபத்தின் அனுபவம் செய்யவும். அவ்வப்பொழுது மூலவதனவாசி என்ற அனுபவம் செய்யவும். அவ்வப்பொழுது தன்னுடைய ராஜ்யத்தின் அதாவது சொர்க்கவாசியாகி தேவதை ரூபத்தை அனுபவம் செய்யவும். இப்படி புத்திக்கான பயிற்சி செய்தீர்களென்றால் சதா லேசாகிவிடுவீர்கள். சுமைத்தன்மை இல்லாமல் போய்விடும். முயற்சியின் வேகம் அதிகமாகிவிடும். யாருடைய உதவியும் எதிர்பார்க்க வேண்டிய அவசியமிருக்காது. சதா பாபாவினுடைய உதவியை அதாவது அவரது (பாதுகாப்பு) குடை நிழலை அனுபவம் செய்வார்கள். ஓடிச் செல்வதற்குப் பதிலாக உயரம் தாண்டக்கூடியவராக இருப்பார்கள். எனவே அதற்கு சாதனம் ஆன்மீக பயிற்சியாகும். இரண்டாவது சாப்பாடு போன்றவற்றில் பத்தியத்தை கொண்டுவருவது. புத்தியின் மூலமாக எந்த அசுத்த பொருள்களையும் சுவீகாரம் செய்யக்கூடாது. அதாவது தாரணை செய்வது, இதற்கான பத்தியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். வறுத்த பொருள், பொரித்த பொருளை எடுத்துக்கொள்ளாதீர்கள் என்று கேட்டீட்களல்லவா? இரண்டாவது வீணாக்காதீர்கள். ஏன் வீணாக்குகின்றீர்கள்? எந்த பொருள் எவ்வளவு மதிப்பானது என்பது தெரியவில்லையென்றால் அதனை அப்படி பயன்படுத்தவில்லையென்றால் அதனை வீணடிக்கின்றீர்கள் என்று தானே சொல்ல முடியும். பாப்தாதா மூலமாக சங்கமயுகத்தில் அனைத்து கஜானாக்களும் கிடைத்துள்ளன. சங்கமயுகத்தின் ஒவ்வொரு வினாடியும் கோடி மடங்கு மதிப்பானது. ஒரு வினாடியைக் கூட தன்னுடைய சேவைக்காக, பிறரது சேவைக்காக கோடிக்கணக்கில் மதிப்பானதை செலவு செய்யவில்லையென்றால், அதனைக்கூட வீணடிக்கின்றீர்கள் என்று அர்த்தம். அதாவது எப்படி மதிப்போ? அப்படி சேமிக்கவில்லை. ஒவ்வொரு வினாடியும் கோடி மடங்கு வரதானம் என்பது சங்கமயுகத்தின் சமயத்திற்கான வரதானமாகும். அப்படிப்பட்ட வரதானத்தை தனக்காகவும் சேமிக்கவில்லை, பிறருக்காகவும் தானம்

செய்யவில்லையென்றால், அது வீணடிப்பதுதானே! எந்த பாவமும் செய்யவில்லை, எந்த தவறும் செய்யவில்லை என்று நினைக்க வேண்டாம், ஆனால் சமயத்தின் லாபத்தை அடையவில்லை என்றாலும் அது வீண்தானே? கிடைத்த வரதானத்தை தானும் அடையவில்லை, பிறரையும் அடையச் செய்யவில்லை என்றால் இதனையும் வீணானது என்றுதானே சொல்ல முடியும். அதே போன்று எண்ணங்கள் என்பது ஒரு கஜானா, ஞானம் கூட ஒரு கஜானா, ஸ்தூலமான செல்வம் கூட ஈஸ்வரனுக்கு என்று அர்ப்பணம் செய்த பிறகு ஒவ்வொரு பைசாவும் ஒவ்வொரு ரத்தினத்திற்குச் சமமாகும். இந்த அனைத்து கஜானாக்களையும் தனக்காகவும் சேவைக்காகவும் காரியத்தில் பயன்படுத்தவில்லையென்றால், வீணடிக்கின்றீர்கள் என்று தானே சொல்ல முடியும். ஒவ்வொரு வினாடியும் சுய நன்மைக்காக, உலக நன்மைக்ககாக இருக்க வேண்டும். அப்படி அனைத்து கஜானாக்களையும் பாபா எதற்காகக் கொடுத்தாரோ அதனை அதற்காகவே பயன்படுத்த வேண்டும். நல்லதும் செய்யவில்லை, கெட்டதும் செய்யவில்லை என்று சில குழந்தைகள் கூறுகின்றார்கள் அது எந்த கணக்கில் செல்லும்? மதிப்பு கொடுக்காமல் இருப்பதுக்கூட வீணான கணக்கில்தானே செல்லும். இந்த காரணத்தினால் முயற்சி தீவிரமாவதில்லை, இதனால் நம்பர் ஏற்படுகின்றது. நம்பர்வார் ஆவதற்கான காரணம் என்னவென்று இப்பொழுது புரிந்ததா? சுமை, மற்றும் வீணானது தான். இந்த இரண்டு விஷயங்களையும் சமாப்தி செய்தீர்களென்றால், முதல் வம்சத்தில் வந்துவிடுவீர்கள். இல்லையென்றால் எடை அதிகமுள்ளவர்கள் பிறகு எதிர்பார்த்திருக்க வேண்டியிருக்கும் முதல் ராஜ்யத்திற்குப் பதிலாக இரண்டாவது ராஜ்யத்தில் வந்துவிடுவீர்கள். எதிர்பார்த்திருப்பதை விரும்புகின்றீர்களா? சீட்டையடைய விரும்புகின்றீர்களா? இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? டபுள் லைட்டாகி விடுங்கள். நல்லது.

அப்படி சதா பரிஸ்தா சமான் இலோசாக இருப்பவர்களுக்கு, ஒவ்வொரு கஜானாவையும் தனக்காகவும் பிறருக்காகவும் சேவையில் ஈடுபடுத்தக்கூடிய, சதா பாபாவினுடைய உதவியை அனுபவம் செய்யக்கூடிய, சகஜயோகி வாழ்க்கையை வாழக்கூடிய அப்படிப்பட்ட தீவிர முயற்சியாளர் குழந்தைகளுக்கு, பாப்தாதாவினுடைய அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே!

தாதி தீதீகளுடன்:

மகாரதி என்றாலே சுமையற்றவர்கள். அப்படிப்பட்ட மகாரதிகள் பறக்கும் தேவதைக்கு சமமாகத் தென்படுவார்கள். இவர்கள் தான் ஞான தேவதைகள், ஞானம் மற்றும் விஞ்ஞானம் என்ற இரண்டு சிறகுகள் உடையவர்கள். அவர்களின் இருப்பிடம் பரிஸ்தான் ஆகும். பரிஸ்தான் என்று எதற்கு சொல்லப்படுகின்றது. சொர்க்கத்தை பரிஸ்தான் என்று சொல்கின்றோம், ஆனால் இப்பொழுது இந்த ஸ்தூலமான இடத்திலிருந்து விடுபட்ட பரிஸ்தான் (சொர்க்கம்) எது? மனம் என்ற சிம்மாசனம் ஆகும். அனைத்திலும் மிகப்பெரியது மனம் என்ற சிம்மாசனம், எனவே மனம் என்ற சிம்மாசனத்தில் அமருவது என்றாலே பரிஸ்தானில் வாழும் தேவதைகள். இவர்களைத்தான் பரிஸ்தானில் வாழும் தேவதைகள் என்று சொல்லப்படுகின்றது. இதுதான் சதாகால இருப்பிடம் அல்லவா? ஆசனத்திலிருந்து கீழே வருவதில்லை. ஆசனத்திலிருந்து கீழே வருவதென்றாலே பாபாவிற்கு எதிரில் இருப்பதற்குப் பதிலாக ஒதுங்கிவிடுவது. எப்படி பாபா சதா குழந்தைகளுக்கு எதிரில் இருக்கின்றார், அப்படி குழந்தைகளும் பாபாவிற்கு எதிரில் இருக்க வேண்டும். பாபாவிற்கு எதிரில் யார் இருப்பார்கள்? குழந்தைகள். பக்தர்கள் ஒதுங்கியுள்ளார்கள், குழந்தைகள் சதா எதிரில் இருக்கின்றார்கள். எனவே பரிஸ்தானில் வாழும் தேவதை என்று இவர்களைத்தான் சொல்லப்படுகின்றது. தேவதைகளுக்குக் கூட குழு இருக்கின்றது சேர்ந்துதான் பறக்கின்றார்கள். எங்கு வேண்டுமோ அங்கு பறந்து அவர்களால் செல்ல முடியும். எந்த ஆதாரமும் அவசியமில்லை. அப்படிப்பட்ட தேவதைகள் எங்கு எப்பொழுது வேண்டுமோ பறந்து செல்ல முடிகின்றதா? இவர்களைத்தான் மகாரதி என்று சொல்லப்படுகின்றது. மகாரதிகளில் மனநிலைக்கான சித்திரம் கூட உள்ளது. ஒவ்வொரு கோபியர்களுடனும் கோபி வல்லபரைக் காட்டியுள்ளார்கள். ஒவ்வொரு கோபிகளின் வாயிலிருந்தும் என்னுடைய கோபிவல்லபர் என்ற வார்த்தை வெளிப்படுகின்றது. அப்படி உடன் இருக்கும் சித்திரம் என்பது உங்களின் ஸ்திதிக்கான சித்திரம் ஆகும். ஒருவர் மற்றொருவரிடமிருந்து பிரிவது இல்லை. சதா உடன் இருப்பவர்கள். பாபா மீது ஒவ்வொருவருக்கும் முழுமையான அதிகாரம் இருக்கின்றது. யார் பாபாவை சதா காலத்திற்கும் தன்னுடைய துணைவனாக ஆக்கியுள்ளார்களோ அப்படிப்பட்ட அதிகாரிகளின் சித்திரம் தான் அவைகள். இது மகாரதிகளின் ஸ்திதிக்கான சித்திரம் ஆகும். மகாரதி என்றாலே சதா உடன் இருப்பவர்கள். சதா உடன் இருப்பவரின் சித்திரம்தான் இது. மகாரதிகளைத் தவிர மற்ற ஆத்மாக்கள் சில நேரம் எதிரிலும் சில நேரம் ஒதுங்கியும் இருப்பார்கள். சதா உடன் இருப்பதற்கான அனுபவம் செய்ய முடியாது. சில நேரம் துணையை வைத்துக்கொள்வார்கள், சிலர் நேரம் விட்டுவிடுவார்கள். எனவே அவர்களுக்கு நினைவுச் சின்னம் இருப்பதில்லை. நல்லது.

மகாரதிகளின் முயற்சியில் எந்தவொரு புதுமையான கண்டுபிடிப்பு வெளிப்பட்டாலும் அது மிகத் தெளிவானதாக இருக்கும். மனதில் தோன்றியதும் நடந்துவிடும். இதனைத்தான் தெளிவானது என்று சொல்லப்படுகின்றது. அப்படிப்பட்ட கண்டுபிடிப்புகளை உருவாக்குங்கள்! அதில் சாதனா குறைவாகவும் பலன் அதிகமாகவும் இருக்க வேண்டும். துக்கம் குறைவாக இருக்க வேண்டும் மேலும் எந்த காரியம் செய்கின்றீர்களோ அதில் வெற்றி அதிகமாக இருக்க வேண்டும் என்பது தற்சமய அறிவியல் கண்டுபிடிப்பாக உள்ளது. அதுபோல முயற்சியின் சாதானங்களை தன்னுடைய அனுபவத்தின் ஆதாரத்தில் அப்படி நீங்கள் செட் செய்யவும், எப்படி அறிவியல் சாதனங்கள் ஒரு வினாடியில் விதியை அடைகின்றன, அதுபோல அமைதியின் சாதனங்கள் வினாடியில் விதியை பிராப்தியாக அடைய வேண்டும். எப்படி அறிவியல் ஆய்வுசாலையில் அனைத்து கண்டுபிடிப்புகளையும் உபயோகப்படுத்திப் பார்க்கின்றார்கள், அப்படி குழந்தைகள் கூட தனக்குள் கொண்டு வருகின்றீர்கள். உபயோகத்தில் கொண்டுவரக்கூடிய சாதனம் என்றாலே அனுபவத்தில் கொண்டுவருவதாகும். அதிலும் முயற்சி குறைவாகவும், அனுபவம் அதிகமாக கிடைப்பது போன்ற ஏதாவது சகஜ சாதனம் கூறவும். அப்படி நாலாபுறமும் இருக்கக்கூடிய சூழ்நிலை, நாலாபுறமும் இருக்கக்கூடிய பலஹீன ஆத்மாக்களின் செய்தியின் அனுசாரமாக சாதனங்களை வெளிப்படுத்தவும். எப்படி நோயோ அப்படி மருந்துக்களைக் கண்டுபிடிக்கின்றார்கள். இப்பொழுது மகாரதிகள் கூட அப்படிப்பட்ட சாதனங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். இந்த குழுவை பரிசோதனை குழு என்று பாபா கூறுகின்றார். இப்பொழுது புரிந்ததா? மகாரதிகள் என்ன செய்ய வேண்டும் என்று. பிறகு உங்கள் காரியங்கள் கூட இலேசாகிவிடும். எப்படி ஆரம்பத்தில் மௌன விரதம் வைக்கப்பட்டது, அதில் அனைவரும் சுதந்திரமாக இருந்தார்கள். நேரம் சேமிப்பானது. அனைவருடைய நேரமும் சேமிப்பாவது போல் ஏதாவது சாதனம் கண்டுபிடிக்கவும். மனம் மௌனமாக இருக்க வேண்டும். வீணான எண்ணங்கள் வரக்கூடாது. இதுதான் மனதின் மௌனம். எப்படி வாயிலிருந்து சப்தம் வரவில்லையோ? அப்படி மனதிலும் வீணான எண்ணங்கள் வரக்கூடாது. இதுதான் மனதின் மௌனம். அப்படியிருந்தால் வீணானது முடிந்துபோய்விடும். நேரம் அனைத்தும் சேமிப்பாகிவிடும். பிறகு சேவை ஆரம்பம் ஆகும். மனதின் மௌனத்தின் மூலமாக புதிய கண்டுபிடிப்புக்கள் வெளியாகும். எப்படி ஆரம்ப காலத்தில் மௌனத்தின் மூலமாக புதிய ஜொலிப்பு வெளிப்பட்டது. அதுபோல மனதின் மௌனத்தின் மூலமும் புதிய ஜொலிப்பு வெளிப்படும். இப்பொழுது அதற்கு நிமித்தமாக போவது யார்? மகாரதி குழு தானே? பாபாவிடமிருந்து என்ன சக்தி கிடைக்கின்றதோ? அதனை உபயோகபடுத்தும் முறையைக் கொண்டுவாருங்கள். இந்த வழிமுறை அனைவருக்கும் வருவதில்லை. வர்ணணை செய்ய

வருகின்றது, ஆனால் அந்த சாதனத்தினால் பலனையடையவது என்ற உபயோகிக்கும் முறை அனைவருக்கும் வருவதில்லை. எனவேதான் யோகம் செய்ய முடிவதில்லை. சகஜமாக விதியை பிராப்தியாக அடைவது போலதிட்டத்தை உருவாக்கவும். நல்லது.

வரதானம்:

அலைந்து திரியும், தாகத்தில், பசியில் இருக்கும் ஆத்மாக்களுக்கு, தாகத்தைப் போக்கக்4டிய அனைத்து கஜானாக்கள் நிறைந்த ஆத்மா ஆகுங்கள்.

எப்படி அலைகளில் அடித்து செல்லும், மூழ்கும் ஆத்மா, உதவியைத் தேடுகின்றார்கள். அப்படி துக்கத்தின் அலைகள் வரட்டும் பிறகு பாருங்கள் அநேக துக்கம் அசாந்தியில் இருக்கும் யாசகம் செய்யும் ஆத்மாக்கள் துடித்துக்கெண்டு உங்கள் முன் வருவார்கள். அப்படிப்பட்ட தாகத்தில் இருக்கும் ஆத்மாக்கள் தாகத்தைப் போக்குவதற்காக தன்னை அதீந்திரிய சுகம் மற்றும் அனைத்து சக்திகளினால் அனைத்து கஜானாவினால் நிறைத்துவிடவும். அனைத்து கஜானாக்களும் அவ்வளவு நிறைந்திருக்க வேண்டும் அதன் மூலம் தன்னுடைய ஸ்திதியும் நிலையாக இருக்க வேண்டும், மற்றவரையும் சம்பன்னம் ஆக்க வேண்டும்.

சுலோகன்:

நன்மை ஏற்படும் பாவனையுடன் அறிவுரை அளித்தீர்கள் என்றால் அது மனதளவு அழமாகச் செல்லும்.

டபுள் லைட் ஸ்திதியின் அனுபவம்:

நான் டிரஸ்டியாக உள்ளேன். இந்த உடல், மனம், பொருள் அனைத்தும் பரமாத்தாவுடைய இரவல் பொருள். இந்த நினைவின் மூலம் டபுள் லைட் பரிஸ்தாவாகி, பரிஸ்தா ஸ்திதியினுடைய அனுபவம் செய்யவும். உங்களுடையது தைரியமான எண்ணம் என்றால் உதவி பாபாவினுடையது. உள்ளம் தூய்மையாக இருந்தால் தலைவன் அங்கு ஆஜராகிவிடுவார்.

ஓம் சாந்தி

12.01.1979 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

"வரமளிக்கும் தந்தை மூலமாக கிடைத்திருக்கும் குஷியின் பொக்கிஷக் களஞ்சியம் "

பாப்தாதா குழந்தைகளின் இராஜ்ஜிய பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். முழு உலகிலுள்ள அனைத்து ஆத்மாக்களிலும் நீங்கள் எவ்வளவு உயர்ந்த ஆத்மாக்கள். எத்தனை பொக்கிஷங்களினால் நிரம்பிய ஆத்மாக்களாக இருக்கிறீர்கள். இந்த நேரத்து நிரம்பிய நிலையின் வர்ணனையாக உயர்ந்த ஆத்மாக்கள் உங்களின் காரணமாக ஸ்தானத்தின் மகிமை எப்பொழுதுமே இருந்தே வந்திருக்கிறது. இன்று வரையிலும் கூட பாரத பூமியின் மகிமை வெளிநாடுகளிலும் மகான் ஆக இருக்கிறது. அப்படி ஸ்தானத்தின் மகத்துவம் உயர்ந்த மகான் ஆத்மாக்கள் உங்கள் காரணமாக இருக்கிறது. இன்று வரையிலும் கூட ஆன்மீக பொக்கிஷங்களுக்காக அனைவரின் பார்வை பாரதத்தின் பக்கம் தான் செல்கிறது. ஸ்தூல செல்வத்தில் ஏழை நாடாகக் கருதப்படுகிறது. ஆனால் ஆன்மீக பொக்கிஷங்களில் அழியாத சுகம் மற்றும் சாந்தி, சக்தி இந்த பொக்கிஷங்களில் பாரதம் தான் அனைத்து தேசங்களையும் விட செல்வந்த நாடாக மகிமை செய்யப்படுகிறது. அப்படி உங்களுடைய இந்த சங்கமயுகத்தின் சம்பன்ன (முழுமை) நிலையின் காரணமாகத் தான் ஸ்தானத்திற்கு அதாவது பாரத தேசத்திற்கு மகிமை இருக்கிறது. அந்த அளவு பொக்கிஷங்களினால் நிரம்பியவர் ஆகிறீர்கள். அது அரைக்கல்பத்திற்கு உங்கள் வாழ்க்கையோடு பிராப்தியாக இருந்து வருகிறது. அந்த அளவு பொக்கிஷத்தை சேமித்து விடுகிறீர்கள், அந்த சேமிப்பு மூலமாக அனேக ஜென்மங்கள் சாப்பிட்டுக் கொண்டே இருக்கிறீர்கள். அந்த மாதிரி யாரும் ஒருபொழுதும் முழுக் கல்பத்திலும் ஆக முடியாது. சங்கமயுகம் அனைத்து யுகங்களில் மிகச் சிறிய யுகமாக இருக்கும் காரணத்தினால் இதற்கு மிகக் குறைந்த காலம் தான் ஆயுளாக இருக்கிறது. எவ்வளவு சின்னஞ் சிறிய வாழ்க்கை, சின்னஞ் சிறிய யுகம் அந்த அளவு வருமானம் அனைத்து யுகங்களையும் விட உயர்ந்ததாக இருக்கிறது. என்னென்ன பொக்கிஷங்கள் கிடைத்திருக்கிறது, யார் மூலமாக கிடைத்திருக்கிறது மேலும் அது என்னோடு எவ்வளவு காலங்கள் வரை இருக்கும்? என்று எப்பொழுதும் உங்களுடைய பொக்கிஷங்களை நினைவில் வைக்கிறீர்களா? தந்தையோ பொக்கிஷத்தை அனைவருக்கும் ஒரே சமமாகக் கொடுத்திருக்கிறார். சிலருக்கு ஒரு லட்சம் மற்றும் வேறு சிலருக்கு ஆயிரம் என்று கொடுக்கவில்லை. அனைத்து

குழந்தைகளுக்கும் எல்லைக்கப்பாற்பட்ட குறைவில்லா பொக்கிஷம் தந்தை மூலமாக கிடைத்திருக்கிறது. அந்த மாதிரி குறைவில்லா பொக்கிஷத்தினால் தன்னை எப்பொழுதும் நிரம்பிய, திருப்தியான ஆத்மா என்று நினைக்கிறீர்களா? திருப்தியான ஆத்மாவிற்கு எப்பொழுதும் தந்தை மற்றும் பொக்கிஷம் தான் எதிரில் இருக்கும். எப்பொழுதும் இதே போதையில் ஆடிக் கொண்டே இருக்கிறார்கள்.

அனைத்தையும் விட மிகப் பெரிய பொக்கிஷம் எதற்காக அனேக ஆத்மாக்கள் அனேக விதமான சாதனங்களைக் கடைபிடித்தும் வஞ்சிக்கப்பட்டு இருந்து விடுகிறார்கள். அது எந்த பொக்கிஷம் உங்களுக்கு கிடைத்து விட்டது? இன்று உலகத்தில் எந்த பொக்கிஷத்தின் இச்சை வைத்திருக்கிறார்கள், அந்த இச்சையின் காரணமாக ஆத்மாக்கள் பல இடங்களில் அலைந்து கொண்டிருக்கிறார்கள். உங்கள் அனைவரிடமும் இப்பொழுதிற்காக மட்டுமின்றி அனேக ஜென்மங்களுக்காகவும் சேமிப்பாக இருக்கிறது. அப்படி எந்தப் பொக்கிஷம் கிடைத்திருக்கிறது? அனைத்தையும் விட மிகப் பெரிய பொக்கிஷம் குஷியின் பொக்கிஷம் ஆகும். இந்தக் குஷி கிடைக்க வேண்டும் என்று தான் மக்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் நீங்கள் அனைவரும் எப்பொழுதும் குஷியில் ஆடுபவர்களாக இருக்கிறீர்கள். உங்கள் அனைவரின் நினைவுச் சின்னத்தில் கூட குஷியின் போஸ் காண்பித்திருக்கிறார்கள். தன்னுடைய படம் நினைவில் இருக்கிறது தான் இல்லையா? அமிர்தவேளையில் தொடங்கி இந்த குஷியின் பொக்கிஷத்தை உபயோகியுங்கள், யோசித்துப் பாருங்கள் மேலும் தன்னோடு தானே பேசுங்கள். கண்கள் திறந்தவுடனேயே யார் எதிரில் வருகிறார்? முதன் முதலில் எண்ணத்தில் யாருடைய சந்திப்பு நடக்கிறது? உலகைப் படைப்பவர், அனைத்து பொக்கிஷங்களின் வள்ளல், அனைத்து வரதானங்களின் வள்ளலான விதையோடு சந்திப்பு நடக்கிறது. அந்த விதையில் தான் முழு மரமும் நிரம்பியிருக்கிறது. அனைத்து ஆத்மாக்களும் யாசிப்பவர்களாகி தந்தையின் ஒரு நொடி காட்சியை பார்ப்பதற்கான இச்சையோடு எவ்வளவு கடின மார்க்கத்தைக் கடைபிடிக்கிறார்கள். மேலும் உயர்ந்த ஆத்மாக்கள் நீங்கள் அவரோடு அனைத்து உறவுகள் அடிப்படையில் சந்திப்பதின் அனுபவங்களின் உயர்ந்த பொக்கிஷத்தின் அதிகாரியாகியிருக்கிறீர்கள். அப்படி அமிர்தவேளையில் அனைத்து உறவுகளினால் தந்தையோடு சந்திப்பு செய்வது தான் அனைத்தையும் விட குஷிக்கான முதல் விஷயம் ஆகும். உலகினர் யாசிப்பவர்கள், நீங்களோ குழந்தைகள், இதை விட பெரிய குஷி வேறு ஏதாவது இருக்க முடியுமா என்ன? அப்படி அமிர்தவேளையில் இருந்து இந்த குஷியின் பொக்கிஷத்தை உபயோகப்படுத்துங்கள். உபயோகப்படுத்துவது தான்

பொக்கிஷங்களின் சாவி ஆகும்.

இன்னுமொரு குஷியின் பொக்கிஷம் - நீங்கள் அந்த அளவு காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட உயர்ந்த ஆத்மாக்கள், சுயம் பகவான் உங்களுக்கு கற்பிப்பதற்காக பரந்தாமத்தில் இருந்து வருகிறார். லண்டன், அமெரிக்காவிலிருந்து வருவதில்லை, இந்த உலகத்தையும் தாண்டி எதுவரை அறிவியலைச் சேர்ந்தவர்கள் கனவில் கூட சென்றடைய முடியாதோ அந்த மாதிரி பரந்தாமத்திலிருந்து பிரத்யேகமாக உங்களுக்கு கற்பிப்பதற்காக வருகிறார். மேலும் கற்பிப்பதற்கு கட்டணம் வாங்குவதில்லை. இன்னும் படிப்பின் பலனான சொர்க்க சுயராஜ்ஜியத்தை அவர் எடுத்துக் கொள்ளாமல் உங்களுக்குக் கொடுத்து விடுகிறார். அப்படி இதை விட பெரிய குஷி வேறு என்ன இருக்க முடியும்? இந்த நினைவினால் பொக்கிஷங்களை உபயோகப்படுத்துங்கள், இன்னும் மேலே செல்லுங்கள்.

காரியம் செய்து கொண்டே கர்மயோகி ஆகி தனது பங்கைச் செய்பவர்கள் அதாவது எப்பொழுதும் தந்தையுடன் இருந்து கொண்டே காரியம் செய்பவர்கள். எந்த நேரமும் எந்தக் காரியம் செய்து கொண்டிருந்தாலும் கர்மயோகியாக இருப்பவர். உலகியல் காரியங்களானாலும், ஆன்மீகக் காரியங்களானாலும் சர்வ சக்திவான் உங்களுடைய துணைவனாக அதாவது நண்பனாக ஆகி ஒவ்வொரு நேரமும் துணையைக் கொடுக்கிறார். அந்த மாதிரியான நண்பன் பிறகு ஒருபொழுதும் கிடைக்க முடியாது. சிலர் நல்ல நட்பை வைத்திருக்கிறார்கள், சில நேரம் இணைந்த ஜோடியாகவும் இருக்கிறார்கள். அந்த மாதிரி இணைந்த சொரூபத்தில் இருக்கும் விசித்திரமான ஜோடி ரூபத்தில் உங்களுக்கு எப்பொழுதுமே அனைத்து சுமைகளையும் என்னிடம் கொடுத்து விடு மேலும் நீ எப்பொழுதுமே லேசாக இரு என்று கூறுகிறார். எங்காவது ஏதாவது கடினமான காரியம் வந்தது என்றால் அதை என்னிடம் அர்ப்பணம் செய்து விட்டாய் என்றால் கடினம் சுலபம் ஆகிவிடும். அந்த மாதிரி கர்மயோகத்தின் பங்கில் எப்பொழுதும் துணையாக இருப்பது என்ற பொக்கிஷத்தை மற்றும் எப்பொழுதும் துணையாக இருக்கும் குஷியை உபயோகம் செய்யுங்கள். இன்னும் மேலே செல்லுங்கள்.

எப்பொழுது காரியத்தை செய்து முடித்து விடுகிறீர்கள் என்றால், அனைத்தையும் விட மிகப் பெரிய பொழுது போக்கிற்கான சாதனமும் பிராப்தியாகி இருக்கிறது. ஒருவேளை உங்களுக்கு சுற்றி வர வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது மற்றும் பார்க்க வேண்டும்

என்ற ஆர்வம் இருக்கிறது, படிப்பதற்கான ஆர்வம் இருக்கிறது, அலங்காரம் செய்வதற்கான ஆர்வம் இருக்கிறது, நடனமாடுவதற்கான ஆர்வம் இருக்கிறது, ஆன்மீக உரையாடல் செய்வதற்கான ஆர்வம் இருக்கிறது. அப்படி என்னவெல்லாம் ஆர்வம் இருக்கிறதோ அந்த அனைத்து பொழுது போக்கிற்கான சாதனம் உங்கள் கூடவே இருக்கிறது. பார்க்க விரும்புகிறீர்கள் என்றால் சொர்க்கத்தைப் பாருங்கள் - சங்கமயுகத்தின் உயர்ந்த தன்மையைப் பாருங்கள். உங்களுடைய மற்றும் தந்தையின் காரியத்தின் ஆன்மீகக் கதை அடங்கிய நாடகத்தைப் பாருங்கள். சுற்றி வர விரும்புகிறீர்கள் என்றால், மூன்று உலகங்களையும் சுற்றி வாருங்கள், அலங்காரம் செய்ய விரும்புகிறீர்கள் என்றால், ஒவ்வொரு குணத்தின் விஸ்தாரத்தினால் தன்னை அலங்கரித்துக் கொள்ளுங்கள். நாடகம் பார்க்க விரும்புகிறீர்கள் என்றால், 5000 வருடங்களின் நாடகத்தைப் பாருங்கள், சரித்திரம் படிக்க விரும்புகிறீர்கள் என்றால், தன்னுடைய 84 பிறவிகளின் சரித்திரத்தைப் படியுங்கள். ஆன்மீக உரையாடல் செய்ய விரும்புகிறீர்கள் என்றால், ஆத்மாவாகி ஆத்மாக்களைப் படைப்பவரோடு ஆன்மீக உரையாடல் செய்யுங்கள். வேறு என்ன வேண்டும்? இந்த அனைத்து சாதனங்கள் மூலம் எப்பொழுதும் தன்னை குஷியாக வைத்துக் கொள்ளுங்கள் அதாவது பொக்கிஷங்களை உபயோகம் செய்யுங்கள்.

உணவு தயாரிக்கிறீர்கள், உணவு தயாரிக்கும் நேரத்தில் முதலில் போக் வைக்க வேண்டும் அதாவது மிகவும் அன்பிற்குரிய தந்தைக்கு சுவீகாரம் செய்விக்க வேண்டும் - இந்த நினைவோடு யாருக்கு பரிமாற வேண்டும் என்ற நினைவோடு உணவை தயாரியுங்கள். தற்சமயத்து உலகத்தில் ஒருவேளை ஏதாவது பிரதம மந்திரி மற்றும் ஜனாதிபதி உணவருந்துவதற்காக உங்களிடம் வருகிறார் என்றால் எவ்வளவு குஷி ஏற்படுகிறது ஆனால் தந்தையின் எதிரில் இவர்கள் அனைவரும் என்னவாக இருக்கிறார்கள்? அப்படி எப்பொழுதும் தந்தை உங்களுடன் சேர்ந்து உணவு அருந்துகிறார். பக்தர்கள் பாவம் அடிக்கடி மணி அடித்து அடித்து களைப்படைந்து விடுகிறார்கள், கூவி அழைத்து அழைத்து மறந்தும் போய் விடுகிறார்கள். ஆனால் எப்பொழுதும் உடன் இருப்போம் என்று குழந்தைகளுக்கு தந்தையின் உறுதி மொழி இருக்கிறது. உன்னோடு தான் அருந்துவேன், உன்னோடு தான் அமர்ந்திருப்பேன் என்ற இதை விட பெரிய குஷி வேறு என்ன வேண்டும். அப்படி உணவு அருந்தும் நேரத்திலும் உன்னோடு தான் அருந்துவேன் என்ற இந்த சுலோகனை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அந்த மாதிரி குஷியின் பொக்கிஷத்தை உபயோகம் செய்யுங்கள் மற்றும் இன்னும் மேலே செல்லுங்கள்.

இப்பொழுது நாளின் இறுதி நேரம் வந்து விட்டது அதாவது இரவின் நேரம் வந்து விட்டது. இப்பொழுது இரவில் என்ன செய்வீர்கள்? தூங்கச் செல்வதற்கு முன்பு முழு நாள் செய்தியின் பரிமாற்றத்தை இணைந்த ரூபத்தில் செய்ய விரும்பினாலும், அல்லது தந்தையின் ரூபத்தில் செய்ய விரும்பினாலும் செய்யுங்கள். ஒரு நாளின் செய்தியைக் கொடுங்கள் மற்றும் மறுநாளுக்கான உயர்ந்த எண்ணம் மற்றும் செய்ய வேண்டிய காரியத்தின் மனத்தூண்டுதலைப் பெற்றுக் கொள்ளுங்கள். அனைத்து செய்திகளையும் பரிமாறிக் கொள்வது என்றால் மனதால் லேசாக ஆகிவிடுவது. எப்படி இரவில் மெல்லிய ஆடை அணிந்து தூங்குகிறீர்கள் தான் இல்லையா. அதே போல் புத்தியை லேசாக ஆக்குவது என்றால் லேசான ஆடை அணிவது. அந்த மாதிரி தயாராகி உடன் தூங்கிவிடுங்கள், தனியாகத் தூங்காதீர்கள். தனியாக இருந்தீர்கள் என்றால் மாயா வாய்ப்பை எடுக்கும். எனவே எப்பொழுதும் உடன் இருங்கள். தனியாக இருப்பதினால் பயமும் ஏற்படும், சேர்ந்திருப்பதினால் பயமற்றவராக ஆகிவிடுவீர்கள். நீங்கள் பயமற்று இருந்தீர்கள் என்றால் மாயா பயப்படும். அப்படி துணையின் குஷியின் பொக்கிஷத்தை முழு இரவிலும் உபயோகப்படுத்துங்கள். இப்பொழுது கூறுங்கள், முழு நாளில் உயர்ந்த குஷியின் பொக்கிஷம் கிடைத்திருந்தபோதிலும் உயர்ந்த ஆத்மா எப்பொழுதாவது சோர்வடைய முடியுமா? அல்லது மற்ற ஏதாவது மனமகிழ்ச்சிக்கான பொழுது போக்கின் பக்கம் மற்றும் அற்பகாலத்து பொக்கிஷங்களின் பக்கம் கவர்ந்திழுக்கப்பட முடியுமா? அந்த மாதிரி உயர்ந்த அதாவது நிரம்பிய ஆத்மாக்கள் ஆவீர்கள் நீங்கள். உங்களுடைய பெயர் கூறினாலே இப்பொழுது அனேக பக்தர்கள் அற்ப காலத்தின் குஷியில் வந்து விடுகிறார்கள். உங்களுடைய ஜட விக்கிரகங்களைப் பார்த்து குஷியில் ஆட ஆரம்பிக்கிறார்கள். அந்த மாதிரி குஷி நிறைந்தவர்கள் நீங்கள் ஆவீர்கள். பொக்கிஷங்கள் அதிகமாகக் கிடைத்திருக்கின்றன, இப்பொழுது அதை உபயோகிக்க மட்டும் செய்யுங்கள் அதாவது சாவியைப் போடுங்கள். சாவி இருந்த போதிலும் தேவையான நேரத்தில் கிடைப்பதில்லை, தேவையான நேரத்தில் தொலைந்து விடுகிறது. எனவே எப்பொழுதும் எதிரில் வையுங்கள் அதாவது எப்பொழுதும் நினைவில் வையுங்கள். அடிக்கடி தன்னுடைய நினைவு சொரூபத்தை புத்துணர்வு பெற வையுங்கள். என்ன பொக்கிஷம் கிடைத்திருக்கிறது, மேலும் அதற்கான சாவி என்ன என்று சிந்தியுங்கள். ஒவ்வொரு காரியத்திலும் எப்படி மேலே கூறினோமோ அதே போல் நடைமுறையில் கொண்டு வாருங்கள் அதாவது நினைவை சொரூபத்தில் கொண்டு வாருங்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பிய ஆத்மாக்கள் ஒவ்வொரு காரியத்தில் தந்தையுடன் அனைத்து உறவுகளையும் வைத்துக் கொள்பவர்கள், எப்பொழுதும் தந்தையை தன்னுடைய துணைவனாக அனுபவம் செய்பவர்கள், எப்பொழுதும் மாயாவின் பயத்திலிருந்து பயமற்றவர்களாக இருப்பவர்கள், அந்த மாதிரி திருப்தியான ஆத்மாக்களுக்கு பொக்கிஷங்களின் அதிபதி ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

## பார்ட்டிகளுடன் சந்திப்பு (கர்நாடகா ஜோன்)

1) எப்பொழுதும் தன்னுடைய சென்ற கல்பத்து சம்பன்ன ஃபரிஷ்தா சொரூபம் எதிரில் இருக்கிறதா? சென்ற கல்பத்திலும் நான் தான் ஃபரிஷ்தாவாக இருந்தேன், மேலும் இப்பொழுதும் நான் தான் ஃபரிஷ்தாவாக இருக்கிறேன். அந்த மாதிரி அனுபவம் ஆகிறதா? ஃபரிஷ்தா என்றால் யாருக்கு ஒரு தந்தையுடன் அனைத்து ரிஷ்தாக்கள் (உறவுகள்), இருக்கிறதோ அதாவது சர்வ சம்மந்தம் இருக்கிறதோ அப்போது ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்று அனுபவம் ஆகிறதா? அல்லது மற்ற சம்மந்தங்களும் நினைவில் வருகிறதா? யாருக்கு அனைத்து சம்மந்தங்களும் ஒரு தந்தையுடன் இருக்குமோ அவருக்கு மற்ற அனைத்து சம்மந்தங்களும் ஏதோ காரணமாக இருக்கிறது என்ற அனுபவம் ஆகும். அவர் எப்பொழுதும் குஷியில் ஆடிக் கொண்டே இருப்பவராக இருப்பார். ஒருபொழுதும் களைப்பை அனுபவம் செய்ய மாட்டார், தந்தைக்குச் சமமான நிலை உள்ளவர் எப்பொழுதும் களைப்பற்றவராக இருப்பார், களைப்படைய மாட்டார். எப்பொழுதும் தந்தை மற்றும் சேவை இதே ஈடுபாட்டில் சுலபமாக மூழ்கியிருப்பார். அப்படி நீங்கள் ஒவ்வொருவரும் விக்ன விநாஷக்காக (தடைகளை அழிப்பவராக) இருக்கிறீர்களா? அல்லது முழு ஈடுபாடு மற்றும் தடை இரண்டும் சேர்ந்தே இருக்கிறதா? தடைகள் வருவதினால் நின்று போகுபவரோ இல்லையே? ஒவ்வொரு கல்பத்திலும் தடை வந்தது மேலும் ஒவ்வொரு கல்பத்திலும் தடையை அழித்தவராக ஆனீர்கள். யார் ஒவ்வொரு கல்பத்தின் அனுபவியாக இருக்கிறாரோ அதை அவர் மீண்டும் செய்வதில் என்ன கடினம் இருக்கும். நான் ஒவ்வொரு கல்பத்திலும் வெற்றி அடைந்தவன் என்ற இந்த நினைவு எப்பொழுதுமே இருக்கட்டும். அனேக தடவை செய்திருக்கிறீர்கள், இப்பொழுது அதை மீண்டும் செய்ய வேண்டும் என்றால் சகஜயோகியாகஇருக்க வேண்டும் இல்லையா. என்ன செய்வது, எப்படிச் செய்வது என்ற இந்த அனைத்து புகார்களிலிருந்தும் விடுபட்டவர். அந்த மாதிரி ஆத்மாக்களுக்கு புகார்கள் சுலபமாக அழிந்து விடுகின்றன. சம்பன்னம் ஆவது என்றால் திருப்தியாக இருப்பது. திருப்தியில்லாமல் இருப்பதற்கான

காரணம் பிராப்தியின்மை. பிராப்தியின்மை தான் திருப்தியின்மைக்கு பிறவி கொடுக்கிறது. இல்லையென்ற பொருள் ஒன்றும் இல்லை என்ற இது தேவதைகளின் மகிமை இல்லை, பிராமணர்கள் உங்களுடைய மகிமை ஆகும். மாஸ்டர் சர்வ சக்திவான் என்பதின் அர்த்தமே சம்பன்ன சொரூபம். எப்படி லட்சியம் இருக்குமோ அப்படி லட்சணமும் இருக்கும். லட்சியம் ஒன்றாக இருந்து மற்றும் லட்சணம் இன்னொன்றாக இருக்கிறது, லட்சியம் சம்பூர்ணம் ஆவதற்கானது மேலும் தாரணை அதாவது நடைமுறை ரூபத்தில் குறை இருக்கிறது என்றால் வேற்றுமை ஆனது தான் இல்லையா? நல்லது - அனைவரும் எப்பொழுதுமே சிரித்துக் கொண்டே இருக்கிறீர்களா, அழுவது இல்லையே? அழுபவர்கள் தந்தையின் யுகள் -ஆக, ஆக முடியாது. என்ன செய்வது, விரும்புகிறேன் ஆனால் ஆக விட மாட்டேன் என்கிறார்கள், உதவி செய்யுங்கள், கிருபை செய்யுங்கள் என்ற இதுவும் அழுவது ஆகும். அந்த மாதிரி அழுபவர்களை தந்தை தன்னுடன் எப்படி அழைத்துச் செல்வார். உடன் செல்வதற்காக எப்படி தந்தையோ அந்த மாதிரி குழந்தை ஆகுங்கள், தந்தைக்குச் சமமாக ஆகுங்கள். என்ன காரியம் செய்தாலும் முதலில் இது தந்தைக்குச் சமமானதாக இருக்கிறதா என்று சோதனைசெய்யுங்கள். தந்தைக்குச் சமமானதாக இல்லை என்றால் துண்டித்து விடுங்கள். அதில் முன்னேறிச் செல்லாதீர்கள். எந்தவொரு காரியமும் ஒருவேளை உயர்ந்ததாக இல்லை சாதாரணமானதாக இருக்கிறது என்றால், அதை மாற்றம் செய்து உயர்ந்ததாக ஆக்குங்கள், இதன் மூலம் எப்பொழுதும் சம்பன்னமானவராக (முழுமை நிலை) அதாவது தந்தைக்குச் சமமானவராக ஆகிவிடுவீர்கள்.

2) அனேக ஆத்மாக்களின் ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கான சாதனம் சேவை ஆகும். அனைவரும் தந்தையின் உதவியாளர்கள் உலகிற்கு நன்மை செய்பவர்கள் என்று புரிந்து ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறீர்களா? நான் உலகிற்கு நன்மை செய்பவன் என்ற இந்த லட்சியம் எப்பொழுது இருக்கிறது என்றால், தீமை பயக்கும் காரியம் நடக்க முடியாது. எப்படி காரியம் இருக்கிறதோ அப்படி தன்னுடைய தாரணைகள் இருக்கும், ஒருவேளை காரியம் நினைவு இருக்கிறது என்றால் எப்பொழுதும் இரக்க மனமுடையவராக இருப்பீர்கள், எப்பொழுதும் மகாதானியாக இருப்பீர்கள். உலகிற்கு நன்மை செய்பவன் என்ற நினைவின் மூலம் தானும் ஒவ்வொரு அடியிலும் நன்மை பயக்கும் உள்உணர்வோடு நடந்து கொள்வீர்கள், மேலும் நடக்க வைப்பீர்கள். எப்பொழுது தனக்காக ஒவ்வொரு அடியும் நன்மை பயப்பதாக இருக்குமோ அப்பொழுது தான் உலகிற்கு நன்மை ஏற்பட முடியும். நிமித்த மாத்திரம் இந்தக் காரியத்தை செய்து கொண்டிருக்கிறேன் என்பது எப்பொழுதும் நினைவில் இருக்க வேண்டும். நான் மற்றும்

என்னுடையது என்ற உணர்வு முடிவடைந்து விட வேண்டும். நான் ஒரு கருவி என்பது நினைவிலிருக்க வேண்டும். அந்த மாதிரி எப்பொழுதும் சேவை செய்வதினால் தந்தையின் நினைவு இயல்பாகவே இருக்கும். எவ்வளவு சேவை செய்கிறீர்களோ அந்த அளவு உலகின் அனேக ஆத்மாக்கள் மூலமாக ஆசீர்வாதங்கள் கிடைக்கிறது. ஆசீர்வாதங்கள் கிடைக்கிறது. நல்லது.

வரதானம் :

ஒரு தந்தையை தன்னுடைய உலகமாக்கி எப்பொழுதும் ஒருவரின் ஈர்ப்பிலேயே இருக்கக்கூடிய கர்ம பந்தனத்திலிருந்து விடுபட்டவர் ஆகுக.

ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் எனக்கு இல்லை என்ற இந்த அனுபவத்திலேயே எப்பொழுதும் இருங்கள். ஒரு பாபா தான் என்னுடைய உலகம் அவ்வளவு தான், வேறு எந்த ஈர்ப்பும், கர்ம பந்தனமும் இல்லை. தன்னுடைய ஏதாவது பலஹீனமான சம்ஸ்காரத்தின் பந்தனமும் இருக்க வேண்டாம். யாராவது யார் மீதாவது என்னுடைய என்ற அதிகாரத்தை செலுத்துகிறாரோ அவருக்கு கோபம் அல்லது அபிமானம் வருகிறது. இதுவும் கர்ம பந்தனம் ஆகும். எப்பொழுது பாபாவே என்னுடைய உலகம் என்ற இந்த நினைவு இருக்கிறது என்றால், அனைத்து என்னுடையது, என்னுடையது என்பவை ஒரு என்னுடைய பாபாவில் அடங்கிவிடுகிறது. மேலும் கர்ம பந்தனங்களிலிருந்து சுலபமாகவே விடுபட்டு விடுகிறார்.

சுலோகன் :

யாருடைய பார்வை மற்றும் உள்உணர்வு எல்லைக்கப்பாற்பட்டதாக இருக்கிறதோ அவர் தான் மகான் ஆத்மா ஆவார்.

ஓம் சாந்தி

14.01.1979 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## பிராமண வாழ்க்கையின் முக்கிய ஆதாரம் - தூய்மை

இன்று அமிர்தவேளையில் பாப்தாதா குழந்தைகளின் நெற்றியின் மூலமாக ஒவ்வொருவரின் தூய்மையின் பெர்சனாலிட்டியைப் (தனித்தன்மையை) பார்த்துக் கொண்டிருந்தார். ஒவ்வொருவரிலும் வரிசைக்கிரமமான முயற்சியின் பிரகாரம் தூய்மையின் ஜொலிப்பு மின்னிக் கொண்டிருந்தது. இந்த பிராமண வாழ்க்கையின் முக்கியமான ஆதாரம் தூய்மையே தான். உயர்ந்த ஆத்மாக்கள் உங்கள் அனைவரின் உயர்ந்த தன்மையே தூய்மை தான், தூய்மை தான் இந்த பாரத தேசத்தின் மகான் நிலை ஆகும், தூய்மை தான் பிராமண ஆத்மாக்கள் உங்களுடைய வளமான நிலை ஆகும். அதை இந்த பிறவியில் அடைகிறீர்கள். அதையே அனேக பிறவிகளுக்காகவும் அடைகிறீர்கள். தூய்மை தான் உலக மாற்றத்திற்கான ஆதாரம். தூய்மையின் காரணமாகத் தான் இன்று வரையிலும் உலகம் உங்களுடைய ஜட விக்கிரகங்களை சைத்தன்யத்தையும் விட உயர்ந்ததாக நினைக்கிறார்கள். தற்சமயத்து பெயர், புகழ் பெற்ற ஆத்மாக்களும் தூய்மையின் எதிரில் தலை வணங்கிக் கொண்டே இருக்கிறார்கள். அந்த மாதிரியான தூய்மை குழந்தைகள் உங்களுக்கு தந்தை மூலமாக பிறப்புரிமையாகக் கிடைக்கிறது. மனிதர்கள் தூய்மையை கடினம் என்று நினைக்கிறார்கள். ஆனால் நீங்கள் அனைவரும் மிக சுலபமாக அனுபவம் செய்கிறீர்கள். தூய்மையின் விளக்கம் குழந்தைகள் உங்களைப் பொருத்தளவில் மிகச் சாதாரணமானது. ஏனென்றால் உண்மையான ஆத்ம சொரூபமே நிரந்தர தூய்மை தான் என்பது நினைவு வந்தது. அனாதி சொரூபத்திலும் தூய்மையான ஆத்மா, மேலும் ஆதி சொரூபத்திலும் தூய்மையான தேவதை, மேலும் தற்போதைய இறுதி பிறவியிலும் தூய்மையான பிராமண வாழ்க்கை. இந்த நினைவின் ஆதாரத்தினால் தூய்மையான வாழ்க்கையை அமைத்துக் கொள்வது மிகச் சுலபமாக அனுபவம் செய்கிறீர்கள். தூய்மையின்மை மாற்றான் தர்மம் ஆகும், தூய்மை சுயதர்மம் ஆகும். சுயதர்மத்தைக் கடைப்பிடிப்பது சுலபமாக இருக்கும். கட்டளைப்படி நடக்கும் குழந்தைகளுக்கு தந்தையின் முதல் கட்டளை தூய்மை ஆகுங்கள். அப்பொழுது தான் யோகியாக முடியும். இந்த கட்டளையை கடைப்பிடிக்கக்கூடிய கட்டளைப்படி நடக்கும் குழந்தைகளைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். அதிலேயும் இன்று விசேஷமாக

வெளிநாட்டு குழந்தைகளை, யார் தந்தையின் இந்த உயர்ந்த வழியை கடைபிடித்து வாழ்க்கையை தூய்மையாக ஆக்கிக் கொண்டார்களோ, அந்த மாதிரி கட்டளைப்படி நடக்கும் தூய்மையான ஆத்மாக்களைப் பார்த்து குழந்தைகளை மகிமை செய்து கொண்டிருந்தார். குழந்தைகள் தந்தையை அதிகமாக மகிமை செய்கிறார்களா அல்லது தந்தை குழந்தைகளை அதிகமாக மகிமை செய்கிறாரா? தந்தைக்குச் சமமான விசேஷமான அலங்காரம் வதனத்தில் எது?

எப்படி நீங்கள் இங்கே ஏதாவது ஒரு இடத்தை மாலைகளினால் அலங்கரிக்கிறீர்கள். பாப்தாதாவிடமும் ஒவ்வொரு குழந்தைகளின் குணங்களின் மாலை இருக்கிறது. எவ்வளவு நல்ல அலங்காரமாக இருக்கும். தூரத்திலிருந்தே பார்க்க முடியும் தான் இல்லையா? ஒவ்வொருவரும் அவர்களுடைய மாலையின் நம்பரையும் தெரிந்து கொள்ள முடியும். என்னுடைய குணமாலை பெரியதா அல்லது சிறியதா? பாப்தாதாவின் மிக அருகில் இருக்கிறேனா, எதிரில் இருக்கிறேனா அல்லது கொஞ்சம் விலகியிருக்கிறேனா? நெருக்கமான மாலையாக யாருடையது இருக்கும் என்று இதை தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா யார் தந்தையின் குணங்களில் மற்றும் காரியத்தில் அருகில் இருக்கிறாரோ அவர் தான் எப்பொழுதும் அருகில் இருக்கிறார். தமது ஒவ்வொரு குணத்தின் மூலம் தந்தையின் குணத்தை பிரத்யக்ஷம் செய்பவர்கள், தனது ஒவ்வொரு செயலின் மூலமாக தந்தையின் காரியத்தை நிரூபிக்கக்கூடிய நெருக்கமான இரத்தினங்கள் ஆவார்கள்.

இன்று பாப்தாதா தூய்மையின் பாடத்தில் மதிப்பெண்கள் கொடுத்துக் கொண்டிருந்தார். மதிப்பெண்கள் கொடுப்பதில் விசேஷமாக என்ன பார்த்தோம்? முதல் விசேஷம் மனதின் தூய்மை. எப்பொழுதிலிருந்து பிறவி எடுத்திருக்கிறாரோ அப்பொழுதிலிருந்து இதுவரை எண்ணத்தில் கூட தூய்மையின்மையின் சம்ஸ்காரம் வெளியாகக்கூடாது. தூய்மையின்மையை விட்டுவிடுதல், மேலும் தூய்மையின் உயர்ந்த பாக்கியம். பிராமண வாழ்க்கையின் சம்ஸ்காரமே மாறி விடுகிறது. எண்ணத்தில் எப்பொழுதும் உயர்ந்த நினைவு - ஆத்மீக சொரூபம் அதாவது சகோதரன் சகோதரன் என்பது இருக்கிறது. இந்த நினைவின் ஆதாரத்தில் மனதின் தூய்மைக்கு மதிப்பெண்கள் கிடைக்கிறது. வார்த்தையில் எப்பொழுதும் சத்தியம் மற்றும் இனிமை. விசேஷமாக இதன் ஆதாரத்தில் வார்த்தைக்கு மதிப்பெண்கள் கிடைக்கின்றன. காரியத்தில் எப்பொழுதும் பணிவான நிலை மற்றும் திருப்தி இதனுடைய பிரத்யக்ஷ பலனாக எப்பொழுதும் சிரித்த முகம் இருக்கும். இந்த விசேஷத்தின் ஆதாரத்தில் செய்யும் செயலுக்கு மதிப்பெண்கள் கிடைக்கின்றது.

இப்பொழுது மூன்றையும் எதிரில் வைத்து என்னுடைய நம்பர் எதுவாக இருக்கும் என்று தன்னைத் தானே சோதனைசெய்யுங்கள். வெளிநாட்டு ஆத்மாக்களுக்கு நம்பர் எதுவாக இருக்கிறது?

இன்று விசேஷமாக சந்திப்பதற்காக வந்திருக்கிறோம். சில ஆத்மாக்களின் காரணமாக தந்தைக்கும் வெளிநாட்டவரி-ருந்து உள்நாட்டவராக ஆக வேண்டியதாக இருக்கிறது. அனைத்தையும் விட தூர தேசத்து வெளிநாட்டினரோ தந்தை, வெளிநாட்டுத் தந்தை இந்த உலகத்தின் வெளிநாட்டு குழந்தைகளோடு சந்திப்பு செய்ய வந்திருக்கிறார். பாரதவாசிகளும் குறைந்தவர்கள் அல்ல. பாரதவாசி குழந்தைகள் வெளிநாட்டினருக்கு வாய்ப்பு கொடுப்பது கூட பாரதத்தின் மகான் தன்மை ஆகும். சான்ஸ் (வாய்ப்பு) கொடுக்கும் பாரதவாசிகள் அனைவரும் சான்ஸ்லர் (தலைவர்கள்) ஆகிவிட்டார்கள். வெளிநாட்டினரின் விசேஷத்தைத் தெரிந்திருக்கிறீர்களா? அந்த விசேஷத்தின் காரணமாக நம்பர் முன்னுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். விசேஷமான விஷயம் இது தான் அனேக வெளிநாட்டு குழந்தைகள் வந்தவுடனேயே தன்னை இந்த ஈஸ்வரிய குடும்பத்தில், இந்த தர்மத்தில் மிகப் பழைய ஆத்மாவாக அனுபவம் செய்கிறார்கள். இதைத் தான், வந்தவுடனேயே அதிகாரி ஆத்மாக்கள் என்ற அனுபவம் ஆகிறது என்று கூறுவது கஷ்டப்பட்டு முயற்சி செய்வதில்லை, சுலபமாகவே சென்ற கல்பத்தின் நினைவு விழித்தெழுந்து விடுகிறது. எனவே 'என்னுடைய பாபா' என்ற இந்த வார்த்தை அனுபவத்தின் ஆதாரத்தினால் வெகு விரைவிலேயே அனேகர்களின் வாயிலிருந்தும் இதயத்திலிருந்தும் வெளியாகிறது. இரண்டாவது விஷயம் இறை படிப்பின் விசேஷ பாடமாகிய சகஜ இராஜயோகம் என்ற இந்த பாடத்தில் பெரும்பான்மையான வெளிநாட்டு ஆத்மாக்களின் அனுபவமும் மிக நல்லதாக இருக்கிறது மேலும் சுலபமாகவே ஆகவும் செய்கிறது. இந்த முக்கிய பாடத்தின் பக்கம் விசேஷ ஈர்ப்பு இருக்கும் காரணத்தினால் நிச்சயத்தின் அஸ்திவாரம் உறுதியாகி விடுகிறது. இது தான் இரண்டாவது விசேஷம் ஆகும். அங்கதனுக்குச் சமமாக உறுதியாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? மாயா அசைக்கவில்லையே? இன்று விசேஷமாக வெளிநாட்டுக் குழந்தைகளுக்கான வாய்ப்பு. எனவே பாரத குழந்தைகள் சாட்சியாக இருக்கிறார்கள். பாரதவாசி குழந்தைகள் தங்களுடைய பாக்கியத்தை மிக நல்ல முறையில் தெரிந்திருக்கிறார்கள். வெளிநாட்டினரும் இராஜ்யத்தை இங்கே தான் செய்ய வேண்டும் இல்லையா? உங்களுடைய பாக்கியத்தை தெரிந்திருக்கிறீர்களா? வரும் நாட்களில் சேவையின் பொறுப்பாளர் ஆவதற்கான நல்ல பங்கு இருக்கிறது. பிராப்தியாக அடைந்திருக்கும்

பாக்கியத்தைப் பார்த்து அனைவருக்கும் குஷி ஏற்படுகிறது (தாதா ராம்-சாவித்திரியின் குடும்பம் மதுபன் வந்திருக்கிறது அவர்களைப் பார்த்து பாபா கூறினார்). விசேஷ பாக்கியசாலி ஆத்மாக்களின் (ராம் - சாவித்திரி) காரணமாக குடும்பத்திற்கும் பாக்கியம் ஏற்படுகிறது. ஏதாவது எண்ணம் ஈடேறுகிறது என்றால், குஷி அவசியம் ஏற்படுகிறது. நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் குஷியில் ஆடக்கூடிய, எப்பொழுதும் தன்னுடைய பாக்கிய நட்சத்திரத்தை மின்னிக் கொண்டிருப்பதைப் பார்த்து முன்னேறும் கலையின் பக்கம் செல்லக்கூடிய, எப்பொழுதும் தூய்மையின் தனித்தன்மை உள்ளவர்களுக்கு, தூய்மையின் மகான் தன்மையின் ஆதாரத்தில் உலகை மாற்றம் செய்பவர்களுக்கு, உலக நன்மை செய்யும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் சந்திப்பு :

லண்டன் பார்ட்டி - எப்பொழுதும் தன்னை தந்தையின் துணைவன் என்று அனைவரும் அனுபவம் செய்கிறீர்களா? தன்னுடைய இணைந்த ரூபத்தைப் பார்க்கிறீர்கள் தான் இல்லையா? தனியாக இருக்கவில்லை. எங்கு குழந்தைகள் இருக்கிறீர்களோ அங்கு தந்தை ஒவ்வொரு குழந்தையுடனும் இருக்கிறார். எப்பொழுதும் தந்தையின் நினைவு என்ற குடைநிழலின் கீழ் இருக்கிறீர்கள் என்றால், எந்த விதமான மாயாவின் தடை, குடை நிழலின் கீழ் வர முடியாது. அப்படி எங்கிருந்தாலும், என்ன காரியம் செய்து கொண்டிருந்தாலும் நான் பாதுகாப்பான ஸ்தானத்தில் இருக்கிறேன் என்று அப்படி எப்பொழுதும் அனுபவம் செய்யுங்கள். அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? பிரத்யேகமாக வெளிநாட்டுக் குழந்தைகள் மேல் பாப்தாதாவின் விசேஷ அன்பு மற்றும் சகயோகம் இருக்கிறது. வெளிநாட்டு ஆத்மாக்கள் சேவையின் சேத்திரத்திலும் தன்னுடைய நல்ல பங்கை வரும் நாட்களில் செய்வார்கள். சேவையின் எதிர்காலம் மிக நல்லதாக இருக்கிறது. சேவைக்கான புதிய திட்டம் என்ன உருவாக்க வேண்டும்? பொதுவான நிகழ்ச்சிகளைச் சேர்த்து விசேஷ ஆத்மாக்களுக்கு சேவை செய்யுங்கள், அதற்காக விசேஷமாக உழைக்க வேண்டியதாக இருக்கும். ஆனால் வெற்றி உங்களுடைய பிறப்புரிமை ஆகும். மிக அதிகமாக செய்திருக்கிறோம் பலன் தென்படவில்லை என்று அப்படி யோசிக்காதீர்கள். பலன் தயாராகிக் கொண்டிருக்கிறது. தற்போதைய எந்தக் காரியத்தின் பலனும் தோல்வி ஒருபோதும் இருக்கவே முடியாது.ஏனென்றால், தந்தையின்

நினைவில் செய்கிறீர்கள் இல்லையா? நினைவில் செய்ததின் பலன் எப்பொழுதும் உயர்ந்ததாக இருக்கும். எனவே ஒருபொழுதும் மனமுடைந்தவர் ஆகக்கூடாது. பலன் உருவாகியே தான் தீரும் என்று தந்தைக்கு நிச்சயம் இருக்கிறது அப்படி நீங்களும் நிச்சயபுத்தி உடையவராக இருங்கள். சில பழங்கள் உடனே உருவாகும், சில காலம் தாழ்ந்து உருவாகும் எனவே இதைப்பற்றியும் யோசிக்காதீர்கள், செய்து கொண்டே செல்லுங்கள். பிறகு உங்களிடம் இந்த செய்தி, இந்த அறிக்கை எங்கிருந்து கிடைத்தது என்று விசாரிக்க அவர்களாகவே வருவார்கள். அந்த மாதிரியான நேரம் விரைவிலேயே வரும். கொஞ்சம் விநாஷத்தின் ஒரு சின்ன ஆட்டம் காணவிடுங்கள், பிறகு எவ்வளவு நீண்ட க்யூ உருவாகிவிடுகிறது என்று பாருங்கள். பிறகு எனக்கு நேரம் இல்லை என்று கூற ஆரம்பிப்பீர்கள். இப்பொழுது அவர்கள் கூறுகிறார்கள் எங்களுக்கு நேரமில்லை என்று, பின்பு நீங்கள் கூறுவீர்கள் எங்களுக்கு நேரமில்லை என்று. டூ லேட் காலம் கடந்து விட்டது என்று நீங்கள் கூறுவீர்கள்.

ஏதேனும் விஷயத்தில் கடினமாக உழைக்க வேண்டியுள்ளது என்றால், அந்த கடினமான விஷயத்தை தந்தையிடம் விட்டு விடுங்கள், நீங்கள் எப்பொழுதும் சகஜயோகியாக இருங்கள். சகஜயோகியாக இருப்பது தான் எப்பொழுதும் சேவை செய்வதாகும். உங்களுடைய சூட்சும யோகத்தின் சக்தி இயல்பாகவே ஆத்மாக்களை உங்கள் பக்கம் கவர்ந்திழுக்கும் அப்படி இது தான் சுலபமான சேவை ஆகும். இதையோ அனைவரும் செய்கிறீர்கள் தான் இல்லையா? லண்டனைச் சேர்ந்தவர்கள் சேவையின் விஸ்தாரத்தை நன்றாக செய்திருக்கிறார்கள். தன்னைப் போன்றவர்களை நன்றாக தயார் செய்திருக்கிறீர்களா? மாலை தயாராகிவிட்டதா? 108 இரத்தினங்களை தயார் செய்தீர்களா? இப்பொழுது லண்டனைச் சேர்ந்தவர்கள் அந்த மாதிரியான ஒரு குரூப்பை தயார் செய்யுங்கள். அதில் அனைத்து விதமானவர்களும் இருக்கட்டும், விஞ்ஞானிகள், மதங்களைச் சேர்ந்தவர்கள், அரசியல் தலைவர்கள் அப்படி என்னென்ன விதவிதமான அமைப்புகள் இருக்கின்றனவோ அவற்றின் விசேஷ ஆத்மாக்கள் அந்தக் குழுவில் இருக்கட்டும். எதுவரை ஸ்தாபனைக்கு நிமித்தமான அனைத்து விதமான ஆத்மாக்கள் ஸ்தாபனையின் காரியத்தில் விதை போடவில்லையோ அதுவரை எப்படி விநாஷம் ஆகும்?. ஏனென்றால் சத்யுகத்தில் அனைத்து விதமான காரியங்களைச் செய்பவர்களும் தேவையாக இருப்பார்கள். சேவாதாரியாகி உங்களுடைய சேவை செய்வார்கள். இப்பொழுது ஒரு பிறவியில் கொஞ்ச காலத்திற்காக நீங்கள் சேவை செய்து அந்த மாதிரியான சேவாதாரிகளை தயார் செய்யுங்கள். அவர்கள் அனேக பிறவிகள் உங்களுக்கு

சேவை செய்வார்கள். அறிவியலைச் சேர்ந்தவர்களுக்கும் அங்கு பங்கு இருக்கிறது, அங்கே உள்ள சுகத்திற்கான சாதனங்களின் விசேஷத்தை இங்கே கொண்டு வருவார்கள். எனவே வெளிநாட்டில் இந்த சேவை இப்பொழுது அதிவேகத்துடன் இருக்க வேண்டும். இராஜ்யத்தை தயார் செய்யுங்கள், பிரஜைகளையும் தயார் செய்யுங்கள், இராஜ குடும்பத்தினரையும் தயார் செய்யுங்கள் மற்றும் சேவாதாரியையும் தயார் செய்யுங்கள். எந்த ஒரு துறையைச் சேர்ந்தவரும் எங்களுக்கு செய்தி கிடைக்கவில்லை என்று தங்கிப் போய் விடக்கூடாது.

2) ஈஸ்வரிய சேவைக்கான உயர்ந்த மற்றும் புதிய முறை -

எண்ணங்கள் மூலமாக ஈஸ்வரிய சேவை செய்வது இதுவும் சேவைக்கான உயர்ந்த மற்றும் புதிய வழி ஆகும். எப்படி நகை வியாபாரி இருக்கிறார் என்றால் தினசரி காலையில் கடையை திறந்து தன்னுடைய ஒவ்வொரு இரத்தினத்தையும் சுத்தமாக இருக்கிறதா, ஜொலிப்பு சரியாக இருக்கிறதா, சரியான இடத்தில் வைக்கப்பட்டு இருக்கிறதா? என்று சோதனை செய்வார். அதே போல் தினசரி அமிர்தவேளையில் உங்களுடைய தொடர்பில் வரக்கூடிய ஆத்மாக்கள் மேல் எண்ணம் மூலமாக பார்வையை ஓட விடுங்கள். எவ்வளவு நீங்கள் அவர்களை எண்ணம் மூலமாக நினைவு செய்வீர்களோ அந்த அளவு அந்த எண்ணம் அவர்களிடம் சென்றடையும். மேலும் நாங்களும் பல தடவை உங்களை நினைவு செய்தோம் என்று அவர்கள் கூறுவார்கள். அந்த மாதிரி சேவைக்கான புதுப்புது முறைகளைக் கடைப்பிடித்து முன்னேறிச் செல்லுங்கள். ஒவ்வொரு மாதமும் தொடர்பில் இருக்கும் ஆத்மாக்களுக்காக ஏதாவது நிகழ்ச்சியை வையுங்கள், அன்பு சந்திப்பை வையுங்கள், அனுபவத்தின் பரிமாற்றம் மற்றும் பொழுது போக்கிற்கான மனமகிழ்ச்சிக்கான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யுங்கள், ஏதாவது வகையில் அழைத்து தொடர்பை அதிகரியுங்கள். இரண்டு பேர் உருவானார்கள், மூன்று பேர் உருவானார்கள் என்று அப்படி யோசிக்காதீர்கள். ஒருவர் உருவானால் கூட நல்லது தான். ஒரே ஒரு தீபம், தீபமாலையை உருவாக்கிவிடும்.

ஜெர்மனி - ஜெர்மனியைச் சேர்ந்தவர்கள் தன்னுடைய தேசத்தில் தந்தையின் அறிமுகம் கொடுப்பதற்கான சாதனத்தை நன்றாக உருவாக்கியிருக்கிறார்கள். இப்பொழுது ஜெர்மனியின் அக்கம் பக்கத்தில் சேவைக் கரங்களை தயாரித்து சேவையின் களத்தை இன்னும் அதிகரியுங்கள். யாரெல்லாம் வந்திருக்கிறார்களோ அவர்கள் அனைவரும்

ஒவ்வொரு சேவை நிலையத்தை கவனித்து கொள்ளட்டும். ஏனென்றால் நேரம் குறைவாக இருக்கிறது. மேலும் இராஜ்ஜியத்தை உருவாக்க வேண்டும். ஜெர்மனியைச் சேர்ந்தவர்கள் தந்தையைப் பின்பற்றி நடப்பவர்கள் தான் இல்லையா? சேவை செய்யுங்கள். ஆனால் தனிப்பட்டு அல்ல. தொடர்பின் ஆதாரத்தில் செய்யுங்கள். எப்படி ஒவ்வொரு கிளைக்கும் தண்டுடன் தொடர்பு இருக்கிறது, அதே போல் பொறுப்பில் இருக்கும் ஆத்மாக்களின் தொடர்பு நன்றாக இருக்கட்டும். பின்பு வெற்றி நன்றாக கிடைக்கும். அந்த மாதிரி திட்டத்தை உருவாக்குங்கள். நல்லது.

விடைபெறும் நேரத்தில் - சங்கமயுகத்தின் இந்த நாள் கூட மிக விலைமதிக்க முடியாதது. பாப்தாதாவும் குழந்தைகளின் மேளாவை (சந்திப்பை) சங்கமயுகத்தில் தான் ஸ்தூலமான ரூபத்தில் பார்க்கிறார். சங்கமயுகம் நன்றாக பிடித்திருக்கிறது தான் இல்லையா? உலக மாற்றம் செய்ய மாட்டீர்களா? சங்கமயுகத்தின் விசேஷம் அதனுடையது மற்றும் புது உலகின் விசேஷம் அதனுடையது. எப்பொழுது புது உலகத்தில் செல்வீர்களோ அப்பொழுது தந்தையையும் மறந்து விடுவீர்கள் அல்லது அந்த நேரம் நினைவிருக்குமா? குழந்தைகள் இவ்வளவு உயர்ந்த பதவியை அடைந்து விடுகிறார்கள் என்று தந்தைக்கும் குஷி இருக்கிறது. குழந்தைகள் தந்தையையும் விட முன்னுக்கு இருக்கட்டும் என்று தான் தந்தை எப்பொழுதும் விரும்புகிறார். குழந்தைகளின் உயர்ந்த பாக்கியத்தை பார்த்து தந்தை குஷி அடைகிறார். கொஞ்ச காலத்திலேயே எவ்வளவு பாக்கியத்தை உருவாக்கி விடுகிறீர்கள். ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு எண்ணத்திலும் தன்னுடைய பாக்கியத்தை உருவாக்க முடியும் என்பது தான் சங்கமயுகத்தின் விசேஷம் ஆகும். எவ்வளவு விரும்புகிறீர்களோ அந்த அளவு பாக்கியத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அந்த அளவே முழுமையான வாய்ப்பை எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? பிராப்தி செய்வதற்கான நேரம் இப்பொழுது அதிகம் இல்லை. எனவே எவ்வளவு விரும்புகிறீர்களோ அதை இப்பொழுதே செய்து விடுங்கள். இல்லை என்றால் செய்திருக்க வேண்டும். ஆனால் செய்யவில்லை என்று இந்த பிராப்தி செய்வதற்கான காலம் நினைவு வரும். தன்னுடைய நினைவு யாத்திரையை சக்திசாலியாக ஆக்கிக் கொண்டே இருங்கள். எண்ணத்தில் அனைத்து சக்திகளின் சாரத்தை நிரப்பி கொண்டே இருங்கள். ஒவ்வொரு எண்ணத்திலும் சக்தியை நிரப்பிக் கொண்டே இருங்கள். எண்ணத்தின் சக்தி மூலமாகவும் மிகுந்த சேவை செய்ய முடியும். நல்லது.

வரதானம் :

சம்பன்ன நிலை மூலமாக எப்பொழுதும் திருப்தியை அனுபவம் செய்யக்கூடிய செல்வம் நிறைந்தவர் ஆகுக !

சுயராஜ்யத்தின் செல்வம், ஞானம், குணம் மற்றும் சக்திகள். யார் இந்த அனைத்து செல்வங்களினால் சம்பன்ன சுயராஜ்ஜிய அதிகாரியாக இருக்கிறாரோ அவர் எப்பொழுதும் திருப்தியாக இருக்கிறார். அவரிடம் பிராப்தியில்லை என்பதின் பெயர், அடையாளமே இருக்காது. எல்லைக்குட்பட்ட ஆசைகள் என்றால் என்னவென்றே தெரியாத நிலை - இதைத் தான் செல்வம் நிறைந்தவர் என்று கூறுவது. அவர் யாசிப்பவராக இன்றி எப்பொழுதும் கொடுப்பவராக இருப்பார். அவர் துண்டிக்க முடியாத சுகம், சாந்தி நிரம்பிய சுயராஜ்ஜியத்தின் அதிகாரியாக இருப்பார். எந்த விதமான சூழ்நிலையும் அவருடைய இடைவிடாத அமைதியைத் துண்டிக்க முடியாது.

சுலோகன் -

ஞானம் என்ற கண் மூலமாக மூன்று காலங்கள் மற்றும் மூன்று உலகங்களைத் தெரிந்து கொள்பவர் மாஸ்டர் ஞானம் நிரம்பியவர்.

ஓம் சாந்தி

" திலகமிட்டவர், கிரீடம் அணிந்தவர் மற்றும் சிம்மாசனதாரியாவதற்கான வழிகள் "

பாப்தாதா அனைத்து குழந்தைகளின் நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் இரண்டிற்கும் இடையே உள்ள வித்தியாசத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பாப்தாதா இன்று குழந்தைகளின் நிகழ்காலத்தைப் பார்த்துக் கொண்டு மகிழ்ச்சியும் அடைந்து கொண்டிருந்தார்கள். மேலும் கூடவே அனேக குழந்தைகளின் விசித்திரமான நடத்தையைப் பார்த்து தந்தை எவ்வளவு உயர்ந்தவராக ஆக்குகிறார். மேலும் குழந்தைகள், தங்களது தவறு செய்யும் காரணத்தினாலும் அலட்சியத்தின் காரணத்தினாலும் உயர்ந்த நிலையிலிருந்து கீழே வந்து விடுகிறார்கள் என்று பார்த்து இரக்கமும் வந்து கொண்டிருந்தது. இன்று பாப்தாதா விசேஷ ரூபத்தில் குழந்தைகளினுடைய விதவிதமான சிரிப்பூட்டும் ரூபத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பிராமண ஜென்மம் ஏற்பட்டவுடனேயே பாப்தாதா சங்கமயுகத்தின் உலக சேவைக்காக பொறுப்பின் கிரீடத்தை அணிவிக்கிறார். ஆனால் இன்று ரமணீகரமான காட்சிகளைப் பார்த்தோம். சிலரோ கிரீடம் அணிந்தவர்களாக மற்றும் திலகமிட்டவர்களாகவும் இருந்தார்கள். ஆனால் சிலர் கிரீடம் அணிந்திருப்பதற்குப் பதிலாக கடந்த காலத்தில் மற்றும் இப்பொழுது செய்த சிறியதிலிருந்து பெரிய பாவம் மற்றும் இந்த வாழ்க்கையில் கட்டளையை மீறி நடந்த சுமை அடங்கிய கூடை தலையில் இருந்தது. சிலர் கிரீடம் அணிந்தவர்களாக இருக்கிறார்கள் என்றால் சிலர் கூடையை தலையில் சுமந்திருப்பவர் களாகவும் இருக்கிறார்கள். அதிலேயும் வரிசைக்கிரமமாக சிறிய மற்றும் பெரிய கூடைகள் இருந்தது. மேலும் சிலருடைய தலையில் டபுள் லைட்டிற்குப் பதிலாக, தன்னுடைய பிராமண வாழ்க்கையின் நிரந்தர டிரஸ்டி சொரூபத்திற்குப் பதிலாக குடும்பஸ்தனின் விதவிதமான சுமைகளின் கூடை தலை மேல் இருந்தது. அதைப் பார்த்து பாப்தாதாவிற்கு இரக்கமும் வந்தது. மேலும் என்ன பார்த்தோம்? அனேக விதமான சுலபமான வழி தந்தை மூலமாக கிடைத்திருந்த போதிலும் புத்தியின் தொடர்பு நிரந்தரமாக இணைக்கப்படாததின் காரணத்தினால் சுலபமானதை கடினமாக ஆக்கியதின் காரணத்தினால், அனேக விதமான கடினமான வழியைக் கடைபிடிப்பதில் சில குழந்தைகள் களைப்பாகத் தென்பட்டனர். சகஜ மார்க்கத்திற்கு, பதிலாக முயற்சி செய்யும் வழியை வலுக்கட்டாயத்தின் ரூபத்தில்

உபயோகித்துக் கொண்டிருந்தார்கள். மேலும் என்ன பார்த்தோம்?

எப்படி சூரியனின் எதிரில் மேகம் வரும் போது சூரியன் மறைந்து விடுகிறது. அதே போல் அடிக்கடி மாயாவின் மேகங்களின் காரணமாக அனேக குழந்தைகள் ஞான சூரியனிடமிருந்து விலகி விடுகிறார்கள். சூரியனை அடைவதற்காக முயற்சி செய்து கொண்டேயிருக்கிறார்கள். சில நேரம் எதிரிலும், சில நேரம் விலகி வேறு எங்கோ இருப்பதிலும் அப்படி இந்த விளையாட்டிலேயே ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். கூடவே குழந்தைகள் குறும்புக்காரர்களாக இருக்கும் காரணத்தினால் தந்தையின் நினைவு என்ற மடியிலிருந்து இறங்கி மாயாவின் தூசியில் தேக அபிமானத்தின் நினைவு என்ற மண்ணில் விளையாடுகிறார்கள். ஞான ரத்தினங்களுடன் விளையாடுவதற்குப் பதிலாக மண்ணில் விளையாடுகிறார்கள். தந்தை அடிக்கடி மண்ணிலிருந்து விலக்கி வைக்கிறார். ஆனால் குறும்பு செய்யும் சம்ஸ்காரத்தின் காரணத்தினால் மீண்டும் அழுக்காகி விடுகிறார்கள். சில குழந்தைகள் அற்ப கால சுகங்களின் கவர்ச்சிகரமான பொருட்களின் கவர்ச்சியில் அந்த அளவு பிஸியாகி விடுகிறார்கள். அப்பொழுது நேரம் மற்றும் அழியாத பிராப்தி அவ்வளவு நேரம் மறந்து விடுகிறது. பிறகு சுயநினைவில் வருகிறார்கள். அந்த மாதிரி குழந்தைகளின் அனேக விதமான விசித்திர ரூபங்களைப் பார்த்தோம். இப்பொழுது என்னுடைய ரூபம் எது என்று தன்னைத் தானே பாருங்கள். பாப்தாதாவோ ஒவ்வொரு குழந்தையையும் எப்பொழுதும் உயர்ந்த சொரூபத்தில் பார்க்க விரும்புகிறார். கிரீடத்தை, இதய சிம்மாசனத்தை விட்டு விட்டு கூடையை ஏன் தூக்குகிறீர்கள்? கிரீடம் நல்லதா அல்லது கூடை நல்லதா? எது பிடித்திருக்கிறது. மூன்று படங்களையும் எதிரில் வைத்தீர்கள் என்றால் எந்தப் படம் உங்களுக்குப் பிடிக்கும். 63 ஜென்மங்களாக இந்த அனைத்து அதிசயமான விளையாட்டுகளை விளையாடினீர்கள் இப்பொழுது சங்கமயுகத்தில் எந்த விளையாட்டு விளையாட வேண்டும்? அனைத்தையும் விட மிக நல்ல விளையாட்டு தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பு. தந்தை மூலமாக கிடைத்திருக்கும் ஞான இரத்தினங்களோடு விளையாடுவது. இரத்தினம் எங்கே இருக்கிறது மற்றும் மண் எங்கே இருக்கிறது. இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? குழந்தைத்தனத்தின் அலட்சியத்தின் மற்றும் குறும்புத் தனத்தின் விளையாட்டை வெகு காலம் விளையாடினீர்கள். இப்பொழுதோ வானப்பிரஸ்த நிலையில் செல்வதற்கான நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது. எனவே இப்பொழுது இந்த அனைத்து விஷயங்களின் முடிவிற்கான உறுதியான எண்ணம் வையுங்கள். எப்பொழுதுமே கிரீடம் அணிந்தவராக, ஆசனத்தில் அமர்ந்திருப்பவராக மற்றும் திலகமிட்டவராக ஆகுங்கள். இந்த மூன்றுக்குமே

அவற்றிடையே சம்மந்தம் இருக்கிறது. திலகம் இருக்கிறது என்றால் கிரீடமும், ஆசனமும் அவசியம் இருக்கும். தன்னுடைய பாக்கியம் மற்றும் உயர்ந்த பிராப்திகளை அடிக்கடி எதிரில் கொண்டு வாருங்கள். எப்பொழுதும் பிராப்திகளையும் மற்றும் பிராப்தி செய்விப்பவரையும் எப்பொழுதும் எதிரில் வைத்தீர்கள் என்றால் ஒரு பொழுதும் மாயாவை எதிர்ப்பதில் பலஹீனமாக ஆக மாட்டீர்கள். ஒவ்வொரு காரியத்திலும் அனைத்து சம்மந்தங்களுடன் பாப்தாதா எப்பொழுதும் என்னுடன் இருக்கிறார் என்பதை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். துணையை விடுவதின் காரணமாகத் தான் இந்த விசித்திரமான விளையாட்டை விளையாட வேண்டியதாக இருக்கிறது. உலகின் பொறுப்பை எடுக்கும் தந்தையின் துணை இருந்த போதிலும் தன்னுடைய எல்லைக்குட்பட்ட பொறுப்பு என்ற சுமையின் கூடையை ஏன் தூக்குகிறீர்கள். உலகின் சுமையைத் தூக்கக்கூடியவர் உங்களுடைய இந்த சுமையை தூக்க முடியாதா என்ன? இருந்தும் பழைய சம்ஸ்காரத்தின் வசமாகி அடிக்கடி சுமையையும் தூக்குகிறீர்கள் பிறகு களைப்படைந்து இப்பொழுது எங்களை விடுவியுங்கள் என்று கதறவும் செய்கிறீர்கள். ஒரு பக்கம் பிடித்துக் கொள்கிறீர்கள், இன்னொரு பக்கம் அழைக்கிறார்கள். விட்டால் விடுபடும். இந்த ஒரு விநாடிக்கான தைரியம் அனேக ஜென்மங்களுக்கு அனேக விதமான சுமையிலிருந்து விடுவித்து விடும். முதன் முதல் உறுதிமொழியாக தந்தையிடம் என்ன செய்திருந்தீர்கள் - நினைவிருக்கிறதா? என்னுடையவரோ ஒருவரைத் தவிர வேறு யாரும் இல்லை. எப்பொழுது என்னுடையது என்பதே முடிவடைந்து விட்டதோ, என்னுடையவர் ஒரே ஒருவர் என்றாகிவிட்டது என்றால், பிறகு எல்லைக்குட்பட்ட பொறுப்புகளில் என்னுடையது என்பது எங்கிருந்து வந்தது. உடலின் என்னுடையது என்பது எங்கிருந்து வந்தது? பலஹீனங்களின் சம்ஸ்காரத்தின் என்னுடையது என்பது எங்கிருந்து வந்தது? தன்னை ஞானம் நிறைந்த ஆத்மா என்று கூறுகிறீர்கள். ஞானம் நிறைந்த நிலை என்றால் சொல்வது, நினைப்பது மற்றும் செய்வது சமமாக இருக்க வேண்டும், எப்பொழுதும் சக்திசாலியானதாக இருக்க வேண்டும். ஞானம் நிறைந்த ஆத்மாவின் ஒவ்வொரு காரியமும் சக்திசாலியான தந்தைக்குச் சமமாக, சம்ஸ்காரம், குணம் மற்றும் காரியம் சக்திசாலியான தந்தைக்குச் சமமானதாக இருக்க வேண்டும். அப்படி சக்திசாலியான நிலையில் நிலைத்திருப்பவர் இந்த வீணான விசித்திர விளையாட்டை விளையாட முடியாது. எப்பொழுதுமே சந்திப்பின் விளையாட்டில் பிஸியாக இருப்பார்கள், தந்தையோடு சந்திப்பது மேலும் மற்றவர்களையும் தந்தைக்குச் சமமாக ஆக்குவது. அப்படி இந்த வருடம் என்ன செய்வீர்கள்? இப்பொழுதோ அதிகப்படியான நேரம் கிடைத்திருக்கிறது - எதற்காக? (தனக்காக கிடைத்திருக்கிறது). இந்த அதிகப்படியான நேரத்திற்கும் இரகசியம் இருக்கிறது. பின்னால் வருபவர்கள் எங்களுக்கு மிகக்குறைந்த

நேரம் கிடைத்தது என்று புகார் கூறக்கூடாது. எப்படி ஒரு வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கலுக்குப் பிறகு ஒரு அதிகப்படியான கொசுறு கொடுக்கப்படுகிறது - அதே போல் நாடகப்படி இந்த நேரமும் சேவைக்காக உபரியாக ரூபத்தில் கிடைத்திருக்கிறது. இந்த அதிகப்படியான நேரத்தை பாப்தாதாவின் உயர்ந்த வழிப்பிரகாரம் உபயோகம் செய்யுங்கள். இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா?

ஒவ்வொரு நேரம் மற்றும் எண்ணத்தில் தன்னை உலக சேவையில் அந்த அளவு பிஸியாக வைத்துக் கொள்ளுங்கள். அதனால் இந்த அனைத்து வீணான விளையாட்டும் தானாகவே முடிவடைந்து விடும். இந்த ரிசல்ட்டை பாப்தாதா பார்க்க விரும்புகிறார். நல்லது.

எப்பொழுதும் எண்ணம் மற்றும் ஒரு நொடியைக்கூட டிரஸ்டியாக புரிந்து கொள்பவர்களுக்கு, "ஒரு பாபா தான் என்னுடையவர் மற்றும் என்னுடையவர் வேறு யாரும் இல்லை" என்று அந்த மாதிரி எல்லைக்கப்பாற்பட்ட சக்திசாலியான எண்ணத்தை வைப்பவர்களுக்கு, எப்பொழுதும் உலக நன்மைக்கான எண்ணத்திலேயே பிஸியாக இருப்பவர்களுக்கு, தந்தைக்குச் சமமாக சக்திசாலியான சம்ஸ்காரம் உள்ளவர்களுக்கு, வீணானவைகளுக்கு தந்தையின் துணை மூலமாக நிரந்தரமாக விடை கொடுப்பவர்களுக்கு, அந்த மாதிரி ஞானம் நிறைந்த குழந்தைகள் ஆத்மாக்களுக்கு தந்தையின் பல தடவை வாழ்த்துக்கள் உரித்தாகுக கூடவே அந்த மாதிரி சிம்மாசனதாரி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

டீச்சர்களின் தொழில் எப்பொழுதும் திருப்தியின் சுரங்கமாகி இருப்பது மற்றும் அனைவரையும் திருப்தியானவராக ஆக்குவது -

டீச்சர்களோ எப்பொழுதுமே திருப்தியானவர்கள் தான். டீச்சர்கள் என்றால் அனைவர்களையும் திருப்திபடுத்தும் சேவையிலேயே இருப்பவர்கள். எவ்வளவு அவரே நிரம்பியவராக இருப்பாரோ அந்த அளவே மற்றவர்களையும் ஆக்க முடியும். டீச்சர்களின் விசேஷமே ஒவ்வொரு விஷயத்திலும் திருப்தியாக இருப்பது. திருப்தியாக எப்பொழுது இருக்க முடியும் என்றால் எப்பொழுது நிரந்தரமாக தந்தையின் குணம் மற்றும்

காரியத்தில் சமமானவர்களாக ஆவார்களோ அப்பொழுது தான். எது தந்தையின் குணமோ அது தான் என்னுடையது, எது தந்தையின் கடமையோ அது தான் என்னுடைய கடமை ஆகும் என்று எப்பொழுதுமே இந்த சோதனைசெய்யுங்கள். அந்த மாதிரி சோதனைசெய்து நடந்து கொள்பவர் எப்பொழுதும் திருப்தியாக இருக்கவும் செய்கிறார்கள், மேலும் மற்றவர்களையும் ஆக்குகிறார்கள். டீச்சர்கள் என்றால் திருப்தியின் சுரங்கம், எப்பொழுதும் நிரம்பியிருப்பதில், சுரங்கத்திற்கு சமமாக குறைவில்லாமல் இருக்கட்டும், இது தான் டீச்சர்களின் தொழில் ஆகும்.

## பார்ட்டிகளுடன் சந்திப்பு

### 1) அனைவரையும் ஈர்க்கும் தந்தையின் பக்கம் ஈர்க்க வைப்பதற்கான வழி - பிரகாசமாக இருக்கும் தெய்வீக நட்சத்திரம் ஆவது

உங்களுடைய தெய்வீக நட்சத்திரம் எப்பொழுதும் மின்னிக் கொண்டிருப்பதாகத் தென்படுகிறது என்றால், நட்சத்திரத்தின் மினுமினுப்பு அனைவரையும் தன் பக்கம் இயல்பாகவே ஈர்க்கும். எந்தவொரு விளக்கும் எரிகிறது என்றால், ஆத்மாக்களை தன் பக்கம் அவசியம் கவர்ந்திழுக்கும். இதுவோ அழியாத நட்சத்திரம் ஆகும். அப்படி மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களின் பக்கம் அனைவரின் கவர்ச்சி தானாகவே இருக்கும். நட்சத்திரங்களின் பக்கம் கவரப்படுவது என்றால் தந்தையின் பக்கம் கவரப்படுவது. அப்படி என்னுடைய ஆன்மீக சொரூபத்தின் நட்சத்திரம் மின்னிக் கொண்டிருக்கிறது என்று எப்பொழுதும் அனுபவம் செய்கிறீர்களா? எப்பொழுதும் மின்னிக் கொண்டிருக்கிறதா அல்லது சில நேரம் மின்னுகிறதா? எப்பொழுது தந்தை மூலமாக, ஞானம் மூலமாக நட்சத்திரம் ஜொலித்து விட்டது என்றால், இப்பொழுது அணைய முடியாது. ஆனால் ஜொலிப்பின் சதவிகிதம் அதிகமாக மற்றும் குறைவாக இருக்க முடியும், இதற்கான காரணம் என்ன? கவனக்குறைவு தான். எப்படி தீபத்தில் ஒருவேளை எப்பொழுதும் எண்ணெய் விட்டுக் கொண்டே இருந்தீர்கள் என்றால் அது ஒரே சீராக எரிந்து கொண்டிருக்கும். எண்ணெய் குறைந்தது என்றால், அணையப்போவது போல் எரியும். அப்படி கவனம் குறைந்து விடுகிறது என்றால் ஜொலிப்பின் சதவிகிதமும் குறைந்து விடுகிறது. எனவே தினசரி அமிர்தவேளையில் முழு நாளுக்குமான கவனம் வையுங்கள் என்பது தான் பாப்தாதா கூறும் உயர்ந்த வழி ஆகும். தினசரி அமிர்தவேளையில்

தன்னுடைய முழு நாள் நடவடிக்கைகளையும் முன்பாகவே செட் செய்யுங்கள். ஒருவேளை ஏதாவது ஒரு நிகழ்ச்சி செட் ஆகவில்லை என்றால் அதனுடைய முடிவாக என்ன வெளியாகும். வெற்றி ஆவதில்லை அப்படி இங்கேயும் ஒருவேளை தினசரி தன்னுடைய நடவடிக்கைகளை செட் செய்யவில்லை என்றால் வெற்றி அடைபவராக அனுபவம் செய்ய முடியாது. கவனம் இருக்கவும் செய்கிறது, ஆனால் இன்னும் அடிக்கோடிட்டு கவனத்தில் கொண்டு வர வேண்டும். எங்கு அட்டென்ஷன் (கவனம்) இருக்குமோ அங்கு எந்தவிதமான டென்ஷனும் (மன அழுத்தமும்) இருக்க முடியாது. இரவு இருக்கிறது என்றால் பகல் இருக்க முடியாது. டென்ஷன் இரவு ஆகும், அட்டென்ஷன் பகல் ஆகும். அப்படி இரவு மற்றும் பகல் இரண்டும் சேர்ந்தே இருக்க முடியாது. ஒருவேளை ஏதாவது விதமான டென்ஷன் இருக்கிறது என்றால் அட்டென்ஷன் இல்லை என்பது நிரூபணமாகிறது. சாதாரண அட்டென்ஷன் மற்றும் முழுமையான அட்டென்ஷனிலும் வித்தியாசம் இருக்கிறது முழுமையான அட்டென்ஷன் என்றால் எது தந்தையின் குணம் மற்றும் சக்திகளாக இருக்கின்றனவோ அவை தன்னிலும் இருக்க வேண்டும். தந்தையின் குழந்தைகள் ஆகியிருக்கிறீர்கள் என்றால் அதற்கான அத்தாட்சியும் வேண்டும் இல்லையா. சாதாரண அட்டென்ஷன் என்றால் நாம் தந்தையின் குழந்தைகள் தானே...... ஒருவேளை இவ்வளவு உயர்ந்த தந்தையின் குழந்தைகள் மற்றும் உயர்ந்த நிலை இல்லை என்றால், இவர் உயர்ந்த தந்தையின் குழந்தை என்று யார் ஏற்றுக் கொள்வார்கள். அப்படி எது தந்தையிடம் விசேஷமாக இருக்கிறதோ அதுவே குழந்தைகளிலும் தென்பட வேண்டும். இதை தான் தீவிரமாக முயற்சி செய்வது என்று கூறுவது. தீவிரமாக முயற்சி செய்பவர் என்றால் நினைப்பது மற்றும் செய்வது சமமாக இருப்பது. திட்டம் மற்றும் நடைமுறை சமமாக இருப்பது.

### 2) உங்களுடைய சுயதர்மம் தந்தையின் நினைவு மற்றும் கடமை சேவை ஆகும்

அனைவரும் எப்பொழுதும் நினைவு மற்றும் சேவை இதிலேயே முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்களா? யார் எப்பொழுதுமே நினைவு மற்றும் சேவையிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்களோ அவர்களிடமிருந்து மாயாவும் நிரந்தரமாக நமஸ்காரம் செய்து விலகிவிடுகிறது. இவர் எப்பொழுதுமே பிஸியாக இருப்பவர் என்று மாயாவும் தெரிந்து கொள்கிறது. எனவே தொந்தரவு செய்வதில்லை. காலியாக ஒன்றும் வேலையில்லாமல் இருப்பவர்களை தொந்தரவு செய்கிறது. எனவே எப்பொழுதும் பிஸியாக இருங்கள், பிறகு மாயா வர முடியாது. நினைவு மூலம் தன்னுடைய எதிர்காலத்தை உருவாக்குகிறீர்கள்

மற்றும் சேவை மூலம் தன்னுடைய மற்றும் மற்றவர்களின் எதிர்காலத்தை உருவாக்குகிறீர்கள். அப்படி நினைவு தான் உங்களுடைய சுயதர்மம் மற்றும் சேவை செய்வது தான் உங்களுடைய கடமை ஆகும்.

3) முன்னேறும் கலைக்கான அடையாளம் - சம்பூர்ண லட்சியம் அருகில் தென்படுவது.

எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்திலும் முன்னேறும் கலையை அனுபவம் செய்கிறீர்களா? அடி முன்னுக்கு எடுத்து வைத்தீர்கள் என்றால் ஏறும் கலை ஆனது. ஒவ்வொரு அடியிலும் ஏறும் கலை இருப்பதினால் சம்பூர்ண நிலை வரை மிக விரைவில் சென்றடைந்து விடுவீர்கள். முன்னேறும் கலை உள்ளவர்களுக்கு எப்பொழுதும் தன்னுடைய சம்பூர்ண நிலை அதாவது லட்சியம் தெளிவாகத் தென்படும். எவ்வளவு எந்தப் பொருளின் அருகில் செல்வீரகளோ அந்த அளவே தான் அந்தப் பொருள் தெளிவாகத் தென்படும், தெளிவாகத் தென்படுவது தான் அருகாமையின் அடையாளம் ஆகும். இப்பொழுதைய நேரம் தீவிரமாக முயற்சி செய்வதற்கானது. ஓடுவதற்கான நேரம் இப்பொழுது முடிந்து விட்டது, இப்பொழுது உயரே தாண்டி தாண்டிச் செல்ல வேண்டும். நேரம் குறைவாக இருக்கிறது. மேலும் சென்றடைய வேண்டிய இலக்கு மிக உயர்ந்ததாக இருக்கிறது. உயரே தாண்டுவதற்காக டபுள் லைட் நிலை வேண்டும். டபுள் லைட் ஆகாமல் தாண்டுதல் செய்ய முடியாது.

4) ஒவ்வொரு காரியத்தையும் உயர்ந்ததாக ஆக்குவதற்கான வழி - ஃபாலோ ஃபாதர் (தந்தையை பின்பற்றி நடப்பது) -

எப்படி சாகார பாபா மேல் இவ்வளவு பொறுப்பு இருந்த போதிலும் எப்பொழுதும் டபுள் லைட்டாக இருந்ததைப் பார்த்தீர்கள். அவரை ஒப்பிடும்பொழுதோ உங்களிடமோ ஒரு பொறுப்பும் இல்லை. தன்னை எப்பொழுதும் ஒரு கருவி என்று புரிந்து நடந்து கொள்ளுங்கள். பொறுப்பிற்குரியவர் பாப்தாதா நீங்கள் ஒரு கருவி தான். கருவி என்று புரிந்து நடந்து கொள்வதினால் டபுள் லைட் ஆகிவிடுவீர்கள். தந்தையும் (பிரம்மாபாபாவும்) இவ்வளவு பெரிய பொறுப்பை கவனித்துக் கொண்டே கருவி என்று புரிந்து நடந்து கொண்டார். எனவே தந்தையைப் பின்பற்றுங்கள். ஒவ்வொரு காரியம் செய்வதற்கு முன்பு

இது தந்தையைப் பின்பற்றி செய்வதாக இருக்கிறதா என்று சோதனைசெய்யுங்கள். இதன் மூலம் ஒவ்வொரு காரியமும் மிக உயர்ந்ததாக இருக்கும். உயர்ந்த காரியத்தின் பலனும் இயல்பாகவே உயர்ந்ததாக இருக்கும். தந்தையை காப்பி (அதே போல்) செய்தீர்கள் என்றால் கூட தந்தைக்குச் சமமானவராக ஆகிவிடுவீர்கள். சமமாக ஆகுபவர்கள் தான் நெருங்கிய இரத்தினமாக ஆகிறார்கள்.

விடைபெறும் நேரத்தில் -

எத்தனை 18 ஜனவரி சென்று விட்டன? இத்தனை வருடங்கள் முடிந்து விட்டன? அதற்கான ரிசல்ட் என்ன? ரிசல்ட்டாக பரிவர்த்தனை (மாற்றம்) வேண்டும். எது முந்தைய வருடங்களின் விஷயமாக இருந்ததோ அது இந்த வருடத்தில் இருக்கக்கூடாது. அப்படியானால் புதுமை என்ன வந்திருக்கிறது? எப்படி மதுபன்னில் யார் வருகிறார்களோ அவர்களிடம் எதை விட்டீர்கள், எதை அடைந்தீர்கள் என்று கேட்கிறார்கள். அப்படி இந்த வருடத்தின் ரிசல்ட்டிலும் என்னென்ன விட்டோம், என்னென்ன அடைந்தோம் என்று பாருங்கள். புது வருடத்தைக் கொண்டாடுகிறீர்கள். வருடம் புதியதாக ஆனது என்றால், புதுமை நிரம்பியிருக்கிறது. உங்களுக்குள் இதனுடைய ரிசல்ட்டை வெளிக் கொண்டு வாருங்கள். மொத்தமாக பெரும்பான்மையோர் எந்தளவு தன்னில் மாற்றம் வந்திருக்கிறது என்று நினைக்கிறார்கள். எனவே ரிசல்ட்டைப் பெறுவதற்காக வருவோம் என்று பாப்தாதா முன்னே கூறியிருக்கிறார். அப்படியானால் ரிசல்ட் என்ன? சேவை வளர்ச்சியை அடைந்து கொண்டிருக்கிறது, சேவாதாரி ஆத்மாக்கள் தன்னுடைய முயற்சியில் என்ன வளர்ச்சியை அடைந்து கொண்டிருக்கிறார்கள், இரண்டின் சமநிலை எப்பொழுது சமமாக ஆகுமோ அப்பொழுது முடிவு ஏற்படும்.

அனைவரும் சங்கமயுகத்தின் உயர்ந்த பாக்கியத்தை எப்பொழுதும் நினைவு செய்து மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா? சங்கமயுகத்தின் பாக்கியத்தை வேறு எந்த யுகத்திலும் அடைய முடியாது. சங்கமயுகத்தின் ஒவ்வொரு விநாடியும் மிக பாக்கியம் நிறைந்தது. ஒரு விநாடி பல ஜென்மங்களுக்கான பாக்கியத்தை உருவாக்குவதற்கு பொறுப்பாக ஆகிறது. அப்படி அந்த மாதிரி உயர்ந்த பாக்கியத்தை எப்பொழுதும் நினைவு வைத்து, மனதில் பாக்கியத்தைப் பார்த்து எப்பொழுதும் குஷியில் ஆடிக் கொண்டே இருங்கள். ஆஹா என்னுடைய பாக்கியம். அப்படி மனதின் குஷி வெளியில் தென்பட வேண்டும்

அதை மற்றவர்கள் பார்த்தும் இவர்களுக்கு ஏதோ கிடைத்திருக்கிறது, எதையோ அடைந்திருக்கிறார்கள் என்று அனுபவம் செய்யட்டும். அந்த மாதிரி எப்பொழுதும் குஷியாக இருங்கள். எப்பொழுதும் கவனம் வைத்தீர்கள் என்றால் மாயா குஷியின் பொக்கிஷத்தை பறிக்க முடியாது. நல்லது.

வரதானம் -

பெக்கர் டு பிரின்ஸ்-ன் (ஒன்றுமில்லாதவரிலிருந்து அனைத்தும் நிறைந்தவரின் இளவரசன்) பங்கை நடைமுறையில் செய்யக்கூடிய தியாகி மற்றும் உயர்ந்த பாக்கியம் நிறைந்த ஆத்மா ஆகுக.

எப்படி எதிர்காலத்தில் உலக மகாராஜன் வள்ளலாக இருப்பார். அப்படி இப்பொழுதிலிருந்தே வள்ளல் தன்மையின் சம்ஸ்காரத்தை வெளிப்படுத்துங்கள். யாரிடமிருந்தாவது ஏதாவது ஒன்றைப் பெற்று பிறகு கொடுக்கலாம் என்பது எண்ணத்தில் கூட இருக்க வேண்டாம். இதைத் தான் பெக்கர் டு பிரின்ஸ் என்று சொல்வது. சுயம் தான் பெறுவதற்கான ஆசை உள்ளவர் இல்லை. இந்த அற்ப கால ஆசையிலிருந்தும் பெக்கர். அந்த மாதிரி பெக்கர் தான் சம்பன்னமானவர். யார் இப்பொழுது பெக்கர் டு பிரின்ஸின் பங்கை நடைமுறையில் செய்கிறாரோ அவரைத் தான் நிரந்தர தியாகி மற்றும் உயர்ந்த பாக்கியசாலி என்று கூறுவது. தியாகம் மூலமாக நிரந்தரமான பாக்கியம் தானாகவே உருவாகிவிடுகிறது.

சுலோகன் :

எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பதற்காக பார்வையாளரின் இருக்கையில் அமர்ந்து பார்வையாளராகி ஒவ்வொரு காட்சியையும் பாருங்கள்.

ஓம் சாந்தி

23.01.1979 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" நிரந்தர சுமங்கலி தான் எப்பொழுதும் சம்பன்னமானவராக இருக்கிறார் "

இன்று பாப்தாதா குழந்தைகளின் உயர்ந்த பாக்கியம் மற்றும் நிரந்தர சுமங்கல்யத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு குழந்தையும் பாக்கியம் நிறைந்தவர் மற்றும் நிரந்தரமான சுமங்கலி ஆவார். பாக்கியத்தை உருவாக்குபவர் மூலமாக என்ன பாக்கியம் கிடைத்திருக்கிறோ அதை நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்களா? உலகில் உயர்ந்த வாழ்க்கை என்பது ஒன்று சுமங்கல்யம் இன்னொன்று பாக்கியம் என்ற இந்த இரண்டு விஷயங்களினால் தான் இருக்கிறது. ஒருவேளை எப்பொழுதும் சுமங்கல்யம் இருக்கவில்லை என்றால் முழு வாழ்க்கையும் வீணானதாக அனுபவம் செய்வார்கள். ரசனையற்றது என்று நினைப்பார்கள். ஆனால் உங்கள் அனைவருக்கும் அழியாத சுமங்கல்யம் இருக்கிறது, அது ஒருபொழுதும் அழியாதது. ஏனென்றால் அழியாத அமர்நாத் தான் உங்களுடைய மாங்கல்யதாரர். எப்படி அவர் அமரராக இருக்கிறாரோ அதே போல் உங்களுடைய மாங்கல்யமும் அமர நிலையுடையதாகும். சுமங்கலி தன்னை உலகத்தில் எப்பொழுதும் உயர்ந்தவராக நினைப்பார். சுமங்கலி நிரந்தர (வாழ்க்கை) துணையின் காரணமாக தன்னை திருப்தியானவராக நினைப்பார். இன்றைய நாட்களில் உலகத்தில் எந்தவொரு உயர்ந்த காரியத்தையும் செய்வதற்கு பொறுப்பாளராக சுமங்கலிகளைத் தான் முன் வைப்பார்கள். சுமங்களப்பொழுதும் நன்றாக அலங்கரிக்கப்படுவதற்கு உரியவராக ஆகிறார். சுமங்கல்யம் இல்லை என்றால் அலங்காரமும் இல்லை. சுமங்கல்யத்தின் அடையாளமாக திலகம் மற்றும் திருமாங்கல்யம் இருக்கும். சுமங்கலி எப்பொழுதும் மாங்கல்யத்தின் பொக்கிஷத்தை அனைத்து பொக்கிஷம் என்று அனுபவம் செய்வார். அதாவது தன்னை நிரம்பியவர் என்று நினைப்பார். அந்த மாதிரியே தான் இந்த அனைத்து பழக்க வழக்கங்களும் அழியாத சுமங்கல்யத்தின் நினைவாகத் தான் கடைப்பிடிக்கப்பட்டு வந்து கொண்டிருக்கிறது.

நீங்கள் அனைவரும் உண்மையான சுமங்கலிகள். முழு உலகிலும் மிக உயர்ந்த

ஆத்மாக்கள் என்று வர்ணனை செய்யப்பட்டு பூஜையும் செய்யப்படுகிறீர்கள். இன்றைய உலகம் நிரந்தர சுமங்கலிகளான உங்களுடைய ஜட விக்கிரகங்களை, இந்த ஆத்மாக்கள் அமர்நாத் அதாவது பதிபரமேஸ்வரனின் உண்மையான பார்வதிகள் என்று பார்த்து குஷி அடைகிறார்கள். நீங்கள் உண்மையான சுமங்கலி ஆத்மாக்கள், நிரந்தர நினைவு என்ற திலகமிட்டவர்கள் மற்றும் மரியாதைகளின் (ஆன்மீக சட்ட திட்டங்கள்) காப்புக் கயிறு கட்டியிருக்கும் ஆத்மாக்கள், எப்பொழுதும் தெய்வீக குணங்களின் அலங்காரத்தினால் அலங்கரிக்கப்பட்ட ஆத்மாக்கள். நீங்கள் நிரந்தர சுமங்கலி ஆத்மாக்கள், எப்பொழுதும் அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பிய மற்றும் உலக மாற்றத்தின் உயர்ந்த காரியம் மற்றும் மங்கள காரியத்திற்கு பொறுப்பாளராக இருக்கிறீர்கள். சங்கமயுகத்தின் இந்த உயர்ந்த மற்றும் அழியாத எல்லைக்கப்பாற்பட்ட சுமங்கல்யத்தின் பழக்க வழக்கம் எல்லைக்குட்பட்ட சுமங்கல்யத்திலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அந்த மாதிரி எப்பொழுதும் சுமங்கலி அதாவது எப்பொழுதும் சம்பன்னமாக (நிறைந்து) மற்றும் மகிழ்ச்சி நிறைந்த நிலையை அனுபவம் செய்கிறீர்களா? எப்பொழுதும் தன்னை ஆத்மா மற்றும் பரமாத்மாவின் இணைந்த ரூபத்தில் அனுபவம் செய்கிறீர்களா என்று தன்னைத் தானே கேளுங்கள். தனியாக இருக்கிறீர்களா அல்லது ஜோடியாக இருக்கிறீர்களா? தனியாக இருக்கிறேன் என்று நினைத்தீர்கள் என்றால், பிரிந்த நிலையின் வாழ்க்கையின் அனுபவம் செய்வீர்கள். எப்பொழுதும் சுமங்கலி அதாவது இணைந்திருப்பதாக புரிந்து கொள்வீர்கள் என்றால் சதா சந்தித்துக் கொண்டிருப்பதாக அனுபவம் செய்வீர்கள்.

வெகுகாலமாக பிரிந்து விட்டதினால் தன்னுடைய அழியாத துணைவரையும் மறந்து விட்டீர்கள். மாங்கல்யத்தை இழந்தீர்கள், திலகத்தையும் அழித்து விட்டீர்கள், அலங்காரங்களையும் தொலைத்து விட்டீர்கள். மேலும் பொக்கிஷங்களிலிருந்தும் வஞ்சிக்கப்பட்டவராக ஆகிவிட்டீர்கள். நிரந்தர சுமங்கலியிலிருந்து என்னவாக ஆகிவிட்டீர்கள்? யாசிப்பவர்களாக ஆகிவிட்டீர்கள். பிரிந்திருப்பவர்களாக ஆகிவிட்டீர்கள். இருந்தும் அமர்நாத் வந்து வெகுகாலமாக பிரிந்திருந்த பார்வதிகளுக்கு தன்னுடைய நினைவு திலகமிட்டு சுமங்கலியாக ஆக்கி விட்டார். எப்பொழுது வெகு காலத்திற்குப் பிறகு மிக நல்ல சந்திப்பு என்ன கிடைத்திருக்கிறதோ இந்த சந்திப்பிலிருந்து ஒரு விநாடி கூட வஞ்சிக்கப்படுபவர்களாக (சந்திக்காதவர்களாக) நீங்கள் இல்லை தானே?. அந்த மாதிரி துணையை வைத்து நடந்து கொண்டிருப்பவர்கள் தான் நீங்கள் இல்லையா?. இன்று பாப்தாதா ஒவ்வொரு பார்வதியும் எவ்வளவு அலங்கரிக்கப்பட்டிருக்கிறார் என்று தன்னுடைய பார்வதிகளின் அலங்காரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். அலங்காரமோ

அனைவரும் செய்கிறீர்கள் ஆனால் இருந்தும் வரிசைக்கிரமம் தான். மாலையை அனைவரும் அணிகிறார்கள். ஆனால் எங்கே 9 லட்சம் மாலை மற்றும் எங்கே சாதாரண முத்துக்களின் மாலை. அந்த மாதிரி தந்தையின் குணங்களின் மாலை மற்றும் அமர்நாத்தின் மகிமையின் மாலை அனைவரின் கழுத்தில் விழுந்திருக்கிறது. இருந்தும் வித்தியாசம் இருக்கிறது. வித்தியாசத்தையோ புரிந்து கொள்கிறீர்கள் தான் இல்லையா?. மகிமை பாடுபவரா அல்லது அப்படி ஆகுபவரா? இதில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. அப்படியே மரியாதைகளின் திருமாங்கல்யத்தையோ அனைவரும் அணிந்திருக்கிறீர்கள். அனைவரும் மரியாதைகளின் திருமாங்கல்யத்தினால் அலங்கரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நிரந்தர மரியாதை புருஷோத்தமம் ஆவதில் சிலர் வைரத்திற்குச் சமமாக ஆகியிருக்கிறார்கள். சிலர் தங்கத்திற்கு சமமாக ஆகியிருக்கிறார்கள். மேலும் சிலர் வெள்ளிக்குச் சமமாக ஆகியிருக்கிறார்கள். எங்கே வைரம் மற்றும் எங்கே வெள்ளி. அப்படி வரிசைக்கிரமமாக ஆகிவிட்டார்கள் இல்லையா? எனவே தான் வரிசைக்கிரமமான அலங்காரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தோம் என்று கூறினோம்.

இன்னொரு விஷயம் சுமங்கல்யத்தின் கூடவே பாக்கியத்தையும் பார்த்தோம். உலகியல் முறைப்படி பாக்கியத்தின் ஆதாரம் - உடலின் ஆரோக்கியம், மனதின் குஷி, செல்வத்தின் நிறைவு, சம்மந்தத்தின் நிரந்தர திருப்தி மேலும் தொடர்பில் எப்பொழுதும் வெற்றி அடைபவராக இருப்பது. இந்த அனைத்து விஷயங்களினால் ஒருவரின் பாக்கியத்தை பார்ப்பார்கள். அப்படி இப்பொழுது சங்கமயுகத்தின் உயர்ந்த பாக்கியத்தை அனுபவம் செய்கிறீர்கள் இல்லையா? சங்கமயுகத்தின் ஆன்மீக வாழ்க்கையின் விசேஷங்களைத் தெரிந்திருக்கிறீர்களா? எப்பொழுதும் ஆரோக்கியமாக அதாவது எப்பொழுதும் சுயத்தில் நிலைத்திருப்பதினால் உடலின் கர்ம விளைவுகளை அனுபவிக்கும் கஷ்டமானது கர்ம யோகத்தின் மூலமாக பெரிய ஈட்டியிலிருந்து சிறிய முள்ளாகி விடுகிறது. கர்மத்தின் விளைவுகளை அனுபவிப்பதையும் எல்லைக்கப்பாற்பட்ட நாடகத்திற்குள் விளையாட்டு என்று புரிந்து விளையாடுகிறீர்கள். அப்படி உடலின் நோயானது யோகாவாகமாறிவிட்டது. எனவே எப்பொழுதும் ஆரோக்கியமாக இருக்கிறீர்கள். நோயை நோய் என்று நினைப்பதில்லை. ஆனால் அனேக ஜென்மங்களின் சுமை லேசாகிக் கொண்டிருக்கிறது, கணக்கு முடிந்து கொண்டிருக்கிறது என்று அப்படி நினைப்பதினால் எப்பொழுதும் ஆரோக்கியமானவர் என்று நினைக்கிறீர்கள். கூடவே மனதின் குஷியோ எப்பொழுதும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. மன்மனாபவ ஆவது என்றால் குஷிகளின்

பொக்கிஷங்களினால் நிரம்பியவர் ஆவது. ஞானச் செல்வம் அனைத்து செல்வங்களையும் விட உயர்ந்தது. ஞானச் செல்வம் உள்ளவர்களுக்கு இயற்கையும் தானாகவே அடிமையாகிவிடுகிறது. எங்கு ஞானச் செல்வம் இருக்கிறதோ அங்கு ஸ்தூல செல்வத்திற்கு எந்தக் குறையும் இருக்காது. அப்படி செல்வத்தின் பாக்கியமும் எப்பொழுதும் பிராப்தியாகி இருக்கிறது. மூன்றாவது சம்மந்தம் - அனைத்து உறவுகளால் பரமாத்மாவை உங்களுடையவர் ஆக்கிவிட்டீர்கள். எப்பொழுது விரும்புகிறீர்களோ எப்படிப்பட்ட சம்மந்தத்தை விரும்புகிறீர்களோ அப்படியே அந்த சம்மந்தத்தின் ரசனையை பாபா ஒருவர் மூலமாக எப்பொழுதுமே அனுபவிக்க முடியும். மேலும் சம்மந்தமும் அந்த மாதிரி அவர் கொடுப்பவராக இருக்கிறாரேயன்றி எதையும் பெறுபவராக இல்லை. ஒருபொழுதும் ஏமாற்றமும் கொடுக்காதவர். எப்பொழுதும் அன்பின் உறவை வைத்து நடப்பவர், அந்த மாதிரி அழியாத சம்மந்தத்தினை அனுபவம் செய்கிறீர்கள் தான் இல்லையா?. அடுத்த விஷயம் தொடர்பு. சங்கமயுக வாழ்க்கையில் தொடர்பும் எப்பொழுதும் புனித அன்னப்பறவைகளுடன் தான். தந்தையின் தொடர்பின் ஆதாரத்தினால் பிராமண குடும்பத்தின் தொடர்பு இருக்கிறது, அன்னப்பறவை மற்றும் கொக்குகளின் தொடர்பு இல்லை. ஆனால் பிராமண ஆத்மாக்களின் தொடர்பில் இருக்கிறீர்கள். கொக்குகளுடன் தொடர்பு சேவைக்காக மட்டும் தான். சேவையின் தொடர்பு இருக்கும் காரணத்தினால் எப்பொழுதும் உலக நன்மையின் பாவனை, உலக மாற்றத்தின் விருப்பம் இருக்கிறது. இந்தக் காரணத்தினால் சேவையின் தொடர்பிலும் எந்த துக்க உணர்வு இல்லை. இகழ்ச்சி செய்தாலும் கூட நண்பன், புகழ் பாடினாலும் கூட நண்பன். எப்பொழுதும் சகோதரன் என்ற பார்வை, இரக்கத்தின் உள்உணர்வு இருக்கிறது என்றால், தொடர்பும் உயர்ந்ததாக இருக்கிறது. அந்த மாதிரி உயர்ந்த பாக்கியம், பாக்கியத்தை உருவாக்கு பவரிடமிருந்து கிடைக்கிறது. அப்படி நிரந்தர உயர்ந்த பாக்கியம் நிறைந்தவராக ஆனீர்கள் இல்லையா?. இன்று குழந்தைகளின் இந்த சுமங்கல்யம் மற்றும் பாக்கியத்தைப் பார்த்துக் கொண்டிருந்தோம். நீங்கள் அனைவரும் நிரந்தரமாக சம்பன்ன ஆத்மாக்கள், இந்த பிராமண வாழ்க்கையில் இல்லை என்பதே இல்லை. அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்கள் இல்லையா? எப்பொழுதும் சுமங்கல்யத்தின் திலகம் மற்றும் பாக்கியத்தின் நட்சத்திரம் ஜொலித்துக் கொண்டிருக்கிறது தான் இல்லையா. ஜொலிப்பின் சதவிகிதம் எவ்வளவு இருக்கிறது. ஜொலிப்போ அனைவரிடமும் இருக்கிறது. ஆனால் சதவிகிதத்தின் அனுசாரம் வரிசைக்கிரமமாக இருக்கிறது. வெளிநாட்டினரின் வரிசை எண் எதுவாக இருக்கிறது. உங்களுடைய எண் வெற்றி மாலையில் இருக்கிறது தான் இல்லையா?. பாரதத்தைச் சேர்ந்தவரானாலும் வெளிநாட்டைச் சேர்ந்தவரானாலும் மாலையோ ஒன்றே ஒன்று தான். யார் எப்பொழுதும் சுமங்கல்யம் மற்றும் பாக்கியத்தின் உரிமையுடையவராக

இருக்கிறாரோ, அவர் தான் வெற்றி மாலைக்கும் அதிகாரி ஆகிறார்.

பாப்தாதாவின் முக்கியமான வேலையே குழந்தைகளினுடையது தான். எனவே எப்பொழுதும் குழந்தைகளின் மாலையை ஜபித்துக் கொண்டிருக்கிறார். தந்தையின் மாலையையோ ஆத்மாக்கள் ஜபிக்கிறார்கள். ஆனால் குழந்தைகளின் மாலையை பரமாத்மா ஜபிக்கிறார். அப்படியானா பாக்கியசாலியாக யார் ஆகிறார்கள். நல்லது.

அந்த மாதிரி நிரந்தர சுமங்கலி, எப்பொழுதும் உயர்ந்த பாக்கியத்தின் அதிகாரி, எப்பொழுதும் துணையை துணையாகக் கொண்டு நடப்பவர், எப்பொழுதும் நினைவு என்ற திலகமிட்டவர், மரியாதை நிறைந்த உயர்ந்த ஆத்மாக்களுக்கு, உலக நன்மை செய்யும் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

தாதிகளுடன் சந்திப்பு -

நிரந்தர சுமங்கலிகளின் வர்ணனையாக சாஸ்திரத்தில் எவ்வாறு எழுதப்பட்டுள்ளது. நிரந்தர சுமங்கலிகளின் வர்ணனையாக பட்டத்து ராணிகளின் ரூபத்தில் கூறப்பட்டிருக்கிறது. பிறகு பட்டத்து இராணிகளிலும் வரிசை இருக்கிறது. அதில் சிலர் எப்பொழுதும் சேர்ந்தே இருப்பவர்கள். மேலும் சிலர் சில நேரம் இருப்பவர்கள். அவர்கள் மனிதர்களின் கதையை எழுதியிருக்கிறார்கள், ஆனால் இது ஆத்மாக்கள் மற்றும் பரமாத்மாவின் கதை ஆகும். அவர் தான் யார் அழைத்தாலும் ஒரே நேரத்தில் அனைவரையும் சந்திக்கக் கூடியவர். அப்படி பட்டத்து இராணிகளாக அனைவரும் ஆகிறார்கள். ஆனால் அதிலேயும் வரிசை எண் இருக்கிறது. பிராப்தியிலும் கூட வித்தியாசம் இருக்கிறது. மேலும் பூஜை செய்யப்படுவதிலும் வித்தியாசம் இருக்கிறது. இராதா மற்றும் கோபிகளிலும் வித்தியாசம் இருக்கிறது. இராதாவின் பிராப்தி அவர்களுடையது, கோபிகளின் பிராப்தி அவருடையது. சில விசேஷங்கள் இராதாவின் பங்கில் உள்ளது. மேலும் சில விசேஷங்கள் பட்டத்து இராணிகளின் பங்கில் மற்றும் கோபிகளின் பங்கில் உள்ளது. இதற்கும் ஆழமான இரகசியம் இருக்கிறது. சந்திப்பு விழாவை கொண்டாடுபவர் யார்? அனைத்து சுகங்களின் அனுபவம் பரமாத்மாவின் பங்கின் மூலம் கிடைக்கிறது - அனைத்தையும் விட விசேஷ பாக்கியம் ஆகும். இதற்கும் ஆத்மாக்களின் விசேஷ பங்கோடு சம்மந்தம் இருக்கிறது.

சங்கமயுகத்தில் அனைத்தையும் பிராப்தி செய்திருக்கிறேனா என்று விசேஷமாக இதைத் தான் சோதிக்க வேண்டும். அனைத்து பொக்கிஷங்களையும் எதிரில் வையுங்கள். அனைத்து சம்மந்தங்கபயும் எதிரில் வையுங்கள், அனைத்து குணங்களையும் எதிரில் வையுங்கள், காரியங்களையும் எதிரில் வையுங்கள் - அனைத்து விஷயங்களிலும் அனுபவியாக ஆகியிருக்கிறேனா? காரியத்திலும் கூட எண்ணம், சொல், செயல் அதாவது உறவு நெருக்கம் அப்படி அனைத்து விதங்களிலும் அனுபவியாக இருக்கிறேனா? ஒருவேளை ஏதாவது அனுபவம் இன்னும் ஆகவில்லை என்றால் அந்த அனுபவத்தை முழுமை ஆக்க வேண்டும் ஏனென்றால், சங்கமயுகத்தின் அனுபவம் பின்பு ஒருபொழுதும் கிடைக்க முடியாது. எனவே இப்பொழுது மீதமிருக்கும் சிறிது காலத்தில் அனைத்து விஷயங்களிலும் தன்னை முழுமை ஆக்க வேண்டும். அந்த மாதிரி சோதனையை அவசியம் செய்ய வேண்டும். ஒருவேளை ஏதேனும் ஒரு சம்மந்தத்திலோ குணத்திலோ குறை இருக்கிறது என்றாலும் சம்பூர்ண நிலை மற்றும் அனைத்தும் நிறைந்தவர் என்று சொல்ல முடியாது. தந்தையின் குணம் மற்றும் தன்னுடைய ஆதி சொரூபத்தின் குணம் அனுபவம் ஆகவில்லை என்றால், சம்பன்னமானவர் என்று எப்படிக் கூறமுடியும். எனவே அனைத்திலும் சம்பூர்ணம் ஆக (முழுமை பெற) வேண்டும்.

பிரம்மா பாபா சம்பூர்ணம் ஆகியிருக்கிறார் என்றால், குழந்தைகளும் தந்தையைப் பின்பற்றி நடக்க வேண்டும். அந்த மாதிரி லட்சியம் எப்பொழுதும் இருக்கிறது இல்லையா?. தத்தத்துவம் (நானும் அந்த மாதிரி ஆவேன்) என்ற வரதானம் கிடைத்திருக்கிறது தான் இல்லையா?. பொறுப்பாளர் ஆவது என்றால் ததத்துவத்தின் வரதானி - இப்பொழுதும் மற்றும் பல பிறவிகளிலும் வெவ்வேறு பங்கிலும் இருப்பீர்கள். இப்பொழுதைய தத்தத்துவத்தின் வரதானம் முழுக் கல்பமும் உடன் வருகிறது. சங்கமயுகத்திலும், பூஜைக்குரிய காலத்திலும் மற்றும் பூஜாரியின் காலத்திலும் என்றால் விசேஷ ஆத்மாக்களுக்கு விசேஷ வரதானம் தத்தத்துவம் என்பதாகும். இது மிகக்குறைவானவர்களுக்கு மட்டுமே கிடைக்கிறது. நல்லது.

## பார்ட்டிகளுடன் சந்திப்பு

1) பின்பற்றி நடக்கும் அனேக வழிகளை முடிப்பது என்றால், பிரத்யக்ஷத்தின் கொடியை பறக்க விடுவது -

அனேக வழியில் நடப்பவர்கள், நம் அனைவரின் தந்தை ஒருவர் மேலும் அவர் தான்

இப்பொழுதும் காரியம் செய்து கொண்டிருக்கிறார் என்ற இந்த ஒரு விஷயத்தை ஏற்றுக் கொண்டால், குறைந்தது வார்த்தை, நாம் அனைவரும் ஒருவரின் குழந்தைகள் ஒற்றுமையானவர்கள், மேலும் அந்த ஒருவர் தான் யதார்த்தமானது என்பது அனைத்து பக்கங்களிலும் சென்றடைய வேண்டும். தாரணை செய்தாலும் அல்லது செய்யாவிட்டாலும் கூட ஆனால் ஏற்றுக் கொள்ளட்டும், அதன்படி நடப்பதோ பிற்காலத்து விஷயம் ஆகும். எப்படி சில ஆத்மாக்கள் உங்கள் தொடர்பில் வருகிறார்கள் என்றால், இவர்கள் (நீங்கள்) நல்ல காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறார்கள், இந்த அளவு அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள் என்றால், வெற்றிக் கொடி பறந்து விடும். இதே எண்ணத்தில் அனைவரும் முக்திதாமம் சென்றார்கள் என்றால், எப்பொழுது அவரவர்களின் பங்கைச் செய்வதற்காக வருவார்கள் என்றால் முதலில் கடவுள் ஒருவர் என்ற சம்ஸ்காரம் இருக்கும். இது பொற்காலத்தின் நினைவு ஆகும். அனேகர்களில் மாட்டிக் கொள்வது இது இரும்புக் காலம் ஆகும். அதிகாரத்துடன் மேலும் சத்தியமாக சொல்லுங்கள் சங்கோஜத்துடன் அல்ல. சத்திய நிலை பிரத்யக்ஷத்தின் (வெளிப்பாடு) ஆதாரம் ஆகும். பிரத்யக்ஷம் செய்வதற்காக முதலில் தன்னை பிரத்யக்ஷம் செய்யுங்கள், பயமற்றவர் ஆகுங்கள்.

ஒரே ஒரு பலம் மற்றும் அந்த ஒருவர் மீதான நம்பிக்கையில் ஆடாதது அசையாதவராக இருந்தீர்கள் என்றால் உங்களுடைய இந்த அனுபவம் அனேகர்களை நிச்சயபுத்தி உடையவராக ஆக்கிவிடும். நிச்சயபுத்தி என்ற படகை எவ்வளவு தான் ஒருவர் ஆட்டினாலும், ஒருபொழுதும் எந்த விஷயத்தில் பாதிப்பு ஏற்பட முடியாது.

2) ஆன்மீக மற்றும் அழியாத ஊஞ்சல் அதீந்திரிய சுகம் ஆகும் -

அனைவரும் எப்பொழுதும் சங்கமயுகத்தின் உயர்ந்த பிராப்தியாகிய அதீந்திரிய சுகத்தில் ஊஞ்சலாடிக் கொண்டே இருக்கிறீர்களா? இந்த சுகம் தான் அனைத்தையும் விட உயர்ந்த ஆன்மீக அழியாத ஊஞ்சல் ஆகும், எப்படி யார் செல்லக்குழந்தைகளாக இருப்பார்களோ அவர்களை ஊஞ்சலில் ஆட்டுவார்கள். எப்படி கிருஷ்ணர் செல்லமானவராக இருக்கும் காரணத்தினால் ஊஞ்சலில் ஆட்டுகிறார்கள் இல்லையா?. சங்கமயுக பிராமணர்களின் ஊஞ்சல் அதீந்திரிய சுகத்தின் ஊஞ்சல் ஆகும். அப்படி இதே ஊஞ்சலில் எப்பொழுதும் ஆடிக் கொண்டே இருக்கிறீர்களா? எப்பொழுதாவது தேக அபிமானத்தில் வருவது என்றால் ஊஞ்சலிலிருந்து இறங்கி தரையில் கால் வைப்பது. தரையில் கால் வைக்கிறீர்கள்

என்றால் அழுக்காகி விடுகிறீர்கள். அப்படி மிக உயர்ந்த தந்தையின் குழந்தைகள் எப்பொழுதும் சுத்தமாக இருப்பார்கள், அழுக்காக இருக்க மாட்டார்கள். எனவே எப்பொழுதும் இதே அதீந்திரிய சுகத்தில் ஆடிக் கொண்டே இருங்கள்.

3) அனைவரும் தன்னை தந்தையின் நெருக்கமான ஆத்மாக்கள் என்று எப்பொழுதும் நினைக்கிறீர்களா? யார் தந்தையின் நெருக்கமான ஆத்மாக்களாக இருப்பார்களோ அவர்களுடைய அடையாளம் என்னவாக இருக்கும்? எவ்வளவு நெருக்கமாக இருப்பார்களோ அந்த அளவு தந்தைக்குச் சமமாக இருப்பார்கள். அப்படி சமமான மற்றும் நெருக்கமான ஆத்மா ஆவதற்காக விசேஷமாக எந்த தாரணையின் அவசியம் இருக்கிறது. எப்பொழுதும் நினைவு மற்றும் சேவையில் முழுமையாக ஈடுபட்டு இருங்கள். ஒருவேளை எப்பொழுதும் நினைவு மற்றும் சேவையில் தந்தையைப் பின்பற்றி நடப்பவராக இருந்தீர்கள் என்றால் அவசியம் நம்பர் ஒன்னில் வருவீர்கள். எப்படி பிரம்மா பாபா இதே தாரணை மூலமாக நம்பர் ஒன் பதவியை அடைந்துவிட்டார். அதே போல் நீங்களும் பின்பற்றி நடந்து நம்பர் ஒன் டிவிசனில் வந்து விடுவீர்கள். நம்பர் ஒன் ஆகவோ பிரம்மாவின் ஆத்மா சென்று விட்டது, ஆனால் நீங்கள் அனைவரும் அவருடன் முதல் டிவிசனில் வருவீர்கள். அதாவது, இராஜ்யத்தில் சேர்ந்தே இருப்பீர்கள். எந்த அளவு லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் ஆவீர்களோ அந்த அளவு மாயா தூரத்திலிருந்தே ஓடி விடும். லைட் ஹவுஸின் எதிரில் இருள் என்ற மாயா வர முடியாது. நல்லது.

வரதானம் -

உயர்ந்த நிலையின் ஆதாரத்தினால் நெருக்கத்தின் மூலமாக கல்பத்தின் உயர்ந்த பிராப்தியை உருவாக்கக்கூடிய விசேஷ பாத்திரமேற்று நடிப்பவர் ஆகுக !

இந்த மர்ஜீவா (மறுபிறவி எடுத்த) வாழ்க்கையில் உயர்ந்த நிலையின் ஆதாரம் இரண்டு விஷயங்களில் இருக்கிறது - ஒன்று பரோபகாரி ஆக வேண்டும் இரண்டு பால பிரம்மச்சாரியாக இருக்க வேண்டும். எந்தக் குழந்தைகள் இந்த இரண்டு விஷயங்களில் தொடக்கத்திலிருந்து இறுதிவரை இடைவிடாது இருக்கிறார்களோ, தூய்மை எந்த விதத்திலும் அதாவது சுத்தம் அடிக்கடி துண்டிக்கப்படவில்லையோ மேலும் உலகிற்காகவும் பிராமண குடும்பத்திற்காகவும் யார் எப்பொழுதும் உபகாரியாக

இருக்கிறாரோ, அந்த மாதிரி விசேஷ பாத்திரம் ஏற்று தம் பங்கினை நடிப்பாரோ எப்பொழுதும் பாப்தாதாவின் நெருக்கத்தில் இருப்பார்கள். மேலும் அவருடைய பிராப்தி முழுக் கல்பத்திலும் உயர்ந்ததாக ஆகிவிடுகிறது.

சுலோகன் -

எண்ணம் வீணானதாக இருக்கிறது என்றால் மற்ற அனைத்து பொக்கிஷயங்களும் வீணானதாக ஆகிவிடும்.

11.01.2015 அவ்யக்த நிலையின் அனுபவம் செய்வதற்காக விசேஷ (ஹோம் ஒர்க்) வீட்டு வேலை.

பற்றுதலின் கயிறுகளை சோதனைசெய்யுங்கள். புத்தி எங்காவது வலுவற்ற கயிறுகளில் மாட்டிக் கொண்டு இருக்கவில்லையே? ஏதாவது சூட்சும பந்தனமும் இருக்க வேண்டாம், தன்னுடைய உடல் மீதும் பற்றுதல் இருக்க வேண்டாம் - அந்த மாதிரி சுதந்திரமாக அதாவது தெளிவாக ஆவதற்கு எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவராக ஆகுங்கள். அப்பொழுது தான் அவ்யக்த நிலையில் நிலைத்திருக்க முடியும்.

ஓம் சாந்தி

## “மரியாதை கொடுப்பது தான் மரியாதை பெறுவது”

இன்று பாக்கியத்தை உருவாக்கும் தந்தை அனைத்து பாக்கியசாலி குழந்தைகளின் முக்கியமாக ஒரு விஷயத்தில், தொடக்கத்திலிருந்து இப்பொழுது வரையிலுமான பதிவேட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். எந்த விஷயத்தில்? மரியாதைக்கான ரிக்கார்டை (பதிவேட்டை) பார்த்துக் கொண்டிருந்தோம். மரியாதையும் விசேஷமாக பிராமண வாழ்க்கையின் முன்னேறும் கலைக்கான சாதனமாகும். யார் மரியாதை கொடுக்கிறாரோ அவர் தான் விசேஷ ஆத்மாவாக தற்சமயமும் மற்றும் பல பிறவிகளுக்கும் மற்ற ஆத்மாக்களிடமிருந்து மரியாதை பெறுவதற்கு உரியவர் ஆகிறார். பாப்தாதாவும் இந்த சாகார உலகில் தன் பங்கை செய்து கொண்டே தொடக்கத்திலிருந்து குழந்தைகளுக்கு முதலில் மரியாதை கொடுத்தார். குழந்தைகள் தன்னை விட உயர்ந்தவர்கள் என்று ஏற்றுக் கொண்டு குழந்தைகள் எதிரில் சமர்ப்பணம் ஆனார். முதலில் குழந்தைகள் பின்பு தான் தந்தை. குழந்தைகள் தலையின் கிரீடம் ஆகிறார்கள். குழந்தைகள் தான் இரட்டை பூஜைக்குரியவர் ஆகிறார்கள். குழந்தைகள் தான் தந்தையை பிரத்யக்ஷம் செய்வதற்குப் பொறுப்பாளர் ஆகிறார்கள். தந்தையும் தொடக்க காலத்திலிருந்து மரியாதை வைத்திருந்தார் - அதே போலவே தந்தையைப் பின்பற்றி நடக்கக்கூடிய குழந்தைகள் தொடக்க காலத்திருந்து தன்னுடைய மரியாதையின் ரிக்கார்டை மிக நல்லதாக வைத்தே வந்திருக்கிறார்கள். என்னுடைய ரிக்கார்டு இதுவரை எப்படி இருந்தது என்று தன்னைத் தானே சோதனைசெய்யுங்கள்.

ரிக்கார்டு வைப்பதற்காக முதல் விஷயம் - தந்தை மேல் மரியாதை - இரண்டாவது விஷயம் . . . தந்தை மூலமாக கிடைத்திருக்கும் ஞானத்தின் மேல் மரியாதை - மூன்றாவது விஷயம் - தன் மேல் மரியாதை - நான்காவது விஷயம் - எந்த எந்த ஆத்மாக்கள் - அவர்கள் பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவரானாலும் சரி, அல்லது அஞ்ஞானி ஆத்மாக்களானாலும் சரி, யாரெல்லாம் தொடர்பில் வருகிறார்களோ அந்த ஆத்மாக்கள் மீது ஆன்மிக மரியாதை வைப்பது. இந்த நான்கு விஷயங்களிலும்

என்னுடைய ரிக்கார்டு எப்படி இருந்தது என்று தன்னைத் தானே சோதனைசெய்யுங்கள். நான்கு விஷயங்களிலும் எத்தனை மதிப்பெண்கள் இருக்கிறது? நான்கு விஷயங்களிலும் முழுமை நிலை இருந்ததா அல்லது சக்திக்கேற்றபடி சில விஷயத்தில் மதிப்பெண்கள் நன்றாக இருக்கிறது மற்றும் வேறு சில விஷயங்களில் குறைவாக இருக்கிறதா?

முதல் விஷயம் - தந்தை மேல் மரியாதை என்றால் எப்பொழுதும் என்னவாகஇருக்கிறார் மற்றும் எப்படி இருக்கிறாரோ அந்த சொரூபத்தில் அறிந்து கொண்டு தந்தையுடன் அனைத்து உறவுகளின் மரியாதையைக் கடைபிடித்து நடப்பது. தந்தையின் உறவிற்கு மரியாதை என்றால் தந்தையைப் பின்பற்றி நடப்பது. ஆசிரியரின் சம்மந்தத்திற்கு மரியாதை என்றால், எப்பொழுதும் படிப்பை இடைவிடாது தொடர்ந்து படிப்பதும் மற்றும் சரியான நேரத்தில் வகுப்பில் ஆஜராகியிருப்பதும் ஆகும். கல்வியின் அனைத்து பாடத்திலும் முழு கவனம் வைப்பது - சத்குருவின் சம்மந்தத்தின் மரியாதை வைப்பது என்றால் சத்குருவின் கட்டளைப்படி உடலையும் சேர்த்து உடல் சம்மந்தப்பட்ட அனைத்து உறவுகளையும் மறந்து உடலற்ற சொரூபம் அதாவது சத்குருவிற்கு சமமாக நிராகார (உடலற்ற) நிலையில் நிலைத்திருப்பது. திரும்பி வீடு செல்வதற்கு எப்பொழுதும் தயார் நிலையில் இருப்பது. அப்படியே பிரியதர்ஷனின் உறவிற்கு மரியாதை - ஒவ்வொரு எண்ணம் மற்றும் விநாடியில் அந்த ஒருவரின் அன்பிலேயே மூழ்கியிருக்கும் பிரியதர்ஷினியாக இருப்பது. உன்னோடு தான் உண்பேன், ஒவ்வொரு காரியத்திலும் உன்னுடைய துணையோடு தான் இருப்பேன் என்ற இந்த கற்பு நிலையைக் கடைப்பிடிப்பது. நண்பன் மற்றும் உறவினரின் சம்மந்தத்தின் மரியாதை என்றால் எப்பொழுதும் தன்னுடைய அனைத்து விஷயங்களில் துணையாக இருப்பதின் அனுபவம் செய்வது. அப்படி அனைத்து சம்மந்தங்களின் உறவில் இருப்பது தான் மரியாதை வைப்பது. மரியாதை வைப்பது என்றால் எப்படி ஒரு பழமொழி இருக்கிறது, ஒரு தந்தையைத் தவிர வேறு யாருமே இல்லை என்று அதாவது தந்தை கூறினார், குழந்தைகள் செய்தார்கள் என்பதாகும். அடி மேல் அடி வைத்து நடந்து கொள்வது ஆகும். மனம் சொல்லும் வழி, மற்றவர்கள் சொல்லும் வழி என்ற ஒன்று இல்லவே இல்லை என்பது போல் அகன்று விட வேண்டும். மனம் சொல்லும் வழியை மேலும் மற்றவர்கள் சொல்லும் வழியை எண்ணத்தளவிலும் தொட வேண்டாம், கனவிலும் கூட இருக்க வேண்டாம் அதாவது என்னவென்றே அறியாத நிலை இருக்கட்டும். ஒரே ஒரு ஸ்ரீமத் மட்டும் புத்தியில் இருக்கட்டும். கேட்கிறீர்கள் என்றால் தந்தையிடமிருந்து கேளுங்கள், கூறுகிறீர்கள் என்றாலும் தந்தையின் ஞானத்தைக் கூறுங்கள், பார்க்கிறீர்கள் என்றாலும்

தந்தையைப் பாருங்கள், நடக்கிறீர்கள் என்றாலும் தந்தையுடன் செல்லுங்கள், நினைக்கிறீர்கள் என்றாலும் தந்தையின் விஷயத்தை நினையுங்கள், செய்கிறீர்கள் என்றாலும் தந்தை கூறிய உயர்ந்த காரியத்தை செய்யுங்கள். இதைத்தான் தந்தைக்கு மரியாதை வைப்பது என்ற ரிக்கார்டு ஆகும். முதல் விஷயத்தில் ரிக்கார்டு முதல் தரமானதாக இருந்ததா அல்லது இரண்டாம் தரமுடையதாக இருந்ததா? இடைவிடாது இருந்ததா அல்லது துண்டிக்கப்பட்டு இருந்ததா? ஆடாமல் அசையாமல் இருந்ததா அல்லது மாயாவின் சூழ்நிலைக்கேற்றபடி மரியாதையின் ரிக்கார்டு மேலே கீழே சென்றதா? ரேகை எப்பொழுதும் நேராக இருந்ததா? அல்லது வளைந்து, நெளிந்து கோணலாகஇருந்ததா?

இரண்டாவது விஷயம் - ஞானத்தின் மேல் மரியாதை என்றால் தொடக்கத்திலிருந்து இதுவரை என்னென்ன மகாவாக்கியங்கள் உச்சரிக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த ஒவ்வொரு மகாவாக்கியத்தின் மீது அசைக்க முடியாத நிச்சயம் இருக்க வேண்டும். எப்படி நடக்கும், எப்பொழுது நடக்கும், நடக்கத் தான் வேண்டும், அது என்னவோ சத்தியம் தான்..... இந்த விதமான கேள்வியை எழுப்புவது கூட சூட்சும எண்ணத்தின் ரூபத்தில் சந்தேகத்தை எழுப்புவது. இதுவும் ஞானத்தை அவமரியாதை செய்வதாகும்.

இன்றைய நாட்களில் அற்ப கால அதிசயம் செய்து காண்பிப்பவர்கள் அதாவது தந்தையிடமிருந்து வஞ்சிக்கப்பட்டவர்களாக ஆக்குபவர், மிகச்சரியானவற்றிலிருந்து தூரமாக்கக்கூடிய பெயர் பெற்ற மகான் ஆத்மாக்கள், (சாமியார்கள்) அவர்களை சத்திய வாக்கு கூறும் சுவாமி என்று கூறுகிறார்கள். அப்படி சத்தியாமான குரு, மகான் ஆத்மாக்களைக்கூட படைப்பவர் பரமபிதா ஆவார். அவருடைய சத்திய ஞானத்தில் கேள்வி எழுப்புவது மற்றும் எண்ணத்தை எழுப்புவது என்ற இதுவும் ராயல் ரூபத்தின் சந்தேகம். அதாவது அவமரியாதை ஆகும். ஒரு கேள்வி தெளிவாக்குவதற்காக இருக்கும், இன்னொரு கேள்வி சூட்சும சந்தேகத்தின் ஆதாரத்தில் இருக்கும். இதைத் தான் அவமரியாதை என்று கூறுவது. தந்தையோ அப்படி கூறுகிறார், ஆனால் நடைமுறையிலோ அது சாத்தியமற்றது அல்லது மிகவும் கடினமானது. இவ்வாறான எண்ணங்களை உருவாக்குவது எந்த கணக்கில் சேமிப்பாகும்? இதை சோதனைசெய்யுங்கள்.

மூன்றாவது விஷயம் - தன் மீதான மரியாதை - இதில் கூட தந்தை மூலமாக இந்த

ஆன்மீக உயர்ந்த வாழ்க்கை மற்றும் பிராமண வாழ்க்கையின் என்னென்ன பட்டங்கள் இருக்கின்றன. மேலும் அனேக குணங்கள் மற்றும் காரியத்தின் ஆதாரத்தில் எந்த சொரூபம் மற்றும் நஙிலையஙின் வர்ணனை இருக்கிறது அதாவது எப்படி சுயதரிசன சக்கரதாரி, ஞான சொரூபம், அன்பு சொரூபம், ஃபரிஷ்தா தன்மையின் நிலை இவ்வாறு தந்தை ஞானத்தின் ஆதாரத்தில் என்னென்ன பட்டங்கள் கொடுத்துள்ளாரோ அவ்வாறே தன்னை அனுபவம் செய்வது அல்லது அந்த நிலையில் நிலைத்திருக்க வேண்டும். நான் யாராக இருக்கிறேன் அவ்வாறே தன்னைப் புரிந்து நடந்து கொள்ள வேண்டும். நான் யாராக இருக்கிறேன் என்பதன் பொருள் நான் உயர்ந்த ஆத்மா ஆவேன், தந்தையின் நேரடி குழந்தை ஆவேன், எல்லையற்ற சொத்தின் அதிகாரி ஆவேன், மாஸ்டர் அனைத்து சக்திகளும் நிரம்பியவர் ஆவேன், அப்படி நான் யாராக இருக்கிறேன் என்பதை அப்படியே புரிந்து நடப்பது இதைத் தான் தன் மீதான மரியாதை என்று கூறுவது. நானோ பலஹீனமாக இருக்கிறேன், எனக்கு தைரியம் இல்லை, தந்தை என்னவோ கூறுகிறார் ஆனால் என்னால் அவ்வாறு ஆக முடியாது, நாடகத்தில் என்னுடைய பங்கே பஙின்னால் தான் இருக்கிறது, எவ்வளவு இருக்கிறதோ அந்தளவே போதுமானது, இவ்வாறாக தன் மீதே மனமுடைந்து போவது இதுவும் தன் மீது அவமரியாதை வைப்பதாகும். தன் மீது மரியாதை வைப்பதின் இந்த பதிவேடு எவ்வாறு இருந்தது? என்ற இதையும் சோதனை செய்யுங்கள்.

நான்காவது விஷயம் - ஆத்மாக்கள் மூலமாக சம்மந்தம் மற்றும் தொடர்பில் இருக்கும் ஆத்மாக்களுக்கு மரியாதை - இதன் அர்த்தம் ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும், அவர் பிராமண ஆத்மாவானாலும், அஞ்ஞானி ஆத்மாவானாலும் ஆனால் ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் உயர்ந்த பாவனை அதாவது உயரே தூக்கிவிடு வதற்கான மற்றும் முன்னேறிச் செல்ல வைப்பதற்கான பாவனை இருக்க வேண்டும், உலக நன்மைக்கான விருப்பம் இருக்க வேண்டும், இந்த தாரணையின் மூலம் ஒவ்வொரு ஆத்மாவின் நெருக்கத்தில் வருவது - இது தான் மரியாதை வைப்பது. எப்பொழுதும் ஆத்மாக்களின் குணங்களை மற்றும் விசேஷங்களைப் பார்க்க வேண்டும், அவகுணங்களைப் பார்த்தும் பார்க்க வேண்டாம் அல்லது அதற்கு மேலே ஒருபடி சென்று தன்னுடைய சுபமான உள்ளுணர்வு மூலம் மற்றும் சுப சிந்தனைகளை உடைய மனநிலை மூலம் பிற ஆத்மாக்களின் அவகுணத்தையும் மாற்றம் செய்வது - இதைத் தான் ஆத்மா மீது வைக்கின்ற ஆத்மாவின் மரியாதை என்று கூறுவது. எப்பொழுதும் தன்னுடைய நினைவின் சக்திசாலியான நிலை மூலமாக பிற ஆத்மாக்களுக்கு சகயோகி ஆவது - இது

தான் மரியாதை கொடுப்பது. எப்பொழுதும் 'முதலில் நீங்கள்' என்ற மந்திரத்தை எண்ணம் மற்றும் காரியத்தில் கொண்டு வர வேண்டும், யாருடைய பலஹீனம் அல்லது அவகுணத்தை தன்னுடைய பலஹீனம் அல்லது அவகுணம் என்று புரிந்து கொண்டு, அதனை வர்ணனை செய்வதற்குப் பதிலாக, மேலும் அதை பரவச் செய்வதற்குப் பதிலாக உள்ளடக்கிக் கொள்ள வேண்டும் மற்றும் மாற்றம் செய்ய வேண்டும் - இது தான் மரியாதை. யாருடைய பலஹீனத்தின் என்ற பெரிய விஷயத்தை சிறியதாக ஆக்குவது, மலை போன்ற விஷயத்தை பஞ்சு போன்று ஆக்க வேண்டுமேயன்றி மாறாக பஞ்சு போன்றதை மலை போன்று ஆக்கக்கூடாது - இதைத் தான் மரியாதை என்று கூறுவது. மனமுடைந்தவரை சக்தி நிரம்பியவர் ஆக்குவது, சேர்க்கையின் பாதஞிப்பால் வராமலிருப்பது, எப்பொழுதும் ஊக்கம் உற்சாகத்தில் கொண்டு வருவது இதைத் தான் மரியாதை என்று கூறுவது. அந்த மாதிரி இந்த நான்காவது விஷயத்திலும் எத்தனை மதிப்பெண்கள் இருக்கிறது? என்ற இதையும் சோதனைசெய்யுங்கள். எப்படி மரியாதை கொடுக்க வேண்டும் என்று புரிந்ததா? அந்த மாதிரி நான்கு விஷயங்களிலும் நல்ல முறையில் மரியாதை வைப்பவர்கள் அதன் பிரதிபலனாக உலக ஆத்மாக்களின் மூலம் மரியாதையைப் பெறுவதற்குப் பாத்திரமானவர் ஆகிறார்கள் அதாவது தற்சமயம் உலக நன்மை செய்பவர் என்ற ரூபத்திலும் மேலும் எதிர்காலத்தில் உலக மகாராஜா ரூபத்திலும் மற்றும் இடைப்பட்ட காலத்தில் உயர்ந்த பூஜைக்குரிய ரூபத்திலும் பிரசித்தஞி ஆகிறார்கள். எனவே உலக மகாராஜன் ஆவதற்காக தங்களது பதிவேட்டையும் அதற்கேற்றவாறே ஆக்குங்கள்.

மரியாதை கொடுப்பது என்றால் மரியாதையைப் பெறுவதாகும். கொடுப்பது, பெறுவதாகிவிடுகிறது. ஒன்றை கொடுக்க வேண்டும் மற்றும் பல மடங்கு பெற வேண்டும். எளிதாகிவிட்டது இல்லையா.

கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள் எப்பொழுதும் தந்தையின் அன்பானவர்களாக இருக்கிறார்கள். கர்நாடகத்தின் பூமியானது சுலபமாக பலனை தரக்கூடியது. பாவனையின் காரணமாக நிலம் மிகுந்த பலன் தருவதாக உள்ளது, ஆகையால் வளர்ச்சியும் அதிகமாக ஏற்படுகிறது. நாடகத்தின் படி, கர்நாடகத்தின் பூமிக்கு எளிதாக (தந்தையின்) செய்தி கிடைப்பதற்கான வரதானம் பிராப்தியாகியிருக்கிறது. விசேஷ ஆத்மாக்கள் கூட இந்த பூமியில் சகஜமாக வெளிப்பட முடியும். ஆனால் இப்பொழுது இனி வரும் காலத்திற்காக என்ன செய்ய வேண்டும்? என்ன வளர்ச்சி ஏற்படுகிறதோ அதை விதிப்பூர்வமாக

நடத்துவும் வேண்டும். அனைத்து சக்திகளின் ஆதாரத்தில் பாலனையின் காரியத்தில் எப்பொழுதும் மகாவீர் ஆக வேண்டும். அன்பு மற்றும் சக்தியின் சமநிலை வைப்பது என்ற இதில் விசேஷத்தைக் கொண்டு வர வேண்டும். கள்ளம் கபடமற்ற தந்தையின் கள்ளம் கபடமற்ற நல்ல குழந்தைகள் நல்ல விட்டில்பூச்சிகள் பாப்தாதாவிற்கும் பிடித்தமாக இருக்கிறது. இப்பொழுது தந்தைக்கு பிரியமானவராக இருப்பதின் கூடவே அனைவருக்கும் பிரியமானவராகவும் ஆக வேண்டும். நல்லது.

அப்படி எப்பொழுதும் தந்தையைப் பின்பற்றக்கூடிய, சொற்படி நடக்கக்கூடிய, நம்பிக்கைக்குரிய, கட்டளைப்படி நடக்கக்கூடிய, எப்பொழுதும் கொடை வள்ளலாகவும், வரமளிப்பவராகவும் அதாவது உலகிற்கு நன்மை செய்பவராகவும் இருக்கக்கூடிய, ஒவ்வொரு ஆத்மாவிற்கும் மரியாதை கொடுத்து முன்னேற்றக்கூடிய, எப்பொழுதும் நற்சஞ்சிந்தனையுள்ள ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம் -

பெயர் மற்றும் புகழின் தியாகம் மூலமாக அனைவரது அன்பையும் அடையக்கூடிய உலகின் பாக்கியத்தை உருவாக்கும் வள்ளல் ஆகுக.

எப்படி தந்தையை பெயர் உருவத்திற்கு அப்பாற்பட்டவர் என்று கூறுகிறார்கள் ஆனால் அனைத்தையும் விட அதிகமான பெயர் புகழுக்குரியவர் தந்தை ஆவார், அது போன்றே நீங்களும் அற்ப கால பெயர் புகழிலிருந்து விலகியவராக ஆகுங்கள். அப்பொழுது நிரந்தரமாக அனைவருக்கும் பிரியமானவராக ஆகிவிடுவீர்கள். யார் பெயர் புகழின் யாசித்தலை தியாகம் செய்கிறார்களோ அவர்கள் உலகின் பாக்கியத்தை உருவாக்கும் வள்ளல் ஆகிவிடுகிறார்கள். செய்த காரியத்தின் பலனோ தாமாகவே உங்களுக்கு நிரம்பிய வடிவில் கிடைக்கும். ஆகையால் அற்பகாலத்தின் ஆசைகள் என்றால் என்னவென்றே தெரியாதவர் ஆகுங்கள். பிஞ்சு பழத்தை அருந்தாதீர்கள் (அற்பகால பெயர், புகழை அடையும் ஆசை செய்தல்), அதனை தியாகம் செய்தீர்கள் என்றால் பாக்கியம் உங்கள் பின்னால் வரும்.

சுலோகன் :

நீங்கள் பரமாத்மா தந்தையின் குழந்தை ஆவீர்கள் எனவே உங்களின் புத்தி என்ற கால்கள் எப்பொழுதுமே சிம்மாசனத்தில் இருக்கட்டும்.

ஓம் சாந்தி

30.01.1979 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுபடுவதற்கான வழி "

இன்று பாப்தாதா அனைத்து வெகு காலத்திற்கு பிறகு கண்டெடுக்கப்பட்ட அன்பான குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறார். எப்படி பாப்தாதா தொலைவானதேசத்திலிருந்து குழந்தைகளைச் சந்திப்பதற்காக வருகின்றாரோ அவ்வாறே குழந்தைகளும் தொலைவானதேசங்களிலிருந்து தந்தையை சந்திக்க வருகின்றனர். இந்த ஆன்மீக சந்திப்பு அதாவது தந்தை மற்றும் குழந்தைகளுக்கிடையேயான சந்திப்பு கல்பத்தில் இந்த சங்கமயுகத்தில் மட்டும் தான் ஏற்படுகிறது - இப்பொழுதில்லையேல் ஒருபொழுதும் இல்லை. பாப்தாதா விசேஷமாக அனைத்து குழந்தைகளின் தாரணைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். காதால் கேட்பதை பல ஜென்மங்களாக செய்தே வந்திருக்கிறீர்கள் ஆனால் இந்த ஆன்மீக ஜென்மத்தில் அதாவது பிராமண வாழ்க்கையின் விசேஷமே தாரணை சொரூபம் ஆவதாகும். அப்படி பாப்தாதா ரிசல்ட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு பிராமண குழந்தையும் காரியம் செய்வதற்கு முன்பு திரிகாலதரிசி நிலையில் நிலைத்திருந்து மூன்று காலங்களையும் தெரிந்தவராகி காரியத்தின் முதல், இடை, கடையின் நிலைகளைத் தெரிந்து செயல்களைச் செய்கின்றனரா? மேலும் காரியங்களைச் செய்யும் நேரத்தில் பார்வையாளர் நிலையில் நிலைத்திருந்து தனது பங்கை செய்கின்றனரா? அந்த மாதிரி தனது பங்கைச் செய்பவர்கள் தற்சமயத்திலும் மற்றும் எதிர்காலத்திலும் பூஜைக்குரியவராகி அனேக ஆத்மாக்களுக்கு முன்பு உதாரணமானவர் ஆகிறார். அப்படி திரிகாலதரிசி நிலை, பார்வையாளர் நிலை மற்றும் உதாரண ரூபம் என்ற இந்த மூன்று நிலைகளில் தற்போது எதுவரை வந்து சேர்ந்துள்ளீர்கள்? எப்படி சாகார தந்தையை பார்த்தீர்கள் அது போன்று தந்தையைப் பின்பற்றுகிறீர்களா? ஒவ்வொரு காரியத்தையும் திரிகாலதரிசியாகி செய்வதினால் ஒருபொழுதும் எந்தவொரு காரியமும் பாவக் காரியம் ஆக முடியாது, எப்பொழுதும் நல்ல காரியமாக இருக்கும். திரிகாலதரிசி ஆகாத காரணத்தினால் தான் வீணான காரியம் அல்லது பாவக் காரியம் ஆகிவிடுகிறது. அதுபோன்றே பார்வையாளர் நிலையில் நிலைத்திருந்து காரியம் செய்வதினால் எந்தவொரு காரியத்தின் பந்தனத்திலும் கட்டுண்ட ஆத்மாவாக ஆக மாட்டார்கள். காரியத்தின் பலன் உயர்ந்ததாக இருக்கக்கூடிய

காரணத்தினால் கர்ம சம்மந்தத்தில் வருவார்கள், பந்தனத்தில் அல்ல. எப்பொழுதும் காரியம் செய்து கொண்டிருந்த போதும் விலகியவராக மற்றும் தந்தைக்கு அன்பானவராக அனுபவம் செய்வார்கள், அந்த மாதிரி விலகிய மற்றும் அன்பான ஆத்மாக்கள் தற்சமயத்திலும் அனேக ஆத்மாக்களுக்கு முன் ஒரு உதாரணமாக அதாவது எடுத்துக்காட்டாக ஆகிறார்கள், அம்மாதிரியானவர்களைப் பார்த்து அனேக ஆத்மாக்கள் தாமும் கர்மயோகி ஆகிவிடுகிறார்கள் மற்றும் எதிர்காலத்திலும் அவர்கள் பூஜைக்குரியவர்கள் ஆகிறார்கள். அந்த மாதிரி தந்தைக்குச் சமமாக ஆகியிருக்கிறீர்களா? பந்தனத்திலிருந்து விடுபட்ட ஆத்மா ஆகியிருக்கிறீர்களா? அனைத்து சம்மந்தங்களையும் தந்தையோடு இணைப்பது என்றால் அனைத்து பந்தனங்களிலிருந்து விடுபட்டவர் ஆவது. அனேக பிறவிகளின் அனேக விதமான பந்தனங்களை முடிப்பதற்கான சுலபமான சாதனம் தந்தையிடம் அனைத்து சம்மந்தங்களையும் வைத்துக் கொள்வது. ஒருவேளை ஏதேனும் பந்தனத்தை அனுபவம் செய்கிறீர்கள் என்றால், அதற்கான காரணம் தந்தையிடம் சம்மந்தம் வைக்கவில்லை என்பதாகும். அப்படி இதுவரையில் எந்த எந்த விதமான பந்தனம் இருக்கிறது? என்ற ரிசல்ட்டை பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். முதலாவது, தேகத்தின் பந்தனத்திற்கான காரணம் ஆத்மீக சம்மந்தத்தை தந்தையோடு இணைக்கவில்லை. தந்தையின் நினைவு மற்றும் ஆத்மீக சொரூபத்தின் நினைவின் தாரணை ஏற்படவில்லை. முதல் பாடமே பலஹீனமாக உள்ளது. நொடிப்பொழுதில் தேகத்திலிருந்து விலகியவர் ஆவதற்கான பயிற்சியானது, நொடிப்பொழுதில் தேகத்தின் பந்தனத்திலிருந்து விடுபட்டவர் ஆக்கிவிடுகிறது. சுவிட்ச் ஆன் செய்யப்பட்டது என்றதும் உடனேயே முடிந்தது. எப்படி அறிவியல் சாதனங்கள் மூலமாகவும் பொருட்கள் நொடிப்பொழுதில் மாற்றம் பெற்று விடுகிறது அது போன்று அமைதியின் சக்தி மூலமாகவும், ஆத்மீக சம்மந்தத்தின் மூலமாகவும் பந்தனம் அழிந்து போகிறது. இதுவரையிலும் ஒருவேளை முதல் நிலையான தேகத்தின் பந்தனத்திலேயே இருக்கிறார்கள் என்றால் என்னவென்று கூறுவது! இன்னும் முதல் வகுப்பில் தான் இருக்கிறார்கள். எப்படி சில மாணவர்கள் பலஹீனமாக இருக்கும் காரணத்தினால் சில வருடங்கள் ஒரே வகுப்பிலேயே இருக்கிறார்கள் - எனவே யோசித்துப் பாருங்கள், ஈஸ்வரிய படிப்பின் கடைசி நேரம் நடந்து கொண்டிருக்கிறது, ஆனால் இதுவரையிலும் தேகத்தின் சம்மந்தத்தின் முதல் கட்டத்திலேயே இருக்கிறார்கள். அந்த மாதிரியான மாணவர்களை என்னவென்று சொல்வது? எந்த வரிசையில் வருவார்கள்? அடையக்கூடியவர்களின் வரிசையிலா அல்லது பார்க்கக்கூடியவர்களின் வரிசையிலா? எனவே இதுவரையிலும் முதல் வகுப்பிலேயே அமர்ந்திருக்கவில்லையே? மற்ற தர்மத்தில் (தாரணையில்) நிலைத்திருப்பது சகஜமாக இருக்கிறதா அல்லது சுயதர்மத்தில்

நிலைத்திருப்பது சகஜமாக இருக்கிறதா? சுயதர்மம் என்றால் உடலற்ற நிலை அதாவது ஆத்மீக சொரூபம். பிற தர்மம் என்பது தேக சொரூபம், எது சகஜகமாக அனுபவம் ஆகிறது? எப்படி பெயர் சகஜ இராஜயோகி என்றிருக்கிறதோ அது போன்றே அனுபவம் ஆகிறதா? அல்லது பெயர் மற்றும் காரியத்தில் வித்தியாசம் இருக்கிறதா?

இரண்டாவது பந்தனமானது, மனதின் பந்தனம் ஆகும். இந்த மனதின் பந்தனத்திற்கான சாதனம் சதா மன்மனாபவ என்றிருப்பது. இந்த முதல் மந்திரத்தை எப்பொழுதும் வாழ்க்கையில் அனுபவம் செய்கிறீர்களா? எப்பொழுதும் ஒரு தந்தையைத் தவிர வேறெவரும் இல்லை என்ற இந்த முதல் வாக்குறுதியை நிறைவேற்றுவது என்றால் மனதின் பந்தனங்களிலிருந்து விடுபடுவதாகும். எனவே முதல் வாக்குறுதியை நிறைவேற்ற முடிகிறது தான் இல்லையா? சொல்ல மட்டும் முடிகிறதா அல்லது செயல் வடிவிலும் நிறைவேற்ற முடிகிறதா? நிறைவேற்றுவது என்றால் அடைவது - எதுவரையில் பந்தனத்திலிருந்து விடுபட்டவர் ஆகியுள்ளோம்? என்று இதையும் சோதனை செய்யுங்கள். எப்பொழுதும் அனைத்து ஈர்ப்புகளிலிருந்தும் விலகி ஒரே ஈடுபாட்டில் மூழ்கியிருக்கிறீர்களா? ஒரே ரசனையில் இருக்கிறீர்களா? ஆடாத அசையாத நிலையிலிருக்கிறீர்களா அல்லது மேலே, கீழே (சஞ்சல்) ஆட்டம் காண்கிறீர்களா? ஒருவேளை இதுவரையிலும் சஞ்சலமாகவே இருக்கிறீர்கள் என்றால், என்னவென்று கூறுவது? இதுவரையிலும் சிறிய குழந்தையாக இருக்கிறீர்கள் மற்றும் நிலையோ வானபிரஸ்தியினுடையதை வந்தடைந்து விட்டது, இப்படிப்பட்ட நிலையின் நேரத்தில் ஸ்திரமற்ற சஞ்சலமான நிலையா! குழந்தைத்தன்மையின் நிலை பிடித்தமாக இருக்கிறதா என்ன? பிராமண ஜென்மத்தின் அதிகாரமான மாஸ்டர் சர்வ சக்திவான் நிலையை பிராப்தி செய்து விட்டீர்களா? அதிகாரத்தின் எதிரே இந்த தேகம் அல்லது மனதின் பந்தனம் நிலைத்திருக்க முடியுமா? நடைமுறை அனுபவம் என்னவாக இருக்கிறது? எப்பொழுதும் இந்த மூன்று விஷயங்களை நினைவில் கொள்ளுங்கள் - திரிகாலதரிசி, பிறகு பார்வையாளர் நிலை மற்றும் அதனுடைய ரிசல்ட்டாக உலகின் முன்பு உதாரணமான ரூபம். இந்த நிலையை எப்பொழுதும் நினைவில் வைத்தீர்கள் என்றால் எப்பொழுதும் பந்தனத்திலிருந்து விடுபட்டவர் ஜீவன்முக்த் நிலையின் அனுபவம் செய்வீர்கள். முயற்சிக்கான நேரம் வெகுவாக கடந்து சென்று விட்டது. இப்பொழுது சிறிதிலும் சிறிதளவே மீதமுள்ளது. நேரத்திற்கு ஏற்றாற் போன்று இப்பொழுது தன்னுடைய ரிசல்ட்டை சோதனைசெய்யுங்கள். இந்த சந்திப்பதற்கான நேரமும் மிகக்குறைவாகத் தான் மீதமிருக்கிறது. ஆகையால் இப்பொழுது நிறைய கேட்டு விட்டீர்கள், கேட்பது என்றால்

வாய்மொழி மூலமாகத் தான் இந்த பிராமண பிறவியை எடுத்தீர்கள். எனவே தான் வாய்வழிப்பிறந்தவர்கள் என்று கூறுகிறீர்கள். எனவே ஜென்மம் எடுத்தது தொட்டே கேட்ட வண்ணம் வந்துள்ளீர்கள், இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? கேட்ட பிறகு அதன் சொரூபமாக ஆக வேண்டும், ஆகையால் கடைசி நிலை நினைவு சொரூபத்திற்கானது ஆகும். அந்த மாதிரி நிலைக்கு எது வரை வந்து சேர்ந்துள்ளீர்கள்? சீசனின் ரிசல்ட் கூட என்னவாக இருக்கிறது? கேட்பதும் சந்திப்பதுமா அல்லது சமமாக ஆவதா? அன்பிற்கான நிரூபணமே சமமாக ஆவதாகும். எந்த நிலையின் மேல் தந்தையின் அன்பு இருக்கிறதோ அந்த நிலையை அடைய வேண்டும். அந்த மாதிரி அன்பானவர் தான் இல்லையா? எப்பொழுதும் தன்னுடைய சம்பூர்ண சொரூபத்தை எதிரில் வைப்பதன் மூலம் மாயாவை எதிர்கொள்வது மிகவும் சுலபமாகிவிடும். பாப்தாதா இந்த ரிசல்ட்டைத் தான் பார்க்க விரும்புகிறார் - இந்த ரிசல்ட்டை நடைமுறையில் கொண்டு வருவதற்காக விசேஷமான தாரணைகளை நினைவில் வையுங்கள் - 1) இனிமைத்தன்மை மற்றும் 2) பணிவு. இந்த விசேஷமான இரண்டு தாரணைகளினால் எப்பொழுதும் உலகிற்கு நன்மை செய்பவர் மகாதானி வரதானி ஆகிவிடுவீர்கள். மேலும் சகஜமாகவே அன்பிற்கான நிரூபணத்தையும் கொடுக்க முடியும். இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? இதைத் தான் செய்ய வேண்டும் மற்றும் சிலவற்றை விடவும் வேண்டும். எதை விட வேண்டும்? ஞானம் நிறைந்த ஆத்மா ஆன காரணத்தினால் - பக்தியின் சம்ஸ்காரமான யாசிப்பவராகி கேட்பதை அல்லது வெறும் தந்தையின் மகிமை மற்றும் கீர்த்தனை பாடுவதை, மனம் மூலமாக இங்கும் அங்கும் அலைவதை, தன்னுடைய பொக்கிஷங்களை வீணாக இழப்பதை இவ்வாறான பழைய சம்ஸ்காரங்களுக்கு நிரந்தரமாக முடிவு கட்டுங்கள். அதாவது பழைய சம்ஸ்காரங்களை அழித்து விடுங்கள். இது தான் விடுவது. இப்பொழுது என்ன செய்ய வேண்டும் மற்றும் என்ன விட வேண்டும் என்று புரிந்ததா? ஞானம் நிறைந்த ஆத்மா என்றால் வெற்றி அடைபவர். நல்லது.

அந்த மாதிரி நொடிப்பொழுதில் சுய மாற்றம் செய்யக்கூடிய, சுய மாற்றம் மூலமாக உலக மாற்றம் செய்யக்கூடிய, அனைத்து பந்தனங்களிலிருந்து விடுபட்டு எப்பொழுதும் யோக சொரூபமான, பந்தனமற்ற வாழ்க்கையுள்ள, பாப்தாதாவிற்கு அன்பான அதாவது சமமாக ஆகக்கூடிய அந்த மாதிரி எப்பொழுதும் வெற்றி ரத்தினங்களாக இருப்பவர்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் சந்திப்பு -

1. எப்பொழுதும் தன்னை பதமாபதம்பதி (பல மடங்கு செல்வந்தர்) என்று நினைக்கிறீர்களா? யார் ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு வருமானத்தை சேமிப்பு செய்கிறாரோ அவர் என்னவாக ஆகி விட்டார்? பதமாபதம்பதி ஆகி விட்டார் இல்லையா! உங்கள் எதிரில் தற்காலத்தின் நம்பர் ஒன் செல்வந்தர் கூட எப்படி இருக்கிறார்? யாசிப்பவராக. ஏனெனில் எவ்வளவு செல்வம் இருக்குமோ அந்த செல்வத்தின் கூடவே வேறு என்ன இருக்கிறது? துக்கமும் இருக்கிறது. எனவே யார் துக்கமானவராக இருப்பாரோ அவர் சுகத்தை யாசிப்பவராக இருப்பார் இல்லையா? எனவே யார் எவ்வளவு தான் பெரிய, உலகில் பெயர் புகழ் வாய்ந்த செல்வந்தராக இருந்தாலும், ஆனால் உங்கள் எதிரே அனைவரும் யாசிப்பவர்கள் ஆவர். யார் இப்பொழுது பெயர் புகழ் வாய்ந்த செல்வந்தர்களாக இருக்கின்றனரோ, உங்களிடம் ஞானம் கேட்பதற்கு தயாராக இல்லையோ, யாருக்கு யோசிப்பதற்கும் நேரம் இல்லையோ அவர்கள் அனைவரும் உங்களுக்கு முன் யாசிப்பவர்களின் வரிசையில் இருப்பார்கள், ஒரு நொடி சுகத்திற்காக ஏங்குவார்கள், துடிப்பார்கள் - அந்த மாதிரி நேரத்தையும் நடைமுறையில் காண்பீர்கள். அந்த மாதிரி நேரத்தில் நீங்கள் அனைவரும் பெரும் வள்ளல் நிலையில் நிலைத்திருந்து அனைவருக்கும் தானம் அளிப்பீர்கள். எனவே, நாம் உலகில் அனைவரைக்காட்டிலும் பெரிய செல்வந்தர் என்ற இந்தளவு போதை இருக்கிறதா? ஆரம்ப காலத்தில் கூட ஸ்தாபனை நேரத்தில் செய்தித்தாளில் என்ன போடப்பட்டது - மக்களோ ஓம் மண்ட- அழிந்தே விட்டது என்று கூறினார்கள், ஆனால் தந்தையோ ஓம் மண்ட- உலகிலேயே மிகச் செல்வந்தமானது, அனைத்தும் நிரம்பியது என்று ஊடகங்களில் செய்தியை போட வைத்தார். உலகில் பிற அனைவரும் பசியால் இறக்க முடியும், ஆனால் தந்தையின் குழந்தைகள் பசியால் இறக்க முடியாது ஏனெனில் 'அமர் பவ' என்ற வரதானம் கிடைத்துள்ளது. யார் வரதானியாக இருக்கிறாரோ அவர் எப்பொழுதும் செல்வந்தர் ஆவார். எனவே அப்படிப்பட்ட போதை மற்றும் குஷியானது நிரந்தமாக இருக்கட்டும், அவ்வப்பொழுது அல்ல. அமர் பவ என்றால் நிரந்தரமாக எப்பொழுதும் குஷியில் தந்தையோடு சமமான நிலையின் நடனத்தை ஆடிக்கொண்டே இருங்கள். யார் சமமாக இருக்கிறாரோ அவர் தான் தந்தையோடு நடனமும் ஆட முடியும். எப்பொழுதும் சமமாக இருப்பது தான் நடனம் புரிவது அப்படி என்றால் அந்த மாதிரியான நடனம் ஆடுகிறீர்களா? யார் இங்கு தந்தைக்குச் சமமாக இருக்கிறார்களோ அல்லது குஷியில் நடனமாடிக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் தான் எதிர்காலத்திலும் சேர்ந்தே நடனம் ஆடுவார்கள். பிரம்மா பாபாவுடன் சேர்ந்து தனது பங்கைச் செய்வது, எனவே தந்தைக்குச் சமமாக ஆனால் தான் பங்கைச் செய்ய முடியும் இல்லையா?

சக்தி சேனை எப்பொழுதும் வெற்றிக் கொடியை பறக்க விடுபவர்கள் தான் இல்லையா? முழு உலகமும் பார்க்குமளவிற்கு அந்த அளவு உயர்ந்த கொடியாக இருக்கிறதா? கொடியை அவசியம் பறக்க விடுகிறீர்கள். ஆனால் இப்பொழுது உயரே பறக்க விட வேண்டும். ஒருவேளை ஏதாவது வசீகரிக்கும் பொருள் எங்காவது பார்க்கத் தென்படுகிறது என்றால். அனைவரின் பார்வையும் இயல்பாகவே செல்லும், விரும்பாவிட்டாலும் தாமாக ஈர்ப்பு ஏற்படும். எனவே அந்த மாதிரி ஈர்க்கக்கூடிய கொடியை பறக்க விடுங்கள், விரும்பாவிட்டாலும் அனைவரின் பார்வை அதன் பால் ஈர்க்கப்படட்டும். அந்த மாதிரியான அடித்தளம் இப்பொழுது மாற்றம் ஆகிக் கொண்டிருக்கிறது, ஒருவேளை சத்தியமான காரியம் ஒன்று இருக்குமானால். அது இவர்களுடையதே ஆகும் என்ற இந்த வார்த்தை இப்பொழுது அனைவரின் காதுகளிலும் ஒலிக்கப் போகிறது. அனைத்து பக்கங்களிலும் நம்பிக்கையின் நிலை ஏற்படும் மற்றும் இந்தப் பக்கம் நம்பிக்கை தீபம் பார்க்கத் தென்படும். இதற்காக தொடர்பை அதிகரியுங்கள். தேவையான நேரத்திற்கு மட்டுமல்லாமல் நிரந்தரமாக தொடர்பை ஏற்படுத்துங்கள், ஏதாவது நிகழ்ச்சிகளை நேரத்திற்கு ஏற்றாற்போன்று வைத்துக் கொண்டே இருங்கள். எங்களுக்கு யாரும் கூறவில்லை என்று கடைசியில் யாரும் புகார் கூற முடியாத அளவிற்கு ஒவ்வொரு துறையின் சேவை செய்ய வேண்டும், ஆகையால் அனைத்து தர்மத்தினருக்கும் அவசியம் செய்தி அளிக்க வேண்டும்.

2. தாழ்ந்த சூழ்நிலையிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான வழி - தந்தையின் துணை - தன்னை இந்த பழைய உலகத்திலிருந்து கொண்டே தாமரை மலருக்குச் சமமாக விலகியவராக மற்றும் தந்தைக்கு மிகவும் அன்பானவராக அனுபவம் செய்கிறீர்களா? எப்படி தாமரை மலரானது சேற்றிலிருந்தாலும் விலகியதாக இருக்கிறது, அது போன்று பழைய உலகில் இருந்து கொண்டே, தமோகுணமான தீய சூழ்நிலையிலிருந்து விலகியவராக இருக்கிறீர்களா? தமோகுணமான சூழ்நிலையின் பாதிப்பு ஏற்படவில்லையே? யார் எப்பொழுதும் தந்தையை தன்னுடைய துணைவனாக ஆக்குகின்றார்களோ மற்றும் சாட்சியாகி தனது பங்கை செய்கிறார்களோ அவர்கள் எப்பொழுதும் விலகியவராக இருப்பார்கள். எப்படி வாட்டர் ப்ரூஃப் இருக்கிறது இல்லையா, எவ்வளவு தான் தண்ணீர் பட்டாலும் ஆனால் ஒரு துளி கூட அதன் மீது பாதிப்பை ஏற்படுத்தாது. அது போல் எப்பொழுதும் மாயா ப்ரூஃப் ஆக இருக்கிறீர்களா அல்லது மாயாவின் பாதிப்பு ஏற்படுகிறதா? எப்பொழுது தந்தையின் துணையை தவிர்க்கிறீர்களோ

அப்பொழுது தான் பாதிப்பு ஏற்படுகிறது. நீங்கள் தனித்திருப்பதை பார்த்து மாயாவும் தன்னுடைய தாக்குதலைச் செய்கிறது. எப்பொழுதும் உடன் இருந்தீர்கள் என்றால், மாயாவின் தாக்குதல் ஏற்பட முடியாது. அனைத்து குழந்தைகளுக்கும் மாயாவை வென்றவர் ஆவதற்கான வரதானம் இருக்கிறது. ஆனால் மாயாவை வென்றவர் ஆவதற்காக சோதனைத்தாளும் ஏற்படும் இல்லையா? தேர்ச்சி அடையவில்லை என்றால் கௌரவத்துடன் தேர்ச்சி அடைபவர் என்று எவ்வாறு கூறப்படுவீர்கள். நாங்கள் சர்வ சக்திவான் உடன் இருக்கிறோம் என்ற இதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். எப்படி ஒருவேளை யாராவது பலம் பொருந்தியவரின் துணை ஒருவருக்கு இருக்கிறது என்றால் எவ்வளவு பயமற்றவராக இருக்கிறார், இங்கேயோ சர்வ சக்திவானின் துணை இருக்கிறது என்றால் எவ்வளவு பயமற்றவராக இருக்க வேண்டும். எப்பொழுதும் தன்னுடைய பாக்கியத்தின் நட்சத்திரம் ஜொலித்துக் கொண்டிப்பதாக பாருங்கள். உலகத்தினர் இன்றளவிலும் உங்களுடைய பாக்கியத்தை (பக்தியில்) வர்ணனை செய்து கொண்டிருக்கிறார்கள், எனவே தன்னுடைய பாக்கியத்தின் நட்சத்திரத்தைப் பார்த்துக் கொண்டே இருங்கள்.

3. டபுள் லைட்டின் நிலையின் மூலம் மலை போன்ற காரியம் கூட பஞ்சுக்கு சமமாக ஆகும் - அனைவரும் டபுள் லைட் ஆக இருக்கிறீர்கள் இல்லையா! எந்த விதமான சுமையின் அனுபவம் இருக்கக்கூடாது. இது தான் டபுள் லைட் நிலை ஆகும். டபுள் லைட் என்றால் புள்ளி சொரூபமான ஆத்மாவில் கூட எந்த சுமையும் இல்லை. மேலும் எப்பொழுது ஃபரிஷ்தா ஆகிவிடுகிறார்களோ அதிலும் எவ்வித சுமையும் இல்லை. எனவே ஒன்று தன்னுடைய புள்ளி வடிவம் நினைவிருக்கட்டும் அல்லது காரியத்தில் ஃபரிஷ்தா சொரூபம் நினைவிருக்கட்டும் - அந்த மாதிரியான நிலையில் நிலைத்திருப்பதினால் எவ்வளவு பெரிய காரியமாக இருந்தாலும், செய்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார் என்று அந்த மாதிரி அனுபவம் செய்வீர்கள். நிமித்தமானவர் என்று புரிந்து கொண்டால் டபுள் லைட்டாக இருப்பீர்கள். டிரஸ்டி ஆகி நடப்பதினால் சுமையும் இல்லை மற்றும் வெற்றியும் அதிகம் ஏற்படும். கிரகஸ்தி என்று புரிந்து கொள்வதின் மூலம் உழைப்பும் அதிகம் மற்றும் வெற்றியும் குறைவாக ஏற்படும். எனவே எப்பொழுதும் டபுள் லைட் சொரூபத்தின் நினைவின் சக்தியில் இருங்கள். அப்பொழுது மலைபோன்ற காரியம் கூட கடுகு போன்று கூட அல்ல. ஆனால் பஞ்சுக்கு சமமாக ஆகி விடும். கடுகு ஓரளவு உறுதியாக இருக்கும், அதைக் காட்டிலும் லேசானதாக, பஞ்சுக்கு சமமாக அதாவது நடக்க முடியாததும் நடந்து விடும். நல்லது.

4. தன்னுடைய நிலையை சக்திசாலியாக ஆக்குவதற்கான வழி - உயர்ந்த நினைவு - எப்பொழுதும் தன்னை உயர்ந்த ஆத்மா என்று புரிந்து கொண்டே ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியத்தை உயர்ந்ததாகச் செய்கிறீர்களா? ஏனெனில் எப்படி நினைவு இருக்கிறதோ அப்படி நிலையும் தானாகவே ஏற்பட்டு விடுகிறது. எனவே நான் மகான் உயர்ந்த ஆத்மா என்ற நினைவு இருக்கிறதா? நினைவு நிரந்தரமாக விசேஷ ஆத்மாவினுடையதாக இருக்கிறதா அல்லது போக போக சாதாரணமாக ஆகிவிடுகிறதா? என்று எப்பொழுதும் சோதனைசெய்யுங்கள். நான் பிராமணன் உலகிலேயே உயர்ந்தவன் ஆவேன் என்ற தன்னுடைய இந்த பதவி நினைவிருக்கட்டும். எப்பொழுதும் தன்னுடைய நெற்றியில் நினைவுத்திலகம் இடப்பட்டு இருக்கட்டும். லௌகீக முறையிலும் கூட பிராமணர் திலகம் வைக்கின்றனர், இந்த அடையாளமானது இப்பொழுதைய சங்கமயுகத்திற்கானது ஆகும், எனவே எப்பொழுதும் திலகம் அழியாது இருக்கிறதா? மாயா அழித்து விடுவதில்லையே? எப்பொழுதும் கவனம் இருக்கிறது என்றால் நினைவுத்திலகம் அழியாததாக இருக்கும். நல்லது - ஓம் சாந்தி.

வரதானம் -

மூன்று சேவைகளின் சமநிலை மூலமாக அனைத்து குணங்களின் அனுபவம் செய்யக்கூடிய குணம் நிறைந்தவர் ஆகுக.

எந்தக் குழந்தைகள் எண்ணம், சொல் மற்றும் ஒவ்வொரு காரியம் மூலமாக சேவையில் மூழ்கியிருக்கிறார்களோ அவர்கள் தான் வெற்றி அடைபவர் ஆகிறார்கள். மூன்றிலும் மதிப்பெண்கள் சமமாக இருக்க வேண்டும், முழு நாளிலும் மூன்று சேவைகளிலும் சமநிலை இருந்தது என்றால் கௌரவத்துடன் தேர்ச்சி அடைபவர் அல்லது குணம் நிறைந்தவர் ஆகி விடுவார்கள். அவர்கள் மூலமாக அனைத்து தெய்வீக குணங்களின் அலங்காரம் பார்க்க தெளிவாகத் தென்படும். ஒருவர் இன்னொருவருக்கு தந்தையின் குணங்களின் அல்லது தன்னுடைய தாரணைகளின் குணங்களின் சகயோகம் கொடுப்பது தான் குணம் நிறைந்தவர் ஆவது ஏனெனில் குணதானம் அனைத்தைக் காட்டிலும் பெரிய தானம் ஆகும்.

சுலோகன் -

நிச்சயம் என்ற அஸ்திவாரம் உறுதியாக இருக்குமானால் உயர்ந்த வாழ்க்கையின் அனுபவம் தானாக ஏற்படும்.

ஓம் சாந்தி

01.02.1979 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" சிந்தனை சக்தி தான் மாயாவை வெல்வதற்கான வழி "

இன்று பாப்தாதா குழந்தைகளின் அனேக விதமான முயற்சி செய்வதின் விதியைப் பார்த்துக் கொண்டே குழந்தைகளின் ஊக்கம், உற்சாகம், சந்திப்பதற்கான ஆர்வம், சகயோகி ஆவதற்கான காரியத்திலேயே ஈடுபட்டிருப்பது என்ற அன்பு நிறைந்த எண்ணம், அனைத்து தொடர்புகளையும் துண்டித்து ஒரு தொடர்போடு இணைத்துக் கொள்வதின் கடும் உழைப்பைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சியும் அடைந்து கொண்டிருந்தார். மேலும் கூடவே அன்பின் காரணமாக ஒவ்வொருவரும் அவரவர்களின் சக்திக்கேற்ப லட்சியத்தை அடைவதற்காக அதிவேகமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று இரக்கமும் வந்து கொண்டிருந்தது. அனைவருக்கும் வேகமாகச் செல்ல வேண்டும், முதன்மையில் வர வேண்டும் என்ற இந்த ஒரு ஆசை தான் இருந்தது. இரவு பகலாக இதே ஈடுபாட்டில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் லட்சியம் ஒன்று, முழு ஈடுபாடும் ஒருவருடன் தான் இருக்கிறது. துணையும் ஒருவருடையது தான் இருக்கிறது இருந்தும் சிலர் மகாவீரராகவும் சிலர் மிகுந்த கடுமையான உழைப்பவர்களாகவும், சிலர் சகயோகிகளாகவும் இருக்கிறார்கள், சிலர் முயற்சி செய்யும் யோகியாக இருக்கிறார்கள், சிலர் அனைத்து பிராப்திகளின் சொரூபமாக இருக்கிறார்கள். மேலும் சிலர் அனைத்து பிராப்திகளையும் அடைவதில் முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். சிலர் மாயாவை வென்றவர்களாக இருக்கிறார்கள் மேலும் சிலர் மாயாவின் தடைகளோடு யுத்தம் செய்வதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். சிலருடைய மனதில் என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்து விட்டோம் என்ற ஓசை எழும்புகிறது மேலும் சிலருக்கு இப்பொழுது அடைந்து கொண்டிருக்கிறோம் என்ற ஓசை எழும்புகிறது. சிலர் எப்பொழுதும் தந்தையின் துணையை அனுபவம் செய்கிறார்கள். மேலும் சிலர் எப்பொழுதும் துணைவனாக ஆக்குவதின் முயற்சியில் இருக்கிறார்கள். அந்த மாதிரி பார்த்து பாப்தாதாவிற்கு கஷ்டப்பட்டு உழைப்பவர்கள் மீது இரக்கம் வந்தது. ஒரு தந்தையின் குழந்தைகள் இரண்டு விதமானவர்களாக ஏன் இருக்க வேண்டும்? மேலும் இந்த கடின உழைப்பும் எது வரை செய்வது? இது ஆன்மீக ஜென்மம் ஆகும். இந்த பிறவிக்கு வரதானம் இருக்கிறது. ஏனென்றால் வரமளிக்கும் வள்ளல் மூலமாக இந்த ஜென்மம்

கிடைத்திருக்கிறது, அந்த மாதிரி வரம் பெற்ற ஜென்மம் கிடைத்திருந்த போதிலும் இந்த ஜென்மத்தை அனுபவிப்பதற்குப் பதிலாக கடின உழைப்பிலேயே சென்று விட்டது என்றால் அந்த மாதிரி வரம் பெற்ற ஜென்மம் பின்பு எப்பொழுது கிடைக்கும். இந்த வரம் பெற்ற ஜென்மத்தில் ஒவ்வொரு விநாடியும் அனைத்து பிராப்திகளையும் அடைவதற்கான மங்களகரமான விநாடி ஆகும். அந்த மாதிரி நேரத்தை அடைவதற்குப் பதிலாக கடின உழைப்பில் ஈடுபடுவது என்ற இது நன்றாக இருக்கிறதா என்ன? விரும்புவதும் இல்லை, இருந்தும் செய்து விடுகிறார்கள் - ஏன்? இன்று பாப்தாதா இதற்கான முக்கியமான காரணத்தைப் பார்த்தார். மூல காரணம், எதை நீங்கள் விரும்புவதில்லை ஆனால் பிறவற்றின் வசமாகி விடுகிறீர்கள். எதன் வசமாகி விடுகிறீர்கள்? அதையும் நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்கள். தெரிந்திருந்தும் பாதுகாப்பாக இருப்பதற்கு முயற்சி செய்து கொண்டும் இருந்தும் அந்த சுழற்சியில் வந்து விடுகிறீர்கள், ஏனென்றால் மாயாவும் அனைத்தையும் தெரிந்து வைத்துக் கொண்டுதான் வருகிறது. அதுவோ இந்த பிராமண ஆத்மாக்களுக்கு முக்கியமான ஆதாரம் புத்தியோகம் ஆகும் - தெய்வீக புத்தி மூலமாகத் தான் தந்தையோடு சந்திப்பை செய்ய முடியும் என்றால், மாயாவும் முதன் முதலில் புத்தியை தாக்குகிறது. பலஹீனம் ஆக்கிவிடுகிறது. எதன் மூலமாக? மாயாவின் விசேஷ அம்பாக வீணான எண்ணங்களின் ரூபத்தில் இருக்கிறது. இந்த அம்பு மூலமாக தெய்வீக புத்தியை பலஹீனம் ஆக்கிவிடுகிறது. மேலும் பலஹீனம் ஆன காரணத்தினால் மற்றதின் வசம் ஆகிவிடுகிறார்கள். பலஹீனமான நபர் என்ன விரும்புகிறாரோ அதைச் செய்ய முடிவதில்லை. எனவே விரும்புகிறீர்கள், ஆனால் செய்ய முடிவதில்லை. இந்தக் காரணத்திற்கான நிவாரணமானது சர்வ சக்திமான் தந்தை மூலமாக என்ன கிடைத்திருக்கிறதோ அந்த சக்தியை காரியத்தில் நீங்கள் ஈடுபடுத்துவதில்லை. அந்த விசேஷ சக்தி சிந்தனை சக்தி ஆகும். சிந்தனை சக்தியை உபயோகிக்கத் தெரிவதில்லை. சிந்தனை சக்தி தான் தெய்வீக புத்திக்கான சத்துணவு ஆகும். சத்துணவை உண்ணாததின் காரணமாக பலஹீனமாக ஆகிவிடுகிறார்கள். மேலும் பலஹீனமான காரணத்தினால் பிறவைகளின் வசம் ஆகிவிடுகிறார்கள். சிந்தனை சக்திக்கான விஸ்தாரம் மிகப் பெரியதாகும். ஆனால் விதி தெரிவதில்லை. எப்பொழுதிலிருந்து பிராமண ஜென்மம் ஏற்பட்டதோ அப்பொழுதிலிருந்து இதுவரையிலும் நேரடியாக தந்தை மூலமாக எத்தனை பட்டங்களை (சுவமான்கள்) கேட்டிருக்கிறீர்கள். வர்ணனை செய்துள்ளீர்கள் என்றால், அனைத்தும் மிகப்பெரிய மாலை ஆகிவிடும். பக்தி மார்க்கத்திலும் ஜபிப்பதற்கான பயிற்சி உடையவர்களாக இருக்கிறார்கள், ஒவ்வொரு மணியையும் ஜபிப்பார்கள். பக்தியில் ஜபிக்கும் சக்தி இருக்கிறது மேலும் ஞானத்தில் நினைவின் சக்தி இருக்கிறது. பொதுவாக பக்த ஆத்மாக்கள் தங்களுடைய சக்தியை மறப்பதில்லை, அற்ப காலத்தின் விதி மூலமாக

அற்ப காலத்தின் சித்தியை அடைந்து கொண்டே இருக்கிறார்கள். அப்படி ஞான சொரூப ஆத்மாக்கள் நீங்கள் நினைவின் சக்தியின் விதியை ஏன் மறந்து விடுகிறீர்கள்? ஒருவேளை தினசரி அமிர்தவேளையில் தன்னுடைய ஒரு பட்டத்தை (சுவமான்) நினைவில் கொண்டு வாருங்கள். மேலும் அதை சிந்தித்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால் சிந்திக்கும் சக்தி மூலம் புத்தி எப்பொழுதும் சக்திசாலியாக இருக்கும். சக்திசாலியான புத்தியின் மேல் மாயாவின் தாக்குதல் ஏற்பட முடியாது, அதாவது மற்றதின் வசம் ஆக முடியாது. அப்படி மூல காரணம் புத்தியின் பலஹீனம். மேலும் பலஹீனத்திற்கான நிவாரணம் சிந்தனை சக்தி ஆகும்.

எப்படி இன்றைய நாட்களில் விசேஷ ஆத்மாக்கள் அதாவது படிப்பறிவுள்ள மனிதர்கள் எப்படி காரியம் இருக்குமோ, எப்படி ஸ்தானம் இருக்குமோ அப்படி தன்னுடைய உடையை மாற்றம் செய்வார்கள். உங்களுடைய ஜட விக்கிரகங்களுக்கும் ஒவ்வொரு நேரமும் உடையை மாற்றம் செய்வார்கள். எதிர்காலத்தில் தேவதை ரூபத்திலும் ஒவ்வொரு காரியத்தின் உடை வேறு வேறாக இருக்கும். இந்த எதிர்காலத்து சம்ஸ்காரம் தற்சமயத்தின் ஆதாரத்தின் மேல் இருக்கிறது. சங்கமயுகத்தின் பழக்கவழக்கம் என்னவாக இருக்கிறது? எப்படி காரியம் செய்கிறீர்களோ அந்த மாதிரி தன்னுடைய பட்டத்திற்கு ஏற்றபடி தன்னுடைய சொரூபத்தை நினைவு வையுங்கள். அனைவரையும் விட அதிகமாக நாகரீகம் நிறைந்தவர் சங்கமயுகத்து பிராமணர்கள் நீங்கள். எப்படி நேரமோ அந்த மாதிரி சொரூபம், இந்த சொரூபம் கூட உங்களுடைய ஆடை ஆகும். எப்படி நினைவோ அப்படி உள்உணர்வு அப்படி பார்வை மேலும் அப்படி நிலை அதாவது சொரூபம் ஆகும். எப்படி இன்றைய நாட்களின் நாகரீகம் இருக்கிறது இல்லையா? எப்படிப்பட்ட அலங்காரமோ அதற்கேற்றபடியான ஆடைகள் இருக்கும், திலகமும் அப்படி இட்டுக்கொள்வர்கள் என்றால் கண்களின் அலங்காரத்தை அப்படி செய்து கொள்வார்கள். அப்படி அனைவரையும் விட நவநாகரீகம் நிறைந்தவர்கள் நீங்கள் பிராமணன் ஆவீர்கள். அந்த மாதிரி நினைவை, உள்உணர்வை மற்றும் பார்வையை உருவாக்குங்கள். நினைவு தான் திலகம் ஆகும், பார்வை கண்களின் அலங்காரம் ஆகும், மேலும் உள்உணர்வு ஒப்பனை செய்வது. உள்உணர்வு மூலமாக எப்படிப்பட்ட மாற்றத்தை விரும்புகிறீர்களோ அப்படி செய்ய முடியும். அப்படி நீங்கள் உலகத்தை மாற்றம் செய்யக்கூடிய எப்பொழுதும் ஆன்மீக அலங்காரங்களினால் அலங்கரிக்கப்பட்டிருப்பவர்கள்.

சிந்தனை சக்தி என்றால் தனது அனேக பட்டங்கள் அதாவது சொரூபத்தை நினைவில்

வையுங்கள். அனேக குணங்களின் அலங்காரத்தை நினைவில் வையுங்கள். அனேக விதமான குஷியின் விஷயங்களை நினைவில் வையுங்கள், ஆன்மீக போதைக்கான விஷயங்களை நினைவில் வையுங்கள், படைப்பவர் தந்தையின் அறிமுகம் கொடுப்பதற்கான விஷயங்களை புத்தியில் வையுங்கள், படைப்பின் விஸ்தாரமான விஷயங்களை நினைவில் வையுங்கள். நினைவு மூலமாக அனேக விதமான அனுபவம் மற்றும் பிராப்திகளின் விஷயங்களை நினைவில் வைத்தீர்கள் என்றால், சிந்தனை சக்திக்கான சாதனம் எவ்வளவு பெரியதாக இருக்கிறது, என்ன விரும்புகிறீர்களோஅதை நினைவு செய்யுங்கள், எது உங்களுக்கு விருப்பமாக இருக்கிறதோ அதை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். அப்படி சிந்தனை செய்து மூழ்கிய நிலையும் சுலபமாக பிராப்தி ஆகிவிடும். மற்றதின் வசமாகுவதற்குப் பதிலாக மாயாவை வெல்வதற்கான வசீகர மந்திரம் எப்பொழுதும் உடன் இருக்கும். மேலும் மாயா நிரந்தரமாக நமஸ்காரம் செய்து விடைபெற்று விடும். சங்கமயுகத்தின் உங்களுடைய முதல் பக்தன் மாயா ஆகும். மாஸ்டர் பகவான் ஆனீர்கள் என்றால் பக்தர்களும் உருவாவார்கள் இல்லையா? ஒருவேளை நீங்களே பக்தனாக இருந்தீர்கள் என்றால் அது யாருடைய பக்தனாக ஆகும். அப்படி ஒன்று பக்தனாவீர்கள் அல்லது மாஸ்டர் பகவான் ஆவீர்கள். இதற்கான சுலபமான வழியாக சிந்தனை சக்தியை அதிகரியுங்கள் என்று கூறினோம். புரிந்ததா?

வங்காளம், பீகார் மண்டலத்தினர் அலங்காரம் செய்வதை நன்கு தெரிந்திருக்கிறார்கள். எப்படி தேவிகளை மிகவும் அலங்கரிக்கிறார்கள். தன்னுடைய ஜட விக்கிரகங்களை அலங்கரிக்கத் தெரியும் இல்லையா? அதே போல் தன்னை அலங்கரிக்க வேண்டும். இந்த மண்டலத்தின் விசேஷமும் தந்தைக்கு மிகப் பிரியமானவர்கள். அந்த மாதிரி (பிரியமான) குழந்தைகளும் அதிகம் இருக்கிறார்கள் -அவர்கள் யார்? ஏழைகளும் மற்றும் கள்ளம் கபடமற்ற தந்தையின் கள்ளம் கபடமற்ற குழந்தைகளும். இருகையினருமே தந்தையின் மிகப் பிரியமானவர்கள், எனவே இந்த மண்டலத்தின் குரூப்பை பாருங்கள் மிகப்பெரியதாக இருக்கிறது இல்லையா? இது இந்த மண்டலத்தின் விசேஷம் ஆகும். இந்த மண்டலத்தில் எத்தனை வேறு வேறு பிரதேசங்கள் இருக்கின்றன. நேபாளமும் இருக்கிறது என்றால் அசாமும் இருக்கிறது. வகை வகையான மலர்கள் அடங்கிய பூச்செண்டாகும். சேவையும் இப்பொழுது விஸ்தாரத்தை அடைந்து கொண்டிருக்கிறது. இங்கிருந்து தான் சாகார உடலையும் தேடினோம், அப்படி ஸ்தானத்தின் விசேஷம் இருக்கிறது இல்லையா? எப்படி அரசாங்கத்திற்கு எந்த இடத்திலிருந்தாவது ஏதாவது விசேஷமான விலைமதிக்க முடியாத பொருள் கிடைக்கிறது என்றால், அந்த இடத்திற்கு மகத்துவம் இருக்கிறது. அந்த இடம்

பெயர், புகழ் பெற்றதாக ஆகிவிடுகிறது. சரித்திரத்தில் வந்து விடுகிறது. அந்த மாதிரி இந்த ஸ்தானமும் தந்தையின் சரித்திரத்தில் விசேஷ ஸ்தானம் ஆகும். இன்னும் வரும் நாட்களில் இந்த ஸ்தானத்தின் மகத்துவம் உலகில் மகத்துவப்பூர்ணமாக இருக்கும். எப்படி டெல்லியின் விசேஷம் அதனுடையது, மும்பையின் விசேஷம் அதனுடையது. இந்த ஸ்தானத்தின் மகத்துவமும் மிகப் பெரியது, அது அதற்கே உரியது. எனவே வரும் நாட்களில் இந்த ஸ்தானத்தை இன்னும் விசேஷ பூமியின் வகையில் பார்ப்பார்கள் மற்றும் கேட்பார்கள். அந்த மாதிரி விசேஷ பூமியில் இருப்பவர்களும் விசேஷ ஆத்மாக்கள் ஆவீர்கள். பூமியின் கூடவே உங்கள் அனைவரின் பாக்கியத்தையும் அனைவரும் வர்ணனை செய்வார்கள். நல்லது.

எப்பொழுதும் சக்திசாலி சொரூபத்தில் நிலைத்திருந்து எதிரி மாயாவையும் தன்னுடைய பக்தனாக ஆக்கக்கூடிய, எப்பொழுதும் அலங்கரிக்கப்பட்ட சொரூபத்தில் நிலைத்திருக்கக்கூடிய வசீகரன மந்திரம் மூலமாக மாயாவை வசம் செய்யக்கூடிய, எப்பொழுதும் நினைவு மூலமாக சக்திசாலியாக இருக்கக்கூடிய, சர்வ சக்திவான் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

### பார்ட்டிகளுடன் சந்திப்பு

1) ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியத்தை தந்தைக்குச் சமமாக செய்வதினால் நிரந்தர சகஜயோகியின் நிலையின் அனுபவம் - சங்கமயுகத்தின் உயர்ந்த ஸ்தானம் தந்தையின் இதய சிம்மாசனம். யார் இந்த ஆசனத்தில் அமருகிறார்களோ அவர்கள் தான் உலக சிம்மாசனத்தின் அதிகாரி ஆகிறார்கள். மேலும் எப்படி தந்தை பரம்பூஜ்யமாக இருக்கிறாரோ அதே போல் குழந்தைகளும் பூஜைக்குரியவர் ஆகிவிடுகிறார்கள். ஏனென்றால் யார் சமமாக இருக்கிறார்களோ அவர்கள் தான் இதயத்தில் நிரம்பிவிடுகிறார்கள். அப்படி தந்தைக்குச் சமமாக தந்தையைப் பின்பற்றி நடக்கும் ஆத்மாக்கள் நீங்கள் தான் இல்லையா? எது தந்தையின் நினைவோ அது குழந்தைகளின் நினைவு, எது தந்தையின் குணமோ அது குழந்தைகளின் குணம், எது தந்தையின் காரியமோ அது குழந்தைகளினுடையது என்று அப்படி அனுபவம் ஆகிறதா? இதைத் தான் தந்தையைப் பின்பற்றி நடப்பது என்று கூறுவது. எந்த எண்ணத்தை உருவாக்கினாலும் மற்றும் காரியம் செய்தாலும் முதலில் தந்தைக்குச் சமமானதா என்று சோதனை செய்யுங்கள், ஒருவேளை தந்தைக்குச் சமமாக இருக்கிறது என்றால் சகஜயோகியின்

நிலையின் அனுபவம் ஆகும். கடின முயற்சி செய்ய வேண்டியதாக இருக்காது. மேலும் எந்தவொரு சூழ்நிலையிலும் தந்தையை எதிரில் கொண்டு வருவதினால் சுயநிலையின் ஆதாரத்தில் பரிவர்த்தனை (மாற்றம்) ஆகிவிடும். உலகத்தின் நிலைமை எவ்வளவு தான் மோசமாக ஆகிக் கொண்டே இருந்தாலும் நீங்கள் எப்பொழுதும் தாமரை மலருக்குச் சமமாக தந்தையின் குடைநிழலில் விலகியிருப்பவராக மற்றும் அன்பானவராக இருப்பீர்கள். நீங்கள் எப்பொழுதும் குடைநிழலின் கீழ் இருக்கிறீர்கள் இல்லையா? தந்தை சேவாதாரி ஆகி வருகிறார் என்றால் குடைநிழலின் ரூபத்தில் குழந்தைகளுக்கு எப்பொழுதும் சேவை செய்கிறார். தந்தையை நினைவு செய்தீர்கள் மற்றும் துணையின் அனுபவம் செய்தீர்கள். எந்தவொரு உடலில் இருக்கும் நபரை துணையாக வைத்துக் கொள்வதில் நேரம் எடுக்கும். ஆனால் தந்தையோ ஒரு நொடியில் ஆஜராகி விடுவார். அப்படி தூரமாக இருந்த போதிலும் எப்பொழுதும் அருகில் இருக்கும் ஆத்மா என்று அப்படி அனுபவம் ஆகிறதா? இப்பொழுதும் அருகில் இருக்கிறீர்கள் என்றால் மூன்று ஸ்தானங்களின் அருகிலும் இருக்கிறீர்கள் இல்லையா? எங்கெல்லாம் பிராமண குழந்தைகளின் பாதங்கள் பதிகிறதோ அங்கு ஏதாவது ஆத்மாக்கள் இருப்பார்கள். அதனால் தான் செல்ல வேண்டியது இருக்கிறது இல்லையா? எந்தக் குழந்தைகள் தந்தையின் நினைவில் இருக்கிறார்களோ அப்படி நினைவிலிருக்கும் குழந்தைகளுக்கு தந்தை எப்பொழுதும் பிரதிபலன் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். மேலும் எப்பொழுதும் கொடுத்துக் கொண்டே இருப்பார். ஏனென்றால் நினைவு மூலமாகத் தான் அனுபவங்களின் அதிகாரம் பிராப்தி ஆகிறது. சொற்பொழிவு செய்வது மட்டும் தான் சேவைக்கான சாதனம் இல்லை, அனுபவத்தின் மூலமாகவும் பிரபாவம் செய்ய முடியும். அனுபவத்தின் தலைப்பு அனைவரையும் ஈர்க்கக்கூடியதாக இருக்கும். சேவை அவசியம் செய்ய வேண்டும். எப்படி வேண்டுமானாலும் செய்யுங்கள். அனைத்து பாடங்களிலும் மதிப்பெண் பெற வேண்டும். ஒருவேளை ஏதாவது ஒன்றில் மதிப்பெண் குறைந்து விட்டது என்றால், எப்படி மதிப்புடன் தேர்ச்சி அடைவீர்கள். எனவே அனைத்து பாடங்களின் மீதும் கவனம் கொடுங்கள்.

2) முழுக் கல்பத்தில் சங்கமயுகம் தான் வசந்த காலம் ஆகும் - எப்பொழுதும் மிகவும் நன்றாக மலர்ந்திருக்கும் மணம் நிறைந்த ஆன்மீக ரோஜா மலர் என்று தன்னை நினைக்கிறீர்களா? எப்பொழுது வசந்த காலம் வருகிறதோ அப்பொழுது மலர்களில் அழகான வர்ணம் வந்து விடுகிறது, மலர்ந்து விடுகின்றன, அழகாக இருக்கும். அதே போன்று சங்கமயுகமும் முழுக் கல்பத்தில் வசந்த காலம் ஆகும். இந்தக் காலத்தில் ஒவ்வொரு ஆத்மா என்ற மலர் மலர்ந்ததாக இருக்கும். அந்த மாதிரி தன்னை

எப்பொழுதும் மலர்ந்திருக்கும் அதாவது எப்பொழுதும் ஆன்மீக நினைவிலிருக்கும் ஆன்மீக மலர் என்று நினைக்கிறீர்களா? அல்லது சில நேரம் மலரிலிருந்து மொட்டாகவும் ஆகிவிடுகிறீர்களா? முதலில் சின்ன மொட்டாக இருப்பது மூடி இருக்கும், பிறகு மலர்ந்து விடுகிறது என்றால் அதை மலர் என்று கூறுவது. அப்படி எப்பொழுதும் மலர்ந்திருக்கிறீர்களா? அல்லது சில நேரம் மலராக, சில நேரம் மொட்டாக இருக்கிறீர்களா? மலர்ந்திருக்கும் மலர் தூரத்திலிருந்தே அனைவரையும் கவர்ந்திழுக்கும். அந்த மாதிரியான ஆன்மீகத்தன்மை இருக்கிறதா? யாரெல்லாம் தொடர்பில் வருகிறார்களோ அவர்களை இந்த ஆன்மீக நறுமணம் கவர்ந்திழுக்க வேண்டும். மலர்ந்திருக்கும் மலரைத் தான் மற்றவர்களுக்கு வழங்குவார்கள். பாப்தாதாவின் மேலும் மலர்ந்திருக்கும் மலர் தான் பலியாகிறார்கள். யார் உண்மையான பக்தனாக இருப்பாரோ அவர் ஒருபொழுதும் தேவதைகள் மேல் அழுகிய பூவை சாற்ற மாட்டார்கள், நன்றாக மலர்ந்திருக்கும் மலர்களைத் தான் தேவதைகளின் மேல் சாற்றுவார்கள். அந்த மாதிரி நீங்கள் மலர்ந்திருக்கும் ஆன்மீக ரோஜா மலர் ஆவீர்கள். உங்களை தந்தை மேல் அர்ப்பணம் செய்ய முடியும். நான் பகவானின் தோட்டத்தின் எந்த மலர் என்று எப்பொழுதும் நினைவிருக்கிறதா? மலர்களுக்கு தந்தை, அவரே அன்பு என்ற நீர் பாய்ச்சுகிறார், அப்படி நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள். பாப்தாதா எப்பொழுதும் ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து என்ன நினைக்கிறார்? ஒவ்வொரு குழந்தையும் உலகத்தின் எல்லைக்குட்பட்ட தேசமில்லை, மாநிலத்தின் இல்லை ஆனால் முழு உலகத்தின் அதிபதி ஆகட்டும் என்று நினைக்கிறார். உலகிற்கு அதிபதியாக யார் ஆவார்? யார் உலக நன்மை செய்பவராக இருப்பாரோ அவர் தான் ஆவார். அப்படியானால் நீங்கள் அனைவரும் யார்? உலகை இராஜ்ஜியம் செய்பவர்களா அல்லது மாநிலத்தின் மேல் இராஜ்யம் செய்பவர்களா? யார் உலகின் மேல் இராஜ்ஜியம் செய்பவராக இருப்பாரோ அவர் எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் நிலைத்திருப்பார். சம்மந்தம், சம்ஸ்காரம், சுபாவம் அனைத்தும் எல்லைக்குட்பட்டதாக இன்றி எல்லைக்கப்பாற்பட்டதாக இருக்கும். எல்லைக்குட்பட்ட குடும்பத்தில் தன்னுடைய நேரத்தை அதிகமாகக் கொடுக்கிறீர்களா அல்லது எல்லைக்கப்பாற்பட்ட குடும்பத்திலா? எல்லைக்கப்பாற்பட்ட அதிபதி ஆக வேண்டும், மேலும் எல்லைக்குட்பட்டதில் நேரம் கொடுக்கிறீர்கள் என்றால் என்னவாகும்? எல்லைக்கப்பாற்பட்ட அதிபதி ஆகுபவர்கள் அவசியம் எல்லைக்கப்பாற்பட்ட சேவையில் ஈடுபட்டு இருப்பார்கள். எல்லைக்குட்பட்டவை ஒரு காரணத்திற்கு மட்டும் தான், முழு கவனமும் எல்லைக்கப்பாற்பட்ட சேவையில். எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் சென்று சேவை செய்யுங்கள், சேவையில் புதிய திருப்பத்தைக் கொண்டு வாருங்கள். வெகுகாலமாக மனதில் என்ன திட்டம் இருக்கிறதோ

அதை நடைமுறையில் கொண்டு வாருங்கள். இத்தனை சென்டர்கள் திறக்க வேண்டும் என்று இந்த வருடத்திற்கான திட்டத்தை உருவாக்குங்கள். சேவைக் கரங்களும் தானாகவே உருவாகிவிடும். அங்கே உள்ள கரங்களை தயார் செய்யுங்கள். நல்லது - ஓம் சாந்தி.

வரதானம் :

சுத்த எண்ணத்தின் விரதம் மூலமாக உள் உணர்வை மாற்றம் செய்யக்கூடிய இதய சிம்மாசனதாரி ஆகுக !

பாப்தாதாவின் இதயசிம்மாசனம் அவ்வளவு தூய்மையானது, அந்த ஆசனத்தில் தூய்மையான ஆத்மாக்கள் தான் எப்பொழுதும் அமர முடியும். யாருடைய எண்ணத்திலாவது கூட தூய்மையின்மை, மரியாதைக்குப் புறம்பானவை வந்து விடுகிறது என்றால், அவர் சிம்மாசனதாரிக்குப் பதிலாக இறங்கும் கலையில் கீழே வந்து விடுகிறார். எனவே முதலில் சுத்த எண்ணத்தின் விரதம் மூலமாக தன்னுடைய உள்உணர்வை மாற்றம் செய்யுங்கள். உள்உணர்வு மாறுவதினால் எதிர்கால வாழ்க்கை என்ற படைப்பு மாறி விடுகிறது. சுத்த எண்ணம் மற்றும் திட எண்ணத்தின் விரதத்தின் பிரத்யக்ஷ பலன் நிரந்தரமாக பாப்தாதாவின் இதய சிம்மாசனத்தில் இருப்பது.

சுலோகன்:

எங்கு அனைத்து சக்திகளும் உடன் இருக்கிறதோ அங்கு அவசியம் தடையற்ற வெற்றி இருக்கவே இருக்கிறது.

ஓம் சாந்தி

" அனைவர் மேலும் (ரஹம்) இரக்கம் காட்டுங்கள், (வஹம்) தவறாக நினைப்பது (யூகிப்பது) மற்றும் (அகம்) அகம்பாவத்தை அகற்றுங்கள் "

பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் சம்பன்ன சொரூபத்தில், விஷ்வ கல்யாணகாரி (உலகிற்கு நன்மை செய்யும்) ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறார். தற்சமயம் இறுதி சொரூபம் மற்றும் இறுதிக் காரியம் உலக நன்மைக்கானது தான். இந்த இறுதி சொரூபத்தில் நிலைத்திருப்பதற்காக ஒவ்வொரு பிராமணனும் அவரவர்களின் சக்திக்கேற்றபடி முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அனைவரின் லட்சியமுமே உலகிற்கு நன்மை செய்ய வேண்டும் என்ற ஒன்றே ஒன்று தான். ஆனால் சிலர் இன்று வரையிலும் தனக்கு செய்வதிலேயே ஈடுபட்டிருக்கிறார்கள். மேலும் சிலர் சுயதேசத்தின் நன்மை செய்வதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மிகக் குறைந்தவர்கள் தான் தந்தைக்குச் சமமாக எல்லைக்கப்பாற்பட்ட அதாவது உலக சேவையில் மற்றும் விஷ்வ கல்யாணகாரி (உலக நன்மை) சொரூபத்தில் நிலைத்திருக்கிறார்கள். விஷ்வ கல்யாணகாரிகளான உயர்ந்த ஆத்மாக்களின் அடையாளம் என்னவாக இருக்கும்?

1) விஷ்வ கல்யாணகாரி ஆத்மாக்கள் நேரம் குறைவாக இருக்கிறது, ஆனால் செய்ய வேண்டிய காரியம் மகானாக இருக்கிறது என்று தெரிந்திருக்கிறார்கள். எனவே விஷ்வ கல்யாணகாரி ஒவ்வொரு விநாடி மற்றும் எண்ணத்தை உலக நன்மைக்காகவே தான் ஈடுபடுத்துவார். .

2) உடல், மனம் மற்றும் கிடைத்திருக்கும் செல்வத்தை எப்பொழுதும் உலக சேவையில் அர்ப்பணம் செய்வார்கள்.

3) அவருடைய நெற்றி மற்றும் கண்களில் எப்பொழுதும் உலகின் அனைத்து

ஆத்மாக்களுக்காக, பிராப்தியற்ற ஆத்மாக்களையும் திருப்தி நிறைந்த ஆத்மாவாக எப்படி ஆக்குவது என்ற நினைவு மற்றும் பார்வை இருக்கும். யாசிக்கும் ஆத்மாக்களை நிரம்பியவர்களாக எப்படி ஆக்குவது? வஞ்சிக்கப்பட்டிருக்கும் ஆத்மாக்களை தொடர்பில் மற்றும் சம்மந்தத்தில் எப்படி கொண்டு வருவது? இரவு பகலாக தந்தை மூலமாக சக்திகளின் வரதானத்தை பெற்றுக் கொண்டே அனைவருக்கும் வழங்குபவர்களாக இருப்பார்கள்.

4) நிரந்தர களைப்பற்ற சேவாதாரியாக இருப்பார்கள். நிகழ்ச்சிக்கான சேவாதாரியாக இல்லாமல் ஆனால் எப்பொழுதும் தயாராக அனைத்து சேவைகளையும் செய்பவர்களாக இருப்பார்கள்.

5) அந்த மாதிரி விஷ்வ கல்யாணகாரி அதாவது இரக்க மனமுடைய ஆத்மாக்கள் தான் எப்படிப்பட்ட அவகுணம் நிறைந்த ஆத்மாவாக இருந்தாலும் கடுமையான சம்ஸ்காரம் உள்ள ஆத்மாவாக இருந்தாலும் குறைந்த புத்தி உள்ள, கல் புத்தி உள்ள ஆத்மாவாக இருந்தாலும், எப்பொழுதும் இகழ்ச்சி செய்யக்கூடிய ஆத்மாவாக இருந்தாலும் அனைத்து ஆத்மாக்களுக்காக கல்யாணகாரியாக அதாவது லா:ஃபுல் மற்றும் லவ்:ஃபுல் (விதிப்பூர்வமான மற்றும் அன்பு நிறைந்தவராக இருப்பார்கள். அனைவருக்கும் லட்சியம் அந்த மாதிரி தான் இருக்கிறது. ஆனால் என்ன செய்கிறார்கள்? நடைமுறையில் இரக்கத்திற்குப் பதிலாக இரண்டு விஷயங்களில் மாறி விடுகிறார்கள். சிலர் இரக்கப்படுவதற்குப் பதிலாக ஆத்மாக்களின் மேல் தவறான எண்ணத்தின் (யூகிப்பதின்) காரணமாக இவர் ஒருபொழுதும் மாற முடியாது, இவர் இருப்பதே அப்படித் தான், அனைவருமே இராஜா ஆகுபவர்கள் அல்ல என்ற உணர்வை உருவாக்கி விடுகிறார்கள். இந்த விதமாக அனேக யூகிக்கும் உணர்வு இரக்கத்தை அழித்து விடுகிறது. இரண்டாவது விஷயம் - இரக்க உணர்விற்குப் பதிலாக அகம்பாவம் அதாவது நான் என்பதின் அபிமானம் இரக்க மனமுடையவராக ஆக விடுவதில்லை. எனவே சுய நன்மை மற்றும் தேசத்திற்கு நன்மை செய்வது வரை இருந்து விடுகிறார்கள். விஷ்வ கல்யாணகாரியாக ஆவதற்கான சகஜமான வழியை தெரிந்தும் இருக்கிறார்கள். ஆனால் அந்த நேரத்தில் மறந்து விடுகிறார்கள். எப்படிப்பட்ட அவகுணம் நிறைந்த ஆத்மாவாக இருந்தாலும், எப்படிப்பட்ட தூய்மையில்லாத ஆத்மா மற்றும் முயற்சியே செய்யாத ஆத்மா அப்படி இரண்டு விதத்தில் யாராக இருந்தாலும், அஞ்ஞானி, பதீத ஆத்மாவாக இருப்பார், மேலும் பிராமண குடும்பத்தில் முயற்சி செய்யாத ஆத்மாவாக இருப்பார். இரண்டு

ஆத்மாக்களுக்காகவும் விஷ்வ கல்யாணகாரி அதாவது எல்லைக்கப்பாற்பட்ட வள்ளல் ஆத்மா, விஷ்வ பரிவர்த்தனை (உலக மாற்றம்) செய்வதின் அதிகாரி ஆத்மா நன்மை செய்பவராக இருக்கும் காரணத்தினால் எப்பொழுதும் அந்த ஆத்மாக்களின் தீயவைகள் மற்றும் பலஹீனங்களை முதலில் மன்னிப்பார்கள். எப்படி எல்லைக்கப்பாற்பட்ட தந்தை எந்த விஷயத்தில் குழந்தைகளை மன்னிக்கிறார். குழந்தைகளின் தீயவை மற்றும் பலஹீனங்களை உள்ளத்தில் நிரப்பி கொள்ளாமல் மன்னித்து விடுகிறார், பூஜைக்குரிய தேவதைகள் பக்தர்களை மன்னிக்கிறார்கள். அப்படி விஷ்வ கல்யாணகாரி மாஸ்டர் படைப்பவராகவும் இருக்கிறார். விஷ்வ அதிகாரியாகவும் இருக்கிறார். அதாவது சிறியவர்களுக்கு எதிரில் பெரியவர் இராஜாவுக்கு சமமானவர், தந்தைக்குச் சமமானவர், பூஜைக்குரிய ஆத்மா இந்த மூன்று சம்மந்தங்களின் ஆதாரத்தில் தீயவைகளை இதயத்தில் வைக்காமல் மன்னிப்பார்கள். அதற்கு பிறகு அதே ஆத்மாக்களின் நன்மைக்காக எப்பொழுதும் ஆத்மாவின் வாஸ்தவமான சொரூபம் மற்றும் குணத்தை எதிரில் வைத்துக் கொண்டு மகிமை செய்வார்கள், அதாவது அந்த ஆத்மாவிற்கு அவருடைய மகான் தன்மையை நினைவூட்டுவார். நீ யாருடைய குழந்தை, எந்தக் குலத்தைச் சேர்ந்தவர், சங்கமயுகத்தின் விசேஷம் மற்றும் வரதானம் என்னவாக இருக்கிறது. தந்தை செய்யும் காரியம், நடக்க முடியாததையும் நடக்க செய்வது நீங்கள் ஆத்மா, ஆரம்ப காலத்தில் இராஜ வம்சத்தைச் சேர்ந்தவர், இப்பொழுது பிரம்மா வம்சியாவீர்கள், மாஸ்டர் சர்வ சக்திவான் இந்த விதமாக மகிமை செய்வார்கள். அதன் மூலம் அவர் ஆத்மாவின் குணங்களை கேட்டுக் கொண்டே நினைவு மற்றும் சக்திசாலியான நிலையில் வந்து கொண்டே, பலஹீனத்தையும் தீயவற்றையும் அழிப்பதற்கான தைரியத்தில் வருவார்கள்.

எப்படி இன்றைய உலகில் இராஜ்புத்திர வம்சத்தினர் தன்னுடைய வம்சத்தை நினைவூட்டுகிறார்கள் என்றால், பலஹீனமானவருள்ளும் தைரியம் வந்து விடுகிறது. அதே போல் விஷ்வ கல்யாணகாரி மகிமை செய்வது மூலம் பலஹீனமான ஆத்மாவையும் மகான் ஆக்கிவிடுவார். அதாவது தன்னுடைய இரக்க மனத்தின் சக்தி மூலம் தன்னுள் அவருடைய அவகுணத்தை ஏற்றுக் கொள்ளமாட்டார். ஆனால் அவரையும் அவருடைய அவகுணத்தை மறக்க வைத்து சக்தி நிறைந்தவராக ஆக்கிவிடுவார். அந்த மாதிரி சக்தி நிறைந்த நிலத்தை தயாரித்த பிறகு அந்த ஆத்மாவிற்காக கொஞ்சம் முயற்சி செய்வதினால், தவறான எண்ணம் மற்றும் அகம்பாவத்தை வைக்காததினால், அந்த மாதிரி ஆத்மாவும் பரிவர்த்தனை (மாறி) ஆகிவிடும். ஒருபொழுதும் பிராமண குடும்பத்தில் பலஹீனமான ஆத்மாக்களை "நீங்கள்

பலஹீனமானவர்" என்று கூறாதீர்கள். இல்லை என்றால் எப்படி உடலால் பலஹீனமான ஆத்மா ஒருவேளை நான் இறக்கப்போகிறவன் என்று டாக்டர் மூலம் கேள்விப்பட்டார் என்றால், இதயம் நின்று விடும். அதே போல் நீங்கள் அனைவரும் மாஸ்டர் அதிகாரம் உள்ளவர்கள், உயர்ந்த ஆத்மாக்கள், உலகை மாற்றம் செய்பவர்கள், உங்கள் வாயிலிருந்து எப்பொழுதும் ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் நல்ல வார்த்தைகளே வெளிவர வேண்டும். மனமுடைந்து போகவைக்கும் வார்த்தைகள் வரக்கூடாது. மனமுடைந்து போவது கூட இதயம் நின்று விடுவது ஆகும். எவ்வளவு தான் பலஹீனமானவராக இருந்தாலும் அவருக்கு சமிக்ஞையும் கொடுக்க வேண்டியதாக இருந்தாலும், அறிவுரையும் கொடுக்க வேண்டியதாக இருந்தாலும் முதலில் சக்தி நிறைந்தவராக ஆக்கி பின்பு அறிவுரை கூறுங்கள். முதலில் அவருடைய விசேஷத்தை மகிமை செய்யுங்கள். பிறகு அவருக்கு இன்னும் வரும் காலத்திற்காக இன்னும் உயர்ந்த ஆத்மா ஆவதற்கான சாதனம் பலஹீனத்தின் மேல் கவனத்தை முறையோடு கொண்டு வாருங்கள். முதலில் நிலத்தில் தைரியம் மற்றும் உற்சாகம் என்ற ஏரை உழுங்கள், பிறகு விதை போட்டீர்கள் என்றால் சுலபமாகவே விதையின் பழம் உருவாகும். இல்லை என்றால் தைரியம் இல்லாத பலஹீனமான சம்ஸ்கார வசமான ஆத்மா, அதாவது மிகவும் கடுமையான பாறைகள் நிறைந்த நிலத்தில் விதை போடுகிறீர்கள். என்றால் உழைப்பு மற்றும் நேரம் அதிகம் எடுக்கிறது. மேலும் பலனும் குறைவாக கிடைக்கிறது. உலக நன்மை காரியத்தில் யோசிப்பதற்கும், செய்வதற்கும் நேரமே கிடைப்பதில்லை ஏனெனில், சுய நன்மை மற்றும் தேசத்தின் நன்மையிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். விஷ்வ கல்யாணகாரி சொரூபத்தில் நிலைத்திருக்க முடிவதில்லை. அப்படி விஷ்வ கல்யாணகாரி ஆவதற்காக என்ன செய்ய வேண்டும் மேலும் என்ன செய்யக் கூடாது? என்று சிந்தித்தால்தான் உலக நன்மையின் சேவையின் வேகம் அதிகரிக்க முடியும். இப்பொழுது மத்திய வேகம் இருக்கிறது. எனவே இந்த வருடத்தில் விஷ்வ கல்யாணகாரி நிலையின் விதி மூலம் உலக நன்மையின் சேவையின் வேகத்தை தீவிரமாக்குங்கள். இரக்க மனமுடையவர் ஆகுங்கள். இதுவரை என்ன நடந்ததோ, நாடகத்தின்படி என்ன நடந்திருந்ததோ அது நடந்தது. இதன் மூலமும் எதிர்காலத்திற்காக நன்மை பயக்கும் பாவனையை எடுத்துக் கொண்டும் முன்னேறும் கலையின் பாவனையை எடுத்து இப்பொழுது முன்னேறிச் செல்லுங்கள். பலஹீனங்களுக்கு நிரந்தரமாக திடமான எண்ணம் மூலம் விடை கொடுங்கள், மேலும் விடை கொடுக்க வையுங்கள். பிறகு உலக மாற்றத்தின் காரியம் அதிவேகமாக நிறைவேறி விடும். வேகம் மற்றும் நிலையை அதிகரியுங்கள். அதாவது ஒவ்வொரு விஷயத்தையும் ஞானம் நிறைந்த சக்திசாலியான நிலை மூலம் எப்பொழுதும் சுலபமாக கடந்து செல்லுங்கள். மேலும் எப்பொழுதும் பாஸ் ஆகிவிடுங்கள். பின்பு இறுதி

நிலையில் மதிப்புடன் தேர்ச்சி அடைபவர் ஆகிவிடுவீர்கள். புரிந்ததா? அந்த மாதிரி தயார் செய்யுங்கள். அதை அடுத்த சீசனில் பாப்தாதா அனைவரையும் தீவிரமாக முயற்சி செய்பவர்களின் ரூபத்தில் பார்க்க வேண்டும். அனைத்து ஆத்மாக்களும் முதல் டிவிசனில் வரக்கூடிய ஆத்மாக்கள் ஆவீர்கள். அந்த மாதிரி மகான் ஆத்மாக்களோடு சந்திப்பைச் செய்ய வந்திருக்கிறோம். ஒவ்வொரு பிராமணக் குழந்தையும் எப்பொழுதும் கிரீடம் அணிந்த, திலகமிட்ட மற்றும் சிம்மாசனதாரி ஆத்மா ஆவீர்கள். அந்த மாதிரியான

இராஜ்ய சபையில் தந்தை வர வேண்டும். எப்பொழுது இங்கே இராஜ்ய அதிகாரி சபை உருவாகுமோ அப்பொழுது தான் அங்கே இராஜ தர்பார் கூடும். விசேஷ ஆத்மாக்களுக்கு அழைப்பு கொடுக்கப்படுகிறது என்றால், விசேஷ நிலையை தயார் செய்ய வேண்டியதாக இருக்கும். அப்படி பாப்தாதாவையும் மீண்டும் வருவதற்கான அழைப்பு கொடுக்கிறீர்கள் என்றால், ஒவ்வொருவரும் நடைமுறையில் சம்பூர்ண நிலையை தயார் செய்தீர்கள் என்றால், பாப்தாதாவும் வருவார். எனவே ஒவ்வொருவரும் ஒருவர் இன்னொருவரை விட உயர்ந்த மற்றும் அழகான நிலையை தயார் செய்யுங்கள். எந்த மண்டலம் முதல் நம்பரில் வருகிறது, வெளிநாடு முன்னுக்குச் செல்கிறதா அல்லது பாரதம் முன்னுக்குச் செல்கிறதா என்று பார்க்கலாம். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் விஷ்வ கல்யாணகாரி, அனைவர் மீதும் இரக்க மனமுடைய, எப்பொழுதும் நற்சிந்தனையில் இருக்கக்கூடிய மற்றும் எப்பொழுதும் நற்சிந்தனையாளர் ஆகக்கூடிய, ஒவ்வொரு ஆத்மாவிலும் தைரியம் மற்றும் உற்சாகத்தை ஊட்டக்கூடிய, அந்த மாதிரி எப்பொழுதும் இராஜ்ய அதிகாரி அனைவரையும் நிரந்தரமாக சம்பன்னம் ஆக்கக்கூடிய சக்தி நிறைந்த ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம் -

மாஸ்டர் ஞானக் கடலாகி பொம்மைகள் விளையாட்டை முடிவு கட்டக்கூடிய நினைவு மூலம் சக்தி சொரூபமானவர் ஆகுக.

எப்படி பக்தி மார்க்கத்தில் சிலைகளை உருவாக்கி பூஜை செய்கிறார்கள், பின்பு அவற்றை தண்ணீரில் மூழ்கடிக்கிறார்கள், எனவே அதை நீங்கள் பொம்மைகளின் பூஜை என்று

கூறுகிறீர்கள். அதே போல் உங்கள் எதிரிலும் எப்பொழுதாவது, ஏதாவது உயிரற்ற, சாரமற்ற விஷயங்களான பொறாமை அனுமானம், ஆவேசம் ஆகியவை உருவாகின்றன என்றால் மேலும் நீங்கள் அவற்றை விஸ்தாரமாக்கி இது தான் சத்தியம் என்று அனுபவம் செய்கிறீர்கள் அல்லது செய்விக்கிறீர்கள் என்றால், அதில் உயிரை நிரப்புவதாகும். பின்பு ஞானக்கடல் தந்தையின் நினைவு மூலம் கடந்ததை கடந்ததாக்கி சுயமுன்னேற்றம் என்ற அலைகளில் மூழ்கடிக்கிறீர்கள். ஆனால் இதில் நேரம் வீணாகிறது தான் இல்லையா? எனவே முன்பாகவே மாஸ்டர் ஞானக்கடலாகி நினைவு மூலம் சக்திசாலியானவர் ஆகுக என்ற வரதானம் மூலம் இந்த பொம்மைகளின் விளையாட்டிற்கு முடிவு கட்டுங்கள்.

சுலோகன் :

யார் தேவையான நேரத்தில் சகயோகி ஆகிறார்களோ அவர்களுக்கு ஒன்றிற்கு பலமடங்கு கிடைத்து விடுகிறது.

பார்ட்டிகளுடன் சந்திப்பு

1) சுயநிலையின் ஆசனத்தில் இருப்பதினால் சூழ்நிலைகளின் மேல் வெற்றி - எப்பொழுதும் மாஸ்டர் சர்வ சக்திவானின் நிலையில் நிலைத்திருந்து கொண்டே ஒவ்வொரு விதமான சூழ்நிலைகளின் மேல் வெற்றி அடைபவர்களாக இருக்கிறீர்களா? எதுவரை சுயநிலை சக்திசாலியாக இல்லையோ அதுவரை சூழ்நிலைகளின் மேல் வெற்றியடைய முடியாது. சூழ்நிலை இயற்கை மூலமாக வருகிறது. எனவே சூழ்நிலை படைப்பாக ஆகிவிட்டது. மேலும் சுயநிலை உள்ளவர் படைப்பவர் ஆவார். எனவே எப்பொழுதும் படைப்பின் மேல் வெற்றி ஏற்படும் இல்லையா? ஒருவேளை படைப்பவர் படைப்பிலிருந்து தோல்வி அடைந்து விட்டார் என்றால் அவரை படைப்பவர் என்று கூற முடியுமா? எனவே இயற்கை மூலமாக வந்திருக்கும் சூழ்நிலைகள் படைப்பாகும். அப்படி மாஸ்டர் படைப்பவர் அதாவது மாஸ்டர் சர்வ சக்திவான் ஒருபொழுதும் தோல்வி அடைய முடியாது. அசம்பவம் ஆகும். ஒருவேளை உங்களுடைய இருக்கையை விடுகிறீர்கள் என்றால் தோல்வி ஏற்படுகிறது, இருக்கையில் அமர்ந்திருப்பவரின் சக்தி இருக்கும். இருக்கையை விட்டு விட்டார் என்றால் சக்தியில்லாதவர் ஆகிவிடுவார். அப்படி மாஸ்டர் படைப்பவரின் இருக்கையில் இருக்க வேண்டும், இருக்கையின் ஆதாரத்தினால் சக்திகள் தானாகவே வரும். கீழே வராதீர்கள், கீழே இருப்பதே தேக அபிமானம் என்ற மாயாவின் தூசி ஆகும். கீழே வந்தீர்கள் என்றால் உங்கள் மேல் தூசி படிந்து விடும்.

அதாவது சுத்த ஆத்மாவிலிருந்து அசுத்த ஆத்மா ஆகிவிடுவீர்கள். குழந்தை கூட ஒருவேளை தன்னுடைய ஸ்தானத்திலிருந்து கீழே வந்து விட்டது என்றால் அழுக்காகி விடும். அழுக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்று குழந்தைகள் மேல் கவனமாயிருப்பார்கள். அப்படி தேக உணர்வில் வருவது என்றால் அழுக்காகி விடுவது. நீங்கள் சுத்தமான ஆத்மா ஆவீர்கள். சுத்தத்தில் ஒருவேளை கொஞ்சம் மண் படிந்து விட்டாலும் தெளிவாகத் தென்படும். கொஞ்சம் தேக அபிமானத்தின் அழுக்கு கூட சுத்த ஆத்மாக்கள் உங்களில் தெளிவாகத் தென்படும். அடிக்கடி தேக உணர்வில் வருவது என்றால் மண்ணில் விளையாடுவது மற்றும் மண்ணை சாப்பிடுவது. நீங்கள் அப்படி இல்லை தானே? எப்பொழுதாவது கடந்த காலத்து சம்ஸ்காரம் வருவதில்லையே? எப்பொழுது மர்ஜீவா (மறுபிறவி) ஆகிவிட்டீர்களோ அப்போது கடந்த காலம் முடிந்து விட்டது. மர்ஜீவா என்றால் பிராமண வாழ்க்கை

ஆகும். பிராமணர் ஒருபொழுதும் மண்ணில் விளையாட மாட்டார். அது சூத்திரத்தன்மையின் விஷயம் ஆகும். எனவே எப்பொழுதும் தந்தையின் நினைவு என்ற மடியில் இருங்கள். நினைவே நினைவு தான், செல்லமான குழந்தைகளை தாய் தந்தையர் மடியில் வைப்பார்கள். மண்ணில் செல்ல விட மாட்டார்கள். அப்படி நீங்களும் செல்லக் குழந்தைகள் தான் இல்லையா?. அப்பொழுது மண்ணில் விளையாட முடியாது. இரத்தினங்களுடன் விளையாடிக் கொண்டே இருங்கள். மண்ணில் விளையாடுபவர்கள் தந்தையின் குழந்தையாக இருக்கவே முடியாது. இராயல் தந்தையின் குழந்தைகள், மண்ணில் விளையாடுவதில்லை. அப்படி நீங்கள் மிகப்பெரிய தந்தையின் குழந்தைகள் எப்பொழுதும் ஞான இரத்தினங்களோடு விளையாடக்கூடிய உயர்ந்த ஆத்மா ஆவீர்கள். நீங்கள் அந்த மாதிரி தான் இல்லையா?. நல்லது.

எப்படிப்பட்ட சூழ்நிலையாக இருந்தாலும், தந்தையின் துணையின் நினைவு இருக்கிறது என்றால் மாயாவை வென்றவர் ஆகிவிடுவீர்கள். தந்தையை துணைவனாக ஆக்குவதினால் வெற்றி இரத்தினம் ஆகிவிடுவீர்கள். எப்பொழுதும் தந்தையின் துணை இருக்கிறது என்றால், எப்பொழுதும் குஷியாகவும் தடையற்ற வராகவும் இருப்பீர்கள். ஒருவரிலிருந்து இரட்டையர் ஆகிவிட்டீர்கள் என்றால் எப்பொழுதும் மகாவீரனாக இருப்பீர்கள். பயமற்று இருப்பீர்கள். தந்தையின் துணை இருக்கும் காரணத்தினால் மாயாவை வென்றவர் ஆகிவிடுவீர்கள்.

2) ஒரிசா குரூப்போடு சந்திப்பு -

சேவைகள் எந்த அளவு வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றனவோ அந்த அளவு சேவைக்கான வெகுமதி கிடைக்கிறது. யார் எத்தனை ஆத்மாக்களுக்கு தந்தையின் அறிமுகம் கொடுப்பதற்கு பொறுப்பாளர் ஆகிறாரோ அந்த அளவே இப்பொழுதும் குஷியின் பிராப்தி ஆகிறது. மேலும் எதிர்காலத்திலும் இராஜ பதவி பிராப்தி ஆகிறது. நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் இரண்டு காலங்களுமே உயர்ந்ததாக ஆகிவிடுகிறது. எதன் மூலம் இரண்டு காலங்களும் உயர்ந்ததாக ஆகிவிடுகிறதோ அந்தக் காரியத்தை எவ்வளவு செய்ய வேண்டும்?. உலக வாழ்க்கையில் கூட ஏதாவது ஒரு காரியத்தில் லாபம் அதிகம் ஏற்படுகிறது என்றால், இரவு பகலாக அதில் ஈடுபடுவார்கள். இதுவோ அனைத்தையும் விட உயர்ந்த வியாபாரமாகும். 21 ஜென்மங்களுக்காக ஒப்பந்தம் செய்கிறீர்கள். இந்த சீசனில் அந்த அளவு சேமித்து விடுகிறீர்கள். பிறகு நன்றாக ஓய்வாக அதை சாப்பிட்டுக் கொண்டே இருக்கிறீர்கள். எவ்வளவு பெரிய லாட்டரி கிடைக்கிறது? ஒரு ஜென்மத்தின் சிறிது கடின உழைப்பிற்குப் பிறகு அனேக ஜென்மங்கள் சாப்பிட்டுக் கொண்டே இருப்பீர்கள். அது எல்லைக்குட்பட்ட லாட்டரி ஆகும். அதில் ஒரு ரூபாய் போட்டால் லட்ச ரூபாய் லாட்டரி கிடைத்துவிடுகிறது. ஆனால் இதுவோ எல்லைக்கப்பாற்பட்ட அழியாத லாட்டரி ஆகும். வீட்டில் அமர்ந்து கொண்டே இவ்வளவு உயர்ந்த பிராப்தி கிடைக்கிறது. எனவே எப்பொழுதும் தன்னுடைய மனதில் தன்னுடைய பாக்கியத்தை பாடிக்கொண்டே குஷியாக இருங்கள். ஒருவேளை எங்கேயாவது பற்றுதல் பாசம் இருக்கிறது என்றால் துக்க உணர்வுகள் வரும்? எப்பொழுதாவது துக்கம் ஏற்படுகிறதா? தந்தை பல பிறவிகள் அழுவதை முடித்து விடுகிறார். துக்கம் இருக்கிறது என்றால் அழுவார்கள். துக்கமே இல்லை என்றால் அழுகை முடிந்து விடும். அனைவரும் சுகம் கொடுக்கும் வள்ளலின் குழந்தைகள் மாஸ்டர் ஆகிவிட்டீர்கள் என்றால் துக்கம் வர முடியாது. துக்கத்தின் கதவுகள் மூடியிருக்கிறது, அதாவது சுகத்தின் கதவுகள் திறந்து விட்டன. சொர்க்கத்தின் டிக்கெட்டை வாங்கி விட்டீர்கள் தான் இல்லையா?. எப்பொழுதும் குஷியில் ஆடிக் கொண்டே இருங்கள். குஷி இருக்கிறது என்றால் உங்களைப் பார்த்து பிறகும் குஷி அடைவார்கள். மேலும் தந்தையின் அருகில் வருவார்கள். உங்களுடைய குஷி தந்தையின் அறிமுகத்தைக் கொடுக்கும். ஒருபொழுதும் வியோகி அதாவது பிரிந்திருப்பவர் ஆகாதீர்கள். எப்பொழுதும் யோகியாக இருங்கள். சங்கமயுகத்தின் விசேஷ பிராப்தியே தந்தையோடு சந்தித்துக் கொண்டிருப்பது தான். அதுவும் எப்பொழுதுமே சந்தித்துக் கொண்டே இருப்பவர் ! அந்த மாதிரி குஷியில் இருங்கள். நல்லது.

3) எப்பொழுதும் தன்னை மகாவீர் அதாவது எப்பொழுதும் ஞானத்தின் ஆயுதம் தரித்தவர் என்று அனுபவம் செய்கிறீர்களா? மகாவீரரை எப்பொழுதும் ஞானத்தின் ஆயுதங்களோடு சித்தரிப்பார்கள் அது வெற்றியின் அடையாளம் ஆகும். அப்படி நீங்கள் எப்பொழுதும் ஞானத்தின் ஆயுதங்களினால் அலங்காரம் நிறைந்த மகாவீரரா? ஆயுதங்களை தேவையான நேரத்தில் உபயோகப்படுத்துகிறீர்களா? அல்லது தேவையான நேரத்தில் காரியம் செய்வதில்லையா? அனைத்து பொருட்களும் இருக்கும், ஆனால் அந்த நேரத்தில் நினைவிருக்காது என்று அப்படியும் இருக்கும். எனவே எப்படி சூழ்நிலையோ அப்படி ஞானத்தின் ஆயுதம் மூலமாக மகாவீரராகி மாயாவை வென்றவர் ஆகிவிடுகிறீர்கள். எவ்வளவு நேரத்தில் வெற்றி அடைபவராக ஆகிறீர்கள்? ஒரு நொடியில் வெற்றி அடைபவராக ஆகிறீர்களா? அல்லது நேரம் எடுக்கிறதா? அவ்வாறு ஒருவேளை நேரம் எடுத்தால் மகாவீர் என்று கூறமாட்டோம். ஒருவேளை வெற்றி அடைபவதில். ஒரு மணி நேரம் எடுத்தது, மேலும் அந்த நேரத்திற்குள்ளேயே இறுதி நேரமும் வந்து விட்டது என்றால், எந்த பதவியை அடைவீர்கள்? அப்படி மகாவீரர் என்றால் ஒவ்வொரு நேரமும் கவனம் வைப்பவர். யார் ஒவ்வொரு சூழ்நிலையிலும் வெற்றி அடைவாரோ அவர் தான் மதிப்புடன் தேர்ச்சி அடைவார். அப்படி நீங்கள் எப்பொழுதும் தேர்ச்சி அடைபவர்கள் தான் இல்லையா?

டீச்சர்களுடன் சந்திப்பு -

டீச்சர்களுக்கு விசேஷமாக லி்ஃப்ட்டின் கி்ஃப்ட் இருக்கிறது. ஏன்? டீச்சர்களுக்கு ஈஸ்வரிய சேவையைத் தவிர வேறு எந்த சுமையும் இல்லை. ஒருவரின் நினைவு மட்டும் ! மேலும் அந்த ஒருவருக்காக மட்டும் சேவை. எப்பொழுது ஒரே ஒரு வேலை தான் இருக்கிறது என்றால், அந்த ஒரு வேலையில் நல்ல முறையில் முன்னேறிச் செல்ல முடியும் இல்லையா? குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கோ இரண்டு காரியங்கள் செய்ய வேண்டியதாக இருக்கிறது, டீச்சர்கள் சுலபமாகவே ஒரே சீரான நிலையில் இருக்க முடியும். பேச வேண்டியதென்றாலும், தந்தையின் அறிமுகம் கொடுக்க வேண்டும், உடல் மூலமாக சேவை செய்ய வேண்டும் என்றாலும், இவ்வாறு தந்தை எந்த காரியத்திற்கு பொறுப்பாளர் ஆக்கியிருக்கிறாரோ அதைச் செய்ய வேண்டும். அப்படி டீச்சர்களுக்கு இயற்கையான லி்ஃப்ட் கிடைத்திருக்கிறது. இந்த லி்ஃப்ட்டின் லாபத்தை எடுத்துக் கொண்டே இருங்கள். டீச்சர்கள் என்றால் டபுள் லைட். கருவியாக இருந்து நடந்து கொள்ள வேண்டும். அதாவது டபுள் லைட் என்றால், எப்பொழுதும் இதே நிலையின் அனுபவம் ஆக வேண்டும். செய்பவர் செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார், நான்

கருவியாக இருக்கிறேன் என்றால் வெற்றி கிடைக்கும். நான் என்பது வந்தது என்றால் மாயாவின் கதவுகள் திறந்தன. கருவி என்று புரிந்து கொண்டால் மாயாவின் கதவுகள் மூடிவிட்டன. கருவி என்று புரிந்து கொள்வதினால் மாயாவை வென்றவர் ஆகிவிடுகிறார்கள், டபுள் லைட்டும் ஆகிவிடுகிறார்கள், மேலும் வெற்றியும் கிடைத்து விடுகிறது. அப்படி டீச்சர்களுக்கு இந்த -ப்ட் இருக்கிறது. எவ்வளவு லாபத்தை எடுக்க விரும்புகிறீர்களோ அந்த அளவு எடுக்க முடியும். அப்படி டீச்சர்களுக்கு தன்னுடைய வரிசை எண் என்னவாக இருக்கிறது என்று சோதனைசெய்ய வேண்டும். டீச்சர்களுக்கு சேவையின் பாக்கியம் கிடைத்திருக்கிறது. வஞ்சிக்கப்பட்ட எத்தனை ஆத்மாக்களுக்கு தந்தையின் அறிமுகம் கொடுத்து திருப்தியான ஆத்மாவாக ஆக்குபவர்கள் நீங்கள். சேவையில் இரக்க மனம் என்ற குணம் நினைவில் இருக்கிறதா? இரக்க மனமுடைய தந்தையின் குழந்தைகள் இரக்க மனமுடையவராகி சேவை செய்கிறார்கள் என்றால் வெற்றி அதிகம் கிடைக்கிறது. அப்படி அனைவரும் தந்தைக்குச் சமமாக இரக்க மனமுடையவராக இருக்கிறீர்களா, ஒன்றும் அறியாத ஆத்மாக்கள் மேல் இரக்கம் வருகிறதா? எப்பொழுதும் சம்பன்னமானவராகி வரதானி மற்றும் மகாதானி ஆகுங்கள். பலஹீனமான ஆத்மாக்களுக்கு சக்தி கொடுத்து முன்னேறச் செய்யுங்கள். சம்பன்னமானவராகி சேவை செய்யுங்கள். நல்லது.

வரதானம் : '

மாஸ்டர் ஞானக் கடலாகி பொம்மைகள் விளையாட்டை முடிவு கட்டக்கூடிய நினைவு மூலம் சக்தி சொரூபமானவர் ஆகுக.

எப்படி பக்தி மார்க்கத்தில் சிலைகளை உருவாக்கி பூஜை செய்கிறார்கள், பின்பு அவற்றை தண்ணீரில் மூழ்கடிக்கிறார்கள், எனவே அதை நீங்கள் பொம்மைகளின் பூஜை என்று கூறுகிறீர்கள். அதே போல் உங்கள் எதிரிலும் எப்பொழுதாவது, ஏதாவது உயிரற்ற, சாரமற்ற விஷயங்களான பொறாமை அனுமானம், ஆவேசம் ஆகியவை உருவாகின்றன என்றால் மேலும் நீங்கள் அவற்றை விஸ்தாரமாக்கி இது தான் சத்தியம் என்று அனுபவம் செய்கிறீர்கள் அல்லது செய்விக்கிறீர்கள் என்றால், அதில் உயிரை நிரப்புவதாகும். பின்பு ஞானக்கடல் தந்தையின் நினைவு மூலம் கடந்ததை கடந்ததாக்கி சுயமுன்னேற்றம் என்ற அலைகளில் மூழ்கடிக்கிறீர்கள். ஆனால் இதில் நேரம் வீணாகிறது தான் இல்லையா? எனவே முன்பாகவே மாஸ்டர் ஞானக்கடலாகி நினைவு மூலம் சக்திசாலியானவர் ஆகுக

என்ற வரதானம் மூலம் இந்த பொம்மைகளின் விளையாட்டிற்கு முடிவு கட்டுங்கள்.

சுலோகன் :

யார் தேவையான நேரத்தில் சகயோகி ஆகிறார்களோ அவர்களுக்கு ஒன்றிற்கு பலமடங்கு கிடைத்து விடுகிறது.

ஓம் சாந்தி

05.02.1979 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" மதுபன் நிவாசிகளுடன் பாப்தாதாவின் ஆன்மீக உரையாடல் "

இன்று விசேஷமாக நினைவுச்சின்னமாக இருக்கும் பூமி, எது இன்று வரையிலும் பக்தர்களால் மகிமை செய்யப்படும் பூமியாக இருக்கிறதோ அந்த மகான் பூமி மற்றும் மகான் தீர்த்த ஸ்தானத்தில் வசிக்கக்கூடிய விசேஷமான பாக்கியசாலி ஆத்மாக்களை சந்திப்பதற்காக வந்திருக்கிறோம். எப்படி பூமி சக்தி நிறைந்ததாக

இருக்கிறதோ, அதன்படி, இந்த பூமிக்கு வருவதால் அனேக ஆத்மாக்களின் வீணானவை முடிந்து விடுகின்றன, அனைவரும் சக்தி நிறைந்தவர்களாக ஆகிவிடுகிறார்கள், அனேக விதமான அனுபவங்களின் பொக்கிஷத்தை எளிதில் அடைந்து விடுகிறார்கள், அந்த மாதிரியான பூமி இது ! இங்கு எந்த வரதானம் வேண்டுமோ அந்த வரதானத்தை நினைவு மற்றும் பூமியின் ஆதாரத்தினால் சகஜமாகவே அடைய முடியும். அப்படியானால் அப்படிப்பட்ட பூமியில் வசிப்பவர்கள் என்னவாக இருப்பார்கள்? பக்தர்கள் இந்த தெய்வீக பூமியை மற்றும் உயர்ந்த ஸ்தானத்தை தரிசனம் செய்வதற்காக இன்று வரையிலும் கூட துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பூமியில் வசிப்பவர்கள் தரிசனம் கொடுக்கும் மூர்த்தியாக இருக்கிறீர்களா? எப்படி இடத்திற்கு மகத்துவம் இருக்கிறதோ அது போன்றே மனநிலையும் இருக்கும், அல்லது உங்கள் மனநிலையை விட ஸ்தானத்தின் மகிமை அதிகமாக இருக்கிறதா? தூரத்தில் இருப்பவர்கள் மதுபன்னின் நினைவினால் மட்டுமே சக்திசாலி ஆகிவிடுகிறார்கள். அப்படியானால் மதுபன்னில் வசிப்பவர்கள் எப்படி இருப்பார்கள்? எப்படி மகத்துவம் இருக்கிறதோ அது போன்றே மகானாக இருக்கிறீர்களா? மதுபன் ஸ்தூலமான, சூட்சுமமான பிராப்திகளின் களஞ்சியம் ஆகும். அதன் அனுசாரம் அனைவரும் தனது வேகம் மற்றும் நிலையை உயர்வானதாக நினைக்கிறீர்களா? மதுபன் நிவாசிகளுக்கு என்ன சாதனம் இருக்கிறதோ, சகவாசம் இருக்கிறதோ, பூமியின் மகத்துவத்தின் சகயோகம் இருக்கிறதோ, வாயுமண்டலத்தின் சகஜமான சாதனம் இருக்கிறதோ அதன்படியே வெற்றி சொரூபமாக இருக்கிறீர்களா? வருடங்கள் கடந்தன, இந்த வருடமும் கடந்து விட்டது, புதிய வருடமும் ஆரம்பித்து விட்டது இவ்வருடத்தின் மாதமும் ஒன்றும் கடந்து விட்டது, ஒரு மாதத்தின் ரிசல்ட்டில் கூட அனுபவம் என்னவாக இருந்தது? முன்னேறும் கலையின் அனுபவம் இருந்ததா? ஒவ்வொரு அடியும்

சேமிப்பு செய்யக்கூடியதாக அதாவது சக்தி நிறைந்ததாக இருந்ததா? தனக்காகவும் மற்றும் அனைவருக்காகவும் தடைகளை அழிக்கக்கூடியதாக இருந்ததா? நேரம் அருகாமையில் வந்து கொண்டிருக்கிறது என்றால், நான்கு பாடங்களிலும் மதிப்பெண்கள் தேவையாக இருக்கிறது. எப்படி சேவையைப் பொருத்தளவில் (மதுபன்) சேவாதாரிகள் மிக நன்றாக சேவை செய்கிறார்கள் என்று அனைவரின் வாயிலிருந்தும் ஒரே ஒரு வார்த்தை தான் வெளியாகிறது, அதே போல் ஞானம், யோகம் மற்றும் தாரணையிலும் நிரம்பியவராக இருக்கிறீர்களா? எப்படி முழு வாயுமண்டலத்தில் சொர்க்கத்தின் அனுபவம் செய்கிறார்கள், அது போன்று (மதுபன்னில்) வசிக்கக்கூடியவர்களையும் சொர்க்கத்தில் வசிப்பவர்களாக அதாவது அனைத்து பிராப்தி சொரூபமானவர்களாக அனுபவம் செய்யட்டும். போகும் போதும் வரும் போதும் ஒவ்வொருவருக்கும் ஃபரிஷ்தாவாக பார்க்கத் தென்படட்டும். நல்லது.

சேவைகளுக்கான சமிக்ஞை -

இந்த வருடம் அனைத்து துறைகளைச் சார்ந்தவர்களையும் தொடர்பில் கொண்டு வாருங்கள். தன்னுடைய அதிகாரத்தின் மூலம் குறிப்பால் உணர்த்தப்பட்ட உடனேயே அனைத்து காரியங்களையும் நிறைவேற்றி விட வேண்டும். அந்த மாதிரி தொடர்பில் அவர்கள் வர வேண்டும். தேவையான நேரத்தில் தொடர்பை வைக்கிறீர்கள், ஆனால் இடையில் அது தொய்வாகி விடுகிறது, இப்பொழுது தொடர்பை அதிகப்படுத்துங்கள். ஒவ்வொருவரின் பாக்கியத்தையும் அவசியம் உருவாக்க வேண்டும் என்று எப்படி தொடக்க காலத்தில் லட்சியம் இருந்ததோ, அது போன்றே ஒவ்வொரு துறையின் ஆத்மாக்களையும் தொடர்பில் கொண்டு வந்து விசேஷ சேவைக்கான பொறுப்பாளர் ஆக்கி சகயோகத்தைப் பெற வேண்டும் என்ற லட்சியத்தை இப்பொழுது வைக்க வேண்டும். இப்பொழுது அனைத்து இடங்களிலும் மத்திய தரம் கொண்டவர்களாகவே இருக்கிறார்கள், ஆனால் இறுதியிலோ அனைவரும் வந்து சேர வேண்டும், ஒருவர் மூலமாக அனேகர்களுக்கு கிடைத்து விடும், அந்த மாதிரி விசேஷ ஆத்மா வெளிப்பட வேண்டும். ஊக்கம் உற்சாகம் உருவாக வேண்டும். அப்பொழுது தான் வரிசை (க்யூ) ஏற்படும். இந்த வருடம் இவ்விதமான தரமுள்ள சேவை நடக்க வேண்டும். உலகத் தந்தை என்ற பட்டம் இருக்கிறது என்றால், உலகத்தில் அனைத்து தரப்பினரும் வேண்டும் இல்லையா? நாஸ்திகர் என்றாலும் கூட அவரும் தொடர்பில் அவசியம் வர வேண்டும். புது உலக ஸ்தாபனைக்காக அனைத்து விதமான விதைகளும் வேண்டும், அப்பொழுது தான் விஷ்வ கல்யாணகாரி ஆக முடியும். இவர்களுடைய மாற்றம் மற்றும் விதிகள் மிகவும் நன்றாக

உள்ளது என்று தர்மத் தலைவர்கள், இராஜ்யம் செய்யும் (அரசியல்) தலைவர்கள் போன்றோர் அவசியமாக இந்த அளவிலாவது ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். தர்ம தலைவர்கள் கூட அனுபவம் செய்து சகயோகம் செய்வதற்கு முன்வருவார்கள். நல்லது.

டீச்சர்களுடன் சந்திப்பு -

அனைத்து டீச்சர்களும் விசேஷமான சேவாதாரிகள் அதாவது தந்தையை தனது வார்த்தைகள் மூலம் மற்றும் காரியம் மூலம் வெளிப்படுத்தக் கூடியவர்கள் தான் இல்லையா? வெளிப்படுத்துவது தான் விசேஷ சேவாதாரியின் கடமை ஆகும் - இதுவரையிலும் என்ன செய்தீர்களோ அது அவரவரின் சக்திக்கேற்றாற் போன்று வரிசைக்கிரமமான முயற்சியின் அனுசாரம் மிக நன்றாகவே செய்திருக்கிறீர்கள், ஆனால் இதுவரையிலுமான முடிவில் - இவர்கள் மகான் ஆத்மாக்கள், உயர்ந்த வாழ்க்கை வாழ்பவர்கள், இந்த அனுபவத்தை சில சில ஆத்மாக்கள் செய்திருக்கிறார்கள், வர்ணனையும் செய்கிறார்கள். ஆனால் இப்பொழுது இன்னும் வேறு என்ன இருக்கிறது? தந்தை வாழ்க்கையை உருவாக்கி குழந்தைகளை முன்னிருத்தினார், அந்த வாழ்க்கையை மகிமை செய்து கொண்டிருக்கிறார்கள், ஆனால் இப்பொழுது குழந்தைகளின் கடமை என்ன?

தந்தை முதுகெலும்பாக இருக்கிறார், மறைமுகமான வடிவில் தனது பங்கை செய்து கொண்டிருக்கிறார் - அந்த தந்தையை வெளிப்படுத்த வேண்டும். சொல்பவர்களை அறிந்து கொண்டார்கள், ஆனால் அவர்களை உருவாக்கியவர் இப்பொழுதும் மறைந்தே இருக்கிறார். எனவே இப்பொழுது உருவாக்கக்கூடியவரை வெளிப்படுத்த வேண்டும். அதாவது வெற்றிக் கொடியினை பறக்க விட வேண்டும். விசேஷமாக எப்பொழுது மேடையில் வருகிறீர்களோ அந்த நேரம் நீங்களும் தந்தையின் அன்பில் மற்றும் பிராப்திகளில் லயித்துப்போகக்கூடிய சொரூபம் உள்ளவர்களாகி விட வேண்டும். எப்படி லௌகீக முறையில் கூட யாராவது எவருடைய அன்பில் லயித்துப் போய் விடுகிறார் என்றால் அவரது முகம் மூலம், கண்கள் மூலம், வார்த்தைகள் மூலம் இவர் யாருடைய நினைவிலேயே மூழ்கியிருக்கிறார், அன்பில் லயித்து விட்டார் என்ற அனுபவம் ஆகும். அது போன்று எப்பொழுது மேடையில் வருகிறீர்களோ அப்பொழுது எந்த அளவு தனக்குள் தந்தையின் அன்பு வெளிப்படுமோ அந்தளவு அன்பின் அம்பானது மற்றவர்களையும் அன்பால் காயப்படுத்தி விடும்.

சொற்பொழிவிற்காக யோசித்தல், ஞானத்துளிகளை மனதில் ஓட விடுதல், இந்த சொரூபம் மட்டும் இருக்க வேண்டாம். கூடவே அன்பு மற்றும் பிராப்திகள் நிரம்பிய சொரூபம் இருக்கட்டும், அதிகாரம் (அதாரிட்டி) இருக்க வேண்டும் - யார் எதில் அதிகாரம் ((முழுமை) நிறைந்தவராக இருப்பாரோ அவருக்கு அதைப் பற்றி யோசிக்க வேண்டியது இருக்காது. யோசித்தவாறே இருப்பார். மேடைக்கு வருவதற்கு முன்பே ஞானசிந்தனை செய்து புத்தியில் முன்கூட்டியே தலைப்பை தெளிவுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும். அந்த நேரம் இந்த கவனத்தில் இருக்கக் கூடாது. தலைப்பு தயாராகிவிட்டது என்றால், தலைப்பினுடைய அதிகாரத்தோடு பேசுவீர்கள். ஞானத் துளிகளைப் பற்றியே சிந்தித்து கொண்டிருந்தீர்கள் என்றால் அதிகாரத்தின் (அத்தாரிட்டி) அனுபவம் ஏற்படாது. முதலில் அன்பு மற்றும் பிராப்தி சொரூபம் இருக்கட்டும் - இரண்டாவதாக எப்பொழுது பேச ஆரம்பிக்கிறீர்களோ அப்பொழுது ஒன்று அகத்தின் அத்தாரிட்டி மற்றும் வார்த்தைகளில் தந்தையின் (உள்ளப்பூர்வமாக) மகிமை இருக்கட்டும். எப்படி சிவராத்திரி நாள் இருக்கிறது, அதாவது சிவராத்திரி என்றால் தந்தையை வெளிப்படுத்துவதற்கான நாள் ஆகும், இதைத் தான் பரமாத்மா-பாம்ப் (பரமாத்மா-குண்டு) என்று கூறுவது. எது உள்ளுக்குள் நிரம்பியிருக்கிறதோ அது மக்களுக்கு வெளிப்படையாக தென்படட்டும். இது தான் குண்டை வெடிக்கச் செய்வது. எப்படி குண்டு வெடிக்கிறது என்றால் அது என்ன செய்கிறது? அனைத்தையும் நெருப்பால் எரித்து விடுகிறது. அப்படியென்றால் இந்த பரமாத்மா-பாம்ப் அதாவது அன்பின் பாம்ப், சம்மந்தத்தை இணைக்கும் பாம்ப், உள்ளத்தின் வார்த்தைகளால் மகிமை செய்யக்கூடிய பாம்ப், ஈடுபாட்டில் மூழ்கிய அப்படிப்பட்ட நெருப்பில் அனைவரையும் அசைத்து விடட்டும். குண்டு வெடிக்கிறது என்றால், அனைத்தும் அசைந்து விடுகிறது இல்லையா? எனவே இது யாருடைய மகிமை! என்று அனைவரின் புத்தியை அசைத்து விடட்டும் இவர் எந்த அதிகாரத்தோடு பேசிக் கொண்டிருக்கிறார், இது என்ன மற்றும் யாருடைய செய்தியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அதிகாரமும் இருக்க வேண்டும் மற்றும் இனிமைத்தன்மையும் இருக்க வேண்டும். வார்த்தைகளில் இனிமைத்தன்மை இருக்கட்டும். ஆனால் உள்ளே அதாரிட்டி நிரம்பிய நிலை இருக்க வேண்டும். வார்த்தைகளும் இரக்கமனதின் பாவனையுள்ளதாக இருக்கட்டும். தெளிவுப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். ஆனால் தெளிவுபடுத்துவதின் கூடவே, தந்தையின் மகிமை செய்து கொண்டே சம்மந்தத்தையும் இணைத்துக் கொண்டே செல்ல வேண்டும். நாங்கள் இதை ஏன் கூறுகிறோம், இதன் மூலம் என்ன பிராப்தி ஆகும், எங்களுடைய அனுபவம் என்ன! ஒரு நொடிப்பொழுதின் பிராப்தியாவது என்ன! என்று இம்மாதிரியாக இடையிடையே உண்மையான அனுபவத்தின்

வார்த்தைகள் என்று அனுபவம் ஆக வேண்டும். சொற்பொழிவு என்று மட்டும் அனுபவம் ஆக வேண்டாம், முழு ஈடுபாட்டில் மூழ்கி இருப்பவராக அனுபவம் ஆக வேண்டும். இந்த புதுமை வேண்டும். மக்கள் பேசுவார்கள், ஆனால் சொரூபம் ஆவதில்லை, உங்களுடைய சொற்பொழிவு மற்றும் சொரூபம் இரண்டும் சேர்ந்தே இருக்க வேண்டும். தெளிவாகவும் இருக்க வேண்டும், அன்பும் இருக்க வேண்டும், பணிவு, இனிமைத்தன்மை மற்றும் மகான் தன்மையும் இருக்க வேண்டும், சத்தியத்தன்மையும் இருக்க வேண்டும். ஆனால் சொரூபத்தில் பணிவும் இருக்க வேண்டும், இவ்விதமாக தந்தையை வெளிப்படுத்த வேண்டும். பயமற்றவராக இருக்க வேண்டும், ஆனால் வார்த்தைகள் மரியாதைக்குள்ளே இருக்க வேண்டும். இரண்டு விஷயங்களின் பேலன்ஸ் (சமநிலை) இருக்க வேண்டும் - எங்கு சமநிலை இருக்கிறதோ அங்கு அதிசயம் பார்க்கத் தென்படும். மேலும் அந்த வார்த்தை கடுமையானதாக இன்றி இனிமையானதாக அனுபவம் ஆகும். எனவே அதிகாரம் மற்றும் பணிவு ஆகிய இரண்டின் சமநிலையின் அதிசயத்தைக் காண்பியுங்கள். இதைத் தான் தந்தையை வெளிப்படுத்துவதற்கான வழி என்று கூறப்படுகிறது. எப்படி பொய்யான சாஸ்திரங்களின் அதிகாரமுடையவர்கள் கூட எவ்வளவு அதிகாரத்தோடு பேசுகிறார்கள். எது முற்றிலும் பொய்யான விஷயமோஅதை எவ்வளவு நிரூபணம் செய்து கூறுகிறார்கள். நிரூபிப்பது மட்டுமல்ல ஏற்றுக் கொள்ளவும் வைப்பார்கள். ஆனால் சத்தியவாக்கு கூறும் மகாராஜ் என்றும் கூறிக்கொள்வார்கள், அப்படி அந்த பொய்யான அதிகாரம் கொண்டவர்கள் கூட இந்தளவு பாதிப்பை ஏற்படுத்த முடிகிறது என்றால், உங்களுடையதோ அனுபவத்தின் வார்த்தைகள், பிராப்தி சொரூபத்தின் வார்த்தைகள். தந்தையோடு சம்மந்தம் இருக்கிறது இது அவருடைய விஷயங்கள், அப்படியாயின் ஏன் சொல்ல வைக்க மாட்டோம் மற்றும் ஏற்றுக்கொள்ள வைக்க மாட்டோம். எனவே இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா!

அறிமுகத்தை முழுமையாகத் தெளிவுபடுத்திட வேண்டும் - ஒரு விஷயத்தைக் கூறி தந்தையின் பக்கம் கவனத்தை இழுங்கள், அனைத்து ஞான விஷயங்களையும் கூறி தந்தையின் மகிமை நிறைந்த வார்த்தைகளைக் கூறி தந்தையின் பக்கம் கவனத்தை இழுங்கள், அடிக்கடி கல்லின் மீது அன்பு என்ற தண்ணீரை ஊற்றிக் கொண்டே செல்லுங்கள். அப்பொழுது தான் இந்தக் கல்லும் கரையும். மேலும் எவ்வளவு முடியுமோ அந்த அளவு அமைதியின் பிரபாவம் இருக்கட்டும். ரூபமும், வடிவமும் ஆன்மீகமாக இருக்கட்டும், எளிமையான, சுத்தமான, ஆன்மீகத்தன்மை நிறைந்த மற்றும் தூய்மையின் அதிர்வலைகள் இருக்கட்டும். கேட்பவர்களில் யார் சகயோகி பிராமண ஆத்மாக்களோ

அவர்களிலும் வாயுமண்டலத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்க வேண்டும். எப்படி அகர்பத்தி வாயுமண்டலத்தை மாற்றம் செய்து விடுகிறதோ அது போல் அனைத்து பிராமண ஆத்மாக்களின் இரக்க மனமுடைய உள்உணர்வு அகர்பத்தியின் காரியம் செய்யட்டும் - இதனால் வந்தவுடனேயே இந்த சபை ஏதோ ஆன்மீகமான சபை என்று அவர்கள் உணர வேண்டும். நல்லது - அன்பான சந்திப்பினால் அன்பை நிரப்பிக் கொண்டு செல்வார்கள் மற்றும் பிறகு அனைவருக்கும் அன்பை பகிர்ந்தளிப்பார்கள். தந்தையின் அன்பின் காரணமாக அந்த மாதிரி சொரூபம் ஆகிவிடுவீர்கள். அதன் மூலம் அனைவருக்கும் உங்களின் தோற்றம், நடத்தை மூலம் தந்தையின் அன்பு தென்பட வேண்டும். அந்த மாதிரி சந்திப்பை செய்து கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? அன்பு சந்திப்பு (அன்பால் ஒத்துப்போதல்) என்றால், உறுதியான எண்ணம் மூலமாக சுயமாற்றம் மற்றும் அனைவரின் மாற்றத்திற்கு சகயோகி ஆவது. இது தான் அன்பு சந்திப்பின் (சினேக மிலன்) விசேஷத்தன்மை. அன்பு சந்திப்பு என்றால் நடைமுறையில் சம்ஸ்காரம் ஒத்துப்போவதாகும். எப்படி சந்திப்பின் பொழுது கை குலுக்கிக் கொள்கிறார்கள் இல்லையா? இந்த சந்திப்பானது சம்ஸ்காரம் ஒத்துப்போகும் சந்திப்பு. ஒருவேளை அனைவரின் சம்ஸ்காரம் ஒத்துப்போய் தந்தைக்குச் சமமாக ஆகி விட்டது, ஒரே ஒரு சம்ஸ்காரம் அனைவருடைய சம்ஸ்காரமாக ஆகிவிட்டது என்றால் என்ன ஆகும்? ஒரு இராஜ்யம், ஒரு தர்மத்தைச் சேர்ந்த உலகம் வந்து விடும். இங்கு ஒன்றாக ஆவது தான் ஒரு தர்மம், ஒரு இராஜ்யத்தின் உலகத்தைக் கொண்டு வருவதற்கான ஆதாரம் ஆகும். அன்பு சந்திப்பு என்றால் புகார்கள் முடிய வேண்டும் மற்றும் முழுமையாகிச் செல்ல வேண்டும். புகார்கள் முடிய வேண்டும், உல்லாசத்தில் வந்து விட வேண்டும் - இது தான் அன்பு சந்திப்பு.

### வெளிநாட்டு சகோதரசகோதரிகளுடன் சந்திப்பு -

பாப்தாதா அன்பில் லயித்துப் போய் இருக்கக்கூடிய அனைத்து குழந்தைகளையும் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார் - யார் எப்பொழுதும் அன்பில் லயித்துப் போய் இருக்கிறார்களோ அவர்களுடைய அடையாளம் என்னவாக இருக்கும்? அன்பில் லயித்துப் போய் இருக்கும் ஆத்மாவிற்கு நினைவில் இருப்பதற்கான முயற்சி செய்ய வேண்டியதிருக்காது, ஆனால் இயல்பாகவே யோகியாகஇருப்பார். தந்தை மற்றும் சேவை இதைத் தவிர வேறு எதுவும் அவருக்குத் தென்படாது. எப்பொழுது புத்திக்கு ஒரே புகலிடம் கிடைத்து விட்டது என்றால், அப்பொழுது புத்தி அலைவது தானாகவே நின்று விடுகிறது. அன்பில் லயித்துப் போய் இருக்கும் ஆத்மா அனைத்து பிராப்திகளால் நிரம்பி இருந்து, மேலும் பிறருக்கும் பிராப்தி

செய்விப்பதற்கான காரியத்தில் முழுமையாக ஈடுபட்டு இருப்பார், எனவே எப்பொழுதும் மாயாவை வென்றவராக இருப்பார். நீங்கள் அன்பில் லயித்துப் போய் இருப்பவர்களா அல்லது கடின உழைப்பு செய்பவர்களா? வெளிநாட்டு வாழ் ஆத்மாக்களுக்கு விசேஷமாக வெளிநாட்டு சேவையின் பொருட்டு - யோகி வாழ்க்கையின் அனுபவமானது சேவையில் அவர்களை வெற்றி அடைபவராகச் செய்யும். எவ்வளவிற்கு எவ்வளவு தன்னுடைய நிலையை சக்திசாலியானதாக ஆக்குவீர்களோ அதாவது அனைத்து பிராப்திகளின் அனுபவம் நிறைந்தவர் ஆவீர்களோ அப்பொழுது தான் வெற்றிமூர்த்தி ஆகுவீர்கள். ஏனெனில், நாளுக்கு நாள் விதவிதமான விருப்பங்கள் கொண்ட ஆத்மாக்கள் உங்கள் எதிரில் வருவார்கள். எனவே, எப்பொழுது அனைத்து பிராப்திகளின் அனுபவ சொரூபமாக ஆவீர்களோ அப்பொழுது தான் அனைத்து விருப்பங்களை நிறைவேற்றும் ஆத்மாக்களாக ஆக முடியும். உங்கள் அனைவரையும் சுகம்-சாந்தியின் மாஸ்டர் வள்ளல் எங்கே என்று தேடிக் கொண்டு வருவார்கள். எப்பொழுது தன்னிடத்தில் அனைத்து சக்திகளின் இருப்பு இருக்குமோ அப்பொழுது தான் அனைவரையும் திருப்திப்படுத்த முடியும். எப்படி வெளிநாடுகளில் ஒரே கடையில் (சூப்பர் மார்க்கெட்) அனைத்து பொருட்களும் கிடைத்து விடுகிறது. நீங்களும் அது போன்று ஆக வேண்டும். சகித்துக் கொள்ளும் சக்தி இருக்கிறது ஆனால் எதிர்கொள்ளும் சக்தி இல்லை என்று அந்த மாதிரியும் இருக்கக்கூடாது. அனைத்து சக்திகளின் இருப்பு இருக்க வேண்டும். அப்பொழுது தான் வெற்றி மூர்த்தி ஆக முடியும். இப்பொழுது வெளிநாட்டில் மனதின் மூலம் சேவையின் வாயுமண்டலத்தை மேலும் சக்திசாலியாக ஆக்குங்கள். ஏனெனில் அங்கிருக்கும் விதவிதமான ஆத்மாக்கள் வாயுமண்டலத்தால் பிரபாவம் அடைவார்கள். முதலில் வைப்ரேஷன் (அதிர்வலைகள்) அவர்களை ஈர்க்கும் பிற ஞானம் கேட்க முடியும். மனதின் மூலம் செய்யும் சேவையை செய்வதற்காக எப்பொழுதும் ஏகாக்ரதாவின் (ஒருமுகப்பட்ட நிலை) பயிற்சி வேண்டும். வீணானவை அழிந்து போகவேண்டும் அப்பொழுது தான் மனதின் மூலம் சேவை செய்ய முடியும். மதுபன்னிலிருந்து மனதின் மூலம் செய்யும் சேவையை சக்திமிக்கதாக அனுபவம் செய்து கொண்டு மேலும் அங்கே செல்வதற்காக (அவரவரின் இருப்பிடத்திற்கு) பயிற்சி பெற்றவராகிச் செல்லுங்கள். யார் உங்களைப் பார்த்தாலும் சக்திகளின் சுரங்கம் வந்திருக்கிறார் என்று அனுபவம் செய்யட்டும். எந்த சக்திகள் அனுபவத்தில் வந்து விட்டதோ அந்த அனுபவம் நிரந்தரமாக வாழ்க்கையின் அங்கமாகி விடுகிறது, அதிகத்திலும் அதிகமாக அனுபவங்களின் சுரங்கமாக ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? எப்படி பாபா பெர்ஃபெக்டாக (துல்லியமாக) இருக்கிறாரோ அதே போல் குழந்தைகளும் தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும், எந்த டிபெஃக்ட்-ம் (குறைபாடும்) இருக்கக்கூடாது. நல்லது.

சேவாதாரி குழுவினருடன் -

சேவாதாரி என்றால் தந்தைக்குச் சமமானவர்கள். ஏனெனில் தந்தையும் சேவாதாரி ஆகித் தான் வருகிறார். தந்தையின் சொரூபமோ உலக சேவகர். எப்படி தந்தை உலக சேவாதாரியோ அதே போன்று நீங்கள் அனைவரும் தந்தைக்குச் சமமாக உலக சேவாதாரி ஆவீர்கள்! உடல் மூலமாக ஸ்தூலமான சேவை செய்கிறீர்கள். ஆனால் மனதின் மூலம் உலக மாற்றத்தின் சேவையில் மும்முரமாக இருந்து கொண்டே, உடல்-மனம் இரண்டிலும் சேவாதாரியாக இருக்க வேண்டும். ஒரே நேரத்தில் இரண்டு சேவையும் சேர்ந்தவாறு செய்கிறீர்கள். உடலின் சேவை செய்கிறீர்கள், மனதின் சேவை செய்ய முடிவதில்லை என்று அந்த மாதிரி இருக்க வேண்டாம். இரண்டையும் ஒரே நேரத்தில் செய்வதினால் இரட்டை பிராப்தி ஏற்படுகிறது. இரட்டை சேவாதாரி தான் இரட்டை கிரீடமணிந்தவராக ஆகிறார். ஒருவேளை ஒரு சேவை மட்டும் செய்தீர்களானால் இரட்டை கிரீடம் கிடைக்காது. காரியம் செய்து கொண்டே - இரட்டை சேவைக்குப் பதிலாக ஒரு சேவை மட்டும் தனியாக நடக்கவில்லையே? என்று சோதனைசெய்யுங்கள். கவனம் வைத்து வைத்து அதுவே சம்ஸ்காரம் ஆகிவிடும். யார் மனதின் சேவை மற்றும் காரியங்களின் சேவை இரண்டையும் சேர்த்தே செய்கிறார்களோ அவர்கள் மூலம் இவரிடம் ஏதோஆன்மீக சக்தி இருக்கிறது என்று பார்ப்பவர்களுக்கு அனுபவம் ஆகும். மக்கள் தாமாகவே உங்களின் பின்னால் வருவார்கள். இந்தப் பயிற்சியை அதிகப்படுத்துங்கள். இயற்கையானதாக மற்றும் நிரந்தரமானதாக ஆகிவிடும் அளவிற்கு இந்தப் பயிற்சியை அதிகப்படுத்துங்கள். நல்லது.

வரதானம் -

பிரம்ம முகூர்த்த வேளையில் வரதானத்தை பெறும் மற்றும் வழங்கக்கூடிய தந்தைக்குச் சமமான வரதானி, மகாதானி ஆகுக.

பிரம்ம முகூர்த்த நேரத்தில் விசேஷமாக பிரம்மலோகத்தில் வசிக்கக்கூடிய தந்தை ஞான சூரியன் லைட் மற்றும் மைட்-ன் கிரணங்களை குழந்தைகளுக்கு வரதான ரூபத்தில் அளிக்கின்றார். கூடவே பிரம்மா பாபா பாக்கியத்தை வழங்கும் வள்ளலின் வடிவில் பாக்கியம் என்ற அமிர்தத்தை வழங்குகிறார், இதைப் பெறுவதற்கு புத்தி என்ற கலசமானது

அமிர்தத்தை தன்னகத்தே நிரப்பிக் கொள்வதற்கு தகுதியானதாக மட்டும் இருக்க வேண்டும். எந்த விதமான தடையும் இருக்கக்கூடாது, எனவே முழு நாளிலும் உயர்ந்த மனநிலை மற்றும் காரியத்தின் முகூர்த்தத்தை கண்டறிய முடியுமா? ஏனெனில், அமிர்தவேளையின் சூழ்நிலையே உள்உணர்வை மாற்றக் கூடியதாக அமைகிறது. ஆகையால் அந்த நேரம் வரதானத்தைப் பெற்றுக் கொண்டே தானம் அளியுங்கள் அதாவது வரதானி மற்றும் மகாதானி ஆகுங்கள்.

சுலோகன் -

கோபப்படுபவரின் வேலை கோபப்படுவது மற்றும் உங்களின் வேலை அன்பை வழங்குவது !

ஓம் சாந்தி

" தந்தை மீது, சேவை மீது மற்றும் ஈஸ்வரிய குடும்பத்தின் மீது அன்பு வைத்தீர்கள் என்றால், கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவீர்கள் "

இன்று நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகள் தங்களுடைய தந்தையின் ஜெயந்தியைக் கொண்டாடுவதற்காக வந்திருக்கிறார்கள். நேரெதிரில் அமர்ந்திருந்தாலும், ஒளி வடிவமாக சூட்சும ரூபத்தில் (ஆகார ரூப்) தந்தையின் எதிரில் இருந்தாலும் தந்தை அனைத்து குழந்தைகளையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒரு பக்கம் சந்தித்துக் கொண்டிருப்பதின் குஷி இருக்கிறது, இன்னொரு பக்கம் மிக விரைவிலேயே பாப்தாதாவை பிரத்யக்ஷம் செய்ய வேண்டும் என்று சேவையின் ஊக்கம் உற்சாகம் இருக்கிறது. பாப்தாதா நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகளைப் பார்த்து பலகோடி மடங்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். எப்படி குழந்தைகள் தந்தையின் ஜெயந்தியை கொண்டாடுவதற்காக பல மூலைகளிலிருந்து, தொலைதூரத்திலிருந்து வந்திருக்கிறார்களோ, அதே போல் பாப்தாதாவும் குழந்தைகளின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக வந்திருக்கிறார். அனைத்தையும் விட தூர தேசத்தைச் சேர்ந்தவர் யார்? தந்தையா அல்லது நீங்களா? நாங்கள் வெகு தொலைதூரத்திலிருந்து வந்திருக்கிறோம் என்று நீங்கள் கூறுவீர்கள். ஆனால் நான் உங்களையும் விட தூர தேசத்திலிருந்து வந்திருக்கிறேன் என்று தந்தை கூறுகிறார். ஆனால் உங்களுக்கு நேரம் எடுக்கிறது, தந்தைக்கோ வருவதற்கு நேரம் எடுப்பதில்லை. நீங்கள் அனைவரும் விமானம் அல்லது ரயிலில் எடுத்து வர வேண்டியதாக இருக்கிறது, தந்தைக்கு ரதத்தில் (குல்ஸார் தாதி) வர வேண்டியதாக இருக்கிறது. நீங்கள் மட்டும் தந்தையின் பிறந்த நாளை கொண்டாட வந்திருக்கிறீர்கள் என்று அப்படி இல்லை. ஆனால் தந்தையும் ஆதி முதல் கூடவே துணையாக விளங்கும் பிராமண ஆத்மாக்கள், தற்போது பிறந்து துணைவர்களாக இருக்கும் குழந்தைகளின் பிறந்த நாளைக் கொண்டாட வந்திருக்கிறார். ஏனென்றால் தந்தை தனியாக அவதரிப்பதில்லை. ஆனால் பிரம்மா மற்றும் பிராமண குழந்தைகளுடன் தெய்வீக ஜென்மம் எடுக்கிறார் அதாவது அவதரிக்கிறார். பிராமணர்களின்றி யக்ஞத்தைத் தனியாக தந்தை படைக்க முடியாது. அப்படி யக்ஞத்தைப் படைத்தார், பிரம்மா மூலமாக பிராமணர்களைப் படைத்தார். அப்பொழுது தான் நீங்கள் அனைவரும் பிறந்தீர்கள். இரண்டு

வருடங்கள் நிரம்பியவர்களானாலும், இரண்டு மாதங்கள் நிரம்பியவர்களானாலும் சரி உங்கள் அனைவருக்கும் தெய்வீக பிராமண பிறவி எடுத்ததற்கான வாழ்த்துக்கள் ! இந்த தெய்வீக ஜென்மம் எவ்வளவு உயர்ந்தது. தந்தையும் ஒவ்வொரு தெய்வீக ஜென்மம் எடுத்த பிராமண ஆத்மாக்களின் பாக்கிய நட்சத்திரம் மின்னிக் கொண்டிருப்பதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். மேலும் "ஆஹா வைரத்திற்குச் சமமான வாழ்க்கையுள்ள பிராமணக் குழந்தைகளே ஆஹா" என்ற இந்தப் பாடலைத் தான் எப்பொழுதும் பாடிக் கொண்டே இருக்கிறார். ஆஹா ! ஆஹா ! என்ற பாராட்டுக்குரியவர்கள் தான் இல்லையா? தந்தை பாராட்டுக்குரிய குழந்தைகளாக ஆக்கிவிட்டார். தந்தையினுடைய இந்த ஆன்மீகப் பிறவியும் விசித்திரமானதாக இருக்கிறது என்றால், குழந்தைகள் உங்களுடையதும் விசித்திரமானதாக மற்றும் அன்பானதாக இருக்கிறது. தந்தை இவர் ஒருவருக்குத் தான் இந்த மாதிரியான ஜென்மம் மற்றும் ஜெயந்தி இருக்கிறது. வேறு யாருக்குமே இந்த மாதிரியான பிறந்த நாள் இருக்கவில்லை, மேலும் இருக்காது. உடலற்றவர் மேலும் தெய்வீக ஜென்மம். மற்ற அனைத்து ஆத்மாக்களின் ஜென்மம் அவரவர்களின் பௌதீக உடலில் ஏற்படுகிறது. ஆனால் நிராகார தந்தையின் ஜென்மம் இன்னொருவரின் உடலில் பிரவேசத்தினால் ஏற்படுகிறது. முழுக் கல்பத்தில் அந்த மாதிரி இந்த முறையில் யாருக்காவது ஜென்மம் ஏற்பட்டிருக்கிறதா? ஒரே ஒரு தந்தைக்குத் தான் அந்த மாதிரி வேறுபட்ட பிறந்த நாள் இருக்கிறது. அதைத் தான் சிவஜெயந்தியாக பக்தர்களும் கொண்டாடி வருகிறார்கள். எனவே இந்த தெய்வீக ஜென்மத்தின் மகத்துவத்தை நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள், பக்தர்கள் கூட தெரிந்திருக்கவில்லை, ஆனால் என்ன கேள்விப்பட்டிருக்கிறார்களோ அதன் பிரகாரம் உயர்ந்ததிலும் உயர்ந்தவர் என்று நினைத்து கொண்டாடிக் கொண்டே வருகிறார்கள். நீங்கள் குழந்தைகள் கொண்டாடுவது மட்டுமில்லை, ஆனால் கொண்டாடுவதன் கூடவே தன்னை தந்தைக்குச் சமமாக ஆக்கவும் செய்கிறீர்கள். ஆன்மீக, தெய்வீக ஜென்மத்தின் மகத்துவத்தைத் தெரிந்திருக்கிறீர்கள். மேலும் வேறு எந்த தந்தையின் பிறந்த நாளும் குழந்தைகளின் பிறந்த நாளோடு சேர்ந்தே இருப்பதில்லை. ஆனால் சிவஜெயந்தி என்றால் தந்தையின் தெய்வீக ஜென்மத்தின் கூடவே குழந்தைகளின் ஜென்மமும் தான் ! எனவே வைர விழா கொண்டாடினீர்கள் இல்லையா? அப்படி தந்தையுடன் சேர்த்து குழந்தைகளுக்கும் தெய்வீக ஜென்மம் ஆகும். இந்த ஜெயந்தியை மட்டும் தான் வைரத்திற்குச் சமமான ஜெயந்தி என்று கூறுகிறீர்கள், ஆனால் வைரத்திற்கு சமமான ஜெயந்தியைக் கொண்டாடி, நீங்களும் வைரத்திற்குச் சமமான வாழ்க்கையில் வந்து விடுகிறீர்கள். இந்த இரகசியத்தை அனைத்து குழந்தைகளும் நல்ல முறையில் தெரிந்தும் இருக்கிறீர்கள், மேலும் மற்றவர்களுக்கும் சொல்லிக் கொண்டும் இருக்கிறீர்கள். குழந்தைகள் தந்தையின் தெய்வீக ஜென்மத்தின்

மகத்துவத்தை எவ்வளவு ஊக்கம் உற்சாகத்தோடு கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று பாப்தாதா செய்தியும் கேட்டுக் கொண்டிருக்கிறார், மேலும் பார்க்கவும் செய்கிறார். பாப்தாதா நாலாபுறங்களிலுமுள்ள சேவாதாரி குழந்தைகளின் தைரியத்திற்குப் பிரதிபலனாக உதவியும் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். குழந்தைகளின் தைரியம் இருக்கிறது மற்றும் தந்தையின் உதவி அங்கே இருக்கிறது.

தற்சமயம் பாப்தாதாவிடம் அனைத்து குழந்தைகளிடமிருந்தும் ஒரே ஒரு அன்பு நிறைந்த எண்ணமாக இப்பொழுது தந்தைக்குச் சமமாக மிக விரைவிலேயே ஆகியே தீர வேண்டும் என்பது தான் அடிக்கடி வருவது யாதெனில், தந்தையும் இனிமையான குழந்தைகளே ! ஆகத் தான் வேண்டும் என்று கூறுகிறார். ஒவ்வொருவருக்கும் நான் ஆகவில்லை என்றால் வேறு யார் ஆவார் என்ற திட நிச்சயமும் இருக்கிறது, மேலும் இதை அடிக்கோடிட்டு மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். நாம் தான் இருந்தோம், நாம் தான் இருக்கிறோம், மேலும் நாமே தான் ஒவ்வொரு கல்பத்திலும் ஆகிக் கொண்டே இருப்போம். இது உறுதியான நிச்சயம் தான் இல்லையா? வெளிநாட்டுக் குழந்தைகளும் சிவஜெயந்தி கொண்டாட வந்திருக்கிறார்களா? நல்லது. வெளிநாட்டுக் குழந்தைகள் கையை உயர்த்துங்கள். வெளிநாட்டு குழந்தைகளுக்கு உலகின் எந்த மூலையும் செய்தி தெரியாமல் இருந்து விடக்கூடாது என்ற மிக அதிகமாக ஊக்கம் உற்சாகம் இருக்கிறது என்று பாப்தாதா பார்க்கிறார். பாரதத்திற்கு அதிகமான காலம் சேவைக்காக கிடைத்திருக்கிறது. பாரதத்திலும் கிராமம் கிராமமாக செய்தியைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் வெளிநாட்டினருக்கு பாரதத்தை விட சேவைக்கான காலம் குறைவாக கிடைத்திருக்கிறது. இருந்தும் ஊக்கம் உற்சாகத்தின் காரணமாக பாப்தாதாவின் எதிரில் சேவை செய்ததின் நல்ல சான்றுகளை கொண்டு வந்திருக்கிறார்கள். மேலும் கொண்டு வந்து கொண்டே இருப்பார்கள். பாரதத்தில் தற்சமயம் அனைத்து துறைகளின் சேவைகள் ஆரம்பமாகியிருக்கிறது. அதன் காரணமாகவும் அனைத்து வர்க்கத்தினருக்கும் செய்தி கிடைப்பது சுலபமாகிவிட்டது. ஏனென்றால் ஒவ்வொரு துறையினரும் அவர்களின் துறையில் முன்னேறிச் செல்ல விரும்புகிறார்கள் என்றால், இந்த துறைகளுக்கான சேவை நல்ல கண்டுபிடிப்பு ஆகும். இதன் காரணமாக பாரதத்தின் சேவையில் விசேஷ ஆத்மாக்கள் வந்து நல்ல ஒரு சூழ்நிலை உருவாகி விடுகிறது. நன்றாக இருக்கிறது தான் இல்லையா? துறைகளுக்கான சேவை செய்வது பிடித்திருக்கிறதா? வெளிநாட்டினரும் தங்களுடைய நல்ல நல்ல குழுக்களை அழைத்து வருகிறார்கள், ரிட்ரீட் (சிறப்பு பயிற்சி) செய்விக்கிறார்கள். இந்த முறையும் நன்றாக வைத்திருக்கிறார்கள். எப்படி பாரதத்தில்

துறைகளுக்கான சேவையில் நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறதோ அதே போல் இவர்களுடைய இந்த விதியும் மிக நல்லதாக இருக்கிறது. பாப்தாதாவிற்கு இரண்டு பக்கங்களின் சேவையும் பிடித்திருக்கிறது, நன்றாக இருக்கிறது. ஜகதீஷ் குழந்தை இந்த நல்ல கண்டுபிடிப்பை செய்தார். மேலும் வெளிநாட்டில் இந்த ரிட்ரீட், டையலாக் யார் தொடங்கியது? (அனைவரும் ஒன்றாக சேர்ந்து செய்தோம்). பாரதத்திலும் கூட அனைவரும் சேர்ந்து தான் செய்தார்கள் இருந்தும் பொறுப்பானவர் உருவானார் இல்லையா? நல்லது. ஒவ்வொருவருக்கும் தன்னைப் போன்றவர்களின் குழுவில் மிகவும் நன்றாக அனுபவம் ஆகிறது. அப்படி இரண்டு பக்கங்களின் சேவை மூலம் அனேக ஆத்மாக்களை அருகில் கொண்டு வருவதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. ரிசல்ட் நன்றாக இருக்கிறது தான் இல்லையா? ரிட்ரீட்டின் ரிசல்ட் நன்றாக இருக்கிறதா? மேலும் துறைகளுக்கான சேவையின் ரிசல்ட்டும் நன்றாக இருக்கிறது. பாரதம் மற்றும் வெளிநாட்டினர் இருவரும் ஏதாவது புதிய கண்டுபிடிப்பை செய்து கொண்டே இருக்கிறார்கள், மேலும் செய்து கொண்டே இருப்பார்கள். பாரதத்திலும் வெளிநாட்டிலும் சேவைக்கான ஊக்கம் நன்றாக இருக்கிறது. யார் உண்மையான உள்ளத்தோடு சுயநலமற்ற சேவையில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்களோ அவர்களுடைய கணக்கில் புண்ணிய கணக்கு மிக நன்றாக சேமிப்பு ஆகிவிடுகிறது என்று பாப்தாதா பார்க்கிறார். அனேக குழந்தைகளுக்கு ஒன்று, தன்னுடைய முயற்சியின் பிராப்தியின் கணக்கு, இரண்டாவது திருப்தியாக இருந்து திருப்திபடுத்துவதினால் ஆசீர்வாதங்களின் கணக்கு, மேலும் மூன்றாவது, யதார்த்த யோக சொரூப, யுக்தி நிறைந்த சேவையின் பலனாக புண்ணிய கணக்கு சேமிப்பு ஆகிறது. ஒவ்வொருவரின் இந்த மூன்று கணக்குகளையும் பாப்தாதா பார்த்துக் கொண்டே இருக்கிறார். ஒருவேளை யாருக்காவது மூன்று கணக்குகளின் சேமிப்பு ஆகிறது என்றால் அதற்கான அடையாளம் அவர் எப்பொழுதும் தன்னை சுலபமாக முயற்சி செய்பவர் என்று அனுபவம் செய்வார். மேலும் மற்றவர்களுக்கும் அந்த ஆத்மா மூலமாக சுலபமாக முயற்சி செய்வதற்கான தூண்டுதல் இயல்பாகவே கிடைக்கிறது. அவர் சுலபமாக முயற்சி செய்வதற்கான அடையாளம் கடுமையாக உழைக்க வேண்டியிருப்பதில்லை. தந்தை மீதும், சேவை மீதும் மற்றும் அனைத்து ஈஸ்வரிய குடும்பத்தின் மீதும் அன்பு இருக்கிறது என்றால், இந்த மூன்று விதமான அன்பு கடின உழைப்பிலிருந்து விடுவித்து விடுகிறது.

அனைத்து குழந்தைகளும் சுலபமாக முயற்சி செய்பவர்களாக எப்பொழுதும் இருக்கட்டும் என்று தான் அனைத்து குழந்தைகளின் மீது பாப்தாதா உயர்ந்த நம்பிக்கை வைத்துள்ளார்.

63 ஜென்மங்கள் பக்தியில் குழப்பத்தில் அங்கிங்கு அலைவதின் கடின காரியம் செய்தீர்கள், இப்பொழுது இந்த ஒரு ஜென்மம் தான் கடின உழைப்பிலிருந்து விடுபடுவதற்கானது. ஒருவேளை வெகுகாலமாக கடினமாக உழைத்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால் இந்த சங்கமயுகத்தின் வரதானமான அன்பு மூலமாக சுலபமாக முயற்சி செய்பவர்கள் ஆகுங்கள் என்பதை எப்பொழுது பெறுவீர்கள்? யுகம் முடித்து விட்டது என்றால் வரதானமும் முடிந்து விடும். எனவே எப்பொழுதும் இந்த வரதானத்தை மிக விரைவிலேயே பெற்றுக் கொள்ளுங்கள். எந்தவொரு மிகப்பெரிய காரியமாக இருந்தாலும், எந்தவொரு மிகப்பெரிய பிரச்சனையாக இருந்தாலும் ஒவ்வொரு பிரச்சனையையும் மக்கள் கூறுவது போல் வெண்ணையிலிருந்து முடியை வெளியே எடுப்பது போல் கடந்து சென்று விடுவீர்கள். சில குழந்தைகளின் கொஞ்சம் கொஞ்சம் விளையாட்டை பாப்தாதா பார்க்கிறார். மகிழ்ச்சியும் அடைகிறார் மேலும் குழந்தைகளைப் பார்த்து இரக்கமும் வருகிறது. எப்பொழுது ஏதாவது பிரச்சனை அல்லது ஏதாவது ஒரு பெரிய காரியம் எதிரில் வருகிறது என்றால், சில நேரம் குழந்தைகளின் முகத்தில் கொஞ்சம் பிரச்சனையின் மற்றும் செய்ய வேண்டிய காரியத்தின் உணர்வலைகள் தென்படுகின்றன. கொஞ்சம் முகம் மாறிவிடுகிறது. பிறகு வேறு யாராவது என்னவாயிற்று என்று கேட்கிறார்கள் என்றால், வேலையே அதிகமாக இருக்கிறது தான் இல்லையா என்று கூறுகிறார்கள். தடைகளை அழிப்பவரின் எதிரில் தடைகளே வரவில்லை என்றால் தடைகளை அழிப்பவர் என்ற பட்டத்திற்குரியவர் என்று எப்படி வர்ணனை செய்ய முடியும்? கொஞ்சம் முகத்தில் களைப்போ அல்லது கொஞ்சம் கூட மனநிலை மாறுவதற்கான அடையாளமும் வரக்கூடாது. ஏன்? உங்களுடைய ஜட விக்கிரகங்கள் எவை அரைக்கல்பமாக பூஜை செய்யப்படுகின்றனவோ அவற்றில் எப்பொழுதாவது கொஞ்சமாவது களைப்பு அல்லது மனநிலை மாறுவதற்கான சின்னம் தென்படுகிறதா என்ன? எப்பொழுது உங்களுடைய ஜட விக்கிரகங்கள் எப்பொழுதுமே புன்முறுவலிட்டுக் கொண்டே இருக்கிறது என்றால் அவை யாருடைய விக்கிரகங்கள்? உங்களுடையவை தான் இல்லையா? அப்படி சைத்தன்யமாக இருக்கும் உங்களுடைய நினைவு விக்கிரகங்கள் தான் அவை. எனவே கொஞ்சமாவது களைப்பு மற்றும் எதை சிடுசிடுப்பு என்று கூறுகிறோமோ, அது வரக்கூடாது. எப்பொழுதும் புன்முறுவலிட்ட முகம் பாப்தாதாவிற்கும் மற்றும் அனைவருக்கும் பிடித்தமானதாக இருக்கும். ஒருவேளை யாராவது சிடுசிடுத்துக் கொண்டிருக்கிறார் என்றால் அவரின் எதிரில் செல்வார்களா? இப்பொழுது சொல்லலாமா அல்லது சொல்ல வேண்டாமா என்று யோசிப்பார்கள். அப்படி உங்களுடைய ஜட விக்கிரகங்களிடமோ பக்தர்கள் மிகுந்த ஊக்கத்தோடு வருகிறார்கள் மேலும் சைத்தன்யத்தில் யாராவது சுமை நிறைந்தவராக ஆகிவிட்டார் என்றால், நன்றாக இருக்குமா? இப்பொழுது பாப்தாதா அனைத்து

குழந்தைகளின் முகத்தை எப்பொழுதும் ஃபரிஷ்தா ரூபம், வரதானி ரூபம், வள்ளல் ரூபம், இரக்க மனமுடைய, களைப்பற்ற, சகஜயோகி மற்றும் சகஜ முயற்சியாளரின் ரூபத்தில் பார்க்க விரும்புகிறார். விஷயமே அப்படித்தான் இருந்தது என்று இதைக் கூறாதீர்கள். எப்படிப்பட்ட விஷயமாக இருந்தாலும் உங்களுடைய ரூபம் புன்முறுவலிட்ட, சீதளமான, கம்பீரம் மற்றும் இரமணீகரம் இரண்டிற்கும் சமநிலையானதாக இருக்கட்டும். யாராவது திடீரென்று வந்து விட்டார் என்றால் உங்களுடைய பிரச்சனையின் காரணமாக அல்லது காரியத்தின் காரணமாக சுலபமாக முயற்சி செய்பவரின் ரூபத்தில் நீங்கள் இல்லை என்றால், அவர் என்ன பார்ப்பார்? உங்களுடைய சித்திரத்தை அப்படியே மனதில் எடுத்துச் செல்வார். எந்தவொரு நேரம் யாருக்கும், எவருக்கும் ஒரு மாதமானதாக இருந்தாலும், இரண்டு மாதமானதாக இருந்தாலும் திடீரென்று உங்களுடைய முகத்தை புகைப்படம் பிடித்தார் என்றால் மேலே கூறிய முகம் மாதிரியே இருக்க வேண்டும். வள்ளலாகுங்கள், பெறுபவர்கள் ஆகாதீர்கள். யார் என்ன கொடுத்தாலும், நல்லதைக் கொடுத்தாலும் அல்லது தீயதைக் கொடுத்தாலும் ஆனால் நீங்கள் மிகப்பெரிய தந்தையின் குழந்தைகள் மிகப்பெரிய இதயம் உள்ளவர்கள். ஒருவேளை தீயதையும் கொடுத்து விட்டார் என்றாலும் கூட பரந்த உள்ளத்தோடு தீயதை தனக்குள் ஏற்றுக் கொள்ளாமல் வள்ளலாகி நீங்கள் அவருக்கு சகயோகம் கொடுங்கள், அன்பு கொடுங்கள், சக்தி கொடுங்கள். ஏதாவது குணத்தை தன்னுடைய உயர்ந்த நிலை மூலமாக பரிசாகக் கொடுத்து விடுங்கள். இவ்வளவு பெரிய இதயம் உள்ள மிகப் பெரிய தந்தையின் குழந்தைகள் நீங்கள் ! இரக்கம் காட்டுங்கள். இதயத்தில் அந்த ஆத்மாவிற்காக இன்னும் அதிகப்படியான அன்பை வெளிப்படுத்துங்கள். இந்த அன்பின் சக்தியின் காரணமாக அவர் சுயம் (பரிவர்த்தனை) மாறி விட வேண்டும். அந்த மாதிரி பெரிய இதயம் உள்ளவரா நீங்கள் அல்லது சின்ன இதயம் தான் இருக்கிறதா? உள்ளடக்கும் சக்தி இருக்கிறதா? உள்ளடக்கி விடுங்கள். கடலில் எவ்வளவு குப்பைகளைப் போடுகிறார்கள். அம்மாதிரி போடுபவர்களுக்கும் அந்த குப்பைக்குப் பதிலாக கடல் குப்பையைக் கொடுப்பதில்லை. நீங்களோ ஞானக்கடல் சக்திகளின் கடலின் குழந்தைகள் ஆவீர்கள். மாஸ்டர் ஆவீர்கள். அப்படி பாப்தாதா என்ன பார்க்க விரும்புகிறார் என்று கேட்டீர்களா? பெரும்பான்மையான குழந்தைகள் இந்த வருடத்தில் பரிவர்த்தனை கண்டிப்பாக செய்ய வேண்டும் என்ற லட்சியத்தை வைத்திருகிறார்கள். யோசிக்கலாம், செய்யலாம் என்று அப்படி இல்லாமல் கண்டிப்பாக செய்யத் தான் வேண்டும். கண்டிப்பாக செய்யத் தான் வேண்டுமா அல்லது அங்கே சென்று யோசிப்பீர்களா? யார் கண்டிப்பாக செய்யத் தான் வேண்டும் என்று நினைக்கிறீர்களோ அவர்கள் ஒரு கையின் கைத்தட்டுங்கள் (அனைவரும் கை அசைத்தார்கள்). மிகவும் நல்லது. பிறகு இந்தக் கையை உயர்த்தாதீர்கள், மனதால் திட எண்ணம் என்ற கையை

உயர்த்துங்கள். இந்தக் கையோசுலபமானது மனதால் திட எண்ணத்தின் கை எப்பொழுதும் வெற்றி சொரூபம் ஆக்குகிறது. என்ன நினைத்தீர்களோ அது கண்டிப்பாக நடக்கத் தான் வேண்டும். நினைத்தது என்னவோ நேர்மறை தான் இல்லையா. எதிர்மறையாக யோசிக்கவே கூடாது. எதிர்மறையாக யோசிப்பதற்கான வழியை நிரந்தரமாக மூடிவிட வேண்டும். மூடத் தெரியுமா அல்லது திறந்து விடுகிறதா? எப்படி இப்பொழுது புயல் அடித்தது இல்லையா?. அப்பொழுது கதவுகள் தானாகவே திறந்து விட்டன, அவ்வாறு நடப்பதில்லையே! இப்பொழுது மூடிவிட்டு வந்து விட்டோம் என்று நினைக்கிறீர்கள், ஆனால் புயல் திறந்து விடுகிறது என்று அந்த மாதிரி உறுதியில்லாமல் செய்யாதீர்கள். நல்லது.

இரட்டை வெளிநாட்டினருக்கு விழா நன்றாக நடந்தது தான் இல்லையா (பத்து வருடங்களுக்கும் மேலாக ஞானத்தில் இருக்கும் சுமார் 400 இரட்டை வெளிநாட்டு சகோதர சகோதரிகளை கௌரவிக்கும் விழா கொண்டாடினார்கள்) பிடித்திருந்ததா? யார் கொண்டாடினீர்களோ மற்றும் பிடித்திருந்ததோ அவர்கள் கையை உயர்த்துங்கள். பாண்டவர்களும் இருக்கிறார்கள். இதனுடைய மகத்துவம் என்ன? கொண்டாடுவதற்கான மகத்துவம் என்ன? கொண்டாடுவது என்றால், அப்படியே ஆகிவிடுவது. எப்பொழுதும் அந்த மாதிரி கிரீடம் அணிந்த, சுயமுயற்சி மற்றும் சேவையின் பொறுப்பு என்று சொல்லலாமா? மகிழ்ச்சியே என்று தான் சொல்வோம், சேவையின் மகிழ்ச்சியைக் கொண்டாடும் கிரீடம் எப்பொழுதுமே தலையில் இருக்கட்டும். மேலும் அனைவரும் பொன்னாடையும் அணிந்தீர்கள் தான் இல்லையா? இந்த பொன்னாடை எதற்காக அணிவிக்கப்படுகிறது? எப்பொழுதும் பொற்காலத்து நிலை, வெள்ளியல்ல பொற்காலம். மேலும் இரண்டு இரண்டு மாலைகளும் அணிவித்தார்கள். அப்படி இரண்டு மாலைகள் எதை அணிவீர்கள்? ஒன்றோ எப்பொழுதும் தந்தையின் கழுத்தின் மாலை. நிரந்தரமாக ஒருபொழுதும் கழுத்திலிருந்து விழக்கூடாது. கழுத்திலேயே இருக்க வேண்டும். மேலும் இன்னொன்று எப்பொழுதும் சேவை மூலமாக மற்றவர்களையும் தந்தையின் கழுத்தின் மாலை ஆக்குவது. இது இரட்டை மாலை ஆகும். கொண்டாடுபவர்களுக்கும் மற்றும் பார்ப்பவர்களுக்கும் மிக நன்றாக அனுபவம் ஆனது. அப்படி இந்த விழாவைக் கொண்டாடுவதற்கும், நிரந்தரமாக கொண்டாடுவதின் இரகசியத்தையும் கூறினோம். மேலும் கூடவே இந்த கொண்டாடுவது என்றால் இன்னும் ஊக்கம் உற்சாகத்தை அதிகரிப்பது. அனைவரின் அனுபவத்தையும் பாப்தாதா பார்த்து விட்டார். நல்ல அனுபவமாக இருந்தது. குஷி மற்றும் போதை அனைவரின் முகத்தில் தென்பட்டுக் கொண்டிருந்தது. அந்த மாதிரியே தன்னுடைய

சக்திசாலியான புன்முறுவலிட்ட, இரமணீகரமான மற்றும் கம்பீர சொரூபத்தை எப்பொழுதும் வெளிப்படுத்திக் கொண்டே செல்லுங்கள். ஏனென்றால் தற்சமயத்து நிலைமைக்கேற்றபடி கேட்பவர்கள் அதிகமானவர்கள், புரிந்து கொள்பவர்கள் குறைவாக இருக்கிறார்கள். பார்த்து அனுபவம் செய்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். உங்களுடைய முகத்தில் தந்தையின் அறிமுகத்தை கூறுவதற்குப் பதிலாக, தென்படட்டும். அப்படி நன்றாகச் செய்தீர்கள். பாப்தாதாவும் பார்த்து பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருந்தார். இந்த வருடத்தை மற்றும் இந்த சீசனை உற்சவங்களின் சீசனாகக் கொண்டாடினீர்கள். ஒவ்வொரு நேரமும் ஒரே மாதிரி இருப்பதில்லை.

(டிரில்) அனைவரிலும் ஆளுமை சக்தி இருக்கிறதா? எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது கர்ம இந்திரியங்கள் மேல் ஆட்சி செய்ய முடியுமா? சுயராஜ்ஜிய அதிகாரியாக ஆகியிருக்கிறீர்களா? யார் சுயராஜ்ஜிய அதிகாரியோ அவர் தான் உலகின் இராஜ்ய அதிகாரியாக ஆவார். எப்பொழுது விரும்புகிறீர்களோ, எப்படிப்பட்ட சூழலில் இருந்தாலும், ஒருவேளை 'நில்' என்று மனம் புத்திக்கு கட்டளை இட்டீர்கள் என்றால், அவ்வாறு நிற்க முடியுமா அல்லது நேரம் எடுக்குமா? ஒவ்வொருவரும் இந்தப் பயிற்சியை முழு நாளில் இடையிடையே அவசியம் செய்ய வேண்டும். மேலும் எந்த நேரம் மனம், புத்தி மிகவும் பிஸியாக இருக்கிறதோ அந்த நேரத்திலும் கூட ஒருவேளை ஒரு நொடிக்காக நிறுத்த விரும்புகிறீர்கள் என்றால், அப்படி முடியுமா? அப்படி நில் ! என்று நினையுங்கள் மற்றும் நிற்பதில் மூன்று நிமிடம், ஐந்து நிமிடம் எடுக்கலாம். ஆக இந்தப் பயிற்சி இறுதியில் மிக உதவியாக இருக்கும். இதன் ஆதாரத்தில் தான் மதிப்புடன் தேர்ச்சி பெறுபவர் ஆக முடியும். நல்லது.

எப்பொழுதும் உள்ளத்தின் ஊக்கம் உற்சாகத்தின் விழாவைக் கொண்டாடக்கூடிய அன்பான ஆத்மாக் களுக்கு, எப்பொழுதும் வைரத்திற்குச் சமமான வாழ்க்கையை அனுபவம் செய்யக்கூடிய, அனுபவத்தின் அதிகாரம் நிறைந்த விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னுடைய முகம் மூலமாக தந்தையின் அறிமுகத்தை கொடுக்கக்கூடிய, தந்தையை பிரத்யக்ஷம் செய்யக்கூடிய, சேவாதாரி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் கம்பீரம் மற்றும் இரமணீகரம் இரண்டின் சமநிலை வைக்கக்கூடிய, அனைவரின் ஆசீர்வாதங்களுக்கு உரிய ஆத்மாக் களுக்கு, அந்த மாதிரி நாலாபுறங்களிலுமுள்ள பாரதம் மற்றும் வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு சிவராத்திரிக்கான வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள் உரித்தாகுக ! கூடவே பாப்தாதாவின், திலாராமின் உள்ளப்பூர்வமான, உயிருக்கும் மேலான அன்பு நிறைந்த

அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம் :

ஒரு நொடியின் பந்தயப் பணயத்தின் மூலமாக முழுக் கல்பத்தின் எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய உயர்ந்த அதிர்ஷ்டம் நிறைந்தவர் ஆகுக !

இந்த சங்கமயுக காலத்திற்கு, என்ன விரும்புகிறீர்களோ, எப்படி விரும்புகிறீர்களோ, எவ்வளவு விரும்புகிறீர்களோ அந்த அளவு பாக்கியத்தை உருவாக்க முடியும் என்ற வரதானம் கிடைத்திருக்கிறது. ஏனென்றால் பாக்கியத்தை உருவாக்கும் தந்தை எதிர்காலத்தை உருவாக்கும் சாவியை குழந்தைகளின் கையில் கொடுத்திருக்கிறார். கடைசியில் வந்தவரும் வேகமாக முதலில் வர முடியும். சேவையின் விஸ்தாரத்தில் சுயத்தின் மனநிலையை மட்டும் ஒரு நொடியில் சார சொரூபத்தில் ஆக்குவதற்கான பயிற்சி செய்யுங்கள். இந்த நேரம் ஒரு நொடியில் மாஸ்டர் விதை ஆகிவிடுங்கள் என்று கட்டளை கிடைத்தது என்றால், நேரம் எடுக்கக் கூடாது. இந்த ஒரு நொடியின் சவால் பணயம் முழுக் கல்பத்தின் எதிர்காலத்தை உருவாக்க முடியும்.

சுலோகன் :

இரட்டை சேவை மூலமாக சக்திசாலியான வாயுமண்டலத்தை உருவாக்கினீர்கள் என்றால், இயற்கை அடிமையாகிவிடும்.

ஓம் சாந்தி

## " ஹோலி (தூய்மை) என்ற வார்த்தையின் சொரூபத்தில் நிலைத்திருப்பது என்றால் தந்தைக்குச் சமமாக ஆவது "

இன்று பாப்தாதா நாலாபுறங்களிலும் உலகத்திலேயே மிகத் தூய்மையான, மிக உயர்ந்த, மிக செல்வந்தர் களான தன்னுடைய குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். சாகாரத்தில் நேரெதிரில் இருந்தாலும், தூரத்தில் அமர்ந்திருந்து இதயத்தினால் நெருக்கமாக இருப்பவர்களானாலும் அப்படி நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டே இருக்கிறோம். ஒவ்வொரு குழந்தையும் அந்த மாதிரி மிகத் தூய்மையாக ஆகிறார்கள். அது போல் முழுக் கல்பத்திலும் வேறு யாரும் அந்த மாதிரி மகான் தூய்மையான ஆத்மாவாக ஆகவில்லை, ஆகவும் முடியாது. அவ்வப்பொழுது தர்ம ஆத்மாக்கள், மகான் ஆத்மாக்கள் தூய்மையாக இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய தூய்மை மற்றும் உங்களுடைய தூய்மையில் வேற்றுமை இருக்கிறது. இந்த நேரம் நீங்கள் தூய்மை ஆகிறீர்கள், இந்த தூய்மையின் பிராப்தியாகத் தான் எதிர்காலத்தில் அனேக ஜென்மங்கள் வரை உடல், மனம், பொருள், சம்மந்தம், தொடர்பு மேலும் கூடவே ஆத்மாவும் தூய்மையாக இருக்கிறது. உடலும் தூய்மையாக இருக்கிறது, ஆத்மாவும் தூய்மையாக இருக்கிறது. அந்த மாதிரியான தூய்மையை நீங்கள் ஆத்மாக்கள் பிராப்தி செய்கிறீர்கள். மனம், சொல், செயல் மூன்றுமே தூய்மை ஆவதினால் அந்த மாதிரியான பலன் பிராப்தி ஆகிறது. அந்த மாதிரி மிகத்தூய்மையான ஆத்மாக்கள் நீங்கள். தன்னை அந்த மாதிரி உயர்ந்த மிகத்தூய்மையான ஆத்மா என்று நினைக்கிறீர்களா? இப்பொழுது ஆகிவிட்டீர்களா அல்லது ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? ஆவது சுலபமாக இருக்கிறதா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் கடினமாக இருக்கிறதா? ஆனால் சென்ற கல்பத்திலும் ஆகியிருக்கிறீர்கள் மேலும் இப்பொழுதும் ஆகவே தான் வேண்டும். உறுதியாகவா? அல்லது கொஞ்சம், கொஞ்சம் எப்படி வேண்டுமென்றாலும் இருக்கலாமா? இல்லை கனவளவில் கூட தூய்மையின்மை முடிந்து விடவே தான் வேண்டும். இன்று ஆகிக் கொண்டிருக்கிறேன்..... நாளை ஆகியே விடுவேன் என்ற இந்த அளவு நிச்சயம் இருக்கிறது தான் இல்லையா? அப்படி மிகத் தூய்மையானவர் களாகவும் இருக்கிறீர்கள் மேலும் உயர்ந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்.

உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் குழந்தைகள் உயர்ந்ததிலும் உயர்ந்தவர்கள் ஆவீர்கள். உயர்ந்தவர்களாக ஆகிறீர்கள், அதனால் தான் பூஜை செய்யப்படுகிறீர்கள். இன்றைய நாட்களின் உயர்ந்த ஆத்மாக்கள், விகாரி இராஜாக்கள் இருந்தார்கள், இப்பொழுதோ இல்லை. ஜனாதிபதியாக இருந்தாலும், பிரதம மந்திரியாக இருந்தாலும் அவர்கள் பூஜைக்குரியவர்களாக ஆவதில்லை. பூஜைக்குரியவராக ஆகும் ஆத்மாக்கள் உங்கள் எதிரில் பூஜாரியாகி வணங்குகிறார்கள் மற்றும் பூஜை செய்கிறார்கள். இப்பொழுதும் சுயராஜ்ஜிய அதிகாரி ஆகிறீர்கள், மேலும் எதிர்காலத்திலும் இராஜாக்களுக்கெல்லாம் இராஜா ஆகிறீர்கள். அந்த மாதிரி மிக உயர்ந்த பதவியை பிராப்தி செய்கிறீர்கள். கூடவே உலகிலேயே மிகுந்த செல்வந்தனாகவும் இருக்கிறீர்கள். உங்களுடைய பட்டமே பல கோடி மடங்கு செல்வம் நிறைந்தவர் என்பது மேலும் உங்களிடம் அந்த மாதிரியான பொக்கிஷங்கள் இருக்கின்றன அதை பல கோடி மடங்கு கோடீஸ்வரர்களாக இருப்பவர்கள் கூட அந்த மாதிரியான பொக்கிஷத்தை அடைய முடியாது. உயர்ந்த ஆத்மாக்கள் உங்களுடைய பாக்கியத்தை தந்தை மூலமாக உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள் அதை எங்களுடைய ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு செல்வம் வருமானம் ஆகிறது என்று அனுபவமும் செய்கிறீர்கள், வர்ணனையும் செய்கிறீர்கள். ஒவ்வொரு அடியிலும் பல கோடி மடங்கா அல்லது நூறு தானா, ஆயிரம் தானா? அந்த மாதிரி ஏதாவது பெரிய மில்லியனர் (கோடீஸ்வரர்) கூட இந்த அளவு வருமானம் செய்ய முடியாது. ஒரு அடி எடுத்து வைப்பதில் எவ்வளவு நேரம் எடுக்கும்? அடியெடுத்து வையுங்கள், எவ்வளவு நேரம் எடுக்கிறது? ஒரு விநாடி. சரி இரண்டு விநாடி என்று கூட சொல்லுங்கள். ஒருவேளை இரண்டு விநாடி என்று சொன்னாலும் இரண்டு விநாடியில் பல மடங்கு என்றால் முழு நாளில் எத்தனை கோடியாகிவிடும்? கணக்கு போடுங்கள். உலகில் அந்த மாதிரி யாராவது ஒரு நாளில் இந்த அளவு வருமானம் செய்கிற மாதிரி மில்லியனர் இருக்கிறாரா? அந்த மாதிரி யாராவது இருப்பாரா? அப்படி நீங்கள் உலகத்திலேயே மிகுந்த செல்வந்தன் ஆனீர்கள் தான் இல்லையா? மேலும் உங்களிடம் அந்த மாதிரியான பொக்கிஷம் இருக்கிறது, அதை நெருப்பு எரிக்க முடியாது, தண்ணீர் மூழ்கடிக்க முடியாது, திருடன் திருடிச் செல்ல முடியாது, இராஜாவும் அபகரிக்க முடியாது. அந்த மாதிரியான பொக்கிஷத்தை இந்த புருஷோத்தம சங்கமயுகத்தில் தான் பிராப்தியாக அடைகிறீர்கள். அப்படியானால் தன்னுடைய அந்த மாதிரியான சுவமானம் நினைவில் இருக்கிறதா? ஆம் அல்லது இல்லை என்ற பதில் வேண்டும். பின்னால் அமர்ந்திருப்பவர்கள் கை அசைக்கிறார்கள். பின்னால் இருப்பவர்கள் சௌகரியமாக அமர்ந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? உலகிலேயே மிகப் பெரிய செல்வந்தன் என்றால் சௌகரியமே சௌகரியம்

தான். மிகப்பெரிய பல்ககலைக்கழகத்தில் கூட அந்த மாதிரி நாற்காலியில் கல்வி கற்பதற்காக அமர்வதில்லை. ஆனால் நீங்கள் பெக்கர் (ஒன்றும் இல்லாதவர்) ஆகவும் இருக்கிறீர்கள் மேலும் பிரின்ஸ் (இளவரசன்) ஆகவும் இருக்கிறீர்கள். அனைத்தையும் தியாகம் செய்வது என்றால் பெக்கர். அனைத்து பிராப்திகள் என்றால் பிரின்ஸ் (இளவரசன்). தியாகமின்றி இவ்வளவு பெரிய பாக்கியம் கிடைக்காது. தியாகத்தினுடைய பாக்கியம் தான் கிடைத்திருக்கிறது. உடல், மனம், பொருள், சம்மந்தம் அனைத்தையும் தியாகம் செய்தீர்கள் என்றால் மாற்றம் செய்தீர்கள். உடலை என்னுடையது என்பதற்குப் பதிலாக உன்னுடையதாக ஆக்கினீர்கள். உடல், பொருள், சம்மந்தம் அனைத்திலும் ஒரு வார்த்தை மாறியதினால் என்னுடையது என்பதற்குப் பதிலாக உன்னுடையது என்று ஆக்கினீர்கள், ஒரு வார்த்தையின் மாற்றம் தான் ஆனால் இந்த தியாகத்தினால் பாக்கியத்தின் அதிகாரி ஆகி விட்டீர்கள். அப்படி பாக்கியத்தின் எதிரில் இந்த தியாகம் என்ன பெரியது? சின்ன விஷயமா அல்லது கொஞ்சம் பெரியதாகவும் இருக்கிறதா? சில நேரம் பெரியதாகிவிடுகிறது. உன்னுடையது என்று கூறுவது என்றால் பெரிய விஷயத்தை சிறியதாக்குவது. மேலும் என்னுடையது என்று கூறுவதினால் சிறிய விஷயத்தை பெரியதாக்குவது. என்ன ஆனாலும் சரி, 100 இமய மலைகளை விட பெரிய பிரச்சனை வந்தாலும் உன்னுடையது என்று கூறுவது மற்றும் மலையை பஞ்சாக ஆக்குவது, கடுகு அல்ல பஞ்சு. பஞ்சு ஒரு நொடியில் லேசாக பறந்து விடும். உன்னுடையது என்று சொல்வது மட்டும் அல்ல ஆனால் அப்படி ஏற்றுக் கொள்வது, ஏற்றுக்கொள்வது மட்டுமல்ல, ஆனால் அப்படியே நடப்பது. ஒரு வார்த்தைக்கான மாற்றம் செய்வது சுலபமே தான் இல்லையா? மேலும் செய்வதினால் லாபமே தான் நஷ்டமோ இல்லவே இல்லை. உன்னுடையது என்று கூறுவதினால் முழு சுமையையும் தந்தைக்குக் கொடுத்து விட்டீர்கள். உன்னுடையது அதனால் உனக்குத் தான் தெரியும். நீங்கள் நிமித்த மாத்திரம் மட்டும் இருக்கிறீர்கள். இதில் லாபம் இருக்கிறது தான் இல்லையா? விடுபட்டவராகவும் மற்றும் பரமாத்மாவின் அன்பான வராகவும் ஆகிவிட்டீர்கள். யார் பரமாத்மாவின் அன்பானவர்களாக ஆகிறார்களோ அவர்கள் உலகின் அன்பானவர் கள் ஆகிறார்கள். எதிர்காலத்து பிராப்தி மட்டுமில்லை, தற்சமயத்திலும் இருக்கிறது. ஒரு நொடியில் அனுபவம் செய்தும் இருக்கிறீர்கள், மேலும் செய்து பாருங்கள். எந்தவொரு விஷயம் வந்து விட்டாலும் உன்னுடையது என்று கூறிவிடுங்கள், அப்படி ஏற்றுக்கொள்ளுங்கள் மேலும் உன்னுடையது என்று புரிந்து செய்தீர்கள் என்றால் சுமை லேசாகிறதா அல்லது இல்லையா? என்று பாருங்கள். அனுபவம் இருக்கிறது தான் இல்லையா? அனுபவம் நிறைந்தவர்கள் அனைவரும் அமர்ந்திருக்கிறீர்கள் இல்லையா? ஆனால் என்ன ஆகிறது, என்னுடையது என்னுடையது என்று கூறுவதில் மிகுந்த பழக்கம் இருக்கிறது தான்

இல்லையா, 63 ஜென்மங்களின் பழக்கம் இருக்கிறது என்றால் உன்னுடையது உன்னுடையது என்று கூறி பிறகு என்னுடையது என்று கூறிவிடுகிறீர்கள் மேலும் என்னுடையது என்றால் (கையை விட்டு) சென்று விட்டது,. பிறகு அந்த விஷயம் ஒரு மணி நேரத்தில், இரண்டு மணி நேரத்தில், ஒரு நாளில் முடிவடைகிறது. ஆனால் உன்னுடையதை என்னுடையது ஆக்கியதின் பாதிப்பு நீண்ட காலம் இருக்கும். அரை மணி நேரத்திற்கான விஷயமாக இருக்கும். ஆனால் வேதனைப்படும் ரூபத்திலோ, பரிவர்த்தனை செய்ய வேண்டும் என்ற லட்சியத்திலோ அந்த விஷயம் அடிக்கடி நினைவில் வந்து கொண்டிருக்கும். எனவே தந்தை அனைத்து குழந்தைகளுக்கும் கூறுகிறார். ஒருவேளை என்னுடைய என்ற வார்த்தை மேல் அன்பு இருக்கிறது, பழக்கம் இருக்கிறது, சம்ஸ்காரம் இருக்கிறது அதனால் சொல்லித்தான் ஆக வேண்டும் என்றால் என்னுடைய பாபா என்று கூறுங்கள். பழக்கத்தின் காரணமாக விடுபட முடியாமல் இருக்கிறீர்கள் இல்லையா? எனவே எப்பொழுதெல்லாம் என்னுடையது, என்னுடையது வருகிறது என்றால் என்னுடைய பாபா என்று கூறி முடித்து விடுங்கள். அனேக என்னுடையவைகளை ஒரு என்னுடைய பாபாவில் அடக்கி விடுங்கள்.

ரஷ்யாவைச் சேர்ந்தவர்கள் ஒரு பொம்மை கொண்டு வருகிறார்கள் இல்லையா? அதில் பொம்மைக்குள் பொம்மை . . . . ஒரு பொம்மை ஆகிவிடுகிறது. அதே போல் நீங்களும் ஒரு என்னுடைய பாபாவில் அனேக என்னுடையவற்றை நிரப்பி விடுங்கள், அவ்வளவு தான்.. இதைச் செய்ய முடியுமா? செய்கிறீர்கள் ஆனால் சில நேரம் என்னுடையதின் விஸ்தாரத்தில் சென்று விடுகிறீர்கள். இப்பொழுது சில நேரம் இருக்கிறது, நிரந்தரமாக என்னுடையது உன்னுடையதாகி விட வேண்டும். அதில் வரிசைக்கிரமமாக இருக்கிறீர்கள். நம்பர் ஒன்னும் இருக்கிறது, ஏ ஒன்-ம் இருக்கிறது இருந்தாலும் பின்னுக்கு உள்ள நம்பரும் இருக்கிறது. ஹோலி கொண்டாடு வதற்காக வந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? அப்படி நான் தந்தையினுடையவனாக ஆகிவிட்டேன் (ஹோலி) ஆகிவிட்டேன். பரமாத்மா பரிவாரத்தின் ஹோலி என்றால் ஹோ கயி (ஆகிவிட்டேன்). அப்படியானால் அந்த மாதிரி ஹோலியை கொண்டாடினீர்களா? இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? இப்பொழுது எரிக்க வேண்டும் அல்லது எரித்து விட்டீர்களா? இதில் ஆம் என்று சொல்வதில்லை, யோசிக்கிறீர்கள்.

பாருங்கள், பக்தி மார்க்கத்தில் என்னென்ன உற்சவங்கள் கொண்டாடுகிறார்களோ,. அவை நினைவுச் சின்னங்கள் தான்! ஆனாலும் கொஞ்சம் கொஞ்சம் அர்த்தத்துடன்

உருவாக்கப்பட்டு இருக்கின்றன. முதலில் எரிக்க வேண்டும் பிறகு கொண்டாட வேண்டும். முதலில் கொண்டாடுவது பிறகு எரிப்பது என்று அப்படி அல்ல. முதலில் அசுத்தத்தை, பலஹீனத்தை, தீயவைகளை எரியுங்கள், பஸ்பம் ஆக்குங்கள். பிறகு கொண்டாடுங்கள். நீங்களோ வெகு முன்பாகவே எரித்து விட்டீர்கள் இல்லையா அல்லது இப்பொழுது கூட கொஞ்சம் முந்தானையின் நுணி தங்கி இருந்து விட்டதா? பாண்டவர்கள் சட்டை அல்லது என்ன ஆடை அணிகிறார்களோ அதில் ஏதோ ஒரு நுணி இருந்து விட்டதா? புடவையின் ஓரத்தில் கொஞ்சம் தங்கிப் போய் விட்டதா? உண்மையில் பார்த்தீர்கள் என்றால் ஆத்மீக கொண்டாட்டம் மேலும் அதைக் கொண்டாடுவதினால் சக்தி, அதீந்திரிய சுகத்தின் அனுபவம் செய்வது ஆகியவற்றை எப்பொழுது முதலில் எரிப்பீர்களோ அப்பொழுது தான் செய்ய முடியும். பொழுது போக்கின் ரூபத்தில் கொண்டாடுவது என்பது வேறாகும். அதுவோ சங்கமயுகம் மகிழ்ச்சிகள் நிறைந்த யுகம், எனவே பொழுதுபோக்கின் ரூபத்திலும் கொண்டாடுகிறீர்கள் மேலும் கொண்டாடுங்கள், மிக நன்றாகவே கொண்டாடுங்கள். ஆனால் பரமாத்மாவின் வண்ணத்தில் வண்ணமயமாவது என்றால் தந்தைக்குச் சமமாக ஆகி விடுவது. இது தான் வண்ணத்தில் வண்ணமயமாவது. எப்படி தந்தை உடலற்றவராக இருக்கிறார், அவ்யக்தமாக இருக்கிறார் அதே போல் அசரீரி நிலையின் அனுபவம் செய்வது மற்றும் அவ்யக்த ஃபரிஷ்தா நிலையின் அனுபவம் செய்வது என்ற இது தான் வண்ணத்தில் வண்ணமயமாவது. செயல்களைச் செய்யுங்கள், ஆனால் அவ்யக்த ஃபரிஷ்தா ஆகி காரியம் செய்யுங்கள். அசரீரி நிலையை எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது அனுபவம் செய்யுங்கள். அதே போல் மனம் மற்றும் புத்தி உங்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கட்டும். அசரீரி ஆகி விடு என்று கட்டளை இடுங்கள். கட்டளையிட்டீர்கள் மற்றும் நடந்தது. ஃபரிஷ்தா ஆகிவிட வேண்டும். மனதை எங்கே, எந்த நிலையில் நிலைத்திருக்கச் செய்ய விரும்புகிறீர்களோ அங்கே ஒரு நொடியில் நிலைத்திட வேண்டும். அதிகம் நேரம் எடுத்தது என்று அப்படி இருக்க வேண்டாம், ஐந்து விநாடி ஆகியது, இரண்டு விநாடி ஆகியது என்றால் கட்டளைப்படியோ நடக்கவில்லை, கட்டுப்பாட்டிலோ இருக்கவில்லை. எப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தாலும் குழப்பமாக இருந்தாலும் ஆனால் குழப்பமான நிலையிலும் ஆடாத அசையாதவராக ஆகிவிடுங்கள். அந்த மாதிரி கட்டுப்படுத்தும் சக்தி இருக்கிறதா அல்லது அசரீரி ஆகிவிடு, அசரீரி ஆகிவிடு என்று யோசித்து - யோசித்து அதிலேயே நேரம் சென்று விடுகிறதா? சில குழந்தைகள் விதவிதமான போஸ்-ஐ (தோற்றத்தை) மாற்றிக் கொண்டே இருக்கிறார்கள், இதை தந்தை பார்த்துக்கொண்டிருக்கிறார். அசரீரி ஆக வேண்டும் என்று நினைக்கிறார்கள் பிறகு அசரீரி என்றால் ஆத்ம ரூபத்தில் நிலைத்து விடுவது என்று நினைக்கிறார்கள் பிறகு நானோ ஆத்மாவே தான் சரீரமோ இல்லை என்றும் நினைக்கிறார்கள். நான் வந்ததே

ஆத்மாவாகத் தான் ஆகவே வேண்டியதும் ஆத்மா தான்... இப்பொழுது இந்த மாதிரி யோசிப்பது அசரீரி ஆனதா அல்லது அசரீரி ஆவதற்கான யுத்தம் செய்தாரா? தனது மனதிற்கு ஒரு நொடியில் அசரீரி ஆகிவிடு என்று கட்டளையிட்டார் அசரீரி என்றால் என்னவென்று யோசி எப்பொழுது ஆவோம், எப்படி ஆவோம்? என்று இதை சொல்லவில்லை. கட்டளையை ஏற்று நடக்கவில்லை இல்லையா? கட்டுப்படுத்தும் சக்தியோ இருக்கவில்லை தான் இல்லையா. இப்பொழுது நேரத்திற்குச் தகுந்தாற்போல் இந்தப் பயிற்சியின் அவசியம் இருக்கிறது. ஒருவேளை கட்டுப்படுத்தும் சக்தி இல்லை என்றால் அனேக சூழ்நிலைகள் குழப்பத்தில் கொண்டு வர முடியும். எனவே ஒரு ஹோலி என்ற வார்த்தையை மட்டும் நினைவு செய்தீர்கள் என்றால் கூட சரி தான். ஹோலி - கடந்தது கடந்ததாக ஆகியது. மேலும் ஹோலி அதாவது தந்தையின் குழந்தை ஆகிவிட்டேன். மேலும் என்ன ஆனீர்கள்? ஹோலி என்றால் தூய்மையான ஆத்மா ஆகிவிட்டீர்கள். ஒரு ஹோலி வார்த்தையை நினைவு செய்தீர்கள் என்றால் ஒரு ஹோலி என்ற வார்த்தையின் மூன்று அர்த்தங்களை உபயோகப் படுத்துங்கள். ஆம் ஹோலி என்றால் கடந்தது கடந்ததாக ஆனது என்று வர்ணனை செய்யாதீர்கள். ஆம் கடந்தது கடந்ததானது என்று யோசித்துக் கொண்டே இருக்கிறீர்கள், வர்ணனை செய்து கொண்டே இருக்கிறீர்கள் என்று அப்படி வேண்டாம். அர்த்த சொரூபத்தில் நிலைத்து விடுங்கள். நினைத்தீர்கள் மற்றும் ஆனது. யோசித்தீர்கள் என்றால் அப்படி யோசிப்பதிலேயே இருந்து விட்டீர்கள் என்று அப்படி இருக்க வேண்டாம். என்ன யோசித்தீர்களோ அதுவாக ஆனீர்கள், நிலைத்து விட்டீர்கள்.

(10 வருடங்களுக்கு மேலான இரட்டை வெளிநாட்டு சகோதர சகோதரிகளுக்கான பாராட்டு விழா கொண்டாடப்பட்டது)

யார் யார் விழா கொண்டாடினீர்களோ, அந்த மாதிரி விழா கொண்டாடினீர்கள் இல்லையா? அதாவது ஹோ கொண்டாடினீர்கள் இல்லையா? பாப்தாதாவும் ஒவ்வொரு வித்தியாசமான மற்றும் அன்பான காட்சியைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். முழு பரிவாரமும் குஷி அடைகிறது. தன்னுடைய புகைப்படத்தை மிக நன்றாகப் பார்த்தீர்களா? பிடித்திருந்தது தான் இல்லையா? முகத்தை மட்டும் பார்த்தீர்களா அல்லது மனதின் நிலையையும் பார்த்தீர்களா? இந்தக் கண்ணாடியிலோ முகத்தைப் பார்த்தீர்கள். மிக நன்றாக இருக்கிறது. நன்றாக செய்தீர்கள் ஆனால் ஞானம் என்ற கண்ணாடியில் தன்னுடைய நிலையையும் பார்த்தீர்களா? நல்லது தான். பாப்தாதாவும் 10-15 வருடங்கள்

என்று பார்ப்பதில்லை, ஆனால் இவ்வளவு காலம் வந்திருக்கிறார்கள், அழியாதவர் களாக இருந்திருக்கிறார்கள், அமரராக இருந்திருக்கிறார்கள் என்ற இதைப் பார்த்து குஷி அடைகிறார். அதிசயத்தை செய்தீர்கள், கலாச்சாரத்தை மாற்றினீர்கள், தேசத்தை மாற்றினீர்கள், பழக்க வழக்கத்தை மாற்றினீர்கள். இரட்டை வெளிநாட்டினரின் சம்ஸ்காரத்தை மாற்றினீர்கள் பாரதவாசி ஆகிவிட்டீர்கள். இப்பொழுது உங்களை மதுபன் நிவாசி என்றா அல்லது அமெரிக்கா, லண்டன் வாசி என்றா கூறுவீர்கள் . . . நீங்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள். மதுபன்னைச் சேர்ந்தவர்களா? (மதுபன் நிவாசிகள்). அமெரிக்கா, ரஷியா நினைவில் இருக்கவில்லையா? மதுபன் உங்களுடைய நிரந்தர விலாசம் ஆகும். மேலும் அமெரிக்கா, ரஷியா, ஆ்ப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் . . . . எத்தனை இடங்கள் இருக்கின்றன, இவை அனைத்தும் சேவை ஸ்தானங்கள். வசிப்பதற்கான நிரந்தர விலாசம் மதுபன் ஆகும், மற்றபடி சேவைக்காக வேறு பெயர், வேறு ரூபம், வேறு பாஷை, வேறு கலாச்சாரத்தில் சென்றிருக்கிறீர்கள். இல்லை என்றால் பாருங்கள் ஒருவேளை நீங்கள் அங்கே ஜென்மம் எடுக்கவில்லை என்றால் பாரதத்தின் சகோதரிகளுக்கு எத்தனை பாஷை கற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கும். எத்தனை பாஷைகள் கற்றுக் கொள்கிறீர்கள்? அப்படி நீங்கள் அனைவரும் சேவைக்காக சென்றிருக்கிறீர்கள். மேலும் இரட்டை வெளிநாட்டினருக்கு சேவை நிலையங்கள் திறப்பதற்கான ஆர்வமும் மிக நன்றாக இருக்கிறது என்று பாப்தாதா பார்த்திருக்கிறார். பிளாட் (அடுக்குமாடி வீடு) கிடைத்தது, சென்டர் திறந்தார்கள். நல்லது தான். அதனால் தான் இவ்வளவு தேசங்களில் சென்டர்கள் திறந்திருக்கிறார்கள்.

பாப்தாதா இந்த ஊக்கம் உற்சாகத்திற்காக இரட்டை வெளிநாட்டினருக்கு மிகுந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். கொஞ்ச காலத்திற்குள் சேவையை மிக நன்றாக பரப்பியிருக்கிறீர்கள். அப்படி மிக வேகமாக நடந்தது தான் இல்லையா? வெளிநாட்டில் சேவை தொடங்கி எத்தனை வருடங்கள் ஆகியிருக்கின்றன? லண்டனில் ஸ்தாபனை செய்து எத்தனை வருடங்கள் ஆகிவிட்டது (1998-ல் 27 வருடங்கள்). (பாரதத்தில் 62 வருடங்கள் மற்றும் வெளிநாட்டில் 27 வருடங்கள்) அப்படி சேவையின் வளர்ச்சியைப் பார்த்து பாப்தாதா குஷி அடைகிறார். ஒரே ஒரு சேவை மட்டும் இப்பொழுது இன்னும் செய்ய வேண்டியதாக இருக்கிறது. எல்லாம் நடந்து விட்டது என்று அப்படியே பாப்தாதா விட மாட்டார். இன்னும் செய்ய வேண்டியது இருக்கிறது.

அனைத்து இரட்டை வெளிநாட்டினர் எதிர்காலத்திற்காக இப்பொழுது செய்தித் தாள்

மூலமாக செய்யும் சேவையை அதிகம் செய்யுங்கள் என்று பாப்தாதா சமிக்ஞை கொடுக்கிறார். வெளிநாட்டின் செய்தித்தாள்கள் பாரதத்தில் சேவை செய்யும். இப்பொழுது ஏதோ காரணத்தினால் கொஞ்சம் கொஞ்சம் தொடங்கியிருக்கிறது. ஆனால் எப்படி தொடக்கத்தில் ஸ்தாபனையின் நேரத்தில் வெளிநாட்டு பத்திரிகைகளில் செய்தி வெளியானது இப்பொழுது மீண்டும் வெளிநாட்டுச் செய்தித்தாட்களில் அந்த மாதிரி செய்தி வர வேண்டும். அதன் மூலம் பாரதவாசிகளின் கண்கள் திறக்கட்டும். பாரதத்தின் செய்தித்தாள்களிலோ வரத் தொடங்கியிருக்கிறது. ஆனால் வெளிநாட்டு பத்திரிகைகளும் பாரதத்தை எழுப்பி விடும் மேலும் இன்னொன்று அந்த மாதிரி உலக வானொலியிலும் வர வேண்டும். எப்படி நீங்கள் பிரம்மா குமாரிகள் பற்றி கம்ப்யூட்டரில் போட்டிருக்கிறீர்கள் இல்லையா? யார் விரும்பினாலும் அதைப் பார்க்க முடியும். நன்றாக போட்டிருக்கிறீர்கள். ஆனால் அதன் செய்தி யாருக்கும் தெரியாது, பாரதத்தில் அதன் லாபத்தை எடுக்க முடியும். ஆனால் அது இன்னும் விளம்பரப்படுத்தப்படவில்லை. கண்டுபிடிப்பை நன்றாகச் செய்திருக்கிறீர்கள். வெளிநாட்டில் இயற்கையின் சாதனங்களின் லாபத்தை நன்றாக எடுக்கிறார்கள். இதுவும் நல்லது தான். பாரதத்தில் இந்த பிபிசி-ஐ அனைவரும் கேட்கிறார்கள். அதில் வரட்டும் பிறகு பாருங்கள் எத்தனை பேருக்கு தெரிய வந்தது என்று. அதிசயம் செய்யுங்கள் அறிமுகத்தைக் கொண்டு வாருங்கள். உள்ளூர் டி.வி மற்றும் ரேடியோவிலோ வரத் தான் செய்கிறது ஆனால் அது உலகம் முழுவதும் பரவியது என்றால் கேட்க விரும்புபவர்கள் கேட்கலாம். இப்பொழுது ஒவ்வொரு வருடமும் ஏதோ புதியதைச் செய்ய வேண்டும் தான் இல்லையா, திட்டத்தையோ உருவாக்குகிறீர்கள் தான் இல்லையா? மீட்டிங்கும் மிக அதிகமாகச் செய்கிறீர்கள். நன்றாகச் செய்யுங்கள் அதிகமாகச் செய்யுங்கள். தைரியம் குழந்தைகளிடம் இருக்கிறது என்றால் தந்தையின் உதவியோ இருக்கவே இருக்கிறது. யாராவது ஒரு பொறுப்பாளராக மட்டும் ஆக வேண்டும். ஒவ்வொரு காரியத்திற்கும் யாராவது ஒருவர் பொறுப்பாளர் ஆகிவிடுகிறார். மேலும் அந்தக் காரியம் நடந்தேறியும் விடுகிறது. ஏனென்றால் அது நடக்க வேண்டும் என்று டிராமாவில் அடங்கியிருக்கிறது. அந்த நேரத்தில் யாரோ ஒருவர் பொறுப்பாளராக மட்டும் ஆகிவிடுகிறார். அப்படி இந்தக் காரியத்திற்காகவும் யாராவது பொறுப்பாளர் ஆகவே வேண்டும். நல்லது.

நாலாபுறங்களிலுமுள்ள மிகத் தூய்மையான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் மிக உயர்ந்த நிலையில் நிலைத்திருக்கக்கூடிய மிக உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் அனைத்து பொக்கிஷங்களால் நிரம்பிய மிகுந்த செல்வந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் ஒவ்வொரு

அடியிலும் பல மடங்கு சேமிப்பு செய்யக்கூடிய, தந்தைக்குச் சமமாக ஆகக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் இரக்க மனமுடைய மன்னிக்கும் கடலின் குழந்தைகள் மாஸ்டர் மன்னிக்கும் ஆத்மாக்களுக்கு, உலகின் துக்கமான ஆத்மாக்களுக்கு எண்ண சக்தி மூலமாக சுகம் சாந்தியின் அஞ்சலி கொடுக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு, ஒவ்வொரு நேரமும் தன்னுடைய சேமிப்பு கணக்கு நிரம்பியிருக்கக்கூடிய மிகத் தீவிரமாக முயற்சி செய்யும் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம் -

தந்தைக்குச் சமமாக வரதானி ஆகி ஒவ்வொருவரின் இதயத்திற்கும் இதமளிக்கக்கூடிய மாஸ்டர் திலாராம் ஆகுக.

எந்தக் குழந்தைகள் தந்தைக்குச் சமமாக வரதானி மூர்த்தி குழந்தைகளாக இருக்கிறார்களோ அவர்கள் ஒருபொழுதும் யாருடைய பலஹீனத்தையும் பார்ப்பதில்லை. அவர்கள் அனைவர் மீதும் இரக்க மனமுடையவராக இருப்பார். எப்படி தந்தை யாருடைய பலஹீனத்தையும் இதயத்தில் வைத்துக் கொள்வதில்லையோ, அதே போல் வரதானி குழந்தைகளும் யாருடைய பலஹீனத்தையும் தன்னுடைய இதயத்தில் தாரணை செய்வதில்லை. அவர் ஒவ்வொருவரின் இதயத்திற்கு இதமளிக்கூடிய மாஸ்டர் திலாராமாக இருப்பார். எனவே அவர் உடன் இருப்பவரோ அல்லது மற்றவரோ அனைவரும் அவருடைய புகழ் பாடுவார்கள். அனைவரின் மனதிலிருந்து இவர் எப்பொழுதும் என்னுடைய அன்பானவர், சகயோகி என்ற இந்த ஆசீர்வாதம் தான் வெளியாகும்.

சுலோகன் :

சங்கமயுகத்தில் யார் எப்பொழுதும் கவலையற்ற மகாராஜா போல் இருக்கிறாரோ அவர் தான் உயர்ந்த ஆத்மா ஆவார்.

ஓம் சாந்தி

01.08.1979 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" சங்கமயுகத்தில் சமநிலையில் அருகில் இருக்கும் ஆத்மாக்கள் எதிர்கால சம்மந்தங்களிலும் நெருக்கத்தில் இருக்கும் ஆத்மாக்களாக ஆவார்கள் "

இன்று பாப்தாதா நாலாபுறங்களிலுமுள்ள வெளிநாட்டு மற்றும் பாரத தேசத்து குழந்தைகளை தூரமாக இருந்த போதிலும் எதிரில் பார்த்து அனைத்து குழந்தைகளுக்கும் அதிலேயும் விசேஷ ரூபத்தில் வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு ஒரு விஷயத்திற்காக விசேஷமாக பாராட்டுக்களைத் தெரிவிக்கிறார். ஏனென்றால், ஒவ்வொரு மூலைகளிலும் மறைந்திருந்த தந்தையின் குழந்தைகள் தந்தையைத் தெரிந்து நிச்சயத்துடன் மிக நல்ல முறையில் தாண்டி வந்து விட்டார்கள். விதவிதமான மதங்களின் திரைச்சீலைக்கு உள்ளே இருந்த போதிலும் ஒரு நொடியில் திரைச்சீலையை அகற்றி தந்தையுடன் சகயோகி ஆத்மாக்களாக ஆகிவிட்டார்கள். வந்த தடைகளையும் தந்தை மேல் உள்ள அன்பின் காரணமாக சுலபமாகவே கடந்து கொண்டிருக்கிறார்கள். எனவே விசேஷமாக பாப்தாதா பாராட்டுக்களைத் தெரிவிக்கிறார். அந்த மாதிரி தைரியம் வைக்கும் குழந்தைகளுடன் பாப்தாதாவின் சகயோகம் எப்பொழுதும் இருக்கிறது. ஒவ்வொரு குழந்தைகளுடன் ஒவ்வொரு காரியத்தில் தந்தையின் துணை இருக்கிறது. அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதாவின் மூலமாக புத்தி என்ற லி∴ப்ட்டின் கி∴ப்ட் கிடைத்திருக்கிறது. கி∴ப்ட்டோ அனைவருக்கும் கிடைத்திருக்கிறது. ஆனால் அதை காரியத்தில் கொண்டு வருவது அவரவர்களின் கையில் இருக்கிறது. மிக சக்திசாலியான மேலும் மிகவும் சுலபமான லி∴ப்ட்டின் கி∴ப்ட் ஆகும். ஒரு நொடியில் எங்கே செல்ல விரும்புகிறீர்களோ அங்கே சென்றடைய முடியும். இந்த அதிசயமான லி∴ப்ட் மூன்று உலகங்கள் வரை செல்லக்கூடியது. நினைவு என்ற சுவிட்ச்சை (பொத்தானை) அழுத்தியவுடனேயே ஒரு நொடியில் அங்கே சென்றடைந்து விடுவீர்கள். லி∴ப்ட் மூலமாக எவ்வளவு நேரம் எந்த உலகத்தின் அனுபவம் செய்ய விரும்புகிறீர்களோ அவ்வளவு நேரம் அங்கே நிலைத்திருக்க முடியும். இந்த லி∴ப்ட்டை விசேஷமாக உபயோகிப்பதற்கான விதி அமிர்தவேளையில் கவனம் உள்ளவராகி நினைவின் சுவிட்ச்சை யதார்த்த முறையில் இயங்கச் செய்தீர்கள் என்றால் முழு நாளும் தானாகவே இயங்கிக் கொண்டே இருக்கும். இயங்கச் செய்யத் தெரியும் தான் இல்லையா? இதில் நல்ல பயிற்சி உடையவர்கள் தான் இல்லையா?.

தெய்வீக புத்தி என்ற லிஃப்ட் முழு நாளில் எங்காவது மாட்டிக் கொள்வதோ இல்லையே? அதிகாரி ஆகி இந்த லிஃப்ட்டை காரியத்தில் ஈடுபடுவத்துவதினால் ஒருபொழுதும் இந்த லிஃப்ட் ஏமாற்றம் கொடுக்காது. தற்சமயம் சங்கமயுகத்தின் லிஃப்ட் இந்த திவ்ய புத்தி என்ற லிஃப்ட் ஆகும். கூடவே எதிர்காலத்து சொர்க்க இராஜ்ஜியத்தின் கிஃப்ட்டையும் பாப்தாதா இப்பொழுது கொடுக்கிறார். சொர்க்க கதவுகளின் சாவியை பாப்தாதா குழந்தைகளுக்குத் தான் கொடுக்கிறார். அதிகார நிலை அதாவது அதிகாரி ஆவது தான் சாவி ஆகும். அதிகாரத்தின் சாவி மூலம் கதவு திறந்திருக்கிறது. அப்படி நம்பர் ஒன் அதிகாரியாக யார் ஆகிறார். அதாவது அதிகாரம் மூலமாக யார் முதலில் கதவை திறக்கிறார் என்ற அதையும் நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்கள். ஆனால் தனியாகத் திறப்பதில்லை. திறப்பு விழா நேரத்தில் நீங்கள் அனைவரும் இருப்பீர்கள் இல்லையா? பார்ப்பவர்களாக இருப்பீர்களா மற்றும் செய்பவர்களாக இருப்பீர்களா? யாராக இருப்பீர்கள்? துணைவர்களாக இருப்பீர்கள் இல்லையா? குறைந்தது கைத்தட்டும் ஆதரவாளர்களாக இருப்பீர்கள் இல்லையா? குஷிகளின் மலர் மழை பொழிவீர்கள் இல்லையா? பாப்தாதா நேரத்தின் அருகாமையைப் பார்த்து குழந்தைகளுக்கு பாப்தாதாவுடன் எவ்வளவு நெருங்கிய சம்மந்தம் இருக்கிறது என்பதை பார்த்துக் கொண்டிருந்தார். மிக நெருக்கமாக யார் இருக்கிறார் மற்றும் நெருக்கமாக யார் இருக்கிறார் மேலும் சற்று தூரத்தில் இருந்து பார்ப்பவராக யார் இருக்கிறார்? குழந்தைகளின் இரண்டு எதிர்காலங்கள் பாப்தாதாவின் எதிரில் வருகிறது. ஒன்று சங்கமயுகத்தின் எதிர்காலம் அதாவது தந்தைக்குச் சமமாக ஆவதின் எதிர்காலம் மற்றும் இரண்டாவது, முதல் பிறவியின் எதிர்காலம் அதாவது சொர்க்கத்தின் எதிர்காலம். இங்கு சமநிலையில் அருகில் இருப்பீர்கள் என்றால் அங்கே சம்மந்தத்தில் அருகில் இருப்பீர்கள். எவ்வளவு இங்கு அருகாமையின் மூலமாக எப்பொழுதும் உடன் இருக்கிறீர்களோ அந்தளவே மூலவதனத்தில் கூட அந்த மாதிரி ஆத்மாக்கள் கூடவே இருப்பார்கள். மேலும் சொர்க்கத்திலும் ஒவ்வொரு தினசரி நடவடிக்கைகளின் சம்மந்தத்தில் உடன் இருப்பீர்கள். எப்படி இங்கே உன்னுடன் தான் பேசுவேன், உன்னோடு தான் விளையாடு வேன், உன்னுடைய துணையைத் தான் வைத்துக் கொள்வேன் என்றிருக்கிறது. அதே போல் எதிர்காலத்திலும் காலையிலிருந்து கூடவே தோட்டத்தில் விளையாடுவீர்கள், நடனம் ஆடுவீர்கள், பாடசாலையில் படிப்பீர்கள், எப்பொழுதும் சந்தித்துக்கொண்டே இருப்பீர்கள், மேலும் கூடவே இராஜ்ஜியம் செய்வீர்கள். எப்படி பிரம்மா பாபா எப்பொழுதும் சுயராஜ்ஜியம் செய்பவராக இருந்தார். அதாவது தன்னுடைய அடிமையாக இருக்கவில்லை ஆனால் சுய அதிகாரியாக இருந்தார். அதே போல் பிரம்மா பாபாவைப் பின்பற்றி நடப்பவர்கள், சுயராஜ்ஜியம் என்னுடைய பிறப்புரிமை என்ற எண்ணத்துடன் எப்பொழுதும் இருப்பவர்கள், அந்த மாதிரி சுயராஜ்ஜியம்

செய்பவர்கள் அங்கேயும் உடன் இராஜ்ஜியம் செய்வார்கள். இங்கே தினசரி நடவடிக்கையில் மிகச் சரியான நேரத்தில் வரும் நம்பர் ஒன் இறை மாணவர்கள் அங்கேயும் உடன் படிப்பார்கள். ஏனென்றால் பிரம்மா பாபா நம்பர் ஒன் இறைமாணவன் ஆவார். யார் இங்கே அதீந்திரிய சுகம் என்ற ஊஞ்சலில் தந்தையுடன் எப்பொழுதும் ஆடிக்கொண்டிருக்கிறார்களோ அவர்கள் அங்கேயும் ஊஞ்சலில் உடன் ஆடுவார்கள். யார் இங்கே அனேக பிராப்திகளின் குஷியில் ஆடுகிறார்களோ அவர் அங்கேயும் உடன் சேர்ந்து நடனம் ஆடுவார். யார் இங்கே தந்தையின் குணம் மற்றும் சம்ஸ்காரத்தின் நெருங்கிய அனைத்து சம்மந்தங்களினால் தந்தையின் துணையை அனுபவம் செய்கிறார்களோ அவர்கள் தான் அங்கே இராஜகுலத்தில் நெருங்கிய சம்மந்தத்தில் வருவார்கள். அப்படி பாப்தாதா ஒவ்வொருவரின் கண்கள் மூலமாக இரண்டு எதிர்காலத்தையும் பார்க்கிறார். முதல் ஜென்மத்தில் வருவது தான் முதல் நம்பரின் பிராப்தி ஆகும். அப்படி வெளிநாட்டுக் குழந்தைகள் அனைவரும் முதல் ஜென்மத்தில் வருவீர்கள் இல்லையா?. இத்தனை பேரும் முதலில் வருவீர்களா? முதலில் யார் வருவார் அதை விசேஷமாக ஒரு விஷயத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம், அது எது? தொடக்கத்திலிருந்து இதுவரை ஒருவரைத் தவிர வேறு யாரும் இல்லை மற்றும் தடையற்றவராக இருந்திருப்பார், தடை வந்திருந்த போதிலும் தடைகளைத் தாண்டி கடந்து வந்திருந்திருப்பார். தடையற்றவரின் அர்த்தம் தடையே வருவதில்லை என்பதல்ல. ஆனால் தடைகளை அழிப்பவராகி தடைகள் மேல் எப்பொழுதும் வெற்றி அடைந்தவர். அப்படி இந்த இரண்டு விஷயங்களும் ஒருவேளை தொடக்கத்திலிருந்து இறுதி வரை சரியாக இருக்கிறது என்றால் முதல் ஜென்மத்தில் உடன் இருப்பவராக ஆக முடியும். சுலபமான மார்க்கம் தான் இல்லையா?. நல்லது.

கர்நாடகத்தின் குழந்தைகளும் வந்திருக்கிறார்கள். இதுவும் பாரதத்தின் வெளிநாடு தான். லண்டனிலிருந்து சுலபமாக வர முடியும். ஆனால் இவர்கள் மிகக் கடுமையான பயணம் செய்து வருகிறார்கள். எனவே கடின உழைப்பிற்கான பலன் பிரத்யக்ஷமாக தந்தையின் சந்திப்பு கிடைத்திருக்கிறது. மிகுந்த ஈடுபாடு உள்ள குழந்தைகள், குழந்தைகளின் ஆர்வம் ஈடுபாட்டைப் பார்த்து தந்தையும் மகிழ்ச்சி அடைகிறார். எப்பொழுதும் இந்த ஆர்வம் என்ற தீபத்திற்கு அடிக்கடி கவனம் என்ற எண்ணெய் ஊற்றி அணையாததாக வைத்துக் கொள்ளுங்கள். கர்நாடகத்தில் அதிகமாக ஆத்ம தீபத்தையும் ஏற்றுகிறார்கள். எப்படி ஸ்தூலமான ஆத்ம தீபங்களை ஏற்றிக் கொண்டே இருக்கிறீர்கள். அதே போல் ஆர்வத்தின் தீபமும் எப்பொழுதும் எரிந்து கொண்டே இருக்கட்டும். நீங்கள் அனைவரும் உங்களை தந்தையின் அதிர்ஷ்டசாலி குழந்தைகள் என்று நினைக்கிறீர்கள் தான் இல்லையா.

நல்லது. இன்றோ சந்திப்பதற்கான நாள் ! அனைத்து காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு உயர்ந்த பாக்கியத்தை உருவாக்கக்கூடிய குழந்தைகளுக்கு, எப்பொழுதும் சுயராஜ்ஜிய அதிகாரியாக இருக்கும் குழந்தைகளுக்கு திலகமிட்டு மற்றும் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் சந்திப்பு

1)பிராமண ஜென்மத்தின் முக்கியமான பெர்சனாலிட்டி (தனித்தன்மை) தூய்மை ஆகும்.

எப்பொழுதும் தன்னை எண்ணம், சொல் மற்றும் செயலில் முழுமையான தூய்மை நிறைந்த பெர்சனாலிட்டி உள்ளவர் என்று அனுபவம் செய்கிறீர்களா? ஏனென்றால் பிராமணர்களின் பெர்சனாலிட்டியே தூய்மை என்றால் பிராமண வாழ்க்கையின் பெர்சனாலிட்டியாக என்ன இருக்கிறதோ அதை தன்னுடைய வாழ்க்கையில் அனுபவம் செய்கிறீர்களா? எவ்வளவு பெர்சனாலிட்டி இருக்குமோஅந்த அளவே விசேஷ ஆத்மா என்று வர்ணிக்கப்படுவீர்கள். இதில் முக்கியமான பெர்சனாலிட்டியே தூய்மை தான். பிரம்மா பாபா கூட ஆதிதேவ் மற்றும் முதல் இளவரசனாக எப்படி ஆனார். இந்த தூய்மையின் பெர்சனாலிட்டியின் ஆதாரத்தினால் முதல் நம்பரின் பெர்சனாலிட்டியின் லிஸ்ட்டில் வந்தார். அப்படி தந்தையைப் பின்பற்றி நடக்க வேண்டும் இல்லையா? சம்ஸ்காரமே தூய்மையினுடையது தான். பிராமண ஜென்மத்தின் சம்ஸ்காரமே தூய்மை தான். எனவே இன்றைய நாட்களில் பிராமணர்கள் மூலமாகத் தான் எந்த விதமான சுத்தமாக்கும் மற்றும் உயர்ந்த காரியங்களை செய்விக்கிறார்கள், ஏனென்றால் அவர்களை மகான் என்று நினைக்கிறார்கள். இதில் உயர்ந்த தன்மையே தூய்மை தான். அப்படி அந்த மாதிரி பிராமண வாழ்க்கையில் இயற்கையான ஜென்ம சம்ஸ்காரத்தை தன்னில் அனுபவம் செய்கிறீர்களா? தூய்மை ஜென்ம சம்ஸ்காரமாக ஆகியிருக்கிறதா? எப்படி சிலருக்கு கோபத்தின் சம்ஸ்காரம் பிறந்ததிலிருந்தே இருக்கிறது என்றால் நான் விரும்புவதில்லை, ஆனால் இது என்னுடைய ஜென்ம சம்ஸ்காரம் என்று கூறுகிறார்கள். அந்த மாதிரி இந்த ஜென்மத்தின் சம்ஸ்காரம் இயல்பாகவே காரியம் செய்கிறது. ஒருபொழுதும் கனவில் கூட தூய்மையின்மையின் எண்ணம் வரவில்லை என்ற இதைத் தான் தூய்மையின் பெர்சனாலிட்டி உள்ளவர் என்று கூறுவது. இந்தப் பெர்சனாலிட்டியின் காரணமாகத் தான் உலகில் உள்ள ஆத்மாக்கள் இன்று வரை வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். மகான் ஆத்மாக்களை தெரிந்திருக்காவிட்டாலும் கூட

வணங்குகிறார்கள், சாதாரணமானவர்களை அப்படி செய்ய மாட்டார்கள். அப்படி அந்த மாதிரி நீங்கள் மகான் தான் இல்லையா?

2) பற்றுதலின் விதை, சம்மந்தம் ஆகும் - அந்த விதையை அழிப்பதினால் அனைத்து புகார் களும் முடிவடைந்து விடும்.

மாதர்கள் அனைவரும் பற்றுதலை வென்றவர்கள் தான் இல்லையா? இப்பொழுது தந்தையுடன் அனைத்து சம்மந்தங்களையும் இணைத்து விட்டீர்கள் என்றால் வேறு யார் மேலாவது பற்றுதல் இருக்க முடியுமா என்ன? சம்மந்தம் இல்லாமல் யார் மேலும் பற்றுதல் இருக்க முடியாது. சம்மந்தமே இல்லை என்றால் பற்றுதல் எங்கிருந்து வந்தது. பற்றுதலுக்கான விதை சம்மந்தம் ஆகும். இதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். இப்பொழுது விதையையே அழித்து விட்டீர்கள் என்றால் விதையின்றி மரம் எப்படி வளரும். ஒருவேளை இதுவரை இருக்கிறது என்றால் கொஞ்சத்தை துண்டித்தீர்கள், கொஞ்சத்தை இணைத்தீர்கள், இரண்டு பக்கமும் இருக்கிறது என்று நிரூபணம் ஆகிறது. எப்படி இரண்டு பக்கங்களிலும் இருப்பவர்களுக்கு லட்சியமும் கிடைப்பதில்லை. இங்கிருந்து விலகவும் முடிவதில்லை. நீங்கள் அப்படி இல்லையே? அனைவரும் பற்றுதலை வென்றவர்கள் தான் இல்லையா?. பிறகு ஒருபொழுதும் என்ன செய்வது, பந்தனம், விடுபடுவதே இல்லை என்று புகார் செய்யாதீர்கள். எப்பொழுது பற்றுதல் நீங்கிவிட்டது என்றால் நினைவு சொரூபமானவராக இயல்பாகவே ஆகிவிடுகிறார்கள். பின்பு விடுபடுவதில்லை, அழிவதில்லை என்ற இந்த பேச்சு முடிவடைந்து விடும். அனைத்து பிராப்தி சொரூபம் ஆகிவிடுவார்கள். எப்பொழுதும் மன்மனாபவ என்ற நிலையில் இருப்பவர் மனதின் பந்தனத்திலிருந்தும் விடுபட்டு இருக்கிறார்.

வெளிநாட்டு சகோதரசகோதரிகளுடன் -

அனைவரும் எப்பொழுதும் தந்தையின் நெருக்கமானவர்கள் மற்றும் பிரியமானவர்களாக இருக்கிறீர்களா? உங்களை என்னவென்று நினைக்கிறீர்கள்? தன்னுடைய சென்ற கல்பத்தின் பிராப்தி கண் எதிரில் தெளிவாக இருக்கிறது தான் இல்லையா?. இரட்டை வெளிநாட்டு ஆத்மாக்களுக்கு இந்த சங்கமயுகத்தின் விசேஷ பங்குகளில் நம்பர் ஒன் விசேஷ பங்கு இணைக்கப்பட்டிருக்கிறது. இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு

பாப்தாதா மூலமாக விசேஷ வரதானம் இருக்கிறது. அது எது? வெளிநாட்டுக் குழந்தைகள் எப்பொழுது ஜென்மம் எடுத்தார்களோ அந்த முதல் தருணத்திலேயே சதா பாதுகாப்பு குடை நிழலின் கீழ் இருப்பதற்கான விசேஷ வரதானம் கிடைத்து விடுகிறது. எப்படி பாரதத்தின் சாஸ்திரங்களில் காண்பித்திருக்கிறார்கள். எப்பொழுது ஸ்ரீகிருஷ்ணரின் ஜென்மம் ஏற்பட்டதோ சிறைச்சாலையில் ஜென்மம் ஏற்பட்ட போதிலும் எப்பொழுது நதியை கடந்து வந்தாரோ அப்பொழுது பாம்பு கூட பாதுகாப்பின் சாதனமாக ஆனது அப்படி வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு எப்படிப்பட்ட அசுத்தமான சூழ்நிலை மேலும் எப்படிப்பட்ட பிரச்சனைகளாக இருந்தாலும் தந்தையின் பாதுகாப்பு நிழல் எப்பொழுதுமே வரதானமாக இருக்கிறது. அது குழந்தைகளை எப்பொழுதும் பாதுகாப்பாக வைத்து வந்திருக்கிறது. மேலும் இறுதி வரை வைக்கும். கூடவே வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு எப்பொழுதும் தந்தையின் துணையின் அனுபவத்தில் விசேஷ உதவி இருக்கிறது. மூன்றாவது விஷயம் வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு விசேஷ ரூபத்தில் பிறந்தவுடனேயே சேவையின் சம்ஸ்காரத்தின் சகயோகம் இருக்கிறது. இதுவும் விசேஷமாக நாடகத்தின்படி அவர்களுக்கு பங்கு கிடைத்திருக்கிறது. நான்காவது விஷயம் நினைவு யாத்திரையில் சுலபமாகவே அனுபவங்களின் சுரங்கத்தை பிராப்தி செய்வதற்கான வரதானமும் வெளிநாட்டினருக்கு கிடைத்திருக்கிறது. அப்படி எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள் நீங்கள் என்று இப்பொழுது கூறுங்கள். சங்கமயுகத்தில் பாப்தாதாவின் விசேஷ விலைமதிக்க முடியாத இரத்தினம் ஆவீர்கள். அந்த விலைமதிக்க முடியாத இரத்தினங்களை பாப்தாதா உலகத்தில் ஒரு முன்மாதிரி ரூபத்தில் வைப்பார். எனவே எப்பொழுதும் தந்தை மற்றும் சேவையைத் தவிர வேறு எந்த விஷயமும் நினைவு இருக்க வேண்டாம். துணையின் அனுபவத்தை செய்கிறீர்களா? சக்தி சேனை என்ன நினைக்கிறீர்கள்? சிவன் மற்றும் சக்தி எப்பொழுதும் சேர்ந்திருக்கிறார்கள் இல்லையா, பெயரே சிவசக்தி. யார் சிவசக்தியாக இருக்கிறாரோ அவர் நினைவில்லாமல் இருக்கவே முடியாது. எப்பொழுதாவது ஏதாவது காரியம் செய்கிறீர்கள் என்றால் நான் உலக சேவைக்காக இந்தக் காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறேன் என்று நினையுங்கள். இதைத் தான் தாமரை மலருக்குச் சமமான நிலை என்று கூறுவது. அப்படி அனைவரும் தாமரை மலருக்குச் சமமாக காரியம் செய்து கொண்டே விலகியிருப்பவராகவும் மற்றும் தந்தையின் பிரியமானவராகவும் ஆகி இருக்கிறீர்களா? பாண்டவர்கள் தாமரை மலருக்குச் சமமாக இருக்கிறார்கள் இல்லையா?. இந்த உலகியல் காரியம் கூட அனேக ஆத்மாக்களை தொடர்பில் கொண்டு வருவதற்கான சாதனமாகும். ஏனென்றால் ஈஸ்வரிய சேவைக்காக தொடர்பையோ உருவாக்கத் தான் வேண்டியதிருக்கிறது இல்லையா? இது தயாரான தொடர்பு கிடைத்து விடுகிறது. எனவே இரண்டு காரியங்கள் செய்யுங்கள் என்று

டைரக்ஷன் கொடுக்கப்படுகிறது. மேலும் எப்படி தொடர்பு நெருக்கத்தை அதிகரித்துக் கொண்டே இருப்பீர்களோ பிறகு தொடர்பின் அவசியம் இருக்காது. பிறகு உலகியல் காரியங்கள் முடிவடைந்து விடும். ஆன்மீக காரியத்தின் பொறுப்பாளர் ஆகிவிடுவீர்கள். அனைவருக்கும் இந்த நிலை வருகிறது. மேலும் எப்பொழுதும் இருக்கும். இதையும் சேவைக்கான வாய்ப்பு என்று புரிந்து காரியம் செய்யுங்கள்.

ஆஸ்திரேலியா பார்ட்டியுடன் -

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்கள் தந்தையை பிரத்யக்ஷம் செய்வதற்கான எண்ணத்தை நடைமுறையில் மிக நன்றாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். யார் அனுபவம் செய்தார்களோ அவர்கள் மற்ற ஆத்மாக்களுக்கும் செய்விப்பதற்கான நடைமுறை ரூபமாக என்ன காண்பித்தீர்களோ அது மிக நன்றாக இருக்கிறது. இந்த விசேஷத்தின் காரணமாக ஆஸ்திரேலியாவின் நம்பர் பாப்தாதாவிடம் நம்பர் ஒன்-ல் இருக்கிறது. எப்படி பாரதத்தை பொறுத்தவரையில் வர்ணனை இருக்கிறது, ஒவ்வொரு வீடும் கோவில் என்று, அதே போல் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்களின் ஒவ்வொரு வீட்டில் அதாவது யாரெல்லாம் வந்து கொண்டிருப்பவர்களோ, அவர்கள் சேவையின் பலனை நிரூபிப்பதால் அதாவது ஒவ்வொரு வீட்டையும் கோவிலாக ஆக்குவதில் நம்பர் ஒன் ஆக வந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியானால் நீங்கள் அனைவரும் யாராக ஆனீர்கள்? கோவிலில் இருக்கக்கூடிய சைத்தன்ய விக்ரகங்கள். நாங்கள் நம்பர் ஒன்-ல் இருக்கிறோம் என்று நீங்கள் அனைவரும் நினைக்கிறீர்களா? தந்தைக்கும் குஷி இருக்கிறது. உங்களைப் பார்த்து அனைவரும் அப்படியே பின்பற்றி நடப்பார்கள். ஆஸ்திரேலியாவில் க்யூ (வரிசை) முதலில் உருவாகும். எப்படி தந்தை குழந்தைகள் மேல் நம்பிக்கை வைக்கிறார் என்றால் நீங்கள் அனைவரும் நம்பிக்கை நட்சத்திரங்கள் ஆவீர்கள். நாலாபுறங்களிலும் அந்த மாதிரி ஒலியைப் பரப்புங்கள். அந்த ஆஸ்திரேலியாவின் ஒலி முதலில் பாரதத்தில் வந்து சேரட்டும். சப்தம் வலுவாக இருந்தால் தான் இங்கு வந்து சேரும். அந்த மாதிரி வலுவான ஒலியைப் பரப்ப நாலாபுறங்களிலுமிருந்தும் நமது தந்தை குப்த வேஷத்தில் வந்து விட்டார் என்ற ஒரே ஒரு ஓசை வெளியாகட்டும். எப்படி தந்தை குழந்தைகள் உங்களை குப்தத்திலிருந்து பிரத்யக்ஷம் செய்தார். அதே போல் நீங்கள் அனைவரும் பிறகு தந்தையை பிரத்யக்ஷம் செய்ய வேண்டும். அனைத்து சக்திகளும் ஒன்றாகச் சேர்ந்து விரல் கொடுத்தார்கள் என்றால் சுலபமாகவே ஆகிவிடும். மிக நல்ல நல்ல இரத்தினங்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு இரத்தினத்திற்கும் அவரவர்களின் விசேஷம் உண்டு. எப்பொழுதும் தன்னை சென்ற கல்பத்து இரத்தினம் என்று புரிந்து நடந்தீர்கள் என்றால்,

வெற்றியின் பிறப்புரிமை கிடைத்து விடும். வெற்றி அடைபவர்களாக ஆவீர்கள். நல்லது. ஓம் சாந்தி.

வரதானம்:

நேரடியாக பரமாத்மாவின் லைட்டின் இணைப்பு மூலமாக இருளை விரட்டக்கூடிய லைட் ஹவுஸ் ஆகுக!.

குழந்தைகள் உங்களிடம் நேரடியாக பரமாத்மா லைட்டின் கனெக்ஷன் இருக்கிறது. சுவமானத்தின் நினைவு என்ற பொத்தானை மட்டும் நேரடி லைனோடு தொடக்கிவிட்டீர்கள் என்றால் லைட் வந்து விடும். மேலும் எவ்வளவு தான் நெருக்கமான சூரிய ஒளியைக்கூட மறைக்கக்கூடிய கார்மேகமாக இருந்தாலும் அதுவும் ஓடி விடும். இதனால் நீங்களும் லைட்டாக இருக்கவே இருப்பீர்கள், ஆனால் மற்றவர்களுக்காகவும் லைட் ஹவுஸ் ஆகிவிடுவீர்கள்.

சுலோகன் :

சுயமுயற்சி செய்வதில் தீவிரமானவர் ஆனீர்கள் என்றால், உங்களுடைய எண்ண அலைகள் மூலமாக மற்றவர்களின் மாயாவும் சுலபமாக ஓடிவிடும்.

ஓம் சாந்தி

12.11.1979 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" அமிர்தவேளையின் வரதானம் பெறும் நேரத்தில் கூக்குரலைக் கேளுங்கள் மற்றும் உபகாரம் (நன்மை) செய்யுங்கள் "

இன்று பாப்தாதா நாலாபுறங்களிலுமுள்ள அன்பான குழந்தைகளின் அன்பின் இசையை அமிர்தவேளையிலிருந்து கேட்டோம். அன்பிற்கான பிரதிபலனாக, பாப்தாதா தொலைவான தேசத்தில் வசிப்பதிலிருந்து, அவ்யக்த வதனத்தில் வசிப்பதிலிருந்து, குழந்தைகளுக்குச் சமமாக சாகார உலகில் வசிப்பவராகினார். அன்பின் சொரூபம் என்றால் சமமாக ஆவது. அப்படி பாப்தாதா சமமான சொரூபத்தில் அன்பிற்கான பிரதிபலனைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார், இப்பொழுது குழந்தைகள் என்ன பிரதிபலன் கொடுக்க வேண்டும்? எப்பொழுது தந்தை குழந்தைகளுக்குச் சமம் ஆக முடியும் என்றால், குழந்தைகளும் (தந்தைக்குச்) சமமாக ஆக வேண்டும். இது தான் அன்பிற்கான பிரதிபலன் கொடுப்பது ஆகும்.

இப்பொழுது இந்த வருடத்தில் எந்தவொரு விசேஷ சமமான நிலையைக் காட்டுவீர்கள்? காலத்தின் ஓட்டம் மிகத் தீவிர வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது. உலகிலுள்ள அனைத்து ஆத்மாக்களும், பாப்தாதா மற்றும் உயர்ந்த பரம பூஜ்ய ஆத்மாக்களாகிய உங்களிடம், தங்களது எண்ணங்கள் மூலமாக விதவிதமான வடிவில் ஒரு வேண்டுகோளை வைத்துக் கொண்டிருக்கின்றனர். அந்த வேண்டுதலைப் பூர்த்தி செய்யக் கூடிய உங்களுக்கு, ஆத்மாக்களின் வேண்டுதலின் ஒலியைக் கேட்கிறீர்களா?

அமிர்தவேளை நேரம் நாலாபுறங்களின் தமோகுணமான சூழ்நிலை மற்றும் அதிர்வலைகளின் வாயுமண்டலம் மறைந்துவிட்ட நிலையாக இருக்கும் அதாவது தமோகுணத்தின் பாதிப்பு அமிழ்ந்து விடுகிறது. அந்த மாதிரியான நேரத்தில் எளிதாக கூக்கூரலைக் கேட்டு அவர்களுக்கு நீங்கள் உபகாரம் செய்ய முடியும். கூக்கூரலைக் கேட்பதும் சுலபம், உபகாரம் செய்வதும் சுலபம். வரதானம் பெறுவதும் சுலபம் மேலும்

தானம் செய்வதும் சுலபம். ஏனெனில், அந்த சூழ்நிலை உள்உணர்வை மாற்றம் செய்யக்கூடியதாக இருக்கிறது. அந்த மாதிரியான நேரத்தில், அனைத்து வரதானி ஆத்மாக்களாகிய உங்களின் நிலையும், பாபாவின் விசேஷ வரதானங்களின் குடைநிழலின் காரணத்தினால், தந்தைக்குச் சமமாக சம்பன்னம் மற்றும் வள்ளல் தன்மை யினுடையதாக இருக்கிறது. பிரம்மலோகத்தில் வசிப்பவரான தந்தை விசேஷமான வடிவில் ஞான சூரியனின் லைட் (ஒளி) மற்றும் மைட்-ன் (சக்தியின்) கிரணங்களை விசேஷமாக குழந்தைகளுக்கு வரதானத்தின் வடிவில் கொடுக்கிறார். ஆகையால் இந்த நேரத்தை 'பிரம்ம முகூர்த்த' நேரம் என்று கூறுகிறார்கள். எனவே இந்த நேரத்தில் நீங்கள் தங்களுடைய முழு நாளுக்கான உயர்ந்த மனநிலை மற்றும் காரியத்திற்காக வேண்டி முகூர்த்த நேரத்தை ஒதுக்குகிறீர்களா? எப்படி முகூர்த்த நேரத்தை ஒதுக்க விரும்புகிறீர்களோ அவ்வாறே ஒதுக்க முடியும். கூடவே அவ்யக்த வதனவாசி பிரம்மா பாபாவும் பாக்கியத்தை வழங்கும் வள்ளலின் வடிவில் இந்த அமிர்தவேளையில் பாக்கியம் அதாவது அமிர்தத்தை வழங்குகிறார். எவ்வளவு பாக்கியம் என்ற அமிர்தத்தை பிரம்மா பாபாவிடமிருந்து பெற விரும்புகிறீர்களோ அவ்வளவு பெற முடியும். ஆனால் புத்தி என்ற கலசம் அமிர்தத்தை தாரணை செய்வதற்குத் தகுதியானதாக இருக்க வேண்டும். எந்த விதமான தடையோ அல்லது இடையூறோ இருக்கக் கூடாது. அப்படி அந்த மாதிரியான நேரத்தில் பெறுவது மற்றும் வழங்குவதற்கான காரியம் சேர்ந்தே நடைபெறுகிறது. வரதானி மற்றும் மகாதானி இரண்டு பங்கும் சேர்ந்தே நடைபெறுகிறது. அந்த மாதிரி நிலையில் நிலைத்திருக்கக்கூடிய உபகாரம் செய்யும் ஆத்மாக்களுக்கு, பிற ஆத்மாக்களின் கூக்கூரலும் தெளிவாகக் கேட்கும். காதுகளில் நேரடியாக யாரோகூறிக் கொண்டிருப்பதைப் போல் அந்தளவு தெளிவாக கேட்கும்.

தற்சமயம் அனைவரின் ஒரேயொரு கூக்குரல் என்னவாக இருக்கிறது. அதைத் தெரிந்திருக்கிறீர்களா? தர்மத் தலைவர்கள், அரசுத் தலைவர்கள் மற்றும் மிக உயர்ந்த அறிவியலைச் சேர்ந்தவர்கள் மற்றும் கூடவே பொது ஜனங்களிடமும் இப்பொழுது விரைவில் ஏதாவது மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற ஒரே ஒரு கூக்குரல் மட்டுமே இருக்கிறது. அனைத்து துறைகளைச் சேர்ந்த ஆத்மாக்களும் தற்போது தங்களை தோல்வி அடைந்ததாக அனுபவம் செய்கிறார்கள். இப்பொழுது ஏதேனும் சூப்ரீம் சக்தி (உயர்ந்த சக்தி) வேண்டும். இந்த விருப்பத்தின் தீபம் மற்றும் இந்த தேவையினை உணரக்கூடிய எண்ணத்தின் தீபம் எரியத் துவங்கிவிட்டது. இப்பொழுது அதனை மேலும் கொழுந்து விட்டு எரியச் செய்ய, அனைத்து ஆத்மாக்களுக்கும் உங்களின் எண்ணம் என்ற எண்ணெய்

வேண்டும் - இதன் மூலம் அனைவரின் கூக்குரலுக்கு நீங்கள் உபகாரம் செய்ய முடியும். (இன்று இரண்டு - நான்கு முறைகள் இடையிடையே மின் தடை ஏற்பட்டுக் கொண்டிருந்தது). பாருங்கள், இந்த மின்சாரம் கூட அறிவுறுத்துக் கொண்டிருக்கிறது. எப்படி மின்சாரம் ஒரு நொடிப்பொழுதில் வருகிறது மற்றும் சென்று விடுகிறது, அது போன்றே நீங்களும் கூக்குரல் எழுப்புபவர்களின் அருகில் உபகாரம் செய்பவராகி, ஒரு நொடிப்பொழுதில் சென்றடைந்து விடுங்கள். இவ்வாறு வருவது, செல்வதற்கான பயிற்சி இருக்க வேண்டும். இப்பொழுது கூக்குரலை கேட்டீர்கள். மேலும் இப்பொழுதே சென்றடைந்தீர்கள் என்றிருக்க வேண்டும். இப்பொழுது அனைவரின் கூக்குரல் கடின உழைப்பிலிருந்து விடுபட்டு சகஜமான பிராப்தி செய்வதற்கானதாகும். அறிவியலார் களும் மிகக் கடின உழைப்பு செய்து களைப்படைந்து விட்டார்கள். தர்ம ஆத்மாக்களும் சாதனா (கடின முயற்சி) செய்து களைப்படைந்து விட்டார்கள். அரசியல் தலைவர்களும் அனேக விதமான கட்சி மாற்றங்களின் குழப்பத்தில் வந்து களைப்படைந்து விட்டார்கள். இப்பொழுது அனைவரின் களைப்பை போக்கக்கூடியவர்கள் யார்? எப்படி சுயம் தந்தை (பகவான்) திரௌபதியின் கால்களை பிடித்துவிட்டு களைப்பை போக்கினார் என்று சென்ற கல்பத்தின் நினைவாக சாஸ்திரங்களில் வர்ணனையாக உள்ளதோ அது போன்று தந்தைக்குச் சமமாக உபகாரம் செய்யும் குழந்தைகளாகி அனைத்து ஆத்மாக்களின் களைப்பை நீங்கள் போக்கிடுங்கள். இப்பொழுது புத்தி என்ற கால்கள் களைப்படைந்து விட்டது, இப்பொழுது புத்தியில் நினைவு என்ற சுவிட்ச்சை அழுத்தி விடுங்கள். இது தான் புத்தி என்ற கால்களை பிடித்து விடுவதாகும்.

இந்த வருடம் என்ன செய்ய வேண்டுமென்பதை இப்பொழுது கேட்டீர்களா? ஒரு நொடியில் பொலிவு மற்றும் ஃபரிஷ்தா நிலையின் ஜொலிப்பை காண்பியுங்கள். இது தான் தந்தையின் அன்பிற்கான பிரதிபலனாகும். பிற ஆத்மாக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் சொரூபமானவராக நீங்கள் ஆவதின் மூலம் பிரச்சனைகள் தாமாகவே முடிவடைந்து விடும். எனவே இப்பொழுது சமாதான (தீர்வு) சொரூபமானவராக ஆகுங்கள். ஒரு வருடத்தில் அந்த மாதிரி சொரூபத்தை மாற்றம் செய்தீர்கள் இல்லையா? உலகை மாற்றம் செய்பவர் தன்னை மாற்றம் செய்பவராக ஆகிவிட்டீர்கள் தான் இல்லையா? அல்லது இனி மேல் தான் ஆக வேண்டுமா? ஆக வேண்டுமா அல்லது உலக சேவை செய்ய வேண்டுமா? இப்பொழுது சேவை செய்ய வேண்டிய நேரம் ஆகும், பெறுவதன் கூடவே வழங்குவதற்கான நேரம் ஆகும். ஒரே ஒரு எண்ணத்தில் பெற வேண்டும் மற்றும் வழங்க வேண்டும். அப்படிப்பட்ட அதிவேகம் வேண்டும். இப்பொழுது எதிர்பார்த்து அதிகம்

காத்திருந்திருக்கிறீர்கள், ஆனால் முன் ஏற்பாடும் செய்திருக்கிறீர்களா? தந்தை வருவதற்காக காத்திருந்தீர்கள். மேலும் தந்தை வந்து என்ன பார்ப்பார்? முன் ஏற்பாடுகளை. அப்படி ஏதாவது முன் ஏற்பாடுகள் செய்திருக்கிறீர்களா?

எப்படி இங்கு ஸ்தூலமான சீசனிற்காக தகுந்த ஏற்பாடுகள் செய்கிறீர்கள், சேவாதாரிகளைத் தயார் செய்கிறீர்கள், யாருக்கும் எந்தக் கஷ்டமும் ஏற்படக் கூடாது என்பதற்காக தேவையான அனைத்தையும் தயார் செய்கிறீர்கள், நேரம் வீணாகக் கூடாது, எங்கும் (க்யூவில்) வரிசையில் காத்திருக்கக்கூடாது, என்றெல்லாம் முன்னேற்பாடு செய்து இதற்காக அனைத்து வழிகளையும் கடைபிடிக்கிறீர்கள். இதுவோ பிராமணர்களின் மதுபனின் சீசன். ஆனால் இப்பொழுது எவ்வாறான கடைசி சீசன் வரவிருக்கிறது? அனைத்து ஆத்மாக்களுக்கும் கதி - சத்கதி வழங்கக்கூடிய சீசன் வரவிருக்கிறது. அதற்கான வழிமுறைகளைக் கடைபிடித்தீர்களா? துடித்து கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு (க்யூவில்) வரிசையில் காத்திருக்கும் கஷ்டத்தைக் கொடுக்கக் கூடாது. வந்து கொண்டே இருக்க வேண்டும். மேலும் பெற்றுச் சென்று கொண்டே இருக்க வேண்டும். துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்கள் ஒரு நொடிப்பொழுது கூட காத்திருக்க முடியாது. அய்யோ அய்யோ என்று கதறுவார்கள். அந்த மாதிரி சீசனிற்காக முன்னேற்பாடுகள் செய்துள்ளீர்களா? மகாரதிகளை (பெரியவர்களை) க்யூவில் காத்திருக்க வைக்கக் கூடாது மற்றும் நொண்டி, முடமாக இருக்கும் அந்த மாதிரி ஆத்மாக்களை வரிசையில் காத்திருக்கச் செய்து என்ன செய்ய போகிறீர்கள்! லண்டனிலும் க்யூ ஏற்படுத்துவீர்களா என்ன? வெளிநாட்டவர்கள் க்யூவில் காத்திருப்பீர்களா? பிறகு என்ன செய்வீர்கள்? எவரெடி ஆக வேண்டியதாக இருக்கும். பாரதவாசிகளோ அல்லது வெளிநாட்டினரோ யாராக இருப்பினும் எவரெடி ஆகாமல் மாஸ்டர் கதி - சத்கதி வழங்கும் வள்ளலாக ஆக முடியாது. முயற்சி செய்யும் வாழ்க்கையிலேயே அதிகமாக இருப்பதிலிருந்து இன்னும் சற்று மேலே சென்று இப்பொழுது வள்ளல் தன்மையின் நிலையில் இருங்கள். ஒவ்வொரு நொடியும் வள்ளல் தன்மையுடையவராகி இருங்கள். அப்பொழுது உங்கள் அனைவருக்கும் நொடிப்பொழுதில் ஹை ஜம்ப் (உயரே தாண்டிச் செல்லல்) ஆகிவிடும். (வள்ளலாகி) வழங்குவதில் முழு ஈடுபாடோடு இருந்தீர்கள் என்றால் மாயாவும் உங்களைப் பார்த்து தாக்குதல் செய்வதற்குப் பதிலாக வணங்கி நமஸ்காரம் செய்யும். இப்பொழுது என்ன செய்ய வேண்டுமென்று புரிந்ததா? நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகளுக்கு, சாகார ரூபத்தில் தொலைவிலிருந்தாலும் ஆனால் அன்பின் காரணமாக அருகாமையில் இருக்கிறீர்கள், அந்த மாதிரி அன்பான மற்றும் அருகாமையிலிருக்கும் குழந்தைகளுக்கு

பாப்தாதா சமமாக ஆகுக என்ற வரதானத்தோடு நினைவிற்கான ரிடர்ன் (பிரதி பலன்) கொடுத்துக் கொண்டிருக்கிறார். (மின் தடை ஏற்பட்டது) குழப்பமான நேரத்திலும் நிலை ஆடாது அசையாது இருக்க வேண்டும். இதுவோ ஒன்றுமே இல்லை, கடைசி நேரத்திலோ எவ்விதமான சாதனமும் கிடைக்காது. இப்பொழுதோ அதிகமான சாதனங்கள் இருக்கின்றன. சூழ்நிலை குழப்பம் தருவதாக அமைந்தாலும் ஆனால் நினைவு மற்றும் உள்உணர்வில் ஆடாது அசையாது இருக்க வேண்டும் - இவ்விதமான பயிற்சியினையும் செய்யுங்கள். இது என்ன ஆயிற்று! என்பது போல் சிறிதளவும் குழப்பம் வரக் கூடாது. அப்படி இந்தப் பயிற்சி ஆகிக் கொண்டிருக்கிறது. பாப்தாதாவிற்கும், நாடகப்படி இப்பழைய உலகின் ஏதாவது காட்சிகளைக் காண்பிக்க வேண்டியதாக இருக்கும் இல்லையா. நல்லது

அப்படி எப்பொழுதும் உபகாரி, ஒவ்வொரு விநாடியும் கதி சத்கதி வழங்கும் மாஸ்டர் வள்ளல், சக்திகளின் களஞ்சியத்தால் நிரம்பிய, குறைவில்லா பொக்கிஷத்தின் வள்ளல் அனைத்து ஆத்மாக்களின் களைப்பை அகற்றக் கூடிய களைப்பற்ற சேவாதாரி அந்த மாதிரி தந்தைக்குச் சமமான, நெருக்கமான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வெளிநாட்டு குழந்தைகளுடன் -

அனைவரும் எப்பொழுதும் ஒரே ரசனையின் நிலையில் நிலைத்திருந்து கொண்டே, மற்றவர்களையும் ஒரு தந்தையோடு சம்மந்தத்தை ஏற்படுத்துவதிலும், அனைத்து பிராப்திகளை செய்விப்பதிலும் முழுமையாக ஈடுபட்டுக்கொண்டே இருக்கிறீர்களா? ஒரு தந்தையைத் தவிர வேறு எவரும் இல்லை என்று அந்த மாதிரியான நிலை நிரந்தரமாக மற்றும் இயல்பானதாக உருவாகியிருக்கிறதா அல்லது உருவாக்க வேண்டியதாக இருக்கிறதா? பயிற்சி செய்ய வேண்டியதாக இருக்கிறதா அல்லது இயல்பாகவே இந்த நிலை இருக்கிறதா? எந்த நிலை வரை வந்தடைந்துள்ளீர்கள்? எப்பொழுது தன்னுடைய மற்றும் தந்தையினுடைய அறிமுகம் கிடைத்து விட்டது என்றால், பிறகு அடிக்கடி கவனம் கொடுக்க வேண்டியதின் அவசியம் இருக்கிறதா?

மாயா தொந்தரவு செய்கிறதா என்ன? தற்போதைய நேரம் வணங்கி நமஸ்காரம் செய்யும் நேரமேயன்றி தாக்குவதற்கான நேரம் அல்ல. இது வரையிலும் மாயாவின் தாக்குதல்

இருக்கிறதா என்ன? நேரத்திற்கு தகுந்தாற்போல் எப்படி உங்களுடைய நிலை முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறதோ, அப்பொழுது மாயாவின் தாக்குதல் இருக்கக்கூடாது. ஒருவேளை மாயா வந்தாலும், அதை விளையாட்டு என்று புரிந்து பாருங்கள். எப்படி பார்வையாளராகி எல்லைக்குட்பட்ட நாடகத்தைப் பார்க்கிறீர்கள், அந்த மாதிரி இந்த மாயாவின் விளையாட்டை நாடகமாகப் புரிந்து கொண்டு பாருங்கள். அப்பொழுது மிகுந்த மகிழ்ச்சி ஏற்படும், பிறகு பயப்பட மாட்டீர்கள். எனவே அந்த மாதிரியான நிலை தற்பொழுது இருக்க வேண்டும். எந்த விதமான பயங்கர ரூபத்தில் மாயா வந்தாலும் ஒருவேளை அதை நீங்கள் ஒரு பொம்மை என்று புரிந்து கொண்டால் அது விளையாட்டாக ஆகி விடும். எப்படி வேட்டையாடுபவர் வேட்டை செய்கிறார், அதிலும் எதிர் தாக்குதல் இருக்கும். ஆனால் வேட்டையாடுவது என்று புரிந்து கொண்ட காரணத்தினால் அவர் பயப்படுவதில்லை. குஷி அடைவார். நீங்கள் அனைவரும் மாயாவை வேட்டையாடுபவர்கள். வேட்டையாடுபவர் ஒரு பொழுதும் பயப்படுவதில்லை, மாறாக குஷி அடைவார். இந்த முறை மதுபன்னிலிருந்து எப்பொழுதும் விளையாட்டு வீரராகி விளையாட்டைப் பார்ப்போம் என்ற இந்த உறுதியான எண்ணத்தை வைத்துக் கொண்டு செல்லுங்கள். வெளிநாட்டவர்களோடு மாயா தாக்குதல் செய்வதற்குப் பதிலாக வணங்கி நமஸ்காரம் செய்யத் தொடங்கி விட வேண்டும். அந்த மாதிரி வெளிநாட்டவர் எண்ணுகிறீர்களா? இப்பொழுது அனைத்து தரப்பிலிருந்தும் மாயாவினுடைய போர் முடிந்து விட வேண்டும்.

டீச்சர்களுடன் -

டீச்சர்கள் என்றால் அறிவுரை தரும் ஆசிரியர்கள். தந்தையும் ஆசிரியர் வடிவில் தனது பங்கைச் செய்கிறார். அப்படி ஆசிரியர்கள் (டீச்சர்கள்), தந்தைக்குச் சமமாக மாஸ்டர் உலகத்தின் ஆசிரியர் ஆகிவிட்டார்கள். எப்படி தந்தை உலகத்தின் ஆசிரியரோ, பாரதத்திற்கு மட்டுமில்லை மற்றும் வெளிநாட்டிற்கு மட்டுமில்லை, முழு உலகிற்கும் ஆசிரியர் ஆவார். அப்படி மாஸ்டர் ஆசிரியர் என்றால், எல்லைக்கப்பாற்பட்ட ஆசிரியர். எனவே யார் எல்லைக்கப்பாற்பட்ட ஆசிரியராக இருப்பாரோ அவருக்கு என்ன போதை இருக்கும்? எல்லைக்கப்பாற்பட்ட போதைஎல்லைக்கப்பாற்பட்ட குஷி, எல்லைக்கப்பாற்பட்ட பிராப்தி, இருக்கும். நீங்கள் அந்த மாதிரி ஆசிரியர்கள் தான் இல்லையா? ஏனெனில், எப்படி தந்தைக்கு டைட்டில் (பட்டம்) கிடைத்துள்ளதோ அந்த டைட்டிலுக்கு ஏற்றாற்போன்று காரியம் மற்றும் குணம் ஆகியவை அவ்வாறே இருக்கும் இல்லையா?. எனவே எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் இருக்கிறீர்களா? மனநிலையும்

எல்லைக்கப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். தேக அபிமானம் - எல்லைக்குட்பட்ட நிலை ஆகும், ஆத்ம அபிமானியாகுவது இது எல்லைக்கப் பாற்பட்ட நிலை ஆகும். தேக அபிமானத்தில் வந்தீர்கள் என்றால் அனேக விதமான எல்லைக்குட்பட்ட விஷயங்களில் அதாவது - நான் பெண், இது கூட எல்லைக்குட்பட்டது தான் இல்லையா?. இவ்விதமாக தேகத்தில் வருவதினால் அனேக விதமான காரியங்களின் பந்தனத்தில் எல்லைக்குட்பட்டதில் வர வேண்டியதாக ஆகிவிடுகிறது. எப்பொழுது ஆத்மா என்று புரிந்து கொள்கிறீர்களோ அப்பொழுது இந்த அனைத்து பந்தனங்களும் முடிந்து விடுகிறது. எனவே நிலையும் எல்லைக்கப்பாற்பட்டதாக அதாவது ஆத்ம அபிமானியாக இருக்க வேண்டும்.

டீச்சர்கள் என்றால், எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் இருப்பவர்கள், டீச்சர்கள் என்றால், பந்தனங்களிலிருந்து விடுபட்டு இருப்பவர்கள். எப்படி நாங்கள் கூட பந்தனங்களிலிருந்து விடுபட்டவர் தான் ஜீவன்முக்தி அடைவார் . . . . என்று கூறுகிறீர்கள், அப்படி யார் எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் இருப்பவராக இருப்பாரோ அவர் தான் பந்தனங்களிலிருந்து விடுபட்டவராக, ஜீவன்முக்த் ஆகவும் இருப்பார். எதிர்கால ஜீவன்முக்தி இல்லை, தற்சமயத்தின் ஜீவன்முக்தி. இந்த சங்கமயுக பிராமண வாழ்க்கையில் இருந்து கொண்டே வாயுமண்டலம், வைப்ரேஷன், தாழ்வான உள்உணர்வுகள், மாயாவின் தாக்குதல் இவை அனைத்திலிருந்தும் விடுபட்டவர், இதைத் தான் ஜீவன்முக்தி என்று சொல்வது. எனவே டீச்சர் என்றால் தற்சமயத்திலும் ஜீவன்முக்தி நிலையிலிருப்பவர்கள். அப்படி இருக்கிறீர்களா? டீச்சர் ஒருவரின் இலக்கணமே இது தான். டீச்சரின் டைட்டில் (பட்டம்) ஒன்றும் குறைந்தது அல்ல.

டீச்சர் ஆவது என்றால், தந்தைக்குச் சமமாக ஆவது. டீச்சர் ஆவது என்றால், தந்தையின் ஆசனத்தில் அமர்வது. எனவே யாருடைய ஆசனத்தில், நாற்காலியில், இருக்கையில் அமருவீர்களோ, அந்த இருக்கைக்கான காரியம் மற்றும் இருக்கையில் அமர்வதற்கான தகுதிகளை நடைமுறையில் கொண்டு வர வேண்டியதாக இருக்கும். எனவே டீச்சர்களுக்கு எவ்வளவு மகத்துவம் இருக்கிறது. பெயரளவில் மட்டுமின்றி காரியத்திலும் இருக்க வேண்டும். எனவே அப்படி இருக்கிறீர்களா? என்ன நினைக்கிறீர்கள்? டீச்சர்களைப் பார்த்து பாபாவிற்கு விசேஷ குஷி ஏற்படுகிறது. ஏனெனில், டீச்சர்கள் பாபாவின் நண்பர்கள். எப்பொழுது இரு நண்பர்கள் தங்களுக்குள் சந்தித்துக் கொள்கிறார்கள் என்றால் எவ்வளவு குஷி அடைகிறார்கள். அப்படி டீச்சர்கள் அனைவரைக் காட்டிலும் நெருக்கமான நண்பர்கள்

ஆவர். எனவே குஷி ஏற்படும் இல்லையா? எப்பொழுது இருவர் நண்பர்கள் ஆகிறார்கள் என்றால், எப்பொழுது இருவருமே சமமாக ஆகிறார்களோ அப்பொழுது தான். அப்படியானால் நீங்கள் சமமாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? யார் இந்த நேரம் சமமாக ஆகிறார்களோ அவர் தான் எதிர்காலத்திலும் பிரம்மா பாபாவுடன் அனைத்து வாழ்க்கையின் விசேஷமான பங்கிலும் சேர்ந்தே இருப்பார்கள். எப்படி நண்பர்கள் ஒவ்வொரு காரியத்திலும் எப்பொழுதும் சேர்ந்தே இருப்பார்கள் இல்லையா?. எனவே யார் அப்படிப்பட்ட சமமான டீச்சர் ஆகிறார்களோ அவர்கள் ஆரம்பம் தொட்டே சேர்ந்தே படிப்பார்கள், சேர்ந்தே விளையாடுவார்கள் மற்றும் பிறகு சேர்ந்தே இராஜ்யம் செய்வார்கள். அப்படிப்பட்ட சமமான டீச்சர்கள் தான் நீங்கள் இல்லையா? வாக்குறுதியும் உள்ளது சேர்ந்தே வாழ்வோம், சேர்ந்தே இறப்போம் . . . . மேலும் சேர்ந்தே இராஜ்யத்தில் வருவோம், இந்தளவு வாக்குறுதி இருக்கிறது. எனவே அந்த மாதிரி சமமான டீச்சர்களாக இருக்கிறீர்களா?

அந்த மாதிரி சமமான டீச்சர்களின் தற்சமய அடையாளமாக என்ன இருக்கும்? எப்பொழுதும் சமமாக இருக்கும் ஆத்மா இந்த நேரம் சுவமானத்தில் (சுய கௌரவத்தில்) இருப்பார். சமநிலையின் சுவமானம் நடைமுறையில் பார்க்கத் தென்படும். எப்படி தந்தை எப்பொழுதும் சுவமானத்தில் நிலைத்திருக்கிறாரோ அது போன்றே சமமான ஆத்மாக்களும் சுவமானத்தில் இருப்பார்கள். (சுவமானத்திலிருந்து) கீழே வர மாட்டார்கள். ஒவ்வொரு அடியும் சுயமானத்திற்கானதாக இருக்கும். எனவே சுவமானத்திலிருப்பவரை பார்த்த மாத்திரத்திலேயே அனைவர் வாயிலிருந்தும் இவர் சுவமானத்திலிருக்கின்ற தந்தைக்குச் சமமானவர் என்று வெளிப்படும். சுவமானம் தான் அவருடைய சிம்மாசனமாக இருக்கும். எதிர்கால சிம்மாசனத்திற்கு முன்பாக சுவமானத்தின் சிம்மாசனத்தில் எப்பொழுதும் நிரந்தரமாக இருப்பார். சிம்மாசனத்தை விட்டு கீழே இறங்கி வர மாட்டார். அந்த மாதிரி இருக்கிறீர்களா? தந்தை ஒவ்வொருவரையும் இதே உயர்ந்த பார்வையோடு தான் பார்க்கிறார். நல்லது

அனைவரும் திருப்தியாக இருக்கிறீர்களா? எங்கிருந்தாலும் அங்கு திருப்தியாக இருக்கிறீர்களா? எப்பொழுதும் திருப்தியாக இருக்க வேண்டும், இதுவும் டீச்சர்களுடைய விசேஷமான தகுதி ஆகும். டீச்சரின் முக்கியமான குணம் - எப்பொழுதும் திருப்தியாக இருப்பது மற்றும் பிறரையும் திருப்திப் படுத்துவது ஆகும். நான் திருப்தியாகத் தான் இருக்கிறேன், ஆனால் பிறரை என்னால் திருப்திப் படுத்த முடியவில்லை என்று

ஒருவேளை யாராவது கூறுவாரேயானால் இதுவும் டீச்சரின் தகுதிக்கு புறம்பானது ஆகும். டீச்சர்களின் கடமை - பிறரை திருப்திப்படுத்துவது. ஒருவேளை உங்கள் மூலமாக திருப்திப்படுத்த முடியவில்லை என்றால், யாருடைய உதவியைக் கொண்டாவது அவசியம் திருப்திப்படுத்த வேண்டும்.

டீச்சரோ எப்பொழுதும் தடைகளை அழிப்பவர் ஆகி அனேகரின் தடைகளை அழிப்பதற்கு ஆதாரமாக ஆவதற்கு பொறுப்பாளராக ஆக்கப்பட்டிருக்கிறார். யாரேனும் ஏதாவது பிரச்சனையை எடுத்து கொண்டு வரட்டும் மற்றும் சமாதான சொரூபம் ஆகிவிட்டு செல்லட்டும். அந்த மாதிரி டீச்சர்கள் இல்லையா?

கேள்வி -

பிராமண ஆத்மாக்கள் நீங்கள் விசேஷ ஆத்மாக்களின் பட்டியலில் உள்ளீர்கள், இந்த பட்டியலில் யார் வருகிறார்கள்?

பதில் -

யாரிடம் ஏதாவதொரு விசேஷத்தன்மை இருக்கிறதோ அவர் தான் விசேஷ ஆத்மாக்களின் பட்டியலில் வருகிறார். எந்த விசேஷத்தன்மையும் இல்லை என்று அந்த மாதிரி எந்தவொரு பிராமணக் குழந்தையும் இருக்க முடியாது, அனைத்திலும் பெரிய விசேஷத்தன்மையானது - தந்தையைத் தெரிந்து கொண்டு விட்டார் மற்றும் தந்தையை அடைந்து விட்டார். கோடியில் சிலர் மற்றும் அந்த சிலரிலும் சிலர் தான் தெரிந்து கொள்கின்றனர். எனவே தந்தையும் கூட இவர்கள் விசேஷ ஆத்மாக்கள் என்ற இந்தப் பார்வையோடு தான் பார்க்கிறார். விசேஷ ஆத்மாக்கள் எப்பொழுதும் குஷியின் ஊஞ்சலில் ஊஞ்சலாடிக் கொண்டே இருக்க வேண்டும். செல்லக் குழந்தை ஒருபொழுதும் மண்ணில் கால்களை வைக்காது, அது போல் நீங்கள் செல்லமான குழந்தைகள் எப்பொழுதும் தந்தையின் நினைவு என்ற மடியில் இருங்கள். அனைத்து பணிகளையும் ஆற்றிக் கொண்டே தந்தையின் மடியில் இருங்கள், கீழே வராதீர்கள். நல்லது.

வரதானம் -

எண்ணம் மற்றும் வார்த்தையின் விஸ்தாரத்தை சாரத்தில் கொண்டு வரக்கூடிய அந்தர்முகி (உள்நோக்கு முகமுடையவர்) ஆகுக.

வீண் எண்ணங்களின் விஸ்தாரத்தை உள்ளடக்கி சாரத்தில் நிலைத்து விடுவது மற்றும் வாய் மூலம் வெளிப்படும் வீண் வார்த்தைகளை உள்ளடக்கி சக்திசாலியாக அதாவது சாரத்தில் கொண்டு வருவது - இது தான் உள்நோக்குமுகம் என்பதாகும். அந்த மாதிரி உள்நோக்குமுகமுடைய குழந்தைகள் தான் அமைதியின் சக்தி மூலமாக அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு சரியான புகலிடத்தைக் காண்பிக்க முடியும். இந்த அமைதியின் சக்தி அனேக விதமான ஆன்மீக வண்ணங்களைக் காண்பிக்கிறது. அமைதியின் சக்தியின் விளைவாக ஒவ்வொரு ஆத்மாவின் மனதின் வார்த்தைகளானது, நேரெதிரில் ஒருவர் நின்று பேசுவதைப் போல் அவ்வளவு தெளிவாக கேட்கத் தோன்றும்.

சுலோகன் :

சுபாவம், சம்ஸ்காரம், சம்மந்தம், தொடர்பில் லேசாக இருப்பது என்றால் ஃபரிஷ்தா ஆவதாகும்.

ஓம் சாந்தி

### “பிராமண வாழ்க்கையின் அடையாளம் - எப்பொழுதும் குஷியின் ஜொலிப்பு”

இன்றுபாப்தாதா அனைத்து குழந்தைகளின் இறுதி நிலையை அதாவது பாவங்களை வென்ற நிலையை, தீய எண்ணம் அல்லது வீணான எண்ணத்திலிருந்து விடுபட்ட நிலையை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த இறுதி நிலை வரை வந்தடைவதற்காக முயற்சியோ அனைவரும் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் முயற்சி செய்பவர்களில் இரண்டு விதமான குழந்தைகளைப் பார்த்தோம். ஒரு வகையானவர்கள் தாங்கள் என்ன முயற்சி செய்கிறார்களோ அந்த முயற்சியின் பிராப்தியை கூடவே அனுபவம் செய்து கொண்டே சென்று கொண்டிருக்கிறார்கள். மேலும் இன்னொரு வகையானவர்கள் முயற்சி செய்வதில் மட்டும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். உழைப்பு அதிகம், பிராப்தியின் அனுபவம் குறைவாக இருக்கிறது, எனவே போகப்போக களைப்படைந்து விடுகிறார்கள். யதார்த்தமாக முயற்சி செய்பவர் ஒருபொழுதும் களைப்படைவதை உணர்வதில்லை. என்ன காரணம்? இருவர்களின் முயற்சியில் ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்வதில் மட்டும் வித்தியாசம் இருக்கிறது, அதன் காரணமாக அவர்கள் கடுமையான உழைப்பிலிருக்கிறார்கள், அடுத்தவர்கள் அன்பிலேயே மூழ்கி, மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். எந்த எண்ணத்தின் வித்தியாசம் இருக்கிறது என்பதை அறிவீர்களா? மிகச் சிறிய வித்தியாசம் தான்! முதல் வகையினர் நாங்கள் சுயம் சென்று கொண்டிருக்கிறோம், செல்ல வேண்டியதாக இருக்கிறது, எதிர்கொள்ள வேண்டியதாக இருக்கிறது என்று நினைக்கிறார்கள். மேலும் இரண்டாம் வகையினர் எப்பொழுதும் எண்ணத்திலும் கூட சமர்ப்பணம் ஆகியிருப்பவர்கள். எனவே அவர்கள் தங்களை பாப்தாதா நடத்திக் கொண்டிருக்கிறார் என்று அனுபவம் செய்கிறார்கள். அவர்கள் கஷ்டப்படும் கால்களால் நடப்பது இல்லை. ஆனால் அன்பின் மடியில் அமர்ந்து சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் அன்பின் கால் களால் நடக்கிறார்கள், அதில் களைப்படுவது இருப்பதில்லை. அன்பின் மடியில் அல்லது ஊஞ்சலில் அனைத்து பிராப்திகளின் அனுபவம் ஆகிற காரணத்தினால் அவர்கள் நடப்பதில்லை, ஆனால் பறந்து கொண்டே இருக்கிறார் கள். எப்பொழுதும் குஷியில், மனதின் சுகத்தில், அனைத்து சக்திகளினாலும் பறந்து கொண்டே இருக்கிறார்கள்.

இப்பொழுது நான் யார் என்று உங்களை நீங்களே கேளுங்கள். சங்கமயுகத்து பிராமண குழந்தைகள் ஒவ்வொரு அடியிலும் அன்பின் மடியில் வாழ்வார்கள் மற்றும் நடந்து கொள்வார்கள். பிராமண வாழ்க்கையின் அடையாளம் எப்பொழுதும் குஷியின் ஜொலிப்பு பிரத்யக்ஷமாகத் தென்படும். குஷியில்லை என்றால் பிராமண வாழ்க்கையும் இல்லை.

அனேக குழந்தைகள் சங்கமயுகம் முயற்சி செய்யும் வாழ்க்கைக்கானது மற்றும் எதிர்காலத்து ஜென்மம் பிராப்தியின் பலன் நிரம்பிய ஜென்மம் என்று நினைக்கிறார்கள். பாப்தாதாவின் உறுதிமொழியாக ஒன்றைக் கொடுங்கள் மற்றும் லட்சத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்ற வாக்குறுதி இருக்கிறது. அந்த வாக்குறுதி எதிர்காலத்திற்கானது என்று நினைக்கிறார்கள். ஆனால் இல்லை. இந்த வாக்குறுதி சங்கமயுகத்திற்காகத் தான். எப்படி அனைத்தையும் விட உயர்ந்த நேரம், அனைத்தையும் விட உயர்ந்த ஜென்மம், அனைத்தையும் விட உயர்ந்த பட்டம் இந்த நேரத்திற்கானதாக இருக்கிறதோ, அதே போல் அனைத்து பிராப்திகளின் அனுபவம், அனைத்து வாக்குறுதிகளின் பிராப்தியும் இந்த நேரம் ஏற்படுகிறது. எதிர்காலமோ இருக்கவே இருக்கிறது. ஆனால் எதிர்காலத்தை விட நிகழ்காலம் மிக உயர்ந்ததாகும். இந்த நேரம் தான் ஒரு அடி அதாவது பாபா நான் உன்னுடையவன் என்று ஒரு எண்ணத்தை குழந்தைகள் வைக்கிறார்கள். மேலும் அதற்குப் பலனாக தந்தை ஒவ்வொரு எண்ணம், சொல் மற்றும் செயலில் நான் உன்னுடையவன் அதாவது தந்தை உங்களுடையவர் என்பதை அனுபவம் செய்விக்கிறார். ஒரு எண்ணத்தின் பலனாக முழு சங்கமயுகத்தின் வாழ்க்கையில் தந்தை உங்களுடையவராகவே ஆகிவிடுகிறார். ஒன்றிற்கு லட்சம் மடங்கு மட்டும் கிடைப்பதில்லை. எப்பொழுது விரும்புகிறீர்களோ, எப்படி விரும்புகிறீர்களோ, என்ன விரும்புகிறீர்களோ அதை கொடுப்பதற்கு தந்தை சேவகன் ரூபத்தில் கட்டுப்பட்டிருக்கிறார். அப்படி ஒன்றிற்கு லட்சம் மடங்கு அல்ல, ஆனால் எண்ணிலடங்கா தடவை பலன் கிடைக்கிறது. தற்சமயத்தின் மகத்துவத்தை நடைமுறையில் சென்று கொண்டிருக்கும் போதே மறந்து விடுகிறீர்கள். இந்த சங்கமயுகத்திற்கு வரதானம் இருக்கிறது. என்ன வரம் இருக்கிறது? சுயம் வரம் அளிப்பவரே உங்களுடையவர் ஆகிவிடுகிறார். வரமளிப்பவரே உங்களுடையவர் என்றால், இன்னும் வேறு என்ன (அடைவதற்கு) பாக்கியிருக்கிறது? விதை உங்களுடைய கையில் இருக்கிறது, அந்த விதை மூலமாக ஒரு நொடியில் என்ன விரும்புகிறீர்களோ அதைப் பெற முடியும். எண்ணத்தை வைப்பதற்கான விஷயம் மட்டும் தான். சக்தி வேண்டும், சுகம் வேண்டும், ஆனந்தம் வேண்டும், இவை அனைத்துமே உங்களுக்காக பணிவோடு

ஆஜராகியிருக்கின்றன, ஏனென்றால், எஜமானனே உங்களுடையவர். எப்படி ஸ்தூல வேலைக்காரர்கள் அழைக்கும் போது ஆஜராகிவிடுகிறார்கள். அதே போல் இந்த அனைத்து பிராப்திகளும் நினைக்கும் போதேஅதாவது எண்ணத்தினால் ஆஜராகிவிடுகின்றன. ஆனால் எஜமானன் உங்களுடையவராக இருக்கிறார் என்றால், இவை அனைத்தும் ஆஜராக இருக்கும். விதை உங்களுடையது என்றால் இந்த அனைத்து பழங்களும் (பலன்களும்)

உங்களுடையவை.

ஆனால் குழந்தைகள் போகப் போகஎன்ன செய்கிறார்கள்? இரண்டு லட்டுகளை கையில் எடுக்க முயற்சி செய்கிறார்கள். எடுப்பதற்கு என்னவோ தயாராகிவிடுகிறார்கள். ஆனால் விட வேண்டிய பொருளையும் பின்பு எடுத்து விடுகிறார்கள். எனவே விஸ்தாரத்தில் செல்வதினால் சாரத்தை விட்டு விடுகிறார்கள். இடையிலிருந்து நழுவிச் சென்று விடுகிறது. இது தெரிய வருவதில்லை, எனவே பின்பு காலியாகிவிடுகிறார்கள். மேலும் தன்னை நிரப்புவதற்காக கடுமையாக உழைக்கிறார்கள், ஆனால் விதை கையை விட்டுச் சென்று விட்ட காரணத்தினால் பிரத்யக்ஷ பலனின் பிராப்தி ஏற்படுவதில்லை. எனவே களைப்படைந்து விடுகிறார்கள். எதிர்காலத் திற்காக ஆறுதலடைந்து தன்னைத் தானே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பிரத்யக்ஷ (உடனடி) பலனிற்குப் பதிலாக எதிர்கால பலன் மேல் நம்பிக்கையுள்ளவராகி நடக்கிறார்கள், எனவே குஷியின் ஜொலிப்பு எப்பொழுதும் பார்க்கத் தென்படுவதில்லை. கடின உழைப்பின் ரேகைகள் அதிகமாகத் தென்படுகின்றன, பிராப்திகளின் ரேகை குறைவாகத் தென்படுகின்றன. தியாகத்தின் உணர்தல் அதிகம் இருக்கிறது, பாக்கியத்தின் உணருதல் குறைவாக இருக்கிறது.

அப்படியானால் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? தற்சமயத்தில் யார் உங்களுடைய தொடர்பில் வருகிறார்களோ அவர்களும் அவ்வப்பொழுது. மேலும் இப்பொழுதும் கூட உங்கள் அனைவரின் தியாகம் மிகப் பெரியது என்று கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் இப்பொழுது உங்கள் அனைவரின் பாக்கியம் மிகப் பெரியது என்று கூற வேண்டும். தியாகம் அவர்களுக்குத் தென்படுகிறது. ஆனால் பாக்கியம் இதுவரையிலும் தென்படவில்லை. பாக்கியம் இப்பொழுது மறைவாக இருக்கிறது. தியாகத்தின் மகிமையை அதிகம் செய்கிறார்கள், இந்த அளவே பாக்கியத்தை மகிமை செய்தார்கள் என்றால் கூட, ஒரு நொடியில் அவர்களின் பாக்கிய கதவும் திறந்து விடும். தியாகத்தைப் பார்த்து யோசிக்கத் தொடங்கிவிடுகிறார்கள். பாக்கியத்தைப் பார்த்து அவர்களும் பாக்கியசாலி

ஆகிவிடுவார்கள். என்ன மாற்றம் செய்ய வேண்டும் என்று இப்பொழுது புரிந்து கொண்டீர்களா?

கடும் உழைப்பிலிருந்து விடுபட்டு சிநேகத்தின், அன்பின் மடியில் வந்து விடுங்கள். ஏதோ சென்று கொண்டிருக்கிறோம் என்பதில்லை. ஆனால் செல்ல வைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்றிருக்க வேண்டும். (மின்சாரம் தடைபட்டது) குழந்தைகள் இருளில் இருக்கிறார்கள் என்றால் தந்தைக்கும் குழந்தைகள் இந்த மாதிரி இருள் உலகத்தில் இருக்கிறார்கள் என்று அனுபவம் ஆக வேண்டும். இந்த நடைமுறை அனுபவம் ஏற்படுகிறது.

நல்லது. இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? எதிர்கால பலனுக்கு முன்பு பிரத்யக்ஷ பலனை (பழத்தை) அருந்துங்கள். எப்பொழுதும் எஜமானனை புத்தியில் ஆஜராக வைத்தீர்கள் என்றால், அனைத்து பிராப்திகளும் உங்கள் எதிரில் கைகட்டி 'உத்திரவு ஐயா' என்று நிற்கும். ஒருவேளை எஜமானன் ஆஜராக இருக்கிறார் என்றால் அனைத்து பிராப்திகளும் காந்தத்தைப் போன்று அவைகளாகவே ஈர்க்கப்பட்டு வரும். புரிந்ததா? பாப்தாதா குழந்தைகளின் கடுமையான உழைப்பைப் பார்த்து சகித்துக் கொள்ள முடிவதில்லை. நீங்கள் அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்கள்! நேரடி விதையிலிருந்து வெளியான தண்டு சொரூப குழந்தைகள் நீங்கள். அந்த மாதிரி உயர்ந்த குழந்தைகளுக்கு அனைத்து பிராப்திகளின் சகஜ அனுபவிகளாக ஆக வேண்டும். நல்லது.

அப்படி அனைத்து சகஜ பிராப்தி செய்பவர், எப்பொழுதும் கடலுக்குச் சமமாக அனைத்திலும் நிரம்பியவர், எப்பொழுதும் விதையை தன்னுடன் வைத்துக் கொள்பவர், விதை ரூப நிலையில் நிலைத்திருப்பவர், பாவங்களை வென்ற, தீய எண்ணங்களை வென்ற நிலை என்ற அந்த மாதிரி லட்சியத்தை அடையக்கூடிய எப்பொழுதும் நிச்சயபுத்தி உடைய மற்றும் கவலையின்றி இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் இனிமையான சந்திப்பு,

## நேபாளம்

அனைவரும் வெகு தொலைதூரத்திலிருந்து அன்பின் ஆதாரத்தில் இழுக்கப்பட்டு வந்து விட்டார்கள். எப்படி குழந்தைகள் அன்பின் கயிறால் கட்டப்பட்டு தன்னுடைய வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டார்கள். அதே போல் தந்தையும் அந்த அளவு குழந்தைகளின் அன்பிற்கு பிரதிபலன் கொடுக்கிறார். அன்பிற்கான பிரதிபலன் என்ன? அன்பிற்கான பிரதிபலன் எப்பொழுதும் களைப்பற்றவர், எப்பொழுதும் வெற்றி அடைபவர் ஆகுக என்ற வரதானம் தான். எப்பொழுதாவது மாயா வருகிறது என்றால், இந்த இடம், இந்த நாள், இந்த நேரம், இந்த தந்தையின் வரதானம் ஆகியவற்றை நினைவு வைத்தீர்கள் என்றால் வரதானம் மூலமாக மாயா மூர்ச்சையாகிவிடும். உங்களின் தேசத்திலும் அந்த மாதிரி மந்திரம் தந்திரம் செய்கிறார்கள் இல்லையா? எனவே நீங்களும் இந்த மந்திர தந்திரம் மூலமாக மாயாவை மூர்ச்சையாக்கிவிடுங்கள். தந்தை குழந்தைகளுக்கு பிறந்தவுடனேயே என்ன வரதானம் கொடுத்திருக்கிறார்? அமர்நாத் தந்தையின் முதல் வரதானம்: குழந்தைகளே அமரர் ஆகுக ! நீங்கள் அனைவரும் அமர்நாத் கதை கேட்பவர்கள் தான் இல்லையா? நம் அனைவரின் நினைவுச்சின்னம் இன்று நாள் வரை இருந்து கொண்டிருக்கிறது என்று நம் அனைவருக்கும் குஷி ஏற்படுகிறது. சென்ற கல்பத்தின் நினைவுச்சின்னத்தை இப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அமர்நாத்தில் உங்களுடைய நினைவுச் சின்னம் தான். ஒவ்வொரு குழந்தையையும் எவ்வளவு மகிமை செய்வது. எவ்வளவு நீங்கள் அனைவரும் துவாபரயுகத்திலிருந்து தந்தையின் மகிமை பாடினீர்கள் அந்த அளவு தந்தை இப்பொழுது குழந்தைகள் உங்களின் மகிமைகளைப் பாடுகிறார். தினசரி புதுப்பட்டம் கொடுக்கிறார் என்றால் மகிமையாக ஆனது இல்லையா? நீங்கள் மிக மிக அதிர்ஷ்டசாலிகள் எந்த அளவு உலகத்தினர் பெண்களை எட்டி உதைத்தார்களோ அந்த அளவு தந்தை வீரம் நிரம்பியவர்களாக ஆக்கிவிட்டார். எனவே மாதர்களுக்கு இப்பொழுது மிகுந்த குஷி இருக்க வேண்டும். மிகவும் குஷியோடு செல்வதினால் களைப்பு அனுபவம் ஆகாது.

ஒவ்வொரு பிராமண குழந்தைகளின் வீட்டில் தந்தையின் நினைவுச்சின்னம் (கீதா பாடசாலை) அவசியம் இருக்க வேண்டும். எப்படி ஒவ்வொரு வீட்டிலும் இராஜா இராணியின் புகைப்படத்தை வைக்கிறார்கள் இல்லையா? அப்படி பிராமணர்களின் வீட்டில் இந்த விசேஷ நினைவுச்சின்னம் இருக்க வேண்டும். யார் வந்தாலும் அவருக்கு தந்தையின் அறிமுகம் கொடுத்துக் கொண்டே இருங்கள். நல்லது.

## அசாம்-

அசாமைச் சேர்ந்தவர்களோ மிகப்பெரிய ஆசாமியாக இருப்பார்கள். பெரிய மனிதர்களை பெரிய ஆசாமி என்று கூறுவார்கள். அப்படி பெரியதிலும் பெரியவர்கள் நீங்கள் பெரிய ஆசாமி ஆவீர்கள். வெளியுலகத்தினர் யார் யார் பெரியவர்கள் என்று செய்தித் தாள்களில் போடுகிறார்கள். ஹு இஸ் ஹு? நீங்களோ பல ஜென்மங்களுக்காக பூஜைக்குரியவர் ஆகிறீர்கள். அவர்களோ இன்று ஹு இஸ் ஹு என்ற பட்டியலில் இருக்கிறார்கள். நாளை சாதாரண பிரஜையின் பட்டியலில் இருப்பார்கள். நீங்கள் நிரந்தரமாக இந்தப் பட்டியலில் இருக்கிறீர்கள். நீங்கள் நிரந்தரமான பூஜைக்குரியவர்கள். அரைக்கல்பம் சைத்தன்யத்தில் பூஜைக்குரிய ரூபத்தில் இருக்கிறீர்கள், அரைக் கல்பம் ஜட விக்கிரகங்களின் ரூபத்தில் பூஜை செய்யப்படுகிறீர்கள். அப்படி முழுக் கல்பத்திலும் ஹு இஸ் ஹு வாக ஆனீர்கள். நாம் மிகப் பெரிய மனிதர்கள் என்று அந்த மாதிரி போதைஇருக்கிறதா? எந்த விதமான பிரச்சனையும் உங்களை பலஹீனமாக ஆக்கிவிடவில்லை தானே? மாவீரர்களாக இருக்கிறீர்களா? பாப்தாதாவும் சென்ற கல்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் எப்படி தன்னுடைய பாக்கியத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்து குஷி அடைகிறார். ஒவ்வொரு கல்பத்திலும் அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள் நீங்கள். அந்த மாதிரி அதிர்ஷ்டம் ஒருபொழுதும் யாருக்கும் உருவாகவும் முடியாது. எனவே இந்த போதை மற்றும் குஷி நிரந்தரமாக இருக்கட்டும்.

## பீகார்

எப்பொழுதும் வசந்தத்தில் (பஹார்) இருப்பவர்கள் பீகாரைச் சேர்ந்தவர்கள். மேலே இருந்து அவதரித்து சாகார உலகத்தில் சேவைக்காக வந்திருக்கிறோம் என்று எப்பொழுதும் தன்னை அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? அவதாரமாக யார் இருப்பார்களோ அவர்களுக்கு என்ன நினைவு இருக்கும்? எந்தக் காரியத்திற்காக அவதரித்து இருக்கிறார்களோ அதே காரியம் நினைவிலிருக்கும். அவதாரங்கள் வருவதே ஏதாவது மகான் காரியம் செய்வதற்காகத் தான். அப்படி நீங்களும் எதற்காக அவதரித்திருக்கிறீர்கள்? உலக மாற்றக் காரியத்திற்காக. அப்படியானால் அது நிரந்தரமாக நினைவில் இருக்கிறதா? எங்கே இருந்தாலும் உங்களுடைய மூல காரியம் உலக மாற்றத்திற்கானது. நீங்கள் என்ன தொழில் செய்தாலும், வீட்டு வேலை செய்தாலும் ஆனால் என்ன நினைவு இருக்க வேண்டும் - பரிவாரமா, பரிவர்த்தனையா? பரிவாரத்தில் இருக்கிறீர்கள் என்றால் என்ன

லட்சியத்தோடு இருக்கிறீர்கள்? இவர்களையும் பரிவர்த்தனை (மாற்றம்) செய்ய வேண்டும் என்ற இந்த லட்சியம் தான் இருக்கிறது இல்லையா. குடும்பஸ்தனாகி இல்லாமல் சேவாதாரி ஆகி இருக்கிறீர்கள். சேவாதாரிக்கு சேவைதான் நினைவிருக்கும். மற்ற அனைத்து வேலைகளும் நிமித்த மாத்திரம் தான். உண்மையான காரியம் உலக மாற்றத்திற்கான காரியம் ஆகும். யார் முதலில் தன்னை பரிவர்த்தனை செய்கிறாரோ அவர் தான் விஷ்வ பரிவர்த்தனை செய்ய முடியும். முதலில் தான் உதாரணமாக ஆக வேண்டியதிருக்கிறது, பிறகு உங்களைப் பார்த்து அனைவரும் செய்யத் தொடங்குவார்கள். அப்படி சுயபரிவர்த்தனை செய்து விட்டீர்கள் தான் இல்லையா? மேலும் இன்னும் கொஞ்சம் நேரம் மிச்சம் இருக்கிறது, அது எதற்காக இருக்கிறது? சேவைக்காக. மற்றவர்களுக்கு சேவை செய்தால் தன்னுடைய சேவையும் ஆகியேவிடும். நான் ஒரு அவதாரம் ஆவேன் என்ற நினைவு இருந்தது என்றால் எப்படி நினைவிருக்குமோ அப்படியே காரியம் இருக்கும். அப்படி பீகாரைச் சேர்ந்தவர்கள் வசந்த (பஹாரி) காலத்தைக் கொண்டு வருபவர்கள். இன்றைய நாட்களிலோ தேசத்தின் நிலைமையோ என்னவாக இருக்கிறது? சில இடங்களில் வறட்சி, சில இடங்களில் வெள்ளம், ஆனால் நீங்கள் என்ன செய்வீர்கள்? எப்பொழுதும் வசந்தத்தை கொண்டு வருவீர்கள். உங்களுடைய அந்த மாதிரி காரியத்தைப் பார்த்து அனைவரும் உங்களை ஆசீர்வாதம் செய்வார்கள், அனைவரும் நமஸ்காரம் செய்ய வருவார்கள். இப்பொழுதோ சிலர் திட்டவும் செய்கிறார்கள். ஏனென்றால் குப்தமாக (மறைவாக) இருக்கிறீர்கள் இல்லையா. எப்பொழுது பிரத்யக்ஷம் ஆவீர்களோ அப்பொழுது அனைவரும் நமஸ்காரம் செய்வதற்காக வருவார்கள். எவ்வளவு தீய வார்த்தைகளால் திட்டுவார்களோ அந்த அளவு பின்பு மலர் தூவுவார்கள். ஒரு திட்டுதலுக்கு பதிலாக எத்தனை தடவை மலர்களின் மாலையை அணிவிக்க வேண்டியதாக இருக்கும். எப்படி தந்தை மிகுந்த திட்டு வாங்கினார் என்றால் பூஜையும் அந்த அளவே இருக்கிறது தான் இல்லையா. அப்படி எவ்வளவு திட்டு வாங்குவீர்களோ அந்த அளவு பெரிய பூஜைக்குரியவர் ஆவீர்கள். எனவே பயப்படாதீர்கள். மாலைகள் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

## வங்காளம் கல்கத்தா -

கல்கத்தா நிவாசிகள் என்ன திட்டத்தை உருவாக்கி கொண்டிருக்கிறீர்கள்? மேளாக்களோ (பெரிய நிகழ்ச்சி) அதிகம் செய்திருக்கிறீர்கள். இப்பொழுது என்ன யோசித்திருக்கிறீர்கள்? இப்பொழுது ஒவ்வொரு வருடமும் ஏதாவது புதுத் திட்டம் உருவாக வேண்டும். கல்கத்தா பக்தி மார்க்கத்திலும் பிரபலமானது. அங்கே உள்ள விசேஷம் பலி கொடுப்பது. எப்படி

பக்தி மார்க்கத்தில் பலி கொடுப்பது பிரபலமாக இருக்கிறது. அதே போல் ஞானத்தில் மகாபலி கொடுப்பவர்கள் அதிகம் இருப்பார்கள் இல்லையா. ஒரு பக்கம் பக்தியின் சக்தி, இன்னொரு பக்கம் ஞானத்தின் சக்தி. மேளாவின் கூடவே இப்பொழுது வேறு ஏதாவது விதியைக் கடைப்பிடியுங்கள். கல்கத்தா எவ்வளவு பெரியது, அதே போலவே பெரிய அளவில் சப்தம் எழ வேண்டும். பாபா இருந்த பீடம், பழைய ஸ்தானம் (வியாபாரம் செய்த) ஆகும். மேலும் ஏதாவது வலுவான ஓசை எழுப்புங்கள். நல்லது. ஒவ்வொருவரும் தினசரி தன்னை சோதனைசெய்து அதிவேகத்தை அடைந்து கொண்டிருக கிறீர்களா? சங்கமயுகத்தில் தான் முன்னேறும் கலைக்கான வாய்ப்பு இருக்கிறது. தினசரி தன்னை சோதனைசெய்யுங்கள். சென்று கொண்டிருக்கிறோம் என்று அப்படி மட்டும் அல்ல, ஆனால் எந்த வேகத்தில் சென்று கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு வருமானத்தை சேமிப்பு செய்து பல கோடி மடங்கு பாக்கியசாலி ஆகுங்கள். எனவே இப்பொழுது சாதாரண சோதனையன்றி மிக நுணுக்கமான சோதனைவேண்டும்.

இந்த மர்ஜீவா (மறுபிறவி) வாழ்க்கையே பிரத்யக்ஷ பலனை அடைவதற்காகத் தான், செய்தீர்கள் மற்றும் பிராப்தி ஆனது. இப்பொழுது கடும் உழைப்பிற்கு அவசியம் இல்லை, பழம் அருந்துவதற்கான நேரம். அதீந்திரிய சுகத்தில் இருப்பதற்கான நேரம். அப்படி அதீந்திரிய சுகத்தின் ஊஞ்சலில் எப்பொழுதும் ஆடக் கூடியவர்கள் தான் இல்லையா? யார் இப்பொழுது இந்த ஊஞ்சலில் எப்பொழுதும் ஆடிக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் தான் ஸ்ரீகிருஷ்ணருடன் உடனும் ஆடுவர். அந்த மாதிரி முயற்சி உள்ளது தான் இல்லையா. இதைத் தான் தீவிரமான முயற்சி என்று சொல்வது.

தமிழ்நாடு -

சங்கமயுகத்தில் தந்தை மூலமாக என்ன பொக்கிஷங்கள் கிடைத்திருக்கின்றனவோ அந்த அனைத்து பொக்கிஷங்களை நல்ல முறையில் சேமிப்பு செய்தீர்களா? மாயா பொக்கிஷத்தை கொள்ளை அடித்து விடவில்லையே? இரட்டை பூட்டு போட்டு விடுங்கள் என்று ஏற்கனவே கூறியிருக்கிறோம். ஒன்று தந்தையின் நினைவு மற்றும் இன்னொன்று சேவை. இந்த இரட்டை பூட்டு போடுவதினால் ஒருபொழுதும் மாயா பொக்கிஷத்தை கொள்ளையடிக்க முடியாது. எப்பொழுதும் நிரம்பியிருப்பீர்கள். அமிர்தவேளையில் தனக்கு மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற திலகம் இடுங்கள். முழு நாளும் திலகமிட்டவராக இருப்பதினால் ஒருபொழுதும் மாயா தாக்காது. திலகம் உங்களுடைய வெற்றியின்

அடையாளம். அமிர்தவேளை வரதானங்களுக்கான நேரம், எவ்வளவு அமிர்தவேளையின் மகத்துவம் வைப்பீர்களோ அந்த அளவு மகான் ஆவீர்கள். நல்லது.

வரதானம் :

ஸ்ரீமத் மூலம் மனம் சொல்லும் வழி மேலும் மற்றவர்கள் சொல்லும் வழியின் கலப்படத்தை அகற்றக்கூடிய, உண்மையான தனக்கு நன்மை செய்பவர் ஆகுக.

தந்தை குழந்தைகளுக்கு அனைத்து பொக்கிஷங்களையும் சுயநன்மை மற்றும் உலக நன்மைக்காக கொடுத்திருக்கிறார். ஆனால் அவற்றை வீணான பக்கம் ஈடுபடுத்துவது, நன்மையற்ற காரியத்தில் ஈடுபடுத்துவது, ஸ்ரீமத்தில் மனம் சொல்லும் வழி மற்றும் மற்றவர்கள் சொல்லும் வழியைக் கலப்படம் செய்வது என்பதானது நம்பிக்கை விசுவாசத்துடன் கொடுக்கப்பட்ட அடமானப் பொருளை மோசடியாக கவர்ந்து கொள்வதாகும். இப்பொழுது இந்த ஏமாற்று வேலை மற்றும் கலப்படத்தை முடிவு கட்டி ஆன்மீகத் தன்மை மற்றும் இரக்க குணத்தை தாரணை செய்யுங்கள். தன் மேல் மற்றும் அனைவரின் மேல் இரக்கம் காட்டி சுய நன்மை செய்பவர் ஆகுங்கள். தன்னைப் பாருங்கள், தந்தையைப் பாருங்கள், மற்றவர்களை பார்க்காதீர்கள்.

சுலோகன் :

யார் எங்கேயும் ஈர்க்கப்படுவதில்லையோ அவர் தான் மகிழ்ச்சி நிறைந்து இருக்க முடியும்

ஓம் சாந்தி

" எல்லைக்கப்பாற்பட்ட வானபிரஸ்தி (சப்தத்திலிருந்து விலகிய நிலை) என்றால் நிரந்தரமாக ஏகாந்தத்தில் எப்பொழுதும் நினைவு சொரூபமாக இருப்பது "

இன்று பாப்தாதா அனைத்து குழந்தைகளின் பாக்கியத்தை மகிமைப் பாடிக் கொண்டிருந்தார். தந்தை குழந்தைகளின் உயர்ந்த பாக்கிய ரேகைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். உயர்ந்த பாக்கியத்தின் ரேகைகளில் முக்கியமாக என்னென்ன விஷயங்கள் பார்க்கப்படுகிறது. அதைத் தெரிந்திருக்கிறீர்களா? முக்கியமான விஷயம் நாள் மற்றும் கிழமை, நேரம், முக்கியமான கிரகம், குலம், தர்மம் மற்றும் செல்வம், சம்மந்தம் மற்றும் பதவியை பார்க்கப்படுகிறது. இந்த அனைத்து விஷயங்களினால் ஒருவரின் பாக்கியத்தை பார்க்கிறார்கள்.

நீங்கள் அனைவரும் இந்த அனைத்து விஷயங்களை நன்றாகத் தெரிந்திருக்கிறீர்களா? உங்கள் அனைவரின் கிழமை எது? இன்று வரையிலும் தன்னுடைய பாக்கியத்தை பிறந்த நாளினால் அல்லது இராசி மூலம் பார்க்கிறார்கள், அப்படி உங்கள் அனைவரின் ராசி மற்றும் தேதி எது? உங்களுடைய பிறந்த தேதி எது? நீங்கள் அனைவரும் எப்பொழுது அவதரித்திருக்கிறீர்கள்? பிராமணர்கள் எப்பொழுது அவதரித்திருக்கிறார்கள். எது தந்தையின் அவதாரத்தின் தேதியோஅது தான் உங்களுடையதும். பிரம்மாவையும் சேர்த்து பிராமணர்களும் பிறந்தார்கள். அப்படி யார் ஆதிரத்தினமாக இருக்கிறாரோ அவருடைய தேதியை எது என்று கூறுவோம்? தந்தையின் அவதரனத்தின் தேதி தான் ஆதிரத்தினங்களின் பிறந்த தேதி ஆகும். நேரம் எது? இந்த சங்கமயுகம் பிரம்மா முகூர்த்தத்தின் நேரம் ஆகும். அப்படி அனைவரின் பிறந்த நேரம் பிரம்ம முகூர்த்தம் ஆகும், மேலும் ராசி எது? உலகில் ராசிகளையோ விதவிதமான விதத்தில் காண்பித்திருக்கிறார்கள். ஆனால் உங்கள் அனைவரின் ராசி எது? தந்தையின் ராசியாக உலகிற்கு நன்மை செய்பவர் என்பதிருக்கிறது. அதுவே தான் உங்கள் அனைவரின் ராசி ஆகும். இந்த ராசியில் தந்தைக்குச் சமமான அனைத்து குணங்களும் நிரம்பியிருக்கிறது. மேலும் தசை கூட குருவாரத்தின் தசை ஆகும். குலம் கூட அனைத்தையும் விட

உயர்ந்ததாகும். நேரடியாக ஈஸ்வரனின் குலத்தைச் சேர்ந்தவர்கள் நீங்கள், அப்படி உங்களுடையது ஈஸ்வரிய குலம் ஆகும். பதவி மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகும். செல்வம் குறைவில்லாதது மற்றும் அழியாத செல்வம் ஆகும். தர்மம் உயர்ந்த பிராமண தர்மத்தைச் சேர்ந்தவர்கள். புத்தியின் கோடு விசாலமானதாக மற்றும் மூன்று காலங்களையும் தெரிந்த கோடு ஆகும். இப்பொழுது யோசியுங்கள் பாக்கியத்தின் ரேகைகள் வேறு யாருக்காவது இதை விட அதிக உயர்ந்ததாக இருக்க முடியுமா? கர்ம ரேகையில் நிரந்தர கர்ம யோகி சகஜ யோகி, இராஜ யோகி என்ற இந்த ரேகைகளை தந்தை தெளிவாக கிழித்திருக்கிறார். பாக்கியத்தின் நட்சத்திரத்தில் கிரீடம் மற்றும் ஆசனம் தென்படுகிறது. இதைவிட உயர்ந்த பாக்கியம் வேறு என்ன இருக்கும்?

இன்று பாப்தாதா அனைத்து குழந்தைகளின் பாக்கியத்தை பார்த்துக் கொண்டிருந்தார். எப்படி தந்தை அனைவரின் பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். அதே போல் நீங்கள் அனைவரும் தன்னுடைய பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறீர்களா? சின்னச்சின்ன விஷயங்கள் என்னவாக இருக்கின்றன? எப்படி பக்தர்களிடம் இந்த பூஜை ஆகியவை பொம்மைகளின் பூஜை, பொம்மை விளையாட்டு செய்கிறீர்கள் என்று கூறுகிறீர்கள். அதே போலவேமாஸ்டர் பாக்கியத்தை உருவாக்கும் குழந்தையும் இந்த சின்னச் சின்ன விஷயங்களின் பொம்மை விளையாட்டை அதிகமாக செய்கிறார்கள். உண்மையான விஷயம் இல்லை ஆனால் கணக்கு வழக்கு முடிவடைவதற்காக மற்றும் தாரணைகளை சோதிப்பதற்காக மற்றும் தன்னுடைய நிலை சோதிக்கப்படுவதற்காக வாழ்க்கையில் இந்த விஷயங்கள் புதுப்புது ரூபத்தில் வந்து கொண்டே இருக்கின்றன. உயிரற்ற விஷயங்கள், சாரமற்ற விஷயங்கள். ஆனால் எப்பொழுது எதிரில் வருகிறது என்றால் எப்படி அந்த ஜட மூர்த்திக்கு உயிரூட்டி விடுகிறார்கள் மேலும் அந்த அளவு விஸ்தாரமாக்கிவிடுகிறார்கள், அதே போல் நீங்கள் அனைவரும் சில நேரம் பொறாமை என்ற பொம்மை, சில நேரம் யூகிப்பதின் பொம்மை, சில நேரம் அனுமானம் செய்வதின் பொம்மை, சில நேரம் ஆவேசத்தின் பொம்மை, சில நேரம் அடக்கி ஆளும் பொம்மை அதாவது மூர்த்தியை உருவாக்கி விஷயம் என்ற பொம்மைகளை அதற்கேற்றபடி உயிரூட்டி விடுகிறீர்கள். இது சத்தியம் என்று அனுபவம் செய்கிறீர்கள் மேலும் செய்விக்கிறீர்கள். இந்த விஷயம் தான் சரி என்று உயிரூட்டி விடுகிறீர்கள். மேலும் இன்னும் என்ன செய்கிறீர்கள்? உங்களிடம் மூழ்கிவிடு, மூழ்கிவிடு என்ற பாடலை தயாரித்திருக்கிறீர்கள் இல்லையா. அப்படி என்ன செய்கிறீர்கள்? அதே விஷயம் என்ற மூர்த்தியை முந்தைய காலங்களின் நினைவுகள் மூலம் மிக அதிகமாக அலங்காரம்

செய்கிறீர்கள். இதுவோ நடக்கத்தான் செய்யும், இதுவோ அனைவரிலும் இருக்கிறது. நாடகத்தின் அனுசாரம் முயற்சி செய்பவர்களாக இருக்கிறார்கள். கர்மாதீத் நிலையையோ இறுதியில் தான் அடைய வேண்டும். இந்த விதமான ஞானத்தின் வகை வகையான விஷயங்களின் போக் (பிரசாதம்) தினசரி அர்ப்பணித்து அர்ப்பணித்து வலிமையானதாக, உறுதியானதாக ஆக்கிவிடுகிறீர்கள். முதலில் வேகாத உணவின் போகை அர்ப்பணிக்கிறீர்கள், பிறகு உறுதி செய்து விடுகிறீர்கள். பிறகு அந்த விஷயங்களை அதாவது போகை தனியாக மட்டும் அருந்துவதில்லை, தன்னுடன் வழிகாட்டிகள், குடும்பத்தினரையும் அமர்த்துகிறீர்கள் அதாவது இன்னும் பரிவாரத்தின் உறுப்பினராக ஆக்குகிறீர்ள். அவருடைய புத்திக்கும் இந்த போஜனத்தை ஸ்வீகாரம் செய்விக்கிறீர்கள். ஆனால் இறுதியில் என்ன செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஞானக்கடல், தந்தையின் நினைவு, கடந்ததை கடந்ததாக்கி ஞானக் கடலின் அலைகளில், சுயமுன்னேற்றத்தின் அலையில், உயரே தாண்டுதல் செய்வதின் அலையில் நினைவு சொரூபத்தின் நினைவின் அலையில், மாஸ்டர் ஞானம் நிறைந்த சொரூபத்தின் அலையில், இந்த அனேக அலைகளின் மத்தியில் இந்த பொம்மைகளை மற்றும் சிலைகளை மூழ்கடிக்கவே வேண்டியதாக இருக்கிறது. ஆனால் இவ்வளவு முழு நேரத்தை என்னவென்று சொல்வது. இந்த முழு பொம்மைகளின் விளையாட்டை எப்படி பக்தர்களுக்கு நேரம், பணம் வீணாகிறது என்று கூறுகிறீர்கள், அதே போலவேசங்கமயுகத்தின் மிக உயர்ந்த நேரம் மற்றும் ஞானம் மேலும் சக்திகளின் பொக்கிஷத்தை அந்த அளவு வீணாக்கிவிடுகிறீர்கள். அப்படி இந்த சின்னச் சின்ன விஷயங்கள் என்ன ஆகின? பொம்மைகளின் விளையாட்டு ஆகின. இந்த விளையாட்டில் ஒருபொழுதும் தன்னை சோம்பல் உள்ளவராக ஆக்காதீர்கள். எப்பொழுதும் தன்னுடைய உயர்ந்த பாக்கியத்தை பாருங்கள்.

தற்சமயத்தின் பிரகாரம் நீங்கள் இப்பொழுது வானபிரஸ்தி நிலையின் அருகில் இருக்கிறீர்கள். வானபிரஸ்திகள் பொம்மைகளின் விளையாட்டை விளையாட மாட்டார்கள். வானபிரஸ்தி ஏகாந்தம் மற்றும் நினைவிலிருப்பார்கள். அப்படி நீங்கள் அனைவரும் எல்லைக்கப்பாற்பட்ட வானபிரஸ்திகள் எப்பொழுதும் ஒருவரின் (நினைவின்) அந்தத்தில் அதாவது நிரந்தர ஏகாந்தத்தின் எப்பொழுதும் நினைவு சொரூபமாக இருங்கள். இது தான் எல்லைக்கப்பாற்பட்ட வானபிரஸ்தியின் நிலை (பாப்தாதா மூன்று நிமிடங்கள் டிரில் செய்வித்தார்). இந்த நிலை பிடித்திருக்கவில்லையா? எந்தவொன்று மனதிற்கு பிடித்திருக்குமோ அதுவோ எப்பொழுதும் நினைவிலிருக்கும். இப்பொழுது தந்தை மற்றும் நீங்கள் என்ன விரும்புகிறீர்கள்? ஒரே ஒரு விஷயத்தைத் தான் விரும்புகிறீர்கள் - தந்தை

மற்றும் குழந்தைகள் சமமாகிவிட வேண்டும். எப்பொழுதுமே நினைவிலேயே மூழ்கியிருந்து விட வேண்டும். மூழ்கியிருக்க விரும்பவில்லையா. சமமாக ஆவது தான் மூழ்கியிருப்பது. தந்தை என்ன விரும்புகிறார் மேலும் நீங்கள் என்ன விரும்புகிறீர்கள் என்று புரிந்ததா?

இந்த சீசன், சொரூபத்தை பார்ப்பதற்கானதா அல்லது கேட்பதற்கு மட்டுமானதா? கேட்க மட்டும் செய்வீர்கள் என்றால் காலம் என்ன குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறது? பக்தர்கள் என்ன கூக்குரல் கொடுக்கிறார்கள். துக்கமான அமைதியற்ற ஆத்மாக்கள் என்ன கேட்கிறார்கள்? மத தலைவர்கள் விஞ்ஞானிகள் அரசியல் தலைவர்கள் என்ன கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இயற்கையும் கூட என்ன குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறது? அனைவரின் குரல் - ஹே உபகாரி ஆத்மாக்களே (எங்களுடைய குரல்) கேட்கிறதா? அல்லது பொம்மை விளையாட்டிலேயே பிஸியாக இருக்கிறீர்களா? நல்லது. பின்பு அனைவரின் கூக்குரல்களை கூறுவோம். நீங்கள் அனைவரும் கூட நாளை அமிர்தவேளையில் கேளுங்கள்.

எப்பொழுதும் பாக்கியத்தை நினைத்துக் கொண்டிருக்கும், எப்பொழுதும் தந்தைக்குச் சமமான, நினைவில் மூழ்கியிருந்த நிரந்தர ஏகாந்தவாசிகளுக்கு, ஒவ்வொரு நேரத்தையும் பயனுள்ளதாக ஆக்கக்கூடிய வெற்றி மூர்த்தி, பக்தியின் விளையாட்டை முடித்து மாஸ்டர் ஞானக்கடல் சொரூபம், நினைவு மற்றும் சக்தி நிறைந்த சொரூபம் உள்ள அந்த மாதிரி பல கோடி மடங்கு பாக்கியசாலி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

### பார்ட்டிகளுடன் சந்திப்பு

மைசூர் - நீங்கள் அனைவரும் தன்னை மிக உயர்ந்த ஆத்மாக்கள் என்று அனுபவம் செய்கிறீர்களா? நீங்கள் எவ்வளவு உயர்ந்த ஆத்மாக்கள். குழந்தைகள் உங்களை சந்திப்பதற்காக சுயம் தந்தை, தன்னுடைய உலகத்தை விட்டு விட்டு வருகிறார். அரைக்கல்பமாக உங்களுடைய உலகத்தை விட்டு விட்டு வந்து விடுங்கள் என்று பாடினீர்கள். ஆனால் எப்பொழுது மற்றும் எப்படி கிடைப்பார் என்று தெரியாமல் இருந்தது. காத்திருத்தலில் மட்டும் நாட்கள் கழிந்தன. இப்பொழுது காத்திருப்பது முடிவடைந்தது.

மேலும் நேரெதிரில் சந்திப்பு செய்து கொண்டிருக்கிறீர்கள். இந்த மாதிரி உயர்ந்த பாக்கியம் வேறு யாருக்காவது இருக்குமா? பகவானோடு பேசுவோம் என்று கனவில் கூட அந்த மாதிரி நினைத்திருக்கமாட்டீர்கள். இனிப்பு (டோலி) அருந்துவோம் (அவருடன்) அமர்வோம், மேலும் அனைத்தையும் நடைமுறையில் அனுபவம் செய்து கொண்எப்பொழுது குஷி இருக்குமோ அப்பொழுது எந்தவொரு களைப்பும் மற்றும் கடினமும் அனுபவம் ஆவதில்லை. பயணத்தின் நான்கு நாட்களும் எப்பொழுது சந்திப்போம், எப்பொழுது சென்றடைவோம் என்று நிரந்தர யோகியின் நிலை இருந்திருக்கும். இது கூட சம்பாத்தியமாக ஆனது தான் இல்லையா. பிராமணன் ஆவது என்றால் ஒவ்வொரு அடியிலும் சம்பாத்தியம். கடினமும் இல்லை. ஆனால் எப்படி ரோஜாமலருடன், முள்ளும் இருக்கிறது அந்த முள் அதற்கான பாதுகாப்பு சாதனம் ஆகும். அப்படி இந்த சிரமங்கள் இன்னும் தந்தையின் நினைவூட்டுவதற்கு காரணம் ஆகிவிடுகின்றன. ஏதாவது விதமான துக்கம் எப்பொழுது ஏற்படுகிறதோ அப்பொழுது நாஸ்திகனின் வாயிலிருந்தும் 'ஹே பகவான்' என்ற வார்த்தை வெளியாகிறது. அப்படி துக்கம் கூட நினைவூட்டுவதற்கான சாதனம் ஆனது இல்லையா. சங்கமயுகத்தில் எந்த கஷ்டமும் இருக்க முடியாது. இந்த நேரம் குழந்தைகள் நீங்கள் தந்தையின் அனைத்து பொக்கிஷங்களின் அதிகாரி ஆவீர்கள். தந்தையின் பொக்கிஷமாக என்ன இருக்கிறது? சுகம், சாந்தி, ஆனந்தம், அன்பு - இவை தானே பொக்கிஷங்கள் இல்லையா. அப்படி இவற்றின் அதிகாரியாக இருந்து மேலும் குஷியாக இருக்கவில்லை என்ற இது எப்படி இருக்க முடியும்? அமிர்தவேளையில் நான் இந்த பொக்கிஷங்களின் அதிகாரி ஆவேன் என்ற நினைவு திலகத்தை இட்டு கொள்ளுங்கள். ஒருவேளை திலகம் இடப்பட்டிருக்கிறது என்றால் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். திலகத்தை அழிக்க விடாதீர்கள். மாயா எவ்வளவு தான் அழிப்பதற்கு முயற்சி செய்தாலும் ஆனால் அழிக்கவில்லை என்றால் எப்பொழுதும் 'அழியாதவர் ஆகுக' என்ற வரதானம் கிடைத்துக் கொண்டே இருக்கும். வெள்ளி விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் பொற்காலத்தின் நிலையிலிருந்து வெள்ளி விழா கொண்டாடுங்கள். நல்ல தைரியம் வைத்திருக்கிறீர்கள் ரிசல்ட் கூட நன்றாக இருக்கிறது. நல்ல வயது முதிர்ந்த, அனுபவி மற்றும் கடுமையாக உழைக்கும் குழந்தைகள். உங்களுக்காக நல்ல சான்றிதழ் இருக்கிறது.

### வெளிநாட்டு சகோதரசகோதரிகளுடன் -

எப்படி ஸ்தூலமான தேசத்தின் கணக்குப்படி நீங்கள் அனைவரும் வெளிநாட்டினராக இருக்கிறீர்கள். அதே போலவேஆத்மா ரூபத்தில் கூட தன்னை எப்பொழுதும் வெளிநாடு

அதாவது பரம்தாமத்து நிவாசி என்று புரிந்து நடந்து கொள்கிறீர்களா? நான் ஆத்மா பரந்தாமத்திலிருந்து உலக நன்மை காரியம் செய்வதற்காக அவதரித்திருக்கிறேன் என்ற இந்த அனுபவம் எப்பொழுதுமே இருக்கட்டும். அந்த மாதிரி நினைவு மூலம் என்ன ஆகும்? என்ன எண்ணம் வைப்பீர்களோ, என்னென்ன காரியம் செய்வீர்களோ, என்ன வார்த்தை பேசுவீர்களோ, உங்கள் பார்வை எங்கே சென்றாலும் அனைவருக்கும் நன்மை செய்து கொண்டே இருப்பீர்கள். இந்த நினைவு லைட் ஹவுசின் காரியம் செய்யும், அந்த லைட் ஹவுசிலிருந்து ஒரு வண்ணத்தின் ஒளி வெளியாகிறது. ஆனால் இங்கே அனைத்து சக்திகளின் லைட் ஹவுஸ் ஒவ்வொரு அடியிலும் ஆத்மாக்களுக்கு வழி காண்பிக்கக்கூடிய காரியம் செய்ய வேண்டும். எனவே எப்பொழுதும் இந்த நினைவில் இருங்கள், அதன் மூலம் உங்கள் எதிரில் யார் வந்தாலும் நான் குறைவில்லா பொக்கிஷத்தின் சுரங்கத்தின் எதிரில் வந்திருக்கிறேன் என்று நினைக்க வேண்டும். வந்தவுடனேயே எங்கிருந்து அனைத்து பிராப்திகளும் கிடைக்க வேண்டுமோ அந்த மாதிரி ஸ்தானத்திற்கு நான் வந்தடைந்து விட்டேன் என்று உணர வேண்டும். வெளிநாட்டினருக்கு அந்த மாதிரி நடைமுறையில் வந்து கொண்டும் சென்று கொண்டும் லைட் ஹவுஸ் ஆகி சேவை செய்ய வேண்டும். ஒருவேளை ஒரே இடத்தில் இத்தனை லைட் ஹவுஸ் ஆகிவிட்டது என்ன ரிசல்ட் வெளியாகும். அனைவரும் ஆஹா ஆஹா என்ற பாடலை பாடுவார்கள். எப்பொழுதும் ஒரு படத்தை தன் எதிரில் வையுங்கள். எப்படி நீங்கள் ஒரு படத்தை எதில் பிரம்மாவும் தன் விரல் மூலம் சிவபாபாவின் பக்கம் சைகை காண்பிக்கிறார். அந்த மாதிரி படத்தையும் நீங்கள் தயாரிக்கிறீர்கள். அதே போல் உங்கள் அனைவரின் ஒவ்வொரு காரியம், ஒவ்வொரு எண்ணம் தந்தையின் பக்கம் சைகை காண்பிக்க வேண்டும். எனவே என்னுடைய எண்ணம் சைகை காண்பிக்கக்கூடியதாக இருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள். எப்பொழுது அனைத்து ஆத்மாக்களுக்கு தந்தையின் சைகை கிடைத்து விட்டது என்றால் உங்களை மகிமை பாட தொடங்கி விடுவார்கள். எப்படி இப்பொழுது வேறு வேறு பாடல்கள் பாடுகிறார்கள் இல்லையா. அதே போல் நாலாபுறத்திலும் அனைத்து இசைக்கருவிகள் மூலமாக தந்தை மற்றும் உங்களுடைய மகிமையின் பாடல் பாடுவார்கள். அந்த நேரத்தில் என்ன காட்சியாக இருக்கும். மேலும் நீங்கள் எங்கே இருப்பீர்கள்? (மதுபன்னில்) அனைவரும் மதுபன்னிற்கு ஓடி வந்தீர்கள் என்றால் பக்தர்கள் என்ன செய்வார்கள். அந்த நேரம் உங்கள் அனைவரின் காட்சி இவர்கள் பாப்தாதாவின் இதயசிம்மாசனதாரிகள் என்று ஏற்படும். அந்த நேரம் நீங்கள் சிம்மாசனதாரியாக பார்க்கத் தென்படுவீர்கள். அப்பொழுது தான் முழு உலகமும் அய்யோ அய்யோ என்று கூறும். மேலும் நீங்கள் அவர்களுக்கு வரதானம் கொடுப்பீர்கள். அந்த மாதிரியான உங்களுடைய சாட்சாத்காரம் நான் சிம்மாசனதாரி என்று உங்களுக்கே

ஏற்படுகிறதா?

பிராமணன் என்றால் அதிகாரி. அப்படியானால் அதிகாரத்தை இன்னும் பெற வேண்டியதிருக்கிறதா அல்லது பிறந்ததிலிருந்தே அதிகாரியாக இருக்கிறீர்களா? பாப்தாதா அனைவரையும் எப்பொழுதும் டிருக்கிறீர்கள். பிராப்தியின் எதிரில் இந்த பயணம் கூட அப்படியென்ன பெரியது? தந்தை எவ்வளவு பெரிய பயணத்தில் வருகிறார். தந்தையின் ஸ்தானம் தூரமாக இருக்கிறதா அல்லது உங்களுடையதா?

ஆசனதாரியாகவும் கிரீடமணிந்தவராகவும் பார்க்கிறார். ஆசனத்திலிருந்து இறங்கி விடுகிறீர்களா என்ன? யார் உயர்ந்த ஆத்மாக்களாக இருப்பார்களோ அவர் ஒருபொழுதும் கம்பளமின்றி காலை கீழே வைக்கமாட்டார். நீங்கள் மிகவும் உயர்ந்ததிலும் உயர்ந்தவர் என்றால் ஆசனத்திலிருந்து கீழே காலை வைக்காதீர்கள். ஆசனத்தில் அமர்ந்திருந்து கொண்டே சாப்பிடுகிறீர்கள், குடிக்கிறீர்கள், சுற்றி வருகிறீர்கள், செல்கிறீர்கள் அப்படி இவ்வளவு மிகப்பெரிய ஆசனம் ஆகும். புரிந்ததா.

இரட்டை வெளிநாட்டு குழந்தைகளுக்கு என்ன சேவை கொடுத்திருந்தோமோ அதை செய்து கொண்டிருக்கிறீர்கள் இல்லையா. இப்பொழுது எப்பொழுது வெளிநாட்டின் ஓசை மூலமாக பாரதத்தின் கும்பகர்ணர் கள் எழுவார்கள் என்று அனைவரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது மிக வலுவான ஓசையை எழுப்புங்கள். வெளிநாட்டு சேவையின் ரிசல்ட் மிக நன்றாக இருக்கிறது. இப்பொழுது இன்னும் வரும் நாட்களில் என்ன செய்ய வேண்டும்? (திட்டத்தை கூறினார்கள்). திட்டமோ நன்றாக இருக்கிறது, இதையோ அவசியம் செய்வீர்கள், ஆனால் இப்பொழுது அந்த மாதிரி ஏதாவதொரு சூழ்நிலையை உருவாக்குங்கள், அந்த சூழ்நிலை காந்தம் மாதிரியான காரியத்தை செய்யட்டும். ஒருவேளை அமைதி, சுகம் அல்லது அன்பு வேண்டும் என்றால் இங்கிருந்து கிடைக்க முடியும் என்ற இந்த செய்தி நாலாபுறங்களிலும் பரவி விட வேண்டும். விளம்பரமாக ஆகிவிட வேண்டும். இன்றைய நாட்களில் வார்த்தைகளை கேட்பதற்கு பதிலாக வைப்ரேஷன் (எண்ண அலைகள்) மூலம் பிராப்தி அடைவதற்காக விருப்பம் உள்ளவர்கள் அதிகமாக இருப்பார்கள். சொற்பொழிவு ஆற்றுங்கள் ஆனால் அதற்கு முன்பு அந்த சூழ்நிலையின் சப்தத்தை அவசியம் பரப்புங்கள். எப்படி தாகமாக இருப்பவரின் தாகம் தண்ணீர் மூலம் தீர்ந்து விடுகிறது அதே போல் ஆத்மாக்களின் அமைதி, சுகத்தின் தாகம்

தீர்ந்து விட வேண்டும் அந்த மாதிரி அனைவரும் அனுபவம் செய்ய வேண்டும். எப்படி ஸ்தாபனையின் தொடக்க காலத்தில் யாராவது ஒரு நாளாவது சத்சங்கத்தில் வந்த விட்டார் என்றால் முதல் நாளிலேயே ஏதாவது அனுபவம் செய்து சென்றார்கள். எது தொடக்கத்தில் இருந்ததோ அது இறுதியிலும் விஸ்தாரமான ரூபத்தில் இருக்கும். அந்த மாதிரி ஏதாவது சூழ்நிலையை உருவாக்குங்கள். எப்பொழுது நீங்கள் அனைவருமே நிரந்தரமாக இந்த நிலையில் நிலைத்திருப்பீர்களோ அப்பொழுது தான் அது உருவாகும். பிறகு சூரியனின் கிரணங்கள் மாதிரி அனைவரும் அனுபவம் செய்வார்கள். எங்கே இருந்து இந்த கிரணங்கள் வந்து கொண்டிருக்கின்றன என்று அனைவரின் பார்வை செல்லும் அந்த மாதிரி இப்பொழுது முயற்சி செய்ய வேண்டும். அனைவருமே மிகவும் புத்துணர்வோ அடைந்து கொண்டு தான் இருக்கிறீர்கள். அந்த மாதிரி புத்துணர்வு அடைந்து விடுங்கள். பிறகு அனேகர்களை புத்துணர்வு அடையச் செய்த பிறகும். உங்களிடம் நிரந்தரமாக புத்துணர்வு இருக்க வேண்டும். இந்த தடவை விசேஷமாக ஒரு வார்த்தை மேல் இரட்டை கோடிட்டு செல்ல வேண்டும். அது எந்த வார்த்தை? நிரந்தரம். எண்ணமானாலும் வார்த்தையானாலும் ஆனால் 'நிரந்தரம்' என்ற வார்த்தையை இரட்டை கோடிட்டு செல்லுங்கள். நினைவு யாத்திரையில் நிரந்தரம், ஞான சொரூபத்தில் நிரந்தரம், தாரணையில் நிரந்தரம், சேவையிலும் நிரந்தரம். நான்கு பாடங்களிலும் நிரந்தரத்தை இரட்டை கோடிட்டு செல்லுங்கள். புரிந்ததா. இந்த ஒரு வார்த்தையை வரதானத்தின் ரூபத்தில் எடுத்துச் செல்லுங்கள்.

நீளமான திட்டமாக உருவாக்காதீர்கள். ஆனால் நடைமுறைபடுத்தக்கூடியதாக மற்றும் விரைவில் செய்யக்கூடியதாக தயாரியுங்கள். அதற்காக தன்னுடைய உடல், மனம், பணம் மற்றும் சக்திகள் அனைத்தையும் எவ்வளவு விரைவில் உபயோகப்படுத்துவீர்களோ அந்த அளவு லாபம் இப்பொழுது நேரம் இருக்கிறது பின்பு கால தாமதம் ஆகிவிடும். செய்வதற்காக தேதிக்காக காத்திருக்காதீர்கள். நாளையும் இல்லை, இன்றும் இல்லை, இப்பொழுது செய்யுங்கள். ஏனென்றால் ஒருவேளை தேதியை கூறினோம் என்றால் வெகுகாலத்து சேமிப்பு ஏற்படாது - தேதியின் சேமிப்பு ஆகிவிடும். பின்பு தேதியின் காத்திருத்தலில் சென்று விடுவீர்கள். முன்னேற்பாடு கள் குறைவாக செய்வீர்கள். தேதியின் உணர்விலேயே சென்று விடுவீர்கள். ஆத்ம உணர்வில் இருக்க மாட்டீர்கள்.

ஒவ்வொரு இலாக்காவிலும் செய்தியை கொண்டு சேர்ப்பதற்கான முயற்சி செய்யுங்கள். யாரும் எங்களுக்கு தெரியவில்லை என்று புகார் கூற வேண்டாம். சேவை செய்து

கொண்டே சென்றீர்கள் என்றால் அவர்களாகவே இங்கே சென்டர் திறங்கள் என்று முன்னுக்கு வருவார்கள். நல்லது.

வரதானம் :

சக்தி நிறைந்த உள்உணர்வு மூலமாக மனசக்தி மூலம் சேவை செய்யக்கூடிய உலகிற்கு நன்மை செய்பவர் ஆகுக.

துடித்துக் கொண்டிருக்கும் உலக ஆத்மாக்களுக்கு வழி காண்பிப்பதற்காக சாட்சாத் தந்தைக்குச் சமமாக லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் ஆகுங்கள். ஒவ்வொரு ஆத்மாவிற்கும் ஏதாவது கொடுக்க வேண்டும் என்ற லட்சியத்தை வையுங்கள். முக்தி கொடுங்கள் அல்லது ஜீவன்முக்தி கொடுங்கள். அனைவருக்காகவும் மகாதானி மற்றும் வரதானி ஆகுங்கள். இப்பொழுது அவரவர்களின் ஸ்தானத்தின் சேவையோ செய்கிறீர்கள் ஆனால் ஒரு ஸ்தானத்தில் இருந்து கொண்டே மனசக்தி மூலமாக வாயுமண்டலம், வைப்ரேஷன் மூலமாக உலக சேவை செய்யுங்கள். அந்த மாதிரி சக்தி நிறைந்த உள்உணர்வை உருவாக்குங்கள். அதன் மூலம் வாயுமண்டலம் உருவாகட்டும். அப்பொழுது தான் உலகிற்கு நன்மை செய்யும் ஆத்மா என்று கூறுவோம்.

சுலோகன் :

அசரீரி தன்மையின் பயிற்சி மற்றும் வீணான எண்ணம் என்ற உணவின் பத்தியம் மூலமாக தன்னை ஆரோக்கியமானவராக ஆக்குங்கள்.

ஓம் சாந்தி

## உலக மாற்றத்திற்காக அனைவரது
## உள் உணர்வும் (விருத்தி) ஒன்றாக இருக்க வேண்டும்,

இன்று பாப்தாதா நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகளின் சைத்தன்ய சித்திரங்களின் மூலம் அதாவது ஒவ்வொருவரின் முகத்தின் மூலம் விசேஷ இரண்டு விசயங்களை சோதனைசெய்து கொண்டிருந்தனர். ஒவ்வொரு குழந்தையும் சென்ஸ் (அறிவு) மற்றும் எஸென்ஸ் (சாரம்) இரண்டிலும் எவ்வளவு தூரம் நிரம்பி யுள்ளனர், அதாவது, ஞானத்தில் முழுமை மற்றும் சர்வ சக்திகளில் நிறைவு எதுவரை அடைந்துள்ளனர்? அதுதான் ரூப்-பஸந்ந் (ஞானம் - நடைமுறை) என்றழைக்கப்படுகிறது. ஆக ரூப்-பஸந்த் என்றால் சென்ஸ் மற்றும் எஸென்ஸ் நிறைந்தவர்கள்.

இன்று பாப்தாதா ஆன்மிக (டிரில்) பயிற்சி செய்வித்துக் கொண்டிருந்தார், ஒரே வினாடியில், ஒன்றுமையாக ஒரே உள்ளுணர்வு மூலமாக, அதிர்வலைகள் மூலமாக, வாயுமண்டலத்தை (சூழலை) மாற்றம் செய்ய முடியும். நம்பர் பிரகாரம், ஒவ்வொருவரும் தத்தம் புருஷார்த்தத்தின் பிரகாரம், மகாரதி தமது அதிர்வலைகள் மூலம் சூழ்நிலையை மாற்றம் செய்து கொண்டிருக்கின்றனர். ஆனால் உலக மாற்றத்தில் சம்பூர்ண காரியத்தின் முடிவில், ஒற்றுமையான ஒரே எண்ணம் மற்றும் அதிர்வலைகள் (வைப்ரேஷன்ஸ்) தேவை. ஒரு சில மகான் ஆத்மாக்கள் மற்றும் தீவிர புருஷார்த்தி - மகாரதி குழந்தைகளின் விருத்தி வைப்ரேஷன்ஸ் மூலம் ஆங்காங்கு வெற்றி ஏற்பட்டுக் கொண்டுதானிருக்கிறது. தற்போது கடைசியில் அனைத்து பிராமண ஆத்மாக்களின் ஒரே தீவிர எண்ணத்தின் (விருத்தி) விரல் வேண்டும். ஒரே சங்கல்பத்தின் விரல் வேண்டும். அப்பொழுதே எல்லையற்ற உலக மாற்றம் ஏற்படும். தற்கால சமயத்தில், இந்த விசயத்தின் விசேஷ பயிற்சி வேண்டும். ஏதேனும் நறுமணமிக்க பொருள் வினாடியில் தனது மணத்தை பரப்பி விடுகிறது. எப்படி ரோஜாவின் எஸன்ஸை தெளிக்கும் போது வினாடியில் அந்த இடம் முழுவதும் ரோஜாவின் நறுமணம் பரவி விடுகிறது. ரோஜாவின் நறுமணம் மிக நன்றாக வருகிறது என்று அனைவருக்கும் அனுபவமாகிறது. இந்த மணம்

எங்கிருந்து வருகிறது என விரும்பாவிட்டாலும் அனைவரது சக்திகளின் எஸன்ஸ் செல்கிறது- அவ்வாறே விதவிதமான சக்திகளின் எஸன்ஸ் அமைதி, ஆனந்தம், அன்பு போன்றவைகளை அனைவரும் கூட்டாக ஒரே வினாடியில் பரப்புங்கள். அதனுடைய ஈர்ப்பு நாலாபுறமும் உள்ள ஆத்மாக்களை அடைந்து, இந்த அமைதியின் நறுமணம், அதிர்வலைகள் எங்கிருந்து வருகின்றன என அவர்கள் அனுபவம் செய்ய வேண்டும். அசாந்தியாக இருப்பவருக்கு சாந்தி கிடைத்து விட்ட தென்றால், தாகமுள்ளவருக்கு தண்ணீர் கிடைத்துவிட்டால் அவர்களது கண் திறந்து விடுகிறது. மயக்கத்திலிருந்து தெளிவடைந்து விடுகிறார்கள். இந்த அமைதி. ஆனந்தத்தின் எஸன்ஸின் அதிர்வலைகளிலிருந்து குருடர்களின் குருடான குழந்தைகளின் மூன்றாவது கண்ணும் திறந்து, இவர்கள் யாருடைய குழந்தைகள், யார் இந்த பரம பூஜ்ய ஆத்மாக்கள் என்னும் தெளிவிற்கு வந்து விடட்டும். அம்மாதிரி ஆன்மீக டிரில் (பயிற்சி) செய்ய முடியுமா?

துவாபரயுகத்தின் ரஜோகுண ரிஷி முனிகள் கூட தமது தத்துவ யோகத்தின் சக்தியின் மூலம் தனது அக்கம் பக்கத்திற்கு சக்தியின் அதிர்வலைகளைப் பரப்ப முடியும், அவர்களும் உங்களது படைப்பே! நீங்கள் அனைவரும் மாஸ்டர் படைப்பவர்கள், அவர்கள் எல்லைக்குட்பட்ட காடுகளை அமைதிப்படுத்தினர். நீங்கள், இராஜயோகிகள் எல்லையற்ற இந்த (உலக) காட்டில் சாந்தி, சக்தி, ஆனந்தத்தின் அதிர்வலைகளைப் பரப்ப முடியாதா ? இந்த பயிற்சியின் திட சங்கல்பத்தை நிரந்தர சங்கல்பமாக்குங்கள். ஒவ்வொரு மாதமும் (மூன்றாம் ஞாயிறு) அகில உலக தியானப் பயிற்சியை ஆரம்பித்துள்ளீர்கள். ஆனால் இந்த பயிற்சியை அதிகப்படுத்துங்கள். ரூப்-பஸந்தின் (அறிந்த ஞானத்தை பிறருக்கு பொழிவது) விரிவான சேவையை மேளா, (பெருங்கூட்டமான) மாநாடு, மற்றும் பயிற்சி முகாம்கள் மூலம் செய்கிறீர்கள் ! ஒரே சமயத்தில் கூட்டாக இருந்து செய்தியைக் கொடுக்கிறீர்கள். செய்தித்தாட்கள் , டி,வி, வானொலி மூலம் ஒரே நேரத்தில் அனேகருக்கு செய்தியைத் தருகிறீர்கள். அதே போன்று நினைவு பலத்தின் மூலம், சிரேஷ்ட சங்கல்பத்தின் மூலம் இம்மாதிரி விரிவான எல்லையற்ற சேவை செய்யுங்கள், இதற்கும் புதிது புதிதாகக் கண்டுபிடியுங்கள். எப்போது ரூப்-பஸந்த் (தாரணை, சேவை) இரண்டிற்கும் சமநிலை ஏற்பட்டு விடுமோ அப்போது கடைசி நேர முடிவு ஏற்பட்டு விடும். இதற்காக கூட்டாகச் செய்ய வேண்டிய முயற்சி என்ன? தெரியுமா? அந்த புருஷார்த்தத்தின் வர்ணனை மற்றும் உருவம் இதுவரை பக்தியில் நடை பெற்று வருகிறது. என்ன அது? புருஷார்த்தத்தின் உருவம் மற்றும் மகிமை யாது? முடிவின் சித்திரமாக என்ன காண்பிக்கப்பட்டுள்ளது? ஸ்தாபனையின் வர்ணனைச் சித்திரமும் அதுதான்! இறுதியின் சித்திரமும் அதுவே!

பிரம்மா, பிராமணர்களுடன் என்ன செய்தார்? யக்ஞத்தை ஸ்தாபித்தார் என்றால் ஸ்தாபனையின் சித்திரத்தையும் படைத்தாரல்லவா? இறுதி முடிவிலும் யக்ஞத்தில் அனைத்து பிராமணர்கள் கூட்டாக சுவாகா செய்ய வேண்டும். அப்பொழுதே யக்ஞம் முடிவடையும் ! அதாவது உலக மாற்றத்தின் காரியம் முடிவடைய வேண்டும். ஆக, புருஷார்த்தம் எதுவாக இருந்தது? சுவாஹா ! எப்போது ஆகுமோ, அப்போது ஐயோ! ஐயோ ! என்பதற்குப் பதிலாக ஆஹா ! ஆஹா ! என்பதாகிவிடும். மாற்றம் ஏற்பட்டு விட்டதல்லவா? அந்த வார்த்தையைக் கூறும் போதே அவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது. அனைத்து விசயங்களிலும் சுவாஹா செய்து விட்டோமா என உங்களை நீங்களே கேளுங்கள். அவ்வாறு சுவாஹா (அர்ப்பணிக்க) வருகிறதா?

எப்போது கூட்டாக பழைய சம்ஸ்காரங்கள், சுபாவ மற்றும் பழைய நடத்தை போன்ற எள், நவதானியங்களை உளப்பூர்வமாக எப்போது சுவாஹா செய்வோமோ அப்போது யக்ஞத்தின் முடிவு ஏற்படும். பொதுவாக எள், நவதானியங்கள் போன்றவைகளை யக்ஞத்தில் போடுகிறார்கள் இல்லையா? எப்போது யக்ஞத்தை முடிக்கிறார்களோ அப்போது அனைவரும் ஒன்றாக சுவாஹா செய்து விடுகின்றனர். அப்பொழுதே யக்ஞமும் வெற்றி பெறுகிறது. ஒரே ஒரு அஹீதி போடப்படவில்லையென்றாலும் நல்லதாக எடுத்துக் கொள்வதில்லை. ஆக என்ன புருஷார்த்தம்? கூட்டாக சுவாஹா செய்க ! இப்போது என்ன செய்கிறீர்கள்? யாரேனும் முடியுங்கள், சுவாகா செய்யுங்கள் என கூறினாலும் கூட என்ன செய்கிறார்கள்? சுவாஹா செய்வதற்குப் பதிலாக உரையாடல்தான் நடக்கிறது. விவாதங்கள் தொடர்கின்றன. அவை மிக நன்றாகவும் இருக்கின்றன. ஏன்? எப்படி? என்கிற விசயங்கள் பற்றியே அந்த விவாதங்கள் ! இம்மாதிரி தாக்கங்கள் நிறைய நடைபெறுகின்றன. பாப்தாதாவிடம் வதனத்தில் ரேடியோவில் அதிகம் வருகின்றன. சில சமயம் ஒரு ஸ்டேஷனிலிருந்து வருகிறது. அச்சமயத்தின் படம், நடவடிக்கை எப்படி இருக்கும்? எப்படி உங்கள் உலகில் மிக்கி மௌஸ் விளையாட்டு வருகிறதோ அம்மாதிரி ! அவர்களின் கண்கள் விரிந்து பெரிதாகின்றன. சில சமயம் வாய் இழுத்துக் கொண்டு பெரிதாகி விடுகிறது. சில சமயம் மிக வேகமாக டப் டப் என ஏணியில் கீழே இறங்கிவரும். சில சமயம் மாயாவின் சூறாவளியில் பறந்து போய் விடுகின்றன. சரிசமநிலையில் வைக்க முடிவதில்லை. இப்போது தான் சிரித்த மாதிரி இருக்கும். உடனே சிரிப்பர், உடனே அழுவர், இவ்வாறு பாப்தாதாவும் கூட (உங்களிடம்) அனேக விளையாட்டுக்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். எப்படி கேட்கும் போது சிரிப்பு வருகிறது. செய்யும் போது தன் மீதே சிரிப்பு வந்து விடுகிறது என்றால், முடிவுக்கு வந்து

விடும். ஆக சுவாஹா செய்வதில்லை.

ஒருவேளை எவரது பழைய சம்ஸ்காரமோ நீங்காது தாங்கி விட்டதென்றால், அவர் தான் சுயமாகக் சுவாஹா செய்ய முடியவில்லையெனில் கூட்டாக எல்லோரும் உதவுங்கள். எப்படி? செய்யக் கூடியவர் செய்து கொண்டிருக்கிறார், அல்லது கூறிக் கொண்டிருக்கிறார் என்றால், கேட்கக் கூடியவர்கள், பார்க்கக் கூடியவர்கள் பார்க்காமல். கேட்கக் கூடாது என்றிருந்துவிட்டால் (பொருட்படுத்தாது இருந்துவிட்டால்) அவர் செய்வதும் நின்று போய் விடும். பாடல் பாடக் கூடியவர் பாடுகிறார், நடனமாடக் கூடியவர் ஆடுகிறார், பார்ப்போர், கேட்போர் யாருமில்லையெனில், தானாகவே நிகழ்ச்சி நின்றுவிடுமல்லவா? அம்மாதிரி உதவி புரியுங்கள். இதுவே சுவாகா எனப்படுகிறது. இம்மாதிரி சகயோகிகள் ஆகும்போதே குழுவாக இருந்து உலக மாற்றத்தைக் கொண்டு வர முடியும். சென்ஸ் (புத்தி) கூடவே எஸன்சும் தேவை. ஆனால், தொடர்பில் வரும்போது, அன்றாட காரியங்களில் வரும்போது, கர்ம பந்தன இல்லறத்தில் அல்லது சுத்தமான இல்லறத்தில் வருகிறீர்கள் என்றால், சென்ஸின் அளவு அதிகம் ஏற்படுகிறது. எஸன்ஸ் குறைவு ! சென்ஸ் என்றால், ஞானக் கருத்துக்கள் அதாவது அறிவு. எஸன்ஸ் என்றால், (சக்திகளின்) நிலை, சென்ஸ் சொரூபம் புத்தி (அறிவு) மட்டும் இருப்பதால் ஞானத்தை விவாதத்தில் கொண்டு வந்து விடுகிறீர்கள். இது இப்படித்தான் நடக்கும், இது இவ்வாறு நடகக வேண்டியதுதான். எஸன்ஸ் மூலம், சக்திகளின் ஆதாரத்தில் ஞானத்தின் விஸ்தாரத்தை நடைமுறை வாழ்க்கையில் சாரத்தில் கொண்டு வருகிறீர்கள். எனவே விஸ்தாரம் மற்றும் விவாதம் நின்று போய் விடுகிறது. குறுகிய நேரத்தில் ஆஹாவில் சுவாஹா செய்திடுங்கள். பிறகு ஆஹா எனது பாபா! இதிலேயே மூழ்கிப் போய் விடுகிறீர்கள். ஆக சென்ஸ் மற்றும் எஸன்ஸ் இரண்டையும் சமநிலையில் வைத்தீர்கள் என்றால், ஒவ்வொரு வினாடியும் சுவாஹா ஆகிக் கொண்டே இருப்பீர்கள். சங்கல்பம் (எண்ணங்கள்) கூட சேவையின் பொருட்டு சுவாஹா பேச்சு கூட விஷ்வ கல்யாண் பொருட்டு சுவாஹா, ஒவ்வொரு செயலும் கூட உலக மாற்றத்தின் பொருட்டு சுவாஹா ஆக, நான், எனது என்னும் தன்னுணர்வு அதாவது பழைய உணர்வு சுவாஹா ஆகிவிடும். மற்றபடி பாபா சேவை இரண்டு மட்டுமே நிலைத்திருக்கும். ஆக என்ன முயற்சி செய்ய வேண்டும் என புரிந்ததா? தனது தேகத்தின் நினைவு கூட சுவாஹா, அப்போதே ஒரே வினாடியில் அதிர்வலைகள் மூலம் வாயு மண்டலத்தை மாற்ற முடியும். புரிந்ததா?

இப்படிப்பட்ட சதா சக்தி வாய்ந்த, சதா அனைவரையும் மாற்றுவதில் சகயோகி, சென்ஸ்

மற்றும் எஸன்ஸை சமநிலையில் வைக்கக் கூடிய உலக மாற்றத்தின் ஒரே ஆர்வத்தில் இருக்கக் கூடிய, பாபா மற்றும் சேவை, வேறு எந்த விசயமும் இல்லை, இம்மாதிரி ஸ்திதியில் செல்லக் கூடிய இப்படிப்பட்ட பாபா சமமான மகான் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நம்ஸ்காரம் !

ஹூப்லி பார்ட்டியுடன் :

சதா பாபா மற்றும் சேவையில் மூழ்கிக் கிடக்கிறீர்களா? யார் சதா பாபா மற்றும் சேவையில் இருப்பார்களோ அவர்களது அடையாளம் என்னவாக இருக்கும்? சதா தடைகளை வென்றோர். எவ்வித தடையும் அவர்களது ஈடுபாட்டைக் குறைக்க முடியாது. எந்த ஒரு புயலும் அந்த ஒளிர் விடும் ஜோதியை அணைக்க முடியாது. அம்மாதிரி விழிப்பான ஜோதியா அகண்ட ஜோதி ! பக்தியில் கூட உங்கள் சிலைகளுக்கு முன்னால் அகண்ட ஜோதியை ஏற்றுகிறார்கள். ஏன் ஏற்றுகிறார்கள்? சைத்தன்யமாக (நடைமுறையில்) அகண்ட ஜோதி சொரூபமாக இருந்திருக்கிறீர்கள். எனவே அகண்ட ஜோதியின் நினைவார்த்தம் உள்ளது. ஜோதிக்கு முன்னால் ஏதேனும் திரை-மறைப்பு வருவதில்லையே, புயல் அசைப்பதில்லையே? தனது ஜோதி சொரூபம், பாபாவும் ஜோதி, மேலும் வீடும் ஜோதி, தத்துவம், ஆக வெறும் ஜோதி என்னும் வார்த்தையையாவது நினைவில் வைத்தீர்கள் என்றால் கூட முழு ஞானமும் வந்த விடுகிறது. இந்த ஜோதி என்னும் வார்த்தையின் பரிசை எடுத்துச் செல்ல வேண்டும் என்றால் எளிதில் விக்ன-வினாசக் (தடைகளை அழித்தவர்) ஆகிவிடுவீர்கள்.

நல்லது. ஹூப்லி வாசிகள் தங்களது வீடுகளில் சிவாலயங்களை ஏற்படுத்தியுள்ளனர். முதலில் சிவபூஜாரியாக இருந்துள்ளீர்கள். தற்போது சிவ வம்சத்தினர் ஆகிவிட்டீர்கள். அதிகார உரிமையுடையோராகி விட்டீர்கள். தற்போது கேட்டு வாங்குவதற்கென எந்த பொருளும் இல்லை. அனைத்து கஜானாக்களும் தானாகவே கிடைத்து விட்டன. இல்லையா? தற்போது அதிகார உரிமையுள்ளோராகி அனேகரை அவ்வாறு அதிகாரிகளாக்கக் கூடியவர்கள். கேட்டு வாங்குவோர் அல்ல ! என்ன செய்வது? எப்படிச் செய்வது? இந்த கட்டுப்பாடெல்லாம் இனி கிடையாது. நல்லது

தாய்மார்களோடு அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு

அனைத்து சக்திகளின் (தாய் மார்கள்) கையில் பாபாவை வெளிப்படுத்தும் கொடி உள்ளதல்லவா? சக்திகளுக்கு பிற ஆயுதங்கள் கொடுத்துள்ளனர். தற்போது சக்திகள் பாபாவை வெளிப்படுத்தும் கொடியை ஏற்ற வேண்டும். ஒவ்வொரு சக்தியின் மூலம் பாபா வெளிப்பட வேண்டும். அப்போதே வாழ்க எனும் வாழ்த்தொலி எழும்பும் சக்திகளின் மூலம் பாபாவின் வெளிப்பாடு நிகழ்ந்துள்ளது. எனவே தான் சிவ சக்திகள் ஒன்றாக சேர்த்து காண்பிக்கப்படுகின்றனர். சிவனை பூஜிப்பவர்கள் நிச்சயமாக சக்திகளையும் பூஜிப்பர். பாபா - சக்திகளின் சம்மந்தம் மிக ஆழமானது. எனவே தான் பூஜை சேர்ந்தே நடக்கிறது. சக்திகள் பாபாவை வெளிப்படுத்தும் கொடியை ஏற்றியுள்ளனர். எனவேதான் பூஜை நடக்கிறது. கொடியேற்றுவது என்றால் பேரொலி எழ வேண்டும். வெளிப்படுத்தும் கொடியேற்றுவது என்றால், அனைவருக்கும் ஒலி கேட்க வேண்டும். பாப்தாதாவிற்கு சக்தி சேனை மீது மிகவும் பெருமை. அவர்களை யாரும் முன் வைக்கவில்லை, அப்படிப்பட்டவர்கள் இன்று முன்னேறி, உலகையே மாற்ற வேண்டும். அவர்களை உலகினர் நம்பிக்கையற்று விட்டு விட்டனர். பாபா அவர்களை நம்பிக்கையுள்ளவர்களாக ஆக்கியுள்ளார். முதலில் சக்தி, பின்னர் சிவா. தன்னை பின்னால் வைத்தார். அப்படிப்பட்ட சிவ தந்தையை ஒரு போதும் மறக்கக் கூடாது. சதா தன்னை இணைந்த ரூபமாகவே பாருங்கள். மேலும் இணைந்த ரூபமாகவே நடங்கள்.

தாய்மார்களைப் பார்த்து, மிகுந்த குஷி ஏற்படுகிறது. தாய்மார்கள் விழுந்தால் கீழே பாதங்கள் வரை, ஏற்றம் கொண்டால் ஒரேயடியாக தலைக் கிரீடம்! மிகவும் வீழ்ந்தவர்கள் மிகவும் உயரே பறந்தால் குஷி ஏற்படுமல்லவா ? தாய் மார்களுக்கோ குஷியின் ஊஞ்சல்! சதா அந்த ஊஞ்சலிலேயே ஆடிக் கொண்டிருங்கள். தாய் மார்களுக்கு பாபாவின் மூலம் விசேஷமாக முன்னேறிச் செல்வதற்கான லிப்ட் கிடைத்துள்ளது. மிகக் குறைவான புருஷார்த்தம் உங்களது! ஆயிரம் மடங்கு உதவி பாபாவினுடையது. ஒரு அடி உங்களுடையது. ஆயிரம் அடி பாபாவினுடையது. தாய் மார்களுக்கு சதா விசேஷ குஷி இருக்க வேண்டும். எப்படியிருந்து எப்படி ஆகிவிட்டோம் என்கிற குஷி! நம்பிக்கையற்ற நிலையிலிருந்து நம்பிக்கையுள்ள வாழ்க்கையாக மாறிவிட்டது. கடந்த கால வாழ்க்கையில் எப்படி இருந்தோம் ! தற்போது எப்படி ஆகிவிட்டோம்! உலகமோ அலைந்து திரிகிறது. நீங்கள் சேர வேண்டிய இடத்தை அடைந்து விட்டீர்கள். எனவே குஷி ஏற்பட வேண்டுமல்லவா?

சக்திகள் தமது சக்தியின் உருவில் வந்து விட்டனர் என்றால், அனைவருக்கும்

அதிர்வலைகள் பரவிக் கொண்டிருக்கும். இல்லறத்திலிருந்தாலும் டிரஸ்டியாக வாழ்வோம், ஆக பற்றற்றிருப்போம். தமது மற்றும் பிறரது வாழ்க்கையை வெற்றியடைய நிமித்த காரணமாக ஆவோம். நாம் கல்பமுன்னரான கோபிகள் என்ற இதே போதையிலிருங்கள். பாபா கிடைத்தார், அனைத்தும் கிடைத்துவிட்டன. கிடைக்காத பொருள் ஏதும் கிடையாது. பாபாவுடன் சதா குஷியில் நடனமாடிக் கொண்டிருங்கள், துக்கத்தின் பெயர் அடையாளமே கிடையாது.

சக்திகளின் முக்கிய குணம் பயமின்மை மாயாவிடமும் பயப்படுவதில்லை. அப்படி பயமற்றிருக்க வேண்டும். மாயை புலியின் உருவில் வந்தாலும், அதாவது பயங்கர உருவில் வந்தாலும், சக்திகள் அப்புலியின் மீது சவாரி செய்யக் கூடியவர்கள் அவ்வளவு பயமற்றவர்கள். யார் பயமற்ற நிலையிலிருக்கிறார்களோ சதா சஸ்திரதாரி (ஆயுதங்கள் தரித்த) உலகம் உங்களை இதே ரூபத்தில் நமஸ்காரம் செய்ய வரும்.

தாய்மார்கள் பாபாவிடம் மட்டும் அனைத்து சம்மந்தங்களையும் ஏற்படுத்திக் கொண்டால் முன் நம்பரில் வர முடியும். தாய் மார்கள் நஷ்ட மோஹாவில் (பற்றற்ற நிலை ) பாஸ் ஆகிவிட்டனர் என்றால், நன்கு முன்னேறிச் செல்ல முடியும். தாய் மார்களுக்கு இந்தப்பாடம் முக்கியமானது. பாப்தாதா தாய் மார்களுக்கு கூடுதலாக ஊக்கம் தருகிறார். ஏனெனில் மிகவும் கஷ்டப்பட்டுள்ளனர் என்பதை அறிவார். மிகுந்த துன்பத்தை அடைந்துள்ளனர். தற்போது பாபா தாய்மார்களின் காலை அழுத்தி விடுகிறார். அதாவது, சகயோகம் (உதவி) அளிக்கிறார். பாபாவிற்கு மிகுந்த இரக்கம் ஏற்படுகிறது. வாழ்க்கை முழுவதும் இழந்து விட்டீர்கள். தற்போது குறைந்த சமயத்தில் பாஸாகி விடுங்கள் நல்லது !

## குமாரிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு

குமாரிகள் பாபாவின் சேவைக்கான கைகள்! அனைவரும் பிரம்மா பாபாவின் புஜங்கள் தானே ! அனைவரும் தயாரா ? (வேலையைத் தலையில் சுமக்கும்) கூடைக்காரிகளா ? அல்லது கிரீடதாரிகளா? ஒன்று கூடை இருக்கும் அல்லது கிரீடம் ! இரண்டையும் ஒன்றாக எப்படி வைக்க முடியும்? அனைவரும் உதவியாளர்கள் தானே! எப்போது கூறுவோமோ, அப்போது தயார்? டைரக்ஷன் பிரகாரம் செல்பவர்கள் தானே ! வேகமாகச்

செல்ல ஆரம்பித்தீர்கள் என்றால், லட்சியத்தை அடைந்து விடுவீர்கள். குமாரிகளோ எப்போதும் திருப்தியானவர்கள். குமாரிகளுக்கு மாயை வருகிறதா? குமாரிகளுக்கு வேறு எந்த வாலும் இல்லாத போது மாயாவின் வால் எங்கிருந்து வந்தது? எப்படி பிறவற்றிலிருந்து பந்தனமற்ற நிலையோ அதே போன்று மாயாவிடமும் பந்தனமற்ற நிலை. குமாரிகள் என்றால் பந்தனமற்றவர்கள். எவ்வித வாலும் இல்லை.

குமாரிகள் எப்போதுமே டபுள் லைட். கர்ம பந்தனங்களின் பாரமும் கிடையாது. ஆத்மாவின் மீது பழைய சம்ஸ்காரத்தின் பந்தனமும் கிடையாது. அனைத்து பாரங்களிலிருந்தும் விடுபட்டு லைட்டாக இருப்போர். அப்படித்தானே? குமாரிகள் என்றால் அனைத்து ரீதியிலும் சுதந்திரமானவர்கள். வெறும் சம்பந்த ரீதியாக மட்டுமல்ல. உடலால் மட்டுமல்ல, மன ரீதியாகவும் சுதந்திரமானவர்கள். அம்மாதிரி லேசானவர்கள் தானே ? எவ்வளவு நினைவில் வேகத்தை அதிகரித்துக் கொண்டு செல்வீர்களோ அவ்வளவு லேசாக இருப்பீர்கள். நினைவே டபுள் லைட் ஆவதற்கான சாதனமாகும். ஆக சதா தன்னை லேசாக வைத்திருங்கள். எம்மாதிரி விசயங்கள் வந்தாலும் (டோன்ட் கேர்) பொருட் படுத்தாதீர்கள். தாண்டிக் குதித்து விடுங்கள். விசயங்கள் கீழே தங்கிவிடும். லேசாக இருப்பவர்கள் மிகப் பெரிதாக தாண்டிக் குதித்துச் செல்ல முடியும்.

வரதானம் :

வீணானதைக் கூட சுப பாவனை மற்றும் சிரேஷ்ட பாவனை மூலம் மாற்றக் கூடிய உண்மையான மர்ஜீவா (வாழ்ந்து கொண்டே இறந்தவர்கள்) ஆகுக !

பாப்தாதாவின் ஸ்ரீமத், குழந்தைகளே வீணான விசயங்களைக் கேட்காதீர்கள், பிறருக்குக் கூறாதீர்கள், மேலும் எண்ணாதீர்கள், சதா சுபபாவனையுடன் சிந்தியுங்கள், சுபமான பேச்சுக்களையே பேசுங்கள். வீணானவைகளைக் கூட சுபபாவனையுடன் கேளுங்கள். சுப சிந்தனையாளராகி பேச்சின் தன்மையை மாற்றுங்கள். சதா பாவ் (நோக்கம்) மற்றும் பாவனையை சிரேஷ்ட மாக்குங்கள். தன்னை மாற்றுங்கள், பிறரை மாற்ற சிந்திக்காதீர்கள். சுய மாற்றமே பிறரின் மாற்றமாகும். இதில் முதலில் நான் இவ்வாறு மறுபிறவி எடுப்பதில் தான் ஆனந்தம். இதுவே மகாபலி என்று கூறப்படுகிறது. இதில் குஷியாகி மாய்ந்து போங்கள், இவ்வாறு இறப்பதே வாழ்வதாகும். இதுவே உண்மையான உயிர்ப்

பிச்சையாகும்.

சுலோகன் :

சங்கல்பங்களின் ஒருமுகத் தன்மையே (கான்சன்ட்ரேஷன்) சிரேஷ்ட மாற்றத்தில் அதிவேகத்தை கொண்டு வருகிறது.

ஓம் சாந்தி

23.11.1979 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## பணிவு என்னும் கவசத்தின் மூலம் சினேகம் மற்றும் உதவியைப் பெறுதல்

இன்று சேவாதாரிகளின் குரூப் ! மதுபன் வாசி அதாவது சேவாதாரி. எப்படி பிரம்மா பாபா நம்பர் -1 விஷ்வ சேவாதாரியோ அதே போன்றே மதுபன் வாசிகள் அதாவது எல்லையற்ற சேவாதாரிகள். எல்லையற்ற சேவாதாரிகளிடம் எல்லையற்ற குணம் நிறைந்திருக்கும். எப்படி பிரம்மா பாபாவைப் பார்த்தோம் - பார்ப்பது கூட எல்லையற்ற பார்வையுடன், பேசும் பேச்சு கூட எல்லையற்றது, கேட்பது பிறருக்கு கூறுவது ! சம்மந்தம் தொடர்பில் வருவது கூட எல்லையற்ற சம்மந்தம், ஒவ்வொரு சங்கல்பத்திலும் எல்லையற்ற நன்மையை எப்படி செய்வது! சம்ஸ்காரத்தில் கூட எல்லையற்ற தியாகம், எல்லையற்ற தவம், இரண்டு மூன்று மணி நேர தவம் அல்ல ! எல்லையற்ற தவம் என்றால், ஒவ்வொரு வினாடியும் தவ சொரூபம், தவ மூரத் ! குணம் மற்றும் முகத்தில் தியாகம், தவம் மற்றும் சேவை சதா சாகார ரூபத்தில் (நடைமுறை) வெளிப்படையாக அவரிடம் (பிரம்மா பாபா) பார்த்தோம். பிரம்மா பாபா மதுபனில் வசித்தார், எனவே மதுபன் பாபா என்றழைத்தனர். அப்படிப்பட்ட தரணியில் வசிக்கக் கூடியவர்கள் மதுபனில் வாழ்வோர் மற்றும் சேவாதாரி ! அப்படி அவரை பின்பற்றுகிறீர்களா? உலகினர் மதுபனில் வசிப்போரின் குணங்களைப் புகழ்கின்றனர். மதுபன் வாசிகள் குணம் நிறைந்தவர்கள்! இம்மாதிரி எல்லையற்ற நிலையில் நிலைத்துள்ளீர்களா? அலாவுதீனின் அற்புத விளக்காகி நடக்கிறீர்களா? அலாவுதீனின் அற்புத விளக்கு மிகவும் புகழ் வாய்ந்தது. அதன் மூலம் எதைப் பார்க்க வேண்டுமோ, அடைய வேண்டுமோ பார்க்க முடியும், அடைய முடியும். மதுபனில் வசிப்போர் விசேஷமாய் அலாவுதினின் விளக்கு போன்றவர்கள் ஒரு வினாடியில் வீட்டையும், இராஜ்யத்தையும் காண்பிக்கக் கூடியவர்கள், முக்தி ஜீவன் முக்தியை வழங்கக் கூடியவர்கள். மகிமையோ அவ்வளவு மகான் தன்மையது ! ஆனால் ஒவ்வொருவரும் தன்னை மகானாக நினைத்துக் கொண்டு நடக்கிறீர்களா ? ரிஸல்டில் (முடிவு) அனைவரிலும் முதன்மையானோர் மதுபன் வாசிகளாக இருக்க வேண்டும். அல்லது இருக்கிறீர்களா? எதுவரை வேண்டும் என்கிற வார்த்தை மற்றும் இருக்க வேண்டும் என்பது இருந்தால், உலகின் அனைத்து விருப்பங்களையும் எப்படி பூர்த்தி செய்வீர்கள். ஏதேனும் சக்திவாய்ந்த வெடி குண்டு விழும்போது முழு பூமியே மாறிப்போய்

விடுகிறது. மதுபனில் வசிப்போர் கூட அம்மாதிரி அப்பியாசத்தின் சக்திவாய்ந்த வெடிகுண்டை மதுபனின் பூமிக்கடியில் தயாரிக்க வேண்டும். அதன் முன்னோடி ஒத்திகை முதலில் இங்கே செய்ய வேண்டும். எவ்வளவு எந்த பொருள் சக்தி வாய்ந்ததாக இருக்குமோ அவ்வளவு மிகவும் நுண்ணியமானதாக இருக்கும். இருப்பது என்னவோ மிகச் சிறிதாகத்தான். ஆனால் அது செய்யும் செயலோமிகப் பெரியது ! அம்மாதிரி நாலாபுறமும் அதிர்வுகளை ஏற்படுத்தும் அளவு ஏதேனும் புதிய விசயத்தை உருவாக்குங்கள். ஆகியே தீர வேண்டும், இந்த ஒரே எண்ணம் எல்லோரிடமும் உள்ளது. ஆனால் ஏன் நடப்பதில்லை ? அதன் காரணம் என்ன ? நடைமுறையில் ஏன் குறைவு ஏற்படுகிறது? ஆக வேண்டும் என்கிற எண்ணத்திற்குத் தடையாக அம்மாதிரி எந்த சுவர் உள்ளது? ஒரு புறம் ஆக வேண்டும் என்கிற எண்ணம் ஏற்படுகிறது. பிறகு இன்னொரு எண்ணமும் எழுகிறது, இது கடைசி நேரத்தில் தான் நடக்கும். தற்போது இப்படியேதான் போகும். அனைவருடையதும் அப்படித்தான் ! இம்மாதிரியான வீணான எண்ணங்களின் செங்கற்களின் சுவர் எழும்பி விடுகிறது. அது புருஷார்த்தத்தின் வேகத்தைக் குறைத்து விடுகிறது. இதனைக் கடந்து செல்ல ஒரு திட சங்கல்பத்தின் உயரம் தாண்டுங்கள், அது என்ன? நான் செய்து காண்பிப்பேன் என்று ஒவ்வொருவரும் எண்ண வேண்டும். பிறரைப் பார்க்காதீர்கள், கேட்காதீர்கள். ஆக ஒவ்வொருவராகச் சேர்ந்து ஒரு குழுவே உருவாகிவிடும்.

ஒன்றொன்றாகச் சேர்ந்து 12 ஆகிவிடும். அப்படி உயரம் தாண்டுங்கள், அப்போதே பாபா சமமாக எல்லையற்ற சேவாதாரி ஆவீர்கள். பிரிந்ததா? சேவாதாரிகளின் மகத்துவம் என்ன என்று? முதல் சேவை இதுவே !

தனித் தனியாக குழுவை உருவாக்குங்கள். எப்படி ஆரம்பத்தில் புருஷார்த்திகளின் குரூப் இருந்தது. ஒரே மாதிரியான புருஷார்த்திகளின் குரூப்பாக இருக்க வேண்டும். அதில் ஒரு வார திட்டம் தீட்டுங்கள். அமிர்தவேளை என்ன சங்கல்பம் செய்வோம், வகுப்பு நேரத்தில் அமிர்தவேளை என்ன சங்கல்பம் செய்வோம், கர்மனா சமயம் என்ன லட்சியம் செய்வோம்? மாலை நேர யோகத்தில் என்ன விசேஷ கவனம் செலுத்துவோம்? இங்கங்கு சென்று வரும்போது என்ன மன சேவை மூலம் அதிர்வுகளைப் பரப்புவோம்? இம்மாதிரி குழுவை ஏற்படுத்திக் கொண்டு பந்தயத்தில் போட்டி போடுங்கள். அப்படி உள்ளத்தின் ஆர்வம் எழ வேண்டும். நிகழ்ச்சியின் போது அற்பகாலத்திற்காக ஏற்படுகிறது. ஆனால் மன சங்கல்பம் அழிவற்றதாக இருக்கும். செய்வோம் ரிஸல்ட்டைக் கொண்டு வருவோம்,

அப்போது நாலாபுறமும் இந்த அதிர்வலைகள் பரவும் என்கிற எண்ணம் எழ வேண்டும். முழு உலகின் உயர்ந்த ஸ்தம்பமாய் (தூண்) இருப்பது மதுபன், எங்கிருந்தும் பாருங்கள், தூரத்திலிருந்தும் ,சரி, அருகாமையிலிருந்தாலும் சரி, ஆனால் ஸ்தம்பம் உயரமாகவே தென்படும். உயர்ந்த ஸ்தம்பமாக இருப்பதால், அனைவரது பார்வையும் செல்கிறது என்றால், இது விசேஷமான சேவையாகும். பிரம்மா பாபா சமமாக ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்க வேண்டும். எப்படி பிரம்மா பாபாவைப் பார்த்தீர்கள், இரவில் விழித்திருந்து அதிர்வலைகளைப் பரப்ப சிந்தனைக் கடலில் மூழ்கினார். அம்மாதிரி அனைத்து குழந்தைகளின் சிந்தனைச் செல்ல வேண்டும். எப்போது செய்வார்களோ, அதற்கான அறிவிப்பு வரும்போதுதான் செய்வோம் என்பதல்ல. இந்த விசயத்தில் செய்யுங்கள், செய்வியுங்கள். இதில் யார் முன் வருகிறாரோ அவரே அர்ஜுன் ! பிறரைப் பார்த்துக் கொண்டிருந்தால், அப்படியே இருந்து போவீர்கள். எனவே யார் செய்வாரோ, அவரை அனைவரும் பின்பற்றுங்கள். சமைத்தாலும், வேறு எவ்வித சேவை செய்து கொண்டே சக்தி சாலி நிûனைவு -சொரூபம் ஆக வேண்டும். மனதின் மூலம் உலகின் சேவை செய்க ! உலக சேவாதாரி, ஒரு வேளை அல்ல, இரட்டை சேவை செய்யக் கூடியவர்கள். கரங்கள் காரியங்களைச் செய்து கொண்டிருக்கட்டும், மனதின் மூலம் சக்திகளின் தானத்தை வழங்கிக் கொண்டிருங்கள். குணம், நிறைந்து சேவை செய்ய வேண்டும், அப்போது இரட்டை சேமிப்பு ஆகும், எனவே இரட்டை சேவை செய்ய வேண்டும் என்பது சேவை நேரங்களில் நினைவிருக்க வேண்டும். ஒவ்வொருவரும் நான் நிமித்தமானவன் (கருவி ) என உணர வேண்டும். தன்னை மாற்றினால் உலகம் மாறும் என சொற்பொழிவாற்றும் போது கூறுகிறீர்கள் இல்லையா? விசயம் தனக்கும் தானே ! பிறரது தவறுகளைப் பார்த்து, தான் தவறுகளைச் செய்யாதீர்கள். பிறரது தவறுகள் பார்க்கத் தெரிகின்றன, ஆனால் நானும் தவறுகள் செய்கின்றேன், அது தென்படுவதில்லை. ஒருவர் தவறாகப் பேசுகிறார் என்றால், அவரது தொடர்பில் வந்து தானும் தவறாகப் பேசினால், கூடவே இருந்ததன் பிரபாவம் ஏற்பட்டு விட்டதல்லவா? எவரேனும் தவறு செய்யும் போது நாம் சரியாக நடக்க வேண்டும், அவரது தொடர்பின் பிரபாவத்தில் வந்து விடக்கூடாது. பிரபாவத்தில் வருவதால் கவனக் குறைவு ஏற்பட்டு விடுகிறது. இவ்விசயத்தில் பாண்டவர்கள் முன்னே செல்வரா? அல்லது சக்திகளா? ஒரு பொறுப்பை எடுத்துக் கொள்ளுங்கள், நான் சரியான வழியில் மட்டுமே செல்வேன் ! தவறைப் பார்த்து தவறில் சென்று விடக்கூடாது. பிறர் தவறு செய்வதைப் பார்க்கும் போது உள்ளடக்கிக் கொள்ளும் சக்தியைப் பயன்படுத்துங்கள், இதே எண்ணத்தை எல்லோரும் சிந்தித்தால், எளிதில் உலக மாற்றம் ஏற்பட்டு விடும். இதைச் செய்ய முடியாதா ? ஏதாவது திட்டம் தீட்டுங்கள். புது வருடத்தில் ஏதேனும் காரியத்தை செய்து காண்பிக்க வேண்டும். ஒருவர்

மற்றவருக்கு உன்னத பாவனையுடன் உதவி செய்யுங்கள். எவரது தவறையும் பார்க்காதீர்கள். ஆனால் உதவியின் மூலம் அவர்களை நிரப்பி விடுங்கள். இவர் இப்படி செய்கிறார், அவர் அப்படிச் செய்கிறார் என்றெல்லாம் பார்க்கவே செய்யாதீர்கள், கேட்கவே கேட்காதீர்கள். இல்லையெனில் அலட்சியத்தின் சம்ஸ்காரம் பலமாகிவிடும். பிறரைப் பார்த்தால் பிறரைக் கேட்டால், தான் கவனக் குறைவில் (அலட்சியப் போக்கு) வந்து விடுவோம். சமயத்தின் பிரகாரம் வீணானவை பெயர் - அடையாளமே இல்லாமல் செய்து விடுங்கள். வீணானவைகளைப் பேசாதீர்கள், வீணான செயல், வீணான தொடர்பு கூடாது. வீணான தொடர்பு சமயம் மற்றும் சக்தியை வீணடித்து விடுகிறது. ஆக, இந்த ஆண்டு எந்த கொடியை ஏற்றுவீர்கள்? எவரேனும் எவ்வளவு தான் உங்களிடையே குறைபாட்டைத் தேட முயன்றாலும், சிறிது கூட உங்களிடம் சம்ஸ்காரம் - சுபாவத்தின் மோதல் தென்படக் கூடாது. இன்று அனைவரும் இந்த உறுதியான எண்ணம் கொண்டு, வீணாகிய இராவணனை எரித்து விட்டால் என்ன ஆகும்? உண்மையான தீபாவளி ! இம்மாதிரி உறுதி மொழி எடுங்கள். எவரேனும் இகழ்ந்தாலும் சரி, திட்டினாலும் சரி, நீங்கள் புனிதர்கள் (சாது) ஆகிவிடுங்கள். எவரேனும் இழிவாகப் பேசினாலும், நீங்கள் பூ மழை பொழியுங்கள். இவர் இப்படி கூறவில்லை, எனவே இப்படி ஆயிற்று ! அவர் என்னமும் செய்யட்டும், தவறே செய்திருக்கட்டும் நீங்கள் சரியாக இருங்கள் ! யாரோ 10 பேசினார், நீங்கள் ஒன்று பேசிவிட்டால் கூட தாமரை மலர் போன்று இல்லைதானே ! ஒரு சொட்டு விழுந்து விட்டதல்லவா ? எவரேனும் உங்களோடு மோதுகிறார் என்றால், அவருக்கு நீங்கள் குளிர்ந்த நீரைத் தாருங்கள். அதன் மூலம் அக்னி அணைந்து போய்விடும். இது ஏன் இப்படி ஏன் என்று கூறினால், தீயில் எண்ணையை ஊற்றுகிறீர்கள். எப்போதுமே பணிவு என்னும் உடையை அணிந்திருங்கள். இந்த பணிவே கவசமாகும். கவசத்தைக் கழற்றி விடுகிறீர்கள். எங்கு பணிவு இருக்குமோ அங்கு சினேகம் மற்றும் உதவி நிச்சயமாயிருக்கும். எங்கு சினேகம் - உதவியிருக்குமோ அங்கு எண்ணை ஊற்ற மாட்டீர்கள். ஆக ஒவ்வொருவரும் இந்த ஆண்டு என்ன செய்யப் போகிறீர்கள் ?

சம்ஸ்காரம் விதம் விதமாகத்தான் இருக்கும். ஆனால் அந்த சம்ஸ்காரங்கள் பிரபாவம் (பிரதிபலிப்பு ) நம்மீது ஏற்படக் கூடாது. சம்ஸ்காரம் சிலருக்கு வேலையாள் போன்றிருக்கும். சிலருக்கு ராஜா போன்று (ஆட்சி செலுத்தும்) இருக்கும். சம்ஸ்காரம் மாறட்டும் என எதிர்பார்த்துக் கொண்டிராதீர்கள். ஆனால் என் மீது எவரது பிரபாவமும் இருக்கக் கூடாது. ஏனெனில் ஒவ்வொருவரது சம்ஸ்காரமும் வித்தியாசமானது. அடுத்து, ஏதேனும் மாயாவின் ரூபத்தில் வருகின்றன. இது முடிவுக்கு வரவே வராது. ஆனால்

நீங்கள் சாட்சி மற்றும் தாமரை மலரைப் போன்று பாதுகாப்பாக இருங்கள். இதனை செய்ய முடியும் தானே ! பேசுபவர்கள் பேசட்டும் ஆனால் கேட்பவர்கள் ( நீங்கள்) கேட்கக் கூடாது. இது நடக்கக் கூடியது தானே ! மரியாதையின் (விதிமுறைகள்) கோட்டுக்கு உட்பட்டு எந்த ஒரு விசயத்தையும் தீர்மானியுங்கள். சம்ஸ்காரங்கள் வெவ்வேறாக இருந்தாலும், மோதல் கூடாது. அதற்கு ஞானம் நிறைந்தவர்களாகி விடுங்கள். நாங்கள் உலக நன்மையாளர்கள் (விஷ்வ கல்யாணகாரி) என்று கூறும்போது, நன்மை செய்யாதவர்களும் இருக்கிறார்கள், அப்போது தானே நீங்கள் நன்மையாளர்கள் ஆக முடியும். நன்மை அளிக்காதவர்களே இல்லையென்றால், யாருக்கு நன்மையாளர்கள் ஆவீர்கள். எவரேனும் தவறு செய்கிறார் என்றால், அவர் பிற வசமாகியுள்ளார் எனப் புரிந்து கொண்டு இரக்கப் பார்வையின் மூலம் மாற்றம் செய்யுங்கள். அது பற்றி விவாதித்துக் கொண்டிராதீர்கள். ஒருவேளை யாரோ கல் (பாறை) காரணமாக பின் தங்கி விடுகிறார் என்றால், நமது வேளை கடந்து செல்வது, அல்லது அவருக்குத் துணையாகி கடந்து அழைத்துச் செல்லுங்கள். அவ்வளவு தைரியம் இல்லையெனில், நீங்கள் தங்கிவிடாதீர்கள். கடந்து சென்று கொண்டே இருங்கள்! இந்த கவனம் வேண்டும். பார்க்க வேண்டுமெனில், விசேஷத்தைப் பாருங்கள். விடவேண்டுமெனில், பலவீனத்தை விடுங்கள். தொடர்பில் வரவேண்டியுள்ளது, பார்க்க வேண்டியுள்ளது, என்றால் விசேஷங்களே தென்படட்டும். இல்லையெனில் பாபாவைப் பாருங்கள்.

ஒவ்வொருவரும் இதே சங்கல்பத்தை செய்யுங்கள், நாம் அமைதியின், சக்தியின் கிரணங்களைப் பரப்ப வேண்டும். தவ மூர்த்தியாக விளங்க வேண்டும். ஒருவர் மற்றொருவருக்கு மனதின் மூலமோ, சொல் மூலமோ உஷார் படுத்துவதற்கான நேரமில்லை, தற்போது மனதில் மூலம் சுபபாவனை மூலம் ஒருவர் மற்றொருவருக்கு உதவியாளராகி, முன்னேறிச் செல்லுங்கள், பிறரை முன்னேற வையுங்கள். நல்லது.

### பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு

1. சங்கமயுகம் வரதானியுகம் - இச்சமயத்தில் தன்னை வரதானங்களினால் நிறப்புங்கள் அனைத்து சங்கமயுகத்தின் விசேஷ வரதானங்களினால் தங்களை நிரப்பிக் கொள்கிறீர்களா? சங்கமயுகம், வரதானியுகம் என்று அழைக்கப்படுகின்றது. சங்கமயுகத்தில் தான் நடக்க முடியாததும் நடந்து விடுகிறது. அனைத்து மாற்றங்களும் நிகழும் யுகம், சங்கமயுகம், இம்மாதிரி யுகத்தில் சிரேஷ்டமான பாகத்தைக் நடிக்கக் கூடிய கதாநாயகன் -

கதாநாயகி நடிகன் - இந்த போதை உள்ளதா ? சங்கமயுகத்தில் தான் சதா சம்பன்ன, நிறைந்து வாழ்வதின் வரதானம் கிடைக்கிறது.

துவாபர யுகத்திலிருந்து அவ்வப்போது அற்பகாலத்தினுடையது கிடைக்கிறது. சங்கமயுகத்தில் சதா காலத்திற்கும் கிடைக்கிறது. ஒருவேளை தற்போது கூட அவ்வப்போது கிடைக்கும் என்றால் சதா காலத்திற்கும் எப்போது ஆகும்? சங்கமயுகத்தில் பெயரே சிவசக்தி எப்படி பெயர் இணைந்து இருக்கிறதோ அப்படி சதா இணைந்திருங்கள், அப்போது மாயாவை வென்றிடுவீர்கள். தற்போது இணைந்திருக்கும் சிவ சக்தி எதிர்கால லட்சியமும் கூட இணைந்த விஷ்ணு ரூபத்தினுடையது ! ஆக இரட்டை இணைந்த ரூபமானவர்கள் தானே ! பாண்டவர்கள் மற்றும் சக்திகளின் புகழ் தற்போது கூட தொடர்கிறது யாருடைய மகிமை தற்போது வரை நடக்கிறதோ அவர்களது நடைமுறை சொரூபம் எப்படி இருக்கும் ? சதா மிகச் சிறந்த சொரூபம் ! அதற்கு கீழே ஏன் இறங்குகிறீர்கள் ?

எவருக்காவது உயர்ந்த இருக்கை கிடைக்கிறது என்றால், யாராவது விட்டுவார்களா என்ன? இந்நாட்களில் முள் நிறைந்த நாற்காலியைக் கூட எவரும் விடுவதில்லை. உங்களுக்கோ பாப்தாதா சதா சுகம் தரும் ஸ்திதியின் இருக்கையைத் தருகிறார். நல்ல பொசிஷனில் அமர வைக்கிறார். பிறகு ஏன் கீழே வருகிறீர்கள்? ஆனால் அவர்களோ நாற்காலிக்குப் பின்னால் எவ்வளவு பிரயத்தனப்படுகிறார்கள். அது துக்கம் தரக் கூடியது என தெரியவும் செய்யும் . பிறகும் கூட விடுவதில்லை. ஆக நீங்கள் உயர்ந்த ஸ்திதியின் (மனோநிலை) நாற்காயை ஒரு போதும் விடாதீர்கள். சதா உங்களது ஃபரிஸ்தா நிலையின் இருக்கையில் பொருந்திவிடுங்கள், அதீந்திரிய சுகத்தின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருப்பீர்கள். தந்தையின் மூலம் இவ்வளவு எளிதான ஆஸ்தி கிடைக்கிறது என்றல் வேறு என்ன வேண்டும் ? அழிவற்ற ஆஸ்தியை ஏன் விட்டு விடுகிறீர்கள்? ஒரே ஒரு சிறு விசயத்தைத்தானே நினைக்க வேண்டும். நாம் பாபாவினுடையவர்கள், பாபா நம்முடையவர்,. இந்த ஒரு விசயத்தில் அனைத்துமே அடங்கியுள்ளது. இது விதை ! விதையைப் பிடிப்பது எளிது தானே ! மரத்தின் விஸ்தாரத்தைப் பிடிப்பது என்பது கடினம் ! ஆக ஒரு விசயத்தை நினைவிற் கொள்ளுங்கள். தற்போது மறக்காதவர்களாக ஆகுங்கள். துவாபர் - கலியுகத்தில் மறக்கக் கூடியவர்கள் ஆனீர்கள். மேலும் இச்சமயத்தில் மறக்காதவர்கள் ஆகிறீர்கள். இந்த வரதான பூமியிலிருந்து விசேஷமாய் மறக்காதவர்கள் ஆவதற்கான அதாவது நினைவு சொரூபமாக ஆவதற்கான வரதானத்தை எடுத்துச்

செல்லுங்கள். மறந்து போவதை இங்கேயே விட்டு விட்டுச் செல்லுங்கள். மறக்கும் சம்ஸ்காரம் இனி கிடையாது. ஏதேனும் விசயம் எப்போதாவது ஏற்பட்டால் இந்த வரதானத்தை நினைவு செய்யுங்கள்.

பாபா குழந்தைகளைச் சந்திக்க எங்கிருந்து வருகிறார்? குழந்தைகள் வரவேண்டியுள்ளது எனில், தந்தையும் வர வேண்டியுள்ளது. நீங்களோ இந்த பூவுலகிலிருந்தே வருகிறீர்கள், தந்தையோ இந்த உலகிற்கே அப்பாற்பட்ட உலகிலிருந்து வருகிறார். தந்தையின் சிநேகம் குழந்தைகளுக்காக எப்பவுமே உள்ளது. சதா குழந்தைகளின் நினைவே பாபாவிற்கு உள்ளது. பாபாவிற்கு வேறு வேலை இருக்கிறதா என்ன? குழந்தைகளை நினைவு செய்வது. இதே வேலை தானே! நீங்கள் அறிந்திருந்தாலும் சரி, அறியாவிட்டாலும் சரி, ஆனால் பாபாவே நினைவு செய்கிறார். எப்படி தந்தையின் வேலை குழந்தைகளை நினைவு செய்வதே..... அப்படியே குழந்தைகளின் வேலை பாபாவை நினைவு செய்வது! சதா அன்பிலே மூழ்கியிருங்கள்.

2) சதா பாதுகாப்பிற்கான சாதனம் - நினைவின் பட்டி:

நாடகப்பிரகாரம் கலியுக உலகின் துக்கம் மற்றும் அசாந்தியின் காட்சிகளைப் பார்த்து எல்லையற்ற வைராக்கிகளாய் ஆகிக் கொண்டே போவீர்கள். என்ன நடந்தாலும் சரி, உங்களது முன்னேறும் கலையாகவே இருக்க வேண்டும். உலகிற்கு ஐயோ ஐயோ என்னும் கூச்சல். மேலும் உங்களுக்கு வெற்றி முழக்கம்! இந்த உலகம் ஐயோ ஐயோ ! என ஆகப்போகிறது. ஐயோ ! ஐயோ ! என்றால் அழிந்து போவது! எந்த ஒரு பரஸ்திதி (சோதனைக்காலம்) யிலும் பயப்படக்கூடாது. நமக்காகத் தயாராகிக் கொண்டிருக்கிறது சாட்சியாக இருந்து அனைத்து விதமான விளையாட்டுகளையும் பாருங்கள். சிலர் அழுகின்றனர், சிலர் கதறுகின்றனர். சாட்சியாக இருந்து பார்க்கும் போது மகிழ்ச்சி ஏற்படுகிறது. என்ன நடக்கும்? இந்த கேள்வி கூட எழுவதில்லை. இது நடக்கவே வேண்டும். இம்மாதிரி உறுதியாக இருக்கிறீர்கள் அல்லவா? அனேக முறை இந்த அனைத்து குழப்பங்களைப் பார்த்துள்ளீர்கள். இப்போது கூட பார்க்கிறீர்கள். உலகில் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். ஆனால் நினைவு பட்டியில் இருப்பவர்கள் சதா பாதுகாப்பாக இருப்பர்.

அனைவரும் சதா பரிஸ்தாக்களைப் போன்று இரட்டை ஒளி நினைவில் உறுதியாக இருக்கிறீர்களா? பரிஸ்தாக்களின் புகழ் மகிமை உண்டு. அவை நம்முடைய மகிமை என்று அனுபவம் செய்கிறீர்களா? இந்த பழைய தேகத்தில் இருந்தாலும், தேக உணர்விலிருந்து விலகிய நிலை. இதுவே பரிஸ்தா வாழ்க்கை என்றழைக்கப்படுகிறது. இந்த வாழ்க்கை சதா இலேசாக இருப்பதன் காரணமாக உயர்ந்த நிலையிலேயே இருப்பர். ஏனெனில், லேசானது ஒருபோதும் கீழே வருவதில்லை. கீழே, தாழ்ந்த நிலையில் வரும்போது கட்டாயம் பாரம் தான்! ஃபரிஸ்தா என்றால் பந்தனமில்லா நிலை. எந்த உறவும் கிடையாது. காரிய நிமித்தமாக ஆதாரமாக எடுப்பது, பிறகு உடனே அப்பாற்பட்ட நிலைக்குச் சென்று விடுவது!

வரதானம்:

பிரம்மா பாபாவைப் போன்று மகா தியாகத்தின் மூலம் மகான் பாக்கியத்தை ஏற்படுத்தக்கூடிய நம்பர் 1 பரிஸ்தாவிலிருந்து விஷ்வ மகாராஜன் ஆகுக!

நம்பர் 1 பரிஸ்தாவிலிருந்து உலக மகாராஜன் ஆவதற்கான வரதானம் பிரம்மா பாபாவின் ஒவ்வொரு செயல் என்னும் அடி மீதும் அடி எடுத்து வைக்கக்கூடிய குழ:நதைகளுக்கு மட்டுமே கிடைக்கும். அவர்களுடைய மனம், புத்தி சதா பாபாவிற்கு முன்னர் அர்ப்பணமாகி இருக்கும். எப்படி பிரம்மா பாபா இந்த மகா தியாகத்தின் மூலம் மகா பாக்கியத்தை அடைந்தார். அதாவது நம்பர்1 முழுமையான பரிஸ்தா மற்றும் நம்பர் 1. உலக மகா ராஜன் ஆனார். அப்படி பாபாவைப் பின்பற்றக்கூடிய குழந்தைகளும் மகா தியாகி மற்றும் சர்வம்ச தியாகிகளாய் இருப்பர். சம்ஸ்கார ரூபத்திலும் விகாரங்களின் வம்சங்களைத் தியாகம் செய்வர்.

சுலோகன்:

தற்போது அனைத்து ஆதாரங்களும் அறுந்து போகும் . எனவே ஒரே ஒரு பாபாவை உங்கள் ஆதாரமாக்கிக் கொள்ளுங்கள்.

ஓம் சாந்தி

## அன்பின் வழிமுறை

பாப்தாதா அனைத்து குழந்தைகளின் நினைவு மற்றும் அன்பிற்கு பதிலளிக்கும் முறையில், குழந்தைகளைப் போன்று சாகார் (பௌதீக ரூபத்தில் வருகிறார். ஏனெனில் சமமாக ஆவதுதான் சிநேகத்திற்குப் பதிலளிப்பதாகும். பாபா வந்து விடுகின்றார். குழந்தைகள் சமமாகி விடுகிறார். பாபா பரகாய பிரவேசமாகி கூட அன்பின் உறவிற்கு பதிலளிக்க வந்து விடுகிறார். இப்போது குழந்தைகள் என்ன செய்ய வேண்டும்? அனைத்து குழந்தைகளுமே சிநேகிகள் தான், மதுபன் வாசி ஆவதே சிநேகத்திற்கான பதிலை அளிப்பதுதான். தூர தூரத்திலிருந்து ஓடி வருவது, இதுவும் சிநேகம்தான்! சம்பூர்ண (முழுமை) சிநேகத்திற்குப் பதில் என்ன? சிநேகிகள் தானே ? கூடவே பாபாவின் சிநேகமும் உள்ளது. அனைத்து குழந்தைகளும் பாபாவிற்குச் சமமாக வேண்டும் என்னும் ஒரே சங்கல்பமே எப்போதும்! பாபா உங்கள் எல்லோரையும் போன்று, சிநேகத்தின் காரணமாய், சாகார (இப்பூவுலக) வதன் வாசி, சாகார ரூபதாரி ஆகிவிடுகிறார், அதே போன்று நீங்கள் அனைவரும் பாபாவைப் போன்று ஆகாரி அவ்யக்த வதனவாசி ஆகுங்கள். அல்லது நிராகாரி தந்தையின் குணங்களுக்கு சமமாய் அனைத்து குணங்களிலும் மாஸ்டர் ஆகிவிடுங்கள். இதற்கே சம்பூர்ண சிநேகத்திற்கான பதில் என கூறப்படுகிறது. இவ்வாறு சம்பூர்ண சிநேகத்திற்குப் பதில் அளிப்பவர்கள் ஆகிவிட்டீர்களா? அல்லது இனிமேல் தான் ஆக வேண்டுமா? நிச்சயம் ஆகியுள்ளீர்கள். ஆனால் நம்பர் பிரகாரம் வரிசைக்கிரமமாக!

இன்று பாப்தாதா அனைத்து சிநேகி குழந்தைகளின் விளையாட்டுக்களைப் பார்த்துக் கொண்டிருந்தார் என்ன விளையாட்டாக இருக்கும் அது ? விளையாட்டைப் பார்க்க வேண்டுமெனில் உங்களுக்கும் நன்றாகத்தான் இருக்கிறது. என்ன பார்த்தார்? அமிர்தவேளை நேரமது. ஒவ்வொரு ஆத்மாவும், பறவைகள் போலஎழக் கூடியவர்கள், ராக்கெட் வேகத்தை விட வேகமாகப் பறக்கக் கூடியவர்கள், ஒலியை விட வேகமாகச் செல்லக் கூடிய அனைவரும் அவரவர்களது சாகார (பௌதீக இடங்களில், எப்படி ஆகாய விமானம் விமான நிலையங்களில் ஒரு பாதையில் வந்திறங்குவது போன்று தமது

விமான நிலையத்தில் வந்து இறங்கிவிட்டீர்கள். லட்சியமும், வழியும் அனைவருக்கும் ஒன்றுதான் ! பறந்து பாபா சமமாய் ஆவது, அதற்கான வழி, ஒரே வினாடியில் பறப்பது ஆனால் என்ன ஆனது? எப்படி விஞ்ஞானத்தின் சாதனம் ஆகாய விமானம் பறக்கும்போது, முதலில் சோதனைநடைபெறுகிறது. பிறகு எரிபொருள் நிரப்பப்பட வேண்டியுள்ளது. என்னென்ன வேண்டுமோ, பெட்ரோல் வேண்டும், காற்று வேண்டும், உணவு வேண்டும், அதன் பிறகு தரையை விட்டு கிளம்பும். பிராமண ஆத்மா ரூப விமானம் கூட தனது இடத்தில் வந்தே விட்டது. ஆனால் அதற்கான வழி என்ன இருந்ததோ, ஒரு வினாடியில் பறப்பது, இதில் ஒரு சிலர் சோதனையிலிருந்து விடுகின்றனர். நான் ஆத்மா, சரீரம் இல்லை - இந்த சோதனையில் இருந்து விடுகின்றனர். மேலும் ஞான மனம் (சிந்தனை) மூலமாக தன்னை சக்திகளின் மூலம் முழுமையாக்குவதில் இருந்து விடுகின்றனர். நான் ஆத்மா, சரீரம் இல்லை. இந்த சோதனையில் இருந்து விடுகின்றனர். மேலும் ஞான மனனம் (சிந்தனை) மூலமாக தன்னை சக்திகளின் மூலமாக முழுமையாக்குவதில் இருந்து விடுகின்றனர். நான் மாஸ்டர் ஞான சொரூபம், நான் மாஸ்டர் சர்வ சக்திவான் இந்த சுத்த சங்கல்பம் வரை இருந்தனர், ஆனால் சொரூபம் ஆகவில்லை. ஆக இரண்டாவது நிலையை நிரப்புவது வரை இருந்து விட்டனர். வேறு சிலர் நிரப்புவதில் சுறுசுறுப்பாகி விடுகின்ற காரணத்தினால், பறக்க முடியாமல் இருந்து விடுகின்றனர். ஏனெனில், சுத்த சங்கல்பத்தில் சிந்தித்துக் கொண்டுதானிருந்தனர், ஆனால் இந்த தேகம் என்னும் தரையை (பூமியை) விட முடியவில்லை. அசரீரி நிலையில் உறுதியாக முடிய வில்லை. மிகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலர் பாபாவின் கட்டளைப்படி வினாடியில் பறந்து சூட்சும வதனம் அல்லது மூலவதனம் அடைந்தனர். எப்படி பாபா பிரவேசம் ஆகின்றாரோ பிறகு உடன் சென்று விடுகின்றாரோ எப்படி பரமாத்மா பிரவேசமாவதற்கு தகுதியானவரோ, அவ்வாறே மறுபிறவி எடுத்துள்ள பிராமண ஆத்மாக்கள், அதாவது மகான் ஆத்மாக்களும் பிரவேசம் ஆவதற்கான தகுதியுள்ளவராவர். எப்போது வரவேண்டுமோ அப்போது பரந்தாம வாசி யோகி ஆகுங்கள், எப்போது வேண்டுமோ அப்போது சூட்சும வதனவாசியாகுங்கள். நீங்கள் சுதந்திரமானவர்கள். மூன்று உலகின் எஜமானர்கள். இச்சமயத்தில் திரிலோகிநாத் நீங்கள் நாத் என்றால், தனது இடத்திற்கு எப்போது வேண்டுமோ அப்போது செல்ல முடியும்.

பாபாவிற்கோ எந்த பந்தனமும் இல்லை, நமக்கோ தேகத்தின் பந்தனம் உள்ளது. கர்மத்தின் பந்தனம் உள்ளது என்று அனேக குழந்தைகளின் எண்ணங்கள், நம்மை வந்து அடைகின்றன. ஆனால் பாப்தாதா இந்த கேள்வியைக் கேட்கிறார். இன்னும் தேக சகிதமாக

நீங்கள் தியாகம் செய்யவில்லையா? அனைத்து குழந்தைகள் முதல் உறுதிமொழி, உடல்-மனம்-பணம் அனைத்தும் உனதே எனதல்ல! உனது என்கிறபோது, எனது என்பதே கிடையாதே! பிறகு பந்தனம் எப்படி ? இதுவோ கடனாக பாப்தாதா தந்துள்ளார். நீங்கள் டிரஸ்டி ! எஜமானர்கள் அல்ல! மறுபிறவி எடுத்த பிறகு 83 பிறவியின் கணக்கு முடிந்து விட்டது. தற்போது 84வது பிறவி ! இந்த பிறவியை பிற பிறவிகளோடு ஒப்பிட்டே பார்க்க முடியாது. இந்த திவ்ய பிறவியில் பந்தனமே கிடையாது. சம்மந்தம் மட்டுமே! கர்ம பந்தனமுள்ள பிறவி அல்ல. இது கர்மயோகி பிறவி இந்த அலௌகீகதிவ்ய பிறவியில் பிராமண ஆத்மா சுதந்திரமானவையேயன்றி, அடிமைகள் அல்ல ! உனது என்பதை எனது என்று கொண்டு வரும்போது அடிமைகளாகி விடுகிறீர்கள். என முதல் கணக்கு, எனது முதல் சம்ஸ்காரம் எங்கிருந்து வந்தது. இம்மாதிரி சுதந்திரமாயிருங்கள், இது கடனாகக் கிடைத்துள்ள சரீரம் என்கிற போது வினாடியில் பறக்க முடியும். எங்கு அமரச் செய்கிறீர்களோ அங்கு அமர்வேன், என்ன கூறுகின்றீர்களோ அதைச் செய்வோம் என உறுதியளிக்கிறீர்கள். அப்படியெனில் பாபாவிற்கு கட்டுப்பட்ட ஆத்மாக்களா? அல்லது. காமத்திற்கு கட்டுப்பட்டுள்ள ஆத்மாக்களா? கர்மங்களைச் செய்யுங்கள் என்று இது கூட பாபாதான் கட்டளையிட்டுள்ளார். நீங்கள் சுதந்திரமானவர்கள். நடத்துபவர் நடத்திக் கொண்டிருக்கிறார். நீங்கள் நடந்து கொண்டிருக்கிறீர்கள். உங்களது சரஸ்வதி தாயின் விசேஷ தாரணை இது - கட்டளை பிறப்பிப்பவர் நடத்திக் கொண்டிருக்கிறார். எனவே தான் முதல் வரிசையில் இடம் பிடித்தார். எனவே தாயையும், தந்தையையும் பின்பற்றுங்கள் !

கர்ம பாரம் கர்ம பந்தனம், சம்ஸ்காரங்களின் பந்தனம் - இந்த வீணான சங்கல்பங்களின் வலையை நீங்களே வெளிக் கொணர்கிறீர்கள். உங்களது வலையில் நீங்களே சிக்கிக் கொள்கிறீர்கள். பிறகு விடுவியுங்கள் என கூறுகிறீர்கள். நீங்கள் விடுவிக்கப்பட்டவர்களே என பாபா கூறுகிறார். விட்டால் தானே விலகும் ! தற்போது பந்தனமற்றவர்களா அல்லது பந்தனமுள்ளவர்களா? முதலிலேயே சரீரத்தை விட்டுள்ளீர்கள், மறுபிறவி எடுத்து விட்டீர்கள். இது உலக சேவைக்காக மட்டுமே சரீரம் உள்ளது, பழைய சரீரத்தில் பாபா சக்தியை நிரப்பிட நடத்திக் கொண்டிருக்கிறார். பொறுப்பு பாபாவினுடையது! நீங்கள் ஏன் எடுத்துக் கொள்கிறீர்கள். பொறுப்பை நிறைவேற்றவும் முடிவதில்லை, ஆனால் விடவும் மாட்டேன் என்கிறீர்கள். பொறுப்பை விட்டு விடுங்கள். அதாவது எனது என்பதை விட்டுவிடுங்கள். எனது புருஷார்த்தம் எனது கண்டுபிடிப்பு, எனது சேவை, எனது (புத்தியில்) டச்சிங், எனது மிக நல்ல குணம், எனது நடத்தும் வித சக்தி மிகவும் நன்று

எனது நிர்ணய சக்தி மிகவும் நன்றாக உள்ளது, எனது எண்ணமே யதார்த்தமானது. பிறர் அனைவரும் தவறான புரிதலில் உள்ளனர். இந்த எனது, எனது என்பது எங்கிருந்து வந்தது? இதுவே ராயல் மாயா ஆகும். இதிலிருந்து மாயாஜீத் ஆகிவிடுங்கள். இயற்கையின் ஆதாரத்தை எடுப்பீர்கள். ஆனால் அடிமையாக மாட்டார்கள். இயற்கையை வெல்வதே உலகை வெல்வதாகும். பிறகு ஒரு வினாடியின் கட்டளை அசரீரி பவ என்பது எளிதாகவும் தானாகவும் ஆகிவிடும். விளையாட்டு என்ன பார்த்தீர்கள். உனது என்பதை எனதாக்கிக் கொள்வதில் மிகவும் புத்திசாலிகள். யாராவது மாய மந்திரம் போட்டால், நான் என்ன செய்கிறோம் என்பது நமக்கே தெரியாது. இந்த ராயல் மாயாவும் மாய மந்திரம் செய்து விடுகிறது, நாம் என்ன செய்கிறோம் என்பது நமக்கே தெரிவதில்லை. இப்போது என்ன செய்வீர்கள்? தற்போது கர்ம பந்தனத்திலிருந்து விடுபட்டு, ஒரே ஒரு பாபாவின் சம்மந்தத்தை உணருங்கள். அப்போது சதா எவரெடியாக இருப்பீர்கள். சங்கல்பம் செய்தவுடன் அசரீரி ஆகிவிடுங்கள். இந்த பயிற்சி செய்யுங்கள். இவ்வாறு குறிப்பிட்ட நேரத்திற்கு அசரீரியாகும் அப்பிபயாசத்தை செய்து பாருங்கள். யதார்த்த சேவையின் பந்தனம் ஒரு போதும் ஏற்படுவதில்லை. ஏனெனில் யோகயுக்த், யுக்தி, யுக்த் சேவாதாரி சதா சேவை செய்தும் அசரீரியாக விளங்குவர். சேவை அதிகம் ! எனவே அசரீரி ஆக முடியவில்லை என்பது கிடையாது? எனது சேவையன்று, பாபா தற்போது அப்படியிருந்தால் பந்தனமற்று இருப்பீர்கள். டிரஸ்டி பந்தனத்திலிருந்து விடுதலையானவன், இவ்வாறு பயிற்சி செய்யுங்கள். அதிகம் கடந்து காலத்தில், கடைசி நிலை, கர்மாதீத் நிலையின் பயிற்சி செய்யுங்கள். அப்போதே உனது எனபதை எனதில் கொண்டு வரவில்லை. அடமானத்தில் (நம்பிக்கையாக கொடுத்து வைக்கப்பட்ட) தவறான எண்ணம் ( களவு) செல்லவில்லை, புரிந்ததா ? தற்போது என்ன அப்பியாசம் செய்ய வேண்டும்? இடையிடையே அவ்வப்போது எண்ணங்களின் போக்கு வரத்தைக் கட்டுப்படுத்துகிறீர்கள். (டிராஃபிக் கண்ட்ரோல்) அவ்வாறு இறுதி நேரத்தில் இறுதி நிலையின் அனுபவம் செய்யுங்கள். அப்போது கடைசி நேரத்தில் மதிப்புடன் தேர்ச்சி அடைவீர்கள்.

இப்படிப்பட்ட சதா பந்தன் முக்த், பாபாவைப் போன்று எப்போது விருப்பமோ அப்போது இயற்கையை வென்ற சங்கல்பம், சம்ஸ்காரத்திலும் கூட டிரஸ்டி சதா தேக உணர்விலிருந்தும் அப்பாற்பட்ட, இப்படிப்பட்ட உலகின் உபகாரி, உலகிற்கு நன்மை செய்யும் குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே !

1) சதா உங்களது நெற்றியில் பாக்கியத்தின் நட்சத்திரம் பிரகாசிப்பது தென்பட்டுக் கொண்டிருக்கிறதா ? அல்லது நட்சத்திரங்களின் பிரகாசித்தலுக்கு முன்னர் அவ்வப்போது மாயாவின் மேகமும் வந்து விடுகிறதா? ஒருவேளை மேகம் உருவானால் நட்சத்திரங்கள் மறைந்து விடுகின்றன. மேகம் இல்லையெனில், மிக அழகாக பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு உங்களின் பாக்கிய நட்சத்திரம் சதா பிரகாசிக்கின்றதா? அல்லது மேகம் வந்து விடுகிறதா ? பிராமணர்கள் ஆகிவிட்டதும் நட்சத்திரம் பிரகாசிக்கிறது. ஆனால் நட்சத்திரங்களுக்கு முன்னால் மேகம் வரக்கூடாது. நட்சத்திரங்களின் பிரகாசம் மறைக்கப்பட்டு விடக்கூடாது. இதில் கவனம்! போட்டோ எடுக்கும் போது மேகம் படந்து விட்டால் போட்டோ சரியாக வருமா? உருவங்களே தெரியாது. அவ்வாறே பிரகாசிக்கும் நட்சத்திரங்களுக்கு முன்னால் மேகம் வந்துவிட்டால், சாட்சாத் காரம் (தெய்வீக காட்சி ) எப்படி செய்விப்பீர்கள். நீங்களோ பாபாவை வெளிப்படுத்தப் போகிறவர்கள். அதாவது தன் மூலம் பாபாவை வெளிப்படுத்தக் கூடியவர்கள். மேகங்களுக்கு மத்தியில் எப்படி சாட்சாத்காரம் நிகழும் ? ஆக சாக்ஷ்ôத்காரம் எப்போது செய்விப்பீர்கள். எப்போது விநாசம் ஆகுமோ அப்போதா இப்போதே அப்படி ஆகட்டும். ஒருவேளை பலகாலம் மேகங்களை அகற்றும் பயிற்சி இல்லையெனில், மேகங்களும் கடைசி நேரத்தில் வந்து விடும். சாக்ஷ்ôத்காரத்திற்காக நிற்கிறீர்கள். அச்சமயத்தில் மேகம் வந்து விட்டால், மொத்த நிகழ்ச்சியும் குலைந்து போகும், தற்போது அம்மாதிரி அப்பியாசம் செய்யுங்கள், தூரத்திலேயே மேகம் ஓடி விட வேண்டும். அறிவியன் சாதனங்கள் சூறாவளியை, மலைப்பாதைகளை மாற்றிவிட முடியவில்லையா? அந்த அறிவியலோ முழுமையானதல்ல. அறிவியல் ஒரு போதும் முழுமையானதாக முடியாது. ஏனெனில் அது மனித வழி ! சில சமயம் மேலே சில சமயம் கீழே ஆகிக் கொண்டிருக்கிறது. ஆக விதிக்குப் புறம்பானது ஆகிவிட்டதல்வா ? பாபாவின் ஸ்ரீமத்படி நடக்கக் கூடியவர்களோ என்ன விரும்புகிறார்களோ அதைச் செய்ய முடியும். ஆக, தடையை நீக்குவதற்கு பல காலம் பயிற்சி தேவை. புருஷார்த்தம் (முயற்சி) என்னவோ அனைவரும் செய்து கொண்டுதானிருக்கிறீர்கள். ஆனால் அதன் வேகம் என்ன?ஒரு வினாடியின் வேலை, அதை நீங்கள் இரண்டு மணி நேரம் செய்தால், நேரம் முடிந்து போய்விடுமல்லவா ? கேள்விக்குச் சரியாக தந்தாலும் அது தர வேண்டிய நேரத்திற்குத் தரவில்லையெனில், பாஸ் ஆவீர்களா? அல்லது தோல்வியுறுவீர்களா? ஏதோ செய்கிறோம், நடந்து கொண்டுதானிருக்கிறோம், இது தற்போது வேலைக்கு ஆவாது.

தினமும் வகுப்புக்கு வருகிறோம், அதுவும் தொடர்ந்து, சரியானநேரத்திற்கு சேவையும் செய்கிறோம், ஆனால் பாபாவின் கட்டளை. நிரந்தர யோகி, சகஜயோகி, இதில் தொடர்ந்தும், சரியான நேரத்திலும் இருங்கள். வகுப்புக்கு வருவதால் வருகைப் பதிவு மார்க் என்னவோ கிடைக்கத்தான் செய்யும். ஆனால் முதல் நம்பரில் வருவது என்பது இந்த வருகைப் பதிவு அதாவது நிரந்தர யோகி, சகஜயோகி மூலம் தான் ஆக முடியும். எந்த மாலையில் வரக் கூடியவர்கள்? அவ்வப்போதுதான் இந்த ஸ்திதியில் ஸ்திரமாய் இருக்கிறீர்கள் என்றால், அவ்வப்போது பூஜிக்கப்படக் கூடிய மாலையில் வருவீர்கள், பின்னால் வரும் மணியாவீர்கள். தாய் மார்கள் சேவை செய்வீர்கள் ? அனைவரும் முதல் நம்பரில் போவீர்களா? எவ்வளவு சேவை செய்கிறீர்களோ அத்தனை லட்சம் மடங்கு, கோடி மடங்கு கிடைக்கும். எனவே இது சங்கமயுகத்தில் செய்து அதன் பலனை அடைவதற்கான காலம் ! இப்போதே செய்ய வேண்டும்,இப்போதே அடைய வேண்டும். இல்லறத்தில் இருந்து கொண்டே இரட்டை சேவை செய்யுங்கள். சேவை செய்வோரும் கிடைப்பார்கள், சென்டரும் திறக்கப்பட்டுவிடும். சமர்ப்பணமாவோர் குறைவாகவே உள்ளனர். அவர்கள் மேற்பட்டவைகளை செய்து சுற்றி வர வேண்டும். ஆனால் சென்டரை நடத்து வோர் இல்லறவாசிகளாக இருக்கலாம். இப்படி கூட சென்டர்களைத் திறக்கலாம். குழந்தைகள், இல்லறத்தின் தொந்தரவு இருந்தால் தனியாக எடுத்து கவனித்து வரலாம். குழந்தைகள், வீட்டிற்கு தொந்தரவு இல்லையெனில், வீட்டிலேயே சென்டர் நடத்தலாம்.

2) சதா ஆடாது அசையாது இருக்கிறீர்களா? கல்ப முன்னரும் கூட இராவண சேனை அசைப்பதற்கு முயற்சி செய்தது. ஆனால் அங்கதன் நிலை மிக உறுதியாக இருந்தது. பிரச்சனைகள் வரும், பிறகு சென்று விடும், சுய ஸ்திதி முன்னேறச் செய்யும். பிரச்சனைகளுக்குப் பின்னர் ஓடும் போது சுய ஸ்திதி போய் விடும். ஏதேனும் பிரச்சனைகள் வந்தால், தானாகவே குதித்துச் சென்று விடுங்கள். அதனால் கடந்து சென்று விடுவீர்கள். பிரச்சனைகள் வருவது கூட அதிர்ஷ்டம் தான்! இந்த சோதனை அஸ்திவாரத்தை உறுதிப் படுத்துவதற்கான சாதனமாகும். இவை உங்கள் நம்பிக்கையை அசைத்துப் பார்க்க வருகின்றன. ஒரு முறை அங்கதனுக்கு சமமாய் உறுதியாகி விட்டீர்கள் எனில், அவை உங்களுக்கு நமஸ்காரம் செய்யும். முதலில் பயங்கரமான ரூபத்தில் வரும் பிறகு தாசி ரூபத்தில் வரும். நாம் மகாவீரர்கள் என சவால் விடுங்கள். தண்ணீரில் போட்ட கோடு நிலைக்குமா ? மாயை ஞானக் கடலின் மீது எவ்வித பிரச்சனையும் போரிட முடியாது, கோடு போடவும் முடியாது.

3) சதா ஒரே பலம், ஒரே நம்பிக்கை இதே ஆர்வத்துடன் உள்ளீர்களா? யார் ஒரே நம்பிக்கையில் இருக்கின்றனரோ அவர்களே ஏக்ரஸ் (ஒரே ரசனை) நிலையிலிருக்கின்றனர். வேறு எந்த ரசனையும் இப்படிப்பட்ட ஆத்மாக்கள் சதா தாங்களும் கலங்கரை விளக்கமாகி, தடைகளற்று செல்கின்றனர். அனேகர்களுக்கு நிமித்தமாகி வழி காண்பிக்கக் கூடியவர்களாகின்றனர். ஆக தினமும் எத்தனை ஆத்மாக்களுக்கு கலங்கரை விளக்கமாகி வழிகாட்டுகிறீர்கள். இதுவே பிராமணர்களின் கடமையாகும், இதுவே தொழில் - நடைமுறையாகும்.

4. அனுபவி மூரத் மூலம் பாபாவின் முகத்தின் வெளிப்பாடு : சதா பாபாவின் குணங்களின் அனுபவி மூரத்தாக இருக்கிறீர்கள், பாபாவின் குணத்தைப் பாடுகிறீர்கள், அவை அனைத்தின் அனுபவ மூரத்தானே நீங்கள்? ஆனந்தத்தின் கடல் பாபா என்ற அதே ஆனந்தக் கடலின் அலைகளில் நீந்தக் கூடிய அனுபவ மூரத். யார் சதா சர்வ குணங்களின் அனுபவிகளோ அப்படிப்பட்ட அனுபவ மூர்த்திகளின் மூலம் பாபாவின் முகம் வெளிப்படுகிறது. நீங்கள் அனைவரும் பாபாவை வெளிப்படுத்தக் கூடியவர்கள் இவ்வளவு மகான்கள் நீங்கள், பரம ஆத்மாவையே வெளிப்படுத்தக் கூடியவர்கள். ஒவ்வொருவர் முகத்தின் மூலம் பாபாவின் குணம் தென்படட்டும். யார் தொடர்பில் வருவாரோ அவர்களை ஆனந்தம், அன்பு, சுகம் அனைத்து குணங்களின் அனுபவிகள் நீங்கள்.

5) பின்னால் வரக்கூடியவர்களின் பாக்கியம் கூட குறைந்தது அல்ல. மிகவும் சிரேஷ்டமானது எப்படி பின்னால் வரக் கூடியவர்கள் ஏற்கனவே தயாராக செய்து வைக்கப்பட்ட பின் வந்துள்ளனர். எவ்வாறு தாத்தா, கொள்ளு தாத்தா விதையிட பேரன், பேத்திகள் வந்து சாப்பிடுகின்றனர். ஆக, பின்னால் வரக் கூடியவர்கள் பழத்தை உண்பவர்கள். தற்போது எவ்வளவு நல்ல சாதனங்கள், மற்றும் இடம் தயாராக கிடைக்கின்றன. கடையக் கூடிய நீங்கள் வெண்ணெயை உண்பவர்கள். எனவே சதா குஷியாய் உள்ளீர்கள். சதா தமது பாக்கியத்தை மேலும் தரக்கூடிய வள்ளலையும் நினைவு செய்யுங்கள். பாப்தாதா சதா கூறுகிறார். சிறியவர்கள் இறைவனுக்கு (அல்லா) சமமானவர்கள் !

வரதானம் :

பழைய உடல், உலகை மறக்கக் கூடிய, பாப்தாதாவின் உள்ளம் எனும் சிம்மாசனத்தில் வீற்றிருப்போர் ஆகுக !

சங்கமயுகத்தின் சிரேஷ்ட ஆத்மாக்களின் இடமே பாப்தாதாவின் உள்ளமெனும் சிம்மாசனம் ஆகும். இப்படிப்பட்ட சிம்மாசனம் முழு கல்பத்திலும் கிடைக்க முடியாது. உலக இராஜ்யத்தின் அல்லது மகான் அரசாங்க பீடம் கூட கிடைக்கக் கூடும். ஆனால் (இறைவனின்) இந்த சிம்மாசனம் கிடைக்காது. இது அவ்வளவு விசால சிம்மாசனம், போங்கள், வாருங்கள், உண்ணுங்கள், உறங்குங்கள், ஆனால் சதா சிம்மாசனத்தில் அமர்ந்திருக்க முடியும். எந்த குழந்தைகள் சதா பாப்தாதாவின் உள்ளமெனும் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறார்களோ அவர்கள் இந்த பழைய சரீரம், சரீர உலகினை மறந்திருப்பார்கள், இதனை பார்த்தும் பார்க்காதிருங்கள்.

சுலோகன் :

எல்லைக்குட்பட்ட பெயர், புகழ், பெருமையின் பின்னால் ஓடுவது என்பது நிழலுக்குப் பின்னாலேயே இருப்பது !

ஓம் சாந்தி

30.11.1979 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" சுவமானத்தில் (சுயகௌரவத்தில்) நிலைத்திருக்கும் ஆத்மாவின் அடையாளம் "

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பலகோடி மடங்கு பாக்கியம் நிறைந்த ஆத்மாவாகப் பார்க்கிறார். ஒவ்வொருவரின் உயர்ந்த பிராப்தி எப்பொழுதும் தந்தையின் எதிரில் இருக்கிறது. மேலும் எல்லைக்கப்பாற்பட்ட தந்தைக்கு இது தான் குழந்தைகள் மேல் இருக்கும் பெருமிதம் ஆகும். உலகின் எதிரில் இத்தனை அனைத்து குழந்தைகளும் உயர்ந்த பூஜைக்குரியவர்கள். வரிசைக்கிரமமான முயற்சியாளராக இருந்த போதிலும் கடைசி குழந்தை கூட உலகின் எதிரில் மகிமைக்குத் தகுதியான மற்றும் பூஜைக்குரியவராக இருக்கிறார். கடைசி குழந்தைக்குக் கூட இதுவரையில் மகிமை மற்றும் பூஜை நடந்து கொண்டிருக்கிறது. ஒரேயொரு எல்லைக்கப் பாற்பட்ட தந்தையின் இத்தனை குழந்தைகள். அந்த மாதிரி தகுதியானவர்களாக ஆகிறார்கள். அனைவரும் எவ்வளவு பலகோடி மடங்கு பாக்கியம் நிறைந்தவர்கள் என்று இப்பொழுது யோசித்துப் பாருங்கள். இன்று வரையிலும் பக்த ஆத்மாக்கள் வரிசைக்கிரமமான தேவதா தர்மத்தைச் சேர்ந்த ஆத்மாக்கள் உங்களுடைய தரிசனத்தின் தாகம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். சைத்தன்யத்தில் அந்த மாதிரி பாக்கியசாலியாக ஆகியிருக்கிறீர்கள், அந்த மாதிரி தகுதியானவர்களாக ஆகியிருக்கிறீர்கள், அதனால் தான் இன்று வரையில் அவர்களுடைய தரிசனத்தின் தாகமுள்ளவர்களாக இருக்கிறார்கள். எனவே பாப்தாதாவிற்கு 16,000-ன் மாலையின் கடைசி மணி மேலும் பெருமிதம் இருக்கிறது. எப்படிப்பட்டவராக இருந்தாலும், முயற்சி செய்வதில் அலட்சியமானவராக இருந்தாலும், மத்திய நிலையின் முயற்சி செய்பவராக இருந்தாலும் அல்லது தீவிரமாக முயற்சி செய்பவராக இருந்தாலும், தந்தையின் குழந்தையாக ஆனார், பூஜைக்குரிய மற்றும் மகிமைக்குரியவர் ஆனார். ஏனென்றால் பாரஸ்நாத் தந்தையின் தொடர்பினால் இரும்பிலிருந்து தங்கமாகவோ ஆகியே விட்டார்கள். பாரஸ் என்ற உலோகத்திற்கு (இரும்பை தங்கமாக்குவது) மதிப்பு அவசியம் இருக்கிறது. எனவே ஒருபொழுதும் சுவமானத்தில் தன்னை குறைந்தவராக நினைக்காதீர்கள். தேக அபிமானத்தில் வராதீர்கள். சுவமானத்தில் இருப்பவர் ஒருபொழுதும் அபிமானத்தில் வர முடியாது. அவர் எப்பொழுதும் பணிவானவராக இருப்பார், எவ்வளவு பெரிய சுவமானம் இருக்கிறது. அந்த அளவே 'சரி ஐயா' என்று

கூறும் பணிவானவர். சுவமானத்தில் இருப்பவர் அனைவருக்கும் மரியாதை கொடுப்பதில் வள்ளலாக இருப்பார். சிறியவர்கள் - பெரியவர்கள், ஞானி - அஞ்ஞானி, மாயாவை வென்றவர் அல்லது மாயா வசமாகியிருப்பவர், குணம் நிறைந்தவர் அல்லது ஒன்றிரண்டு அவகுணமும் இருக்கிறது அதாவது குணம் நிறைந்தவர் ஆவதற்கான முயற்சி செய்பவராக இருந்தாலும் சுவமானத்தில் இருப்பவர் அனைவருக்கும் மரியாதை கொடுக்கக்கூடிய வள்ளலாக இருப்பார். அதாவது அவர் சுயம் சம்பன்னமாக இருக்கும் காரணத்தினால் எப்பொழுதும் இரக்க மனமுடையவராக இருப்பார். வள்ளல் மற்றும் இரக்க மனமுடையவர். ஒருபொழுதும் எந்த விதமான ஆத்மா மேலும் எண்ண அளவில் கூட அடக்குமுறையில் காட்டுவதில் வர மாட்டார். இரக்கம் இருக்கும் அல்லது அடக்குமுறை இருக்கும். இது 'ஏன் இப்படி இருக்கிறது', 'அந்த மாதிரி செய்யக்கூடாது', 'அந்த மாதிரி நடக்கக்கூடாது', 'ஞானம் இதைக் கூறுகிறதா என்ன' என்ற இவை அனைத்தும் அடக்குமுறை செலுத்துவதின் அம்சம் ஆகும். எனவே இரக்க மனமுடைய வள்ளல் சுவமானத்தில் இருப்பவர் அனைவருக்கும் மரியாதை கொடுப்பார், மரியாதை கொடுத்து மேலே தூக்கி விடுவார். ஒருவேளை ஏதாவது முயற்சியாளர் தன்னுடைய பலஹீனம் காரணமாக அல்லது அலட்சியத்தின் காரணமாக கீழே விழுந்து விட்டால் கூட அதாவது தன்னுடைய நிலையிலிருந்து கீழே வந்து விட்டால் கூட நீங்கள் சுவமானம் நிறைந்த புண்ணிய ஆத்மா ஆவீர்கள். புண்ணிய ஆத்மா செய்ய வேண்டிய வேலை விழுந்திருப்பவரை தூக்கிவிடுவது, சகயோகியாக ஆக்குவதேயன்றி 'ஏன் விழுந்தாய்', 'விழத்தான் வேண்டும்', 'கர்மத்தின் விளைவுகளை அனுபவிக்கிறார்கள்', 'செய்தார்கள் என்றால் அவசியம் அடைவார்கள்' என்று சுவமானம் உள்ளவர்களின் எண்ணத்தில் கூட யாருக்காகவும் அந்த மாதிரி எண்ணம் அல்லது வார்த்தை வெளியாக முடியாது. அந்த மாதிரி புண்ணிய ஆத்மா மற்றதின் வசமாகியிருப்பவரையும் சுதந்திரமானவர்களாக ஆக்குவார்கள். அடக்குமுறையின் அம்சம் கூட இருக்காது. இவரைத்தான் சுவமானத்தில் இருப்பவர் என்று கூறுவது. அந்த மாதிரியானவருக்கு தேக அபிமானம் ஒருபொழுதும் வர முடியாது. பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் அந்த மாதிரி புண்ணிய ஆத்மாவின் பார்வையோடு பார்க்கிறார். நீங்களும் தந்தையைப் பின்பற்றி நடங்கள்.

மும்பையில் இருப்பவர்கள் தந்தையைப் பின்பற்றி நடப்பதில் திறமை நிறைந்தவர்கள் தான் இல்லையா? மும்பையே தந்தையின் நகரம் தான் எனவே சாகார பாபாவிற்கும் மும்பையில் வருவது தான் அதிகமாக இருந்தது. சாகாரத்தில் எத்தனை தடவை வந்திருந்தோமோ அந்த அளவு பாலனை கிடைத்தது. எனவே அந்த மாதிரியான இடத்தில்

இருப்பவர்களும் அந்த மாதிரி புண்ணிய ஆத்மா அதாவது வேறு யாருடைய பாவத்தையும் மாற்றம் செய்து விடுபவர்கள். யாருடைய குறையையும் பார்க்காதீர்கள் ஆனால் அதிசயத்தை பாருங்கள். பிறகு அந்தக் குறையும் அதிசயத்தில் பரிவர்த்தனை ஆகிவிடும். புண்ணிய பூமியின் நிவாசிகள் நீங்கள் அந்த மாதிரி மகான்கள் தான் இல்லையா? மும்பை நிவாசிகளோ நம்பர் ஒன் எவரெடியாக இருப்பார்கள். எந்த நேரமும் விநாஷ ஜுவாலை சுடர் விட்டு எரியக்கூடும் அதற்கு முன்பு எவரெடி தான் இல்லையா? அந்த நேரமோ தயார் ஆவதிலேயே ஈடுபட மாட்டீர்கள். இப்பொழுது இன்னும் சம்பன்னம் ஆகவில்லை என்று இதை யோசிக்க மாட்டீர்கள் இல்லையா? பிரஜையை இன்னும் உருவாக்கவில்லை? என்று நினைக்க மாட்டீர்கள் இல்லையா? முன்பாகவே அனைத்திலும் சம்பன்னம் ஆக வேண்டும். இயற்கையும் உங்களுக்காக தாசியாகி சேவை செய்வதற்காக காத்துக் கொண்டிருக்கிறது. தாசியோ அவசியம் எஜமானனுக்கு காத்துக் கொண்டிருப்பார் இல்லையா? எனவே எப்பொழுதும் எஜமானத்தன்மையின் நிலையில் இருங்கள்.

குமாரர்களுடன்:

குமார் மற்றும் பிரம்மா குமார். இல்லற வாழ்க்கையிலும் குமார் மற்றும் பிராமண வாழ்க்கையிலும் பிரம்மா குமார். குமார் மட்டும் இல்லை, ஆனால் பிரம்மா குமார். ஒருவேளை குமாராக மட்டும் இருந்தீர்கள் என்றால் மாயா வரும். பிரம்மா குமாராக இருந்தீர்கள் என்றால் மாயா ஓடி விடும். எப்படி பிரம்மா ஆதிதேவ் ஆக இருக்கிறார். அதே போல் பிரம்மா குமாரும் ஆதிரத்தினமாக இருப்பார். ஆதிதேவனின் குழந்தைகள் மாஸ்டர் ஆதிதேவர்கள். தன்னை ஆதிரத்தினம் என்று நினைத்தீர்கள் என்றால் தன்னுடைய வாழ்க்கையின் மதிப்பைத் தெரிந்து கொள்வீர்கள். நீங்கள் அனைவரும் பிரபுவின் இரத்தினங்கள், ஈஸ்வரனின் ரத்தினங்கள் ஆவீர்கள் என்றால் உங்களுக்கு எவ்வளவு மதிப்பு ஆகிவிட்டது. எப்பொழுதும் தன்னை ஆதி தேவனின் குழந்தை மாஸ்டர் ஆதிதேவன், ஆதிரத்தினம் என்று நினைத்தீர்கள் என்றால் நீங்கள் என்ன காரியம் செய்தாலும் அது வீணானதாக இல்லாமல் பயனுள்ள சக்திசாலியானதாக இருக்கும். குமார் எந்தளவு சேவையிலேயே இருப்பாரோ அந்த அளவு மாயாவை வென்றவராக இருப்பார். தன்னை ஃப்ரீயாக (ஒரு காரியமும் செய்யாதவராக) வைக்காதீர்கள்.

2) குமார் அனைத்து விதத்திலும் பந்தனமற்றவர், குடும்ப பொறுப்பிலிருந்தும் பந்தனமற்றவர், மேலும் மாயாவின் பந்தனங்களிலிருந்தும் விடுபட்டவர். எந்தவொரு

பந்தனத்திற்கும் அடிமையானவர் இல்லை. பந்தனமற்ற நிலையின் அடையாளம் எப்பொழுதும் யோக சொரூபமானவர். யோக சொரூபமாக இருப்பவர் அவசியம் பந்தனமற்றவராக இருப்பார். மனதின் பந்தனமும் இல்லை. குடும்ப பொறுப்போ ஒரு விளையாட்டு. பந்தனம் என்ற முறையோடு அன்றி ஆனால் வழிகாட்டுதலின் பிரகாரம் விளையாட்டு என்ற முறையோடு சிரித்துக் கொண்டே விளையாடினீர்கள் என்றால் சின்னச் சின்ன விஷயங்களில் களைப்படையமாட்டீர்கள். ஒருவேளை பந்தனம் என்று நினைத்தீர்கள் என்றால் நொந்து போகிறீர்கள். என்ன, ஏன் என்ற கேள்வி எழுகிறது. ஆனால் வழிகாட்டுதல் படி விளையாட்டை விளையாடிக் கொண்டிருக்கிறேன் என்று அப்படி நினைப்பதினால் களைப்பற்றவராக இருப்பீர்கள். பொறுப்பு தந்தையினுடையது, நீங்கள் ஒரு கருவியாகத் தான் இருக்கிறீர்கள். குமாரரோ இரட்டை பந்தனமற்றவர், எந்த வாலும் இல்லை. எப்பொழுதும் அதிர்ஷ்டம் நிறைந்தவராக இருக்க வேண்டும், பயப்படக்கூடாது, தன்னுடைய கையால் உணவைத் தயாரிப்பது மிக நல்லது. உணவை தனக்காகவும் மற்றும் தந்தைக்காகவும் மிகவும் அன்போடு தயாரியுங்கள். முதலில் தந்தைக்கு உணவு பரிமாறுங்கள். தன்னை தனியாக இருக்கிறேன் என்று நினைப்பதினால் தான் களைப்படைந்து விடுகிறீர்கள். நாங்கள் இருவராக இருக்கிறோம் என்று எப்பொழுதும் நினையுங்கள். மற்றவருக்காகவும் தயாரிக்க வேண்டும் என்றால் விதிப்பூர்வமாக மிக அன்போடு தயாரித்தீர்கள் என்றால் மிக நன்றாக இருக்கும். குமாரர்கள் இடையில் குரூப் இருக்க வேண்டும், எப்பொழுதாவது யாராவது நோயுற்றார் என்றால் (அவரை கவனிப்பதற்கு) ஒருவர் ட்யூட்டியில் இருக்க வேண்டும். ஒருவர் இன்னொருவருக்கு உதவி செய்து சேவை செய்யுங்கள். ஒருபொழுதும் வாலை (வாழ்க்கைத் துணைவி) வைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் கூட வைத்துக் கொள்ளாதீர்கள், இல்லை என்றால் வேதனை அடைந்து விடுவீர்கள். வெளிப்படையாக தெரியவருவதில்லை. ஒருவேளை வாலை வைத்து விட்டீர்கள் என்றால் கடினமாகிவிடும். இப்பொழுது சுதந்திரமாக இருக்கிறீர்கள், பின்பு பொறுப்பு அதிகரித்து விடும். அனைவருமே தந்தையை வாழ்க்கைத் துணைவனாக ஆக்கினீர்கள் தான் இல்லையா?. அப்படியானால் ஒரு துணைவனை விட்டு விட்டு இன்னொருவரை ஆக்கப்படுமா என்ன? இதையோஉலகத்தில் கூட நல்லதாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. எனவே குமார் ஒருபொழுதும் தன்னை தனியாக இருக்கிறேன் என்று நினைக்காதீர்கள், ஒருவேளை தனியாக இருக்கிறேன் என்று நினைத்தீர்கள் என்றால் சோர்வடைந்து விடுவீர்கள்.

குமாரர்கள் ஜுவாலா ரூபம் ஆகி ஜுவாலையை எரிய வைத்தீர்கள் என்றால் விரைவில்

விநாஷம் ஏற்பட்டு விடும். யோகஅக்னியை அந்த மாதிரி சுடர்விட்டு எரிய வைத்தீர்கள் என்றால் அது விநாஷ ஜுவாலையையும் சுடர்விட்டு எரிய வைத்து விடும்.

ஒருபொழுதும் ஏதாவது விஷயத்தில் நீங்கள் ஏன் மற்றும் என்ன என்று கேட்பவர்களோ இல்லை தான் இல்லையா?. யார் மாஸ்டர் திரிகாலதரிசியாக இல்லையோ அவர் தான் ஏதாவது விஷயத்தில் ஏன் மற்றும் என்ன என்று கேட்டுக் கொண்டிருப்பார். யார் மூன்று காலங்களையும் தெரிந்திருக்கிறார்களோ அவர்கள் ஏன் மற்றும் என்ன என்று கேட்க மாட்டார்கள். ஏன், என்ன என்று கேட்பவர்களோ சிறிய குழந்தைகள். நீங்கள் அனைவரும் முதிர்ந்த நிலை வரை வந்தடைந்து விட்டீர்கள் தான் இல்லையா? வானபிரஸ்த் நிலையில் இருப்பதினால் மாயாவிடமிருந்து விலகியிருப்பீர்கள். எந்த அளவு லைன் கிளியராக (தடையற்ற நிலை) இருக்குமோ அந்த அளவு முயற்சி செய்வதின் வேகம் அதிகமாக இருக்கும். அனைவரின் லைன் கிளியராக இருக்கிறதா? குமாரர்களோ மிக அதிசயக் காரியம் செய்ய முடியும். நீங்கள் ஆன்மீக இளைஞர் குரூப் தான் இல்லையா. இன்றைய நாட்களில் இளைஞர்கள் அரசாங்கத்தை மாற்ற விரும்புகிறார்கள் என்றால் மாற்றி விடுகிறார்கள். அவர்கள் செய்வது அழித்தல் மற்றும் நஷ்ட காரியம். மேலும் நீங்கள் உருவாக்கும் காரியம் செய்வீர்கள். நீங்கள் விநாஷம் செய்யக்கூடாது, நீங்கள் ஸ்தாபனை செய்தீர்கள் என்றால் விநாஷம் தானாகவே ஏற்பட்டுவிடும்.

குமாரிகளை 100 பிராமணர்களை விட உத்தமமானவர் ஒரு கன்யா என்று கூறுகிறார்கள். மேலும் குமாரர்கள் எத்தனை பேரை விட உயர்ந்தவர்கள். 7 சீதைகளுடன் ஒரு குமாரரை காண்பிக்கிறார்கள் என்றால் நீங்கள் 700 பிராமணர்களை விட உத்தமம் ஆனீர்கள் இல்லையா?. குமாரர்கள் கடுமையான உழைப்பாளிகள், என்ன செய்ய விரும்பினாலும் அதை அவர்களால் செய்ய முடியும். ஒவ்வொரு குமாரருக்கும் தன்னுடைய குரூப்பை தயார் செய்ய வேண்டும். உங்களுக்குள் பொறாமைபடக் கூடாது ஆனால் பந்தயம் இருக்க வேண்டும். மாயா எவ்வளவு தான் உங்களை அசைப்பதற்கு முயற்சி செய்தாலும் நீங்கள் அங்கதனுக்குச் சமமாக கொஞ்சம் கூட ஆடாதீர்கள், உங்கள் விரல்களைக் கூட அசைக்க முடியாது. ஒருவேளை கொஞ்சமாவது பலஹீனத்தின் சம்ஸ்காரம் இருந்தது என்றால், மாயா உங்களை தன்னுடையவராக ஆக்கிவிடுகிறது. எனவே இறந்து மறுபிறவி எடுத்தவராக ஆகுங்கள். பழைய சம்ஸ்காரங்களிலிருந்தும் இறந்து மறுபிறவி எடுத்தவர். எந்தவொரு தடையும் உங்களைப் பொறுத்தவரை ஒரு பாடமாகும், நீங்கள் அதன் அனுபவி ஆகி ஆகி மதிப்புடன் தேர்ச்சி பெறுபவர் ஆகிவிடுவீர்கள். என்ன நடந்தாலும் சரி,

அதிலிருந்து பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். ஏன், என்ன என்பதில் செல்லக்கூடாது. குமாரர்களோ எப்பொழுதுமே சேவாதாரிகளாக இருப்பவர்கள். அனைத்து சேவைகளையும் செய்பவர். மனம் மூலமாக, வாய் மூலமாக, காரியம் மூலமாக அப்படி அனைத்திலும் சேவாதாரி, ஒருவேளை இந்த அனைவரும் அனைத்து சேவைகளையும் செய்யக்கூடிய சேவாதாரி என்றால் மிகுந்த சேவைக்கரங்களாக ஆகிவிடும். நீங்கள் அனைவரும் மிகுந்த அற்புதக் காரியங்களைச் செய்ய முடியும்.

அதர் குமாரர்களுடன்:

அரைக்கல்பம் நீங்கள் தரிசனம் செய்வதற்குச் சென்று கொண்டே இருந்தீர்கள், இப்பொழுது தந்தை உங்களை தரிசனம் செய்வதற்காக பரந்தாமத்தில் இருந்து வருகிறார். பார்ப்பதைத் தான் தரிசனம் என்று கூறுவது. தந்தை குழந்தைகளைப் பார்ப்பதற்காக வருகிறார். அந்த தரிசனம் அல்ல, இந்த தரிசனம் அதாவது சந்திப்பதற்காக. இது அந்த மாதிரியான தரிசனம் அதன் மூலம் பிரசன்னம் ஆகிவிடுவார்கள். அதர் குமார் என்றால் எப்பொழுதும் தூய்மையான இல்லறத்தில் இருப்பவர்கள். எல்லைக்கப்பாற்பட்ட குடும்பத்தில் எப்பொழுதும் சேவாதாரி, எல்லைக்குட்பட்ட குடும்பத்தில் இருந்து விலகியிருப்பவர். அதர் குமாரர்களின் குரூப் தாமரை மலர்கள் அடங்கிய பூச்செண்டு ஆகும்.

இல்லறத்தில் இருந்து கொண்டே தடைகளை அழிக்கும் நிலையில் இருக்கிறீர்கள் தான் இல்லையா? தடைகளை அழிக்கும் நிலையானது, எப்பொழுதும் தந்தைக்குச் சமமான மாஸ்டர் சர்வ சக்திவானின் நிலையில் நிலைத்திருப்பது. இந்த நிலையில் இருந்தீர்கள் என்றால் தடைகள் உங்களைத் தாக்க முடியாது. ஒருவேளை எப்பொழுதும் மாஸ்டர் சர்வ சக்திவானின் நிலையில் இருக்கவில்லை என்றால் சில நேரம் தடைகளின் வசமானவராகவும் சில நேரம் தடைகளை அழிப்பவராகவும் இருக்கிறீர்கள். எவ்வளவு நேரம் தடைகளின் வசமாகியிருக்கிறீர்களோ அவ்வளவு நேரம் லட்சக்கணக்கான மடங்கு நஷ்டத்தில் செல்கிறார்கள். எப்படி ஒரு மணி நேரத்தை பயனுள்ளதாக ஆக்கினீர்கள் என்றால் லட்சம் மடங்கு சேமிப்பாகிறது, அதே போல் ஒரு மணி நேரம் வீணாகிறது என்றால் லட்சம் மடங்கு நஷ்டம் ஏற்படுகிறது. எனவே இப்பொழுது வீணானதின் கணக்கை முடிவு கட்டுங்கள். ஒவ்வொரு விநாடியும் கவனம் இருக்க வேண்டும். பெரியதிலும் பெரிய தந்தையின் பெரிய குழந்தைகளாக இருக்கிறீர்கள் என்றால் எப்பொழுதும் இந்த கவனம் கொடுங்கள். இல்லறத்தில் இருந்து கொண்டே எப்பொழுதும்

மாயாவிடமிருந்து விலகியிருப்பவர். விலகியிருப்பவர் மற்றும் அன்பானவர். விலகியிருப்பவராக ஆகி பிறகு இல்லறத்தின் காரியத்தில் வந்தீர்கள் என்றால் எப்பொழுதும் மாயாவால் தாக்க முடியாதவராக அதாவது விலகியிருப்பவராக இருப்பீர்கள். விலகியிருப்பவர் எப்பொழுதும் பிரபுவிற்குப் பிடித்தமானவராக இருப்பார். விலகியிருக்கும் நிலை என்றால் டிரஸ்டியின் நிலை. டிரஸ்டிக்கு எதன் மேலும் பற்றுதல் இருப்பதில்லை. ஏனென்றால் என்னுடையது என்பது இருப்பதில்லை. அப்படி நீங்கள் அனைவரும் டிரஸ்டிகள் தான் இல்லையா? குடும்பஸ்தன் என்று நினைத்தீர்கள் என்றால் மாயா வரும். டிரஸ்டி என்று நினைத்தீர்கள் என்றால் மாயா ஓடி விடும். என்னுடையது என்பதின் மூலம் மாயாவின் ஜென்மம் ஏற்படுகிறது. எப்பொழுது என்னுடையது என்ற நிலையே இல்லை என்றால் மாயாவின் ஜென்மமும் ஏற்படுவதில்லை. எப்படி சாக்கடையில் கிருமிகள் உற்பத்தி ஆகின்றன. அதே போலவே எப்பொழுது என்னுடையது என்பது வருகிறதோ அப்பொழுது மாயாவின் ஜென்மம் ஏற்படுகிறது. எனவே மாயாவை வென்றவராக ஆவதற்கான சுலபமான வழி எப்பொழுதும் தன்னை டிரஸ்டி என்று புரிந்து கொள்வது. இந்த விஷயத்தில் புத்திசாலிகள் தான் இல்லையா? பிரம்மா குமார் என்றால் டிரஸ்டி. குடும்ப வாழ்க்கையில் இருந்தாலும் நீங்கள் பிரம்மா குமாரர்கள், இல்லற குமார் இல்லை. எப்பொழுது பிரம்மா குமாரின் நினைவு இருக்கிறது என்றால் குடும்பத்திலும் விலகியிருப்பவராக இருக்கிறார். பிரம்மா குமாருக்குப் பதிலாக வேறு எந்த உறவில் இருப்பவர் என்று புரிந்து கொண்டீர்கள் என்றால் மாயா வரும். எனவே தன்னுடைய ஆன்மீகக் குடும்பப் பெயரை எப்பொழுதும் நினைவில் வையுங்கள்.

எப்படி குடும்ப வாழ்க்கையில் அனைத்து விஷயங்களின் அனுபவியாக இருக்கிறீர்கள். அதே போல் மாஸ்டர் ஞானக்கடல் ஆகி ஞானத்தின் ஆழத்திலும் அனேக அனுபவங்கள் என்ற இரத்தினங்களை பிராப்தி அடைந்து கொண்டே இருக்கிறீர்கள் தான் இல்லையா? எவ்வளவு கடலின் ஆழத்தில் செல்வீர்களோ அந்த அளவு என்ன கிடைக்கிறது? இரத்தினம். அதே போலவேந்த அளவு ஞானத்தின் ஆழத்தில் செல்வீர்களோ அந்த அளவு அனுபவத்தின் இரத்தினம் கிடைக்கும். மேலும் அந்த மாதிரி அனுபவம் நிறைந்தவராக ஆகிவிடுவீர்கள். அதன் மூலம் உங்களுடைய அனுபவத்தைப் பார்த்து இன்னும் அனுபவிகளாக ஆகிவிடுவார்கள். அந்த மாதிரி அனுபவியாக ஆகியிருக்கிறீர்களா? ஒன்று ஞானம் கேட்பது மற்றும் கூறுவது, இன்னொன்று அனுபவம் நிறைந்தவராக ஆவது. கேட்பது மற்றும் கூறுவது முதல் நிலை ஆகும். அனுபவம் நிறைந்தவர் ஆவது இது தான் கடைசி நிலை ஆகும். எந்த அளவு அனுபவியாக இருப்பீர்களோ அந்த அளவு

அழியாதவராக மேலும் தடையற்றவராக இருபபீர்கள். அனுபவங்களை அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள், ஒவ்வொரு குணத்திலும் அனுபவம் நிறைந்தவர் ஆகுங்கள். என்ன கூறுகிறீர்களோ அந்த அனுபவம் ஆகட்டும். அனைத்து பாண்டவர்களும் அனுபவம் நிறைந்தவர்கள் தான் இல்லையா? அனுபவியை யாராவது அசைக்க விரும்பினால் கூட அசைக்க முடியாது. அனுபவத்தின் எதிரில் மாயாவின் எந்த விதமான முயற்சியும் வெற்றி அடைய முடியாது. மாயாவின் தடைகளிலும் கூட இப்பொழுது அனுபவியாக ஆகிவிட்டீர்கள் தான் இல்லையா. அனுபவி ஒருபொழுதும் ஏமாற்றம் அடையமாட்டார். அனுபவத்தின் அஸ்திவாரம் மிக உறுதியாக இருக்கட்டும்.

எப்பொழுதும் முயற்சி செய்வதில் அதி வேகத்தில் சென்று கொண்டே இருங்கள். சுத்தமான எண்ணத்தின் கையிருப்பு இருக்கிறது என்றால், வீணானவை முடிவடைந்து விடும். யார் தினசரி ஞானம் கேட்கிறாரோ அதிலிருந்து ஏதாவது விஷயத்தின் மேல் மனதால் சிந்தனை செய்து கொண்டே இருங்கள். வீணான எண்ணம் ஓடுகிறது என்றால் சிந்தனை சக்தியின் குறைவு. சிந்தனை செய்வதற்கு கற்றுக் கொள்ளுங்கள், ஒரே ஒரு வார்த்தையை எடுத்துக் கொண்டு அதன் நுணுக்கத்தில் செல்லுங்கள். தனக்குத் தானே தினசரி ஏதாவது ஒரு தலைப்பைப் பற்றி யோசிப்பதற்கு நேரம் கொடுங்கள், பிறகு வீணான எண்ணம் முடிவடைந்து விடும். லைன் மாறி விடும். அதர்குமார் ஒருவேளை பிரம்மா குமாராக ஆகவில்லை என்றால் முன்னேறிச் செல்ல முடியாது.

தன்னை எப்பொழுதும் பல கோடி மடங்கு பாக்கியம் நிறைந்த ஆத்மா என்று புரிந்து ஒவ்வொரு காரியமும் செய்தீர்கள் என்றால், ஒவ்வொரு காரியமும் உயர்ந்ததாக இருக்கும். உங்கள் மூலமாக அனேகர்களுக்கு செய்தி கிடைத்துக் கொண்டே இருக்கும். நீங்கள் செய்தி கொடுப்பவர்கள் எங்கே சென்றாலும், யார் தொடர்பில் வந்தாலும் அவர்களுக்கு தந்தையின் அறிமுகம் கொடுத்துக் கொண்டே இருங்கள், விதை போட்டுக் கொண்டே செல்லுங்கள். இத்தனை பேர்களுக்கு கூறினோம் ஆனால் இரண்டு-நான்கு பேர்கள் தான் வந்தார்கள். அப்படியும் நினைக்காதீர்கள். சில விதைகளின் பலன் விரைவில் வெளியாகும், சில விதைகளின் பலன் அந்த பருவ காலத்தில் வெளியாகும். இது அழியாத விதை ஆகும் அவசியம் பலன் கொடுக்கும். எனவே விதை போட்டுக் கொண்டே செல்லுங்கள் அதாவது செய்திக் கொடுத்துக் கொண்டே செல்லுங்கள். எப்பொழுதும் நினைவு மற்றும் சேவையின் சமநிலையை வைத்துக் கொண்டே ஆனந்தம் நிறைந்தவராக ஆகுங்கள். நல்லது.

வரதானம்:

மக்கள் (உங்களை) விரும்பும் சபையின் டிக்கெட் முன்பதிவு செய்யக்கூடிய இராஜ சிம்மாசனத்தின் அதிகாரி ஆகுக.

எந்தவொரு எண்ணத்தை அல்லது சிந்தனை செய்கிறீர்கள் என்றால் முதலில் இந்த சிந்தனை மற்றும் எண்ணம் தந்தைக்கு விருப்பமானதா என்று சோதனைசெய்யுங்கள். எது தந்தைக்கு விருப்பமானதோ அது மக்களின் விருப்பமானதாக இயல்பாகவே ஆகிவிடும். ஒருவேளை ஏதாவது எண்ணத்தில் சுயநலம் இருக்கிறது என்றால் மனதிற்கு விருப்பமானது என்று கூறுவோம்.மேலும் உலக நன்மைக்காக இருக்கிறது என்றால் மக்களுக்கு விருப்பமானது மற்றும் பிரபுவிற்கு விருப்பமானது என்று கூறுவோம். மக்கள் விரும்பும் சபையின் உறுப்பினர் ஆவது என்றால் சட்டம் மற்றும் ஒழுங்கின் இராஜ்ய அதிகாரம் மற்றும் இராஜ சிம்மாசனத்தை பிராப்தி செய்தி விடுவது.

சுலோகன் -

பரமாத்மாவின் துணையை அனுபவம் செய்தீர்கள் என்றால் அனைத்தையும் சுலபமாக அனுபவம் செய்து கொண்டே பாதுகாப்பாக இருப்பீர்கள்.

ஓம் சாந்தி

03.12.1979 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" விஷ்வ கல்யாணகாரி (உலகிற்கு நன்மை செய்பவர்) தான்
உலகத்தின் அதிபதி ஆக முடியும் "

பாப்தாதா அனைத்து விஷ்வ கல்யாணகாரி (உலகிற்கு நன்மை செய்யும்) குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். எப்படி தந்தை எல்லைக்கப்பாற்பட்ட விஷ்வ கல்யாணகாரியாக இருக்கிறார் ! அனைவருக்கும் இப்பொழுதே நன்மை ஏற்பட்டு விடட்டும் என்ற ஒரே ஒரு எண்ணம் தான் பாப்தாதாவிற்கு எப்பொழுதும் இருக்கிறது. அவருடைய எண்ணத்திற்கான விசேஷ ஆதாரம் இந்த விஷயம் தான். எண்ணத்தின் விதையே இதுவாகும். மற்றவை விருக்ஷத்தின் வகைவகையான விஸ்தாரம் ஆகும். அதே போலவேதந்தையின் வார்த்தைகளிலும் சதா குழந்தைகளின் நன்மைக்காக விதவிதமான யுக்திகள் அடங்கியிருக்கின்றன. கண்களில் குழந்தைகளின் நன்மைக்காக சர்ச் லைட் அதாவது மிக சக்திசாலியான ஒளி இருக்கிறது. நெற்றியில் கல்யாணகாரி குழந்தைகளின் நினைவுச்சின்னம் மணி ரூபத்தில் இருக்கிறது. ஒவ்வொரு காரியத்திலும் கல்யாணகாரி காரியம் இருக்கிறது. எப்படி தந்தையின் எண்ணம் மற்றும் வார்த்தைகளில், கண்களில் எப்பொழுதுமே நன்மை பயக்கும் பாவனை மற்றும் சுபபாவனை நிரம்பியிருக்கிறது, அதே போல் குழந்தைகள் நீங்களும் என்ன காரியம் செய்து கொண்டிருந்தாலும் கூட, எல்லைக்குட்பட்ட குடும்பத்தை நடத்துவதற்கு அல்லது ஏதாவது சேவை நிலையத்தை நடத்துவதற்கு பொறுப்பாளர் ஆகியிருந்தாலும், கூடவே உலகிற்கு நன்மை செய்யும் பாவனை இருக்கட்டும். எப்பொழுதும் எதிரில் உலகின் அனைத்து ஆத்மாக்களும் வெளிப்படட்டும். உங்களுடைய எண்ணத்தின் ஆதாரத்தினால் ஒருவர் எவ்வளவு தான் தூர இடத்தில் இருக்கக்கூடிய ஆத்மாவாக இருந்தாலும், உங்களுக்கு எப்பொழுதும் அருகில் மற்றும் நேரெதிரில் தென்படட்டும். எப்படி சேவைக்காக உங்களிடம் ஒரு படம் இருக்கிறது, எதிர்கால ஸ்ரீகிருஷ்ணரின் ரூபத்தில். முழு உலகின் பூமி உருண்டையை அவர் கையில் காண்பித்திருக்கிறார்கள். உலகின் அதிபதியாக இருக்கும் காரணத்தினால் உலகின் பூமி உருண்டையை அவருடைய கைகளில் காண்பித்திருக்கிறார்கள். அதே போல் தற்சமயத்திலும் உலகிற்கு நன்மை செய்பவராக இருக்கும் காரணத்தினால் முழு உலகின் அனைத்து ஆத்மாக்களும் உங்களுடைய நெற்றியில் எப்பொழுதும் அருகில்

இருக்கிறார்கள். இங்கே அமர்ந்திருந்த போதும் யாராவது அமெரிக்காவில் இருக்கிறார் அல்லது எவ்வளவு தூரத்திலிருக்கும் ஆத்மாவாக இருந்தாலும் ஒரு நொடியில் அந்த ஆத்மாவிற்கு தன்னுடைய உயர்ந்த பாவனை மற்றும் உயர்ந்த விருப்பங்களின் ஆதாரத்தினால் அமைதி மற்றும் சக்திகளின் கிரணங்களைக் கொடுக்க முடியும். அந்த மாதிரி மாஸ்டர் ஞானக்கடல் உலகிற்கு நன்மை பயக்கும் ஒளியைக் கொடுக்க முடியும்.

எப்படி அறிவியலின் சாதனங்கள் மூலமாக நேரம் மற்றும் சப்தம் எவ்வளவு தூரமாக இருந்த போதிலும் சமீபமாக ஆகிவிட்டது தான் இல்லையா? எப்படி விமானம் மூலமாக நேரம் எவ்வளவு அருகாமையில் ஆகிவிட்டது, கொஞ்ச நேரத்தில் எங்கிருந்து எங்கு சென்றடைந்து விடுகிறீர்கள். தொலைபேசி மூலமாக சப்தம் எவ்வளவு அருகாமையில் ஆகிவிட்டது. லண்டனிலிருக்கும் நபரின் பேச்சு கூட நேரெதிரில் பேசிக் கொண்டிருப்பது போல கேட்கும். அதே போலவே தொலைக்காட்சி சாதனங்கள் மூலமாக எந்தவொரு காட்சியும் மற்றும் நபரும் தொலைதூரத்திலிருந்தாலும் நேரெதிரில் நடப்பதாக அனுபவம் ஆகும். அறிவியலோ உங்களுடைய படைப்பு ! நீங்கள் மாஸ்டர் படைப்பவர் ஆவீர்கள். அமைதியின் சக்தி மூலமாக நீங்கள் அனைவரும் உலகின் தூரமாக இருக்கும் எந்த ஆத்மாவின் சப்தத்தையும் கேட்க முடியும். எந்த சப்தம்? அறிவியல் மூலமாக வாயின் சப்தத்தை சொல்லும் சாதனமாக ஆக முடியும். ஆனால் மனதின் சப்தம் வந்தடைய முடியாது. அமைதியின் சக்தியின் மூலம் ஒவ்வொரு ஆத்மாவின் மனதின் ஓசை யாரோ நேரெதிரில் பேசிக் கொண்டிருப்பது போல் அவ்வளவு அருகாமையில் கேட்க முடியும். ஆத்மாக்களின் மனதின் அமைதியின்மை, துக்கமான நிலையின் சித்திரங்கள், எப்படி தொலைக்காட்சி மூலமாக காட்சி மற்றும் நபரை தெளிவாகப் பார்க்கிறீர்களோ அதே போல் தெளிவாகத் தென்படும். எப்படி இந்த சாதனங்களின் மின் தொடர்பை இணைத்தீர்கள், சுவிட்ச் ஆன் செய்தீர்கள், மேலும் தெளிவாகத் தென்படுகிறது மற்றும் கேட்கவும் முடிகிறது. அதே போல் தந்தையுடன் தொடர்பை இணைத்து, உயர்ந்த பாவனை மற்றும் விருப்பத்தின் சுவிட்ச் ஆன் செய்தீர்கள் என்றால் தூரத்தில் இருக்கும் ஆத்மாக்களையும் அருகில் அனுபவம் செய்வீர்கள். இதைத் தான் விஷ்வ கல்யாணகாரி என்று கூறுவது. அந்த மாதிரி நிலையை உருவாக்குவதற்காக முக்கியமாக எந்த சாதனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இவை அனைத்தின் ஆதாரம் அமைதி. தற்சமயம் அமைதியின் சக்தியை சேமிப்பு செய்யுங்கள். மனதின் ஓசை எண்ணங்களின் ரூபத்தில் வரும். மனதின் ஓசை என்றால்

வீணான எண்ணங்களை முடித்து விட்டு ஒரு சக்திசாலியான எண்ணத்தில் இருங்கள். எண்ணங்களின் விஸ்தாரத்தை உள்ளடக்கி சார ரூபத்தில் கொண்டு வாருங்கள். அப்பொழுது அமைதியின் சக்தி இயல்பாகவே அதிகரித்துக் கொண்டே இருக்கும்.

வீணானது வெளிமுகமாக இருப்பது மற்றும் சக்திசாலியானது உள்நோக்குமுகமாக இருப்பது. அதே போலவேபேச்சிலும் வீணானதை உள்ளடக்கி சக்திசாலியான சாரத்தில் கொண்டு வாருங்கள். அப்பொழுது தான் அமைதியின் சக்தியை சேமிக்க முடியும். அமைதியின் சக்தியின் விசித்திரமான எடுத்துக்காட்டைப் பார்ப்பீர்கள். அதே போல் தூரத்திலிருக்கும் ஆத்மாக்கள் உங்கள் எதிரில் வந்து நீங்கள் எனக்கு சரியான மார்க்கத்தைக் காண்பித்தீர்கள் என்று கூறுவார்கள். நீங்கள் எனக்கு புகலிடத்தை காண்பித்துக் கொடுத்தீர்கள். நீங்கள் என்னை அழைத்தீர்கள், மேலும் நான் வந்தடைந்து விட்டேன். உங்களுடைய தெய்வீக சொரூபம் அவருடைய நெற்றி என்ற தொலைகாட்சியில் தெளிவாகத் தென்படும். மேலும் இதுவோ நேரெதிரில் சந்திப்பது என்று அனுபவம் செய்வார்கள். அந்த அளவு தெளிவாக அனுபவம் செய்வார்கள். அமைதியின் சக்தி இந்த அளவு ஆன்மீக வண்ண ஜாலத்தைக் காண்பிக்கும். எப்படி தொடக்க காலத்தில் தூரத்தில் அமர்ந்திருப்பவர்களுக்கும் பிரம்மா பாபாவின் சொரூபத்தை தெளிவாகப் பார்த்து இந்த இடத்திற்கு வந்து சேருங்கள் என்று சமிக்ஜை கிடைத்தது அதே போலவேஇறுதியில் விசேஷமாக விஷ்வ கல்யாணகாரி ஆத்மாக்கள் உங்கள் அனைவரின் விசித்திரமான பங்கு நடக்க இருக்கிறது. இதற்காக ஆத்மாவிற்கு அனைத்து பந்தனங்களிலிருந்து விடுபட்டு சுதந்திரமாக ஆக வேண்டும். அதன் மூலம் எப்பொழுது விரும்பினாலும் எங்கு விரும்பினாலும் எந்த சக்தியை விரும்பினாலும் அதன் மூலம் காரியம் செய்ய வேண்டும். அந்த மாதிரி பந்தனமற்ற ஆத்மா அனேகர்களை ஜீவன்முக்தாக ஆக்க முடியும். எவ்வளவு உயர்ந்த லட்சியம் என்று புரிந்ததா? எதுவரை சென்றடைய வேண்டும்? எல்லைக்கப் பாற்பட்ட சேவையின் வடிவமைப்பு எவ்வளவு உயர்ந்தது. அனேக கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவீர்கள். ஆனால் ஒரு கடினமான உழைப்பை செய்ய வேண்டியதிருக்கும். அந்த மாதிரி தைரியம் இருக்கிறதா?

மகாராஷ்ட்ரா ஏதாவது மகான் காரியம் செய்ய வேண்டும். மகாராஷ்ட்ரா அந்த மாதிரி அதிசயம் செய்து காண்பிக்கட்டும். அப்பொழுது தான் விரிவான மார்க்கத்தின் சேவை நடக்கும். ஒரு நொடியில் எங்கிருந்தோ எங்கோ சென்றடைய முடியும். மகாராஷ்ட்ரா என்ற பெயரினாலேயே மகான் ஆத்மாவாக ஆவது சுலபமாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு காரியமும் மகான். ஒவ்வொரு வார்த்தையும் மகான். அனைத்து மகாராஷ்ட்ரா நிவாசிகள் அந்த மாதிரி மகான் தான் இல்லையா? எந்த ஆத்மாவைப் பார்த்தாலும் மகான் ஆத்மாவாக அனுபவம் ஆக வேண்டும். அந்த மாதிரி தான் நீங்கள் இருக்கிறீர்கள் இல்லையா? டீச்சர்கள் என்ன நினைக்கிறீர்கள்? மகாராஷ்ட்ராவிலே எந்தப் பிரச்சனையும் இல்லாமல் இருக்கும் இல்லையா? எங்கே மகான்கள் இருக்கிறார்களோ அங்கே பிரச்சனைகள் இருக்காது. மகாராஷ்ட்ரா மற்றும் மகாத்மாக்களின் இராஷ்ட்ரா. இராஷ்ட்ரா என்றால் ஸ்தானம். அப்படி ஸ்தானம் (இடம்) மற்றும் ஸ்திதி (மனநிலை) சமமாக இருக்கிறது இல்லையா. நான் சமமாக இருக்கிறேன் என்றால் நம்பர் ஒன்-ன் அடையாளம். மாயாவை வெற்றியடைக்கூடிய வெற்றியாளர் என்ற இதை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அந்த மாதிரி தான் இல்லையா? என்ன, ஏன் என்பதோ இல்லை தான் இல்லையா?

அந்த மாதிரி எப்பொழுதும் சக்திசாலியான, எப்பொழுதும் ஒரு உயர்ந்த எண்ணம் மற்றும் உயர்ந்த நிலையில் நிலைத்திருக்கக்கூடிய, தந்தைக்குச் சமமாக எப்பொழுதும் விஷ்வ கல்யாணகாரி, எப்பொழுதும் ஒருவரின் அன்பிலேயே மூழ்கியிருக்கக்கூடிய அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

டீச்சர்களுடன் -

டீச்சர்களின் மகத்துவம் எப்பொழுது இருக்கிறது என்றால் எப்பொழுது எண்ணம், சொல், செயலில், உறவு, தொடர்பில் நிரந்தரமாக மகான் நிலை தென்படுகிறதோ அப்பொழுது தான். ஏனென்றால் டீச்சர்களுக்கு மகான் ஆவதற்கான சாதனம் கிடைத்திருக்கிறது. சூழ்நிலை, சேர்க்கை சுத்த உணவு, சேவை, உறவு மற்றும் நெருக்கம் அனைத்தும் மகான் ஆவதற்கான சாதனம் ஆகும். யார் குடும்ப வாழ்க்கையில் இருக்கிறார்களோ அவர்களுக்கு குடும்பத்தில் இருந்து கொண்டே விலகியிருக்க வேண்டியதாக இருக்கிறது. ஆனால் டீச்சரோ விலகியவராகவே இருக்கிறார். விலகியிருப்பதற்கான பயிற்சி செய்வதற்கான அவசியம் இல்லை. அதிசயகாரியம் யாருடையது என்றால், யார் அன்னப்பறவை மற்றும் கொக்கு சேர்ந்தே இருந்தும் விலகியிருக்கிறார்களோ அவர்களுடையது தான். அந்தக் கணக்குப்படி பார்த்தீர்கள் என்றால் டீச்சர்களுக்கு எவ்வளவு பாக்கியம் கிடைத்திருக்கிறது. டீச்சரைப் பொறுத்தவரை முயற்சி செய்வது சுலபமாகும். அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா அல்லது கடினமாக இருக்கிறதா? டீச்சருக்கு ஒருவேளை எங்காவது கடினம்

இருக்கிறது என்றால் அதற்கான ஒரே ஒரு காரணம் தான், அது எந்தக் காரணம்? டீச்சர் ஒருவேளை முழு நேரமும் தன்னை பிஸியாக வைத்துக் கொண்டார் என்றால், ஒருபொழுதும் கடினம் இருக்காது.

பிஸியாக இருப்பதற்காக எப்படி உடல் மூலமும், வாய்மொழி மூலமும் சேவை செய்கிறீர்கள். அதே போல் மனதிற்கான நிகழ்ச்சி நிரலையும் நிர்ணயம் செய்யுங்கள். மனம் மூலமாகவும் பிஸியாக இருந்தீர்கள் என்றால் மாயாவும் சுலபமாகவே ஒதுங்கிச் சென்று விடும். தன்னை பிஸியாக வைத்துக் கொள்ளத் தெரியவில்லை, மனதிற்கான நிகழ்ச்சி நிரலை வைத்துக் கொள்ளத் தெரியவில்லை என்றால் தான் மாயா வருகிறது அல்லது கடினம் அனுபவம் ஆகிறது. இரண்டாவது, தன்னை பிஸியாக வைத்துக் கொள்வதற்கு ஞானக் கல்வியின் பக்கம் கவனம் இருக்க வேண்டும், கல்வியின் மேல் உள்ளப்பூர்வமான அன்பு இருக்க வேண்டும். யாருக்கு உள்ளப்பூர்வமான அன்பு படிப்பின் மேல் இருக்கிறதோ அவர் எப்பொழுதும் தன்னை மற்றும் மற்றவர்களை பிஸியாக வைக்க முடியும். ஒருவேளை மேலோட்டமாக எப்பொழுதாவது அன்பு இருக்கிறது என்றால், தானும் எப்பொழுதாவது பிஸி, எப்பொழுதாவது ஃப்ரீ மற்றவர்களையும் பிஸியாக வைக்க முடியாது. எனவே எப்பொழுதும் பிஸியாக இருந்து தானும் தடையை அழிப்பவராக மேலும் மற்றவர்களையும் தடையை அழிப்பவராக ஆக்குங்கள். மூன்றாவது திட்டமிடும் புத்தி உள்ளவராக ஆகுங்கள். முதலில் தனக்காக திட்டம், பிறகு சேவைக்கான திட்டம். திட்டமிடும் புத்தி உள்ளவர் எப்பொழுதும் பிஸியாக இருப்பார். மற்றவர்களின் வழிகாட்டுதல்படி நடக்கக்கூடியவர்களின் புத்தி சில நேரம் ஃப்ரீ ஆகவும் சில நேரம் பிஸியாகவும் இருக்கும். பாபாவின் டைரக்ஷனே (வழிகாட்டுதலே) திட்டமிடும் புத்தி உள்ளவராக ஆகுங்கள் என்று தான் கிடைத்திருக்கிறது. தன்னுடைய மேலும் மற்றவர்களுக்கான திட்டத்தை உருவாக்குங்கள். அந்த மாதிரி திட்டமிடும் புத்தி உள்ளவர்களாக இருக்கிறீர்களா அல்லது ஏற்கனவே உருவாக்கப்பட்ட திட்டம் கிடைத்தது என்றால் செய்வீர்களா? முதலில் தன்னுடைய டீச்சர் பிறகு மற்றவர்களின் டீச்சர். டீச்சர் மாணவனுக்கு திட்டத்தை உருவாக்கி கொடுப்பார், அந்த மாதிரி தன்னுடைய டீச்சராகவும் ஆகுங்கள். பிறகு மற்றவர்களுடைய டீச்சராகவும் ஆகுங்கள்.

நல்லது. அனைவரும் அவரவர்களின் ஈடுபாட்டிற்கு ஏற்றபடி முயற்சி செய்வதில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? முன்னேறும் கலை இருக்கிறது தான் இல்லையா? டீச்சரையோ அனைவரும் பின்பற்றி நடப்பவர்களாக இருப்பார்கள்

இல்லையா? தந்தையைப் பின்பற்றி நடப்பது என்பதோ இருக்கிறது. ஆனால் இருந்தும் பொறுப்பிலிருக்கும் டீச்சரை அனைவரும் பார்க்கிறார்கள். பொறுப்பிலிருப்பவரில் தந்தையைப் பார்க்கிறார்கள். ஒருவேளை பார்ப்பவர்களின் கண்ணாடியே மோசமாக இருந்தது என்றால் தந்தையும் எப்படி தெளிவாகத் தென்படுவார். கண்ணாடி ஒருவேளை தெளிவாகவும் சக்திசாலியாகவும் இருந்தது என்றால் எந்தவொரு பொருளையும் தெளிவாகவும் சுலபமாகவும் பார்த்து மேலும் அனுபவமும் செய்ய முடியும். அந்த மாதிரி தெளிவான மற்றும் சக்திசாலியான கண்ணாடி இருக்க வேண்டும். அதன் மூலம் யார் எதிரில் வந்தாலும் தந்தையைத் தெளிவாக அனுபவம் செய்ய வேண்டும்.

பாப்தாதாவிற்கு டீச்சர் மேல் எந்தவொரு புகாரையும் கேட்பது நன்றாகவே இருப்பதில்லை. ஒருவேளை டீச்சர் நான் பலஹீனமாக இருக்கிறேன், மாயா வருகிறது அல்லது மாணவர்கள் திருப்தியாக இருக்கவில்லை அல்லது நான் திருப்தியாக இருக்கவில்லை, அந்த மாதிரி ஏதாவது டீச்சரின் புகாரை கேட்பதும் பிடிப்பதே இல்லை. அனைவரையும் முழுமையானவர்களாக ஆக்குவது தான் டீச்சரின் வேலை ஆகும். ஒருவேளை அவரே புகாருக்கு உரியவர் ஆனார் என்றால் எப்படி முழுமையானவராக ஆக்குவார்? டீச்சருக்கு ஒருபொழுதும் தன்னுடைய முயற்சி செய்வதில் எந்த புகாரும் இருக்கக்கூடாது. டீச்சர்கள் என்றால் சம்பன்னமானவர்கள், டீச்சர்கள் என்றால் தடைகளை அழிப்பவர்கள். டீச்சரின் மகிமை தந்தைக்குச் சமமானது. எது தந்தையின் மகிமையோ அது டீச்சரின் மகிமை ஆகும். புரிந்ததா, டீச்சர்களின் மகத்துவம் என்ன என்று? அந்த மாதிரி அழியாத ஒரு குழுவை உருவாக்குங்கள். அதில் எந்தவொரு புகாரும் இருக்க வேண்டாம். மிக நன்றாக வளர்ச்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். தடைகளை அழிப்பவராக மட்டும் ஆகுங்கள் மற்றும் ஆக்குங்கள்.

பார்ட்டிகளுடன்:

### தந்தை, ஆசிரியர் மற்றும் சத்குரு - இந்த மூன்று சம்மந்தங்களினால் மூன்று பிராப்திகள்

எப்பொழுதும் மூன்று சம்மந்தங்களினால் ஆஸ்தியை, படிப்பை மற்றும் வீட்டை நினைவு செய்து கொண்டே இருக்கிறீர்களா? தந்தையிடமிருந்து ஆஸ்தி கிடைத்தது, ஆசிரியரின் சம்மந்தத்தினால் கல்வி கிடைத்தது மற்றும் சத்குருவின் சம்மந்தத்தினால் வீடு செல்வதற்கான வழி கிடைத்தது, மேலும் உடன் செல்வீர்கள். அப்படி மூன்று சம்மந்தங்களினால் மூன்று பிராப்திகளாக என்ன கிடைக்கிறது அந்த சம்மந்தம் மற்றும்

பிராப்தி எப்பொழுதும் நினைவிருக்கிறதா? நாம் அந்த அளவு உயர்ந்த ஆத்மாக்கள் நமக்கு சுயம் பரமாத்மா தந்தை, ஆசிரியர் மற்றும் சத்குருவாக ஆகியிருக்கிறார் என்று நினைக்கிறீர்களா? இதை விட பெரிய பாக்கியம் வேறு யாருக்காவது இருக்க முடியுமா? அனைத்து சம்மந்தங்களினால் பரமாத்மா கிடைத்து விடுவார் என்று அந்த மாதிரி பாக்கியத்தையோ ஒருபொழுதும் நினைத்திருக்கக்கூட மாட்டீர்கள். இந்த நடக்க முடியாத விஷயம் கூட நடைமுறையில் சம்பவம் ஆகிக் கொண்டிருக்கிறது என்றால் எவ்வளவு பாக்கியம். தந்தையாக மட்டுமின்றி ஆனால் ஆசிரியர் மற்றும் சத்குருவாகவும் ஆகியிருக்கிறார். எப்படி பகவான் எப்பொழுது திருப்தியாகி விடுகிறாரோ அப்பொழுது கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுப்பார் என்று பக்தர்கள் கூறுகிறார்கள். அப்படி இதுவும் இந்த ஆகாய தத்துவத்தையும் கடந்து கொடுப்பதற்காக வந்து விட்டார் இல்லையா? அவர்களோ கூரையைப்பிய்த்துக் கொண்டு என்று தான் கூறுகிறார்கள். ஆனால் இவரோ ஆகாய தத்துவத்தையும் கடந்து இருக்கக்கூடியவர். ஐந்து தத்துவங்களையும் கடந்து வந்து பிராப்தி செய்வித்துக் கொண்டிருக்கிறார் என்றால் எவ்வளவு பாக்கியசாலியாக ஆனீர்கள். அந்த மாதிரியான பாக்கியம் எப்பொழுதும் நினைவில் இருக்கட்டும். இதுவோ உங்களுடைய நடைமுறை வாழ்க்கையாக ஆனது இல்லையா? ஞானம் மட்டும் இருந்தது என்றால் மறக்க முடியும். ஆனால் நடைமுறை வாழக்கையின் எந்த விஷயமும் மறப்பதில்லை. எப்பொழுதும் நினைவில் இருக்கும். எப்படி உங்களுடைய கடந்த கால வாழ்க்கையின் விஷயங்களை மறக்க விரும்பினாலும் கூட நினைவில் வந்து விடுகிறது என்றால், இதை எப்படி மறக்க முடியும். ஒரே ஒரு வார்த்தையை மட்டும் நினைவு செய்யுங்கள். பாபா, பாபா என்று கூறிக் கொண்டே இருந்தீர்கள் என்றால் எப்பொழுதும் நினைவு சொரூபமாக இருப்பீர்கள். இரண்டு வருட குழந்தை கூட பாபா, பாபா (அப்பா, அப்பா) என்று கூறிக்கொண்டே இருப்பார் என்றால் இவ்வளவு ஞானம் நிறைந்த குழந்தைகள் நீங்கள் ஒரு 'பாபா' என்னும் வார்த்தையை நினைவில் வைக்க முடியாதா? சுலபமான வழி தான் இல்லையா? கடினமாக அனுபவம் ஆகவில்லையே? சக்தி சேனை என்ன நினைக்கிறீர்கள். எப்பொழுதும் ஒரு தந்தை மற்றும் நீங்கள், மூன்றாமவர் யாருமில்லை. அந்த மாதிரி தான் இருக்கிறீர்கள் இல்லையா? ஏதாவது மூன்றாவது விஷயம் நினைவில் வருவதில்லையே? தந்தை மற்றும் குழந்தை, தந்தை மற்றும் நான் அவ்வளவு தான்! இதே போதையிலேயேஇருங்கள். சக்தி சேனை பற்றுதலை வென்றவராக இருக்கிறீர்களா அல்லது எல்லைக்குட்பட்ட வீட்டின் மேல், குழந்தைகள் மேல் பற்றுதல் இருக்கிறதா? என்ன ஆனாலும் சரி ஆனால் பற்றற்றவராக பார்வையாளராகி நாடகத்தின் காட்சிகளைப் பார்த்துக் கொண்டே இருங்கள்.

பாண்டவர்களிடம் கோபம் மற்றும் ஆதிக்கம் செலுத்துவது இருக்கிறதா? பாண்டவர்கள் கோபம் இல்லாதவர்களாக ஆகிவிட்டீர்களா? என்ன நினைக்கிறீர்கள்? பாண்டவர்கள் இதன் மேல் வெற்றி அடைந்து விட்டீர்களா? கொஞ்சம் கூட தேக உணர்வு மற்றும் அடக்குமுறை இருக்க வேண்டாம். முற்றிலும் பணிவு நிறைந்த பிரம்மா குமார் ஆகிவிட வேண்டும். கோபத்தை விட்டு விட்டீர்களா அல்லது கொஞ்சம் கொஞ்சம் ஆயுதம் போன்று உபயோகிக்கிறீர்களா? கோபம் அறவே இல்லை என்று உங்களில் யார் நினைக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். யாராவது உங்களை திட்டினாலும் கூட, யாராவது பொய்யான பழி கூறினாலும் உங்களுக்கு கோபம் வரக்கூடாது. கோபம் வருவதற்காக இந்த இரண்டு விஷயங்கள் தான் காரணமாக இருக்கின்றன. ஒன்று எப்பொழுது யாராவது பொய்யான விஷயம் கூறுகிறார், இரண்டாவது நிந்தனை செய்கிறாரோ அப்பொழுது தான். இந்த இரண்டு விஷயங்கள் கோபத்தை உருவாக்கிக் கொடுக்கின்றன. அந்த மாதிரி சூழ்நிலையிலும் கோபம் வரக்கூடாது, அந்த மாதிரி இருக்கிறீர்களா? அபகாரிகள் மேல் உபகாரம் செய்ய வேண்டும். இது தான் பிராமணர்கள் செய்யும் காரியம். அவர்கள் தீய வார்த்தைகளால் திட்டட்டும் நீங்கள் அவர்களை தோளோடுஅரவணைத்துக் கொள்ளுங்கள். இது தான் அதிசயக் காரியம். இதைத் தான் பரிவர்த்தனை என்று கூறுவது. அரவணைப்பவரை அரவணைப்பது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை, ஆனால் நிந்தனை செய்பவரைக் கூட உண்மையான நண்பன் என்று வாயளவில் இன்றி மனதால் ஏற்றுக் கொள்வது. அந்த மாதிரி ஆகியிருக்கிறீர்களா? எப்பொழுது அந்த மாதிரி மாற்றம் ஏற்பட்டு விடுவிடுமோ அப்பொழுது உலகின் எதிரில் பிரசித்தி ஆகிவிடும். இது நடக்க முடியாது என்ற எதை உலகத்தினர் நினைக்கிறாரோ அதை நீங்கள் செய்து காண்பியுங்கள், அப்பொழுது தான் 'அதிசயம்' என்று கூறுவார்கள். நல்லது.

வரதானம் :

தன்னுடைய அதிகாரத்தின் சக்தி மூலமாக மும்மூர்த்தி படைப்பை சகயோகி ஆக்கக்கூடிய மாஸ்டர் படைப்பவர் ஆகுக.

மும்மூர்த்தி சக்திகள் (மனம், புத்தி மற்றும் சம்ஸ்காரம்) இவை மாஸ்டர் படைப்பவர் உங்களின் படைப்பாகும். இவற்றை தன்னுடைய அதிகாரத்தின் சக்தியினால் சகயோகி ஆக்குங்கள். எப்படி இராஜா அவரே காரியம் செய்வதில்லை, செய்விக்கிறார், செய்யக்கூடிய இராஜ்ய காரியஸ்தர்கள் வேறாக இருப்பார்கள். அதே போல் ஆத்மாவும்

செய்விப்பவர், செய்பவர் இந்த விசேஷ மும்மூர்த்தி சக்திகள் ஆகும். அப்படி மாஸ்டர் படைப்பவரின் வரதானத்தை நினைவில் வைத்து மும்மூர்த்தி சக்திகளை மேலும் ஸ்தூல கர்மேந்திரியங்களை சரியான வழியில் கொண்டு செல்லுங்கள்.

சுலோகன் :

அவ்யக்த பாலனையின் வரதானத்தின் அதிகாரத்தை அனுபவம் செய்வதற்கு தெளிவாக இருப்பவர் ஆகுங்கள்.

ஓம் சாந்தி

05.12.1979 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" வெற்றிக் கொடியை ஏற்றுவதற்காக உள் உணரும் (ரியலைசேஷன்) பாடத்தைத் தொடங்குங்கள் "

இன்று பாப்தாதா தன்னுடைய ஆன்மீக சேனையை பார்த்துக் கொண்டிருந்தார். சேனையில் அனைத்து விதமான வரிசைக்கிரமமான ஸ்திதியின் (நிலையின்) அனுசாரம் மகாரதி (யானைப்படை அதாவது வேகமாக முன்னேறிச் சென்று கொண்டிருப்பவர்), குதிரைப்படை மற்றும் காலாட்படையை பார்த்தோம். மகாரதிகளின் நெற்றியில் அதாவது நினைவில் எப்பொழுதும் வெற்றிக் கொடி பறந்து கொண்டு இருந்தது. குதிரைப்படையினர் அதாவது இரண்டாம் நம்பரில் இருப்பவர்கள் - அவர்களுடைய நெற்றியில் அதாவது நினைவில் வெற்றிக் கொடியோ இருக்கத்தான் செய்தது. ஆனால் எப்பொழுதும் பறக்கவில்லை. சில நேரம் குஷியின் ஜொலிப்பு மூலம் மற்றும் நிச்சயத்தின் பொலிவு மூலம் கொடி பறந்து கொண்டிருந்தது. ஆனால் சில நேரம் ஜொலிப்பு மற்றும் பொலிவின் காற்று குறையும் காரணத்தினால் கொடி பறப்பதற்கு பதிலாக ஒரே இடத்தில் நின்று கொண்டிருந்தது. மூன்றாவது, காலாட்படையினர் மிகுந்த முயற்சி செய்து நிச்சயத்தின் கயிறுகளினால், குஷியின் ஜொலிப்பினால் கொடியை ஏற்றும் முயற்சியில் மிகவும் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் அங்கங்கே பலஹீனத்தின் முடிச்சு இருந்த காரணத்தினால் சிக்கிக்கொண்டது, பறக்கவில்லை. இருந்தாலும் மிகுந்த முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். சிலருடைய முயற்சிக்குப் பிறகு பறக்கவும் செய்தது. ஆனால் கொஞ்ச நேரத்திற்குப் பிறகு, கொஞ்ச உழைப்பிற்குப் பிறகு பறந்தது. எனவே அந்த ஜொலிப்பு மற்றும் பொலிவு இருக்கவில்லை. பாப்தாதா குழந்தைகளின் கடின உழைப்பைப் பார்த்து தூரத்திலிருந்தே சக்தியும் கொடுத்துக் கொண்டிருந்தார். அதாவது இந்த மாதிரி செய்யுங்கள் என்று சமிக்ஞையும் கொடுத்துக் கொண்டிருந்தார். சில சில குழந்தைகள் சமிக்ஞையைப் பார்த்து வெற்றியும் அடைந்து கொண்டிருந்தார்கள். ஆனால் சிலர் உழைப்பில் அந்த அளவு பிஸியாக இருந்தார்கள், அவர்களால் சமிக்ஞையைப் பிடித்துக் கொள்வதற்கு நேரமே இருக்கவில்லை. அந்த மாதிரி சேனையில் மூன்று விதமான போர் வீரர்களைப் பார்த்தோம். எப்பொழுது கடுமையான முயற்சியினால் அல்லது சுலபமாகவே அனைவரின் கொடி நன்றாகப் பறக்கத் தொடங்கியது என்றால்

கொடி பறப்பதினால் தான் வெற்றியின் மலர்கள் அதாவது தந்தை மற்றும் குழந்தைகளின் பிரத்யக்ஷத்தின் மலர்களின் மழைக்குச் சமமான பார்ப்பதற்கு அழகான காட்சியாக ஆகிவிட்டது. எந்தக் குழந்தைகள் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கு பாப்தாதா சகஜமான வழியைக் கூறுகிறார்.

குறிப்பிட்ட நேரத்தில் மற்றும் நிரந்தரமாக வெற்றிக் கொடி ஏன் பறப்பதில்லை, அதற்கான காரணம் என்ன? நீங்களும் நிகழ்ச்சிகளில் கொடியை ஏற்றுகிறீர்கள் என்றால், அந்த நேரத்தில் ஏன் பறப்பதில்லை, என்ன காரணம்? முன்பாகவே ஒத்திகை செய்வதில்லை. அதே போல் வெற்றிக் கொடியைப் பறக்க விடுவதற்காக முக்கியமான விஷயமாகிய ரியலைசேஷன் (உணருதல்) இல்லை. அமிர்தவேளையிலிருந்து ரியலைசேஷன் பாடத்தைத் தொடங்குங்கள். அனைவருமே வர்ணனையோ செய்கிறீர்கள், ஆனால் வர்ணனை செய்வது மேலும் ரியலைஸ் செய்வது அதாவது அனுபவம் செய்வது, அதில் வேற்றுமை ஏற்பட்டு விடுகிறது. ஒன்று தந்தையுடன் அனைத்து சம்மந்தங்களும் இருக்கின்றன என்று கூறுவது மற்றும் கேட்பது. ஆனால் ஒவ்வொரு சம்மந்தத்தின் அனுபவம் மற்றும் பிராப்தியில் மூழ்கியிருப்பது என்றால் உலகின் சூழ்நிலைகளிலிருந்து சுலபமாகவே விலகியவராக இருக்க முடியும். ஒவ்வொரு காரியத்தின் நேரத்தில் வித விதமான சம்மந்தத்தில் அனுபவம் செய்ய முடியும். மேலும் அதே சம்மந்தத்தின் சகயோகத்தினால் நிரந்தர யோகாவின் அனுபவம் செய்ய முடியும். ஒவ்வொரு நேரமும் தந்தையின் வெவ்வேறு சம்மந்தத்தின் சகயோகத்தைப் பெறுவது அதாவது அனுபவம் செய்வது தான் யோகா ஆகும். அந்த மாதிரி சகஜயோகியாக மற்றும் நிரந்தர யோகியாக நீங்கள் ஏன் ஆவதில்லை? தந்தை எப்படிப்பட்ட நேரத்திலும் உறவை வைத்து கொள்வதற்குக் கட்டுப்பட்டிருக்கிறார். எப்பொழுது தந்தை உறுதுணையைக் கொடுக்கிறார் என்றால் பெறக்கூடியவர்கள் ஏன் அதை பெறுவதில்லை? உதவியைப் பெறுவது தான் யோகாஎன்றால் எப்படி இருக்கும் என்ற இதை அனுபவம் செய்யுங்கள். தாயின் சம்மந்தம் என்றால் என்ன, தந்தையின் சம்மந்தம் என்றால் என்ன, தோழன் மற்றும் நண்பனின் சம்மந்தம் என்றால் என்ன, எப்பொழுதும் தலைவனோடு உடன் இருப்பதின் அனுபவம் என்றால் என்ன . . . . . . இந்த வேறு வேறு சம்மந்தத்தின் இரகசியம் அனுபவத்தில் வந்ததா? ஒருவேளை ஒரு சம்மந்தத்தின் அனுபவத்திலிருந்து வஞ்சிக்கப்பட்டு இருந்து விட்டீர்கள் என்றால் முழு கல்பமுமே வஞ்சிக்கப்பட்டு இருந்து விடுவீர்கள். ஏனென்றால் கல்பத்தில் இப்பொழுது தான் அனைத்து அனுபவங்களின் சுரங்கம் கிடைக்கிறது. இப்பொழுது இல்லை என்றால் பிறகு ஒருபொழுதும் இல்லை. எனவே இதுவரையிலும்

எந்த சம்மந்தத்தின் அனுபவத்தை செய்ய முடியவில்லை என்று தன்னைத்தானே சோதனை செய்யுங்கள். இதே விதமாக ஞானத்தின் பாடத்தில் என்னென்ன விஷயங்களை வர்ணனை செய்கிறீர்களோ அந்த ஒவ்வொரு விஷயத்தின் அனுபவம் செய்திருக்கிறீர்களா? எப்படி நான் சுயதரிசன சக்கரதாரி என்று வர்ணனை செய்கிறீர்கள் என்றால் சுயத்தின் தரிசனத்தின் அனுபவம், எந்த ஆதாரத்தினால் கூறுகிறீர்கள்? தரிசனம் என்றால் தெரிந்து கொள்வது. தெரிந்திருப்பவர் அந்த தெரிந்திருத்தலின் அதிகாரத்தில் இருப்பார். எப்படி இன்றைய நாட்களின் சாஸ்திரவாதிகள் சாஸ்திரத்தை படிக்கிறார்கள் மற்றும் அதே போல் ஒப்பித்தல் மட்டும் செய்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் தன்னை சாஸ்திரங்களின் அதிகாரம் (அதாரிட்டி) உள்ளவர்கள் என்று நினைக்கிறார்கள். நீங்கள் அனைவரும் ஒப்பிப்பதில்லை ஆனால் அதில் சிந்தனை செய்கிறீர்கள். அதாவது சிந்தனை மூலமாக சொரூபத்தில் கொண்டு வருபவர், அந்த மாதிரி எப்பொழுதும் ஞானத்தின் அதிகாரம் உள்ளவர் அதாவது எப்பொழுதும் ஞானத்தின் ஒவ்வொரு விஷயத்தின் போதையில் இருப்பவராக இருப்பார். அந்த மாதிரி ஒவ்வொரு ஞானத்தின் விஷயத்தின் அதிகாரி அதாவது அனுபவத்தின் போதையில் இருக்கிறீர்களா? இதே விதமாக தாரணையின் பாடத்தில் எந்த வேறு வேறு குணங்களின் வர்ணனை செய்கிறீர்களோ அந்த ஒவ்வொரு குணத்தின் அனுபவத்தின் அதிகாரியாக இருக்கிறீர்களா? பேச்சாளர்களாக இருக்கிறீர்களா, கேட்பவர்களாக இருக்கிறீர்களா அல்லது அதிகாரியாக இருக்கிறீர்களா? இதில் நம்பர் ஏற்பட்டு விடுகிறது.

மகாரதி என்றால் ஒவ்வொரு வார்த்தையின் அனுபவத்தின் அதிகாரம் நிறைந்தவர். காலாட்படை என்றால் சொல்பவராக, கேட்பவராக அதிகம் இருப்பார், அனுபவத்தின் அதிகார நிலை குறைவாக இருக்கும். அப்படியானால் சுலபமான சாதனமாக என்னவானது? ரியலைசேஷனின் குறைவு அதாவது அனுபவம் நிறைந்தவராக ஆவதில் குறைவு. பக்தி மற்றும் ஞானத்தின் முக்கியமான வித்தியாசமே இது தான். அவர்கள் வர்ணனை செய்கிறார்கள் மற்றும் இங்கு அனுபவம் ஆகிறது. நிரந்தர யோகி ஆவதற்கான ஆதாரம் - எப்பொழுதும் அனைத்து சம்மந்தங்களின் சகயோகத்தைப் பெறுங்கள். அனுபவி ஆகுங்கள். புரிந்ததா?அனுபவத்தின் சுரங்கத்தை நல்ல முறையில் பிராப்தி செய்யுங்கள். கொஞ்சமாக அல்ல, ஆனால் அனைத்து பிராப்திகளையும் செய்யுங்கள். இரண்டு அல்லது மூன்று சம்மந்தத்தின், இரண்டு அல்லது மூன்று ஞான கருத்தின் அனுபவம் அல்ல ஆனால் அனைத்து அனுபவங்களும் நிறைந்தவர் ஆகுங்கள். மாஸ்டர் அனைத்து சக்திகளின் அதிகாரம் நிறைந்தவர் ஆகுங்கள். பிறகு வெற்றிக் கொடி பறந்து கொண்டே

இருக்கும்.

தந்தைக்கு அனைவர் மீதும் அன்பு இருக்கிறது. மகாராஷ்ட்ராவைச் சேர்ந்தவர்கள் மேலும் அன்பு இருக்கிறது. மகாராஷ்ட்ராவைச் சேர்ந்தவர்கள் அனைவரும் அனுபவம் நிறைந்தவர்களாக ஆக வேண்டும். அப்படி மகாராஷ்ட்ராவின் விசேஷமாக அனைவரும் வெற்றி அடைபவர் ஆகிவிட வேண்டும். சத்ரியனாக அதாவது யார், எப்பொழுதுமே கடின உழைப்பிலேயே ஈடுபட்டுக் கொண்டிருப்பவராக ஆகாமல் எப்பொழுதும் வெற்றி அடைபவராக ஆகுங்கள். இப்பொழுது சத்ரிய நிலையின் நேரம் முடிவடைந்து விட்டது. ஒருவேளை இந்த நேரம் வரையிலும் சத்ரியனாக இருந்தீர்கள் என்றால் சந்திரவம்சி ஆகிவிடுவீர்கள். இப்பொழுது பிராமணன் அதாவது வெற்றி அடைபவராக ஆவதற்கான நேரம். வெகு காலத்து வெற்றி அடையும் சம்ஸ்காரம் தேவையாக இருக்கிறது. இப்பொழுது நேரமே குறைவாக இருக்கிறது. இப்பொழுதிலிருந்தே வெற்றி அடையும் சம்ஸ்காரத்தை நிரப்பவில்லை என்றால் சந்திரவம்சியாக ஆகிவிடுவீர்கள். எனவே தன்னுடைய பாக்கிய ரேகையை இப்பொழுது கூட மாற்றம் செய்ய முடியும். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் வெற்றி அடையும், அனைத்து சம்மந்தங்களின் அனுபவங்களின் அதிகாரம் நிறைந்த, ஞானத்தின் ஒவ்வொரு கருத்தின் அதிகாரம் நிறைந்த, ஒவ்வொரு குணத்தின் அனுபவத்தின் அதிகாரம் நிறைந்த, சேவை பாடத்தில் ஆல்ரவுண்டர் அதாவது அனைத்து சேவைகளையும் செய்பவர் மற்றும் எவரெடி (எப்பொழுதும் தயார் நிலையில் இருப்பவர்) என்ற இந்த விசேஷத்தின் அதிகாரம் உள்ள, அந்த மாதிரி தந்தைக்குச் சமமான உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

## மகாராஷ்ட்ர ஜோனின் பார்ட்டிகளுடன் அவ்யக்த சந்திப்பு

1) நிச்சயபுத்தி உடையவரின் மனதின் குஷியின் காரணமாக எழும் ஓசை - என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்தாகி விட்டது - எப்பொழுதும் அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பிய அதாவது தன்னை அனைத்தும் நிரம்பியவர் என்று நினைக்கிறீர்களா? எப்படி தந்தை எப்பொழுதும் சம்பன்னமாக இருக்கிறார், அதே போல் தந்தைக்குச் சமமாக

பொக்கிஷங்களினால் சம்பன்னமாக இருக்கிறீர்களா எந்தப் பொக்கிஷத்தின் குறைவும் இல்லை, என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்தாகிவிட்டது என்று மனதிலிருந்து ஒவெளி யாகிறதா? வாய் மூலம் வரும் ஓசை நிரந்தரமாக இருக்க முடியாது, ஆனால் மனதின் ஓசை நிரந்தரமானது, அழியாதது. அப்படியானால் அடைந்து விட்டேன் என்று இந்த மனதின் ஓசை வெளியாகிறதா? மனதிலிருந்து வருகிறதா அல்லது அடைவோம், அடைந்து கொண்டோ இருக்கிறோம் என்று இப்பொழுது நினைக்கிறீர்களா? உறுதியான நிச்சயபுத்தி உடையவரர்களாக ஆகி விட்டீர்களா? குழந்தை ஆவது என்றால் அதிகாரி ஆவது. ஒருபொழுதும் தன் மேல் கூட சந்தேகம் இருக்க வேண்டாம். சம்பூர்ணமாக ஆவீர்களா அல்லது இல்லையா? சூரியவம்சியாக ஆவீர்களா அல்லது சந்திர வம்சியாக ஆவீர்களா? எப்பொழுதும் நிச்சபுத்தி உடையவர்களாக ஆகுங்கள். எப்படி தந்தை மீது நிச்சயம் இருக்கிறது அதே போல் தன் மீதும் நிச்சயம் இருக்கட்டும். தன்னில் ஒருவேளை பலஹீனமான எண்ணம் உருவாகிறது என்றால் அது பலஹீனமான சம்ஸ்காரமாக ஆகிவிடும். எப்படி யாராவது ஒரு தடவையாவது உடலால் பலஹீனமானவர் ஆகிவிடுகிறார், மீண்டும் விரைவில் ஆரோக்கியம் நிறைந்தவராக ஆக முடியவில்லை என்றால் பலஹீனங்களின் கிருமிகள் உறுதியாகி விடுகின்றன. அப்படி வீணான எண்ணம் என்ற பலஹீனத்தின் கிருமிகளை தனக்குள் பிரவேசம் செய்ய விடாதீர்கள். இல்லை என்றால் அவற்றை அழிப்பது கடினமாகி விடும்.

நாடகத்தில் என்னென்ன காட்சி பார்த்தாலும் அது குழப்பமான காட்சியாக இருந்தாலும் அல்லது உறுதியானதாக இருந்தாலும் இரண்டிலேயுமே நிச்சயம் இருக்கட்டும். குழப்பத்திலும் அந்தக் காட்சியில் நன்மை அனுபவம் ஆக வேண்டும். அந்த மாதிரி நிச்சயபுத்தி உடையவராக ஆக வேண்டும். சூழ்நிலை அசைக்கக் கூடியதாக இருந்தும், பிரச்சனை கொடூரமானதாக இருந்தாலும், ஆனால் எப்பொழுதும் நிச்சயபுத்தி உடையவராக இருக்க வேண்டும், இதைத் தான் வெற்றி அடைபவர் என்று கூறுவது. அப்படி நிச்சயத்தின் ஆதாரத்தினால் கொடூரமான பிரச்சனையும் சீதளம் ஆகிவிடுகிறது.

வேறு வேறு பாஷை இருந்தபோதிலும் ஒரு வழி, ஒரு தந்தை, ஒரே ஒரு நிச்சயம் மற்றும் ஒரே இலக்கு. சேவைக்காக மட்டும் வேறு வேறு ஸ்தானங்களில் இருக்கிறீர்கள். ஒருவேளை அனைவருமே ஒரே இடத்தில் அமர்ந்து விட்டீர்கள் என்றால் நாலாபுறங்களிலும் சேவை எப்படி நடக்கும்? எப்பொழுது சேவை முடிவடைந்து விடுகிறதோ அப்பொழுது அனைவரும் மதுபன் வந்து விடுவீர்கள். ஆனால் அதிலேயும்

யார் வருவார்கள்? யார் பற்றுதலை வென்றவராக இருப்பாரோ அவர் தான் வந்தடைவார். யாருடைய புத்தியின் தொடர்பு தெளிவாக இருக்கிறதோ அந்த நேரம் தொலைபேசி அல்லது டெலிகிராம் மூலமாக அழைப்பவர்கள் இருக்க மாட்டார்கள், ஆனால் ஒருவேளை புத்தியின் தொடர்பின் இணைப்பு தெளிவாக இருந்தது என்றால் அழைப்பது வந்து சேர்ந்து விடும். எந்த ரயில் மூலம் நீங்கள் வந்தடைய வேண்டுமோ அது ஓடும், அதற்குப் பிறகு ஓடாது. அந்த மாதிரி நிலைமை ஏற்பட்டு விடும். ஒருவேளை தொடர்பு லைன் தெளிவாக இருக்கிறது என்றால் சாதனமும் கிடைத்து விடும். இல்லையென்றால் எங்காவது மாட்டிக் கொண்டு விடுவீர்கள். எனவே வெகுகாலத்தின் நிரந்தர யோகா தேவையாக இருக்கிறது. யோகா தான் கவசமாகும், கவசம் அணிந்தவர் எப்பொழுதும் பாதுகாப்பாக இருப்பார். பாதுகாப்பின் ஆடையே நினைவின் கவசம் ஆகும்.

மாதர்கள் தீவிரமாக முயற்சி செய்பவர்களாக இருக்கிறீர்கள் இல்லையா? இப்பொழுது வீட்டில் அமர்ந்து விடாதீர்கள். இப்பொழுது குழுவை உருவாக்கி நாலாபுறங்களிலும் சேவைக்காக பரவிச் சென்று விடுங்கள். சென்டர் திறங்கள், எத்தனை சென்டர் திறந்திருக்கிறீர்கள் என்று அடுத்த வருடம் பார்ப்போம். பிரச்சனைகளுக்கு முன்பு அனைவருக்கும் செய்தி கொடுத்து விடுங்கள். பிறகு அனைவரும் உங்களை மிகுந்த மகிமை பாடுவார்கள். இப்பொழுது சேவை நிலையங்கள் திறந்து கொண்டே செல்லுங்கள். செய்தி கொடுப்பதற்காக ஏதாவது வழியைப் கடைபிடியுங்கள்.

2) நாடகத்தின் ஞானம் மூலம் என்ன - ஏன் என்ற கேள்வியை முடிவு செய்பவர்கள் தான் இயற்கையை வென்றவர்களாக மற்றும் மாயாவை வென்றவர்களாகவும் ஆகிறார்கள்

அனைவரும் இயற்கையை வென்றவர்கள் மற்றும் மாயாவை வென்றவர்களாக ஆகியிருக்கிறீர்களா? இந்த ஐந்து தத்துவம் கூட தன் பக்கம் ஈர்க்க வேண்டாம் மற்றும் ஐந்து விகாரங்களும் தாக்குதல் செய்ய வேண்டாம். அந்த மாதிரி மாயாவை வென்றவர் மற்றும் இயற்கையை வென்றவர் என்ற இரண்டு தேர்வுகளிலுமே தேர்ச்சி பெற்றிருக்கிறீர்களா? ஒருவேளை ஏதாவது இயற்கை மூலமாக சோதனைவந்தது என்றால் தேர்ச்சி அடைவதற்கான சக்தி தாரணை ஆகிவிட்டதா? குழப்பத்தில் வரமாட்டீர்களே? கொஞ்சம் குழப்பத்தில் வந்தாலும் கூட தோல்வி அடைந்தீர்கள். இது என்ன?, இது ஏன்? என்ற இந்தக் கேள்வி எழுந்தால் கூட ரிசல்ட்டாக என்ன இருக்கும்? ஒருவேளை

கொஞ்சமாவது ஏதாவது இயற்கையின் பிரச்சனை தாக்குவதாக ஆகிவிட்டது என்றால் தோல்வி அடைந்து விடுவீர்கள். என்ன ஆனாலும் சரி ஆனால் மனதி-ருந்து ஆஹா இனிமையான நாடகம் என்ற இந்த ஓசை தான் எழ வேண்டும். இந்த அளவு நாடகத்தின் ஞானத்தை உறுதியாக்கியிருக்கிறீர்களா? அல்லது எப்பொழுது நல்ல விஷயங்கள் நடக்கிறது என்றால் மட்டும் நாடகம், ஆனால் குழப்பமான விஷயங்கள் என்றால் ஐயோ ஐயோ வா? 'ஐயோ என்ன ஆகிவிட்டது' இது எண்ணத்தில் கூட வர வேண்டாம். அந்த மாதிரி உறுதியானவர்களாக இருக்கிறீர்களா? ஏனென்றால் வரும் நாட்கள் இயற்கை மூலமாகவும் அந்த மாதிரி பிரச்சனைகள் வரப் போகின்றன, இயற்கையின் ஆபத்துக்களோ நாளுக்கு நாள் அதிகரிப்பவை தான் இல்லையா? எனவே எண்ணத்தில் கூட எந்தவொரு குழப்பமும் வராத அளவிற்கு நிலை இருக்க வேண்டும். அந்த மாதிரி ஆடாத மற்றும் அசையாதவராக ஆகியிருக்கிறீர்களா? ஒருவேளை வெகுகாலத்தின் மாயாவை வென்றவர் மற்றும் இயற்கையை வென்றவரின் பயிற்சி இல்லை என்றால் ரிசல்ட்டாக என்னவாகும்? ஓரு நொடிக்கான பரீட்சை வரும். ஒருவேளை அந்த நேரத்தில் தயார் செய்வதிலேயே ஈடுபட்டுக்கொண்டிருந்தீர்கள் என்றால் முடிவு வெளியாகி விடும். ஒரு நொடியில் பாஸாகி விட வேண்டும். இதற்கான பயிற்சி தேவை. ஒருவேளை யோகா செய்யலாமா, நினைவில் அமரலாமா என்று யோசித்தீர்கள் என்றாலும் ஒரு விநாடி கடந்து சென்று விடும். யுத்தம் செய்து கொண்டே உடலை விட்டு விடுவீர்கள். முயற்சி செய்யும் வாழ்க்கையில் யுத்தம் செய்து செய்தே உடலை விட்டீர்கள் என்றால் ரிசல்ட் என்னவாகும்? சந்திரவம்சியாக ஆகி விடுவீர்கள். எனவே ஒவ்வொருவரும் 108 மணியின் மாலையில் வருவதற்கான லட்சியத்தை எப்பொழுதும் வையுங்கள். லட்சியம் உயர்ந்ததாக இருக்கிறது என்றால் லட்சணம் தானாகவே வந்து விடும். 16,000-ல் வருவதற்கான லட்சியத்தை ஒருபொழுதும் வைக்காதீர்கள். நம்பர் ஒன்-ல் வருவதற்கான முயற்சி மற்றும் லட்சியம் வையுங்கள்.

சக்திகள் எப்பொழுதும் ஆயுதம் தரித்த, அலங்கரிக்கப்பட்ட மற்றும் சம்ஹாரம் செய்யக்கூடிய அப்படி இரண்டு சொரூபங்களிலுமே நிலைத்திருக்கிறீர்களா? எப்பொழுதாவது அழுபவர்களாகவோ இல்லை தானே? எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்தவர், மனதால் கூட அழுபவராக இல்லை. கொஞ்சமாவது மாயாவிடம் தோல்வி அடைந்தீர்கள் என்றால் மனதால் அழுவது இருக்கும். மாதர்களோ எப்பொழுதும் குஷியில் நடனமாட வேண்டும் - ஏனென்றால் நம்பிக்கை இழந்தவர்களாக இருந்ததிலிருந்து நம்பிக்கைக்குரியவர்கள் ஆகிவிட்டீர்கள், தந்தை தலையின் கிரீடமாக ஆக்கிவிட்டார் என்றால் எவ்வளவு குஷி இருக்க வேண்டும். பாண்டவர்களும் மாதர்களைப் பார்த்து குஷி

அடைகிறார்கள், ஏனென்றால் சக்திகள் தான் பாண்டவர்களுக்கான கேடயம் ஆவர். கேடயம் உறுதியாக இருந்தது என்றால் தாக்க முடியாது. எனவே மாதர்களை முன்னுக்கு வைப்பதில் பாண்டவர்களுக்கு குஷி ஏற்பட வேண்டும். ஒருவேளை அவர்களே முன்னுக்கு இருந்தார்கள் என்றால் தடியடி பட வேண்டியதாக இருக்கும். சக்திகளை முன்னுக்கு வைத்தீர்கள் என்றால் பாண்டவர்களுக்கும் மகிமை இருக்கும். முன்னுக்கு வைப்பது தான் முன்னுக்கு இருப்பது ஆகும்.

3) தன்னுடைய விசேஷத்தைத் தெரிந்திருப்பவர்கள் தான் விசேஷ ஆத்மா ஆகிறார்கள் - எப்படி குழந்தைகள் தந்தையின் அன்பில் எப்பொழுதும் மூழ்கியிருக்கிறார்கள். அதே போல் தந்தையும் குழந்தைகளின் சேவையிலே தான் எப்பொழுதும் மூழ்கியிருக்கிறார். குழந்தைகளுக்கு தந்தையைத் தவிர யாரும் இல்லை. மேலும் தந்தைக்கு குழந்தைகளைத் தவிர யாரும் இல்லை. எப்படி நீங்கள் தந்தையின் மகிமை பாடுகிறீர்கள். தினசரி ஒவ்வொரு குழந்தையின் விசேஷத்தை மற்றும் குணங்களை எதிரில் கொண்டு வருகிறோம். ஏனென்றால் யாரெல்லாம் தந்தையின் குழந்தையாக ஆகியிருக்கிறார்களோ அவர்கள் விசேஷ ஆத்மாக்களே! அப்படிப்பட்ட விசேஷ ஆத்மாக்களின் விசேஷத்தை தந்தையும் மகிமை பாடுகிறார். எப்படி வைர வியாபாரி ஒவ்வொரு இரத்தினத்தின் மதிப்பைத் தெரிந்திருக்கிறார். அதே போல் தந்தையும் ஒவ்வொரு குழந்தையின் உயர்ந்த தன்மையைத் தெரிந்திருக்கிறார். ஒவ்வொரு இரத்தினமும் ஒன்று இன்னொன்றை விட உயர்ந்தது. அந்த மாதிரி தன்னை உயர்ந்தவர் என்று புரிந்து நடந்து கொள்கிறீர்களா? நீங்கள் சாதாரணமானவர்கள் இல்லை. கடைசி மணி கூட சாதாரணமானது இல்லை, தந்தையைத் தெரிந்திருக்கும் விசேஷம் கடைசி மணியிலும் இருக்கிறது. நீங்கள் கடைசியிலிருப்பவர்கள் இல்லை. ஆனால் முதலில் செல்பவர்கள். இப்பொழுது யாருடைய வரிசை எண்ணும் நிர்ணயிக்கப்படவில்லை. அனைத்து சீட்டுகளும் காலியாக இருக்கின்றன. விசில் ஊதப்படவில்லை, விசில் ஒலித்தால் இருக்கையை எடுத்துக் கொள்வீர்கள். கடைசியில் வந்தவரும் வேகமாகச் சென்று முதல் எண்ணைப் பெற முடியும். தாய் தந்தையை விட்டு விட்டு மற்ற அனைத்து இருக்கைளும் காலியாக இருக்கின்றன. இப்பொழுது எதிர்காலம் உங்கள் கையில் இருக்கின்றது, பாக்கியத்தை உருவாக்கும் தந்தை எதிர்காலத்தை உங்கள் கையில் கொடுத்திருக்கிறார். எனவே என்ன விரும்புகிறீர்களோ அதை உருவாக்கிக் கொள்ளுங்கள். என்ன விரும்புகிறீர்களோ, எப்படி விரும்புகிறீர்களோ, எந்த அளவு விரும்புகிறீர்களோ அந்த அளவை உருவாக்க முடியும் என்ற வரதானம் இந்த சங்கமயுக காலத்திற்கு கிடைத்திருக்கிறது. அந்த மாதிரியான

பொன்னான வாய்ப்பை எடுத்து கொண்டீர்களா?

சேவையின் விஸ்தாரம் எவ்வளவு தான் இருந்தாலும், ஆனால் உங்களின் நிலை (ஸ்திதி) சார ரூபத்தில் இருக்கட்டும். ஒரு நொடியில் மாஸ்டர் விதை ரூபமாக ஆகிவிடுங்கள் என்று இப்பொழுது டைரக்ஷன் கிடைக்கிறது என்றால், உடனே ஆகி விட வேண்டும். அதற்கு நேரம் எடுக்கக்கூடாது. ஒரு நொடிக்கான சவாலாகும். ஒரு நொடியின் சவால் மூலம் முழு கல்பத்தின் எதிர்காலத்தை உருவாக்க முடியும். எந்தளவு முடியுமோ அந்த அளவு உருவாக்கிக் கொள்ளுங்கள். நல்லது.

வரதானம் :

முற்றுப் புள்ளியின் நிலை மூலமாக இயற்கையின் குழப்பத்தை நிறுத்தக்கூடிய இயற்கையின் தலைவன் ஆகுக.

தற்சமயம் குழப்பம் அதிகரிப்பதற்கான நேரம். இறுதி பரீட்சையில் ஒரு பக்கம் இயற்கை, இன்னொரு பக்கம் ஐந்து விகாரங்களின் கோரமான ரூபம் இருக்கும். தமோகுண (தாழ்தரமான) ஆத்மாக்களின் தாக்குதல், மேலும் பழைய சம்ஸ்காரத்தின் . . . அனைத்தும் இறுதி நேரத்தில் தன்னுடைய வாய்ப்பை எடுக்கும். அந்த மாதிரியான நேரத்தில் சாரத்தில் கொண்டு வரும் சக்தி மூலமாக இந்த நேரம் சாகாரி அடுத்த நேரம் ஆகாரி மற்றும் ஒரு நேரம் நிராகார நிலையில் நிலைத்திருப்பதற்கான பயிற்சி வேண்டும். பார்த்தும் பார்க்காதீர்கள், கேட்டும் கேட்காதீர்கள். எப்பொழுது அந்த மாதிரி முற்றுப்புள்ளியின் நிலை இருக்குமோ அப்பொழுது இயற்கையின் தலைவனாகி இயற்கையின் குழப்பத்தை நிறுத்த முடியும்.

சுலோகன்:

தடையற்ற இராஜ்ய அதிகாரி ஆவதற்காக தடையற்ற சேவாதாரி ஆகுங்கள்

ஓம் சாந்தி

10.12.1979 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" புண்ணிய ஆத்மாக்களின் லட்சணம் "

இன்று பாப்தாதா தன்னுடைய மிக உயர்ந்த மகான் புண்ணிய ஆத்மாக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

1) புண்ணிய ஆத்மா என்றால் ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு விநாடி தனக்காக மற்றும் மற்ற ஆத்மாக்களுக்காக புண்ணியத்தின் கணக்கை சேமிப்பவர் மற்றும் சேமிப்பு செய்விப்பவர்.

2) புண்ணிய ஆத்மா என்றால் எப்பொழுதும் ஏதாவது பொக்கிஷத்தை மகாதானம் செய்து புண்ணியத்தை சம்பாதிப்பவர்.

3) புண்ணிய ஆத்மா என்றால் எப்பொழுதும் அவருடைய கண்களில் பாப்தாதாவின் ரூபம் மற்றும் முகத்தில் பாப்தாதாவின் காரியங்கள், நினைவில் தந்தைக்குச் சமமாக சக்திசாலியான நிலை, வாயில் எப்பொழுதும் ஞான இரத்தினம் அதாவது விலைமதிக்கமுடியாத வார்த்தைகள், ஒவ்வொரு காரியத்தில் தந்தைக்குச் சமமான சரித்திரம், எப்பொழுதும் தந்தைக்குச் சமமான உலக நன்மை செய்யும் உள்உணர்வு, ஒவ்வொரு விநாடி ஒவ்வொரு எண்ணத்தினால் நன்மை செய்பவர், இரக்க மனமுடைய கிரணங்கள் மூலமாக நாலாபுறங்களிலும் உள்ள துக்கம் அசாந்தியின் இருளை நீக்குபவர்.

4) புண்ணிய ஆத்மா தன்னுடைய புண்ணியத்தின் முதல் மூலமாக அனேக ஏழைகளை செல்வந்தர்கள் ஆக்குபவர், ஞான சொரூப புண்ணிய ஆத்மாவின் ஒரு புண்ணியத்தில் கூட மிகுந்த சக்தி இருக்கிறது. ஏனென்றால் நேரடியாக பரமாத்மா சக்தியின் ஆதாரத்தில் புண்ணிய ஆத்மாவாக ஆகி இருக்கிறார்.

எப்படி துவாபர்யுகத்தின் மறைமுகமாக தானம், புண்ணியம் செய்யக்கூடிய விகாரி அற்ப காலத்து இராஜாக்களைப் பார்த்தும், கேட்டும் இருப்பீர்கள், அந்த இராஜாக்களிலும் இராஜ்ய அதிகாரத்தின் முழு சக்தி இருந்தது. எந்த ஆணையிட்டாலும் அதை யாரும் மாற்ற முடியாது. யாரை என்னவாக வேண்டுமானாலும் ஆக்க முடியும். யாரையாவது அனைத்தையும் நிறைந்தவராக ஆக்க முடியும், யாரையாவது தூக்கில் தொங்க விடவும்

முடியும், இரண்டு அதிகாரங்களும் இருந்தன. இது மறைமுகமான தானம், புண்ணியம் செய்ததின் சக்தி யார் துவாபர்யுகத்தின் தொடக்கத்தில் இதை யதார்த்த ரூபத்தில் உபயோகம் செய்தார்களோ அவர்களிடம் இருந்தது. பிற்காலத்தில் மெதுமெதுவாக அதே இராஜ்ய பலம் யதார்த்தமற்ற ரூபமாக ஆகிவிட்டது. இந்தக் காரணத்தினால் இறுதியில் முடிவு காலத்தில் ஒன்றுமே இல்லாமல் ஆகிவிட்டது. ஆனால் எப்படி மறைமுகமான இராஜ்ய அதிகாரத்திலும் இவ்வளவு சக்தி இருந்தது, அவர்கள் தன்னுடைய பிரஜையை குடும்பத்தை அற்ப காலத்திற்காக சுகம் நிறைந்தவர்களாகவும், அமைதி நிறைந்தவர்களாகவும் ஆக்கிவிட்டார்கள். அதே போலவேபுண்ணிய ஆத்மாக்கள் மற்றும் மகாதானிகள் உங்களுக்கும் நேரடியாக தந்தை மூலமாக இயற்கையை வெல்வதற்கும், மாயாவை வெல்வதற்கும் விசேஷ பலம் கிடைத்திருக்கிறது. அப்படி நீங்கள் அனைத்து சக்திகள் நிறைந்த அதிகாரம் உள்ளவர்கள். தன்னுடைய ஆல்மைட்டி அதிகாரத்தின் ஆதாரத்தில் அதாவது புண்ணியத்தின் முதலீட்டின் ஆதாரத்தில், சுத்த எண்ணத்தின் ஆதாரத்தினால், எந்த ஆத்மாக்களை என்ன விரும்புகிறீர்களோ அந்த மாதிரி அவர்களை ஆக்க முடியும். உங்களுடைய ஒரு எண்ணத்தில் அந்த அளவு சக்தி இருக்கிறது. தந்தையோடு சம்மந்தத்தை இணைக்க வைத்து ஒருவரை அனைத்தும் நிறைந்தவராக ஆக்க முடியும். அவர்களுடையது கட்டளை மற்றும் உங்களுடையது எண்ணம். அவர்கள் தன்னுடைய கட்டளையின் ஆதாரத்தினால் என்ன விரும்பினார்களோ அதைச் செய்ய முடிந்தது - அதே போல் நீங்கள் ஒரு எண்ணத்தின் ஆதாரத்தினால் ஆத்மாக்களை எவ்வளவு விரும்புகிறீர்களோ அவ்வளவு உயர்வாகத் தூக்கி விட முடியும். ஏனென்றால் நேரடியாக பரமாத்ம அதிகாரம் பிராப்தி ஆகியிருக்கிறது. அந்த மாதிரி சிரேஷ்ட ஆத்மாக்களாக இருக்கிறீர்களா? ஆனால் இப்பொழுது நடைமுறையில் ஏன் நடப்பதில்லை. அதிகாரம் இருக்கிறது, அனைத்து சக்திகளின் பலமும் இருக்கிறது, இருந்தும் அதை ஏன் உபயோகப்படுத்த முடிவதில்லை? என்ன காரணம்? இந்த உயர்ந்த சேவை இதுவரை ஏன் தொடங்கவில்லை?

எண்ண சக்தியை துஷ்பிரயோகம் செய்யாதீர்கள், உபயோகியுங்கள் -

முழு சரித்திரத்தில் யாராவது ஒருவேளை தன்னுடைய அதிகாரத்தை சரியாக உபயோகிக்கவில்லை என்றால் அவசியம் தவறாக உபயோகித்திருக்கிறார். இராஜாக்கள் இராஜ்யத்தை இழந்தார்கள், தலைவர்கள் தன்னுடைய பதவியை இழந்தார்கள், சர்வாதிகாரிகள் தன்னுடைய அதிகாரத்தை இழந்தார்கள். இவற்றிற்கு என்ன காரணம்? தன்னுடைய உண்மையான காரியத்தை விட்டு விட்டு அந்த மாதிரி கேளிக்கைகளிலேயே

வாழ்க்கையை கழித்தார்கள். ஏதாவது ஒரு விஷயத்தின் பக்கம் அவர்கள் அடிமையாக இருந்தார்கள். எனவே அதிகாரம் விடுபட்டு விட்டது. (பலஹீனத்தின்) வசமானவர்களாக இருந்தார்கள். எனவே தன்னுடைய அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தினார்கள். அதே போல் தந்தை மூலமாக புண்ணிய ஆத்மாக்கள் உங்களுக்கு ஒவ்வொரு விநாடி மற்றும் ஒவ்வொரு எண்ணத்தில் என்ன பலம் கிடைத்திருக்கிறதோ, அதிகாரம் கிடைத்திருக்கிறதோ அவற்றை யதார்த்த முறையில் பலத்தின் மதிப்பை தெரிந்து கொண்டு அதற்கு தகுந்தாற் போல் உபயோகிப்பதில்லை. சின்ன சின்ன விஷயங்களில் தன்னுடைய அலட்சியத்தின் பொறுப்பின்மையில் அல்லது வீணாக நினைப்பது மற்றும் பேசுவதில் தவறாக உபயோகம் செய்வதினால் சேமிப்பாகியிருக்கும் புண்ணியத்தின் முதலீடு மற்றும் பிராப்தியாகிருக்கும் ஈஸ்வரிய சக்தியை எப்படி உபயோகிக்க வேண்டுமோ அப்படி செய்ய முடிவதில்லை. இல்லை என்றால் உங்களுடைய ஒரு எண்ணம் கூட மிகவும் சக்திசாலியானது. உயர்ந்த பிராமணர்களின் எண்ணம், ஆத்மாவின் அதிர்ஷ்டத்தின் ரேகையை கிழிப்பதற்கான சாதனம் ஆகும். உங்களுடைய ஒரு எண்ணம் ஒரு சுவிட்ச் ஆகும். அதை ஆன் செய்து ஒரு நொடியில் இருளை அகற்ற முடியும்.

5) புண்ணிய ஆத்மாக்களின் எண்ணம் ஒரு ஆன்மீக காந்தம் ஆகும், அது ஆத்மாவை ஆன்மீகத்தின் பக்கம் கவரக்கூடியது.

6) புண்ணிய ஆத்மாவின் எண்ணம் ஒரு (லைட் ஹவுஸ்) கலங்கரை விளக்கம் ஆகும். அது அலைந்து கொண்டிருப்பவர்களுக்கு சரியான இலக்கை காண்பிக்கக் கூடியது.

7) புண்ணிய ஆத்மாவின் எண்ணம் மிக சீதள (குளிர்ந்த) சொரூபமானது அது விகாரங்களின் அக்னியில் எரிந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களை குளிரச் செய்யக்கூடியது.

8) புண்ணிய ஆத்மாவின் எண்ணம் அந்த மாதிரி உயர்ந்த ஆயுதம் ஆகும். அது அனேக பந்தனங்கள் உள்ள மற்றவர்களின் ஆதிக்கத்தில் இருக்கும் ஆத்மாவை சுதந்திரமாக ஆக்கக்கூடியது.

9) புண்ணிய ஆத்மாவின் எண்ணத்தில் அந்த மாதிரி விசேஷ சக்தி இருக்கிறது, எப்படி மந்திர தந்திரம் மூலமாக நடக்க முடியாத விஷயத்தையும் நடக்க வைத்து விடுகிறார்கள். அதே போல் எண்ணத்தின் சக்தி மூலமாக அசம்பவத்தையும் சம்பவமாக ஆக்க முடியும். வசீகரமான மகாமந்திரம் மூலமாக அனேகத்தின் வசமாகியிருக்கும் ஆத்மாக்களை மின்மினிப் பூச்சிக்குச் சமமாக பறக்க வைக்க முடியும்.

10) எப்படி இன்றைய நாட்களின் இயந்திரங்களின் மூலமாக பாலைவனத்தையும்

பசுமையான சோலைவனமாக ஆக்கிவிடுகிறார்கள், மலைகளிலும் மலர்களை விளைய வைக்கிறார்கள். புண்ணிய ஆத்மாக்கள் உங்களுடைய எண்ணம் மூலமாக நம்பிக்கை இழந்தவர்களையும் நம்பிக்கை வைத்திருப்பவராக ஆக்க முடியாதா என்ன?

அந்த மாதிரி ஒவ்வொரு விநாடியும் புண்ணியத்தின் கணக்கை சேமிப்பு செய்யுங்கள். ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு எண்ணத்தின் மதிப்பை தெரிந்து, எண்ணம் மற்றும் விநாடியை உபயோகப்படுத்துங்கள். எந்தக் காரியத்தை இன்றைய அனேக பல கோடி மடங்கு செல்வந்தர்களாலும் செய்ய முடியாதோ அதை உங்களுடைய ஒரு எண்ணம் ஆத்மாவை பல கோடி மடங்கு செல்வந்தனாக ஆக்க முடியும். அப்படியானால் உங்களுடைய எண்ணத்தின் சக்தி எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறது. சேமிப்பு செய்தாலும் மற்றும் செய்வித்தாலும் சரி, வீணாக இழந்தாலும் சரி, அது உங்கள் கையில் இருக்கிறது. இழப்பவர்களுக்கு வேதனை அடைய வேண்டியதாக இருக்கும். சேமிப்பு செய்பவர்கள் அனைத்து பிராப்திகள் என்ற ஊஞ்சலில் ஆடுவார்கள். சில நேரம் சுகத்தின் ஊஞ்சலில், சில நேரம் அமைதியின் ஊஞ்சலில், சில நேரம் ஆனந்தத்தின் ஊஞ்சலில் ஆடுவார்கள். மேலும் இழப்பவர்கள் ஊஞ்சலில் ஆடுபவர்களைப் பார்த்து தன்னுடைய பையை பார்த்துக் கொண்டே இருப்பார்கள். நீங்கள் அனைவருமே ஊஞ்சலில் ஆடுபவர்கள் தான் இல்லையா.

இராஜஸ்தான் மற்றும் உத்திரபிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் வந்திருக்கிறார்கள். இராஜஸ்தானை சேர்ந்தவர்களோ இராஜ்ய சக்தி அதாவது அதிகாரத்தின் சக்தி, ஈஸ்வரிய சக்தி மூலமாக எப்பொழுதும் தங்களுடைய இராஜஸ்தானை பாலைவனத்திலிருந்து காய்கறி மற்றும் மலர்கள் விளைவதாக ஆக்குவதில், காட்டை மலர்தோட்டமாக ஆக்குவதில் திறமைசாலிகள். இராஜஸ்தானில் முக்கிய ஸ்தானம் முக்கிய கேந்திரம் (சென்டர்) அப்படி எங்கு முக்கிய கேந்திரம் இருக்கிறதோ அவர்கள் அனைத்திலும் முக்கியமானவர்கள் இல்லையா? இராஜஸ்தானுக்கோ பெருமிதம் இருக்க வேண்டும், போதை இருக்க வேண்டும். இராஜஸ்தானிலிருந்து புதுப்புது சேவைக்கான திட்டங்கள் உருவாக வேண்டும். இராஜஸ்தானிற்கு ஏதாவது புதிய கண்டுபிடிப்பு செய்ய வேண்டும். இப்பொழுதினுடையது அல்ல இராஜஸ்தானின் நிலத்தை பரிவர்த்தனை செய்ய வேண்டும். அதற்காக அடிக்கடி கடும் உழைப்பு என்ற தண்ணீர் விட வேண்டும். இடைவிடாது உரம் போடவேண்டும். இப்பொழுது லேசாக உரம் போடப்பட்டிருக்கிறது. நல்லது. இன்னும் ஒரு நாள் பின்பு உத்திரபிரதேசத்தின் உயர்ந்த நிலையை கூறுவோம். வெளிநாட்டினரோ இப்பொழுதும் உடனே செய்யக்கூடியவர்கள். நினைத்தார்கள் உடனே செய்யவும் செய்தார்கள். உத்திரபிரதேசத்தின் மகான்தன்மையின் மாலையையும் வர்ணனை

செய்வோம். இப்பொழுது தயார் செய்யுங்கள், பிறகு இன்னொரு நாள் மாலை அணிவிப்போம்.

அந்த மாதிரி உயர்ந்த எண்ணத்தின் விதி மூலமாக ஆத்மாக்களை சத்கதி பெறச் செய்யக்கூடிய, ஈஸ்வரிய சக்தி மூலமாக ஆத்மாக்களை ஒவ்வொரு ஆபத்திலிருந்தும் விடுவிக்கக்கூடிய, எப்பொழுதும் புண்ணியத்தின் முதலை சேமிப்பு செய்யக்கூடிய மற்றும் செய்விக்கக்கூடிய, எப்பொழுதும் உலக நன்மைக்கான திட எண்ணத்தை வைத்திருக்கக்கூடிய அந்த மாதிரி மிக உயர்ந்த புண்ணிய ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்

டீச்சர்களுடன்:

டீச்சர்களோ எப்பொழுதும் முன்னேறும் கலையின் அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? டீச்சர்களின் விசேஷம் - அனுபவியாக ஆவது. டீச்சர் என்றால் சொல்பவர்கள் அல்ல! ஆனால் டீச்சர் என்றால் சொல்வதின் கூடவே அனுபவம் செய்விப்பவர். அப்படி சொல்வது மற்றும் சொரூபத்தில் அனுபவம் செய்விப்பது என்ற இது தான் டீச்சர்களின் விசேஷம் ஆகும். சொல்பவர்கள் அல்லது சொற்பொழிவு நிகழ்த்துபவர்கள் வகுப்புக்கள் நடத்துபவர்களோ துவாபர்யுகத்திலிருந்து பெரிய பெரிய பெயர் பெற்றவர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் இங்கு ஞான மார்க்கத்தில் பெயர் பெற்றவராக யார் ஆகிறார்? சொற்பொழிவு நிகழத்துபவர்களா? யார் சொல்வதின் கூடவே அனுபவமும் செய்விக்கிறாரோ அவர் தான் ஆகிறார். டீச்சர்களின் விசேஷ கவனத்தில் நான் எப்பொழுதும் எங்கிருந்தாலும் அங்குள்ள மற்றும் அதன் கூடவே எல்லைக்கப்பாற்பட்ட வாயுமண்டலம் மற்றும் வைப்ரேஷன்களை (அதிர்வலைகள்) எப்பொழுதும் சுத்தமாக ஆக்க வேண்டும். எப்படி ஏதாவது எல்லைக்குட்பட்ட நறுமணம் சூழ்நிலையை எவ்வளவு மாற்றி விடுகிறது, அதே போல் டீச்சர்களின் குணங்களின் தாரணையின் நறுமணம், சக்தியின் நறுமணம் வாயுமண்டலம் மற்றும் வைப்ரேஷனை எப்பொழுதும் சக்திசாலியாக ஆக்கி விடட்டும். டீச்சர் ஒருபொழுதும் வாயுமண்டலம் அப்படி இருக்கிறது, இவர்களின் வைப்ரேஷன்கள் காரணமாக என்னுடைய முயற்சியும் அப்படி ஆகிவிட்டது என்று ஒருபொழுதும் கூற முடியாது. டீச்சர்கள் என்றால் பரிவர்த்தனை செய்பவர்களேயன்றி சுயம் தானே பரிவர்த்தனை ஆகுபவர்கள் அல்ல. யார் பரிவர்த்தனை செய்பவர்களாக இருப்பார்களோ அவர் ஒருபொழுதும் யாருடைய

பிரபாவத்தில் அவரே மாறுபவராக ஆவதில்லை. அப்படி டீச்சர்களின் விசேஷம் வாயுமண்டலத்தை சக்திசாலியாக ஆக்குவது, அவரே சக்திசாலியாகி பலஹீனமானவர்களுக்கு சக்தியின் சகயோகம் கொடுப்பது ஆகும். மனமுடைந்தவர்களின் ஊக்கம் உற்சாகத்தை அதிகரிப்பது. அப்படி நீங்கள் அந்த மாதிரியான டீச்சர்கள் தான் இல்லையா? இது தான் டீச்சர்களின் கடமை அல்லது ட்யூட்டி ஆகும். மற்றவர்களையும் சம்பன்னம் ஆக்க முடியும் அளவிற்கு தானும் சம்பன்னம் ஆகிவிட வேண்டும். ஒருவேளை ஏதாவது சக்தியின் குறை இருக்கிறது என்றால் மற்றவர்களும் அதே விஷயத்தில் பலஹீனமாக இருப்பார்கள். ஏனென்றால் பொறுப்பில் இருப்பவர்கள் இல்லையா?. டீச்சர்கள் மிக கவனமுடையவராகவும் எவரெடியாகவும் இருக்க வேண்டும். ஸ்தூல மற்றும் சூட்சும சோம்பலின் பெயர் அடையாளம் கூட இருக்க வேண்டாம். முயற்சி செய்வதற்கும் சோம்பல் இருக்கும், ஸ்தூல காரியம் செய்வதிலும் சோம்பல் இருக்கும். முயற்சி செய்வதில் மனமுடைந்து போகிறார்கள் என்றால் சோம்பல் வந்து விடுகிறது. என்ன செய்வது, இவ்வளவு தான் செய்ய முடியும், இதை விட அதிகமாக செய்ய முடியாது. தைரியம் இல்லை, செய்து கொண்டு தானே இருக்கிறோம், இந்த வாழ்க்கையில் இருந்து கொண்டு தானே இருக்கிறோம். இந்த மாதிரி மனமுடைந்து போகிறார்கள். முயற்சி செய்வதில் ஏற்படும் களைப்பு கூட சோம்பலின் அடையாளம் ஆகும். சோம்பல் உள்ளவர்கள் விரைவில் களைப்படைகிறார்கள், ஊக்கம் உள்ளவர்கள் களைப்பற்றவர்களாக இருப்பார்கள். அப்படி டீச்சர்கள் என்றால் தன்னுடைய முயற்சி செய்வதிலும் களைப்படைபவர் அல்ல, மேலும் மற்றவர்களையும் செய்யும் முயற்சியில் களைப்படைய விடுவதில்லை. அப்படி ஆல்ரவுண்டராகவும் இருங்கள். விழிப்புடனும் இருங்கள்.

ஒவ்வொரு காரியத்திலும் சம்பன்னமாக இருக்க வேண்டும். சில நேரம் வகுப்பு எடுப்பது, உள்ளே உள்ள காரியங்களைச் செய்வது எங்களுடைய வேலை, உடலால் செய்யும் ஸ்தூல சேவை அது மற்றவர்களுடைய வேலை என்று டீச்சர்கள் நினைக்கிறார்கள். ஆனால் அப்படி இல்லை. ஸ்தூல காரியமும் உள்ளே செய்யும் காரியத்தின் பாடத்திற்குள் வருகிறது. இதுவும் படிப்பின் ஒரு பாடம் ஆகும். இதை லேசான விஷயம் என்று நினைக்காதீர்கள். ஒருவேளை உடலால் செய்யும் சேவையில் மதிப்பெண்கள் குறைந்தது என்றாலும் மதிப்புடன் தேர்ச்சி பெறுபவர் ஆக முடியாது. சமநிலை இருக்க வேண்டும். இதை சேவை என்று நினைக்காததும் தவறு ஆகும். உள்ளே செய்யும் சேவையில் இதுவும் ஒரு பாகம் ஆகும். ஒருவேளை மிக அன்போடு யோக சொரூபமானவராகி

உணவை தயாரிக்கவில்லை என்றால், மனதின் மேல் அன்னத்தின் பிரபாவம் எப்படி ஏற்படும். ஸ்தூல காரியம் செய்யவில்லை என்றால் கர்மனா சேவையின் மதிப்பெண்கள் எப்படி சேமிப்பு ஆகும். அப்படி டீச்சர்கள் என்றால் பேச்சாளர் மட்டும் அல்ல, வகுப்பு எடுப்பவர் மட்டுமல்ல, 7 நாள் பாடம் எடுப்பவர் மட்டுமல்ல, எப்படி நேரமோ எப்படி பாடமோ அதில் அதே ஆர்வம் நிறைந்து சேவையில் வெற்றி அடைய வேண்டும். இதைத் தான் ஆல்ரவுண்டர் என்று கூறுவது. உள்ளே உள்ள காரியம் செய்பவர் இன்னொருவர், வெளியில் உள்ள காரியம் செய்பவர் இன்னொருவர் என்று அப்படி இருக்கக்கூடாது. இரண்டிற்குமே ஒன்றிற்கு ஒன்று சம்மந்தம் இருக்கிறது.

டீச்சர்களுக்கு தியாகம் மற்றும் தபஸ்யாவோ எப்பொழுதும் நினைவில் இருக்கிறது தான் இல்லையா? எந்தவொரு நபரின் அல்லது சாதனத்தின் ஈர்ப்பிலும் வர வேண்டாம். இல்லை என்றால் இதுவும் கர்மாதீத் ஆவதில் ஒரு பந்தனம் ஆகிவிடும். அப்படி டீச்சர்கள் தன்னுடைய முயற்சி செய்வதில் தானே திருப்தியாக இருக்கிறார்களா? முன்னேறும் கலையின் அனுபவப்பூர்வமான உணருதல் ஏற்படுகிறதா? அனைவர் மீதும் நீங்கள் அனைவரும் திருப்தியாக இருக்கிறீர்களா? தன்னுடைய முயற்சி செய்வதில், சேவையில் பிறகு உடன் இருப்பவர்கள் மேல் அனைவர் மீதும் திருப்தியாக இருக்கிறீர்களா? அனைவருடைய சான்றிதழ்களும் இருக்க வேண்டும் இல்லையா? அப்படி அனைத்து சான்றிதழ்களும் இருக்கின்றனவா? என்ன நினைக்கிறீர்கள்? ஒருவேளை நீங்கள் உண்மையாகவும் மேலும் தெளிவாகவும் திருப்தியாக இருக்கிறீர்கள் என்றால் தந்தையும் திருப்தியாக இருக்கிறார். ஒன்று நான் திருப்தியாக இருக்கிறேன் என்று அப்படியே சொல்லிவிடுவது, இன்னொன்று உண்மையாகவும் தெளிவாகவும் நான் திருப்தியாக இருக்கிறேன் என்று கூறுவது. எப்பொழுதும் திருப்தியாக இருக்கிறீர்கள். இங்கே வந்திருக்கிறீர்கள், தன்னைப் பற்றியும் அல்லது சேவையைப் பற்றியும் ஏதாவது குறை இருக்கிறது என்றால் இங்கே யார் பொறுப்பாளர்களாக இருக்கிறார்களோ அவர்களோடு உங்களுடைய விஷயங்களை பரிமாற்றம் செய்யுங்கள். இன்னும் வரும் காலத்திற்காக முன்னேறும் கலையை உருவாக்கி விட்டுச் செல்லுங்கள். குறையை நிரப்புவதற்காகவும் மேலும் தன்னை லேசானவராக ஆக்குவதற்காகத்தானே வருகிறீர்கள். எந்தவொரு சின்ன விஷயமாக இருந்தாலும் எது முயற்சி செய்வதின் வேகத்தில் தடை ஏற்படுத்துவதற்கு காரணமாக இருக்கிறதோ அதை அழித்துவிட்டுச் செல்லுங்கள். நல்லது.

வரதானம் :

மனம் - புத்தியை மனம் சொல்லும் வழியிலிருந்து விடுவித்து சூட்சும வதனத்தின் அனுபவம் செய்யக்கூடிய டபுள் லைட் ஆகுக.

எண்ணத்தின் சக்தியை மட்டும் அதாவது மனம் மற்றும் புத்தியை எப்பொழுதும் மனம் சொல்லும் வழியிலிருந்து காலியாக வைத்தீர்கள் என்றால் இங்கே இருந்த போதும் வதனத்தின் அனைத்துக் காட்சிகளும் அந்த மாதிரி தெளிவாக அனுபவம் செய்வீர்கள், எப்படி உலகத்தின் ஏதாவதொரு காட்சி தெளிவாக தென்படுகிறதோ அப்படி. இந்த அனுபவத்திற்காக எந்தவொரு சுமையையும் தன் மேல் வைக்காதீர்கள். அனைத்து சுமையையும் தந்தைக்குக் கொடுத்து டபுள் லைட் ஆகுங்கள். மனம் - புத்தியால் எப்பொழுதும் சுத்த எண்ணம் என்ற உணவை அருந்துங்கள். ஒருபொழுதும் வீணான எண்ணம் மற்றும் தீய எண்ணத்தின் அசுத்த உணவை அருந்தாதீர்கள். பிறகு சுமையிலிருந்து லேசாகி உயர்ந்த நிலையின் அனுபவம் செய்ய முடியும்.

சுலோகன்:

வீணானவற்றிற்கு ஃபுல் ஸ்டாப் (முற்றுப்புள்ளி) இடுங்கள், மேலும் சுபபாவனையின் ஸ்டாக்கை ஃபுல் (முழுமையாக) ஆக்குங்கள்.

ஓம் சாந்தி

" ஆன்மீக அலங்காரம் மற்றும் அதனால் அலங்கரிக்கப்பட்ட மூர்த்திகள் "

பாப்தாதா தன்னுடைய அனைத்து குழந்தைகளையும் இன்று விசேஷமாக அலங்கரிக்கப்பட்ட சொரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொருவரின் ஒப்பனை செய்யப்பட்ட அலங்காரத்தை மிக அழகான ரூபத்தில் பார்த்துக் கொண்டிருந்தார். உங்களை நீங்களே பார்த்திருக்கிறீர்களா? என்னென்ன அலங்காரம் செய்யப்பட்டிருக் கின்றன? தன்னுடைய ஆன்மீக அலங்காரத்தின் ஒப்பனையை எப்பொழுதுமே செய்து நடந்து கொண்டிருக்கிறீர்களா?

இன்று அமிர்தவேளையில் ஒவ்வொரு குழந்தையின் அலங்காரம் செய்யப்பட்ட ரூபத்தைப் பார்த்தோம். என்ன பார்த்தோம்? ஒவ்வொரு குழந்தையும் மிக அழகான குடை நிழலின் கீழே அமர்ந்திருந்தனர். அந்த குடை நிழலின் கீழே இருந்த காரணத்தினால் இயற்கை (உடல்) மற்றும் மாயாவின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பாக இருந்தனர். மிக அதிகமான ஆன்மீக பாதுகாப்பு வளையத்துக்குள் இருந்தனர். சிறிது கூட சூட்சும வைப்ரேஷன் (உணர்வலைகள்) குடைநிழலின் உள்ளே நுழைய முடியாது. அந்த மாதிரி குடைநிழலின் கீழ் உலக நன்மைக்கான சேவையின் பொறுப்பாளர்கள் கிரீடம் அணிந்து அமர்ந்திருந்தார்கள். இரட்டை கிரீடம் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஒன்று முழுமையான தூய்மையின் காரணமாக ஒளியின் கிரீடம், இன்னொன்று சேவைக்கான கிரீடம். இதில் வரிசைக்கிரமமாக இருந்தார்கள். சில சில குழந்தைகளின் தூய்மையின் மூன்று நிலைகள், எண்ணம், சொல் மற்றும் செயலின் ஒளி கிரீடம், ஒன்றோ அதிகமாக பரவியிருந்தது. எந்த அளவு மூன்று நிலைகளின் தூய்மை இருந்ததோ அதன் அனுசாரம் ஒளியின் கிரீடம் நாலாபுறங்களிலும் தன்னுடைய பிரகாசத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது. சிலருடையது அதிகமாக இருந்தது என்றால் சிலருடையது குறைவாக இருந்தது. கூடவே சேவையின் பொறுப்பின் அனுசாரம் ஒளியின் சக்தியில் வேற்றுமை இருந்தது. அதாவது சதவிகிதத்தில் வித்தியாசம் இருந்தது. சிலர் 10 வோல்ட்டில் (மின்சக்தி) இருந்தார்கள் என்றால் சிலர் 1000 வோல்ட்டில் இருந்தார்கள், சதவிகிதம் மற்றும் பரவிய தூரத்தின்

அனுசாரம் விதவிதமான வரிசைக்கிரமமான கிரீடம் அணிந்தவர்களாக இருந்தார்கள்.

கிரீடத்தில் எந்த அளவு மேலே கூறியது போல் வரிசை எண்ணில் இருந்தார்களோ அதன் அனுசாரமே குடை நிழலிலும் வித்தியாசம் இருந்தது. சிலருடைய குடைநிழல் அந்த அளவு பெரியதாக இருந்தது. அந்தக் குடை நிழலின் கீழேயே இருந்து காரியம் செய்தார்கள். முழு உலகையும் குடைநிழலின் உள்ளே இருந்து வலம் வர முடிந்தது. இந்த அளவு எல்லைக்கப்பாற்பட்ட குடைநிழலாக இருந்தது. மேலும் சிலருக்கு அவரவர்களின் சக்திக்கு ஏற்றபடி வரிசைக்கிரமமாக எல்லைக்குட்பட்டதாக இருந்தது. அந்த மாதிரி எல்லைக்குட்பட்ட குடை நிழலின் கீழே அமர்ந்திருந்து அதாவது தன்னுடைய முயற்சி செய்வதின் உள்ளே நிரந்தர நினைவிற்குப் பதிலாக நியமப்படி, நேரப்படி நினைவில் இருப்பவர்களாக இருந்தார்கள். 4 மணிநேரம் நினைப்பவர்கள், 8 மணிநேரம் நினைப்பவர்கள் அதாவது நினைவையும் எல்லைக்குள் கொண்டு வருபவர்கள். நினைவு எல்லைக்கப் பாற்பட்ட தந்தையினுடையது, ஆனால் நினைவு செய்பவர்கள் எல்லைக்கப்பாற்பட்ட நினைவையும் எல்லைக்குள் கொண்டு வந்து விட்டார்கள். சம்மந்தம் அழியாதது, ஆனால் சம்மந்தத்தை வைத்திருப்பவர்கள் நேரத்தை நிச்சயம் செய்து அழியக்கூடியதாக ஆக்கி விட்டார்கள். சில நேரம் தந்தையுடன் சம்மந்தம், சில நேரம் மனித நபர்களுடன் சம்மந்தம், சில நேரம் சாதனங்களுடன் சம்மந்தம், சில நேரம் தன்னுடைய பழைய சுபாவ சம்ஸ்காரத்துடன் சம்மந்தம். பெறுவதற்கோ அழியாத அதிகாரம் இருக்கிறது, அழியாத ஆஸ்தி இருக்கிறது, ஆனால் கொடுக்கும் நேரத்தில் அழியும் ஆஸ்தியிலிருந்தும் ஒதுங்கி விடுகிறார்கள். பெறுவதிலோ பரந்த மனமுடையவர்கள், ஆனால் கொடுப்பதில் சிலர் சிக்கனம் செய்து விடுகிறார்கள். எப்படி சிக்கனம் செய்கிறீர்கள் என்று அதை தெரிந்திருக்கிறீர்களா? சில குழந்தைகள் மிக புத்திசாலித்தனத்தோடு தந்தையுடன் ஆன்மீக உரையாடல் செய்கிறார்கள். என்ன கூறுகிறார்கள்? இந்த இந்த விஷயத்தில் நான் இந்த அளவு மாற்றம் செய்து விட்டேன், இன்னும் கொஞ்சம் இருக்கிறது, அதுவும் ஆகிவிடும். இந்த அளவு கொஞ்சமாவது இருக்கத்தானே செய்யும் இல்லையா? பெறுவதில் கொஞ்சம் கொஞ்சம் கொடுத்து விடுங்கள் என்று கூறுவதில்லை. ஒருவேளை தந்தை தான் ஏதோ ஒரு மகாரதிக்கு விசேஷமான கவனிப்பு செய்கிறார் என்றால், மற்றவர்களுக்கு நாங்களும் தான் அதிகாரி என்ற எண்ணம் எழும். பெறும் விஷயத்தில் கொஞ்சம் கூட விட மாட்டார்கள், ஆனால் கொடுப்பதில் கொஞ்சம் கொஞ்சம் என செய்து முடித்து விடுகிறார்கள். இந்த மாதிரி சிக்கனம் செய்கிறார்கள், சாதுர்யமாக அவசியம் சம்பன்னம் ஆகிவிடுவேன், அது

நிறைவேறி விடும் என்று தந்தைக்கே மன ஆறுதல் கொடுக்கிறார்கள். எப்பொழுது பெறுகிறீர்களோ அதுவோ ஒரு நொடிக்கான அதிகாரம் என்றால் கொடுப்பதிலும் கூட அந்த அளவு பரந்த மனமுடையவர்களாக ஆகுங்கள். மாற்றம் செய்யும் சக்தியை முழு சதவிகிதத்தில் உபயோகம் செய்யுங்கள். அப்படி நிரந்தர நினைவு எல்லைக்குள் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனவே குடைநிழலிலும் வரிசைக்கிரமத்தை பார்த்தோம். வரிசைக்கிரமமாக இருக்கும் காரணத்தினால் மாயாவின் வைப்ரேஷன், சூழ்நிலை, நபர், சாதனம், சுபாவம், சம்ஸ்காரம் தாக்குதல் செய்கின்றன. இல்லை என்றால் குடைநிழலின் கீழ் எப்பொழுதும் பாதுகாப்பாக இருக்க முடியும்.

கிரீடம் அணிந்தவர்களையும் பார்த்தோம், குடைநிழலில் இருப்பவர்களையும் பார்த்தோம், கூடவே அனைத்து கிரீடம் அணிந்தவர்களையும் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர்களையும் பார்த்தோம். ஆசனமோ எதுவென்று தெரிந்திருக்கிறீர்கள் - தந்தையின் இதய சிம்மாசனம். ஆனால் இந்த இதய சிம்மாசனம் அந்த அளவு தூய்மையானது இதில் யார் எப்பொழுதும் தூய்மையாக இருக்கிறார்களோ அவர்கள் தான் எப்பொழுதும் அமர முடியும். தந்தை ஆசனத்திலிருந்து இறக்கி விடுவதில்லை. ஆனால் அவர்களே இறங்கி விடுகிறார்கள். தந்தையிடமிருந்தோ அனைத்து குழந்தைகளுக்கும் நிரந்தரமாக இதய சிம்மாசனதாரியாக இருங்கள் என்று நிரந்தரமான வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஆனால் தானாகவே கர்மத்தின் விளைவுகளின் சக்கரத்திற்கு ஏற்றபடி யார் எப்பொழுதும் தந்தையைப் பின்பற்றி நடப்பவராக இருப்பாரோ அவர் தான் எப்பொழுதுமே அமர முடியும். எண்ணத்தில் கூட தூய்மையின்மை அல்லது மரியாதைக்கு புறம்பானவை வந்து விடுகிறது என்றால் இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவருக்குப் பதிலாக இறங்கும் கலையில் அதாவது கீழே வந்து விடுகிறார்கள். எப்படி எப்படி காரியம் செய்கிறார்களோ அதன் பிரகாரம் அந்த நேரமே வேதனை அடைகிறார்கள் மற்றும் இதய சிம்மாசனத்திலிருந்து இறங்கும் கலையில் வந்து விட்டோம் என்று உணரவும் செய்கிறார்கள். ஒருவேளை யாராவது அதிகமாக தவறான காரியம் செய்கிறார்கள் என்றால் வேதனை அடையும் நிலையில் வந்து விடுகிறார்கள். ஒருவேளை யாராவது பாவம் செய்வதில்லை, ஆனால் வீணான காரியம் நடந்து விடுகிறது என்றால் வேதனை அடையும் நிலை இருக்காது, ஆனால் (தவறை) உணரும் நிலை இருக்கும். அடிக்கடி வீணான எண்ணம், இதை செய்திருக்கக்கூடாது என்று தவறை உணரும் நிலையில் கொண்டு வந்து கொண்டே இருக்கும். இது தவறு என்று முள் மாதிரி குத்திக் கொண்டே இருக்கும். எங்கு வேதனை அடையும் மனநிலை மற்றும் உணரும் நிலை அனுபவம்

ஆகுமோ அங்கு இதய சிம்மாசனதாரியின் போதையின் நிலை இருக்காது. இதய சிம்மாசனதாரி முதல் நிலை ஆகும். இரண்டாவது நிலை செய்த பிறகு உணரும் நிலை ஆகும். இதில் கூட வரிசை எண் இருக்கிறது. சிலர் செய்த பிறகு உணருகிறார்கள், சிலர் செய்யும் நேரத்திலேயே உணருகிறார்கள். மேலும் சிலர் காரியம் நடக்கும் முன்பாகவே அதைத் தெரிந்து ஏதோ ஒன்று நடக்கப் போகிறது, ஏதோ புயல் வரப் போகிறது என்று எண்ணத்தினால் தெரிந்து கொள்வார்கள். வரும் முன்பாகவே உணர்ந்து அதை தெரிந்து அழித்து விடுவார்கள். அப்படி இரண்டாவது நிலை தவறை உணருதலுக்கானது. மூன்றாவது வேதனை அடைவதற்கானது. இதில் கூட வரிசை எண் இருக்கிறது. சிலர் வேதனை அடைந்ததின் கூடவே பரிவர்த்தனை செய்து விடுகிறார்கள். மேலும் சிலர் வேதனை அடைகிறார்கள் ஆனால் பரிவர்த்தனை செய்ய முடிவதில்லை. வேதனை அடைவது இருக்கிறது, ஆனால் பரிவர்த்தனை செய்வதற்கான சக்தி இல்லை என்றால் அதற்காக என்ன செய்ய முடியும்?

அந்த மாதிரி நேரத்தில் விசேஷமாக தனக்காக ஏதாவது ஒரு விரதம் மற்றும் நியமத்தை கடைபிடிக்க வேண்டும். எப்படி பக்தி மார்க்கத்தில் கூட அற்ப காலத்தின் காரிய வெற்றிக்காக விசேஷமாக நியமம் மற்றும் விரதத்தைக் கடைபிடிக்கிறார்கள். விரதம் மூலமாக உள்உணர்வில் பரிவர்த்தனை ஆகும். உள்உணர்வு மூலமாக எதிர்கால வாழ்க்கை என்ற உலகம் மாறி விடும். ஏனென்றால் விசேஷமான விரதத்தின் காரணமாக அடிக்கடி எதற்காக விரதம் வைத்திருக்கிறோமோ அந்த சுத்த எண்ணம் இயல்பாகவே நினைவு வந்து கொண்டே இருக்கும். எப்படி பக்தர்கள் விசேஷமாக ஏதாவது தேவி அல்லது தேவதைக்காக விரதம் இருக்கிறார்கள் என்றால் விரும்பாவிட்டால் கூட நாள் முழுவதும் அந்த தேவி அல்லது தேவதையின் நினைவு வரும் மேலும் நினைவின் காரணமாகத்தான் தந்தை (சிவபாபா) அதே தேவி அல்லது தேவதை மூலமாக நினைவு செய்ததின் பலனாக அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றி வைக்கிகிறார். அப்படி பக்தர்களின் விரதத்திற்கும் பலன் கிடைக்கிறது என்றால், ஞானம் நிறைந்த ஆத்மா அதிகாரி குழந்தைகளுக்கு சுத்த எண்ணம் என்ற விரதத்தின் மற்றும் திட எண்ணம் என்ற விரதத்தின் பிரத்யக்ஷ பலன் அவசியம் கிடைக்கிறது. அப்படி சிம்மாசனதாரியாகவோ அனைவரையும் பார்த்தோம். ஆனால் சிலர் நிரந்தரமாக, சிலர் இறங்குவதும் ஏறுவதுமாக, சிலர் சில நேரம் இதயசிம்மாசனதாரி மற்றும் சில நேரம் கீழே வந்திருப்பவர்களாக பார்த்தோம். நான்காவது அலங்காரமாக என்ன பார்த்தோம்?

ஒவ்வொருவரிடமும் சுயதரிசன சக்கரத்தைப் பார்த்தோம். அனைவருமே சுயதரிசன சக்கரதாரியாக இருந்தார்கள். ஆனால் சிலருடைய சக்கரம் இயல்பாகவே சுற்றிக் கொண்டிருந்தது. மேலும் சிலருடையதை சுற்ற வேண்டியதாக இருந்தது, மேலும் சிலருடையது சரியான பக்கம் சுற்ற வேண்டியதற்குப் பதிலாக தவறான பக்கம் சுற்றி விடுகிறார்கள். அவர்கள் சுயதரிசன சக்கரத்திற்குப் பதிலாக மாயாவின் சுழற்சியில் வந்து விடுகிறார்கள். ஏனென்றால் இடது பக்கமாக ஆகிவிட்டது இல்லையா?. சுயதரிசன சக்கரத்திற்குப் பதிலாக பரதரிசன (பிறரது குறைகளை பார்க்கும்) சக்கரத்தை சுற்றி விடுகிறார்கள். இது தான் இடது பக்கமாக சுற்றுவது. மாயாவை வென்றவர் ஆவதற்குப் பதிலாக மற்றதின் தரிசனத்தின் குழப்பத்தின் சக்கரத்தில் வந்து விடுகிறார்கள். அதில் 'ஏன்? மற்றும் 'என்ன'? என்ற கேள்வியின் வலை உருவாகி விடுகிறது. அதை அவர்களே உருவாக்குகிறார்கள், பிறகு அவர்களே அதில் சிக்கிக் கொள்கிறார்கள். ஆக என்னென்ன பார்த்தோம் என்று கேட்டீர்களா?

நான்கு அலங்காரங்களினால் ஒப்பனை செய்யப்பட்டவர்களாக அவசியம் இருந்தார்கள். ஆனால் வரிசைக்கிரமமாக இருந்தார்கள். இப்பொழுது என்ன செய்வீர்கள்? எல்லைக்கப்பாற்பட்ட குடை நிழலின் உள்ளே வந்து விடுங்கள். அதாவது சில நேரம் நினைவில் இருக்கும் வேற்றுமையை அகற்றி நிரந்தர நினைவின் குடைநிழலில் வந்து விடுங்கள். தூய்மை மற்றும் சேவையின் இரட்டை கிரீடத்தின் சதவிகிதத்தை எல்லைக்கப்பாற்பட்டதில் ஆக்குங்கள். அதாவது எல்லைக்கப்பாற்பட்டு பரவி இருக்கும் ஒளிக்கிரீடம் அணிந்தவராக ஆகுங்கள். கொடுப்பது மற்றும் பெறுவதில் ஒரு நொடியின் பயிற்சியாளராகி எப்பொழுதும் இதய சிம்மாசனதாரி ஆகுங்கள். ஏறுவதிலும் மற்றும் இறங்குவதிலும் களைப்படைந்து விடுகிறீர்கள், எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட ஆன்மீக ஓய்வில் இதய சிம்மாசனதாரியாக இருங்கள். அதாவது பந்தனமற்ற ஆத்மாவின் ஓய்வின் நிலையில் இருங்கள். ஞானம் நிறைந்த மாஸ்டர் ஆகி எப்பொழுதும் மற்றும் இயல்பாக சுயதரிசன சக்கரத்தை சுற்றிக் கொண்டே இருங்கள். பரதரிசன சக்கரத்தில் ஏன் மற்றும் என்ன என்ற கேள்வியின் வலையிலிருந்து எப்பொழுதும் விடுபட்டு விட்டீர்கள் என்றால் என்னவாகும்? எப்பொழுதும் யோகம் நிரம்பியவராக, பந்தனமற்ற வாழ்க்கை உடையவராக சக்கரவர்த்தி ஆகி தந்தையுடன் சேர்ந்து உலக நன்மைக்கான சேவையில் சுற்றி வந்து கொண்டே இருப்பீர்கள். உலக சேவாதாரி சக்கரவர்த்தி இராஜா ஆகிவிடுவீர்கள்.

அந்த மாதிரி எப்பொழுதும் அலங்கரிக்கப்பட்ட, எப்பொழுதும் சுயதரிசன சக்கரதாரியாக இருக்கும், மாயாவின் ஒவ்வொரு சொரூபத்தையும் மாஸ்டர் ஞானம் நிறைந்த நிலையில் நிலைத்திருந்து முன்பாகவே பகுத்தறிந்து கொள்ளும், அனேக விதமான மாயாவின் தாக்குதலை முடிவுகட்டி மாயாவை பலியாக்கக்கூடிய, தந்தையின் கழுத்தின் மாலையாகக்கூடிய, அழியாத அனைத்து உறவுகளின் அன்பை வைத்து எப்பொழுதும் நடந்து கொள்ளக்கூடிய, அந்த மாதிரி தந்தைக்குச் சமமான குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்

உத்திரபிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் வந்திருக்கிறார்கள். உத்திரபிரதேசத்தின் விசேஷமானது எப்படி பக்தியின் தீர்த்த ஸ்தலங்கள் உத்திரபிரதேசத்தில் அதிகம் இருக்கின்றன, அதே போல் ஞானத்தின் சேவை நிலையங்களின் விஸ்தாரத்தையும் நன்றாக செய்து கொண்டிருக்கிறார்கள். உத்திர பிரதேசத்தில் பக்த ஆத்மாக்களும் அதிகமாக இருக்கிறார்கள் என்றால் மாஸ்டர் பகவான் நீங்கள் இப்பொழுது பக்தர்களின் குரலைக் கேட்டு இன்னும் அதிக வேகத்தில் அவர்களுக்கு பக்தியின் பலனைக் கொடுங்கள். கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள், ஆனால் இன்னும் வேகத்தை அதிகரியுங்கள். உத்திரபிரதேசத்தின் விசேஷம் அனேக ஏழைகளை செல்வந்தர் ஆக்குவதற்கான நல்ல வாய்ப்பை மிகவும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இரக்க மனமுடையவராகி இரக்கத்தின் உணர்வை நன்றாகக் காண்பிக்கிறார்கள். உத்திரபிரதேசத்திற்கு அரசாங்கத்தின் வரைபடத்திலும் மிகப்பெரிய மாநிலமாக இருக்கிறது. அதே போல் பாண்டவ அரசாங்கத்தின் வரைபடத்திலும் சேவையின் பகுதி அனைத்தையும் விட பெரியதாக நம்பர் ஒன் ஆக்கிக் காண்பியுங்கள். விசேஷமாக இந்த வருடத்தில் இன்னும் இருக்கும் வெளியில் தெரியாத வாரிசுகளை வெளிக் கொண்டு வாருங்கள். இதுவரை என்ன செய்திருக்கிறீர்களோ மிகவும் நன்றாக செய்திருக்கிறீர்கள், இப்பொழுது இன்னும் அதிகமாக நாலாபுறங்களிலும் உள்ள ஆத்மாக்கள் மீண்டும் அதே போல் செய்யுங்கள். சபாஷ் சபாஷ் என்ற கைத்தட்டல் செய்யுங்கள். அந்த மாதிரி விசேஷ காரியமும் உத்திரபிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் செய்வார்கள். இப்பொழுது இன்னும் அதிகமாக ஞான சேவை நிலையங்களை உருவாக்குங்கள். தீர்த்த ஸ்தலங்களில் ஞான நிலையங்களை உருவாக்கிக் கொண்டே செல்லுங்கள். நல்லது - மற்றபடி வேறு யாரெல்லாம் வந்திருக்கிறார்களோ எப்படி இருந்தாலும் முயற்சி செய்வதில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறீர்கள், முன்னேறிச் செல்வதற்காக பாராட்டுக்கள். அதிலேயும் அதிக உயரத் தாண்டுதல் செய்வதற்காக எப்பொழுதும் நினைவு சொரூபமாக ஆகுக.

பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் தனிப்பட்ட சந்திப்பு

1. சகஜயோகியின் சித்திரம் - விஷ்ணுவின் பாம்பு படுக்கை -

நீங்கள் அனைவரும் எப்பொழுதும் அஸ்திவாரத்திற்கு சமமாக உறுதியாக இருக்கும் எப்பொழுதும் ஆடாதவர்கள் தான் இல்லையா? அசைந்து கொடுப்போர் இல்லையே? அங்கதனனின் மகிமையாக இன்றுவரை பாடப்பட்டு வருகிறது. அது யாருடைய மகிமை? உங்களுடைய மகிமையையே மீண்டும் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். யார் சென்ற கல்பத்தில் வெற்றியை அடைந்தார்களோ, அந்த வெற்றி முழக்கத்தை இப்பொழுதும் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அந்தச் சித்திரம் இப்பொழுது உங்கள் எதிரில் இருக்கிறது, நீங்கள் ஒவ்வொரு கல்பத்திலும் வெற்றி அடைபவர்கள். அனேக தடவை வெற்றி அடைந்தவர்கள், எனவே சகஜயோகி என்று கூறப்படுகிறது. அனேக தடவை செய்தததை மீண்டும் செய்வதோ சுலபமாகி விடும் இல்லையா? புதிய விஷயத்தை செய்து கொண்டிருக்கவில்லை. ஏற்கனவே உருவாக்கப்பட்டதை மீண்டும் உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். எனவே தான் ஏற்கனவே உருவாக்கப்பட்டு நடந்து கொண்டிருப்பதை மீண்டும் உருவாக்குகிறீர்கள் என்று கூறப்படுகிறது. உருவாக்கப்பட்டிருக்கிறது, ஆனால் மீண்டும் அதே மாதிரி செய்து உருவாக்குகிறீர்கள். இதற்கு முன்பும் பல கோடி மடங்கு பாக்கியம் நிறைந்தவர்களாக ஆகியிருந்தீர்கள், இப்பொழுதும் ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். அந்த மாதிரி சகஜயோகி தான் நீங்கள். அவர்களுடைய அடையாளம் மற்றும் எப்படி இருந்தார்கள் என்ற சித்திரமாக எதைக் காண்பித்திருக்கிறார்கள். விஷ்ணுவின் ஷேஷ் ஷையா அதாவது பாம்பையும் படுக்கை ஆக்கிவிட்டார். அது அடிமையாகி விட்டது. இவர் அதிகாரி ஆகிவிட்டார். இல்லையென்றால் பாம்பை யாரும் தொடக்கூட மாட்டார்கள். பாம்பை படுக்கையாக்கினார் என்றால் வெற்றி அடைந்தவர் ஆகிவிட்டார். விகாரங்கள் என்ற பாம்பே அடிமையாகிவிட்டது, அதாவது படுக்கை ஆகிவிட்டது என்றால் கவலையற்றவர் ஆகிவிட்டார் இல்லையா? யார் வெற்றி அடைபவராக இருப்பாரோ அவர் எப்பொழுதும் கவலையற்ற விஷ்ணுவிற்குச் சமமாக எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்திருப்பார். எப்பொழுது ஞானத்தை சிந்தனை செய்து கொண்டிருப்பாரோ அப்பொழுது தான் மகிழ்ச்சியாகவும் இருப்பார். அப்படி இந்த சித்திரம் உங்களுடையது தான் இல்லையா?. யாரெல்லாம் தந்தையின் குழந்தையாகி மேலும் வெற்றி அடைந்து கொண்டிருக்கிறார்களோ அவர்கள் அனைவருடைய சித்திரம் இது. எப்பொழுதுமே நான் விகாரங்களை அடிமையாக்கியிருக்கும் அதிகாரி என்று எதிரில் பாருங்கள். ஆத்மா எப்பொழுதும் ஓய்வான நிலையில் இருக்கட்டும். உடல் தூங்கும் ஓய்வல்ல, அதுவோ

சேவையில் எலும்புகளையும் கொடுக்க வேண்டும். ஆனால் ஆத்மாவின் கவலையற்ற நிலை - இது தான் ஓய்வு. ஏனென்றால் இப்பொழுது அலைவதிலிருந்து காப்பற்றப்பட்டு விட்டீர்கள்.

மாதர்கள் அனைவரும் கோபிகைகள், கோபி வல்லபருடன் ஊஞ்சலில் ஆடக்கூடியவர்கள் தான் இல்லையா? அரைக் கல்பமாக ஜட விக்கிரகங்களை மிக அன்போடு ஆட்டினீர்கள். இப்பொழுது ஆட்டுவது முடிவடைந்தது, ஆடுவது தொடங்கியது. சில நேரம் சுகத்தின் ஊஞ்சலில், சில நேரம் அமைதியின் ஊஞ்சலில் . . . . அப்படி அனேக ஊஞ்சல்கள் இருக்கின்றன. எதில் விரும்புகிறீர்களோ அதில் ஆடுங்கள், கீழே வராதீர்கள். மாதர்களுக்கு ஊஞ்சல் பிடித்திருக்கிறதா?. அதனால் தான் குழந்தைகளையும் ஊஞ்சலில் வைத்து ஆட்டிக்கொண்டே இருக்கிறீர்கள். பக்தியில் மிக அதிகமாக ஊஞ்சலில் ஆட்டினீர்கள். இப்பொழுது பக்தியின் பலனையோ பெறுவீர்கள் தான் இல்லையா? பக்தி ஆட்டுவது மற்றும் பலன் ஆடுவது. எனவே இப்பொழுது என்ன பலன் (பழம்) கிடைத்துக் கொண்டிருக்கிறதோ அதை அருந்திக் கொண்டிருக்கிறீர்களா அல்லது பார்த்துப் பார்த்து குஷி அடைந்து கொண்டிருக்கிறீர்களா? மாதர்களிடம் இந்தப் பழக்கமும் இருக்கிறது - அருந்த மாட்டார்கள், வைத்து விடுவார்கள். இதுவோ எவ்வளவு அருந்துவீர்களோ அவ்வளவு அதிகரிக்கும். ஒரு விநாடி அருந்தினீர்கள் என்றால் ஒரு நேரத்தின் அனுபவம் சதா காலத்தின் அனுபவி ஆக்கிவிடும். எனவே நன்றாக அருந்துங்கள். மாதர்களைப் பார்த்து தந்தைக்கும் குஷி ஏற்படுகிறது. யாரை உலகத்தினர் நம்பிக்கை யற்றவர்களாக ஆக்கினார்களோ, அவர்களை தந்தை தலையின் கிரீடமாக்கி விட்டார். அவர்கள் பழைய செருப்பு என்று நினைத்தார்கள், மேலும் தந்தை தலையின் கிரீடமாக ஆக்கினார் என்றால் எவ்வளவு குஷி இருக்க வேண்டும். பாண்டவர்களுக்கும் எப்பொழுதும் உடன் இருபபவர்கள் என்றும் சகயோகி என்றும் மகிமை இருக்கிறது. என்றும் நினைவுச்சின்னத்தில் கோபி வல்லபருடன் பசு பாலனை செய்பவராக காண்பித்திருக்கிறார்கள். ஒவ்வொரு காரியத்திலும் சகயோகம் மேலும் எப்பொழுதும் உடன் இருப்பவர்களாக ஆகியிருக்கிறார்கள் இல்லையா? அனைவரும் நினைவு மற்றும் சேவை இரண்டிலும் மூழ்கியிருங்கள். சேவை மூலம் எதிர்கால பிராப்தி உருவாகும். மேலும் நினைவினால் தற்சமயம் குஷியாக இருப்பீர்கள், இல்லையென்ற பொருளே இல்லை, எப்பொழுதும் திருப்தியாக இருப்பவர்கள். நல்லது.

வரதானம் :

அனைத்து பொக்கிஷங்களின் சிக்கனத்தின் பட்ஜெட்டை தயாரிக்கக் கூடிய நுண்ணிய முயற்சி செய்பவராக ஆகுக !

எப்படி உலகியல் முறைப்படி கூட ஒருவேளை சிக்கனமாக இருப்பவர்களின் வீடாக இல்லை என்றால் அந்தக் குடும்பம் நல்ல முறையில் நடக்க முடியாது. அதே போல் ஒருவேளை பொறுப்பாளர் ஆகியிருக்கும் குழந்தை சிக்கனமானவராக இல்லை என்றால் சென்டர் சரியாக நடக்காது. அது எல்லைக்குட்பட்ட குடும்பம், இது எல்லைக்கப்பாற்பட்ட குடும்பம். எனவே எண்ணம், சொல், சக்திகளில் என்னென்ன அதிகப்படியாக செலவுசெய்தேன் என்று சோதனைசெய்ய வேண்டும். யார் அனைத்து பொக்கிஷங்களின் சிக்கனத்தின் பட்ஜெட்டை உருவாக்கி அதே அனுசாரம் நடந்து கொள்கிறார்களோ அவர்களைத் தான் நுண்ணிய முயற்சியாளர் என்று கூறுவது. அவர்களுடைய எண்ணம், சொல், செயல் மற்றும் ஞானத்தின் சக்திகள் வீணாக செல்ல முடியாது.

சுலோகன் -

அன்பின் பொக்கிஷத்தினால் நிரம்பியவராகி அனைவருக்கும் அன்பைக் கொடுங்கள் மற்றும் அன்பைப் பெறுங்கள்.

ஓம் சாந்தி

15.12.1979 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## அயல்நாட்டு குழந்தைகளுடன் அவ்யக்த பாப்தாதாவினுடைய சந்திப்பு

இன்று அனைத்து பத்மாபதம் பாக்கியசாலி குழந்தைகளைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சியடைந்துக் கொண்டேயிருக்கின்றார். ஒவ்வொருவரும் உலகம் என்ற ஷோகேஸில் இருக்கும் விலைமதிக்க முடியாத ரத்தினங்கள். ஒவ்வொரு ரத்தினமும் தன்னுடைய மதிப்பை அதனதன் சக்தியின் அனுசாரமாகத் தெரிந்துள்ளது. ஆனால் பாப்தாதா அனைத்து குழந்தைகளின் சம்பன்ன நிலையைப் பார்க்கின்றார். நிகழ்கால பரிஸ்தா சொரூபம், எதிர்கால தேவதை, மத்தியகால பூஜ்ய சொரூபம் - மூன்று ரூபத்தின் ஆதி, மத்ய, இறுதியைப் பார்த்து ஒவ்வொரு ரத்தினத்தின் மதிப்பையும் தெரிந்துக் கொள்கின்றார். ஒவ்வொரு ரத்தினமும் கோடியில் சிலர், அந்த சிலரிலும் சிலராக உள்ளார்கள். அப்படி தன்னைத்தான் புரிந்துள்ளீர்களா? ஒருபுறம் உலகத்தில் இருக்கும் கோடி ஆத்மாக்களை வையுங்கள், மற்றொரு புறம் தன்னை வையுங்கள் கோடியிலும் அதிகமாக உங்கள் ஒவ்வொருவருடைய நிகழ்காலம், மற்றும் எதிர்காலம் சிரேஷ்டமாக உள்ளதல்லவா? அவ்வளவு போதைசதா உள்ளதா? இன்று வரையில் உங்களுடைய பூஜ்ய சொரூபத்தை தேவி தேவதை ரூபத்தில் பக்தர்கள் பூஜித்து வருகின்றார்கள். உங்களுடைய ஜட சித்திரத்தில் தேவதைகள் அழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். வாருங்கள், வந்து எங்களுடைய அசாந்தியை போக்குங்கள் என்று அழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். பக்தர்களின் கூக்குரல், தன்னுடைய வரக்கூடிய பிரஜைகளின் அழைப்பு காதில் கேட்கின்றதா?

நிகழ்கால இராஜ்யத்தின் குழப்பத்தைப் பார்த்து விஷ்வ மகாராஜன் மகாராணிகளை அதாவது வைகுண்ட இராம இராஜ்யத்தை அனைவரும் நினைவு செய்கின்றார்கள். மீண்டும் அப்படிப்பட்ட இராஜ்யம் வேண்டுமென்று இராம இராஜ்யத்தில் அதாவது சத்யுக வைகுண்டத்தில் பாபாவுடன் சேர்ந்து நீங்கள் அனைவரும் இராஜ்ய அதிகாரிகள் தானே? மீண்டும் அந்த இராஜ்யத்தைக் கொண்டு வாருங்கள் என்று உங்களுடைய பிரஜைகள் உங்களை அதிகாரிகளை அழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். சிரேஷ்ட ஆத்மாக்களாகிய

உங்களுக்கு அந்த ஒலி வந்து சேரவில்லையா? அனைவரும் அழைத்துக் கொண்டிருக்கின்றார்கள், சிலர் பசியினால், சிலர் மன அசாந்தியினால் கூக்குரல் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். சிலர் வரிச் சுமையினால், சிலர் குடும்பப் பிரச்சனையினால் கூச்சலிடுகின்றார்கள். சிலர் தன்னுடைய பதவியின் குழப்பத்தினால் கூச்சலிடுகின்றார்கள், பெரிய பெரிய இராஜ்ய அதிகாரிகள் ஒருவர் மற்றொருவரின் பயத்தால் கூச்சலிடுகின்றார்கள். சிறிய குழந்தைகள் படிப்பின் சுமையினால் கூச்சலிடுகின்றார்கள். சிறியவர், பெரியவர்கள் அனைவரும் கூச்சலிடுகின்றார்கள். நாலாபுறத்திலிருந்தும் கூக்குரல் உங்கள் அனைவரின் காதுகளுக்கும் வரவில்லையா? அப்படிபட்ட நேரத்தில் நீங்கள் அனைவரும் பாபாவுடன் சேர்ந்து அமைதியின் ஸ்தம்பமாக இருக்க வேண்டும்.

அனைவருடைய கவனமும் அமைதி ஸ்தம்பத்தின் பக்கம் வர வேண்டும். ஐயோ என்ற துக்கக் கூக்குரலுக்குப் பின் ஆஹா! என்ற சப்தம் எப்போது வரும் என்று அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். இப்பொழுது சாந்தியின் ஸ்தம்பமாகிய நீங்கள் கூறுங்கள்: எப்பொழுது அந்த முழக்கம் வரப் போகின்றது. ஏனென்றால் பாபா சகாரத்தில் குழந்தைகளாகிய உங்களைத்தான் நிமித்தமாக வைத்துள்ளார். நீங்கள் சாகார பரிஸ்தாக்கள் அல்லவா? எப்பொழுது தன்னுடைய பரிஸ்தா ரூபத்தின் மூலமாக உலகின் துக்கத்தைப் போக்கி சுகதாமத்தைக் கொண்டு வரப் போகின்றீர்கள்? தயாராக இருக்கின்றீர்களா?

அயல்நாட்டவர் கடைசியில் வந்தாலும் வேகமாக செல்லக்கூடியவர்கள் தானே? எப்பொழுது வேகமாக அனைவருக்கும் சத்கதி அளிக்கப் போகின்றீர்கள்? எவரெடியாக உள்ளீர்களா? பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் தூண்டுதல் தருகின்றார். சக்திகளுக்கு பூஜை அதிகமாக நடைபெறுகின்றது. இரண்டு பக்கமும் நீண்ட வரிசை நிற்கின்றது. பாண்டவர்களின் நினைவுச் சின்னம் ஹனுமானிடம், மேலும் சக்திகளின் பக்கம் வைஷ்ணவி தேவியிடம், இரண்டு பக்கமும் பெரிய வரிசை நிற்கின்றது. நாளுக்கு நாள் வரிசை அதிகமாகிக் கொண்டேயிருக்கின்றது. அனைத்து பக்தர்களின் பக்தியின் பலன் முக்தி, ஜீவன் முக்தி கொடுப்பவர் நீங்கள்தானே? எனவே சதா தன்னை முக்தி, ஜீவன்முக்தியை கொடுக்கும் வள்ளல் என புரிந்துக் கொண்டு முக்தி, ஜீவன் முக்திக்கான பிரசாதத்தை அனைத்து பக்தர்களுக்கும் வழங்கவும். டோலி வழங்கும் பழக்கம் இருக்கின்றதல்லவா? இப்பொழுது பிரசாதத்தை வழங்கவும்.

இன்று குறிப்பாக அயல்நாட்டு குழந்தைகளை சந்திப்பதற்காக வந்திருக்கின்றார். உலகத்தில் என்ன பார்த்தார்? இன்று அமிர்தவேளையின் காட்சியை கூறுகின்றார். ஒன்று கூச்சல் போடுவது, இரண்டாவது நடத்துவது. ஒரு பக்கம் கூச்சல் போட்டுக் கொண்டிருக்கிறார்கள், மற்றொரு பக்கம் அனைத்துக் காரியங்களையும் வலுக்கட்டாயமாக செய்து கொண்டிருக்கின்றார்கள். நடந்துதான் ஆக வேண்டும் என்று அனைத்து விஷயங்களிலும் நினைக்கின்றார்கள். யாருக்காவது நடக்க முடியவில்லையென்றால், ஏதாவது சாதனங்கள் மூலமாக அல்லது செயற்கை சக்கரங்கள் மூலமாக நடக்கின்றார்கள். ஒவ்வொரு காரியத்திலும் ஏதாவது சாதனங்கள் அல்லது சக்கரம் இல்லையென்றால் காரியம் நடக்காது என்பது தான் இன்றைய மொழியாகஉள்ளது. சக்கரம் பயன்படுத்தும் சீசன் ஃபேஷனாக உள்ளது. எப்படி காரியம் நடக்க வேண்டுமோ அப்படி நடக்க முடியவில்லை கட்டாயமாக செய்து கொண்டிருக்கின்றார்கள், அதாவது சக்கரத்தின் மூலமாக நடத்துகின்றார்கள். உலகத்தில் கூச்சல் ஒரு பக்கம் மற்றொரு பக்கம் வலுக்கட்டாயமாக நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். எனவே இன்றைய அரசாங்கம் கூட கடமைக்காக கட்டாயமாக செய்து கொண்டிருக்கின்றது. எனவே கூச்சலிடுவது, வலுக்கட்டாயமாக நடத்துவது தான் இன்றைய உலகின் நிலைமையாக உள்ளது. சிலர் கூச்சலிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். சிலர் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள் இதுதான் இன்றைய உலகின் நிலை. கேட்டீர்களா? இன்றைய உலகின் செய்தியை.

அயல்நாட்டவரிடமும் விசேஷம் உள்ளது. எனவே தான் பாப்தாதா வெகு தூரத்திலிருந்து தன்னுடைய குழந்தைகளைத் தேடிக் கண்டுப்பிடித்துள்ளார். நான் எப்படிப்பட்ட பாபாவிற்குச் செல்லக் குழந்தையாவேன் என்று நீங்கள் கனவு கூட கண்டிருக்கமாட்டீர்கள். ஆனால் பாபா ஒவ்வொரு மூலையிலிருந்தும் தேடிச் சேர்த்து தன்னுடைய மாலையில் பிணைத்து, குடும்பத்தின் மாலையாக ஆக்கியிருக்கின்றார். எனவே நீங்கள் விதவிதமான தேசத்திலிருந்து வந்திருக்கக்கூடிய ஒரே பிராமண குடும்பத்தின் விதவிதமான மலர்கள் ஆவீர்கள்.

### அயல்நாட்டவரின் சிறப்பியல்புகள்:

அயல்நாட்டுக் குழந்தைகளுக்கு நாடகத்தின்படி விசேஷமான ஃப்ட் கிடைத்துள்ளது. இந்த லிஃப்டின் (மின்விசைப்படி) கடைசியில் வந்தாலும் வேகமாக முன்னேறிச்

செல்கின்றார்கள். அந்த லி∴ப்ட் என்ற பரிசு ((கிப்ட்) எது தெரியுமா? அயல்நாட்டவர்கள் சுகத்தின் சாதனங்களை அனுபவித்து களைப்படைந்துவிட்டார்கள். இப்பொழுதுதான் பாரதவாசிகள் ஆரம்பித்துள்ளார்கள், எனவே வெளிநாட்டவர்களுக்கு விசேஷமான லி∴ப்ட் கிடைத்துள்ளது. இதுவே அவர்களின் விசேஷமாகும். விதேசிகளின் அந்த அல்பகால சாதனங்களினால் எப்படி வயிறு நிறையுமோ அப்படி அவர்களுக்கு நிறைந்துவிட்டது. அவர்கள் முன்னால் எவ்வளவு அல்பகால சாதனங்களை வைத்தாலும் ஆசை ஏற்படாது, பொருட்கள், வைபவங்கள், அல்பகால சுகத்தினால் அவர்கள் மனம் நிறைந்துவிட்டது, ஒரு பக்கம் சகஜமாக ஒதுக்கிவிட்டார்கள். எதனுடைய தேவையிருந்ததோ? அது கிடைத்துவிட்டது, எனவே சகஜமாக ஒரு பாபாவைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற ஸ்திதியை அனுபவம் செய்கின்றார்கள். தியாகம் செய்கின்றார்கள், ஆனால் மனநிறைவிற்குப் பிறகு தியாகம் செய்துள்ளார்கள். புத்தியின் மூலமாக முதலிலேயே ஒதுக்கிவிட்டார்கள். இதுதான் அயல்நாட்டவர்களின் விசேஷமாகும். மற்ற உதவியைத் தேடுவதை ஆரம்பித்துவிட்டார்கள். எனவே தான் பாரதவாசிகள் தியாகம் செய்வதில் மனம் சஞ்சலமடைகின்றது. அயல்நாட்டவர்கள் ஒரே மூச்சில் விட்டார்கள் விட்டுவிட்டது. எதையும் பொருட்படுத்துவதில்லை. எதனை சிந்திக்கின்றார்களோ? அதனையே செய்ய வேண்டும் என்பது வெளிநாட்டவர்களின் சுபாவ, சமஸ்காரமாக உள்ளது. அவர்கள் என்ன சொல்வார்களோ, இவர்கள் என்ன சொல்வார்களோ? என்று சிந்திப்பவர்கள் அல்ல. உலகாய மரியாதைகளிலிருந்து முதலிலேயே விடுபட்டு இருக்கின்றார்கள். எனவே பாரதவாசிகளைக் காட்டிலும் முயற்சியில் சகஜமாக தீவிரமாகச் செல்கின்றார்கள். இவர்களுக்கு உலகீய மரியாதைகள் நிறைய இருக்கின்றது. இரட்டை அயல்நாட்டவர்கள் முதலிலேயே உலகீய மரியாதைகளிலிருந்து விடுப்பட்டவர்களாக உள்ளார்கள். பாதி தொடர்புகளிலிருந்து முதலிலேயே விடுப்பட்டவர்களாக உள்ளார்கள். எனவே கடைசியில் வந்தாலும் முதலில் சென்றுவிடுகின்றார்கள். புரிந்ததா? வெளிநாட்டுக்காரர்களிடம் என்ன விசேஷம் இருக்கின்றது? அஞ்ஞானத்தின் விஷயம்தான், ஆனால் நாடகத்தில் இந்த விசேஷம் சமஸ்கார மாற்றத்திற்கு சகஜ சாதனமாகிவிட்டது. எனவே வெளிநாட்டவர்களுக்கு சகஜமாகிவிட்டது. விதேசிகள் நஷ்டோமோஹா ஆவதில் புத்திசாலிகளாக உள்ளார்கள். இந்தியர்கள் கூட அயல்நாட்டிலிருந்து அவர்களின் அயல்நாட்டு பிரபாவத்தில் வந்துவிடுகின்றார்கள். வெளிநாட்டவர்கள் தாண்டிச் செல்வதில் புத்திசாலிகள் ஆகிவிட்டார்கள். வெளிநாட்டவர்களின் விசேஷம் புரிந்ததா?

ஆஸ்திரேலியா பார்ட்டியுடன்:

ஆஸ்திரேலியாவில் உள்ளவர்கள் மிகவும் சேவையை விருத்திச் செய்துள்ளார்கள். பிரிந்து சென்ற ஆத்மாக்களை பாபாவிடம் சந்திக்க வைக்கக்கூடிய ஆன்மீக சேவாதாரிகள். ஒவ்வொருவரும் பாபாவிற்குச் சமீபத்தில் வரக்கூடிய, கொண்டுவரக்கூடிய ரத்தினங்கள். பாப்தாதா கூட அப்படிப்பட்ட ரத்தினங்களைப் பார்த்து சந்தோஷப்படுகின்றார். புதுப்புது குழந்தைகள் கூட பழமையானவர்களாகத் தெரிகின்றார்கள். ஏனென்றால், கல்ப கல்ப அதிகாரிகளாக உள்ளார்கள். யாருடைய தனிப்பட்ட உதவியும் இல்லாமல் தன்னுடைய காலில் நின்று பாபாவுடைய சம்பந்தம், தொடர்பின் ஆதாரத்தில் சேவை செய்துள்ளார்கள். இதுவே ஆஸ்திரேலியாவின் விசேஷமாகும். அனைவரும் தன்னை பாபாவிற்குச் சமீபத்தில் அனுபவம் செய்கின்றீர்களா? (சக்திகள்) சக்திகள் கொடி உயரே பறக்கின்றது. பாண்டவர்கள் முயற்சி செய்கின்றார்கள். ஆனால் சக்திகளுக்கு கொடி காட்டியுள்ளார்கள். இது நல்ல விஷயம் சக்திகள் வழிக்காட்டியாகவும் பாண்டவர்கள் பாதுகாப்பாளர்களாகவும் இருக்கின்றார்கள். பாதுகாவலர்கள் பின்னால் இருந்துக் கொண்டு வழிக் காட்டியை முன்னால் வைப்பார்கள். சக்திகள் வழிகாட்டியாகி அனைவருக்கும் வழிக்காட்டிக் கொண்டிருக்கின்றார்கள். சக்திகளா? அல்லது குமாரிகளா? சதா மாயாஜீத்தாக இருப்பதுதான் சக்திகளின் விசேஷம். சக்தி என்றால், யுத்தம் செய்பவர்களை தன் சவாரி வாகனம் ஆக்குபவர்கள். அப்படி இருக்கின்றீர்கள் அல்லவா?

பாப்தாதா 10, 12 ஆண்டுகளுக்கு முன்னாலேயே அயல்நாட்டுக் குழந்தைகளை அழைத்திருக்கின்றார். இவ்வளவு இனிமையான ஆத்மாக்கள். அனைவரும் பாப்தாதா மூலமாக பிராப்தியாக அடைந்த சுகம்; சாந்தி, ஆனந்தம் என்ற ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருக்கின்றீர்கள் அல்லவா? யார் இப்பொழுது சதா ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருக்கின்றார்களோ, அவர்களே எதிர்காலத்தில் பாபாவுடன் ஊஞ்சலில் ஆட முடியும். இல்லையென்றால், தூரத்தில் அமர்ந்து பார்க்கக்கூடியவராகி விடுவோம். இங்கு உடன் இருப்பவர்தான் அங்கு சதா ஊஞ்சலில் ஆட முடியும். ஒவ்வொருவரும் சொர்க்கத்திற்குச் செல்வதற்கான டிக்கெட் புக் செய்துவிட்டீர்களல்லவா? எந்த வகுப்பில் டிக்கெட் புக் செய்துள்ளீர்கள். ஏர் கண்டிஷன் டிக்கெட் யாருக்கு கிடைக்கும்? யார் இங்கு ஒவ்வொரு கண்டிஷனிலும் பாதுகாப்பாக இருக்கின்றார்களோ அவர்களுக்குக் கிடைக்கும். எந்தவொரு பிரச்சனை வந்தாலும், சூழ்நிலை வந்தாலும் ஒரு வினாடியில் கடந்துச் செல்ல வேண்டும். ஏர்கண்டிஷன் டிக்கெட் புக் செய்வதற்கு முதலில் சான்றிதழ் வேண்டும். எப்படி அந்த டிக்கெட்டிற்கு பணம் தருகின்றார்கள். அதுபோல இங்கு சதா வெற்றி என்ற பணம் வேண்டும். இதன் மூலம் தான் டிக்கெட் கிடைக்க முடியும். மிகவும்

முயற்சி செய்து பணம் சேமித்து இங்கு வந்திருக்கின்றீர்களல்லவா? இந்த செல்வத்தை சேமிப்பது அதனையும் விட மிக எளிமையானது. யார் சதா பாபாவுடன் இருக்கின்றார்களோ? அவர்களுக்கு ஒவ்வொரு வினாடியும் வருமானம் சேமிப்பாகிக் கொண்டேயிருக்கும். எனவே இவ்வளவு நேரத்தில் எவ்வளவு வருமானத்தை சேமித்துள்ளீர்கள். அல்லது புதுமையான திட்டம் என்ன செய்துள்ளீர்கள்? சக்திகள் மற்றும் பாண்டவர்களுக்கான குழு நன்றாக உள்ளது. உங்களுக்குள் அன்பானவராகவும், சகயோகியாகவும், நிர்விக்னமாகவும் (தடைகள் இல்லாமல்) நடந்துக் கொள்கின்றீர்களா? எந்த பிரச்சனையும் இல்லைதானே? மேலும் நிறைய தடையற்ற சேவா நிலையத்தை உருவாக்கவும். அப்பொழுது பரிசை அடைய முடியும். அதிகம் சேவா நிலையங்களும் இருக்க வேண்டும், தடைகளற்றதாகவும் இருக்க வேண்டும். (பாப்தாதா எங்களிடம் ஆஸ்திரேலியாவில் வருவீர்களா?) பாப்தாதா தினமும் சக்கரம் சுற்றி வருகின்றார். நீங்களே சிந்தியுங்கள்! எப்பொழுது குழந்தைகள் பாபாவை நினைக்கின்றார்களோ அப்பொழுது பாபா அதற்குப் பதில் தரமாட்டாரா என்ன? பாப்தாதா தினமும் அமிர்தவேளையில் ஒவ்வொரு குழந்தையையும் பாலனை செய்வதற்காக, பார்ப்பதற்காக உலகை வலம் வருகின்றார். நீங்கள் உரையாடல் செய்வதில்லையா? வருவதனால்தானே உரையாடல் செய்கின்றீர்கள். தினமும் ஆன்மீக உரையாடல் செய்கின்றீர்களா? அல்லது எப்பொழுதாவது செய்கின்றீர்களா? ஒன்று நினைவில் அமருவது, இரண்டாவது சந்திப்து. அமர்கின்றீர்கள் ஆனால் சக்திசாலி நிலையில் அமர்ந்தீர்களென்றால் அருகாமையின் அனுபவம் செய்ய முடியும். இப்பொழுது எதுவரை இருக்கின்றீர்களோ அதுவரையில் சந்தித்துக் கொண்டிருப்பீர்கள். பாபா என்று சொன்னாலும் உடன் இருக்கக்கூடிய அனுபவம் கிடைக்கின்றது. எந்தவொரு விஷயம் வந்தாலும் பாபா என்று சொன்னவுடன் உடன் இருக்கும் அனுபவத்தை செய்துவிடுகின்றீர்கள். பாபா என்ற சப்தம் மந்திரத்தைப் போன்ற சப்தம். எப்படி மந்திர மோதிரம், அல்லது பொருளை தன்னுடன் வைத்துக் கொள்கின்றார்கள், அப்படி பாபா என்ற சப்தத்தை தன்னுடன் வைத்துக் கொள்ளவும். ஒருபோதும் எந்த காரியத்திலும் கஷ்டம் ஏற்படாது. ஏதாவது பிரச்சனை வந்தால் பாபா என்ற சப்தத்தை நினைவு செய்து செய்வித்தால் தடையகளற்றவராக ஆகிவிடுவீர்கள். பாபா, பாபா என்ற மகாமந்திரத்தை சதா நினைவில் வைத்தீர்கள் என்றால் சதா குடை நிழலுக்குக் கீழே இருக்கும் அனுபவம் செய்வீர்கள்.

மொரீலியஸ்:

சதா பாபா மூலம் கிடைத்துள்ள கஜானாக்களினால் விளையாடிக் கொண்டிருக்கின்றீர்கள்

தானே? யார் செல்லமான அன்பான குழந்தைகளோ அவர்கள் சதா ரத்தினங்களுடன் விளையாடிக் கொண்டேயிருப்பார்கள். உங்களுக்கு பாப்தாதாவிடமிருந்து குறைவற்ற ஞான கஜானா கிடைத்துள்ளது, அந்த கஜானாவை வைத்து சதா விளையாடிக் கொண்டிருக்கின்றீர்கள் தானே? இந்த ரத்தினங்களுடன் விளையாடுவது, பிறரை செல்வந்தன் ஆக்குவது இதில் பிஸியாக உள்ளீர்களல்லவா? இதுதான் உங்கள் காரியமல்லவா? மற்றபடி இல்லறம் என்பது நிமித்த அளவிற்குத்தான். பிராமண வாழ்வு என்றாலே கேட்பது சொல்வது தான். இதுதான் உண்மையான காரியம். (பந்தனத்திலுள்ளவர்கள்) பந்தனத்திலுள்ளவர்கள் இல்லறத்தில் இருந்தாலும் விடுபட்டு இருக்கின்றார்கள். எந்த நேரம் நிர்பந்தனமாகி பாபாவை சந்திப்பேன் என்ற ஆர்வம் உள்ளதோ. உடல் தான் அங்கு உள்ளது, ஆனால் மனம் சதா பாபாவிடம் இருக்கின்றது. அடிமை என்பது சரீர அளவில்தான், மனதிற்குக் கிடையாது. உடலை எவ்வளவு பூட்டுப் போட்டு அடைத்து வைத்தாலும், மனதை அடைத்து வைக்க முடியாது. மாயாஜீத் என்றால் மனதால் சுதந்திரமாக உள்ளவர்கள். பந்தனத்தில் இருப்பவர்கள் தன்னுடைய விருத்தியின் மூலமாக சுத்தமான எண்ணங்கள் மூலமாக உலகத்தின் வாயு மண்டலத்தை மாற்றியடைக்க முடியும். பந்தனத்திலிருப்பவர்களுக்கு இந்த சேவை மிகப்பெரிய வாய்ப்பு. தற்சமயம் மன சேவைதான் மிக அவசியமானதாகும். ஏனென்றால், அனைவருக்கும் மன அமைதிதான் முக்கிய தேவையாக உள்ளது. எனவே மனதின் மூலமாக உலகத்தில் மன அமைதியை பரப்ப முடியும். சாந்திக்கடல் பாபாவுடைய நினைவில், இந்த நினைவில் இருப்பது தான் மன சேவையாகும். தானாகவே சாந்தியின் கிரணங்கள் பரவிக் கொண்டேயிருக்கும். சாந்தியின் கிரணங்களை கொடுக்கக் கூடிய மகாதானிகளாக இருக்கின்றீர்களல்லவா?

எங்கு பாபா இருக்கின்றாரோ அங்கு யாரும் எதுவும் செய்ய முடியாது. ஒருவேளை யாராவது வேகத்தை வெளிப்படுத்தினாலும் சிறிது சிறிதாக குளிர்ந்துவிடுவார்கள். எப்படி தீபாவளி அன்று கொசுக்கள் வெளிப்படுகின்றது, ஒரே நாளில் சமாப்தியாகிவிடுகின்றது. நீங்கள் கடலினுடைய குழந்தைகள் கடலாக இருக்கின்றீர்கள், முழு உலகத்தையும் உண்மையான ஆரியர் ஆக்கக்கூடியவர்கள். எனவே பிறரால் உங்களை என்ன செய்ய முடியும்? குளம் கடலில் சேர்ந்து சமாப்தியாகிவிடும். எந்தளவு நீங்கள் பாபாவை நினைவு செய்கின்றீர்களோ? அதனைக் காட்டிலும் கோடி மடங்கு பாபா உங்களை நினைவு செய்கின்றார். எனவே தான் தினமும் நினைவிற்கான பதில் கொடுப்பதற்காக சக்கரம் சுற்றி வருகின்றார். குழந்தைகள் உறங்கிக் கொண்டிருந்தாலும் பாபா பார்த்து பார்த்து தன்னுடைய காரியத்தை சதா செய்கின்றார். சிலர் அதனை உணர்கின்றனர், சிலர் உணருவதில்லை. அது குழந்தைகளின் முயற்சியாகும். அந்த நேரமே உணர்ந்தீர்கள்

என்றால் நிறைய அனுபவங்களையடைய முடியும். முழு நாளைக்கும் ஒரு சத்தான உணவு கிடைத்துவிடும். நல்லது.

வரதானம்:

சம்பூர்ண சமர்ப்பணம் என்ற விதியின் மூலமாக தன்னுடையது என்ற அதிகாரத்தை சமாப்தி செய்யக்கூடிய சமமான துணைவன் ஆகுங்கள்!

கூடவே இருப்பேன், உடன் செல்வேன், மேலும் கூடவே இராஜ்யம் செய்வேன் என்ற உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டுமென்றால், இப்பொழுது சமமான நிலையை அடைய வேண்டும். சமர்ப்பணத் தன்மை மூலமாகத்தான் சமான் நிலையடைய முடியும். எப்பொழுது அனைத்தையும் சமர்ப்பணம் செய்துவிடுகின்றீர்களோ அப்பொழுது தன்னுடைய, பிறருடைய அதிகாரம் அனைத்தும் சமாப்தியாகிவிடுகின்றது. எதுவரையில் எதன் மீதாவது அதிகாரம் இருக்கின்றதோ அதுவரையில் முழுமையான சமர்ப்பணத்தில் குறையுள்ளது என்றே அர்த்தம். எனவே சமான் ஆக முடியாது. எனவே உடன் இருப்பதற்காக, உடன் பறப்பதற்காக வேக வேகமாக சமமானவர் ஆகவும்.

சுலோகன்:

தன்னுடைய நேரம், சுவாசம், எண்ணத்தை வெற்றிகரமாக்குவதுதான் வெற்றயடைவதற்கு ஆதாரமாகும்.

டபுள் லைட் ஸ்திதியின் அனுபவம்:

இரட்டை பொறுப்பாளராக இருந்தும் கூட டபுள் லைட்டாக இருப்பதற்காக தன்னை டிரஸ்டி என்று புரிந்துக் கொண்டு நடக்க வேண்டும். எப்பொழுது தன்னுடைய குடும்பம், என்னுடைய வீடு என்று நினைக்கின்றீரோ அப்பொழுதுதான் சுமை அனுபவம் ஆகும். தன்னுடையதே இல்லையென்றால், எதில் சுமை வரப் போகின்றது. அனைத்து சுமையையும் பாபாவிடம் கொடுத்துவிட்டு பரிஸ்தா உடை அணிந்து தன்னுடைய வதனத்திற்கு வந்துவிடுங்கள்.

ஓம் சாந்தி

" புனித அன்னப்பறவை மற்றும் அமிர்தவேளை என்ற மானசரோவர் "

இன்று நாலாபுறங்களிலுமுள்ள ஆன்மீக அன்னப்பறவைகள் மற்றும் புனித அன்னப்பறவைகளின் கூட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அனைத்து புனித அன்னப்பறவைகளும் எப்பொழுதும் ஞான ரத்தினங்களை பொறுக்குகிறார்கள் மற்றும் மற்றவர்களையும் பொறுக்க வைக்கிறார்கள். அன்னப்பறவைகளின் உணவாக விலைமதிப்பில்லா முத்துக்கள் இருக்கும். அது போலவேபுனித அன்னப்பறவைகளாகிய உங்கள் அனைவரின் புத்திக்கான உணவு ஞான ரத்தினங்கள் ஆகும். அமிர்தவேளையில் இருந்து பாப்தாதாவுடன் ஆன்மீக உரையாடல் மூலமாக, ஆன்மீக சந்திப்பு மூலமாக ஞான ரத்தினங்களை கிரஹிக்கிறீர்கள். சக்திகளை உங்களுக்குள் நிரப்புகிறீர்கள். அதே போலவே நாள் முழுவதும் சிந்தனை சக்தி மூலமாக கிரஹித்திருக்கும் ரத்தினங்களை மற்றும் சக்திகளை தன் வாழ்க்கையில் நடைமுறையில் கொண்டு வந்து மற்றவர்களையும் கொண்டு வர வைக்கிறீர்கள்.

அமிர்தவேளையில் சந்திப்பு செய்வதற்கான சக்தி, கிரஹிப்பதற்கான அதாவது கடைபிடிப்பதற்கான சக்தி, தந்தை மூலமாக தினசரி விசேஷமாக சுத்த எண்ணம் என்ற பிரேரணையை புரிந்து கொள்வதற்கான சக்தி மிக மிக அவசியம் ஆகும். அமிர்தவேளை நேரத்தில் ஒவ்வொருவரும் நடைமுறையில் கொண்டு வருவதற்கான சக்தி மூலமாக நடைமுறையில் கொண்டு வந்து நடப்பவர்களாக ஆகிவிடுகிறார்கள். அமிர்தவேளையில் விசேஷமாக இரண்டு விதமான ரூபம் தேவைப்படுகிறது - ஒன்று நடைமுறையில் கொண்டு வருவது, இன்னொன்று அனுபவி ஆவது. ஏனென்றால் அமிர்தவேளையில் விசேஷமாக பாப்தாதா குழந்தைய்களுக்காக வள்ளல் சொரூபத்தில் மேலும் சந்திப்பைச் செய்வதற்காக அனைத்து உறவுகளின் அன்பு நிரம்பிய சொரூபத்தில், அனைத்து பொக்கிஷங்களினால் பையை நிரப்பக்கூடிய கள்ளம் கபடமற்ற, வழங்கும் வள்ளல் ரூபத்தில் இருக்கிறார். அந்த நேரம் என்ன செய்ய விரும்பினாலும், தந்தையை ஏற்றுக் கொள்பவராக, மாற்ற விரும்பினாலும், எந்த உறவை வைத்து நடந்து கொள்ள

விரும்பினாலும், சுலபமான விதியின் அனுபவம் செய்ய விரும்பினாலும், அனைத்து விதிகளையும் மற்றும் சித்திகளையும் அதாவது வெற்றிகளையும் சுலபமாக அடைய முடியும். பிராப்தியின் களஞ்சியம் மற்றும் கொடுக்கக்கூடிய வள்ளல் சுலபமாகவே கிடைக்க முடியும். அனைத்து குணங்களின் சுரங்கங்கள், அனைத்து சக்திகளின் சுரங்கங்கள், குழந்தைகளுக்காக திறந்தே இருக்கின்றன. அமிர்தவேளையின் ஒரு விநாடியின் அனுபவம் முழு நாளிலும் மற்றும் இரவிலும் அனைத்து பிராப்தி சொரூபத்தின் அனுபவத்திற்கான ஆதாரம் ஆகும். பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தையிடமும் மனம் திருப்தியடையும் அளவிற்கு பேசுவதற்காகவும், முறையீடுகளைக் கேட்பதற்காகவும், பலஹீனங்களை அகற்றுவதற்காகவும், அனேக விதமான பாவங்களை அழிப்பதற்காகவும், செல்லமான அன்பு கொடுப்பதற்காகவும் அப்படி அனைத்து விஷயங்களுக்காக வேறு எந்த காரியங்களுமின்றி உங்களுக்காகவே இருக்கிறார். அந்த நேரம் அ∴பிசியல் (அதிகாரப்பூர்வமான) நேரம் இல்லை. கபடமில்லாத வழங்குபவரின் ரூபத்தில் இருக்கிறார். இந்த அளவு பொன்னான வாய்ப்பு இருந்த போதிலும் சில குழந்தைகள் வாய்ப்பை எடுத்துக் கொள்கிறார்கள், மேலும் சிலர் வாய்ப்பை எடுத்துக் கொள்பவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏன்? விருப்பமும் இருக்கிறது. இருந்தும் இடையில் தடையாக என்ன இருக்கிறது - அதைத் தெரிந்திருக்கிறீர்களா?

மாயாவும் மிகவும் சாதுர்யமானது. விசேஷமாக அந்த நேரத்தில் தந்தையிடமிருந்து பிரிப்பதற்காக வந்து விடுகிறது. விசேஷமாக சாக்கு போக்கு சொல்லும் விளையாட்டில் குழந்தைகளை வசப்படுத்தி விடுகிறது. எப்படி கண்கட்டு வித்தைக்காரர் தன்னுடைய கண்கட்டு வித்தையில் மனிதர்களைக் கவர்ந்திழுத்து விடுவார். அதே போல் மாயாவும் அனேக விதமான அலட்சியம், சோம்பல் மற்றும் வீணான எண்ணங்களின் சாக்கு போக்குகளில் வசப்படுத்தி விடுகிறது, எனவே பொன்னான வாய்ப்பை இழந்து விடுகிறார்கள். மேலும் அந்த மாதிரி நேரத்தை இழக்கும் காரணத்தினால் சுலபமான பிராப்தியிலிருந்து வஞ்சிக்கப்பட்டு இருந்து விடும் காரணத்தினால் முழு நாளுக்கான பலஹீனமான அஸ்திவாரம் ஆகிவிடுகிறது. முழு நாளில் எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் ஆனால் முழு நாளின் தொடக்க நேரம் அதாவது அஸ்திவாரத்தின் நேரம் பலஹீனமாக இருக்கும் காரணத்தினால் கடின உழைப்பு அதிகம் செய்ய வேண்டியதாக இருக்கிறது, பிராப்தி குறைவாக இருக்கும். பிராப்தி குறைந்திருக்கும் காரணத்தினால் இரண்டு விதமான நிலையின் அனுபவம் செய்கிறார்கள். ஒன்றோ நடைமுறையில் காரியங்கள் செய்து கொண்டே களைப்பை அனுபவம் செய்கிறார்கள், மனமுடைந்து போய்

விடுகிறார்கள். மேலும் பிறகு என்ன யோசிக்கிறார்கள்? லட்சியத்தை சென்றடைவேனா, தெரியவில்லை? நேரம் அருகில் இருக்கிறதா அல்லது தூரமாக இருக்கிறதா? எப்பொழுது பிரத்யக்ஷம் ஏற்படும்? மேலும் சத்யுகத்திற்கு செல்வோம்? இந்தக் குடும்பத்தின் பந்தனம் எவ்வளவு காலம் வரை இருக்கும்? அப்படி தற்சமயத்தின் பிராப்தியை விட்டு விட்டு வரும் எதிர்காலத்தைப் பார்க்கிறார்கள்.

தற்சமயத்தின் பிராப்தியின் பட்டியலை எப்பொழுதும் எதிரில் வையுங்கள். அப்பொழுது 'எப்பொழுது ஆகும்' என்பது முடிவடைந்து, இப்பொழுது ஆகிக் கொண்டிருக்கிறது என்பதில் வந்து விடும். மனமுடைந்து போவதற்குப் பதிலாக மனமகிழ்ச்சி ஏற்பட்டு விடும். தற்சமயத்திலிருந்து ஒதுங்காதீர்கள், மாயாவின் சாக்கு போக்கு விளையாட்டைத் தெரிந்து கொள்ளுங்கள். மாயா சாக்குப்போக்கு சொல்ல வைப்பதில் உங்களை சம்மதிக்க வைத்து விடுகிறது. எனவே தந்தையை உங்களால் வசப்படுத்த முடியவில்லை. அதாவது சுலபமான வழியைக் கடைபிடிக்க முடியவில்லை. வரதானத்தின் ரூபத்தில் என்ன பிராப்தி செய்ய வேண்டுமோ அதற்கு பதிலாக கடின உழைப்பு செய்து பிராப்தி செய்வதில் ஈடுபட்டு விடுகிறீர்கள். எனவே அமிர்தவேளையின் சகஜ பிராப்தியின் நேரத்தைத் தெரிந்து அதன் லாபத்தை எடுங்கள். திறந்த களஞ்சியத்திலிருந்து பிராப்தியின் பையை நிரப்பி விடுங்கள், வரமளிக்கும் வள்ளல் மற்றும் பாக்கியத்தை உருவாக்குபவரிடமிருந்து அமிர்தவேளை நேரத்தில் எதிர்கால அதிர்ஷ்டத்தின் ரேகையை எவ்வளவு போட விரும்புகிறீர்களோ அதைப் போடுவதற்காக பாபா தயாராக இருக்கிறார். அதிர்ஷ்டத்தின் ரேகையை வரமளிக்கும் வள்ளலிடமிருந்து சுலபமாகவும் மற்றும் உயர்ந்த தாகவும் போட்டுக் கொள்ளுங்கள். அந்த நேரம் கள்ளம் கபடமற்ற பகவான் ரூபத்தில் இருக்கிறார். அன்பு நிறைந்தவராக இருக்கிறார் என்றால், அன்பின் ஆதாரத்தில் உயர்ந்த ரேகையை போட்டு விடுங்கள். என்ன விரும்புகிறீர்களோ, எத்தனை ஜென்மங்களுக்காக விரும்புகிறீர்களோ, அஷ்ட ரத்தினத்தில் வர விரும்பினாலும், 108 மணி மாலையில் வர விரும்பினாலும், பாப்தாதாவின் திறந்த வாய்ப்பு இருக்கிறது. இதை விட வேறு என்ன வேண்டும்?.

எஜமானன் ஆகுங்கள், அதிகாரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். எந்தவொரு பொக்கிஷத்திற்கும் பூட்டும் கிடையாது, சாவியும் கிடையாது. கடின உழைப்பு என்ற சாவி இல்லை. இல்லையென்றால் முழு நாளிலும் கடின உழைப்பு என்ற சாவியை போட வேண்டியதிருக்கும். அந்த நேரம் ஒரே ஒரு எண்ணத்தை மட்டும் வையுங்கள். நான்

என்னவாக இருந்தாலும், எப்படி இருந்தாலும் உங்களுடையவள் என்று. மாயாவின் சூது விளையாட்டைக் கடந்து வந்து தந்தையுடன் அமர்ந்து விடுங்கள். அவ்வளவு தான். இந்த மாயாவின் சூது பக்கத்து காட்சிகளாகும். அதைக் கண்டு நிற்கக்கூடாது. வந்து விடுங்கள் மேலும் அமர்ந்து விடுங்கள். எண்ணம் மற்றும் புத்தி அதாவது மனம் மற்றும் புத்தியை தந்தையிடம் ஒப்படைத்து விடுங்கள். இதைச் செய்யத் தெரியாதா? தந்தையால் கொடுக்கப்பட்ட ஒன்றை தந்தைக்குக் கொடுப்பதில் கஷடம் என்ன இருக்கிறது? சில நேரம் உன்னுடையது, பிறகு சில நேரம் என்னுடையது என்று கூறுகிறீர்கள், இந்த உன்னுடைய என்னுடைய என்ற சூழலில் வந்து விடுகிறீர்கள். அமிர்தவேளை வந்தது கண் திறந்ததும் ஒரு நொடியில் ஓடி வந்து தந்தையுடன் அமர்ந்து விடுங்கள். அருகில் உடன் இருக்கும் காரணத்தினால் தந்தையின் பொக்கிஷமாக இருப்பது தன்னுடைய பொக்கிஷமாக அனுபவம் ஆகும். ஞானத்தின் ஆதாரத்தில் இல்லை. ஆனால் பிராப்தியின் ஆதாரத்தில். அதிகாரத்தின் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் காரணத்தினால் அதிகாரத்தன்மையின் அனுபவம் ஆகும். அப்படி தந்தை, இறை நண்பன் என்ற ரூபத்தில் அதிகாரத்தின் ஆசனத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். எழுந்திருங்கள் மற்றும் ஆசனத்தில் அமர்ந்து விடுங்கள். கொஞ்ச நேரத்திற்காகக் கூட அதிகாரத்தின் ஆசனத்தில் இருப்பவராக இருந்தால் கூட என்ன விரும்புகிறீர்களோ அதை உருவாக்க முடியும். எப்படி எல்லைக்குட்பட்ட இராஜா கொஞ்ச நேரத்து இராஜ்ய அதிகாரத்தில் செய்ய முடிவதில்லையா என்ன? இப்பொழுது எல்லைக்கப்பாற்பட்ட ஆசனத்தில் அமர்ந்திருப்பவர் இந்த பொன்னான நேரத்தில் தற்சமயம் சுலபமாகவே தனது பொற்காலத்து நிலையை உருவாக்க முடியும். மேலும் எதிர்காலத்து பொற்காலத்து உலகத்தில் உயர்ந்த பதவியை அடைய முடியும். சுலபமாக முயற்சி செய்வதற்கான நேரம் மற்றும் சுலபமான வழி என்ன என்று புரிந்ததா? பிறகு சுலபத்தை விட்டு விட்டு கடினத்தில் ஏன் செல்கிறீர்கள்? இப்பொழுது சுலபமாக முயற்சி செய்பவராக ஆவீர்களா அல்லது கடினமாக முயற்சி செய்பவராக ஆவீர்களா? தந்தை சுலபமாக கிடைத்திருக்கிறார் என்றால், மார்க்கம் எப்படி கடினமாக இருக்கும்? சுலபமாக முயற்சி செய்பவராக ஆகுங்கள். கடினத்தின் பெயர் அடையாளங்களை அழித்து விட்டீர்கள் என்றால் உலகத்தின் கடினங்களை அழிக்க முடியும்.

அந்த மாதிரி எப்பொழுதும் அதிகாரி, ஆசனதாரி, மாயாவின் பரீட்சையில் தேர்ச்சி அடையக்கூடிய, எப்பொழுதும் தந்தையின் இரகசியங்களை தெரிந்திருக்கக்கூடிய, கடின உழைப்பை அன்பில் பரிவர்த்தனை செய்யக்கூடிய, மனமுடைந்து போவதற்குப் பதிலாக

மனமகிழ்வோடு இருக்கக்கூடிய, தன்னுடைய இதயத்தின் குஷி மூலம் உலகைக் குஷிப்படுத்தக்கூடிய அந்த மாதிரி எப்பொழுதும் தந்தையுடன் இருக்கக்கூடிய மிக உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

அவ்யக்த பாப்தாதாவுடன் பார்ட்டிகளின் தனிப்பட்ட சந்திப்பு

1) மனசேவைக்கான சுலபமான வழி உறுதியான நிச்சயம் -

யாரெல்லாம்எப்பொழுதும் நிச்சயபுத்தி உடையவராகி, எப்பொழுதும் வெற்றி அடைபவர்களாக இருக்கிறார்களோ, அந்த நிச்சயபுத்தி உடையவர்கள் மூலமாக வாயுமண்டலம் சுத்தம் ஆகிக் கொண்டே இருக்கும். அவர்கள் மனதால் சேவை செய்கிறார்கள். ஏனென்றால், நாலாபுறங்களிலுமுள்ள மனிதர்கள் இந்த நிச்சயபுத்தி ஆத்மாக்களைப் பார்த்து இவர்களுக்கு ஏதோ கிடைத்திருக்கிறது என்று நினைக்கிறார்கள். எவ்வளவு தான் கர்வம் உடையவராக இருந்தாலும், ஞானத்தைக் கேட்காதவராக இருந்தாலும் ஆனால் இவருடைய வாழ்க்கை கொஞ்சம் நல்லதாக ஆகியிருக்கிறது என்று மனதில் நினைக்கிறார்கள். அப்படி யார் தொடக்கத்திலிருந்து உறுதியான நிச்சயபுத்தி உடையவராக இருந்திருக்கிறார்களோ அவர்களுடைய இந்த சேவை நடந்து கொண்டே இருக்கிறது. இதுவும் மன சேவை தான்.

2) மாயாவிடமிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான வழி - கவனம் என்ற காவலாளி விழிப்புடன் இருப்பது -

அனைவரும் எப்பொழுதும் சுயதரிசன சக்கரதாரி ஆகி நடந்து கொள்கிறீர்களா? எப்பொழுதும் தன்னுடைய சொரூபம் சுயதரிசன சக்கரதாரியின் நினைவு இருக்கிறதா? யார் எப்பொழுதும் சுயதரிசன சக்கரதாரியாக இருக்கிறாரோ அவர் அனேக விதமான மாயாவின் குழப்பம் என்ற சுழற்சிகளிலிருந்து விடுபட்டிருக்கிறார். ஒரு சுயதரிசன சக்கரம் அனேக வீணான சுழற்சிகளை அழிக்கக்கூடியது, மாயாவை விரட்டக்கூடியது. சுயதரிசன சக்கரதாரிக்கு எதிரில் மாயா நிற்க முடியாது. சுயதரிசன சக்கரதாரி எப்பொழுதும் நிரம்பியவராக இருக்கும் காரணத்தினால் ஆடாதவராக இருப்பார். அந்த மாதிரி எப்பொழுதும் நிரம்பியவர் அதாவது அனைத்து செல்வங்களால் நிரம்பப்பட்டவராக இருக்கிறீர்களா? மாயா அதை காலி செய்வதற்கு முயற்சி செய்யும். ஆனால் யார்

எப்பொழுதும் எச்சரிக்கையுடன், விழிப்புடன் இருக்கும் பிரகாசமான ஜோதியாகஇருக்கிறார் என்றால் மாயா எதையும் செய்ய முடியாது. கவனம் என்ற காவலாளி விழிப்புடன் இருக்கிறார் என்றால் எப்பொழுதும் பாதுகாப்பாக இருப்பீர்கள். எனவே எப்பொழுதும் சுடர் விடும் ஜோதியாக ஆகுங்கள். எனவே உங்களுடைய நினைவுச்சின்ன கோவில்களிலும் இடைவிடாத ஜோதியைஎரிய வைக்கிறார்கள். அணைய விடுவதில்லை. இடைவிடாது எரியும் விளக்கேற்றும் பழக்கம் எங்கிருந்து வந்தது? சங்கமயுகத்தில் நீங்கள் அனைவரும் சைத்தன்யத்தில் சுடர் விடும் ஜோதியாக இருந்திருக்கிறீர்கள். அதனால் தான் இந்த நினைவு பழக்க வழக்கமும் தொடர்ந்து வருகிறது. ஒருவேளை எரிவது துண்டிக்கப்பட்டு விட்டது என்றால், அபசகுணமாக நினைப்பார்கள். அப்படி சைத்தன்யத்தில் நீங்கள் அனைவரும் என்னவாக இருக்கிறீர்கள். அகண்ட ஜோதியாக துண்டிக்கப்பட்ட பொருள் ஒருபொழுதும் பூஜைக்குரியதாக ஆக முடியாது.

3) தந்தை மூலமாக கூறப்பட்ட மகிமையை நினைப்பதினால் சக்தி நிறைந்த நிலையின் அனுபவம்:

எப்பொழுதும் தன்னுடைய பாக்கியத்தின் மகிமையின் பாடலை பாடிக்கொண்டே இருக்கிறீர்களா? எப்படி ஸ்தூலமாக சாதாரண பாடலை பாடினார்கள் என்றாலும் எவ்வளவு குஷியில் வந்து விடுகிறார்கள். பக்தி மார்க்கத்தில் கீர்த்தனை செய்கிறார்கள் என்றாலும் கூட எவ்வளவு குஷி அடைகிறார்கள்? அப்படி நீங்கள் அனைவரும் தந்தை மூலமாகக் கூறப்பட்ட மகிமையின் பாடலை எப்பொழுதும் பாடிக்கொண்டே இருங்கள். முன்பு நான் என்னவாக இருந்தேன், தந்தை என்னை என்னவாக ஆக்கியுள்ளார். அதை நினைவு செய்து எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள், இந்த நினைவு செய்வதில் சக்தி நிரம்பியிருக்கிறது, ஏனென்றால் தந்தை சக்திசாலியாக ஆக்கியிருக்கிறார் தான் இல்லையா?. எது கனவில் கூட ஆக முடியாததாக இருந்ததோ, அதை நடைமுறை சொரூபத்தில் அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள். எனவே அனைத்து குழந்தைகளையும் பாப்தாதா அதிர்ஷ்ட நட்சத்திரம் என்று கூறுகிறார். அப்படி நீங்கள் அதிர்ஷ்ட நட்த்திரங்கள் தான் இல்லையா? எது எப்பொழுதும் மின்னிக் கொண்டிருக்கிறதோ அதைத் தான் நட்சத்திரம் என்று கூறுவது. தந்தை மூலமாக என்ன சக்திகள் மற்றும் ஞானத்தின் பொக்கிஷம் கிடைத்திருக்கிறதோ அதில் ஜொலித்துக் கொண்டே இருங்கள். அப்படி இருக்கிறீர்களா? மேகங்களில் மறைந்து போவோராக இல்லையே ! எப்பொழுதும் தன்னுடைய பிரகாசத்தினால் உலகிற்கு ஒளி கொடுப்பவர்கள் தான் இல்லையா? மிகவும் குஷியோடு பழைய உலகிலிருந்து விலகி வந்து விட்டீர்கள். இப்பொழுதும் பழைய உலகின் நிவாசிகள்

இல்லை, சங்கமயுக நிவாசிகள் ஆவீர்கள். அப்படியானால் பழைய உலகிலிருந்து விலகி வந்து விட்டீர்களா அல்லது வர வேண்டுமா, என்ன நினைக்கிறீர்கள்? ஏதாவது பழைய நண்பனை சந்திப்பதற்காக பழைய உலகின் பொருளை வாங்குவதற்காக செல்வதில்லையே? இன்றைய நாட்களில் எல்லைப் பகுதியில் நின்று கொண்டிருப்பவர் கூட சில நேரம் வேண்டுமென்றே எதிரியின் தேசத்தில் சென்று விடுகிறார். அப்படி நீங்கள் எல்லையைத்தாண்டி பழைய உலகில் சென்று விடுவதில்லையே? புதிய உலகம் எதிரில் நின்று கொண்டிருக்கிறது, பழைய உலகத்திலிருந்து விலகி வந்து விட்டீர்கள். எண்ணத்தினால் கூட பழைய உலகில் செல்லாதீர்கள். சென்றீர்கள் என்றால் மாட்டிக் கொள்வீர்கள். எனவே எப்பொழுதும் தன்னை சங்கமயுகத்தைச் சேர்ந்தவன் என்று புரிந்து கொள்ளுங்கள். சங்கமயுகத்தில் தந்தையின் நினைவு வரும், ஆஸ்தியின் நினைவு வரும்.

முயற்சி செய்வதில் சுய முன்னேற்றம் மற்றும் சேவையின் வளர்ச்சி -

இரண்டிற்கும் சமநிலை வேண்டும். இரண்டிற்குமான திட்டங்களை உருவாக்கிக் கொண்டே இருக்கிறீர்களா? இப்பொழுது என்ன திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்கள்? (உஜ்ஜைனில் கும்பமேளாவில் ஆன்மீக மேளா) மேளாவிற்காக வெகு விமர்சையாக தயார் செய்து கொண்டிருக்கிறீர்கள். நல்லது தான்! ஆனால் மேளாவின் சூழ்நிலையை அந்த மாதிரி அமைதி நிறைந்ததாக ஆக்குங்கள், அதன் மூலம் குழப்பத்துடன், துக்கம் நிறைந்த உள்உணர்வை எடுத்து வருபவர்கள் வேறு ஏதோ மாறுபட்ட (அற்புத) இடத்திற்கு வந்திருக்கிறேன் என்று உணர வேண்டும். இந்த விசேஷ கவனம் வைக்க வேண்டும். நாலாபுறங்களிலும் சப்தமாக இருக்கும். ஆனால், உங்களிடம் வந்து அமைதியின் குண்டத்திற்கு வந்து சேர்ந்து விட்டேன் என்று அனுபவம் செய்யட்டும். வெளியில் நுழைவாயிலில் யார் சேவையில் இருப்பார்களோ அவர்களும் அமைதியின் வரதானியாகி இருக்க வேண்டும். உங்களுடைய அமைதியின் அதிர்வலைகள் அவர்களை அமைதியாக்கிவிடட்டும். இதன் மூலம் இரண்டு நிமிடங்களுக்காக சென்றோம். ஆனால் மிக நன்றாகவே அமைதியின் அனுபவம் செய்து வந்தோம் என்று முழு மேளாவிலும் இந்தப் பேச்சு பேசப்பட வேண்டும். எப்படி தொடக்க காலத்தில் ஸ்தாபனையின் காலத்தில் யார் வந்தார்களோ அவர்களை 'ஓம்' என்ற தொனி மூலம் இது ஏதோ அமைதியான தெய்வீக இடம் என்று உணர்ந்தார்கள். அந்த மாதிரி இந்த மேளாவில் அமைதியின் அனுபவம் செய்யட்டும். மேளாவில் யார் வருகிறார்களோ அவர்களுடைய மனநிலையே கொஞ்சம் வேறு மாதிரி இருக்கும். அந்த மேளாவும் ஒரு பொருட்கள் விற்பனையாகும் பஜார் மாதிரி இருக்கும், அந்த வகையில் அமைதியின்மையோடு வருவார்கள் அந்த

மாதிரியானவர்களுக்கு அமைதியின் அனுபவம் செய்விப்பது மிக அவசியமாகும். அதன் மூலம் அவர்களுக்கு இதுவொரு விசேஷமாக தென்பட வேண்டும்.

அனைவருக்கும் அன்போடு அழைப்பு கொடுங்கள் - உங்களுடைய அன்பைப் பார்த்து அனைவரும் குஷி அடைவார்கள். யாராவது எப்படி பேசினாலும் கூட, நீங்கள் அமைதியுடன், அன்புடன் பேசினீர்கள் என்றால் அதற்கும் பிரபாவம் ஏற்படும். அவ்வப்போது மேடையில் வருபவர்கள் மனதால் இதை ஏற்றுக்கொள்வார்கள். இப்பொழுது அனைவர்களின் கண்கள் கொஞ்சம் கீழே இறங்கியிருக்கிறது, தலை இன்னும் தாழவில்லை. இறுதியிலோ அனைவருமே தலைவணங்குபவர்கள் தான். அனைவரும் தலைவணங்குவது என்றால் வெற்றி முழக்கம் ஏற்படுவது. பிறகு புரட்சிக்குப் பின்பு அமைதி ஏற்பட்டு விடும். இப்பொழுது தலை வணங்கும் முதல் காட்சி தொடங்கியிருக்கிறது, இறுதியில் காலடி வரை வந்து வணங்குவார்கள்.

4) இரக்க மனமுடைய தந்தையின் இரக்க மனமுடைய குழந்தைகளின் கடமை -

அனைவருக்கும் புகலிடம் கொடுப்பது - அனைவரும் ஏழ்மை நிலையான வாழ்க்கையின் அனுபவமும் செய்தீர்கள். இப்பொழுது அனைத்தும் நிறைந்தவர்களாகவும் ஆகிவிட்டீர்கள். அனைத்தும் நிறைந்த குழந்தைகள் யாரைப் பார்த்தாலும் இந்த ஆத்மாவிற்கும் புகலிடம் கிடைத்து விடட்டுமே, இவருக்கும் நன்மை ஏற்பட்டு விடட்டுமே என்று இரக்கம் வரும். எனவே யாரெல்லாம் தொடர்பில் வருகிறார்களோ அவர்களுக்கு அவசியம் தந்தையின் அறிமுகம் கொடுக்க வேண்டும். யாராவது வீட்டிற்கு வருகிறார்கள் என்றால், அவர்களுக்கு தண்ணீர் குடிக்கிறீர்களா என்றாவது கேட்கப்படும். ஒருவேளை வந்தவருக்கு தண்ணீர் கூட கொடுக்கப்படவில்லை என்றால் அவமரியாதை என்று நினைப்பார்கள். அதே போலவே தொடர்பில் யாரெல்லாம் வந்தாலும் அவர்களுக்கு தந்தையின் அறிமுகம் என்ற தண்ணீர் குடியுங்கள் என்று அவசியம் கேளுங்கள். கொஞ்சம் கூறினீர்கள் என்றால் தண்ணீர் குடிக்கிறீர்களா என்று கேட்டீர்கள் - ஒரு வார பாடம் எடுத்தீர்கள் என்றால், பிரம்மா போஜனம் கொடுத்தீர்கள். ஏதாவது கொஞ்சம் அவசியம் கொடுங்கள். ஏனென்றால் நீங்கள் வள்ளலின் குழந்தைகள் ஆவீர்கள். நல்லது.

வரதானம்

கிரீடம் மற்றும் ஆசனத்தை எப்பொழுதும் தக்க வைத்துக் கொள்ளக்கூடிய நிரந்தர இயல்பான யோகி ஆகுக.

தற்சமயம் தந்தை மூலமாக அனைத்து குழந்தைகளுக்கும் கிரீடம் மற்றும் ஆசனம் கிடைக்கிறது, இந்த நேரம் கிடைக்கும் கிரீடம் மற்றும் ஆசனம் அனேக பிறவிகளுக்கு கிரீடம் மற்றும் ஆசனத்தை அடையச் செய்கிறது. உலக நன்மை காரியத்தின் பொறுப்பு கிரீடம் மற்றும் பாப்தாதாவின் இதய சிம்மாசனம் எப்பொழுதும் ஒருவருடன் இருக்கிறது என்றால், நிரந்தர இயல்பான யோகி ஆகிவிடுவார். அவருக்கு எந்த விதமான கடின உழைப்பு செய்வதற்கான தேவை இருக்காது. ஏனென்றால் ஒன்று சம்மந்தம் நெருக்கமானது, இன்னொன்று (பிராப்தி) அடைவது அளவில்லாதது. எங்கு பிராப்தி இருக்கிறதோ அங்கு இயல்பாகவே நினைவு இருக்கும்.

சுலோகன் :

தெளிவான (ப்ளைன்) புத்தி மூலம் திட்டத்தை (பிளானை) நடைமுறையில் கொண்டு வந்தீர்கள் என்றால் அதில் வெற்றி அடங்கியிருக்கிறது.

ஓம் சாந்தி

19.12.1979 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" சுலபமாக நினைவு செய்வதற்கான வழி - தன்னை குதாயி கித்மத்கார் (இறை சேவாதாரி) என்று நினைத்துக் கொள்ளுங்கள் "

பாப்தாதா இன்று தன்னுடைய சகயோகி மற்றும் சகஜயோகி குழந்தைகளை, அதாவது, யாருடைய பெயரே குதாயி கித்மத்கார் (இறை சேவாதாரி) என்றிருக்கிறதோ அந்த மாதிரி குழந்தைகளைப் பார்த்து எப்பொழுதும் மகிழ்ச்சி அடைகிறார். குதாயி கித்மத்கார் என்றால், குதா (இறைவன்), தந்தை என்ன கித்மத் அதாவது சேவை கொடுத்திருந்தாரோ அந்த சேவையிலேயே எப்பொழுதும் முழுமையாக ஈடுபட்டிருப்பவர். குழந்தைகளுக்கும் விசேஷமாக இந்த போதை இருக்க வேண்டும். நம் அனைவருக்கும் இறைவன் என்ன சேவை கொடுத்திருந்தாரோ அந்த சேவையிலேயே நாங்கள் முழுமையாக ஈடுபட்டிருக்கிறோம் என்ற விசேஷ போதைஇருக்க வேண்டும். காரியம் செய்து கொண்டே, யார் காரியத்தை கொடுத்திருந்தாரோ அவரை ஒரு பொழுதும் மறப்பதில்லை. ஸ்தூல காரியங்கள் செய்தாலும் கூட இந்த உடலால் செய்யும் சேவையும் இறை சேவை தான். நேரடியாக தந்தை டைரக்ஷ்ன் கொடுத்திருக்கிறார், உடலால் செய்யும் சேவையிலும் கூட தந்தையின் கட்டளைப்படி செய்து கொண்டிருக்கிறேன் என்று நினைவு இருந்தது என்றால், ஒருபொழுதும் தந்தையை மறக்க முடியாது. எப்படி ஏதாவது விசேஷ ஆத்மாவிடமிருந்து ஏதாவது விசேஷ காரியம் கிடைக்கிறது என்றால், எப்படி இன்றைய நாட்களின் ஜனாதிபதி யாரிடமாவது நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும் என்று கூறினார் என்றால், அந்த நபர் அந்தக் காரியத்தை செய்து கொண்டே ஜனாதிபதியை ஒருபொழுதும் மறக்க மாட்டார். சகஜமாகவும், இயல்பாகவும் அவருடைய நினைவிருக்கும். விரும்பாவிட்டால் கூட எதிரில் அவர் தான் வந்து கொண்டே இருப்பார். அந்த மாதிரி உங்கள் அனைவருக்கும் இந்தக் காரியத்தை உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை கொடுத்திருக்கிறார், காரியம் செய்து கொண்டே கொடுத்தவரை எப்படி மறக்க முடியும்? அப்படி சுலபமான நினைவிற்கான வழி எப்பொழுதும் தன்னை இறை சேவாதாரி என்று நினையுங்கள்.

ஒருவேளை இலை கூட அசைகிறது என்றால் அந்த இலையை அசைப்பவரும் தந்தை

தான் என்று பக்தி மார்க்கத்தில் புரிந்து கொள்ளாமலேயே கூறிய ஒரு பழமொழி இருக்கிறது. மேலும் அதை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும் செய்கிறார்கள். ஆனால் அந்த இலைகளை தந்தை அசைப்பதில்லை, நாடகப்படி அவை அனைத்தும் நடந்து கொண்டிருக்கின்றன என்ற இந்த இரகசியத்தை நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள். இந்த வர்ணனை ஏதோஒரு ஸ்தூலமான இலைகளைப் பற்றியது அல்ல. ஆனால் கல்ப விருட்ச மரத்தின் முதல் இலைகள் நீங்கள் ஆவீர்கள். நீங்கள் அனைவரும் சங்கமயுகத்தின் பொற்காலத்து இலைகள். யார் தந்தை மூலமாக இரும்பிலிருந்து தங்கம் ஆகிவிட்டார்கள் அப்படி இந்த சைத்தன்ய இலைகளை இந்த நேரம் நேரடியாக தந்தை உருவாக்கிக் கொண்டு இருக்கிறார். எண்ணத்தில் கூட எது தந்தையின் எண்ணமாக இருக்கிறதோ அதுவே உங்களுடையதாக இருக்க வேண்டும் என்பது தந்தையின் கட்டளை.. ஒவ்வொரு எண்ணமும் தந்தைக்குச் சமமானது, ஒவ்வொரு வார்த்தையும் தந்தைக்குச் சமமாக, ஒவ்வொரு செயலும் தந்தைக்குச் சமமாக இருக்க வேண்டும் அதாவது இந்த ஸ்ரீமத்தின் ஆதாரத்தில் தான் உங்கள் அனைவரின் எண்ணம் ஓடுகிறது. அப்படி இந்த நேரம் இலைகள் உங்கள் அனைவரையும் ஸ்ரீமத்தின் ஆதாரத்தில் ஒவ்வொரு நேரமும் தந்தை நடத்துகிறார். ஒவ்வொரு இலையையும் அசைக்கிறார் என்றால் நடத்துவிக்கிறார். ஒருவேளை ஸ்ரீமத்திற்குப் புறம்பாக எண்ணம் செய்தீர்கள் என்றால் கூட அது வீணான எண்ணமாக ஆகிவிடுகிறது, இந்தப் பழமொழி இருக்கிறது இல்லையா! அது பக்தியின் காலத்தினது அல்ல, ஆனால் சங்கமயுகத்தின் வர்ணனை ஆகும். அப்படி நீங்கள் அனைத்து இலைகளும் தந்தையின் ஸ்ரீமத்படி அசைகிறீர்கள் அதாவது நடந்து கொண்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? அதே மாதிரியே நடந்து கொண்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? நடத்துவிப்பதற்கான வேலையோ தந்தையினுடையது, இருந்தும் இவ்வளவு கடினமாக ஏன் அனுபவம் ஆகிறது? சுமை அனைத்தையும் தந்தை எடுத்து கொண்டார், இருந்தும் ஏன் எப்பொழுதும் மேலே பறப்பதே இல்லை. லேசான ஒன்று எப்பொழுதும் மேலே பறந்து கொண்டே இருக்கும். அவ்வளவு லேசாக இருக்க வேண்டும், ஒவ்வொரு எண்ணத்தையும் தந்தை செய்விக்கிறார் என்றால் கூட அதே மாதிரியே இருக்க வேண்டும். எப்படி நடத்துவிப்பீர்களோ அப்படியே நடப்போம் என்ற இதுவும் உங்கள் அனைவரின் உறுதிமொழியாக இருக்கிறது. மேலும் நாம் நடக்கச் செய்வோம் என்பது தந்தையின் உத்திரவாதமாக இருக்கிறது. அப்படியானால் புத்திக்கு என்ன கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது? புத்திக்கு தந்தை என்ன காரியம் கொடுத்திருக்கிறாரோ அதைத் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? புத்தியின் அமருவதற்கான ஸ்தானம் தந்தையிடம் இருக்கிறது. செய்ய வேண்டிய காரியம் உலக சேவைக்கானது. எனவே எங்கே அமர வைப்பீர்களோ எப்படி நடத்துவிப்பீர்களோ அங்கே செல்வோம் என்ற பழமொழி இருக்கிறது.

உடல் மூலமாகவா அல்லது புத்தி மூலமாகவா? உடலோடு சேர்த்து மனதையும் கொடுத்திருக்கிறீர்களா அல்லது உடலை மட்டும் கொடுத்திருக்கிறீர்களா? உடல் மற்றும் புத்தியால் எங்கு அமர வைப்பீர்களோ, எப்படி நடத்துவிப்பீர்களோ என்ன செய்விப்பீர்களோ, என்ன உணவு அருந்த கொடுப்பீர்களோ அதையே செய்வோம் என்ற இந்த உறுதிமொழி செய்து கொடுத்திருக்கிறீர்கள் தான் இல்லையா? அப்படி புத்திக்கான உணவு சுத்த எண்ணம். என்ன அருந்தக் கொடுப்பீர்களோ அதையே அருந்து வோம் என்பது உறுதிமொழி என்றால் பிறகு வீணான எண்ணங்களின் உணவை ஏன் அருந்துகிறீர்கள்? எப்படி வாய் மூலமாக தரமற்ற உணவை, அசுத்தமான உணவை அருந்த முடியாது, அது போலவேபுத்தி மூலமாக வீணான எண்ணம் மற்றும் அசுத்த எண்ணம் என்ற உணவை எப்படி அருந்த முடியும்? என்ன அருந்தக் கொடுப்பீர்களோ அதையே அருந்துவோம் என்பது பின்பு தவறாகி விடுகிறது. சொல்வதையும் செய்வதையும் சமமாக ஆக்குபவர் நீங்கள் தான் இல்லையா? எனவே மனம் மற்றும் புத்திக்காக இந்த உறுதிமொழியையும் நினைவில் வைத்து கொண்டீர்கள் என்றால் சகஜயோகி ஆகி விடுவீர்கள். தந்தை கூறினார், உடன் நீங்கள் செய்தீர்கள். தன்னுடைய சுமையை தன் மேலேயே வைக்காதீர்கள். எப்படி செய்வது, எப்படி நடந்து கொள்வது என்ற இந்த சுமையிலிருந்து லேசாக ஆகாமல் உயர்ந்த நிலைக்குச் செல்ல முடியாது. எனவே ஸ்ரீமத்படி எண்ண அளவிலாவது சென்று கொண்டே இருந்தீர்கள் என்றால் கடின உழைப்பிலிருந்து பாதுகாக்கப்படுவீர்கள்.

அனேக குழந்தைகளின் கடின உழைப்பின் விதவிதமான ரூபத்தை (போஸ்) பாப்தாதா பார்க்கிறார். முழு நாளில் அனேக குழந்தைகளின் அனேக போஸ்களை தந்தை பார்க்கிறார். தானியங்கி கேமரா இருக்கிறது. அறிவியலைச் சேர்ந்தவர்களோ அனைத்தையும் வதனத்திலிருந்து தான் காப்பி செய்திருக்கிறார்கள். எப்பொழுதாவது வதனத்தில் வந்து இங்கே என்னென்ன பொருட்கள் இருக்கின்றன என்று பாருங்கள். என்ன வேண்டுமோ அது உடனே கிடைக்கும். நீங்கள் அனைவரும் தருவியுங்கள் என்று உடனே கூறுவீர்கள். வதனத்தை பார்க்க விரும்புகிறீர்களா அல்லது அங்கேயே இருக்க விரும்புகிறீர்களா என்று தந்தை கேட்கிறார் (ட்ரையல் செய்வோம்). சந்தேகமா என்ன! அதற்காக ட்ரையல் செய்வீர்கள்? உங்கள் அனைவரையும் அழைப்பதற்காகத் தான் பிரம்மா பாபா வதனத்தில் நின்று கொண்டிருக்கிறார். பிறகு ஏன் சம்பன்னம் (முழுமை) ஆவதில்லை. மிக சுலபமாகவே சம்பன்னம் ஆக முடியும், ஆனால் துவாபர்யுகத்திலிருந்து மற்றதை கலக்கும் சம்ஸ்காரம் அதிகமாக இன்னும் இருக்கிறது. முதலில் பூஜையில்

கலந்தீர்கள், தேவதைகளுக்கு குரங்கு முகத்தைப் போட்டு விட்டீர்கள். சாஸ்திரங்களில் இந்த மாதிரி கலந்திருக்கிறீர்கள். எது தந்தையின் வாழ்க்கைக் கதையோ அதில் குழந்தையின் வாழ்க்கைக் கதையை கலந்திருக்கிறீர்கள். அதே போலவேஇல்லறத்தில் தூய்மையான இல்லறத்திற்கு பதிலாக தூய்மையற்ற இல்லறத்தை கலந்து விட்டிருக்கிறீர்கள். இப்பொழுது கூட ஸ்ரீமத்தில் மனம் சொல்லும் வழியை கலந்து விடுகிறீர்கள். எனவே கலப்படம் ஆன காரணத்தினால், எப்படி உண்மையான தங்கம் லேசாக இருக்கும். மேலும் அதில் கலப்படம் ஆகிறது என்றால் பாரமாக ஆகி விடும். அதே போலவேஸ்ரீமத் அதாவது உயர்ந்த வழி லேசாக ஆக்குகிறது, மனம் சொல்லும் வழி கலந்து விடுவதினால் சுமையாகி விடுகிறீர்கள். எனவே நடந்து கொள்வதில் கடினம் அனுபவம் ஆகிறது. எனவே ஸ்ரீமத்தில் கலப்படம் செய்யா தீர்கள். எப்பொழுதும் லேசாக இருப்பதினால் வதனத்தின் அனைத்து காட்சிகளையும் இங்கே இருந்து கொண்டே பார்க்க முடியும். இந்த உலகத்தின் ஏதோ ஒரு காட்சியை தெளிவாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று அப்படி அனுபவம் ஆகும். எண்ண சக்தியை மட்டும் அதாவது மனம் மற்றும் புத்தியை எப்பொழுதும் மனம் சொல்லும் வழியிலிருந்து காலியாக வையுங்கள். மனதை ஓட விடுவதற்கான பழக்கம் மிகவும் இருக்கிறது தான் இல்லையா? ஒருமுகப்படுத்துகிறீர்கள் இருந்தும் மற்ற விஷயங்களில் சென்று விடுகிறது. பிறகு கடுமையான முயற்சி செய்கிறீர்கள். அது செல்லாமல் இருப்பதற்கான வழி, எப்படி இன்றைய நாட்களில் ஒருவேளை யாராவது கட்டுப்பாட்டில் வருவதில்லை, மிகவும் தொந்தரவு செய்கிறார், மிகவும் ஓடியாடுகிறார் அல்லது பைத்தியம் ஆகிவிடுகிறார் என்றால், அவருக்கு அந்த மாதிரி ஊசி போடுகிறார்கள். அதன் மூலம் அவர் சாந்தமாகிவிடுவார். அதே போல் ஒருவேளை எண்ண சக்தி உங்களின் கட்டுப்பாட்டில் வரவில்லை என்றால் அசரீரி ஆகுக என்ற இஞ்ஜக்ஷன் போட்டு விடுங்கள், பிறகு தந்தையிடம் வந்து அமர்ந்து விடுங்கள். பின்பு எண்ண சக்தி வீணாகாது. அப்படி அமரக்கூட தெரியாதா என்ன? அமருவதற்கான வேலை மட்டும் தானே கொடுத்திருக்கிறோம், வேறு என்ன கொடுத்திருக்கிறோம். இப்பொழுதோ மிகவும் சுலபம் என்று புரிந்திருக்கிறீர்கள். புத்திக்கு கடிவாளம் போட்டு விட்டு பிறகு எடுத்து விடுகிறீர்கள். எனவே மனம் வீணான விஷயங்களின் கடும் உழைப்பில் போட்டு விடுகிறது. வீணாக உழைப்பதிலிருந்து விடுபட்டு விடுங்கள். தந்தைக்கு தன்னுடைய குழந்தைகள் கடுமையாக உழைப்பதைப் பார்த்து இரக்கம் வரும் இல்லையா?

ஒவ்வொரு குழந்தையும் தந்தையுடன் சேர்ந்து ஆசனத்தில் மிகவும் சௌகரியமாக

அமர்ந்து விடுங்கள் என்று தான் தந்தை கூறுகிறார். ஆசனதாரி ஆகி தன்னுடைய ஸ்தூல கர்மேந்திரியங்களை மற்றும் சூட்சும சக்திகளை அதாவது மனம், புத்தி, சம்ஸ்காரத்தையும் தன்னுடைய ஆணைப்படி நடத்தச் செய்யுங்கள். ஆசனதாரி யாக இருந்தீர்கள் என்றால் ஆணையிட முடியும். ஆசனத்திலிருந்து கீழே இறங்கி ஆணையிடுகிறீர்கள், எனவே கர்மேந்திரியங்களும் ஏற்றுக்கொள்வதில்லை. இன்றைய நாட்களில் முட்கள் நிறைந்த (உலகீய) ஆசனங்களுக் காகவும் போராட்டம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் உங்களுக்கோ சிம்மாசனதாரி ஆகுக என்ற வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தும் கீழே ஏன் வந்துவிடுகிறீர்கள்? கீழே வருவது என்றால் சேவகன் ஆவது. யாருடைய சேவகன்? தன்னுடைய அனேக கர்மேந்திரியங்களின் சேவகர்களுக்கும் சேவகனாக ஆகி விடுகிறீர்கள். எனவே கடின உழைப்பு செய்கிறீர்கள். ஈஸ்வரிய சேவகன் ஆகுங்கள். மேலும் ஈஸ்வரிய சேவாதாரி ஆகுங்கள். சேவகனுக்கும் சேவகனாக ஆகாதீர்கள். ஈஸ்வரிய சேவையை ஆசனத்தில் அமர்ந்து கொண்டே கூட செய்ய முடியும். கீழே வருவதற்கான அவசியம் இல்லை. தந்தை தன்னுடன் அமர வைக்க விரும்புகிறார் ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? சங்கமயுக கணவன் மற்றும் மனைவி ஆவதற்குப் பதிலாக அடிமை ஆகிவிடுகிறீர்கள். எனவே உண்மையான தலைவனின் உண்மையான தலைவிகளாக (மனைவிகளாக) ஆகுங்கள். யார் எப்பொழுதும் அனைவரது பார்வையிலிருந்தும் விலகி பர்தா (முகத்தை மறைக்கும் அங்கி) அணிந்திருப்பார்களோ அவர்கள் மேல் யாருடைய பார்வையும் விழுவதில்லை. அப்படி மாயாவிடமிருந்து பர்தா அணிந்தவராகி தலைவனுடன் வந்து அமர்ந்து விடுங்கள். பிறகு அனைத்து அடிமைகளும் உங்ளுடைய சேவையில் ஆஜராகி இருப்பார்கள். என்ன செய்ய வேண்டுமென்று புரிந்ததா? இன்று கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விடுங்கள். எப்பொழுதும் சகஜயோகியாகி ஆசனத்தில் அமர்ந்து தந்தையின் கூடவே அமர்ந்து விடுங்கள்.

இப்பொழுது குஜராத் மற்றும் இந்தூர் வந்திருக்கிறார்கள் இல்லையா? அப்படி பர்தா அணிந்தவர்களாக ஆகிவிடுங்கள், அதாவது இன் டோர் ஆகிவிடுங்கள். அதாவது வாசலுக்கு உள்ளேயே இருந்து விடுங்கள். அப்படி இந்தூரைச் சேர்ந்தவர்கள் எப்பொழுதும் 'இன் டோர்'-ல் இருக்கிறீர்கள் தான் இல்லையா? வெளியியே வருவது இல்லை தான் இல்லையா? ஒவ்வொரு ஜோனும் தன்னுடைய வளர்ச்சியை நன்றாகவே செய்து கொண்டிருக்கிறார்கள். குஜராத்தைச் சேர்ந்தவர்களோ இந்த ஹாலையே ஃபுல் (நிரப்பி) ஆக்கிவிட்டார்கள். இப்பொழுது குஜராத்தைச் சேர்ந்தவர்கள் தன்னை ஃபுல் ஆக்குங்கள்,

பிறகு விரைவிலேயே வதனத்தில் மிக சௌகரியமாக அமருவீர்கள். இப்பொழுதோ நேரத்திற்கு ஏற்றபடி பிரம்மா பாபா குழந்தைகளை வாருங்கள் வாருங்கள் என்று வரவேற்றுக்கொண்டிருக்கிறார். குஜராத்தைச் சேர்ந்தவர்கள் என்ன செய்வீர்கள்? குஜராத்தைச் சேர்ந்தவர்கள் மிக சப்தமாக ஒலியெழுப்பும் மைக்கை இங்கே கொண்டு வாருங்கள். ஸ்தூலமான ஒலியெழுப்பும் மைக் இல்லை. சைத்தன்ய மைக். அந்த மாதிரி சக்திசாலியான மைக் செட்டை கொண்டு வாருங்கள். அது பிரத்யக்ஷதாவின் ஓசையை நாலாபுறங்களிலும் மிக சப்தமாக பரப்பட்டும். நல்லது. இந்தூர் ஜோனைச் சேர்ந்தவர்கள் என்ன கொண்டு வருவீர்கள்? இந்தூர் ஜோனிலிருந்து சக்திசாலியான டிவி செட்டை கொண்டு வாருங்கள். அதன் மூலம் உலகிற்கு அழிவின் காலம் தெளிவாகத் தென்படட்டும். மேலும் எதிர்காலத்தின் ஒளிமயமும் தென்படட்டும். இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? அந்த மாதிரி நபர்களைத் தயார் செய்யுங்கள். அவர்களின் அனுபவத்தின் டி.வி மூலமாக உலகின் விநாஷம் மற்றும் சாட்சாத்காரத்தின் காட்சி கிடைத்து விட வேண்டும். அப்படி இரண்டு மண்டலங்களைச் சேர்ந்தவர்களும் அந்த மாதிரி செட்டை தயார் செய்து வாருங்கள். நல்லது.

அந்த மாதிரியான இறை உதவியாளர்களுக்கு, எப்பொழுதும் கடின உழைப்பிலிருந்து விடுபட்ட, எப்பொழுதும் யுக்தியுக்தாக எண்ணம் மற்றும் காரியம் செய்பவர்களுக்கு, எப்பொழுதும் தந்தையின் ஸ்ரீமத் பிரகாரம் ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியத்தை செய்யக்கூடிய, எப்பொழுதும் சொல்வது மற்றும் செய்வதை சமமாக ஆக்கக்கூடிய அந்த மாதிரி எப்பொழுதும் சொல்லையும், செயலையும் இருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

விசேஷமாக டீச்சர்களுக்காக அவ்யக்த பாப்தாதாவின் இனிமையான மகாவாக்கியங்கள் -

டீச்சர்கள் விசேஷமாக முயற்சி செய்வது எந்த விஷயமாக இருக்க வேண்டும்? சேவைக்குத் தகுதியான குழந்தைகளின் நுணுக்கமான முயற்சி எது? எண்ணத்தின் சோதனை தான் நுணுக்கமான முயற்சி ஆகும். எண்ணத்தில் நினைவு மற்றும் சேவையின் சமநிலை இருந்ததா? ஒவ்வொரு எண்ணமும் சக்தி நிறைந்ததாக இருந்ததா? சேவைக்குத் தகுதியான குழந்தைகளின் எண்ணம் ஒருபொழுதும் வீணானதாக இருக்கக்கூடாது, ஏனென்றால் நீங்கள் உலகிற்கு நன்மை செய்பவர்கள், உலக மேடையில் நடித்துக் கொண்டிருப்பவர்கள்.

உங்களை முழு உலகமும் காப்பி செய்கிறது. ஒருவேளை உங்களுடைய ஒரு எண்ணமாவது வீணாக இருந்தது என்றால், அதை அனைவரும் காப்பி (பின்பற்றிச்)செய்வார்கள். தனக்காக மட்டும் செய்யவில்லை ஆனால் அனேகர்களுக்காக காரணமானவர் ஆகிவிட்டீர்கள். எப்படி உங்களுடைய சேவையின் லி∴ப்ட் என்ற கி∴ப்ட்டும் கிடைக்கிறது. அனேகர்களின் சேவையின் பங்கு கிடைத்து விடுகிறது. அதே போலவே ஒருவேளை அந்த மாதிரி ஏதாவது காரியம் செய்கிறீர்கள் என்றால், அனேகர்களுக்கு வீணானதைக் கற்றுக் கொடுப்பதற்கு பொறுப்பாளர் ஆகிவிடுகிறீர்கள். எனவே இப்பொழுது வீணான கணக்கிற்கு முடிவு கட்டுங்கள். எப்படி இன்றைய நாட்களில் அறிவியல் சாதனங்கள் மூலமாக மனதின் ஒருமுகப்பாட்டை சோதனைசெய்கிறார்கள். லண்டன் மற்றும் வேறு இடங்களில் செய்தார்கள் இல்லையா? இது அறிவியலின் சாதனம். ஆனால் உங்களுடைய ஒவ்வொரு அடியிலும் தன்னுடைய சுய சோதனைக்கான சாதனம் கூடவே இருக்க வேண்டும். எப்படி அவர்கள் சோதனைக்கான கருவிகளை தன்னுடன் வைத்துக் கொள்வார்கள். மேலும் சோதனைசெய்யும் நேரத்தில் மேலே போடுவார்கள். 15 சேவைக்குத் தகுதியான குழந்தைகளுக்கு ஒவ்வொரு நேரமும் சோதனைசெய்வதற்கான கருவியை உடன் வைத்துக் கொள்ள வேண்டும். அப்படி டீச்சர் ஆவது என்பது சிறிய விஷயம் அல்ல, பெயர் கிடைப்பது மட்டும் இல்லை. ஆனால் பெயரின் கூடவே செய்ய வேண்டிய வேலையும் இருக்கிறது.

சேவைக்குத் தகுதியான குழந்தைகளிடம் வீணானவை ஒருபொழுதும் இருக்கக்கூடாது. ஒருவேளை நீங்களே வீணான எண்ணம் வருகிறது என்று கூறினீர்கள் என்றால் மற்றவர்கள் என்ன செய்வார்கள்? மற்றவர்களோ தீய எண்ணங்களில் சென்று விடுவார்கள். பொதுவாகவே ஒவ்வொருவரும் கவனம் வைக்கத் தான் செய்கிறார்கள். ஆனால் நீங்கள் மிக நுணுக்கமான கவனம் வைக்க வேண்டும். எண்ணத்தினால் கூட சேவை நடக்க வேண்டும். ஒருவேளை எண்ண சக்தியை சேவையில் பிஸி ஆக்கி விட்டீர்கள் என்றால் வீணானவை இயல்பாகவே அழிந்து விடும். எப்படி இன்றைய நாட்களின் இளைஞர்களின் கூட்டத்தை ஏதாவது காரியத்தில் பிஸி ஆக்குவதற்காக முயற்சி செய்கிறார்கள். அதன் மூலம் இளைஞர்களின் சக்தி நஷ்டம் ஏற்படுத்தும் காரியங்களின் பக்கம் சென்று விடக்கூடாது என்பதற்காக. சில இடங்களில் மழை நீர் வீணாகச் சென்று விடுகிறது என்றால் அணை கட்டி வீணாகச் செல்வதை பயனுள்ளதாக ஆக்கிவிடுகிறார்கள். அப்படி எண்ணத்தின் சக்தி எது வீணானவைகளில் சென்று விடுகிறதோ அவற்றை சேவையில் பிஸியாக வைத்தீர்கள் என்றால் வீணானவைக்குப்

பதிலாக சக்திசாலியாக ஆகிவிடும். எண்ணம், சொல், காரியம் மற்றும் ஞானத்தின் சக்திகள் எதுவுமே வீணாகச் செல்லக்கூடாது. எனவே அந்த மாதிரி ஒவ்வொரு எண்ணம், சொல், செயல் மற்றும் அனைத்து சக்திகளை சிக்கனப்படுத்துபவர்கள் தான் நீங்கள் இல்லையா? பொதுவாகவே குடும்பத்தில் கூட ஒருவேளை சிக்கனமானவர்களின் வீடாக இல்லை என்றால் அதுவும் நல்ல முறையில் நடக்க முடியாது. அதே போல் ஒருவேளை பொறுப்பாளர் ஆகியிருக்கும் குழந்தைகள் சிக்கனமானவர்களாக இல்லை என்றால் சென்டரும் சரியாக நடக்காது. அது எல்லைக்குட்பட்ட குடும்பம், இது எல்லைக்கப்பாற்பட்ட குடும்பம். எனவே அதிகப்படியான செலவாக எண்ணத்தில், வார்த்தையில், சக்திகளில் என்னென்ன செய்தோம் என்று சோதனைசெய்ய வேண்டும். பிறகு அதை மாற்ற வேண்டும். நுணுக்கமான முயற்சி என்பது அனைத்து பொக்கிஷங்களின் சிக்கனமான பட்ஜட்டை தயாரிப்பது, மேலும் அதன் அனுசாரம் நடந்து கொள்வது. பட்ஜட்டைத் தயாரிக்கத் தெரியும் இல்லையா? எப்படி ஸ்தூல பொக்கிஷங்களின் வரவு செலவை எழுதுகிறீர்கள் அதே போல் இந்த சூட்சும வரவு செலவு கணக்கையும் எழுதுங்கள். பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்கள், தியாகம் செய்திருக்கிறீர்கள் அதற்கான பிரத்யக்ஷ பலனாக சென்டர் கிடைத்தது. மாணவர்கள் கிடைத்தார்கள், இப்பொழுது இன்னும் முன்னேறிச் செல்லுங்கள். எவ்வளவு செய்தீர்களோ அந்த அளவு கிடைத்தது இப்பொழுது பிரஜைகளும் பக்தர்களும் உங்களுடைய சரணை வந்தடைவார்கள். இப்பொழுது இந்த பிரத்யக்ஷ பலனை காண்பியுங்கள். தந்தைக்குச் சமமாக பட்டமும் கிடைத்து விட்டது, இயற்கையும் அவரவர்களின் சக்திக்கு ஏற்றபடி தாசியாக ஆகிக் கொண்டே இருக்கிறது. இப்பொழுது இதில் இன்னும் முன்னேறிச் செல்லுங்கள். இந்த பிரத்யக்ஷ பலன் அவசியம் கிடைக்கிறது. ஆனால் இதை சுவீகாரம் செய்யாதீர்கள். இப்பொழுது எண்ண அளவில் கூட சேவாதாரி ஆகுங்கள். வார்த்தைகளின் சேவையையோ ஏழு நாள் பாடம் எடுப்பவர்களும் செய்கிறார்கள். உடலால் செய்யும் சேவையையும் அனைவரும் செய்கிறார்கள். ஆனால் உங்களுடைய விசேஷ சேவை மனதால் செய்யும் சேவை. இந்த விசேஷத்தைக் கடைபிடித்து விசேஷ வரிசை எண்ணை எடுத்துக் கொள்ளுங்கள். அனைவரும் திருப்தியாகத்தான் இருக்கிறீர்கள் மேலும் திருப்தியாகவும் இருக்க வேண்டும். எங்கு என்ன டைரக்ஷ்ன் கிடைத்தாலும் அதன் பிரகாரம் நடக்க வேண்டும். இதுவும் அனேகர்களுக்கு பாடம் கற்பிப்பதற்கு பொறுப்பாளர் ஆகிவிடுகிறீர்கள். வாயினால் கற்பிப்பவராக இன்றி நடைமுறை பாடம் கற்பிப்பவர் நீங்கள். நன்றாகவோ உயரே தாண்டுதல் செய்திருக்கிறீர்கள். இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? தாண்டுவதின் அடுத்த நிலை பறப்பதற்கானது. எப்பொழுதும் அவ்யக்த வதனத்தில் உடல் அற்றவராகி உடலற்ற நிலையில் நிலைத்திருந்து பறந்து கொண்ட

இருங்கள். அசரீரி நிலையில் பறந்து கொண்டே இருங்கள். நல்லது.

வரதானம்:

உயர்ந்த முயற்சி மூலமாக இறுதி முடிவில் முதல் எண் பெறக்கூடிய பறக்கும் பறவை ஆகுக.

இறுதி முடிவில் முதல் எண் பெறுவதற்காக - 1) இதயப்பூர்வமான அழியாத வைராக்கியம் மூலமாக கடந்த கால விஷயங்களை, சம்ஸ்காரம் என்ற விதையை எரித்து விடுங்கள் 2) அமிர்தவேளையிலிருந்து இரவு வரை ஈஸ்வரிய நியமங்கள் மற்றும் மரியாதைகளை எப்பொழுதும் கடைபிடிக்க வேண்டும் என்ற விரதம் எடுங்கள் மற்றும் 3) மனதின் எண்ணங்கள் மூலமாக, வார்த்தைகள் மூலமாக மற்றும் உறவு தொடர்பு மூலமாக நிரந்தரமாக மகாதானி ஆகி, புண்ணிய ஆத்மா ஆகி தானம் புண்ணியம் செய்து கொண்டே இருங்கள். எப்பொழுது அந்த மாதிரி உயர்ந்த உயரே தாண்டுதல் செய்யும் முயற்சியாக இருக்குமோ அப்பொழுது பறக்கும் பறவையாகி இறுதி முடிவில் முதல் எண்ணில் வருபவராக ஆகிவிடுவீர்கள்.

சுலோகன்:

உள்ளுணர்வு மூலமாக வாயுமண்டலத்தை சக்திசாலியாக ஆக்குவது தான் இறுதி நேரத்தில் செய்யும் முயற்சி மற்றும் சேவை ஆகும்.

ஓம் சாந்தி

24.12.1979 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" உலகை ஒளிமயமாக்குபவர்களின் கூட்டம் "

இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார், ஏனென்றால் ஒவ்வொரு குழந்தையும் எவ்வளவு உயர்ந்த ஆத்மா என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார். ஒவ்வொரு குழந்தையும் உலகின் கண்மணி ஆவார். பாப்தாதாவிற்கும் கண்களின் நட்சத்திரங்களாக இருக்கிறார்கள். குழந்தைகளை கண்களில் அமர வைத்து தான் நடந்து கொள்கிறார். அதாவது கண்களில் நிரம்பியிருக்கிறார்கள். கண்களின் மகிமையாக மிக அதிகமாக வர்ணனை இருக்கிறது. ஒருவேளை கண் இல்லை என்றால் மனித வாழ்க்கையைப் பொருத்தளவில் உலகமே இல்லை. எப்படி உடலில் கண்களுக்கு மகத்துவம் இருக்கிறது. அதே போல் நீங்கள் ஒவ்வொரு குழந்தைகளும் உலகின் கண்மணி ஆவீர்கள். உலகின் கண்மணியான நீங்கள் இன்றியும் உலகிற்கு எந்த மதிப்பும் இல்லை. உலகின் கண்மணிகள் நீங்கள் இந்த நிலையில் நிலைத்திருக்கிறீர்கள் என்றால் உலகமும் சுகம் நிறைந்ததாக ஆகிவிடுகிறது, உயர்ந்ததாக ஆகிவிடுகிறது. மேலும் உலகின் கண்மணிகள் தங்களுடைய உயர்ந்த நிலையிலிருந்து கீழே வந்து விடுகிறார்கள் என்றால், உலகமும் ஒரு சாரமற்ற உலகாக ஆகிவிடுகிறது. இந்த அளவு உங்கள் அனைவர் மீதும் ஆதாரமாக இருக்கிறது. எப்படி நீங்கள் எழுந்தீர்கள் என்றால் உலகம் எழுந்தது, நீங்கள் தூங்கினீர்கள் என்றால் உலகம் தூங்கியது என்ற பழமொழி இருக்கிறது. அந்த மாதிரி உலகின் ஆதாரமானவர்கள் நீங்கள். உங்களின் முன்னேறும் கலையோடு அனைவரின் முன்னேற்றத்தின் சம்மந்தம் இருக்கிறது. உங்களுடைய இறங்கும் கலையோடு உலகின் இறங்கும் கலைக்கு சம்மந்தம் இருக்கிறது. இந்த அளவு பொறுப்பு உங்கள் ஒவ்வொருவரின் மீதும் இருக்கிறது. அந்த மாதிரி புரிந்து நடந்து கொள்கிறீர்களா? அந்த மாதிரி நினைவு இருக்கிறதா? பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் அவர்களின் தற்சமயத்து நிலைமையைப் பார்க்கிறார். ஒவ்வொருவரும் உலகின் ஒளியாக எவ்வளவு உலகை ஒளிமயமாக்கி கொண்டிருக்கிறார்கள். கண்களைத் தான் வாழ்க்கையின் ஜோதி என்று சொல்வார்கள். நீங்கள் அனைவரும் உலகின் ஜோதி ஆவீர்கள். ஒருவேளை உலகின் ஜோதி அவர்களே மிகவும் ஆடிக்கொண்டே இருக்கிறார்கள் என்றால் உலகிற்கு என்ன நிலைமை ஏற்படும்? இங்கேயும் இந்த எல்லைக்குட்பட்ட லைட்

எரியவில்லை அல்லது அணைந்து அணைந்து எரிகிறது என்றால் என்ன உணருகிறீர்கள். அந்த நேரம் நன்றாக அனுபவம் செய்வீர்களா? அதே போலவேஉலகின் ஜோதியானநீங்கள் மேலே கீழே ஆட்டத்தில் வருகிறீர்கள் என்றால் உலகின் ஆத்மாக்களுக்கு என்ன நிலைமை ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்?

உலகின் நட்சத்திரம் மற்றும் உலகின் ஒளியாகிய உங்கள் அனைவரின் மேலும் அனைவரின் பார்வை இருக்கிறது. அனைவரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த விஷயத்திற்காக? பக்தி மார்க்கத்தில் ஒரு சங்கரைப் பற்றி அவர் கண்ணைத் திறந்தார் உடன் மாற்றம் (அழிவு) ஆகிவிட்டது என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்த மகிமைக்குரியவர்கள் சிவவம்சி உலகின் ஒளியான உங்களுடையதாகும். இந்த உலகின் கண்களான நீங்கள் எப்பொழுது உங்களின் சம்பூர்ண நிலை வரை சென்றடைவீர்களோ அதாவது சம்பூர்ண நிலை என்ற கண் திறக்குமானால் ஒரு நொடியில் மாற்றம் ஏற்பட்டு ஆகிவிடும். அப்படி உலகின் ஒளியானவர்களே ! சம்பூர்ண நிலையின் கண் எப்பொழுது திறக்கும் என்று கூறுங்கள். கண்களோ இப்பொழுதும் திறந்து தான் இருக்கிறது. ஆனால் இடையிடையே மாயாவின் தூசி விழுந்து விடுகிறது. எனவே கண்கள் அசைந்து கொண்டே இருக்கின்றன. எப்படி ஸ்தூல கண்களிலும் தூசி விழுந்துவிட்டால் கண்களின் நிலைமை என்ன ஆகிவிடுகிறது? ஒருநிலையான திருஷ்டியை அவர்களால் கொடுக்க முடியாது. முழு உலகமும் உலகின் கண்களான உங்களுடைய ஒரு நொடிக்கான திருஷ்டியைப் பெறுவதற்காக எப்பொழுது எங்களுடைய இஷ்ட தேவன் மற்றும் தேவியின் பார்வை என் மேல் விழும். அதனால் நான் பார்வையாலேயே நன்மை அடைந்து விட வேண்டும் என்ற காத்திருத்தலில் இருக்கிறார்கள். அந்த மாதிரி கண்களால் பார்வையாலேயே நன்மை செய்பவர் ஒருவேளை கண்ணைக் கசக்கிக் கொண்டே இருந்தார் என்றால் பார்வையாலேயே எப்படி நன்மை அடைவார்கள்? பார்வையால் நன்மை பெறுபவர்களின் க்யூ (வரிசையாக நிற்பது) மிக நீளமாக இருக்கிறது. எனவே எப்பொழுதும் சம்பூர்ண நிலையின் கண்கள் திறந்தே இருக்கட்டும். பாப்தாதா கண்களின் ஒளியானவர்களான உங்களின் அதிசயக் காட்சிகளைப் பார்க்கிறார். உலகின் கண்மணிகள் கூட தங்களுடைய கண்களை ஒரு ஒருமித்த நிலையில் வைக்க முடியவதில்லை. சிலர் பார்வையாலேயே நன்மை செய்து கொண்டே லேசாக தூங்கியும் விடுகிறார்கள். இப்பொழுது தூங்கி விழுபவர் எப்படி பார்வையாலேயே நன்மை செய்வார். எண்ணங்களினால் வருந்துவது தான் தூங்கி விழுவதாகும். உங்களுடைய பக்தர்கள் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் பிறகு தரிசனம் அளிப்பவர்கள் தூங்கி விழுந்து

கொண்டிருக்கிறார்கள். அப்படியானால் பக்தர்களின் கதி என்னவாகும். எனவே கண்களை கசக்குவது தூங்கிவிழுவது அனைத்தையும் முடிக்க வேண்டும். அப்பொழுது தான் காட்சியளிப்பவர் ஆக முடியும்.

உலகின் கண்கள் ஒரே சீராக இருக்கிறதா அல்லது மேலே கீழே ஆடுகிறதா என்று அமிர்தவேளையில் உலகின் கண்களை பாப்தாதா பார்க்கிறார். அனேக விதமான ரூபங்களை வடிவங்களைப் பார்க்கிறோம். அதையோ நீங்கள் அனைவரும் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? அதை வர்ணனையும் என்ன செய்வது. கடந்தது கடந்ததாகவே இருக்கட்டும். இப்பொழுதிலிருந்து தன்னுடைய மகத்துவத்தை தெரிந்து, செய்யும் காரியத்தை தெரிந்து எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஜோதி ஆகி இருங்கள். ஒரு நொடியில் சுயமாற்றத்தின் மூலமாக உலக மாற்றம் செய்ய முடியும். இந்த நேரம் கர்மயோகியாக, அடுத்த நேரம் கர்மாதீத் நிலையில் இருப்பவராக அந்த மாதிரி இதன் பயிற்சி செய்யுங்கள். எப்படி பழைய உலகத்தின் உதாரணம் கொடுக்கிறோம். உங்களுடைய படைப்பாகிய ஆமை ஒரு நொடியில் தனது அனைத்து அங்கங்களையும் உள்ளடக்கி விடுகிறது. படைப்பிலும் உள்ளடக்கும் சக்தி இருக்கிறது. நீங்கள் மாஸ்டர் படைப்பவர், உள்ளடக்கும் சக்தியின் ஆதாரத்தினால் ஒரு நொடியில் அனைத்து எண்ணங்களை உள்ளடக்கி ஒரு நொடியில் ஒரு எண்ணத்தில் நிலைத்திருக்க முடியுமா?

நாலாபுறங்களிலும் குழப்பமான சூழ்நிலைகள் இருந்த போதிலும் ஒரு நொடியில் ஆடாத அசையாதவராக ஆகி விட வேண்டும். முற்றுப்புள்ளி வைக்கத் தெரியுமா? முற்றுப்புள்ளி வைப்பதற்கு எவ்வளவு நேரம் எடுக்கிறது? முற்றுப்புள்ளி வைப்பது அந்த அளவு சுலபமானது, அதை ஒரு சிறு குழந்தை கூட வைக்க முடியும். கேள்விக்குறியைப் போட முடியாது. ஆனால் முற்றுப்புள்ளி வைக்க முடியும். அப்படி தற்சமயம் குழப்பம் அதிகரிக்கும் நேரம். ஆனால் இயற்கையின் குழப்பம் மேலும் இயற்கையின் தலைவன் ஆடாத அசையாதவராக ஆவது. இப்பொழுது இயற்கை கூட சிறு சிறு சோதனைகளைக் கொடுக்கிறது. ஆனால் இறுதி சோதனையில் ஐந்து தத்துவங்களின் மிக பயங்கரமான ரூபம் இருக்கும். ஒரு பக்கம் இயற்கையின் பயங்கரமான ரூபம், இன்னொரு பக்கம் ஐந்து தத்துவங்களும் முடிவடையும் காரணத்தினால் மிக பயங்கர கொடூர ரூபத்தில் இருக்கும். தன்னுடைய இறுதி போர் சோதனைக்குரியதாக இருக்கும். மூன்றாவது பக்கம் அனைத்து ஆத்மாக்களின் வகை வகையான ரூபம் இருக்கும். ஒரு பக்கம் நிலையில் தாழ்ந்த ஆத்மாக்களின் தாக்குதல், இன்னொரு பக்கம் பக்த ஆத்மாக்களின் வித விதமான

கூக்குரல் இருக்கும். நாலாவது பக்கம் என்ன இருக்கும்? பழைய சம்ஸ்காரம். இறுதி நேரத்தில் அது தன்னுடைய வாய்ப்பை எடுக்கும். ஒரு தடவை வந்து விட்டு பிறகு நிரந்தரமாக விடை பெற்றுச் செல்லும். சம்ஸ்காரத்தின் சொரூபமாக என்ன இருக்கும்? சிலரிடம் கர்மபோக் (செய்த பாவ கர்மங்களின் விளைவுகளை அனுபவித்தல்) லின் ரூபத்தில் வரும், சிலரிடம் கர்ம சம்மந்தத்தின் பந்தன ரூபத்தில் வரும். சிலரிடம் வீணான எண்ணத்தின் ரூபத்தில் வரும். சிலரிடம் விசேஷமாக அலட்சியம் மற்றும் சோம்பலின் ரூபத்தில் வரும். அந்த மாதிரி நாலாபுறங்களின் குழப்பமான சூழ்நிலை இருக்கும். இராஜ்ய சக்தி, தர்ம சக்தி, அறிவியல் சக்தி மேலும் அனேக விதமான உடல் பலம் இவை அனைத்தும் தன்னுடைய சக்திகளின் குழப்பத்தில் இருப்பார்கள். அந்த மாதிரி நேரத்தில் முற்றுப்புள்ளி வைக்க முடியுமா, அல்லது கேள்விக் குறி எதிரில் வருமா? என்ன ஆகும்? இந்த அளவு உள்ளடக்கும் சக்தியை அனுபவம் செய்கிறீர்களா? பார்த்தும் பார்க்காதீர்கள் கேட்டும் கேட்காதீர்கள். இயற்கையின் குழப்பத்தைப் பார்த்து இயற்கையின் தலைவனாகி இயற்கையை அமைதி படுத்துங்கள். தன்னுடைய முற்றுப்புள்ளி இடும் ரூபத்தினால் இயற்கையின் குழப்பத்தை நிறுத்துங்கள். தாழ்ந்த நிலையை உயர்ந்த நிலையில் மாற்றம் செய்யுங்கள். அந்த மாதிரி பயிற்சி இருக்கிறதா? அந்த மாதிரி நேரத்தை வரவழைத்துக் கொண்டிருககிறீர்கள் தான் இல்லையா?. உள்ளடக்கும் சக்தியை உங்களிடம் சேமித்து வையுங்கள். இதற்காக விசேஷ பயிற்சி வேண்டும். ஒரு நேரம் சாகாரி, அடுத்த நேரம் ஆகாரி, அதற்கடுத்த நேரம் நிராகாரி. இந்த மூன்று நிலைகளிலும் நிலைத்திருப்பது இந்த அளவு சுலபமாகிவிட வேண்டும், எப்படி சாகார ரூபத்தில் சுலபமாகவே நிலைத்திருந்து விடுகிறீர்கள். அதே போல் ஆகாரி மற்றும் நிராகாரி நிலை கூட என்னுடைய நிலை தான், அப்படி தன்னுடைய நிலையில் நிலைத்திருப்பது சுலபமாக இருக்க வேண்டும். எப்படி சாகார ரூபத்தில் ஒரு ஆடையை மாற்றம் செய்து இன்னொரு ஆடையை அணிகிறீர்கள். அந்த மாதிரி இந்த சொரூபத்தின் நிலையை மாற்ற முடிய வேண்டும். சாகார சொரூபத்தின் நினைவை விட்டு விட்டு ஆகாரி ஃபரிஷ்தா சொரூபமானவர் ஆகி விடுங்கள். பிறகு ஃபரிஷ்தா நிலையின் ஆடையை ஒரு நொடியில் அணிந்து கொள்ளுங்கள். ஆடையை மாற்றத் தெரியாதா? இந்த மாதிரியான வெகுகாலத்தின் பயிற்சி தேவையாக இருக்கிறது. அப்பொழுது தான் அந்த நேரம் தேர்ச்சி அடைய முடியும். புரிந்ததா? நேரத்தின் வேகம் எவ்வளவு தீவிரமான ரூபத்தை எடுக்க போகிறது என்று தெரிந்து கொண்டீர்களா? அந்த மாதிரி நேரத்திற்காக எவரெடியாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? அல்லது தேதி கூறினோம் என்றால் தான் தயார் ஆவீர்களா? தேதி தெரிந்து விடுவதினால் ஆத்ம உணர்வில் இருப்பதற்குப் பதிலாக தேதியின் உணர்வில் இருப்பவர் ஆகிவிடுவீர்கள். பிறகு முழுமையாக தேர்ச்சி அடைய

முடியாது. எனவே தேதி அறிவிக்கப் படுவதில்லை ஆனால் தேதி தானாக அதுவே உங்கள் அனைவரின் புத்தியைத் தொடும். எப்படி இந்தக் கண்களின் எதிரில் ஏதோ ஒரு காட்சியை எவ்வளவு தெளிவாக தென்படுகின்றன என்று பார்க்கிறீர்களோ, அதே போல் அனுபவம் ஆகும். அந்த மாதிரி முன்பாகவே எதிர்காலத்து தெளிவான ரூபத்தை அனுபவம் செய்வீர்கள். ஆனால் இதற்காக உலகின் ஜோதிகளின் கண்கள் எப்பொழுதும் திறந்திருக்க வேண்டும். ஒருவேளை மாயாவின் தூசி இருந்தது என்றால் தெளிவாகப் பார்க்க முடியாது. என்ன பயிற்சி செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? ஆடையை மாற்ற வேண்டும் என்ற பயிற்சி செய்ய வேண்டும்.

இன்று மதுபன்னில் மூன்று நதிகளின் சங்கமம் ஆகும். டெல்லி, உ.பி. மற்றும் வெளிநாடு. திரிவேணி சங்கமம் ஆகும். இன்று கடல் கங்கையில் குளிப்பதற்காக வந்திருக்கிறார். தந்தையோ கங்கைகளைத் தான் முன்னுக்கு வைப்பார். மூன்று நதிகளுமே அவரவர்களின் வேகத்தோடு தூய்மையாக்கும் சேவையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரின் மகிமை ஒருவர் இன்னொருவரை விட மகான் ஆகும். ஏனென்றால் வெளிநாட்டிலிருந்து சப்தம் எழ வேண்டும். டெல்லியில் தலைநகரம் உருவாக வேண்டும் மற்றும் உ.பி-யில் நினைவுச் சின்னம் உருவாக வேண்டும். அப்படி மூன்றின் மகத்துவமும் அவரவர்களுடையது உயர்ந்தது தான் இல்லையா? வெளிநாட்டில் இருந்து எழும் சப்தம் இப்பொழுது தொடங்கப்போகிறது. மேலும் டெல்லியின் பழைய ஆசனம் இப்பொழுது அசையப் போகிறது. மேலும் உ.பி-யின் பக்தர்கள் அனைவரும் தன்னுடைய இஷ்ட தேவர்களை தேடி பக்தியின் பலனைப் பெறுவதற்காக துடித்துக் கொண்டிருக்கிறார்கள். பக்தர்களும் தன்னுடைய இஷ்ட தேவர்களோடு சந்திப்பதற்காக தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது மாஸ்டர் பகவான் நீங்கள் தயாராகி விட்டீர்கள் என்றால் தரிசனத்திற்கான திரைச்சீலையை அகற்றலாம். தரிசனத்திற்கான திரைச்சீலை, நேரமாகும். இப்பொழுது மூவருமே தங்களுடைய காரியத்தின் வளர்ச்சியில் அதிவேகத்தைக் கொண்டு வாருங்கள். அவர்கள் (வெளிநாட்டினர்) சப்தத்தை விரைவில் அனைவரிடமும் சென்றடையச் செய்யட்டும், அவர்கள் (டெல்லி) தலைநகரத்தில் விரைவில் தயார் செய்யட்டும். மேலும் இவர்கள் (உ.பி) பக்தர்களின் தாகத்தை விரைவில் தீர்க்கட்டும். அப்பொழுது வெற்றி முழக்கம் ஏற்படும். மூன்று நதிகளும் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? வெளிநாட்டினருக்கு உடனே செய்ய வேண்டும். வெளிநாட்டினர் முயற்சி நன்றாக செய்திருக்கிறார்கள். நகைகளையோ தயார் செய்து விட்டார்கள். இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? இப்பொழுது நகைகளில் இடையில்

வைரத்தை (ஹீரா) பதிக்க வேண்டும். ஹீரோ (கதாநாயகன்) மற்றும் ஹீரோயின் (கதாநாயகி) பங்கைச் செய்பவர்கள் நீங்கள். நல்லது. உ.பி என்ன செய்யும்? எப்படி உ.பி-யில் தெருத் தெருவாக கோவில் இருக்கிறது, அதே போல் தெருத் தெருவாக சேவை நிலையங்கள் இருக்க வேண்டும். அப்பொழுது தான் பக்தி மற்றும் ஞானத்தின் மோதல் இருக்கும். பக்தி ஞானத்தின் எதிரே நமஸ்காரம் செய்யும். டெல்லி என்ன செய்யும்? யமுனை நதிக்கரையில் இப்பொழுது இராஜயோகமாளிகை உருவாக்குவீர்கள் அப்பொழுது தான் யமுனை நதிக்கரையில் பின்பு மாளிகை (மெஹல்) உருவாகும். இப்பொழுது இராஜயோக ப்ளேஸ் (இடம்) உருவாக்குங்கள், பின்பு பேளஸ் (மாளிகை) உருவாகும். அஸ்திவாரத்தையோ இப்பொழுது போடவேண்டும் இல்லையா? இப்பொழுது இராஜயோக பவனம் உருவாகும். உ.பி-க்கு தர்ம யுத்தத்தின் காட்சிகளைக் காண்பிக்க வேண்டும். ஏற்கனவே கூறியிருக்கிறோம் இல்லையா, இப்பொழுதோ தர்மத்தலைவர்கள் யார் கண்களை உயரே வைத்து எதிர்நோக்குகிறார்களோ அவர்கள், இப்பொழுது கண்களை கீழே தாழ்த்தி இருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது தலைவணங்க வேண்டும். இப்பொழுது உங்களுடைய மேடையில் வருகிறார்கள். ஆனால் அவர்களுடைய மேடையில் உங்களை தலைமை விருந்தினராக அழைக்க வேண்டும். அப்பொழுது தான் தலை வணங்கினார் என்று சொல்வோம். நல்லது.

பாப்தாதாவின் அனைத்து எண்ணங்களை நிறைவேற்றக்கூடிய, சிரேஷ்ட நல்விருப்பங்களின் தீபங்களுக்கு, எப்பொழுதும் முற்றுப்புள்ளி இடக்கூடிய, எப்பொழுதும் தயாராக இருப்பவராக நீண்ட காலத்து பயிற்சி உடைய, சுயமாற்றம் மூலம் உலகமாற்றம் செய்யக்கூடிய, திரிவேணி நதிகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் :

ஞானம் நிறைந்த ஆத்மாக்களின் விசேஷ கடமை பக்தி இடங்களை ஞான இடமாக ஆக்குவது

அனைத்து ஆத்மாக்களுக்கும் தந்தையின் ஞானத்தை தவிர வேறு என்னென்ன ஞானம் இருக்கிறதோ அவை சாரமற்றவை என்கிற இந்த அனுபவத்தை செய்விக்கிறீர்களா? நாம்

என்ன செய்கிறோம் மற்றும் என்ன அடைந்து (பிராப்தி) கொண்டிருக்கிறோம் என்பதை அனுபவம் செய்ய வேண்டும். நாம் கேட்பவர்கள் அவர்கள் சொல்பவர்கள், அவர்கள் அலைபவர்கள் மற்றும் நாம் அடைபவர்கள். எப்பொழுது இந்த மாதிரி அனுபவம் செய்கிறார்களோ அப்பொழுது தான் வெற்றி முழக்கம் ஏற்படும். எந்த அளவு சேவைக்காக பொறுப்பாளர் ஆகியிருக்கும் உயர்ந்த ஆத்மாக்கள் நீங்கள் அனைத்து அனுபவங்களின் ரசனையில் இருப்பீர்களோ அந்த அளவு அவர்கள் தன்னை ரசனையற்ற நிலையில் அனுபவம் செய்வார்கள். அப்படியானால் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். இப்பொழுது அவர்களுக்கு இவர்கள் வெண்ணெய் அருந்துபவர்கள், மேலும் நாங்கள் அனைவரும் மோர் குடிப்பவர்கள் என்று அந்த மாதிரி எண்ணம் வருகிறதா?

எப்படி ஒவ்வொரு தெருவிலும் கோவிலுக்குப் பதிலாக இராஜயோக நிலையம் இருக்க வேண்டும், அனுபவத்தின் நிலையம் இருக்க வேண்டும் என்று ஏற்கனவே கூறியிருந்தோம். பக்தியின் இடத்தை ஞான இடமாக ஆக்குவது என்ற இது தான் ஞானம் நிறைந்த ஆத்மாக்கள் செய்ய வேண்டிய விசேஷ காரியம் ஆகும். அப்படி ஞான ஸ்தானம் எப்பொழுது உருவாகும்? எப்பொழுது பக்தி மேல் வைராக்கியம் வந்து விடுகிறது என்றால், அப்பொழுது தான் ஞானத்தின் விதை போடப்படும். அந்த மாதிரி உங்களுடைய மனசேவை மூலமாகவும் அந்த மாதிரி சூழ்நிலையை உருவாக்குங்கள் அதன் மூலம் பக்தியில் ஒன்றுமே கிடைக்கவில்லை என்று அவர்கள் அனுபவம் செய்யட்டும். அந்த மாதிரி விலகியவராக ஆகிவிட்டார் என்றால் பிறகு ஞானத்தின் விதை சுலபமாக விழுந்து விடும். இதற்காக என்ன வழியை கடைபிடிக்க வேண்டும்? இதற்காக யார் பெயர் புகழ் பெற்றவராக இருக்கிறாரோ, அதிலேயும் யார் மிக அன்பான ஆத்மாக்களாக இருப்பார்களோ, ஒருவர் சுயநலம் உள்ளவர், இன்னொருவர் அன்பு நிறைந்தவர். அன்பு நிறைந்த ஆத்மாக்களை அருகில் கொண்டு வந்து கொண்டே இருங்கள். அடிக்கடி அன்பு சந்திப்பு என்ற தொடர்பினால் அவர்களை அருகில் கொண்டு வந்தீர்கள் என்றால், அவர்கள் மூலமாக அனேகர்களுக்கு நன்மை ஏற்படும். முதலில் உங்களுக்கு கொஞ்சம் கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கும். பிறகு அவர்கள் தாமாகவே தங்களுடைய கூட்டத்தை அதிகரித்துக் கொண்டே செல்வார்கள். எப்படி வெளிநாட்டிலிருந்து பிரத்யக்ஷதாவின் ஓசை வெளியாகும், அதே போல் தர்ம ஸ்தானங்களிலிருந்து பக்தி இருந்த போதிலும் இன்னும் வேறு ஏதோ வேண்டியதாக இருக்கிறது என்று வெளியாக வேண்டும். பக்தியில் என்ன விருப்பம் இருந்ததோ அது நிறைவேறுவதில்லை - ஏன்? இந்தக் கேள்வி எழுந்தது என்றால், இந்தக் கேள்வியே பிரத்யக்ஷம் செய்யும். எப்படி

இப்பொழுது இறுதியில் மதங்களின் சண்டை சச்சரவு ஏன் நடந்து கொண்டே இருக்கிறது, துண்டு துண்டாக ஏன் ஆகிக் கொண்டிருக்கிறார்கள்? என்ற இந்தக் குழப்பமும் தர்ம தலைவர்களிடமும் இருக்கிறது. மனதில் இந்தக் குழப்பமும் இருக்கிறது. ஆனால் இந்தக் குழப்பத்திற்கான புகலிடம் என்ன என்று தெரிய வேண்டும் அது இன்னும் நடக்கவில்லை. நாம் என்ன செய்ய வேண்டுமோ அது நடைபெறுவதில்லை என்று இதை நினைக்கிறார்கள். ஆனால் இது தான் நடக்க வேண்டும் என்று அந்த மாதிரி வார்த்தைகள் எழுவதில்லை. பக்தியின் பலன் ஏன் கிடைப்பதில்லை? பக்தியில் என்ன இருக்க வேண்டுமோ அது ஏன் இருப்பதில்லை? எப்பொழுது இந்த மாதிரி கேள்விகள் எழுமோ அப்பொழுது அருகில் வருவார்கள் மற்றும் தேடுவார்கள்.

பக்தர்கள் மேல் கருணை வருகிறதா? பக்தர்களோ வெகுளிகள் தான் இல்லையா. வெகுளியானவர்கள் மேல் அவசியம் கருணை வரும். இப்பொழுது அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து இந்த வெகுளியானவர்களுக்கு அவசியம் புகலிடத்தைக் காண்பிக்க வேண்டும் என்ற உறுதியான எண்ணத்தை வையுங்கள். அப்பொழுது தான் நம்பர் ஒன் ஆக முடியும்.

(வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்) அனைத்து கிஸ்மிஸ் மாதிரியான இனிமையிலும் இனிமையான குழந்தைகளுக்கு புதிய வருடத்தின் புதிய ஊக்கம் மற்றும் புதிய குஷியின் அலைகள் நிரம்பிய குஷியான வாழ்த்துக்கள் உரித்தாகுக ! முழு வருடமும் அந்த மாதிரி எப்பொழுதும் துணையின் அனுபவம் செய்வீர்கள். இந்த கிறிஸ்துமஸின் நாள் நிரந்தரமாக தந்தையுடன் இணைந்திருப்பதற்கான வரதானத்தைப் பெற்று வந்திருக்கிறது. இணைந்தவர் ஆகுக ! எப்படி இன்றைய தினத்தில் இரண்டிரண்டு பேராக சேர்ந்து நடனம் ஆடுகிறீர்கள் இல்லையா?. அதே போல் முழு வருடமும் தந்தை மற்றும் நீங்கள் குஷியில் நடனம் ஆடிக்கொண்டே இருப்போம். அனைத்து சக்திகளின் பாக்கெட்டை பாப்தாதா பரிசாகக் கொடுக்கிறார். மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகி எப்பொழுதும் மாயாவை வென்றவராக இருப்பதற்கான மிகப் பெரிய பரிசு ஆகும். நல்லது.

வரதானம் (ஆசீர்வாதம்) -

ஞானம் நிறைந்த நிலை மூலமாக சூழ்நிலைகளைக் கடந்து செல்லக்கூடிய அங்கதனுக்குச் சமமாக ஆடாத அசையாதவர் ஆகுக.

இராவண இராஜ்ஜியத்தின் எந்தவொரு சூழ்நிலை மற்றும் நபர் கொஞ்சம் கூட எண்ண ரூபத்திலும் அசைக்க முடியாது. அந்த மாதிரி ஆடாத அசையாதவர் ஆகுக என்ற வரதானத்தை பெற்றவர் ஆகுங்கள். ஏனென்றால் எந்தவொரு தடையும் கீழே தள்ளுவதற்காக அன்றி, உறுதியாக ஆக்குவதற்காக வருகிறது. ஞானம் நிறைந்தவர் ஒருபொழுதும் கேள்வித்தாளைப் பார்த்து குழப்பம் அடையமாட்டார். மாயா எந்த ரூபத்திலும் வர முடியும். ஆனால் நீங்கள் யோக அக்னியை நன்றாகக் கொழுந்து விட்டெரிய வையுங்கள், ஞானம் நிறைந்த நிலையில் இருந்தீர்கள் என்றால் அப்பொழுது தடை இயல்பாகவே முடிந்து விடும். மேலும் நீங்கள் ஆடாத அசையாத நிலையில் நிலைத்திருப்பீர்கள்.

சுலோகன் -

சுத்த எண்ணத்தின் பொக்கிஷம் சேமிப்பாக இருக்கிறது என்றால் வீணான எண்ணங்களில் நேரம் செல்லாது.

ஓம் சாந்தி

26.12.1979 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" இராஜயோகி என்றால் மூன்று நினைவு சொரூபமானவர் "

பாப்தாதா இன்று திலகமிட்டிருக்கும் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொருவரின் நெற்றியிலும் இராஜயோகி அதாவது 'நினைவு இருப்பவர்களாகுக' என்ற திலகம் மற்றும் கூடவே உலக இராஜ்ய அதிகாரியின் இராஜதிலகம் அப்படி இரண்டு திலகங்களையும் பார்த்துக் கொண்டிருந்தோம். நீங்கள் அனைவரும் தங்களுடைய இரண்டு திலகங்களையும் எப்பொழுதும் பார்த்துக் கொண்டே இருக்கிறீர்களா? பாப்தாதா அனைவரின் நெற்றியில் விசேஷமாக இராஜயோகியின் திலகத்தின் விசேஷத்தை பார்த்துக் கொண்டிருந்தோம். விசேஷத்தை பார்த்துக் கொண்டே உள்ளே என்ன பார்த்தோம்? சில இராஜயோகிகளின் நெற்றியில் மூன்று புள்ளிகளின் திலகம் இருந்தது. சிலரின் நெற்றியில் இரண்டு புள்ளிகளின் திலகம் இருந்தது. மேலும் சிலரில் ஒரு புள்ளியின் திலகம் இருந்தது. உண்மையில் ஞானம் நிறைந்த தந்தை மூலமாக விசேஷமாக மூன்று நினைவுகளுக்கான மூன்று புள்ளிகளின் ரூபத்தில் திலகம் இடப்பட்டிருக்கிறது. அந்த மூன்று நினைவுகளை திரிசூலத்தின் ரூபத்தில் நினைவுச் சின்னமாக ஆக்கியிருக்கிறார்கள்.

இந்த மூன்று நினைவுகள் - ஒன்று தன்னுடைய நினைவு, இரண்டு தந்தையின் நினைவு, மூன்றாவது (வாழ்க்கை) நாடகத்தின் ஞானத்தின் நினைவு. இந்த விசேஷமான மூன்று நினைவுகளில் முழு ஞானத்தின் விஸ்தாரம் அடங்கியிருக்கிறது. ஞானத்தின் விருட்சத்தின் இது மூன்று நினைவுகளாகும். எப்படி விருட்சத்திற்கு முதலில் விதை இருக்கும், அந்த விதை மூலமாக முதலில் இரண்டு இலைகள் வெளிப்படும், பிறகு விருட்சத்தின் விஸ்தாரம் ஆகும். அப்படி முக்கியமானது விதையான தந்தையின் நினைவு. பிறகு இரண்டு இலைகள் என்றால் ஆத்மாவின் முழு ஞானம் மற்றும் நாடகத்தின் தெளிவான ஞானம் என்ற இந்த இரண்டு விசேஷ நினைவுகளாகும். இந்த மூன்று நினைவுகளை தாரணை செய்பவர்கள் 'நினைவு சொரூபமானவர் ஆகுக' என்பதின் வரம் பெற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள். இந்த மூன்று நினைவுகளின் ஆதாரத்தில்

மாயாவை வென்றவர், உலகை வென்றவர் ஆகிவிடுகிறார். சங்கமயுகத்தில் இந்த மூன்று நினைவுகளின் விசேஷம் இருக்கிறது. எனவே இராஜயோகியின் திலகம் மூன்று நினைவுகளின் அதாவது மூன்று புள்ளிகளின் ரூபத்தில் ஒவ்வொருவரின் நெற்றியில் ஜொலித்துக் கொண்டிருக்கிறது. எப்படி திரிசூலத்தில் ஒருவேளை ஒருபகுதி உடைந்து விட்டது என்றால் அதை சரியான ஆயுதம் என்று கூறமுடியாது.

சம்பூர்ண வெற்றிக்கான அடையாளம் - மூன்று புள்ளி அதாவது மூன்று நினைவு சொரூபம். ஆனால் என்ன ஆகிறது? ஒரே நேரத்தில் மூன்று நினைவுகளும் சேர்ந்தே மற்றும் தெளிவாக இருக்க வேண்டும் இதில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. சில நேரம் ஒரு நினைவு இருக்கிறது, சில நேரம் இரண்டு மற்றும் சில நேரம் மூன்று, எனவே சிலரை இரண்டு புள்ளிகளின் திலகமிட்டவர்களாகப் பார்த்தோம், மேலும் சிலரை ஒரு புள்ளியின் திலகமிட்டவர்களாகப் பார்த்தோம். மிக நல்ல நல்ல குழந்தைகளையும் பார்த்தோம், யார் நிரந்தரமாக மூன்று நினைவுகளின் திலகமிட்டவர்களாகவும் இருக்கிறார்கள், அழிக்க முடியாத திலகமிட்டவர்களாகவும் இருக்கிறார்கள். அதாவது அந்த திலகத்தை யாரும் அழிக்க முடியாது. எப்பொழுது நினைவு சொரூபமாக ஆகிவிடுகிறீர்கள் என்றால் அழிக்க முடியாத திலகமிட்டவராக ஆகி விடுகிறீர்கள். இல்லை என்றால் அடிக்கடி திலகம் இட வேண்டியதாக இருக்கும். இந்த நேரம் அழிகிறது, பிறகு அடுத்த நேரம் இடப்படுகிறது. ஆனால் சங்கமயுகத்து இராஜயோகிகளோநிரந்தர அழியாத திலகமிட்டவராக இருக்க வேண்டும். மாயா அழியாததை அழியக்கூடியதாக ஆக்க முடியக்கூடாது. தினசரி அமிர்தவேளையில் இந்த மூன்று நினைவுகளின் அழியாத திலகத்தை சோதனைசெய்தீர்கள் என்றால் மாயா முழு நாளிலும் அழிப்பதற்கான தைரியம் வைக்க முடியாது. மூன்று நினைவு சொரூபம் என்றால் அனைத்து சக்தி நிறைந்த சொரூபம் இது சக்திசாலியாக இருப்பதற்கான திலகம் ஆகும். சக்திசாலியானவரின் எதிரில் மாயாவின் வீணான ரூபம் அழிந்து விடும். மாயாவின் ஐந்து ரூபங்கள் ஐந்து தாசிகளின் ரூபத்தில் ஆகிவிடும். பரிவர்த்தனை ரூபம் தென்படும்.

காமவிகாரம் சுபகாமனா (நல்விருப்பங்கள்) -ன் ரூபத்தில் உங்களுக்கு முயற்சி செய்வதில் சகயோகி ரூபம் ஆகிவிடும். காமத்தின் ரூபத்தில் தாக்கக்கூடியவர் சுபவிருப்பங்களின் ரூபத்தில் உலக சேவாதாரி ரூபமாக ஆகிவிடுவார். எதிரிக்குப் பதிலாக நண்பன் ஆகிவிடுவார். கோப அக்னியின் ரூபத்தில் யார் ஈஸ்வரிய செல்வத்தை எரித்துக் கொண்டிருக்கிறாரோ, ஆவேசத்தின் ரூபத்தில் அனைவரையும் உணர்விழக்க வைத்துக்

கொண்டிருக்கிறாரோ அந்த கோபவிகாரம் மாற்றுதல் அடைந்து ஆன்மீக ஆவேசம் மற்றும் ஆன்மீக போதையின் ரூபத்தில் உணர்விழந்தவரையும் உணர்வில் கொண்டு வரக்கூடியவராக ஆகி விடுவார். கோபவிகாரம் சகித்துக் கொள்ளும் சக்தியின் ரூபத்தில் மாற்றமாகி உங்களின் ஒரு ஆயுதமாக ஆகிவிடும். எப்பொழுது கோபம் சகித்துக் கொள்ளும் சக்தியின் ஆயுதம் ஆகிவிடுகிறது என்றால், ஆயுதம் எப்பொழுதும் ஆயுதம் தரித்தவரின் சேவைக்காக இருக்கும். இதே கோப அக்னி யோக அக்னியின் ரூபத்தில் மாற்றமாகி விடும், அது உங்களை எரிக்காது. ஆனால் பாவங்களை எரிக்கும். இதே விதமாக பேராசை என்ற விகாரம் டிரஸ்டியின் ரூபத்தில் ஆசையற்ற உள்உணர்வின் சொரூபத்தில் விடுபட்ட நிலையின் சொரூபத்தில் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வின் ரூபத்தில் மாற்றமாகிவிடும். பேராசை அழிந்து விடும். மேலும் எப்பொழுதும் 'வேண்டும் வேண்டும்' என்பதற்குப் பதிலாக 'ஆசை என்றால் என்னவென்று தெரியாத நிலை' சொரூபத்தில் ஆகிவிடும். பேராசையை 'வேண்டும்' என்று கூற மாட்டீர்கள் ஆனால் 'போங்கள்' என்று கூறுவீர்கள். 'பெற வேண்டும், பெற வேண்டும்' என்றில்லாமல் கொடுக்க வேண்டும், கொடுக்க வேண்டும் என்பதில் மாறி விடும். இதே பேராசை ஆசையற்ற உள்உணர்வில் மற்றும் கொடுக்கக்கூடிய வள்ளலின் சொரூபத்தில் நினைவு சொரூபத்தில் மாற்றமாகி விடும். இதே விதமாக மோக (பற்றுதல்) விகாரம் தாக்குதல் செய்வதற்குப் பதிலாக அன்பின் சொரூபத்தில் தந்தையின் நினைவு மற்றும் சேவையில் முக்கியமான துணையாகி விடும். அன்பு 'நினைவு மற்றும் சேவையில்' வெற்றி அடைவதற்கான விசேஷ சாதனம் ஆகி விடும். அதே போலவேஅகங்காரம் என்ற விகாரம் தேக அபிமானத்தில் இருந்து மாற்றமடைந்து சுய அபிமானி ஆகி விடும். சுய அபிமானம் முன்னேறும் கலைக்கான சாதனமாகும் தேக அபிமானம் இறங்கும் கலைக்கான சாதனம் ஆகும். தேக அபிமானம் மாற்றமடைந்து சுய அபிமானத்தின் ரூபத்தில் நினைவு சொரூபம் ஆவதின் சாதனம் ஆகி விடும். இதே விதமாக இந்த விகாரம் அதாவது கொடூர ரூபம் உடையது உங்களுடைய சேவைக்கு சகயோகியாக உங்களுடைய உயர்ந்த சக்திகளின் சொரூபத்தில் மாற்றம் ஆகி விடும். அந்த மாதிரி மாற்றம் செய்வதின் சக்தியை அனுபவம் செய்கிறீர்களா? இந்த மூன்று நினைவுகளின் ஆதாரத்தில் இவை ஐந்தையும் மாற்றம் செய்ய முடியும். காமத்தின் ரூபத்தில் வந்தது சுபபாவனையாக ஆகிவிடட்டும், அப்பொழுது தான் மாயாவை வென்றவர், உலகை வென்றவர் என்ற பட்டம் கிடைக்கும். வெற்றி எதிரியின் ரூபத்தை அவசியம் மாற்றம் செய்கிறது. இராஜாவாக இருப்பவர் சாதாரண பிரஜையாக ஆகிவிடுவார். அப்பொழுது தான் வெற்றி என்று கூற முடியும். மந்திரியாக இருப்பவர் சாதாரண நபர் ஆகிவிடுவார், அப்பொழுது தானே வெற்றி என்று கூறமுடியும். யார் யார் மேல் வெற்றி

அடைகிறார்களோ அவரை கைதியாக்கி வைப்பார்கள் அதாவது அடிமையாக்கி வைப்பார்கள், இந்த மாதிரி நியமம் இருக்கிறது. நீங்களும் இந்த ஐந்து விகாரங்கள் மேல் வெற்றி அடைகிறீர்கள், நீங்கள் இவற்றை கைதியாக்கி வைக்காதீர்கள். கைதியாக்கினீர்கள் என்றால் பிறகு உள்ளுக்குள்ளேயே பொங்கி எழும். ஆனால் நீங்கள் இவற்றை மாற்றம் செய்து சகயோகி சொரூபம் ஆக்கி விடுங்கள். அப்பொழுது இவை உங்களை எப்பொழுதும் வணங்கிக் கொண்டே இருக்கும். உலகமாற்றத்திற்கு முன்பு சுயமாற்றம் செய்யுங்கள். சுயமாற்றம் மூலமாக உலக மாற்றம் சுலபமாகிவிடும். மாற்றம் செய்யும் சக்தியை எப்பொழுதும் உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள். பரிவர்த்தனை சக்தியின் மகத்துவம் மிகப் பெரியது. அமிர்தவேளையிலிருந்து இரவு வரை மாற்றும் சக்தியை எப்படி உபயோகிக்க வேண்டும் என்பதை பின்பு கூறுவோம்.

அந்த மாதிரி இராஜயோகிகளுக்கு, திலகம் இட்டிருப்பவர்களுக்கு, எதிர்காலத்து இராஜதிலகம் இடுபவர்களுக்கு, எப்பொழுதும் நெற்றியில் மூன்று நினைவு சொரூபத்தில் சக்திசாலியாக இருக்கக்கூடியவர்களுக்கு, மாயாவையும் உயர்ந்த சக்தியின் ரூபத்தில் சகயோகி ஆக்கக்கூடிய, அந்த மாதிரி மாயாவை வென்றவர் உலகை வென்றவர் என்று கூறப்படுபவர்களுக்கு, அனைத்து சக்திகளையும் ஆயுதம் ஆக்கக்கூடிய, எப்பொழுதும் ஆயுதம் தரித்த உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

ஒரே நேரத்தில் எண்ணம், சொல், செயலினால் சேவை செய்பவர் தான்
எல்லைக்கப்பாற்பட்ட சேவாதாரி டீச்சர்களுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு -

டீச்சர்கள் என்றால் தந்தைக்குச் சமமான நிரந்தர சேவாதாரி. ஒவ்வொரு எண்ணம் மற்றும் வார்த்தை மூலமாக அனேக ஆத்மாக்களின் சேவைக்கு பொறுப்பானவர். விசேஷ சேவையாவது ஒரே நேரத்தில் மூன்று விதமான சேவையை சேர்த்தே செய்வது. வாய்மொழியின் கூடவே மனதால் செய்யும் சேவையும் சேர்ந்தே இருக்கட்டும். மேலும் கர்மனா சேவை என்றால் தொடர்பு, சேர்க்கை மூலமாகவும் பிரபாவத்தை ஏற்படுத்தும் சேவை. வார்த்தைகள் மூலமாகவும் சேவை மற்றும் எண்ணம் மூலமாகவும் சேவை. அப்படி தற்சமயம் ஒவ்வொரு சேவையையும் தனித்தனியாக செய்வதற்கான நேரம் இல்லை. எல்லைக்கப்பாற்பட்ட சேவையின் வேகம் ஒரே நேரத்தில் மூன்று விதமான

சேவையும் சேர்ந்தே இருக்கட்டும். இதைத் தான் மிக அதிவேகத்தில் செய்யும் எல்லைக்கப்பாற்பட்ட சேவை என்று கூறுவது. அதிவேகத்து எல்லைக்கப்பாற்பட்ட சேவாதாரியாக ஆகுங்கள். தன்னுடைய எல்லைக்குட்பட்ட ஸ்தானம் மட்டும் இல்லை, ஆனால் எப்படி தந்தை ஒரு இடத்தில் இருந்து கொண்டு எல்லைக்கப்பாற்பட்ட சேவை செய்கிறார். அதே போல் ஏதோஒரு காரணமாக ஒரு ஸ்தானத்தில் இருக்கிறீர்கள். ஆனால் தன்னை எல்லைக்கப்பாற்பட்ட சேவையின் பொறுப்பாளர் என்று உணர்ந்து உலகிலுள்ள ஆத்மாக்கள் எப்பொழுதும் உங்கள் மனக்கண் முன்பு வெளிப்பட்ட ரூபத்தில் இருக்கட்டும். அப்பொழுது தான் உலகிற்கு நன்மை செய்பவர் என்று கூறுவோம். இல்லையென்றால் தேசத்திற்கு நன்மை செய்பவர் மற்றும் சென்டருக்கு நன்மை செய்பவர் என்று ஆகிவிடும். எப்பொழுது நீங்கள் ஒவ்வொருவரும் இந்த அளவு எல்லைக்கப்பாற்பட்ட உலகிற்கு நன்மை செய்பவராக ஆவீர்களோ அப்பொழுது உலகின் ஆத்மாக்கள் தங்களுடைய அதிகாரத்தை அடைய முடியும். இல்லையென்றால் கொஞ்ச நேரத்தில் எங்கே சென்றடைவார்கள்? இரண்டு நான்கு பேரோ இல்லை முழு உலகம் ஆகும். அப்படி பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களுக்கு அனைவரும் ஒன்றிணைந்து குழுவான ரூபத்தில் எல்லைக்கப்பாற்பட்ட சேவையின் ரூபத்தை வெளிப்படுத்த வேண்டும். எப்படி தன்னுடைய ஸ்தானத்தின் கவனம் இருக்கிறது, திட்டங்களை உருவாக்குகிறீர்கள், நடைமுறை யில் கொண்டு வருகிறீர்கள், முன்னேற்றத்தைப் பற்றியும் சிந்தனை ஓடுகிறது. அதே போல் எல்லைக்கப்பாற்பட்ட அனைத்து ஆத்மாக்களுக்காக எப்பொழுதும் முன்னேற்றத்தின் எண்ணம் வெளிப்படும் ரூபத்தில் இருக்க வேண்டும். அப்பொழுது தான் மாற்றம் ஏற்படும்.

உலகிற்கு நன்மை செய்பவரின் மேல் எவ்வளவு காரியங்கள் இருக்கின்றன, கனவில் கூட ஃப்ரீயாக (ஓய்வாக) இருக்க முடியாது. கனவிலும் சேவையே தென்பட வேண்டும். இதைத் தான் முழுமையான பிஸி என்று கூறுவோம். ஏனென்றால் முழு நாளுக்கான ஆதாரம் கனவாக இருக்கிறது. யார் பகல் இரவாக சேவை யில் பிஸியாக இருக்கிறாரோ அவருடைய கனவு கூட சேவைக்கானதாக இருக்கும். கனவில் கூட புதுப் புது விஷயங்கள், சேவையின் திட்டம் மற்றும் செய்முறைகள் தென்பட முடியும். அப்படி இந்த அளவு பிஸியாக இருக்கிறீர்களா? வீணான எண்ணங்களிலிருந்தோ விடுபட்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? எவ்வளவு பிஸியாக இருப்பீர்களோ அந்த அளவு முயற்சி செய்வதில் வீணானவற்றிலிருந்து மற்றும் மற்றவர்களையும் வீணானவற்றிலிருந்து பாதுகாக்க முடியும். ஒவ்வொரு நேரமும் இது பயனுள்ளதா அல்லது வீணானதா என்ற சோதனை

இருக்க வேண்டும். ஒருவேளை கொஞ்சமாவது வீணானதின் அனுபவம் ஆகிறது என்றால் அதே நேரம் பரிவர்த்தனை செய்யுங்கள். பொறுப்பிலிருப்பவர்களைப் பார்த்து மற்றவர்களும் அவர்களாகவே பயனுள்ள எண்ணங்களை நிரப்பிக் கொண்டே செல்வார்கள். புரிந்ததா?

எல்லைக்கப்பாற்பட்ட உலகின் ஆத்மாக்கள் எப்பொழுதும் மனக்கண் முன் வெளிப்பட்டிருக்க வேண்டும். எப்பொழுது நீங்கள் இதை வெளிப்படுத்துவீர்களோ அப்பொழுது அந்த ஆத்மாக்களுக்கும் நாங்களும் எங்களுடைய எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உருவாகும். உங்களுடைய எண்ணம் மூலமாக அவர்களுடைய எண்ணம் வெளிப்படும். உலகிற்கு நன்மை செய்பவரின் அர்த்தமே உலகின் ஆதாரமானவர், சிறிதளவு அலட்சியம் கூட உலகை அலட்சியம் ஆக்கிவிடும். இந்த அளவு கவனம் இருக்க வேண்டும்.

டெல்லியைச் சேர்ந்தவர்களும் ஏதாவது புதிய விஷயங்களைச் செய்யுங்கள். மகாநாடுகள் நடத்துவதோ மிகப்பழைய விஷயம் ஆகிவிட்டது. இப்பொழுது புதுக் கண்டுபிடிப்பை கொண்டு வாருங்கள். குறைந்த செலவில் அதிக பலன் இருக்க வேண்டும். செலவும் குறைவாக இருக்க வேண்டும், ரிசல்ட்டும் நல்லதாக இருக்க வேண்டும். இப்பொழுது உ.பி அந்த மாதிரி புதிய கண்டுபிடிப்பை செய்கிறார்களா அல்லது டெல்லி செய்கிறார்களா என்று பார்க்கலாம். ஒருவேளை செலவு அதிகமாகவும் மேலும் முடிவு (ரிசல்ட்) குறைவாகவும் இருக்கிறது என்றால், வரும் மாணவர்கள் மனமுடைந்து போய் விடுவார்கள். இப்பொழுது அவர்களையும் உற்சாகத்தில் கொண்டு வருவதற்காக குறைந்த செலவில் நல்ல ரிசல்ட்டைக் கொண்டு வாருங்கள் அதன் மூலம் பிஸியாகவும் ஆகிவிடுவார்கள். மேலும் செலவும் குறைவாகவும் இருக்கும். உடலும் மற்றும் மனமும் பிஸியாகிவிடட்டும், பணம் குறைவாக செலவாக வேண்டும்.

பார்ட்டிகளுடன் :

1) சுயநிலை மூலமாக அனைத்து சூழ்நிலைகளின் மேல் வெற்றி -

அனைவரும் எப்பொழுதும் சுயநிலை மூலமாக சூழ்நிலைகளின் மேல் வெற்றி அடைபவர்களாக இருக்கிறீர்களா? சங்கமயுகத்தில் அனைவரும் வெற்றி இரத்தினம் ஆவீர்கள் அப்படி வெற்றியை அடைவதற்கான சாதனம் சுயநிலை மூலமாக சூழ்நிலைகளின் மேல் வெற்றி. இந்த உடலும் தன்னுடையதல்ல இன்னொருவருடையது. அப்படி தேக உணர்வில் வருவதும் சுயநிலை அல்ல. எனவே முழு நாளில் சுயநிலை எவ்வளவு நேரம் இருக்கிறது என்று சோதனைசெய்யுங்கள். ஏனென்றால் சுயநிலை மற்றும் சுயதர்மம் எப்பொழுதும் சுகத்தின் அனுபவம் செய்விக்கும். மேலும் இயற்கையின் தர்மம் அதாவது இன்னொருவரின் தர்மம் அல்லது தேகத்தின் நினைவு ஏதாவது விதமான துக்கத்தின் அனுபவத்தை அவசியம் செய்விக்கும். அப்படி யார் எப்பொழுதும் சுயநிலையில் இருப்பாரோ அவர் எப்பொழுதும் சுகத்தின் அனுபவம் செய்வார். எப்பொழுதும் சுகத்தின் அனுபவம் ஆகிறதா அல்லது துக்கத்தின் உணர்வுகள் வருகிறதா? எண்ணத்தில் கூட ஒருவேளை துக்க உணர்வுகள் வருகின்றன என்றால் சுயநிலையிலிருந்து சுயதர்மத்திலிருந்து கீழே வந்து விட்டீர்கள் என்று நிரூபணம் ஆகிறது. எப்பொழுது புதிய ஜென்மம் ஏற்பட்டு விட்டது, சுகவள்ளலின் குழந்தைகள் ஆகிவிட்டீர்கள் என்றால், சுகக்கடலின் குழந்தைகள் எப்பொழுதும் சுகத்தில் நிரம்பியவர்களாக இருப்பார்கள். நீங்கள் அனைவரும் மாஸ்டர் கடல் என்றால் நிரம்பிய நிலையின் அனுபவம் ஆகிறதா? நேரத்திற்கு தகுந்தாற் போல் சுயத்தின் முயற்சி நடந்து கொண்டு இருக்கிறது. நேரம் மிக வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறதா அல்லது நீங்களும் உயரம் தாண்டுதல் செய்கிறீர்களா? நேரத்தின் வேகத்திற்கு ஏற்றபடி இப்பொழுது உயரே தாண்டிச் சென்றாலன்றி சென்றடைய முடியாது. இப்பொழுது ஓடுவதற்கான காலமும் கடந்து சென்று விட்டது. இப்பொழுது உயரம் தாண்டுதல் செய்யுங்கள். முயற்சி செய்வதில் 'தீவிரம்' என்ற வார்த்தையைச் சேர்த்துக் கொள்ளுங்கள். நினைவில் இருக்கிறீர்கள் இது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. ஆனால் நினைவின் கூடவே சகஜயோகி மற்றும் நிரந்தர யோகியாக இருக்க வேண்டும். ஒருவேளை இது இல்லை என்றால் நினைவும் கூட அரைகுறை யாகத் தான் இருக்கும்.

உலக சேவை மற்றும் சுயத்தின் சேவை இரண்டின் சமநிலை வைப்பதினால் வெற்றி கிடைக்கும். ஒருவேளை சுயசேவையை விட்டு விட்டு உலக சேவையில் ஈடுபட்டு விடுகிறீர்கள் என்றால் அல்லது உலக சேவையை மறந்து சுயசேவையை மட்டும் செய்து கொண்டே இருக்கிறீர்கள் என்றால் வெற்றி கிடைக்க முடியாது. இரண்டு சேவைகளும் சேர்ந்தே இருக்க வேண்டும். எண்ணம் மற்றும் சொல் இரண்டு சேவைகளும் சேர்ந்தே

நடந்தது என்றால் கடினமாக உழைப்பதிலிருந்து பாதுகாப்பாகி விடுவீர்கள். எப்பொழுதாவது ஏதாவது சேவைக்காக செல்கிறீர்கள் என்றால் சுயநிலையில் நிலைத்திருந்து செல்கிறீர்களா, குழப்பத்திலோ சென்று கொண்டிருக்கவில்லையே என்பதை முதலில் சோதனைசெய்யுங்கள். ஒருவேளை நீங்களே குழப்பத்தில் இருந்தீர்கள் என்றால் கேட்பவர் ஒருமித்த நிலையில் இருக்க மாட்டார். அனுபவம் செய்ய மாட்டார்கள்.

2) ஞானத்தின் அனைத்து இரகசியங்களை (ராஸ்) தெரிந்திருப்பவர் ஒருபொழுதும் கோபப்பட (நாராஸ்) மாட்டார் -

ஞானத்தின் அனைத்து இரகசியங்களைத் தெரிந்திருக்கும் இரகசியம் தெரிந்து நடந்து கொள்ளும் ஆத்மாக்கள் தான் நீங்கள் இல்லையா? தன்னுடைய முயற்சியின் அனுசாரம் தந்தை மூலமாக அனேக ஞானத்தின் இரகசியங்களை தெரிந்து கொண்டு இப்பொழுது சிந்தனை செய்து கொண்டே முன்னேறிச் செல்லுங்கள். எனவே எப்பொழுதும் இரகசியம் தெரிந்து நடப்பவர், எப்பொழுதும் யோக சொரூபமானவர், எப்பொழுதும் அன்பு நிறைந்தவராக இருக்கிறீர்களா? ஞானத்தின் அனைத்து இரகசியங்களை தெரிந்திருப்பவர் தன் மேல் திருப்தியானவர்களாக இருப்பார்கள். மேலும் மற்றவர்களையும் திருப்திப் படுத்துவதில் பயிற்சி உடையவராக இருப்பார். எனவே எப்பொழுதும் இரகசியம் தெரிந்து நடப்பவர் அதாவது திருப்தி செய்யக்கூடியவர் ஒருபொழுதும் கோபப்படுபவராக ஆக முடியாது. அந்த மாதிரி அனைத்து இரகசியங்களை தெரிந்திருப்பவர், தந்தைக்கு பிரியமானவர், நெருக்கமானவர்.

3) சத்குருவின் கிருபை மூலம் அனைத்தும் நிறைந்த நிலை -

எப்படி பக்தி மார்க்கத்தில் குரு கிருபை வர்ணிக்கப்பட்டிருக்கிறது என்றால் ஞான மார்க்கத்தில் சத்குருவின் கிருபையாக இருப்பது படிப்பு. படிப்பின் கிருபை மூலமாக சத்குரு அனைத்தையும் நிறைந்தவர் ஆக்கிவிடுகிறார். யார் மேல் சத்குருவின் கிருபை ஏற்பட்டு விடுமோ அவர் எப்பொழுதும் முக்த் மற்றும் ஜீவன்முக்த் ஆகிவிடுகிறார்

வரதானம்:

சிந்தனை சக்தி மூலமாக புத்தியை சக்திசாலியாக ஆக்கக்கூடிய மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகுக.

சிந்தனை சக்தி தான் திவ்ய புத்திக்கான சத்துணவு ஆகும். எப்படி பக்தியில் உச்சரிப்பதின் பயிற்சி உடையவராக இருக்கிறார்கள். அதே போல் ஞானத்தில் நினைவின் சக்தி. இந்த சக்தி மூலமாக மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகுங்கள். தினசரி அமிர்தவேளையில் தன்னுடைய ஒரு பட்டத்தை நினைவில் கொண்டு வாருங்கள். மேலும் சிந்தனை செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால் புத்தி சக்திசாலியானதாக இருக்கும். சக்திசாலியான புத்தியின் மேல் மாயாவின் தாக்குதல் இருக்க முடியாது, மற்றதின் வசம் ஆக முடியாது. ஏனென்றால் மாயா அனைத்தையும் விட முதலில் வீணான எண்ணம் என்ற அம்பு மூலமாக திவ்ய புத்தியை தான் பலஹீனம் ஆக்குகிறது. இந்த பலஹீனத்திலிருந்து விடுபடுவதற்கான சாதனம் சிந்தனை சக்தி ஆகும்.

சுலோகன்:

கட்டளைப்படி நடக்கும் குழந்தைகள் தான் ஆசீர்வாதங்களுக்குப் பாத்திரமானவர்கள், ஆசீர்வாதங்களின் பிரபாவம் உள்ளத்தை எப்பொழுதும் திருப்தியாக வைத்திருக்கும்.

ஓம் சாந்தி

28.12.1979 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" சித்தி (வெற்றி) சொரூபமானவர் ஆவதற்கான விதி - ஒருமித்தநிலை "

பாப்தாதா அனைத்து தீவிரமாக முயற்சி செய்யும் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். தீவிரமாக முயற்சி செய்வதற்கான சுலபமான விதி அதன் மூலம் சுலபமாக சித்தி (வெற்றி) அடைந்து வேண்டும் அதாவது எப்பொழுதும் சித்தி சொரூபமானவர் ஆகிவிட வேண்டும், எண்ணம், சொல், செயல் சித்தி ஆகி விட வேண்டும். அதனால் உலகின் எதிரில் பிரசித்தி ஆகிவிட வேண்டும். அப்படி அந்த சகஜ விதி எது? ஒரு வார்த்தை அடங்கிய விதியாகும், அந்த ஒரு வார்த்தையைக் கடைப்பிடிப்பதினால் சித்தி சொரூபமாக ஆகிவிடுவீர்கள். அதனுடன் எண்ணம், சொல் மற்றும் செயல் மூன்றிற்கும் சம்மந்தம் இருக்கிறது. அந்த ஒரு வார்த்தை 'ஒருமித்தநிலை'. எண்ணத்தின் சித்தி ஆகாமல் இருப்பதற்கான காரணமும் ஒருமித்த நிலையின் குறைவு தான். ஒருமித்த நிலை குறைவாக இருக்கும் காரணத்தினால் மேலே கீழே ஆட்டம் காண்கிறது. எங்கு ஒருமித்த நிலை இருக்குமோ அங்கு இயல்பாகவே ஒரே சீரான நிலை இருக்கும். எங்கு ஒருமித்த நிலை இருக்குமோ அங்கு எண்ணம், சொல் மற்றும் செயலின் வீணான தன்மை முடிவடைந்து விடும். மேலும் பயனுள்ளதாக ஆகிவிடுகிறது. பயனுள்ளதாக ஆகும் காரணத்தினால் அனைத்திலும் வெற்றி ஏற்பட்டு விடுகிறது. ஒருமித்த நிலை என்றால் ஒரே ஒரு உயர்ந்த எண்ணத்தில் எப்பொழுதும் நிலைத்திருப்பது. எந்த ஒரு விதை ரூப எண்ணத்தில் முழு மரம் என்ற விஸ்தாரம் அடங்கியிருக்கிறது. ஒருமித்த நிலையை அதிகரித்தீர்கள் என்றால் அனைத்து விதமான குழப்பங்களும் முடிவடைந்து விடும். ஒருமித்த நிலை தன் பக்கம் கவர்ந்திழுக்கவும் செய்யும். எப்படி ஏதாவது ஒரு பொருள் அதுவே மேலே கீழே செல்வதாக இருக்கிறது என்றால், மற்றவர்களையும் அந்த மாதிரி நிலையற்ற நிலையில் கொண்டு வந்து விடும். எப்படி இங்கே லைட் நிலையற்ற நிலையில் உள்ளது (இடையிடையே மின்சார இல்லாமல் ஆனது) சில நேரம் எரிகிறது, சில நேரம் அணைகிறது என்றால், அனைவரது எண்ணத்திலும் ஏன் இப்படி ஆகிறது என்ற குழப்பம் வந்து விடுகிறது. ஒருமித்த நிலையில் இருக்கும் பொருள் மற்றவர்களுக்கும் ஒருமித்த நிலையை அனுபவம் செய்விக்கும். ஒருமித்த நிலையின் ஆதாரத்தினால் தான் ஒரு பொருள் எப்படி

இருக்கிறதோ அப்படியே தெளிவாகப் பார்க்க முடியும். அதே போல் ஒருமித்த ஸ்திரமான நிலையில் நிலைத்திருப்பவர் தான் தன்னை எப்படி இருக்கிறார்? என்னவாக இருக்கிறார்? என்பதைத் தெளிவாக அனுபவம் செய்ய முடியும். மேலும் இந்தக் காரணம் எப்படி ஆகும், என்னவாகும்? என்ற ஸ்திரமற்ற நிலை முடிவடைந்து விடும். எப்படி ஏதாவது தெளிவான பொருள் தென்படுகிறது என்றால் ஒருபொழுதும் இது என்ன என்ற கேள்வி எழாது. கேள்வி முடிவடைந்து இது இதுவாக இருக்கிறது என்பது தெளிவாக அனுபவம் ஆகும். அந்த மாதிரி சுயசொரூபம் மற்றும் தந்தையின் சொரூபம் ஒருமித்த நிலையின் ஆதாரத்தில் எப்பொழுதும் தெளிவாக இருக்கும். எப்படி ஆத்மீக ரூபத்தில் நிலைத்திருப்பது, ஆத்மாவின் சொரூபம் அந்த மாதிரியானதா அல்லது இந்த மாதிரியானதாக என்ற இந்த குழப்பம் அதாவது கேள்வி முடிவடைந்து விடும். எப்பொழுது கேள்வி முடிவடைந்து விட்டதோ, குழப்பம் முடிவடைந்து விட்டதோ அப்போது ஒவ்வொரு எண்ணமும் தெளிவாகி விடுகிறது. ஒவ்வொரு எண்ணம், வார்த்தை மற்றும் செயலின் முதல், இடை மற்றும் முடிவு மூன்று காலங்களுமே எப்படி தற்சமயத்து காலம் தெளிவாக இருக்கிறது. ஒவ்வொரு எண்ணம், வார்த்தை மற்றும் செயலின் முதல், இடை மற்றும் கடை மூன்று காலங்களும் எப்படி நிகழ்காலம் தெளிவாக இருக்கிறதோ அப்படி தெளிவாக இருக்கும். எண்ணம் என்ற விதை சக்திசாலியாக இருக்கிறது என்றால் பழம் (பலன்) கொடுப்பதாக இருக்கும்.

ஒருமித்த நிலை மூலமாக அனைத்து சக்திகளும் வெற்றி (சித்தி) சொரூபத்தில் கிடைத்து விடுகிறது. ஏனென்றால் சொரூபம் தெளிவாக இருக்கிறது என்றால், சொரூபத்தின் சக்திகளும் அந்த மாதிரியே அனுபவம் ஆகும். ஒருமித்த நிலையின் மகிமை என்னவென்று புரிந்ததா? பொதுவாகவே இன்றைய நாட்களில் உலகத்தில் குழப்பத்தினால் மிகவும் நொந்து போய் இருக்கிறார்கள். அரசியல் குழப்பமானாலும், விலைவாசியின் குழப்பமானாலும், பணத்தின் ஏற்றம் இறக்கம் இருந்தாலும், கர்மத்தின் விளைவுகளை அனுபவிப்பதில் மேலே கீழே சென்றாலும், மதத்தின் குழப்பம், அந்த மாதிரி பல்வேறு விதமான குழப்பங்களினால் மிகவும் நொந்து போய் விட்டார்கள். எந்த அளவு அறிவியில் சாதனங்கள், முன்பு சுகம் தரும் சாதனங்களாக இருந்தன. இன்று அந்த சாதனங்களும் ஏற்றம்-இறக்கத்தை அனுபவம் செய்விப்பவையாக ஆகிவிட்டன. இங்கே கூட பிராமண ஆத்மாக்கள் எண்ணத்தில் மற்றும் தொடர்பில் ஏற்படும் ஏற்றம் இறக்கத்தினால் தான் களைப்படைகிறார்கள். எனவே சகஜவிதியானது ஒருமித்த நிலையில் நிலைத்திருப்பதை கடைபிடியுங்கள். இதற்காக எப்பொழுதும் ஏகாந்தவாசி ஆகுங்கள். ஏகாந்தவாசியிலிருந்து

ஒருமித்த நிலை உள்ளவராக சுலபமாகவே ஆகிவிடுவீர்கள்.

டெல்லி நிவாசிகள் எப்படி ஸ்தாபனையின் காரியத்தில் ஆதிரத்தினமாகி கருவியாக ஆனீர்களோ அதே போன்று இப்பொழுதும் சம்பூர்ண முடிவின் காரியத்தில் கூட கருவியாகுங்கள். ஒவ்வொரு விஷயத்தின் சம்பூர்ண நிலையில் ஆதிரத்தினங்கள் கருவியாகுங்கள். சம்பூர்ண நிலை தான் முடிவைக் கொண்டு வரும். டெல்லியின் அஸ்திவாரத்தில் அனைத்து சக்திகளின் சகயோகத்தின் கை கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி அனைத்து சக்திகளின் சகயோகத்தின் கைப்படக்கூடிய பூமி என்ன அதிசயத்தைக் காண்பிக்கும்? பிரம்மா பாபா மற்றும் பிரம்மாவின் புஜங்களின் பாலனையை பெற்றிருக்கும் பூமி டெல்லி, அது இப்பொழுது என்ன அதிசய காரியம் செய்து காண்பிக்கும்? எந்த விதி மூலம் சம்பூர்ண நிலையைக் கொண்டு வருவீர்கள்? கும்பகர்ணன்களை எப்படி எழுப்புவீர்கள்? புதிய பரிசாக என்ன தயார் செய்யப் போகிறீர்கள்?

டெல்லியைச் சேர்ந்தவர்கள் பாப்தாதாவிற்கு என்ன பரிசு கொடுப்பீர்கள்? வெளிநாடு என்ன கொடுக்கும்? குஜராத் என்ன கொடுக்கும்? அனைத்து மண்டலங்களிலிருந்தும் பரிசு வர வேண்டும். ஸ்தாபனையின் தொடக்கத்தில் முதலில் டெல்லி வந்தது என்றால் பரிசைக் கொடுப்பதிலும் டெல்லிக்கு நம்பர் ஒன்-ஆக இருக்க வேண்டும். குழந்தைகள், தந்தைக்குப் பரிசு கொடுக்க வேண்டும். தந்தையின் ஆசையை இது வரை தெரிந்து கொள்ளவில்லையா என்ன? ஒவ்வொருவரும் எந்த பரிசு கொடுக்க வேண்டும் என்று யோசியுங்கள். ஏனென்றால், ஒவ்வொரு ஆண்டும் ஏதாவது புதுக் கண்டுபிடிப்பு அவசியம் இருக்க வேண்டும். அந்த புதுமை தன்னிலும் மற்றும் சேவையிலும் கூட புதுமையைக் கொண்டு வர வேண்டும். அதற்கான திட்டம் என்ன, நடைமுறைத் திட்டத்தைக் கூறுங்கள். என்ன வேண்டுமென்றாலும் செய்யுங்கள், ஆனால் பரிசு ரூபத்தில் அவசியம் கொண்டு வர வேண்டும். பிறகு நம்பர் ஒன் பரிசாக எந்த மண்டலத்திலிருந்து வந்தது என்று சோதனை செய்யலாம். டெல்லியில் மகாரதிகளுக்கும் குறைவில்லை. இவ்வளவு மகாரதிகளும் மகான் பரிசை தயார் செய்வீர்கள் இல்லையா? திட்டம் மற்றும் முயற்சி இரண்டையுமே செய்ய வேண்டும். பந்தயமோ செய்ய வேண்டும் தான் இல்லையா? அனைவருக்கும் ஞான சிந்தனை செல்லும், அமிர்தவேளையில் அருகாமையில் வந்து அமர்ந்து விட்டீர்கள் என்றால் தானாகவே அனைத்து டச்சிங் (புத்தியில் பாபாவின் உணர்த்துதல்) ஏற்படும்.

எவ்வளவு டெல்லியில் அரசியலில் சலசலப்பு இருக்கிறதோ, அந்த அளவே சத்திய தர்மத்தின் வழிகாட்டுதலின் சலசலப்பும் இருக்க வேண்டும். இப்பொழுது இராஜ்யத்தின் சலசலப்பு அதிகமாக இருக்கிறது மற்றும் சத்திய தர்மத்தின் சலசலப்பு குறைவாக இருக்கிறது, குப்தமாக (ரகசியமாக) இருக்கிறது. முதலில் டெல்லியில் ஆட்டம் கண்டால் தான் அனைத்து இருக்கைகளும் ஆடும். அனைவரின் பார்வையும் செல்லும் அளவிற்கு அந்த மாதிரி லைட் ஹவுசை தயாரியுங்கள். எப்படி லைட் ஹவுசின் பக்கம் அனைவரின் கவனம் செல்கிறது அதே போல் ஏதாவது உயர்வான லைட் ஹவுசிற்கான திட்டத்தை உருவாக்குங்கள் அதன் மூலம் எங்களுடைய ஆதாரம் இது தான் என்று அனைவருக்கும் அனுபவம் ஏற்பட வேண்டும். குழப்பமான நேரத்தில் பொதுவாகவே ஆதாரத்தைத் தேடுவார்கள். அந்த மாதிரி ஏதாவது சக்திசாலியான திட்டத்தை உருவாக்குங்கள். அது அவர்களுக்கு லைட் ஹவுஸ் மாதிரி ஒரு ஆதாரம் கிடைத்து விடட்டும். புரிந்ததா? இப்பொழுது யோசியுங்கள், அனைத்து பழைய பெரிய பெரிய டீச்சர்கள் டெல்லியில் இருக்கிறார்கள். அனைவரும் அனுபவம் நிறைந்த டீச்சர்கள் ஆவார்கள். அனுபவம் நிறைந்த டீச்சர்கள் மூலமாக அவசியம் திட்டமும் அந்த மாதிரியே தான் உருவாகும். டெல்லியிலிருந்து எந்த சப்தம் வெளியாகுமோ அது பிற சிறு சிறு இடங்களுக்கு தானாகவே சென்றடையும். முதலில் டெல்லியை சக்திசாலி ஆக்க வேண்டும். வெளிநாட்டிலிருந்து சப்தம் வெளியாகிறது என்றால், அது எங்கே வந்தடையும்? டெல்லி தான் அந்த சப்தத்தை பெற்றுக் கொள்ளும். டெல்லியில் தொடர்பு மிக அதிகமாக இருக்கிறது. இப்பொழுது டெல்லியின் சக்திகள் கொஞ்சம் மைதானத்தில் வந்தீர்கள் என்றால், சப்தம் சுலபமாக வெளியாக முடியும்.

## வெளிநாட்டு சகோதரசகோதரிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு

### லெஸ்டர் பார்ட்டி -

எப்பொழுதும் சேவைக்குத் தகுதியான இரத்தினமாக இருக்கிறீர்களா? சேவைக்குத் தகுதியானவர் என்பதின் அர்த்தம் - ஒவ்வொரு விநாடியும் மனதாலோ வாய்மொழியாலோ உடல் மூலமாகவோ அல்லது தொடர்பு, சம்மந்தம் மற்றும் நெருக்கத்தின் மூலமாக சேவை செய்பவர். சேவைக்குத் தகுதியானவர் என்றால் அனைத்து சேவைகளையும் (ஆல்ரவுண்ட்) செய்யும் சேவாதாரி. சேவைக்குத் தகுதியானவர் சேவை செய்வதற்கு நேரம்

கிடைப்பதில்லை, வாய்ப்பு கிடைப்பதில்லை என்று ஒருபொழுதும் நினைக்க மாட்டார். ஒருவேளை வேறு எந்த நேரமும் இல்லை என்றால் கூட ஓய்வாகத் தூங்கும் நேரத்திலும் சேவை செய்ய முடியும். ஆல்ரவுண்ட் சேவாதாரி என்றாலே எப்பொழுதும் சேவை செய்பவர். எப்பொழுதும் சேவையின் ஆர்வம் உள்ளவராகி வளர்ச்சியை செய்து கொண்டே இருக்கிறீர்கள் தான் இல்லையா? எனவே முழு நாள் நடவடிக்கையில் அனைத்து வித சேவையிலும் மதிப்பெண்கள் பெற்றிருக்கிறேனா அல்லது வாய்மொழி மற்றும் உடல் மூலமாக செய்யும் சேவையில் மட்டும் பெற்றிருக்கிறேனா என்று சோதனைசெய்யுங்கள். அனைத்து விதமான சேவையின் சுரங்கத்தை நிரப்ப வேண்டும். அந்த மாதிரி தன்னுடைய தினசரி சார்ட்டை சோதனைசெய்யுங்கள். இங்கே (சங்கமயுகத்தில்) உள்ள ஆல்ரவுண்ட் சேவாதாரி அங்கே (சத்யுகத்தில்) ஆல்ரவுண்ட் உலகத்தின் அதிபதி ஆவார்கள். எந்த அளவு இங்கே சேவையில் குறை இருக்குமோ அந்த அளவே அங்கேயும் எல்லைக்கப்பாற்பட்ட (உலகளவு) மற்றும் ஒவ்வொரு மாகாணத்தில் வித்தியாசம் ஆகிவிடும். விஷ்வ மகாராஜன் என்றால் ஆல்ரவுண்ட் சேவாதாரி. பார்க்கப்போனால் சேவையில் லெஸ்டர் நிவாசிகளின் மகிமை நன்றாக இருக்கிறது. ஒருவர் அனேகர்களை எழுப்பும் சேவை செய்கிறார். வெளிநாட்டின் சேவையில் லெஸ்டரின் விசேஷ சகயோகம் இருக்கிறது. வெளிநாட்டு சேவையின் விதையில் லெஸ்டர் நிவாசிகளின் தண்ணீர் நன்றாக விடப்பட்டிருக்கிறது. பாப்தாதாவும் அந்த மாதிரி சகயோகி ஆத்மாக்களைப் பார்த்து குஷி அடைகிறார். இந்த சென்டரில் அனைத்து அலங்காரமும் இருக்கிறது. குமாரர்களும் இருக்கிறார்கள், குமாரிகளும் இருக்கிறார்கள், இல்லறத்தைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள் . . . . இது தான் சென்டரின் அலங்காரம் ஆகும். எந்த விதமான வகையினரின் குறைவு இல்லை. இப்பொழுது ஏதாவது புதுத் திட்டத்தை உருவாக்குங்கள். யாராவது அந்த மாதிரி பரமாத்மா வெடிகுண்டை தயார் செய்திருக்கிறீர்களா? எப்படி ஒரு குண்டை போடுவதினால் உலகின் கணக்குப்படி சுலபமாகவே அனைவரின் கதி ஆகிவிடுகிறது, அதாவது விநாஷம் ஏற்பட வேண்டும் என்று என்ன லட்சியம் வைக்கிறார்களோ அந்த விநாஷம் ஏற்பட்டு விடுகிறது. அந்த மாதிரி அனைவருக்கும் கதி, சத்கதி ஏற்பட்டு விட வேண்டும் அளவிற்கு ஏதாவது பரமாத்மா வெடிகுண்டை தயார் செய்திருக்கிறீர்களா? நீங்கள் அனைவரும் வெகு காலத்திற்குப் பிறகு மீண்டும் கண்டெடுக்கப்பட்டவர்கள். ஏனென்றால், நீங்கள் எவ்வளவு தான் தேசத்தை விட்டு விட்டு வெளிநாடு சென்றிருக்கிறீர்கள், இவ்வளவு தூரமாக சென்றுவிட்டீர்கள் என்றாலும், தந்தை உங்களை தன்னுடைய குழந்தையாக ஆக்கி விட்டார். இந்தியாவிலிருந்து விலகி வெகுதூரம் சென்று விட்டீர்கள் என்றாலும், அந்த வெகு தூரத்திலும் உங்களைத் தேடிக் கண்டுபிடித்து தந்தை, தன்னுடைய குழந்தையாக ஆக்கிவிட்டார். தந்தைக்கு வெளிநாடு

வரை தேட வேண்டியதாக இருந்தது இல்லையா? அதனால் மீண்டும் தேடிக் கண்டெடுக்கப்பட்டவர்களாக ஆகிவிட்டீர்கள்.

தம்பதிகளுடன் -

தம்பதி ரூபம் என்றால் சேவைக்காக ஒரு உதாரண ரூபம் ஆவீர்கள். உலகின் எதிரில் சேவைக்காக ஒரு உதாரணம் ஆகிவிட வேண்டும் என்பதற்காக நீங்கள் இல்லறத்தில் வைக்கப்பட்டிருக்கிறீர்கள். அப்படியானால் குடும்பத்தில் இருந்து கொண்டே உலகின் ஷோ கேஸில் (காட்சி பெட்டகம்) விசேஷ ஷோ பீஸ் (காட்சிப்பொருள்) ஆகி நடந்து கொள்கிறீர்களா? ஒரு ஷோபீஸ் அனேகர்களுடன் வியாபாரம் நடப்பததற்குக் காரணமாகி விடுகிறது. எனவே யார் இல்லறத்தில் இருக்கிறீர்களோ அவர்கள் தன்னை விசேஷ ஷோ பீஸ் என்று புரிந்திருந்தீர்கள் என்றால், அதிக சேவைக்கான காரணமாகிவிடுவீர்கள். நீங்கள் வீட்டில் இருக்கவில்லை, ஷோ கேஸில் இருக்கிறீர்கள். தன்னை ஷோ கேஸில் இருக்கிறேன் என்று நினைத்தீர்கள் என்றால், எப்பொழுதும் அலங்கரிக்கப்பட்டவர்களாக இருப்பீர்கள். ஷோகேஸில் அழுக்கான பொருள் எதையும் வைக்க மாட்டார்கள்.

இன்னும் கொஞ்ச காலத்தில் முழு உலகில் இல்லறத்தில் இருந்து கொண்டே துறவறத்தில் இருப்பவர்களின் பெயர் நாலாபுறமும் பிரசித்தி ஆகும். உங்களை தரிசனம் செய்வதற்காக துடித்துக் கொண்டே வருவார்கள். எதை நாம் செய்ய முடியவில்லையோ அதை செய்து காண்பித்திருக்கும் துணிச்சல் நிறைந்த ஆத்மாக்கள் யார் என்று கூறுவார்கள். தந்தையின் காரியத்தை பிரத்யக்ஷம் செய்வதற்கும் பொறுப்பாளர் ஆகிவிடுவீர்கள். நீங்கள் சாதாரணமானவர்கள் அல்ல விசேஷ ஆத்மாக்கள் ஆவீர்கள்.

குமாரர்களுடன் -

அனைவரும் அழியாத குமார்கள் ஆவீர்கள். குமார் குமாரிகளுக்கு அதிப்படியான மதிப்பெண்கள் எந்த விஷயத்தில் கிடைக்கிறது மற்றும் ஏன் கிடைக்கிறது? குமார் குமாரிகள் இந்த வாழ்க்கையில் அனைத்தையும் பார்த்துக் கொண்டே, தெரிந்து கொண்டே, இருந்தும் திட எண்ணம் வைத்து திடமான தியாகி ஆகிறார்கள். அந்த தியாகத்தின் பாக்கியம் கிடைக்கிறது. இல்லறத்தைச் சேர்ந்தவர்கள் அற்ப கால சுகத்தை அனுபவித்து பிறகு தியாகம் செய்கிறார்கள். மேலும் குமார் குமாரிகள் அழியும் அற்ப கால சுகத்தை

திட எண்ணத்தினால் முன்பாகவே தியாகம் செய்து விடுகிறார்கள். எனவே ஹை ஜம்ப் (உயரே தாண்டி அதிவேகமாக செல்வதற்கு) செய்வதற்கு வாய்ப்பு கிடைக்கிறது. குமார் மற்றும் குமாரி வாழ்க்கை உலகியல் மற்றும் ஆன்மீக வாழ்க்கை இரண்டிலும் பந்தனமற்றவர்கள். பந்தனமற்றவர்களாக இருக்கும் காரணத்தினால் எவ்வளவு முன்னேறிச் செல்ல விரும்புகிறார்களோ அந்த அளவு முன்னேறிச் செல்ல முடியும். அப்படி நீங்கள் அனைவரும் ஹை ஜம்ப் செய்பவர்கள் தான் இல்லையா? ஒரு நொடியில் நினைத்தீர்கள் மற்றும் செய்தீர்கள் இது தான் ஹை ஜம்ப் ஆகும். நினைப்பது மற்றும் செய்வது சேர்ந்தே இருக்க வேண்டும். குமார் மற்றும் குமாரிகளைப் பார்த்து பாப்தாதா விசேஷமாக குஷி அடைகிறார். ஏனென்றால் கீழே விழுவதிலிருந்து தப்பித்து விட்டார்கள். துக்கத்தின் படிகளை ஏறவே இல்லை. அப்படி தப்பித்துக் கொண்டவர்களைப் பார்த்து குஷி ஏற்படுகிறது. அமெரிக்கா பார்ட்டி - எப்பொழுதும் தந்தையின் சர்வ சம்மந்தங்களை மற்றும் சர்வ பொக்கிஷங்களை அனுபவம் செய்கிறீர்களா? எப்படி தந்தையின் குணங்களோ, அந்த அனைத்து குணங்களின் அனுபவம் ஆகிறதா? அனைத்து பொக்கிஷங்களிலிருந்து மற்றும் அனைத்து சம்மந்தங்களிலிருந்து ஒருவேளை ஒரு சம்மந்தத்தின் அனுபவம் கூட குறைவாக இருந்தது என்றால் அந்த சம்மந்தம் தன் பக்கம் கவர்ந்திழுத்து தந்தையிடமிருந்து தூரமாக்கி விடும். எனவே அனைத்து சம்மந்தங்களை அனுபவம் செய்தேனா என்று சோதனை செய்யுங்கள். அனைத்து பொக்கிஷங்களின் எஜமானன், பிறகு குழந்தை. சேவை செய்வதற்காக, காரியங்கள் செய்வதற்காக வழி காட்டுதலின் படி நடக்கக்கூடிய குழந்தை. பிறகு தன்னுடைய உயர்ந்த நிலையில் நிலைத்திருக்கும் நேரத்தில் எஜமானன். குழந்தை மற்றும் எஜமானன் இரண்டு நிலையின் அனுபவம் இருக்கிறதா? யார் இந்த நேரம் தந்தை மூலமாகக் கிடைத்திருக்கும் அனைத்து பொக்கிஷங்களின் எஜமானர் ஆகிறாரோ அதே எஜமானத்தன்மையின் சம்ஸ்காரம் எதிர்காலத்தில் உலகத்தின் எஜமானன் ஆக்கிவிடுகிறது. எப்பொழுதும் அனுபவங்களின் சுரங்கத்தினால் நிரம்பிய நிலையின் அனுபவம் செய்யுங்கள். அனுபவம் வாழ்க்கையை பரிவர்த்தனை செய்வதில் சுலபமான சாதனம் ஆகிவிடும். தற்சமயம் உங்களுடைய தேசத்தில் பெரும்பான்மையோர் ஒரு நொடியின் அமைதியை அனுபவம் செய்ய விரும்புகிறார்கள். அந்த மாதிரி துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு ஒரு நொடியின் அமைதியின் அனுபவம் செய்விப்பதற்காக எப்பொழுதும் தன்னுடைய நிலை அமைதி சொரூபமாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் மற்றவர்களுக்கு அனுபவம் செய்விக்க முடியும். அப்படியானால் ஆத்மாக்களின் மேல் இரக்கம் வருகிறதா? மிகவும் யாசிப்பவராகி உங்களிடம் வருவார்கள். அந்தளவு நிரம்பியவர்களாக இருந்தீர்கள் என்றால் யாசிப்பவர் அனேகரை திருப்தி செய்ய முடியும்.

அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் ஹை ஜம்ப் செய்பவர்களா அல்லது பறப்பவர்களா? ஒரு நொடியில் இந்த பழைய உலகிலிருந்து பறந்து உங்களுடைய இனிமையான, அமைதியான இல்லத்தில் வந்து சேருங்கள். அந்த மாதிரி பறப்பவர்கள் தான் இல்லையா? பறக்கும் பறவை என்றால் எப்பொழுதும் டபுள் லைட் நிலையில் நிலைத்திருக்க வேண்டும். அந்த மாதிரியே பறக்கும் பறவை ஆகி பறந்து கொண்டே இருங்கள், மேலும் அனேகரை பறக்க வைத்துக் கொண்டும் இருங்கள்.

யார் சுகம் சாந்திக்காக யாசிப்பவராக இருக்கிறாரோ அவர்களுக்கு சுகம், சாந்தியைக் கொடுத்து நிரம்பியவர்களாக ஆக்கினீர்கள் என்றால், அமைதி ஸ்தாபகர்கள் ஆகிவிடுவீர்கள். அனைவரும் உள்ளத்திலிருந்து உங்களுக்கு நன்றி பாராட்டுவார்கள். அமெரிக்காவில் எந்த சென்டர் திறந்திருக்கிறதோ அதிலேயும் ரகசியம் இருக்கிறது, முக்கியமான காரியம் நடக்க வேண்டியதாக இருக்கிறது. விநாஷம் மற்றும் ஸ்தாபனை இரண்டின் காட்சி சேர்ந்தே கிடைக்கும். அந்தப் பக்கம் விநாஷம் செய்பவர்கள், மேலும் இந்தப் பக்கம் அமைதியை உருவாக்குபவர்கள். அறிவியல் மற்றும் அமைதி, இரண்டு சக்திகளின் போட்டிகளைப் பார்ப்பீர்கள். நாலாபுறங்களிலிருந்தும் அமெரிக்காவை மாற்றம் செய்வதற்காக முற்றுகையிடுங்கள். முழு மலையையுமே தூக்கி வந்தார் என்று மகாவீரை (அனுமன்) காண்பிக்கிறார்கள் இல்லையா? அதே போல் நீங்கள் அனைவரும் அமெரிக்காவை மாற்றம் செய்து அமைதியின் சக்தியின் பெயரை பிரசித்தி அடையச் செய்யுங்கள். நாங்கள் சாந்திக்கடலின் குழந்தைகள் சாந்தி தேவர்கள் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். யார் எதிரில் வந்தாலும் அமைதியை உருவாக்குபவராகி அவருக்கு அமைதியின் தானம் கொடுங்கள்.

வரதானம் :

சத்தியத்தின் ஆதாரத்தில் ஒரு தந்தையை பிரத்யக்ஷம் (வெளிப்பாடு) செய்யக்கூடிய, பயமற்ற அதிகாரம் நிறைந்த சொரூபமானவர் ஆகுக.

சத்தியம் தான் பிரத்யக்ஷதாவின் ஆதாரம் ஆகும். தந்தையை பிரத்யக்ஷம் செய்வதற்காக தயக்கமின்றி, பயமற்று மேலும் அதிகாரம் (உரிமை பெற்ற) நிறைந்த சொரூபமானவராகிப்

பேசுங்கள். எப்பொழுது பிற அனேக வழியில் நடப்பவர்கள் நம் அனைவரின் தந்தை ஒருவரே. அவர் தான் இப்பொழுது காரியம் செய்து கொண்டிருக்கிறார், நாம் அனைவரும் அந்த ஒருவரின் குழந்தைகள் ஒன்றானவர்கள், மேலும் இந்த ஒன்று தான் யதார்த்தமானது என்கிற இந்த ஒரு விஷயத்தை ஏற்றுக் கொண்டார்கள் என்றால், வெற்றிக் கொடி பறக்க விடப்படும். இதே எண்ணத்தோடு முக்தி தாமம் செல்வீர்கள். மேலும் பிறகு அவரவருடைய பாகத்தை நடிக்க வரும்பொழுது, கடவுள் ஒருவரே என்ற இதே சம்ஸ்காரம் தான் முதன்முதலில் வெளிப்படும். இது தான் பொற்காலத்தின் நினைவு ஆகும்.

சுலோகன்:

சகித்துக் கொள்வது தான் தன்னுடைய சக்தி ரூபத்தை வெளிப்படுத்துவது (பிரத்யக்ஷம்) ஆவது

ஓம் சாந்தி

31.12.1979 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

" தைரியத்தின் ஆதாரத்தினால் தன்னை கஷ்டப்பட்டு உழைப்பிலிருந்து விடுபட்டவராகி சதா வெற்றியை அனுபவம் செய்யுங்கள் "

இன்று புதிய யுகத்தைப் படைப்பவர் பாப்தாதா தன்னுடைய மிக அன்பிற்குரிய, நிரந்தர சகயோகி மற்றும் மிக நெருக்கமான குழந்தைகளுக்கு புது யுகம், புது வாழ்க்கை மற்றும் புது வருடத்தின் வாழ்த்துக்களைக் கூறுவதற்காக வந்திருக்கிறார். நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகள் மிக அன்போடு பாப்தாதாவை எதிரில் இதயத்தில் வைத்து வாழ்த்துக்களை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். பாப்தாதா குழந்தைகளின் புது வருடத்திற்கான ஊக்கம் உற்சாகத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். பெரும்பான்மையான குழந்தைகள் தூரத்தில் அமர்ந்திருந்தாலும், அருகில் அமர்ந்திருந்தாலும் அனைவரின் மனதில் இந்த வருடத்தில் புதுமையை செய்தே காண்பிப்போம் என்ற இந்த ஊக்கம் உற்சாகம் இருக்கிறது. சுயமாற்றத்திலானாலும், சேவையின் வெற்றியிலானாலும் அல்லது சுபபாவனை மற்றும் சுபவிருப்பங்கள் மூலமாக ஆத்மாவை மாற்றுவதாலும் இவை அனைத்திலும் ஊக்கமும் உற்சாகமும் மிக நன்றாக இருக்கிறது. கூடவே தைரியமும் சக்திக்கேற்றபடி இருக்கிறது. பாப்தாதா அந்த மாதிரி தைரியம் உள்ள குழந்தைகளுக்கு ஒரு எண்ணத்தின் பின்னால் பல மடங்கு உதவியை அவசியம் கொடுக்கிறார். எனவே தைரியத்துடன் எப்பொழுதும் முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். ஒரு பொழுதும் தனக்காக மற்றும் மற்ற ஆத்மாக்களுக்காக தைரியத்தை குறைக்காதீர்கள், ஏனென்றால் இந்த புதுயுகம் இருப்பதே தைரியம் வைப்பதன் மூலம் உயரே பறப்பதற்கான யுகம், வரதானி யுகம், புருஷோத்தம யுகம், நேரடியாக வள்ளல் மூலமாக அனைத்து சக்திகளையும் ஆஸ்தியின் ரூபத்தில் சுலபமாக பிராப்தி செய்வதற்கான யுகம் ஆகும். எனவே இந்த யுகத்தின் மகத்துவத்தை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். எந்தவொரு காரியத்தை தொடங்குகிறீர்கள் என்றால், சுயமுயற்சியானாலும் அல்லது உலக சேவை யானாலும் எப்பொழுதும் தைரியம் மற்றும் பாப்தாதாவின் உதவி மூலமாக சுயமுயற்சியில் மற்றும் சேவையில் வெற்றி கிடைத்தே ஆகும் என்ற நிச்சயம் இருக்கட்டும். கண்டிப்பாக நடந்தே ஆகும். அசம்பவமானது சம்பவமாக ஆகவே தான் வேண்டும், ஏனென்றால் இந்த யுகம் வெற்றிக்கான யுகம் ஆகும். அசம்பவம் சம்பவம்

ஆவதற்கான யுகம் ஆகும். எனவே ஆகுமா அல்லது ஆகாதா, எப்படி ஆகும் என்ற இந்த கேள்வி இந்த யுகத்தில் பிராமண ஆத்மாக்கள் உங்களைப் பொறுத்தளவில் இல்லவே இல்லை. பிராமணர்களின் ஜாதகத்தில் வெற்றி அவர்களுடைய பிறப்புரிமையாக இருக்கிறது. அதிகாரி ஆத்மாக்களுக்கு இவற்றை யோசிப்பதற்கான அவசியமே இல்லை, ஆஸ்தி கண்டிப்பாக கிடைக்கத் தான் வேண்டும்.

அப்படி புதிய வருடத்தில் அனைத்து பக்கங்களிலிருந்தும் வெற்றி, உயர்ந்த பிராமண ஆத்மா என்னுடைய அதிகாரம் ஆகும் என்ற இந்த விசேஷ நினைவை மனதில் வெளிக்கொண்டு வாருங்கள். இந்த நிச்சயத்தின் ஆதாரத்தினால், ஆன்மீக போதையில் பறந்து கொண்டே இருங்கள், அபிமானத்தின் போதைஇல்லை, ஆன்மீக போதைநிச்சயபுத்தி உடையவர் எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்திலும் வெற்றி அடைபவராக இருக்கவே செய்கிறார். அந்த மாதிரி நிச்சயபுத்தியுடைய பிராமண ஆத்மாவின் நெற்றியில் வெற்றியின் அதிர்ஷ்டத்தின் ரேகை எப்பொழுதும் இருக்கவே இருக்கிறது. வெற்றித் திலகம் எப்பொழுதும் நெற்றியில் ஜொலித்துக் கொண்டிருக்கிறது. எனவே இந்த வருடத்தை எப்பொழுதும் வெற்றியடையும் வருடமாக அனுபவம் செய்து கொண்டே இருங்கள். அந்த மாதிரி நிச்சயம் மற்றும் போதை இருக்கிறதா? இரட்டை வெளிநாட்டினருக்கு இருக்கிறதா? இரட்டை வெளிநாட்டினர் புத்திசாலிகள் (அனைவரும் கை அசைத்தார்கள்). மிக நல்லது. திலகம், பார்வைக்கு தென்படுகிறது. பாரதவாசிகளோ பாக்கியம் நிறைந்தவர்களாக இருக்கவே இருக்கிறார்கள். ஏன்? பாரதத்தின் பூமியே பாக்கியம் நிறைந்ததாகும். எனவே வெளிநாட்டினரானாலும் அல்லது பாரதவாசி யானாலும் இருவர்களுமே பாக்கியத்தை உருவாக்குபவரின் குழந்தைகள் எனவே ஒவ்வொரு பிராமண குழந்தையும் வெற்றி அடைபவர். தைரியத்தை மட்டும் வெளிப்படுத்துங்கள். தைரியம் நிரம்பியிருக்கிறது. ஏனென்றால் நீங்கள் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆவீர்கள். அந்த மாதிரி தான் இல்லையா? (அனைவரும் கை அசைக்கிறார்கள்). கையையோ மிக நன்றாக அசைக்கிறீர்கள். இப்பொழுது மனம் மூலமாகவும் எப்பொழுதும் தைரியத்தின் கையை அசைத்துக் கொண்டே இருங்கள். பாப்தாதாவிற்கு என்னுடைய ஒவ்வொரு குழந்தையும் அனேக தடவைகள் வெற்றி அடைந்தவர்கள் என்ற குஷி மற்றும் பெருமிதம் இருக்கிறது. ஒரு தடவை அல்ல, அனேக தடவைகள் வெற்றி அடைந்த ஆத்மாக்கள் ஆவீர்கள் நீங்கள். எனவே என்னவாகும் என்று தெரியவில்லை என்று ஒருபொழுதும் யோசிக்காதீர்கள். ஆகும் என்ற வார்த்தையைக் கொண்டே வராதீர்கள். வெற்றி இருக்கிறது. மேலும் எப்பொழுதும் இருக்கும். அனைவரும் உறுதியானவர்களாக இருக்கிறீர்களா? மிக நல்லது.

இப்பொழுது பின்பு இங்கிருந்து அங்கே சென்று தாதிகளுக்கு, பாபா மாயா வந்து விட்டது அந்த மாதிரி பலஹீனமான செய்தியை எழுதாதீர்கள். மாயாவை வென்றவர்கள் ஆவீர்கள். நான் ஆகாவிட்டால் வேறு யார் ஆவார்! என்ற இந்த ஆன்மீக போதையை வெளிப்படுத்துங்கள். வேறு வேறு காரியங்களில் மனம் மற்றும் புத்தி பிஸியாகி விடுகிறது இல்லையா? அப்பொழுது போதை உள்ளடங்கிப் போய் விடுகிறது. ஆனால் காரியம் செய்து கொண்டே இந்த வெற்றி அடைவதின் ஆன்மீக போதை இருக்கிறதா? என்பதை இடையிடையே சோதனைசெய்யுங்கள். நிச்சயம் இருக்கிறது என்றால் அவசியம் போதைஇருக்கும். நிச்சயத்தின் அடையாளம் போதை மேலும் போதைஇருக்கிறது என்றால் அவசியம் நிச்சயம் இருக்கிறது. இரண்டிற்கும் சம்மந்தம் இருக்கிறது. எனவே இப்பொழுது 99-ல் தன்னுடைய போதையைஎப்பொழுதும் வெளிப்பட்டுக் கொண்டிருப்பதாக வையுங்கள். அப்பொழுது நினைவு மறக்காதவராக ஆகிவிடுவீர்கள். தவறும் நடக்காது, கடின உழைப்பும் இருக்காது. பாப்தாதா ஏற்கனவே கூறியும் இருக்கிறார் எப்பொழுது பாப்தாதா குழந்தைகளை கடின உழைப்பு செய்து கொண்டிருப்பதாகப் பார்க்கிறார், யுத்தம் செய்து கொண்டிருப்பதை பார்க்கிறார் என்றால் குழந்தைகளின் கடின உழைப்பு தந்தைக்குப் பிடிப்பதேயில்லை. எனவே இந்த புது வருடத்தை எப்படி கொண்டாடுவீர்கள்? முக்தி வருடத்தை கொண்டாடினீர்கள். எதிர்மறை, வீணானதை முடித்து விட்டீர்கள் என்றால் இந்த வருடம் இயல்பாகவே கடின உழைப்பிலிருந்து விடுபட்ட வருடமாக ஆகிவிடும். அனைவரும் மகிழ்ச்சியிலிருப்பவர்களேயன்றி கடின உழைப்பு செய்பவர்கள் அல்ல. மகிழ்ச்சி நன்றாக இருக்கிறதா அல்லது கடின உழைப்பு நன்றாக இருக்கிறதா? கடின உழைப்பு நன்றாக இருக்கிறது தான் இல்லையா. அப்படி இந்த வருடம் மனதில், எண்ணத்தில் கூட கடின உழைப்பிலிருந்து விடுபடுங்கள்.

பாப்தாதாவிடம் குழந்தைகளின் கடிதங்கள் மற்றும் சிறு குறிப்புக்கள் நாங்கள் இப்பொழுதிலிருந்து 108-ன் மாலையில் அவசியம் வருவோம் என்று மிக நல்ல தைரியத்துடன் எழுதிய அடங்கிய கடிதங்கள் வந்திருக்கின்றன. அனேகர்களின் மிக நல்ல ஊக்கம் அடங்கிய கடிதங்களும் வந்திருக்கின்றன. மேலும் ஆன்மீக உரையாடலிலும் அனேகர்கள் பாப்தாதாவிடம் தங்களுடைய நிச்சயம் மற்றும் தைரியத்தில் நல்ல செய்தியைக் கொடுத்தார்கள். பாப்தாதா அந்தக் குழந்தைகளுக்கு உங்கள் அனைவரின் கடந்த காலத்தை தந்தை முற்றுப்புள்ளி வைத்து விட்டார் என்று கூறுகிறார். எனவே கடந்த காலத்தைப் பற்றி யோசிக்காதீர்கள், இப்பொழுது என்ன தைரியம் வைத்திருக்கிறீர்களோ, அந்த தைரியம் மற்றும் தந்தையின் உதவியோடு முன்னேறிச்

சென்று கொண்டே இருங்கள். புதிய வருடத்தில் புதிய ஊக்கத்தைப் பற்றி வெளிநாட்டுக் குழந்தைகளும் பாரதத்தின் குழந்தைகளும் மிக நன்றாக எழுதியிருக்கிறார்கள். பாப்தாதா அந்த மாதிரி குழந்தைகளுக்கு இதே தைரியத்தில், நிச்சயத்தில், போதையில் அமரர் ஆகுக என்ற இந்த வரதானத்தைத் தான் கொடுக்கிறார். இரட்டை வெளிநாட்டினர் அமரராக இருப்பீர்களா? பாரதவாசிகளும் இருப்பீர்கள் தான் இல்லையா? பாரதமோ முன் நம்பரை எடுக்கத் தான் வேண்டும்.

புதிய வருடத்தை எப்படிக் கொண்டாடுகிறார்கள்? ஒன்றோ பரிசு கொடுப்பார்கள், அடுத்து இன்னொன்று வாழ்த்துக்களை வழங்குவார்கள். இனிப்பை அதிகமாக சாப்பிட்டு பிறருக்கும் வழங்குவார்கள். ஆடலும், பாடலும் கூட மிக அதிகமாக இருக்கும். அப்படி நீங்கள் 12 மணிக்கு பிறகு ஒரு நாள் மட்டும் புதிய வருடத்தை கொண்டாடாதீர்கள். ஆனால் பிராமண குழந்தைகளுக்காக இந்த புதிய யுகத்தில் ஒவ்வொரு நேரமும் புதியது, ஒவ்வொரு மூச்சும் புதியது, ஒவ்வொரு எண்ணமும் புதியது. எனவே எப்பொழுதும் முழு வருடமும், ஒரு நாள் இல்லை, ஒரு வாரம் இல்லை, ஒரு மாதம் இல்லை, 4 மாதங்கள் இல்லை, 8மாதங்கள் இல்லை, 12 மாதங்களுமே எப்பொழுதுமே ஒவ்வொருவருக்கும் மனதை மகிழ்விக்கும் இனிப்பை வழங்கிக் கொண்டே இருங்கள். வழங்குவீர்கள் தான் இல்லையா? மனதை மகிழ வைக்கும் இனிப்பை வழங்கத் தெரியுமா? அனைவருமே திறமை நிறைந்தவர்கள் தான். அதனால் மனமகிழ் இனிப்பை வழங்குங்கள். ஒருவேளை மனதை மகிழ்விக்கும் உங்களுடைய இனிப்பை யாராவது தன்னுடைய சுபாவத்தின் காரணமாக, சம்ஸ்காரத்தின் காரணமாக, பிரச்சனையின் காரணமாக ஒருவேளை ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும், நீங்கள் மனமுடைந்து போகாதீர்கள். நீங்கள் கொடுத்தீர்கள், கட்டளைப்படி நடக்கும் உங்களுடைய சார்ட் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து விட்டது. நானோ மனதை மகிழ்விக்கும் இனிப்பை உண்ணக் கொடுத்தேன், ஆனால் இவரோ கோபப்படுகிறார் என்ற இதைப் பார்க்காதீர்கள். ஒன்றும் பாதகமில்லை. அவர் இரகசியத்தைத் தெரிந்திருக்கவில்லை தான் இல்லையா? எனவே கோபம் அடைகிறார். நீங்களோ இரகசியத்தைத் தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? எனவே இவர் கணக்கு வழக்கு மற்றும் பிரச்சனையின் வசமாகியிருக்கிறார் என்ற இந்த இரகசியத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் கட்டளைப்படி நடப்பவராக ஆகுங்கள். சரி தான் இல்லையா? கட்டளைப்படி நடப்பவர் ஆக வேண்டும் இல்லையா? இங்கேயோ ஆம் என்று மிக நன்றாகச் செய்கிறீர்கள், ஒருவேளை நீங்கள் இங்கிருந்து பார்த்தீர்கள் என்றால், கையையும் மிக நன்றாக அசைக்கிறார்கள், குஷிப்படுத்தி விடுகிறார்கள். தலையும்

அசைக்கிறார்கள், கையையும் அசைக்கிறார்கள். ஆனால் பாப்தாதாவோ இருந்தாலும் ஒவ்வொரு குழந்தையின் மேல் எப்பொழுதுமே குஷியாக இருக்கிறார். என்னுடைய குழந்தை என்று எப்பொழுது கூறிவிட்டாரோ அவர் எப்படி இருந்தாலும், என்னவாக இருந்தாலும் தந்தையோ பார்த்து குஷி அடையவே செய்கிறார். எப்படியாவது தகுதியானவராக ஆக்கி உடன் அழைத்துச் செல்லத் தான் வேண்டும் என்ற உறுதிமொழியையும் தந்தை கொடுத்திருக்கிறார். உடன் செல்ல வேண்டும் தான் இல்லையா? உடன் செல்வதற்குத் தயாராக இருக்கிறீர்களா? அனைவரும் தயாராக இருக்கிறீர்களா? எவரெடியாக இருக்கிறீர்களா? நல்லது. எவரெடியாகவும் இருக்கிறீர்கள், மிக நல்லது. எவர் ஹேப்பியாகவும் இருக்கிறீர்களா? மேலும் ஒருவேளை மாயா வந்து விட்டது என்றால்? பிறகு கொஞ்சம் கொஞ்சம் மனதில் வருந்துவீர்களா? பாபா மாயா வந்து விட்டது, வந்து விட்டது என்று கதறாதீர்கள். தன்னை மேலே கொண்டு செல்லுங்கள். மாயா கீழே இருந்து விடும். நீங்கள் மேலே பறந்து சென்று விட்டீர்கள் என்றால் மாயா பார்த்துக் கொண்டே இருந்து விடும். நல்லது. அப்படி குஷியில் ஆடிக் கொண்டும் இருங்கள், மேலும் மனம் மகிழ வைக்கும் இனிப்பை வழங்கிக் கொண்டும் இருங்கள். கூடவே யாரெல்லாம் உறவு நெருக்கத்தில் வருகிறார்களோ அவர்களுக்கு ஏதாவது பரிசு கொடுங்கள். யாரும் வெறும் கையோடு செல்ல வேண்டாம். என்ன பரிசு கொடுப்பீர்கள்? உங்களிடம் பரிசோ மிக அதிகமாக இருக்கிறது. பரிசுக்கான கையிருப்பு இருக்கிறதா? அப்படி கொடுப்பதில் கஞ்சனாக ஆகாதீர்கள், கொடுத்துக் கொண்டே இருங்கள். பரந்த மனமுடையவராக ஆகுங்கள், யாருக்காவது சக்தியின் சகயோகம் கொடுங்கள், சக்தியின் வைப்ரேஷனை கொடுங்கள், யாருக்காவது ஏதாவது குணத்தின் பரிசைக் கொடுங்கள். வாய் மூலமாக இன்றி முகம் மற்றும் நடத்தை மூலம் கொடுங்கள். ஒருவேளை ஏதாவது குணம் மற்றும் சக்தி வெளிப்படவில்லை என்றாலும் குறைந்தது சின்னஞ் சிறிய பரிசையாவது கொடுங்கள். அது எந்த பரிசு? சுபபாவனை மற்றும் சுபவிருப்பத்தின் பரிசாகும். இவர் என்னுடைய காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட சகோதரன் அல்லது சகோதரி என்ற சுபவிருப்பங்களை வையுங்கள். காணாமல் போய் கண்டெடுக்கப்பட்டவர் என்று நினைத்தீர்கள் என்றால் தீய பாவனை மாறி சுபபாவனை ஆகி விடும். இந்த சகோதரன் சகோதரிக்கும் முன்னேறும் கலை ஏற்பட்டு விட வேண்டும். இதற்காக சகயோகம் மற்றும் சுபபாவனை இருக்க வேண்டும். சில குழந்தைகள் நாங்கள் கொடுக்கிறோம், ஆனால் அவர்கள் வாங்குவதில்லை என்று கூறுகிறார்கள். நல்லது. சுபபாவனையை எடுத்துக் கொள்ளவில்லை என்றால் எதையோ கொடுக்கிறீர்கள் தான் இல்லையா? அவர்கள் தீய வார்த்தைகளை உங்களுக்குக் கொடுத்தாலும், தீய வைப்ரேஷன் கொடுத்தாலும், தீய நடத்தை நடந்து கொண்டாலும் நீங்கள் யார்?

உங்களுடைய தொழில் என்ன? உலகத்தை மாற்றம் செய்வதா? உங்களுடைய தொழில் என்ன? உலகத்தை மாற்றம் செய்பவர் தான் இல்லையா? அப்படி உலகத்தை மாற்றம் செய்ய முடியும். மேலும் ஒருவேளை அவர் உங்களிடம் தவறாகப் பேசுகிறார், தவறாக நடந்து கொள்கிறார் என்றாலும் அவரை நீங்கள் மாற்றம் செய்ய முடியாதா? நேர்மறையான ரூபத்தில் பரிவர்த்தனை செய்ய முடியாதா? எதிர்மறையை எதிர்மறையாகவே தாரணை செய்வீர்களா அல்லது எதிர்மறையை நேர்மறையில் மாற்றம் செய்து நீங்கள் ஒவ்வொருவருக்கும் சுபபாவனை மற்றும் சுபவிருப்பத்தின் பரிசைக் கொடுப்பீர்களா? சுபபாவனையின் கையிருப்பை எப்பொழுதும் சேமித்து வையுங்கள். நீங்கள் கொடுத்து விடுங்கள், மாற்றம் செய்து விடுங்கள், பிறகு உலகத்தை மாற்றம் செய்பவர் என்ற பட்டம் உங்களுக்கு இருக்கிறது அது நடைமுறையில் உபயோகம் ஆகிக் கொண்டே இருக்கும். மேலும் யார் எப்பொழுதும் ஒவ்வொருவரையும் மாற்றம் செய்து தன்னுடைய உலக மாற்றம் செய்யும் காரியத்தை நடைமுறையில் கொண்டு வருகிறாரோ அவர் தான் நடைமுறை ரூபத்தில் 21 பிறவிகள் உத்திரவாதத்துடன் இராஜ்ய அதிகாரி ஆகிறார். சிம்மாசனத்தில் ஒரு தடவை அமர்ந்தாலும் கூட ஒவ்வொரு ஜென்மத்தில் இராஜ குடும்பத்தில், இராஜ்ய அதிகாரி ஆத்மாக்களின் நெருங்கிய சம்மந்தத்தில் இருப்பார். அப்படி உலகத்தை மாற்றம் செய்பவர் தான் உலக இராஜ்ஜிய அதிகாரி ஆகிறார். எனவே என்னுடைய காரியமே மாற்றம் செய்வது தான் என்ற இந்த தன்னுடைய தொழிலை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். வள்ளலின் குழந்தை நீங்கள் என்றால் வள்ளலாகி கொடுத்துக் கொண்டே இருங்கள், அப்பொழுது தான் எதிர்காலத்தில் கை மூலமாக யாருக்கும் கொடுக்க மாட்டீர்கள். ஆனால் உங்களுடைய இராஜ்ஜியத்தில் எப்பொழுதும் ஒவ்வொரு ஆத்மாவும் நிரம்பியிருக்கும் அது இந்த நேரத்தில் வள்ளல் ஆவதற்கான பிராப்தி ஆகும். எனவே இவர் இதைச் செய்தார், இவர் இத்தனை தடவை செய்தார் என்று கணக்கு பார்க்காமல் மாஸ்டர் வள்ளலாகி பரிசைக் கொடுத்துக் கொண்டே இருங்கள். மேலும் வாழ்த்துக்களாக என்ன கொடுப்பீர்கள்? பாருங்கள் யாருக்காவது ஏதாவது பிராப்தி ஆகிறது என்றால், அவருடைய வாயிலிருந்து மனதிலிருந்து உங்களுக்கு வாழ்த்துக்கள் என்ற வார்த்தை தான் வெளியாகிறது. ஒவ்வொருவருக்கும் குஷி கொடுக்கிறீர்கள் என்றால் வாழ்த்துக்கள் என்று கூறுவார்கள். ஏதாவது பண்டிகையை கொண்டாடுகிறீர்கள் என்றால், வாழ்த்துக்கள் என்று கூறுவார்கள். அதே போல் யார் உங்கள் எதிரில் வந்தாலும் வாய் மூலம் அந்த மாதிரி வார்த்தைகளைக் கூறுங்கள், எண்ணத்தில் அந்த மாதிரி உயர்ந்த எண்ணம் இருக்கட்டும். அப்பொழுது யார் உங்களை சந்தித்தாலும் அவர் ஒவ்வொரு நேரமும் உள்ளப்பூர்வமாக வாழ்த்துக்கள் மற்றும் ஆசீர்வாதங்களை அவசியம் கொடுப்பார். அப்படி எப்பொழுதுமே அந்த மாதிரி வார்த்தைகளைப் பேசுங்கள், அந்த மாதிரி

உறவு நெருக்கத்தில் வாருங்கள். அதன் மூலம் உள்ளத்திலிருந்து வாயிலிருந்து வாழ்த்துக்கள் மற்றும் ஆசீர்வாதங்கள் வெளியாகட்டும். வாழ்த்துக்குத் தகுதியில்லாத அந்த மாதிரி வார்த்தைகளைப் பேசாதீர்கள். ஒவ்வொரு வார்த்தையும் இரத்தினம் மாதிரி இருக்கட்டும். சாதாரண வார்த்தையாக இருக்க வேண்டாம். இன்று வரையிலும் உள்ள ரிசல்ட்டில் பாப்தாதா பார்த்தார், நாளையோ மாறி விடுவார். ஆனால் இதுவரையிலும் வார்த்தையில் என்ன பண்பு மற்றும் அன்பு இருக்க வேண்டுமோ அந்த அன்பு குறைந்து விடுகிறது மற்றும் பண்பும் குறைந்து விடுகிறது என்று பார்த்தார். எனவே இரத்தினத்திற்குச் சமமான வார்த்தைகளைக் கூறுங்கள். எப்பொழுது சுயம் நீங்கள் வைரத்திற்குச் சமமாக இருப்பீர்களோ அப்பொழுது தான் ஒவ்வொரு வார்த்தையும் இரத்தினத்திற்குச் சமமாக இருக்கும். அந்த மாதிரி மதிப்புள்ளவர் நீங்கள். சாதாரணமானவர்கள் அல்ல. எனவே சாதாரணமானதும், வீணானதும் இருக்க வேண்டாம். மேலும் சில வேலைகளில் பாப்தாதா பார்க்கிறார், முடிவைக் கூறலாமா, ஏனென்றால் 12 மணிக்குப் பிறகு தான் அனைத்தையும் முடிக்க வேண்டும் இல்லையா? அப்படி சில குழந்தைகள் சிறிய விஷயத்தை மிகுந்த விஸ்தாரம் ஆக்குகிறார்கள் என்ற இதையும் பார்த்தோம். இதில் என்னவாகிறது? யார் அதிகமாகப் பேசுகிறாரோ எப்படி மரம் விரிவாக வளர்ந்த பிறகு அதில் விதை மறைந்து விடுகிறது, நான் புரிய வைப்பதற்காக விஸ்தாரம் செய்கிறேன் என்று அவர் அப்படி நினைக்கிறார். ஆனால் விஸ்தாரத்தில் எந்த விஷயத்தை நீங்கள் புரிய வைக்க விரும்புகிறீர்களோ அதனுடைய சாரம் மறைந்து விடுகிறது. மேலும் பேச்சு, வார்த்தைகளுக்கும் சக்தி தேவையாக இருக்கிறது. யார் வீணாகப் பேசுகிறாரோ அவருடைய வார்த்தைகளின் சக்தி குறைந்து விடுகிறது. அதிகமாகப் பேசுபவர்களின் மூளையின் சக்தியும் குறைந்து விடுகிறது. சுருக்கமாக மற்றும் இனிமையாக என்ற இந்த இரண்டு வார்த்தைகளை நினைவு வையுங்கள். மேலும் யாராவது கூறுகிறார்கள் என்றால் கூட எனக்கு இந்த அளவு கேட்பதற்கும் நேரம் இல்லை என்று கூறிவிடுங்கள். ஆனால் எப்பொழுது நீங்களே கூறுகிறீர்கள் என்றால், நேரம் மறந்து போய் விடுகிறது. எனவே தன்னுடைய பொக்கிஷங்களின் கையிருப்பை சேமிப்பு செய்யுங்கள். எண்ணம், வார்த்தைகள், சக்திகள், நேரம் மற்றும் குணங்களின் பொக்கிஷத்தை சேமிப்பு செய்யுங்கள். தினசரி இரவில் தன்னுடைய இந்த பொக்கிஷங்களின் சேமிப்பிற்கான கணக்கை சோதனைசெய்யுங்கள். எத்தனை எண்ணத்தை வீணானதிற்குப் பதிலாக மிக நல்லதின் கணக்கில் சேமிப்பு செய்தேன். எவ்வளவு நேரம் நல்லதின் கணக்கில் சேமிப்பு செய்தேன். குணங்கள் மற்றும் சக்திகளினால் உயர்ந்த காரியம் செய்தேனா? குணத்தை நடைமுறையில் கொண்டு வந்தேனா? சக்தியை செயலில் கொண்டு வந்தேனா? இது தான் சேமிப்பு ஆவதாகும். எனவே அப்படி எண்ணம்,

நேரம், குணம், சக்தி இவற்றின் கணக்கை தினசரி இரவில் சோதனைசெய்யுங்கள், பிறகு அதை எவ்வளவு சேமிப்பு கணக்கு ஆனது என்று கூட்டிப் பாருங்கள். இந்த சேமிப்பு தான் தனக்கும் உதவி செய்து கொண்டே இருக்கும். மேலும் மற்றவர்களுக்கும் கொடுக்கும். அப்படி என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறீர்கள் இல்லையா? எனவே இப்பொழுது இதைச் செய்யுங்கள். வாழ்த்துக்களையும் பெற வேண்டும், பரிசையும் கொடுக்க வேண்டும், சேமிப்பும் செய்ய வேண்டும் மேலும் கடின உழைப்பை விட வேண்டும். எப்பொழுது சேமிப்பின் மேல் கவனம் கொடுப்பீர்கள் என்றால், கஷ்டப்பட்டு உழைக்க வேண்டியதாக இருக்காது. கஷ்டப்பட்டு உழைப்பதிலிருந்து விடுபடும் ஆண்டை மிக கோலாகலமாகக் கொண்டாடுங்கள். வீணானது மற்றும் எதிர்மறையின் முக்தி வருடத்தைக் கொண்டாடுங்கள். முக்தி வருடத்தின் ரிசல்ட்டை பாப்தாதா இப்பொழுது கேட்கவில்லை. பாப்தாதாவிற்கு நினைவு இருக்கிறது. எத்தனை பேர் முக்தி வருடத்தை கொண்டாடினார்கள் அல்லது மாதத்தைக் கொண்டாடினார்களா என்று ரிசல்ட்டைக் கேட்போம். 6 மாதம் கொண்டாடினோமா, பாதி கொண்டாடினோமா அல்லது முழுமையாகக் கொண்டாடினோமா என்று 18-ம் தேதி கணக்கு எடுப்போம்.

இரட்டை வெளிநாட்டினர் நன்றாக கொண்டாடினீர்கள் தான் இல்லையா?. பாரதத்தைச் சேர்ந்தவர்களும் கொண்டாடியிருக்கிறார்கள். ரிசல்ட்டை 18-ம் தேதி பார்ப்போம். யார் முழு வருடத்தையும் கொண்டாடினரோ அவருக்கு என்ன கொடுப்போம். தாதிகளே யார் முழு வருடத்தையும் கொண்டாடியிருக்கிறார்களோ அவர்களுக்கு என்ன கொடுப்பீர்கள் என்று கூறுங்கள். வாழ்த்துக்கள் மற்றும் ஆசீர்வாதங்களோ இருக்கவே இருக்கின்றன. மேலும் நினைவுப் பரிசாக என்ன கொடுப்பீர்கள்? பரிசு தயாராக வைத்துக் கொள்ளுங்கள். எத்தனை பேர் பரிசைப் பெறுவார்கள் என்று பார்க்கலாம். அப்படி புது வருடம், புதிய ஊக்கம், புதிய உற்சாகம், மேலும் புதிய தைரியம் அனைத்துமே புதியதிலும் புதியது. யார் இந்த நேரம் மேடையில் இருக்கிறார்களோ அவர்கள் அடுத்த நேரம் அதை விட உயர்ந்த நிலையில் இருக்க வேண்டும். சரி தான் இல்லையா. நல்லது.

வரதானம் -

பணிவின் குணத்தை தாரணை செய்து அனைவருக்கும் சுகம் கொடுக்கக்கூடிய சுகதேவன், சுகசொரூபமானவர் ஆகுக.

மகான் ஆத்மாக்கள் உங்களுடைய அடையாளம் பணிவாகும். எவ்வளவு பணிவாக இருப்பீர்களோ அந்த அளவு அனைவர் மூலமாகவும் மரியாதை கிடைக்கும். யார் பணிவாக இருப்பாரோ அவர் அனைவருக்கும் சுகம் கொடுப்பார். எங்கே சென்றாலும் என்ன செய்தாலும் அது சுகம் நிறைந்ததாக இருக்கும். அப்படி யாரெல்லாம் உறவு நெருக்கத்தில் வந்தாலும் அவர் சுகத்தின் அனுபவம் செய்யட்டும். எனவே பிராமண ஆத்மாக்கள் உங்களுடைய வர்ணனையாக சுகக்கடலின் குழந்தைகள் சுகசொரூபம் சுகதேவர்களாக இருக்கிறார்கள் என்பதாகும். எனவே அனைவருக்கும் சுகத்தை கொடுத்துக் கொண்டே மற்றும் சுகத்தை பெற்றுக் கொண்டே இருங்கள். யாராவது துக்கம் கொடுத்தார்கள் என்றால் அதை வாங்காதீர்கள்.

சுலோகன் -

யார் ஆத்ம அபிமானியாக இருக்கிறாரோ அவர் தான் அனைவரையும் விட பெரிய ஞானி ஆவார்.

ஓம் சாந்தி